வீறுகவியரசர் முடியரசன் படைப்புலகம்

தேசியக் கருத்தரங்கம்-2019



பதிப்பாசிரியர்கள்

பேரா.ம.கார்மேகம்

பேரா.சே.செந்தமிழ்ப்பாவை

முனைவர் ம.ஸ்டீபன் மிக்கேல் ராஜ்

நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரி

மற்றும்

வீறுகவியரசர் முடியரசன் அவைக்களம்

வீறுகவியரசர் முடியரசன் படைப்புலகம்

தேசியக் கருத்தரங்கம் - 2019

பதிப்பாசிரியர்கள்

பேரா.ம.கார்மேகம்

பேரா.சே.செந்தமிழ்ப்பாவை

முனைவர்.ம.ஸ்டீபன் மிக்கேல் ராஜ்

நாச்சியப்ப சுவாமிகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

வீறுகவியரசர் முடியரசன் அவைக்களம்,

காரைக்குடி.

முதற்பதிப்பு : சனவரி 2019

நூற்பெயர் : **வீறுகவியரசர் முடியரசன் படைப்புலகம்**

பதிப்பாசிரியர்கள் : பேரா.ம.கார்மேகம்
பேரா.சே.செந்தமிழ்ப்பாவை
முனைவர். ம.ஸ்டீபன் மிக்கேல் ராஜ்

தாள் : வெள்ளைத்தாள் 16 கி.

நூலின் அளவு : 21.5 ஒ 14.5 கி.கி.

பக்கங்கள் : 492

ISBN No. : 978-81-921754-3-0


பதிப்பகம் : மணியரசி பதிப்பகம், தேவகோட்டை

பொருள் : கட்டுரைகள்

விலை : ரூ. **400.00**

அச்சிட்டோர் : தோழா அச்சகம், காரைக்குடி – 630 002.

கோவிலூர் மடாலயம்
கோவிலூர்



வாழ்த்துரை

வீறுகவி முடியரசனார் கருத்தரங்கம்

எனது உயர்நிலைப் பள்ளிக் கல்வி 1951 முதல் 1957 வரை காரைக்குடி மீ.சு. உயர்நிலைப்பள்ளியில் படித்தேன். அப்பொழுது 6,7,8 வகுப்புகளுக்கு தமிழ் மொழி பாடம் சுப்ரமணிய பிள்ளை (S.S.S) என்ற பெயர் கொண்ட ஆசிரியரும் R.நடராஜன் (R.N) எனும் ஆசிரியரும் போதித்தார்கள். அப்பொழுது மீ.சு.உயர்நிலைப்பள்ளியில் மேல் வகுப்புகளுக்கு(9,10,11) தமிழ் போதித்தவர்கள் புலவர் ப.மாசிலாமணி தேசிகர் (P.M), முடியரசன் என்று அழைக்கப்படும் கா.சு.துரைராஜ் (K.S.D) அவர்களும் தமிழண்ணல் என்று அறியப்பட்ட இராம.பெரியகருப்பன்(RM.P) அவர்களும் ஆவார்கள்.

எனக்கு ஒன்பதாம் வகுப்பில் தமிழண்ணலும் பத்து, பதினொன்றாம் வகுப்புகளில் மாசிலாமணி தேசிகரும் தமிழ்ப் பாட வகுப்பு எடுத்தார்கள். நான் முடியரசன் அவர்களிடம் நேரடி மாணவனாகப் படித்தது இல்லை. ஆனால் இரு காரணங்களாலே தமிழண்ணல், முடியரசன் இருவரிடமும் நெருங்கிப் பழகி அவர்களுடைய அறிவுரையைப் பல துறைகளிலும் நிரம்பப் பெற்றுள்ளேன்.

தமிழண்ணல் எனது பூர்வாசிரம அத்தை வீட்டில் முன் அறையில் தங்கியிருந்தார்கள். அவரைப் பார்ப்பதற்கு ஏறக்குறைய தினமும் மாலை நேரங்களில் முடியரசன் ஐயா அவர்களும் வருவார்கள். அப்பொழுது நெருங்கிப் பழகி இருக்கிறேன்.

அந்தக் காலங்களில் காரைக்குடியில் “வாரச்செய்தி” என்னும் வார இதழ் கலைமகள் அச்சகத்தாரால் நடத்தப்பட்டு வந்தது. அந்த அச்சகம் எனது நண்பர் ஒருவரின் தந்தையாருக்குச் சொந்தமானது. பத்திரிக்கை ஆசிரியராக சாமி.பழனியப்பன் என்ற கவிஞர் பணியாற்றி வந்தார் (பின்னர் குன்றக்குடி அடிகளாரின் நேர்முக உதவியாளராக பணியாற்றியவர். தற்போதைய திரைப்படக் கவிஞர் பழனிபாரதியின் தந்தையார்) சாமி. பழனியப்பனும் கவிஞர்களாகிய தமிழண்ணலும் முடியரசனும் நெருக்கமான நண்பர்களாக இருந்தனர். கவிஞர்

முடியரசனும் தமிழண்ணலும் சேர்ந்து "எழில்" என்ற மாத இதழை வெளியிட்டு வந்தார்கள். அதனைக் கலைமகள் அச்சகத்திலே தான் அச்சிட்டார்கள். எனவே ஓய்வு நேரங்களிலே கலைமகள் அச்சகத்தில் சந்தித்து கலந்துரையாடி பத்திரிக்கைப் பணிகளை செய்து வந்தார்கள். நாங்களும் கலைமகள் அச்சகத்திற்கு அடிக்கடிச் செல்வது உண்டு.

மேலும் எங்கள் நண்பர்களும் வெண்ணிலா படிப்பகம், செந்தமிழ் சொற்பேச்சு மன்றம், வெண்ணிலா கையெழுத்து பத்திரிக்கை ஆகியவற்றை தமிழ் ஆர்வத்தின் காரணமாக நடத்தி வந்தோம். வெண்ணிலா இதழிலே வெளியாகும் கட்டுரைகள், கவிதைகள் என்று நாங்கள் கற்பனை செய்து எழுதியவற்றை எங்கள் தமிழ் ஆசிரியர்களான கவிஞர் முடியரசன், தமிழண்ணல் அவர்களிடம் கொடுத்து கருத்து கேட்கும் பழக்கம் உண்டு. அந்த இளம் வயதில் கவிதை புனைகின்ற நுணுக்கங்களை முடியரசன் ஐயா அவர்கள் எங்களுக்கு உணர்த்தி இருக்கிறார்கள். இயல்பாகவே பாரதி, பாரதிதாசன், முடியரசன், கண்ணதாசன், ச.து.சு.யோகியார் ஆகியவர்களின் கவிதைகளை வாசிப்பது உண்டு. அவற்றைப் பற்றிய கருத்துக்களையும் முடியரசன் ஐயா விவரமாகக் கூறக் கேட்டு நாங்கள் புரிந்துகொண்டிருக்கிறோம்.

எங்கள் தமிழ் ஆர்வத்திற்கும் கவிதை எழுதுகின்ற பழக்கத்திற்கும் ஆதிகாரணமாக அமைந்தவர்கள் முடியரசன் ஐயா மற்றும் தமிழண்ணல் ஐயா அவர்கள் தான். எங்களைப்போல் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்குத் தமிழ் ஆர்வமும் பற்றும் காரைக்குடிப் பகுதியில் பெருகி வளர இவர்களே முதற்காரணம். நாங்கள் எங்களுடைய தமிழ் அறிவு வளர்ச்சிக்கும் உணர்வுப் பெருக்குக்கும் ஆதிகாரணமான இருபெரும் கவிஞர்களை வணங்கி மகிழ்கின்றோம். முடியரசன் ஐயா அவர்களுடைய கவிதைகள் என்றென்றும் நிலைத்துப் புகழ் பரப்பி தமிழ் வளர்க்க இறைவனைப் பணிந்து வேண்டுகிறேன்.

ஸ்ரீ சற்குருநாதன் துணை

பாரிமுடியரசன்
எழுத்தாளர்

நிறுவுநர்
வீறுகவியரசர் முடியரசன் அவைக்களம்
17,பூங்கொடி வீதி,569,சூடாமணிபுரம்
காரைக்குடி - 630003
பேசி எண்கள் : 9788804480
9489804480

அணிந்துரை

தமிழ் இலக்கியம் நீண்ட மரபுடையது. மரபு வழுவாமல், புதுமைகளைப் புகுத்தி, தற்காலத் தமிழ் இலக்கியத்தை வளப்படுத்திய பெருமை பாரதியார் - பாரதிதாசன் கவிதா மண்டலத்துக்கே உண்டு. இக்கவிதா மண்டலத்தின் முதலாவது இடத்திற்குரியவர் வீறுகவியரசர் முடியரசன்.

20ஆம் நூற்றாண்டில் தோன்றிய கவிஞர்கள், ‘அடியவன்’ எனப் பொருள் தரும் ‘தாசன்’ என்ற பின்னொட்டைத் தமது பெயருடன் சூடிக் கொண்ட காலத்தில், தன்னை அடியவன் என்று கூறிக் கொள்ளாமல் ‘அரசன்’ எனப் பெயர் புனைந்து, செம்மாந்தப் பெருவாழ்வு வாழ்ந்த பெருமிதக் கவிஞர்.

தமிழ்க்கவிதையுலகின் முடியரசனாகத் தனித்தன்மையுடன் ஆட்சி புரிந்தவர். தன்மானம் தன்னுள் கொண்டு தலைநிமிர்ந்து தமிழ் பாடியவர். தமிழ் உயர்வும் - தமிழர் உயர்வும்தான், தான் வாழ்ந்த வாழ்வின் பொருள் என்றவர்.

இத்தகைய வீறுகவிஞரின் பெயர் தாங்கி, “வீறுகவியரசர் முடியரசர் கவிபாடி முத்தமிழுக்கு முடிசூட்டுவோம்” என்ற முழக்கும் இலக்கும் நோக்கி வீறுநடை போடும் வீறுகவியரசர் முடியரசன் அவைக்களம், பல்வேறு தமிழ்த்தொண்டுகளைச் செயலாற்றிவருகிறது. இத்தொண்டினுக்கு அணிசேர்க்கும் வகையில் இத்தேசியக் கருத்தரங்கினை கோவிலூர் ஆதீனத்தின் நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரியுடன் இணைந்து நடத்துகிறது.

இக்கருத்தரங்கம் நடத்தத் திருமுகம் காட்டித் தன்மேலான இசைவினை வழங்கியருளிய சீர்வளர்சீர் மெய்யப்பஞான தேசிக சுவாமிகள் அவர்களுக்கு இவ்வவைக்களம் எந்நாளும் நன்றிக்கடப்பாடுடையது.

இக்கருத்தரங்கம் வெற்றியடையச் செயலாற்றிய அவைக்களப் புரவலர்கள் சிலம்பொலி செல்லப்பனார், கவிச்சுடர் கவிதைப்பித்தன், முனைவர் சேது.குமணன் ஆகியோர்க்கும் அவைக்களத் தலைவரும், அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்ப்பண்பாட்டு மைய இயக்குநருமான முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை, அவைக்களத் துணைத்தலைவரும், சேவுகன் அண்ணாமலை கலைக்கல்லூரி மேனாள் முதல்வருமான முனைவர் இரெ.சந்திரமோகன், அவைக்களச் செயலாளர்கள் முனைவர் தமிழ்முடியரசன், புலவர் இரா.வனிதா மற்றும் ஆட்சிக்குழுவிற்கும் என் நன்றியும் பாராட்டுதல்களும் அணிவகுக்கட்டும்..!

- பாரிமுடியரசன்

முனைவர் சே. செந்தமிழ்ப்பாவை
பேராசிரியர் மற்றும் இயக்குநர்

தமிழ்ப்பண்பாட்டு மையம்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி – 630 003
அலைபேசி : 94865 50725
தொலைபேசி : 04565 - 223286
மின்னஞ்சல்:pavaisenthamizh17@gmail.com

நாள்:25.01.2019

நன்றியுரை

உள்ளத்து உணர்வுகளின் உருவமான மொழியை அழகாக்கித் தருவது கவிதையாகும். தமிழ்மொழி கவிதையாலானது. ஈராயிரம் ஆண்டுகளாகத் தன்னைக் கவிதை வடிவிலேயே வளர்த்தெடுத்துக் கொண்ட சிறப்புடையது. அதனால்தான் கவிஞர்களை கவிச்சக்கரவர்த்தி, கவிஇராட்சசன், மகாகவி, புரட்சிக்கவி, கவிமணி, கவியோகி, வீறுகவியரசர், கவியரசர், பாவலரேறு, கவிக்கோ, கவிப்பேரரசு, கவிக்கனல் என்று பல்வேறு அடைமொழிகள் சூட்டி அழகுபார்த்து மகிழ்கிறது தமிழ்ச்சமூகம். இதில் வீறுகவியரசர் என்று போற்றப்பெறும் சிறப்புக்குரியவர் முடியரசனார்.

முடியரசனார் தம் மரபு பூத்த புரட்சிக் கவிதைகளால் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞராய் விளங்கியதோடு மட்டுமின்றி, காவியம், சிறுகதை, நாடகம் எனப் பல்வேறு இலக்கிய வடிவங்களைப் படைத்த பன்முகப் படைப்பாளராயும் திகழும் பெருமைக்குரியவர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் போன்ற பல்வேறு அறிஞர் பெருமக்களால் போற்றவும் பாராட்டவும் பெற்றவர் முடியரசனார். தமிழக அரசின் பரிசு, விருதுகள், நூல்கள் அரசுடைமையாக்கல் போன்ற பல்வேறு சிறப்புகளைப் பெற்ற கவிஞரது படைப்புகளை இன்றையத் தமிழ்ச் சமூகம் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே ஒரு தேசியக் கருத்தரங்கை நடத்த வேண்டும் என்று வீறுகவியரசர் அவைக்களம் விரும்பியது. அவ்வெண்ணத்தை நனவாக்கியவர் கோவிலூர் ஆதினம் சீர்வளர் சீர் மெய்யப்ப ஞான தேசிக சுவாமிகள் ஆவார்.

'வீறுகவியரசர் முடியரசன் படைப்புலகம்' என்னும் பொருண்மையில் நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரி மற்றும் முடியரசனார் அவைக்களம் இணைந்து இக்கருத்தரங்கை நடத்துவதற்கு அனுமதி நல்கிய **சீர்வளர்சீர் மெய்யப்ப ஞான தேசிக சுவாமிகள்** அவர்களுக்கு முடியரசனார் அவைக்களம் சார்பில் மனமார்ந்த நன்றி என்றென்றும் உரியது.

மேலும் இக்கருத்தரங்கம் சிறப்புற நிகழ்வதற்குப் பெரிதும் துணை நிற்கும் நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் பா.செல்லப்பா அவர்களுக்கும், தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ம.கார்மேகம் அவர்களுக்கும், தமிழ்த்துறைப் பேராசிரியர்களுக்கும் எம் நன்றி உரியது.

இக்கருத்தரங்கம் குறித்த செயல்பாடுகள் அனைத்திலும் துணை நிற்கும் முடியரசனார் அவைக்கள நிறுவனர் அய்யா பாரி முடியரசன் அவர்களுக்கும் அவைக்களப் புரவலர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் அவர்களுக்கும் துணைத்தலைவர் பேராசிரியர் இரெ.சந்திரமோகன், அவைக்களச் செயலர்கள் முனைவர் ம.ஸ்டீபன் மிக்கேல் ராஜ், புலவர் இரா.வனிதா ஆகியோருக்கும் மனமார்ந்த நன்றி.

இக்கருத்தரங்கிற்குக் கட்டுரை வழங்கிய பேராளர்களுக்கும் நூலாக்கத்திற்குத் துணை நின்ற முனைவர் வ.பாவரசன், பெ. குபேந்திரன் ஆகியோருக்கும் எனது உளம் கனிந்த நன்றி.

அன்புடன்,

பேரா.சே.செந்தமிழ்ப்பாவை

தலைவர்,

வீறுகவியரசர் முடியரசன் அவைக்களம்,

காரைக்குடி.

பொருளடக்கம்

முடியரசன் பாடல்களில் ஒளிவிடும் முருகியல் பார்வை

அ. அரவரசன் *

உள்ளமதில் உறுதிகுன்றா உணர்வுகளை நெருப்பாக வளர்த்தெடுத்த தெள்ளுதமிழ்க் கவியேறு முடியரசனாரின் கவிதைகளில் மின்னலின் கீற்றாய் தென்றலின் குளுமையாய் இடிதரும்முழக்கமாய் பட்டுத்தெறிக்கின்ற அழகியல் உணர்வினில் பொங்கிப் பெருகிவரும் அளப்பெரிய உணர்ச்சிப் பெருக்கில் துள்ளாட்டம் போடவைக்கும் தன்மையை முழுவதுமாய் பெறுகிறபோது மெய்சிலிர்த்துப் போகிறோம்.

இயற்கைப் பொருட்கள் இன்பமயமான அமைதியில் அடங்கிக் கிடக்கின்றபோது அவை நம்மிடம் பேசுவது கூட தம்முடைய இன்ப நிலைக்கு இடையூறாகிவிடும் சூழல் உருவாகிவிடும். அந்த அமைதியான நிலையை கலைக்காமல் இருந்தால் அதுவே உயர்வான அறமென்றும் அந்த அறநிலையைத் தன்னுள் உணர்ந்து கொள்ளும் இயல்புடையவன்தான் கவிஞன் என்னும் தகுதியை அடைகின்றான் என்கின்றனர் திறனாய்வாளர்கள்.

இயற்கைப் பெருவெளியில் அதன் அசைவுகள் அது எழில் குலுங்கப் போடுகின்ற ஆட்டங்கள், வாடிய நிலையில் உதிர்க்கும் கண்ணீர் துளிகளில் வெம்மைக் கதிர்கள் காட்டும் உள்புற விளைவுகள், அருவிகளின் ஆர்ப்பரிப்புடன் கூடிய உச்சநிலைப்பாடுகள், அதிலே தெறித்து விழும் நீர்த்திவலைகளில் உள்புகுந்து சிரிக்கும் நுட்பம் சார்ந்த மெய்ப்பாடுகள், மலைமுகடுகளில் எதிரொலிக்கும் ஒலிச் சிதறல்கள் என்ற இயற்கையின் கூத்தினை தனது ஓரிரு கவிதை வரிகளில் வடிப்பவன் அதனைப் படிப்பவனின் உள்ளத்தில் ஊறிவரும் எழுச்சியுடன் கூடிய கிளர்ச்சியை உள்வாங்கும் பார்வையில் கனன்று

* தலைவர், தமிழ் இலக்கியப் பேரவை, தேவகோட்டை.

வரும் உணர்வுகள் தான் "முருகியல்" எனும் பதத்தின் அடிப்படை என்பார் ஸ்டென்கொனெவ் என்ற திறனாய்வாளர்.

இந்த முருகியல் நிலையை பர்டன் என்னும் திறனாய்வாளர் வேறொரு கோணத்தில் விளக்கும் போது "கவிதையில் வடிவமைக்கப்பட்ட உருக்காட்சிகள் சிந்தனையின் குறியீடுகளாக பரிணாமம் பெறும் போது அந்தச் குறியீட்டுச் சொற்கள் கவித்துவம் மிக்க உருக்காட்சியை மெய்ப்பாடுகளாக்கி நம் புலன்களைத் தொட்டு பல்வேறு விதமான அக உணர்வு எழுச்சியினைத் தூண்டுகின்றன" என்பார்.

இந்தவகையில் பார்க்கும் போது இந்த உருக்காட்சிகளின் பல்வேறு வகைப்படுகளால் கட்புல உருக்காட்சிகள், செவிப்புல உருக்காட்சிகள், சுவைப்புல உருக்காட்சிகள், இயக்கநிலை உருக்காட்சிகள், மரபு நிலை உருக்காட்சிகள் மற்றும் தொடுபுல உருக்காட்சிகள் என்று வகைப்படுத்தியுள்ளதை நோக்கினால் முருகியல் நோக்கின் மேன்மையை புலன்சார்ந்த புரிதலாக்கி உணரலாம். கவிஞரேறு முடியரசனின்

"தண்ணிலவின் ஒளிக்கதிர்கள் சாளரத்துள்
தலைகாட்டி ஒளிசெய்ய பஞ்சின் சேக்கை
வெண்மலரின் மணம்விரிக்க தென்றற் காற்று
விளையாடி அவண்திரிய பொய்யாச் சொல்லான்
கண்மலர்கள் குவிந்திருக்க ...."

என்னும் கவிதையில் இயற்கை நிகழ்வினை எழில் நிறை முருகியல் தன்மையுடன் கூடிய காட்சியாக்கியுள்ளதையும் அதன் மூலம் அக்காட்சி புலனுறுக் காட்சியாக படம்பிடிக்கப்பட்டுள்ளதையும் கண்டு தெளியலாம்.

"தேனார்ந்த தாமரையும் செவ்வாம்பால் மென்மலரும்
கானார்ந்த நீலக் கருங்குவளைப் போதிரண்டும்
எள்ளின் மலரும் எழில்மகிழம் பூவுடனே
வெள்ளை நிற முல்லை அரவிந்தத்தின் மொட்டிரண்டும்
செங்காந்தள் பூவிரண்டும் சேர்ந்து மலர்ந்திருக்கும்
எங்கெங்கும் காணா இளவஞ்சிப் பூங்கொடியோ?
ஆடும் மயிற்சாயலுடன் அன்னத்துன் மென்னைடயும்
கூடும் கிளிமொழியின் கூட்டுப் படைப்பாவாள்
சிற்பி மனத்தகத்துக் கற்பனையாற் காண்பதன்றிப்
பொற்பின் திருவுருவைப் பூரணமாய் சிற்றுளியால்
காட்ட இயலாதே ...."

எனும் பாடலில் ஊர்வலமாய் வருகின்ற இயல்மலர்கள், புள்ளினங்கள் என வகைப்படுத்தி அதைக் காட்சிப்படுத்தியுள்ள நேர்த்தியை சங்கப்புலவர் கபிலர் வரைந்தளித்த பூக்களின் அணிவகுப்போடு ஒப்பீடு செய்து சங்கப்புலவனின் சாயலுடன் நமது கவிஞரேறு எந்தவகையிலெல்லாம் இரண்டறக் கலந்து சிறக்கிறார் என்பதை உணரலாம்.

மங்கையின் அணிகலன்கள் பற்றிய தெளிவான பார்வை கவிஞருக்குள் தீர்க்கமாக ஒளிவிடுவதை கீழ்க்காணும் பாடல் உணர்த்துவதைக் காணலாம். அதனூடே அருந்தமிழின் ஐம்பெரும் காப்பியங்களின் பெயர்களை உள்ளீடாகப் பதிவிட்ட கவிதை என்றும் மெருகு குலையாத தன்மையுடன் மிளிர்ந்து நிற்பதை காணலாம். அதனை,

"...
சிற்றிடையில் காஞ்சிபுரம் சீலை உடுத்தியதால்
சுற்றி மணிமேகலையும் சூழுவதால் மார்பகத்துள்

சிந்தாமணி என்னும் செம்மணியைப் பூணுவதால்
செந்தா மரைபுரையும் சீறடியில் மாண்புமிகு
செஞ்சிலம்பு கொஞ்சுவதால் சேர்ந்தெனது நெஞ்சிலுறை
வஞ்சியவள் கையில் வளையாபதி கலிங்கக்
குண்டலமோ காதணியாய் ...."

என்ற பாட்டின் மூலம் உணர்த்தும் கவியுணர்வில் நாம் திளைக்கும் போது கவியோகி சுத்தானந்தபாரதி யாத்த,

"காதொளிரும் குண்டலமும் கைக்குவளை யாபதியும் கருணை மார்பின்
மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில் மேகலையும் சிலம்பார் இன்பப்
போதொளிரும் திருவடியும் பொன்முடி சூளாமணியும் பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாய் திருக்குறளைத் தாங்குதமிழ் நீடு வாழ்க"

என்ற பாடல் அத்துடன் இணைந்து வந்து நம்மை மேலும் மகிழ்வூட்டுவதை உணர முடிகிறது.

குளிர்ந்த சோலையில் மயில் ஆடக் கண்டிருந்த சிலபேர் அதன் ஒவ்வொரு உறுப்புகளையும் தனித்தனியாய் சொல்லிய பாங்கினை கண்ட கவிஞரேறு அதன் சாரத்தைத் தன் கவிதையில் கூறியுள்ள நிரலின்படி அந்தக்காட்சியின் பன்முகத்தன்மையை நாடகத் தமிழின் கவிதையாக நமக்குக் காட்டுவதில் இன்பம் தளும்புவதைக் காணலாம். அதாவது

"மலர்விரிந்த குளிர்தென்றற் சோலை தன்னில்
மயிலொன்று தோகைவிரித் தாடக் கண்டேன்
சிலர்வந்தார் எனைச்சூழ்ந்து, மயிலைக் கண்டு
சிந்தைதனைப் பறிகொடுத்தார் புகழக் கேட்டேன்
குலவியநல் தோகைகளில் ஒருவர் சொன்னார்
கொண்டைஎழில் மிகநன்றென் றொருவர் சொன்னார்
நலமிகுந்த வண்ணங்கள் ஒருவர் சொன்னார்
நடனந்தான் அருமையென மற்றோர் சொன்னார்
அரிவையரைத் தோற்கடித்த சாயல் கண்டேன்

அடடா என் றதைப்புகழ்ந்தார் நீள்க முத்தை
மருவுமொழிச் சிறுவிழியைப் புகழ்ந்தார் பல்லோர்
வாய்மொழிந்த அத்தனையும் உண்மை உண்மை”

என்று குறிப்பிட்ட இந்தப்பாடலின் இறுதியில் மயிலின் அழகு, தோகை எழில் கழுத்தின் மினுமினுப்பு, அதன் நடனம் என தனித்தனியாய் பார்ப்பது எப்படி உண்மையோ அது போல் வள்ளுவரின் குறளின் பெருமையும் வரிக்குவரி படித்துப் பார்க்கப் பார்க்க மனத்திரையில் புதிதுபுதிதான கருத்துக்களின் படம் விரியும் என்றும் வலியுறுத்தும் பாங்கில் பாடலின் சந்தம்-பொருள்-காட்சியின் விரிவினை உணரலாம். மேலும் இப்பாடலில் கட்புல உருக்காட்சி, தொடுபுல உருக்காட்சி, இயக்கநிலை உருக்காட்சி என கலப்பு நிலை உருக்காட்சிகள் காணக்கிடக்கின்றன.

“..................
தென்னாட்டார் வீரம் தெரியாமல் போர்தொடுத்து
வெங்காட்டி மாற்றுருவில் ஓடிமறை வீரரைப் போல்
ஓங்கும் மலைமேல் உராயும் முகிற்கூட்டம்
தேங்கி குளிர்தாக்க தேய்ந்தே உருமாறி
நீராகி ஆறாகி நிற்காமல் ஓடி ஒரு
பேராழி யுள்மறையும் பெற்றிமையும் ஈங்கிருக்கும்
உச்சி மலைவெடிப்பின் உள்ளிருந்து போந்துபல
பச்சிலைகள் தண்மலர்கள் பற்றிக் கொடுவந்து
தத்தித் தவழ்ந்து தடைசெய்யும் பாறைகளைக்
குத்தி பிளந்து குதித்தோடி மேலிருந்து
தார்முரசம் என்னத் தடதடவென் றார்த்திரங்கி
கார்முழக்கம் அஞ்சி கடுகிவரும் பேரருவி
............................”

எனும் பாடலில் கட்புல உருக்காட்சியும் தொடுபுல உருக்காட்சியும் இயக்கநிலை உருக்காட்சியும் ஒன்றிணைந்து கலவைநிலை உருக்காட்சிகளாகப் பயணித்து வருவதனைக் காணலாம். மலையில் தோன்றும் அருவியின் பயணத்தை இப்படி சுவைபடும் பாங்கில் தொடரோவியமாகக் கவின்மிகு முறையில் வடித்துள்ளதை எண்ணினால் மனதுக்குள் குருதியோட்டம் துள்ளிக் குதிக்கிறது.

திராவிட இயக்கத்தின் தலைமைக்கவிஞர்கள் வரிசையில் இருந்தவரான இவர் அந்த உணர்வில் திராவிட இயக்கத்தின் வளர்ச்சிக்கும் தமிழ்க்காப்புக்கும் உதவிய திராவிட இயக்கத்தின் தாளிகைகளை வளைப்படுத்தியும் தன்மதிப்பு இயக்கத்தின் உள்ளீட்டுக் கொள்கையை வலியுறுத்தியும் பாடிய,

“தென்றல்தவழ் நாட்டினரே முரசொ லித்துத்
தென்னகத்தைத் திருநாட்டை மீட்ப தற்கு
மன்றங்கள் அமைத்திடுவீர் போர்வாள் ஏந்தும்
மாவீரர் படைசேர்ப்பீர் இனமு ழக்கம்
நின்றெங்கும் எழுப்பிடுவீர் சிறையைக் காட்டின்
நிமிர்ந்திருந்து முல்லைமலர் சோலை என்பீர்
கொன்றழிக்கக் கயிறெடுத்தால் கழுத்தைத் காட்டிக்
குலவுமெழில் முத்தாரம் என்று கொள்வீர்
வீரமிகு நம்நாடு பாரில் ஓங்க
விடுதலைப்போர் தொடங்கிடுவீர் உரிமைபெற்றுத்
தீரமிகு தனியரசாய் மக்க ளாட்சி
செழித்தோங்க செய்வதுநம் உரிமை யாகும்
கூரறிவுத் திராவிடன்பால் அடுத்தி ருக்கும்
குடிலர்களை சகுனிகளை உடன்பி றந்தும்
மாறுபடு வீடணரை விழித்தி ருந்து
மாற்றிடுவீர் நம்நாடு வாழ்க நன்றே.”

என்ற பாடலின் உள்ளீட்டை நுணுகிப்பார்த்தால் தொடுபுல உருக்காட்சியும் இயக்க நிலை உருக்காட்சியும் செவிப்புல உருக்காட்சியும், கட்புல உருக்காட்சியும் கலவையாகத் தோன்றி நம்மை நோக்கிக் கண் சிமிட்டுவதைக் காணலாம். சுவைப்புல உருக்காட்சிக் கென்றே படைத்ததைப் போல

"................... பழுத்த கனி துய்ப்போர்க்கு
நாவெல்லாம் இன்சுவையாம் நாளெல்லாம் நற்சுவையாம்
சொல்ல இனிக்கும் சுவைக்க இனித்திருக்கும்
மெல்ல நினைக்க மிகஇனிக்கும் மீண்டினிக்கும்
கேட்கச் செவி இனிக்கும் நாடோறும் கேட்பதற்கு
வேட்கும் படிஇனிக்கும் வேண்டும் பொழுதினிக்கும்
இன்றினிக்கும் நாளைக் கினித்திருக்கும், இக்கனியே
என்றும் இனிக்கும் இதனினிப்புக் கொப்புண்டோ,
உண்ண மிகஇனிக்கும் உண்டால் தெவிட்டாது
வண்ணம் கனிந்திருக்கும் வாடாது நின்றினிக்கும்"

என்று இனிக்க இனிக்க வடித்துள்ள இப்பாடலின் ஒவ்வொரு வரியும் மிகநேர்த்தியாகப் படைக்கப்பட்டு சுவைப்புல உருக்காட்சியை பல்வேறு வகைப்பாட்டில் சுவை மல்க சொல்லியுள்ளதை எண்ணி எண்ணி இன்புறலாம்.

இதன் மூலம் கவிஞரேறுவின் வேட்கை எது? விழுமியம் எது? இலக்கு எது? வெற்றிப்பாதை எது? பயணிக்கும் நோக்கு எது? என்பனவற்றை படைக்கப்பட்ட கவிதையின் நுட்பத்தில் முருகியல் நோக்கில் காணுகையில் மேன்மையும் சீர்மையும் சுடர்விடுவதை முழுமையாக நன்குணரலாம்.

முடியரசனாரின் பாடுங்குயில் சுட்டும் உரைநடைத்திறன்

ஆ.அருள்சாமி *

முன்னுரை

படைப்பாளனைத் தனித்து அடையாளம் காட்டுவது படைப்பாளனின் உரைநடையே ஆகும். படைப்பாளன் தான் கண்டுணர்ந்த கவிஞர்களின் உணர்வு நிலைகளை வெளிப்படுத்தும் நிலையில் வாழ்வியல் இலக்கியங்களை உரைநடை வடிவில் படைக்கின்றான். அவ்வகையில் கவியரசர் முடியரசனார் படைப்பாளிகளை இனங்கண்டு அவர்களின் வாழ்வியல் நெறிகளையும் தமிழ் மொழிக்கு செய்வித்த தொண்டினையும் 'பாடுங்குயில்' என்னும் உரைநடையின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். பாடுங்குயிலில் அமையப்பெற்றுள்ள உரைநடைத்திறன்களை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

கால அடிப்படையிலான நடைத்திறன்

படைப்பாளிகளின் வாழ்வியலை அறிந்து கொள்வதற்கு அவர்கள் வாழ்ந்த காலச்சூழல் இன்றியமையாதது. படைப்பாளிகள் வாழ்ந்த காலச்சூழலை அடிப்படையாகக் கொண்டே படைப்புகளைத் திறனாய்வு செய்வது படைப்பின் வெற்றிக்குக் காரணமாய் அமைகின்றது. அவ்வகையில் கவிஞர் முடியரசனார் பாடுங்குயிலில் படைப்பாளர்களை காலச்சூழலை அடிப்படையாகக் கொண்டே உரைநடையாக்கம் செய்துள்ளார். கி.பி.1826-ஆம் ஆண்டு முதல் கி.பி.1964 ஆம் ஆண்டு வரையுள்ள காலக்கட்டங்களில் வாழ்ந்த மாயூரம் வேதநாயம் பிள்ளை, தேசிய விநாயகம் பிள்ளை, பாரதியார், பாரதிதாசன் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றினையும் தமிழ் மொழிக்கு ஆற்றிய தொண்டினையும் உரைநடையின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். என்பதனை,

"புதுவையில் வாழ்ந்து கொண்டிருந்த போதே பாரதியார் கி.பி.1909-இல் "ஜன்மபூமி" என்னும் பெயரில் தம் சுதேச கீதங்களை நூலாக்கி வெளியிட்டார்" (பா.கு.ப.234)

---

* முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்ப் பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

"கி.பி.1917-இல் பாரதியாரின் 'கண்ணன் பாட்டு" நூலை வெளியிட்டவர் அவரே" (பா.கு.ப.234)

"மாயூரம் - வேதநாயகம் பிள்ளை கி.பி.1805-ஆம் ஆண்டு முதல் கி.பி.1861-ஆம் ஆண்டு முடிய உள்ள சட்டங்களை தமிழில் மொழிபெயர்த்தார்" (பா.கு.பக்.204-205) என்னும் உரைநடைகள் சுட்டும்.

தூய தமிழ் நடைத்திறன்

கவிஞர் முடியரசனார் பிறமொழிக் கலப்பில்லாமல் தூய தமிழ் நடையில் உரைநடை அமைத்துள்ள பாங்கினை பாடுங்குயில் வாயிலாக அறிய முடிகின்றது. "இளஞ்சிறார்களைப் போற்றி வளர்க்க மறந்த எந்த நாடும் ஏற்றம் பெறுவதில்லை, இவ்வுண்மையை நன்குணர்ந்து, இளஞ்சிறார் நெஞ்சங்களைப் பண்படுத்தி, மக்கட்பண்பை வளர்க்க வேண்டும் என்னும் கொள்கைக்காகவே வாழ்ந்தவர் மிகச் சிலரே" (பா.கு.ப.207) என்னும் உரைநடைத்தொடரானது தூய தமிழ் மொழிநடைக்குச் சான்றாக அமைகின்றது. மேலும், "சுப்பையா குழலும் யாழும் நாண மழலை மொழி பேசினான்; சிறுகையை நீட்டிக் குறுகுறுநடந்தான்" இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும் நெய்யுடை உணவை மெய்ப்பட விதிர்த்தும் தம் பெற்றோரை மயக்கினான். காலம் கடந்தது; சுப்பையாவுக்கு ஐந்தாம் ஆண்டு நடந்தது" (பா.கு.ப.223) என பாரதியாரின் இளமை வாழ்வினை வெளிப்படுத்தும் நிலையில் தூய தமிழ்மொழியின் நடையினைக் கையாண்டுள்ளார் முடியரசனார்.

மேற்கோள் சுட்டல்

படைப்பாளரின் கருத்திற்கு வளம் சேர்க்கும் வகையில் மேற்கோள்கள் எடுத்தாளப் பெறுகின்றன. பாடுங்குயிலில் சுட்டப்பெறும் மாந்தர்களின் வாழ்வியலைச் சுட்டுமிடத்தும் மாந்தர்களின் தமிழ்ப்பணியினை வெளிப்படுத்தும் நிலையிலும் மேற்கோள்கள் எடுத்தாளப்பெற்றுள்ளமை உரைநடைத்திறனிற்கு வலுச்சேர்க்கும் நிலையில் அமைந்துள்ளன. இதனை,

"அறிவை வளர்க்க ஆர்வமின்றிச் சீரழிகின்றனரே என்று எண்ணி எண்ணி ஏங்கினார். அந்த ஏக்கத்தை,

'தென்னாட்டின் நிலை நினைத்தால் வெடிக்கும் உள்ளம்
செந்தமிழர் நிலை நினைத்தால் துடிக்கும் நெஞ்சம்'

(பா.கு.ப.244)

என வரும் இவர் பாடல் அடிகளிலே காணலாம்.

பாரதிதாசனின் விடுதலையுணர்வு மிக்க கவிதை வரிகளை விடுதலைக் குயிலில் சுட்டுமிடத்து,

> **“மனிதரில் நீயும் ஓர் மனிதன்; மண்ணன்று**
> **இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்;**
> **தோளை உயர்த்து; சுடர்முகம் தூக்கு**
> **மீசையை முறுக்கி மேலே ஏற்று”**
> **(பா.கு.ப.245)**

என்னும் பாடலடியின் வாயிலாக மேற்கோள் எடுத்தாளப் பெற்றுள்ளது.

இலக்கண நடைத்திறன்

இலக்கிய வடிவங்களில் இலக்கணக் கூறுகளை உட்படுத்துவது உரைநடைத்திறனை மேம்படுத்துவதற்குக் களனாக அமைகின்றது. அவ்வகையில் கவிஞர் முடியரசனார் பாடுங்குயிலில் கவிஞர்களின் சிறப்பினை வெளிப்படுத்தும் நிலையில் இலக்கண நடையினைக் கையாண்டுள்ளார். பாடுங்குயிலில் குயில் என்னும் இயைபுத் தொடையினை அடிப்படையாகக் கொண்டு இசைக்குயில், மணிக்குயில், விடுதலைக்குயில், புரட்சிக்குயில் என வகுத்து படைப்பாக்கம் செய்துள்ளார்.

புரட்சிக்கவிஞன் பாரதிதாசன் செயல்பாடுகளை விளக்குமிடத்தில் இயைபினால் அமைந்த இலக்கண நடையினைக் கையாண்டுள்ளார். இதனை, “சுப்புரத்தினம் பாரதிதாசனாக மாறிய பிறகு இவருடைய எண்ணத்தில் புரட்சி; சொல்லில் புரட்சி; எழுத்தில் புரட்சி; செயலில் புரட்சி; சுருங்கக் கூறின் இவர் தோற்றமே புரட்சி” (பா.கு.ப.243) என்னும் உரைநடைசுட்டும்.

“மலை வளம், ஆற்று வளம் முதலிய வளங்களைக் கொண்டோ விளைநிலம், சோலைநிலம் இவற்றின் செழிப்பைக் கொண்டோ மட்டும் ஒரு நாடு சிறப்புப் பெறுவதில்லை” (பா.கு.ப.207) என்னும் உரைநடையில் இயைபுத் தொடை பொருந்துமாறு உரைநடையாக்கம் செய்துள்ளார் முடியரசனார். மேலும் உணர்ச்சி நடையில் உரைநடை அமைந்துள்ளார். இதனை, “நாடெங்கும் இளைஞர் படை திரண்டெழுந்தது. எங்கும் உணர்ச்சி! எங்கும் எழுச்சி!” (பா.கு.ப.245) என்னும் உணர்ச்சிமிக்க நடை சுட்டும்.

கதை கூறும் நடைப்பாங்கும் ஒப்பிடும் நடைத்திறனும்

கவிஞர்களின் வரலாற்று நிகழ்வுகளை கதைகளின் மூலம் குறிப்பிடுவது எழுத்தாளனின் படைப்பாளுமையாகும். படைப்பாளர்களின் வாழ்வியலை வெளிப்படுத்தும் நிலையில் கதை கூறும் உத்தியினைக் கையாண்டுள்ளார் கவியரசர் முடியரசனார். மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் சமூகத் தொண்டினைக் குறிப்பிடுமிடத்து, "ஒரு சமயம் தமிழ்நாட்டிலே பெரும்பஞ்சம் ஏற்பட்டது. அது தாது வருடத்திலே ஏற்பட்டமையால் 'தாது வருடப் பஞ்சம்' எனப்பட்டது. அவ்வாண்டில் வானம் பொய்த்தது. மழையே பெய்யவில்லை. மழை பெய்யாமையினால் விளைச்சல் இல்லை. விளைச்சல் இல்லாமையால் உணவில்லை. உணவின்மையால் மக்கள் பெரும் துன்பத்திற்காளானார்கள். எங்கு நோக்கினும் ஒரே அவலநிலை எவ்வாறு மக்களுக்கு உதவுவது என்று சிந்தித்து வேதநாயகர் ஒரு முடிவுக்கு வந்தார்; கஞ்சித் தொட்டிகள் வைத்துப் பசியால் வாடிய மக்களுக்குக் கஞ்சி வார்த்து ஓரளவு அவர்களுடைய துன்பத்தைக் களைந்தார். ஒல்லும் வகையால் அறவினை செய்தார்" (பா.கு.பக்.201-202) என்னும் உரைநடை கதை கூறும் நடைப்பாங்கினை வெளிப்படுத்தும்.

கவிஞர் முடியரசனார் தாம் சுட்டும் இலக்கியப் படைப்பாளர்களை பிற இலக்கியப் படைப்பாளர்களோடு ஒப்பிட்டு படைப்பாக்கம் செய்துள்ளார். பாரதிதாசனின் மொழிப் புலமையினைக் கூறுமிடத்து, "புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வெண்பா, ஆசிரியப்பா முதலான எல்லாவகைப் பாக்களையும் பாட வல்லவர். ஆயினும் விருத்தப்பா என்னும் பாடல் எழுதுவதில் ஆற்றல் மிக்கவராக விளங்கினார். வெண்பாப் பாடுவதில் புகழேந்திப் புலவர் எவ்வாறு வல்லவராக விளங்கினாரோ, அவ்வாறே விருத்தம் பாடுவதில் கம்பர் முன்பு வல்லவராக விளங்கினார். கம்பருக்குப் பிறகு விருத்தப்பாவிற்குப் புத்துயிரும் பெருமதிப்பும் உண்டாகச் செய்தவர்களுள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் ஒருவர்" (பா.கு.பக்.246–247) என்னும் உரைநடையானது ஒப்பாய்வு நடைத்திறனை வெளிப்படுத்துகின்றது.

முடிவுரை

- படைப்பாளிகள் வாழ்ந்த காலச்சூழலை அடிப்படையாகக் கொண்டு படைப்பாக்கம் செய்வதில் முடியரசனார் சிறந்த படைப்பாளியாகத் திகழ்கின்றார்.

- பிற மொழிக் கலப்பில்லாமல் தூய தமிழ் நடையில் உரைநடையாக்கம் செய்யும் திறம் படைத்தவர் கவியரசர் முடியரசனார் ஆவார்.
- படைப்பாளரின் கருத்திற்கு வளம் சேர்க்கும் நிலையிலும் மாந்தர்களின் வாழ்வியலைச் சுட்டுமிடத்தும் கதைமாந்தர்களின் தமிழ்ப்பணியினை வெளிப்படுத்தும் நிலையிலும் மேற்கோள்கள் பாடுங்குயிலில் எடுத்தாளப்பெற்றுள்ளன.
- இலக்கிய உரைநடை வடிவங்களில் இலக்கணக் கூறுகளை உட்படுத்துவது கவிஞர் முடியரசனாரின் உரைநடைச் சிறப்பினை வெளிப்படுத்துகின்றது.
- வாசகன் கதைமாந்தரின் வாழ்க்கைச் சூழ்நிலைகளை அறிந்து கொள்ளும் நிலையில் கதை கூறும் பாங்கினையும் பிற படைப்பாளர்களோடு ஒப்பிட்டு படைப்பாக்கம் செய்யும் திறத்தினையும் ‘பாடுங்குயில்’ வாயிலாக அறிய முடிகின்றது.
- மேற்சுட்டப்பெற்ற கருத்தாக்கங்களின் வழியே இருபதாம் நூற்றாண்டில் உரைநடைத்திறன் வாய்ந்த படைப்பாளர் கவியரசர் முடியரசனார் என்பதை அறியமுடிகின்றது.

வாய்மணக்க முணுமுணுக்கும்

கல்லை அருட்செல்வன் *

தன்னேரிலாதது நம் தண்டமிழ்!

கற்பனைக் கவின்சார் கருத்துயர் கனிகளை மிகுத்து மிகுத்து உகுத்திடும் இன்னரும் பாச்சோலைகள் பலப்பல படர்ந்து செழித்தது நம் பைந்தமிழ்நிலம்! இங்கே தகவுடைப் பாவலர் மிகப்பலர் தோன்றினர். ஆகநிலை சிறந்திட ஆக்கம் அளித்தனர். அவருள் எண்ணி எண்ணி இன்புறப் பாடி மண்ணில் என்றும் மின்னிடச் செய்தவர் மீமிசைப் புலவராம் வீறுதமிழ்ப் பாவரசர் முடியரசனார்.

அவர்தம் பாக்கள் நவில நவில நயமிகும். பயிலப் பயிலப் பண்பெழும். வாழ்வின் உயிர்ப்பு வளம்பெறும். ஆழ்மனத்துணர்வு அமைவுறும். ஏற்றம் வேண்டின் எழுச்சியூட்டும். மாற்றம் நிகழ்த்தி மாண்பிற்கூட்டும்.

பாவேந்தர் என்னும் ஆலமரத்தின் பயன் விழுதாய் ஊன்றியவர் முடியரசனார். தமிழ் வழங்கும் மண்ணும் அதன் மக்களும் மாண்பெய்திட உள்ளம் சோராது உழைத்த பெருமகனார். எம்போல் வார்தண்டாமரைத் தேன்பயில் வண்டாய்ப் படிந்தெழப்பாவூற்றாய்ச் சுரந்தவர்.

பன்முகச் சிறப்புகள் பாங்குற அமைந்த படைப்புத் திறனாளர் அவர். அவர்தம் பாவமுதம் எம்நினைவில் எத்தனையோ இருப்பினும், அவ்வப்போது நெஞ்சினின்றும் சிலகுமிழியிட்டுக் கிளம்பிடும். வாய்மணக்க மணக்க முணுமுணுக்கும். வந்து வந்து போகும் வாழ்விடைத் துயர்களுக்கு மருந்தெனவும் ஆகும். அவற்றுட் சிலவற்றை ஈங்கு உதிர்ப்பது உவகையூட்டுவதாகும்.

கடமையும் கலகமும்

மூவாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக, எண்ணிறந்த சூழ்ச்சிகளால் ஏமாற்றி, நம் உழைப்பினை உறிஞ்சிக் கொழுக்கும் வெள்ளுடற் கருமனச்சிறுகூட்டம், என்றும் நம் இன எதிரியாய் இன்றும்

---

* முன்னாள் துணை ஆசிரியர், தென்மொழி, ஒட்டன்சத்திரம்.

தொடர்வது இழுக்கன்றோ? விழியாத்துயிலில் வீழ்ந்து தாழ்ந்து கிடந்தும் மீளும் உணர்விலராய், விலங்கினும் கீழாய்ப்பிழைப்புற்ற நம்மனோரைக் கண்திறக்கச் செய்துகாத்தல் அறிஞர்தம் கடனன்றோ?

கடமையாளரைக் காணின் கலகஞ் செய்வது கயவர்தம் இயல்பன்றோ? எனினும் அஞ்சாதெழுந்து நெஞ்சுரங்காட்டி, அக்கயவரை எதிர்த்து எள்ளி மேற்சென்று வெல்வது இனிதன்றோ? இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், குறிப்பாக ஐம்பது அறுபதுகளில், வீச்சாக நிகழ்ந்த வினைப்பாடுகள் இவை. நம் பாவரசரின் பொழிவில்,

மதியுடையார் பேசுவதைக் கேட்டல் நன்று
மாண்பு வரும்எனக்கு முழும் விண்மீன்கூட்டம்
அதுமகிழ வானத்து மேடையேறி
அம்புலியார் சொற்பொழிய முகிலன்ஓடி
எதிரியெனக் கூட்டத்துள் ஒளிமறைத்தான்,
இடியிடித்தான், குழப்பத்தை ஆக்கிவிட்டான்
இதிலென்ன கண்டனனோ? மதியர் நாளை
ஏறாமல் இருப்பாரோ மேடைமீது?

எனப்பொங்கியது. திராவிட எழுச்சியின் மேம்பட்டகாலம்! தீந்தமிழின் சுடரொளி துலங்கிய நாள்கள்!

மகிழ்ச்சி தரும் தோல்வி

மகிழ்ச்சி தரும் தோல்வி வீரமரபு. வழிவழிவந்த மறத்தனம். வெற்றி முகடுகளில் விளையாடும் செருக்கு. விண்ணதிரும் முழக்கங்கள். மாண்பு மேலிட்ட மானவாழ்வு. இத்தகு மறம் செறிந்த நெஞ்சம் ஒரு தோல்வியில் மகிழ்கிறது. அத்தோல்வியைச் சிறப்பித்துப் பாடுகிறது. காணும் நாமும் மகிழ்கிறோம். அ..து என்ன?

போர்க்களத்தில் எதிர்நிற்க எவருங்காணேன்
பூரித்தேன் வீரத்தாற் செருக்குக் கொண்டேன்
தார்க்கழுத்தில் வன்புயத்தில் முகத்திலெங்கும்
தளிரடியால் எனைமிதித்தாய் தோற்றுவிட்டேன் !
இலக்கணநூல் இலக்கியநூல் நிகண்டுயாவும்
எளிதாகக் கற்றுணர்ந்தேன் பெருமைகொண்டேன்
சொலக்கருதி நாஉந்த இதழின் ஓரம்
சுழல்மழலைப்பொருள்தேறேன் தோற்றுவிட்டேன்!

என்பன போலும் தாழிசைப் பாடல்கள். தாழ்ந்து இசைந்து பாடுவதால் தாழிசை யாப்பினைத் தேர்ந்து கொண்டாரோ? ஐம்பதாண்டுகளுக்கு முன் இதனைப் படித்த பொழுது, இக்கற்பனை பாவலருள்ளத்தே தோன்றுங்கால் அவரடைந்த களிப்பினையான் அடைந்து மகிழ்ந்ததாக என் நினைவு கூறுகிறது. தான் உணர்ந்ததைத்தான் உணர்ந்தவாறே படிப்பவர் உள்ளத்துள் பாய்ச்சுபவரே பெருநற்பாவலர் ஆவார்.

தம்மக்கள் மழலைச் செயல்களில் இன்புறும் இப்பாடலைத் திருவள்ளுவர் படித்திருந்தால், தம்மரபின் மழலை முடியரசனாரின் அறிவுடைமையினை வியந்து இன்புற்றிருப்பாரன்றோ?

புலம்புகிறாள் புகழணங்கு

குமுகாய நலத்தினில் குவியாத உள்ளத்தில் பா ஊறுமா? குமுகாய இழிவு கண்டுகுமுறாத உள்ளத்தில் பா வாழுமா? வன்மையும் மென்மையுமாக ஏக்கமும் இரக்கமுமாகப் பல்வகை உணர்வுகளின் கொழிப்பன்றோ நற்பாவலர் தொழில்!

இசைபட வாழ்தலே உயிர்க்கு ஊதியம் என்பார் திருவள்ளுவர். அந்த இசை - புகழ் நற் செயல்களால் விளைவது. ஆனால் நன்றாற்றாது அல்லனசெய்வோரே புகழாசை மிக்கோராய் அதனைத்தம் இழிசெயல்களைக் கரத்தற்கும் காத்தற்கும் போர்வையாக்கிக் கொள்கின்றனர். பெரும்பாலும் பேராசை கொண்டு அனைத்து நுகர்வுகளிலும் ஈடுபாடு கொண்ட, பழியஞ்சாக்கயவர்களே பழிகரப்புப் புகழாளராவார். குறிப்பாக அரசியலைத் தொழிலாக ஆக்கிக்கொண்டவர்களும் வேண்டியதெல்லாங்கொடுத்து அவர்களை வயப்படுத்தி வைத்திருப்போரும் ஆவர். இத்தகு சூழலில் புகழ்மடந்தை தன்காதலை இழந்து புலம்புகின்றாளாம்!

என்பெயரைப் புகழென்று புவியோர் சொல்வர்
  எந்நாளும் பொதுத்தொண்டு புரிந்துவந்த
அன்பனை நான்காதலித்தேன் பழியென்பாளை
  அவனுக்கே உலகத்தார் மணமுடித்தார்!
தன்னலமே விழையுமொரு செல்வன் என்னைத்
  தனக்குரிமைப் பொருளாக்கப் பணத்தைவீசி
என்னலத்தை நுகர்வதற்கே சுற்றுகின்றான்
  இவ்வுலகும் சரியென்றால் யாதுசெய்வேன்?

இத்தகைய பாக்கள் பலநெஞ்சில் நின்றவை, நினைவில் நீள்பவை.

பிறிதுமொழிதலாய்ப் பிறங்கிய பாக்கள்

ஏட்டுப்பா எழில்காட்டி நீட்டுப்பா எழுதிக் கலை கலைக்காகவே என்னும் அளவில் கலைந்து போன பாவலர் பலர். கலைகலைக்கு மட்டுமன்று, வாழ்வின் நிலைக்கும் தான் எனும் பரப்பில் 'நின்றபுகழ்' நாட்டிய பாவலர் நம் முடியரசனாராவார்.

உள்ளொன்று வைத்துப்புறமொன்று பேசுதல்கூடாது. ஆனால் உட்பொருள் வைத்துப்பாவியற்றி உணர்த்துவது சிறப்பானதும் தேவையானதுமான ஓர் உத்தியாகும். நம் இலக்கியங்கள் உருவகப்பாங்காய்ப் பிறிதுமொழிதலாக உட்பொருள் உணர்த்துகின்றன.

அகத்திணையில் இவைஉள்ளுறை, இறைச்சிஎனவரும். அகப்பொருட்கு இணையானநிலையில் அமைந்தனவாகிய ஆதனியல் (ஆன்மீகம்) கருத்துகளை உணர்த்திட இத்தகுவித்தக உத்தியினையே சித்தர்கள் கையாண்டனர்.

தேன்கூடு

தனிவாழ்வுத் துன்பங்கள் பலப்பல தாங்கியும், நாட்டுத்துயர்க்கே மனம்பதைத்து எழுச்சியூட்டிய மாமறவர் நம் முடியரசனாராவார். குமுகநல உணர்வினர், மக்களுக்காகக்குரல் கொடுக்கும் நிலை ஒடுக்கப்பெறுகின்ற காலத்தே, அடக்குமுறைக்கு அடங்காது வெளிப்படுத்தியே தீரவேண்டிய நேரங்களில், இந்த உத்தியினைக் கைக்கொள்வது இயல்பே. இவ்வகையில் அமைந்ததே எம்அகம் அடிக்கடி அசைபோடும் பாக்களுள் ஒன்றான தேன்கூடு.

நம் காலத்தில் நடந்த வரலாறு இது. 1975 சூன் 25. இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தியம்மையார் கொணர்ந்த நெருக்கடிநிலை 21 மாதங்கள் 1977 மார்ச்சு 21 வரை நீடித்தது. முதலில் வட மாநிலங்கள் துடிதுடித்தன. முதன்மைத் தலைவர்களுக்குச் சிறை, சித்திரவதை எனப் பல்வகைக் கொடுமைகள் நிகழ்ந்தன. அக்கால் ஒரு சில காரணங்களால் நெருக்கடி நிலை நடைமுறைக்கு ஆளாகாமல் தப்பியிருந்தது தமிழ்நாடு. எனினும் தமிழ்நாட்டு முதல்வராக இருந்த தி.மு.க. தலைவர் கலைஞர் மிகவும் துணிச்சலோடு நெருக்கடி நிலைக்கு எதிராகக் கருத்துரைத்தார். மாற்றுக் கருத்தினர்க்குக் கூற்றுவனானது நடுவணரசு. அதனைத் தொடர்ந்து, 1976 சனவரி

31ஆம்நாள் தமிழ்நாட்டு அமைச்சரவை கலைக்கப்பட்டது. தலைவர்களும் தொண்டர்களும் எண்ணியும் பார்க்கவியலாக் கொடுமைகளுக்காளாயினர். இளந்தலைமுறையினர் இதனை விரிவாக அறிந்து கொள்வது நலம். நிற்க.

நம்மீது அழுக்காறு கொண்ட பகைவரால் நாம் நிலைகுலைந்து போயிருந்தோம். தன்மானமிழந்து, பகுத்தறிவு பாழ்பட்டு, மூடச்சேற்றில் மூழ்கிக் கிடந்த தமிழர்தம் இருண்ட நிலையில் ஒளியூட்டி, விழிப்புணர்வு வாழ்வில் மீட்சியுறும் நிலையில் இப்படியானதே எனப் பதைபதைத்தார் நம் பாவரசர்.

அடக்கி ஒடுக்கப்பட்டுக் கருத்துரிமை பறிக்கப்பட்ட - இதழறம்புதைபட்ட - இக்கட்டான பொழுதில் தம் உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டுமே! குரல்வளை நெரிபட்ட குயில் இசைமிழற்றாது அடங்கி ஊமையாகிடுமா? அமைச்சரவை கலைக்கப்பட்ட அதிர்வு பாடலாகிறது. குதை நிகழ்வினைப் போல் பாடிவிட்டார்! இதழொன்றில் வெளிவந்தது. அதுநொந்து கிடந்த எம்மனத் துயர்க்கு மருந்தாயிருந்தது. தென்மலைச் சாரலில் தேன் நிறைகூடு... ஆயிரம் சூழ்ச்சிகள் செய்தனர் கூடி... பொய்ம்மைகள் வீழ்ந்தன வேருடன் வாடி... எண்ணினர் வேறொரு சூது... வீழ்த்திட வேண்டினர்... தூற்றினர் நாநயம் கெட்டு...

கோடுயர் தென்மலை தாழ்வதுமில்லை – தேனின்
கூடுளசாரலும் வீழ்வதுமில்லை
காடுகள் மேடுகள் பூத்துளமுல்லை – மொய்த்துக்
கட்டிடும் தேனினம் கூட்டினை ஒல்லை.
தேனினம் சஞ்சலம் விட்டனகூடி – மீண்டும்
தேடிடும் பாடிடும் பூவினை நாடி
வானுயர் மாமலைக் காவினில்பாடிச் – சென்று
வந்திடும் வென்றிடும் வாகைகள்சூடி

என அமையும் இப்பாடல் 'பாடுங்குயில்கள்' தொகுப்பு நூலில் இடம் பெற்றுள்ளது.

ஒரு வரலாற்றுக் கடும் முயற்சி, எய்திய உயர்வு, எதிர்பாராச் சரிவு, வஞ்சகர் வலை, நாணிலாக் கயவர் தம் நயனின்மை, வெற்றியை

நோக்கிய விடாமுயற்சி, வீழாத நம்பிக்கை, துணிந்த தொலைநோக்கு என அனைத்தையும் உள்ளடக்கி வெளிப்படுத்தப் பெற்றுள்ள பாடல் தேன்கூடு. அதனைச் சுவைத்த இதயங்களே அதன்நுட்பம் அறியும்.

இப்பாடலில், 'நகையே அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை' எனத் தொல்காப்பியர் விளக்கும் எண்வகை மெய்ப்பாடுகளும், தாமாகவே அமைந்திருப்பது நுண்ணிதின் நோக்குவார்க்குப் புலனாகாமற் போகா. இஃது இயற்கைப் பாவலர்களின் பாடல்களில் இயல்பாகவே அமைவதென்க.

யார் பொறுப்பார்?

தாம் எதிர்நோக்கிய தமிழ் நில நலங்களைக் காப்பியக் கனவுகளாக வடித்திருந்தார் பாவரசர். நெருக்கடிநிலை அவற்றைத் தகர்ப்பது கண்டு ஆற்றாது 'யார்பொறுப்பார்?' எனப் பாடினார். நல்லனவற்றையெல்லாம் அல்லன வென்று நாக்கூசாமல் பேசி, பொய்ம்மைப் போர்வையில் மெய்ம்மையை மேலிட்டு மறைத்திடும் புன்மை கண்டு புழுங்குகின்றார். நெடிதாற்றி வந்த நல்வினை களை மறுத்து மாற்றுவதை யாரால் பொறுக்க முடியும்?

காவியம் பற்றியே தூற்றுகின்றார் – கொடுங்
காரியம் என்னென்ன ஆற்றுகின்றார்
நாவினை எப்படி மாற்றுகின்றார் – அட
நாட்டினில் பொய்ம்மையை ஏற்றுகின்றார்

எனவும்

பற்பலர் போற்றிடப் பேரெடுத்த - அந்தப்
பாக்களை மாற்றிட யார்பொறுப்பார்?

எனவும் கொதிக்கின்றார்.

உறங்கிய வீணை

'உறங்கிய வீணை'யாகப் பேச்சற்று ஒடுங்கியுள்ள கலைஞர் ஆட்சிக்கு மீட்சி வரும், மேன்மைகள் எழும், இடர் நீங்கிச் சுடரோங்கும் என்ற நம்பிக்கையை,

இடரால் விழிபுனல் வடிக்கும் – பின்
சுடர்போல் உணர்வுகள் வெடிக்கும்

என வெளிப்படுத்துகிறார். நல்லது செய்தாரை நலித்திட நினைப்பாரை உலகு பொறுக்காது,

வெறுத்துப் புறக்கணிக்கும், தண்டிக்கும். இதனை,
மீட்டிய விரல்களை வாட்டிட நினைத்தால்
மேதினி எவ்விதம் பொறுக்கும்? – அது
தீதெனவே சொலி வெறுக்கும் – பின்
தீமைகள் யாவையும் ஒறுக்கும்

என உருவகித்து உறுதி கூறி ஆழ்மன நம்பிக்கையை ஊன்றுகின்றார். ஊன்றிய நம்பிக்கை வீண்போகவில்லை. விடியல் மலர்ந்தது. பாவரசர் காலத்திலேயே அவர் 'வாகை சூடியதேனீ' க்களை வாழ்த்தினார். "இன்று திராவிட இயக்கம் நிமிர்ந்து நின்று செங்கோல் ஓச்சுகிறது என்றால் அதற்கு அன்று கவிதை எழுதிய கவிஞர் முடியரசனின் இலக்கியமும் ஒருகாரணம்" என்று கலைஞர் வாழ்த்தியுள்ளார்.

வித்தகர் புகழ் வாழ்க!

பாவேந்தர்க்குப் பின்பெருஞ்சித்திரனாரையும் முடியரசனாரையுமே முன்னிறுத்துவார் மொழிஞாயிறு பாவாணர். திராவிடத் தலைவர்கள் பலரும் உன்னியுணர்ந்து பாராட்டிய சிறப்பு நம் வீறுதமிழ்ப் பாவரசர்க்கே உரியதாகும்.

செந்தமிழ்மண் உள்ளவரை சீரார் புகழ்நிறுத்தும்
விந்தைப்பா ஆக்கி விருந்தளித்தீர் – எந்தம்
முடியரசே! பாவரசே! முந்து புகழ்ப்பாவின்
அடியுரமாய் ஆனீர் அமைந்து.

வீறுகவியரசரின் இளம்பெருவழுதி காப்பியத்தில் மொழிக்காப்பு

ஞா.அருள் ஞான வித்யா *

முன்னுரை

மதுரைப் பல்கலைக்கழகம் பாடமாக வைப்பதற்கு நாடகக்காப்பியம் ஒன்று இயற்றித் தருமாறு வீறுகவியரசரை வேண்டியதால் ‘உண்டாலம்ம இவ்வுலகம்’ என்னும் புறநானூற்றுப் பாடலைப் பாடிய புலவரும் புரவலருமாகிய கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி பெயரில் முடியரசனார் நாடகக் காப்பியம் இயற்றினார். அந்நாடகக் காப்பியத்தில் காணலாகும் மொழிக்காப்புணர்வை சுட்டிக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இளம்பெருவழுதி

உலகப் புகழுக்குரிய ‘உண்டாலம்ம இவ்வுலகம்’ என்ற புறநானூற்றுப் பாடலைப் பாடிய கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி மன்னனைப் பற்றி 1948-ஆம் ஆண்டு ஒரு சிறுகதையெழுதிப் ‘போர்வாள்’ என்னும் தாளிகையில் வெளியிட்டார் வீறுகவியரசர். அக்கதையையே சில மாற்றங்கள் செய்து இந்நாடகக் காப்பியமாக்கியுள்ளார். பண்டைத் தமிழரின் பழக்க வழக்கங்கள், இனப்பற்று – மொழிப்பற்று – நாட்டுப்பற்று, போர் மறுப்பு இவையே இந்நாடகக் காப்பியத்தின் உட்கோளாகும். இக்காப்பியத்தினுள் 23 காட்சிகள் அமைந்துள்ளன.

மொழிப்பற்று

தமிழாசான் வெண்டலை நாகனிடம் தமிழ் இலக்கிய இலக்கண நூல்களைக் கற்கச் சென்ற குழலி ‘கடினமான இலக்கணப் பயிற்சி எமக்கு எதற்கு?’ என்று இலக்கணப்பயிற்சிக்கு அஞ்சி வினவுகிறாள்.

அதற்கு பதிலுரைத்த நாகனார் ‘விழிகளுக்கு இமைகளைப் போலவும், ஆற்றுக்குக் கரைகளைப் போலவும் மொழியைக் காப்பது இலக்கணமாகும். முயலாதிருப்பின் எளிதில் வருமோ? முயலின் வாரா உறுதிகள் உளவோ?’ என்று அச்சம் நீக்குகிறார். அச்சமும் தயக்கமும் நீங்கிய குழலி தாய்மொழி காக்கும் வழிகளைக் கேட்கிறாள்.

* செயற்குழு உறுப்பினர், வீறுகவியரசர் முடியரசன் அவைக்களம், காரைக்குடி.

"புகுவ தடுத்தல் புதுவ படைத்தல்
தகுமிரு வகைத்தே தாய்மொழி காத்தல்" (காட்சி – 2)

என்று வழியுரைக்கின்றார். 'புதியன படைத்தலைப் போல புகுவது தடுத்தல் எப்படி தாய்மொழி காக்கும்?' என்று குழலி வினவுகிறாள்.

"அயன்மொழிக் காட்பட் டம்மொழிச் சொற்கள்
நயந்து கலந்து நடையிற் புகவிடல்
பிறமொழி விழைந்து பெறுமொழி மறந்து
வருமொழிக் காளுமை தருதல் எனுமிவை
புகாஅது காத்தல் புகுவ தடுத்தலாம்;" (காட்சி-2)

என்றும்

"தாய்க்குலம் விழித்தெழின் தாயகஞ் செழிக்கும்
தாய்மொழி ஆல்போல் தழைக்கும் கொழிக்கும்"
(காட்சி – 2)

என்றும் பிறமொழிச் சொற்களை தமிழ்மொழியில் புகவிடாமல் காத்தலையும், தாய்மொழி தழைத்துக் கொழிக்க தாயகம் செழிக்க பெண்கள் விழித்தெழுந்தால் முடியும் என்பதையும் வலியுறுத்திக் கூறுகின்றார்.

இம்மைக்குரியன இழப்பது நன்றோ?

வஞ்சி நாடனும் காழக மன்னனும் பாண்டிய மன்னன் மீது போர் தொடுக்க விழைவது தெரிந்து அரசவையில் மன்னன் செய்தியைப் பகிர்ந்தார். உடனிருந்த கணியன்

"முக்கட் செல்வன் முதுபெருங் கோவிலும்
தெற்கின் மேய செவ்வேள் குன்றும்
வடபால் மேய மாலிருஞ் சோலையும்
வடமொழி யோதி வழிபடின் நன்றாம்
இடமகல் நம்நா டேற்றமும் எய்துமால்" (காட்சி – 4)

என்று வடமொழியில் கடவுளை வழிபட வழிகூறுகிறார். உடனே அங்கிருந்த நாகனார் 'தென்மொழி யிசைப்பின் தீங்கு வருங்கொல்?' என்று சீறுகின்றார். 'தேவமொழியான வடமொழிக்குத் தேவர் உவப்பர்' என்று மறுமொழி கூறிய கணியனிடம்

'ஒரு மொழி தேவன் உவப்ப னாமெனில்
அறிவிற் சிறந்தோர் அச்சொல் ஏலார்;
பிறமொழி வெறுப்பன் இறைவன் என்ப
தறமும் அன்றே; அறிவும் அன்றே' (காட்சி – 4)

என்று பதிலடி தருகின்றார். அதை ஏற்றுக்கொள்ளாத கணியன் 'மன்னனின் மறுமைப் பயனுக்காக வடமொழியை ஓதுக என்றுரைத்ததில் பிழையுளதோ?' என்று வினவுகிறார். அதற்கு நாகனார்,

"செந்தமிழ் வளர்க்கும் சீர்சால் வேந்தன்
முந்தையர் சங்கம் மொய்ம்புறக் கண்டு
தாய்மொழி ஆய்ந்தனர் தமிழ்மொழி ஓதினர்
தீய நிரயத்துச் சென்றோ வீழ்ந்தனர்?
இம்மைச் செய்தன மறுமைக் காமென
இம்மைக் குரியன இழப்பது நன்றோ?
இருப்பது மறுத்தலும் வருவது புகுத்தலும்
வெறுப்புறு செயலாம்; விழைவதும் நன்றோ?' (காட்சி – 4)

என்று கணியனின் மூடத்தனத்தைச் சுட்டிக்காட்டுகிறார். தமிழ் மொழிக் காப்பாளராய் நாகனார் உருவில் நமக்கு வீறுகவியரசர் முடியரசனாரே புலப்படுகின்றார்.

தமிழே இனிமை

போர் மறுப்பைப் பொருண்மையாகக் கொண்ட காப்பியமாய் 'இளம்பெருவழுதி' நாடகக் காப்பியம் இருந்தாலும் அதில் இயன்ற போதெல்லாம் தாய்மொழிக்குப் புகழ்பாடுகிறார் முடியரசனார்.

'தாய்ப்பா லருந்தத் தயங்குமோ குழவி
தமிழே இனிமை' (காட்சி – 6)

'தாயக மண்ணுந் தாயும் ஒன்றே
தாய்க்கோ தீமை தன்மகன் நினைவன்?' (காட்சி – 17)

'மோனை யெதுகை முதலியன இழந்த
புன்மொழிப் பாட்டெனப் பொலிவில னாகி' (காட்சி – 18)

போன்ற இடங்களில் மொழியின் இனிமையையும், தாய் நாட்டின் பெருமையையும், மரபு மாறாமல் பா யாக்க வேண்டியதன் அருமையையும் எடுத்துரைக்கின்றார்.

முடிவுரை

வீறுகவியரசர் முடியரசனார் இளம்பெருவழுதி நாடகக் காப்பியத்தில் உரைப்பது போன்று தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தமிழர்கள் புகுவ தடுத்தலையும் புதுவ படைத்தலையும் தலைக்கடனாகப் பேணி வாழ்ந்தால் தன்டமிழ் மொழி தழைத்தினிது ஓங்குமென்பது உறுதி.

‘முத்தமிழ்க் கவியரசர்’- முடியரசன்

ஞா.அலோன் *
சூ.ஆரோக்கிய ஜெகன் *

முன்னுரை

‘கவிஞன் யார்?.. என்பதற்கு எடுத்துக்காட்டுத் தானய்யா, பகுத்தறிவுக் கவிஞர் முடியசன்’ என்று தந்தை பெரியாரும், ‘என் மூத்த வழித் தோன்றல் முடியரசனே;.. எனக்குப் பிறகு கவிஞன்.. முடியரசன்’ என்று பாவேந்தர் பாரதிதாசனாரும், ‘முடியரசர் பாவரசர் பாடுகின்றார். நாம் முழங்காலை நிலந்தாழ்த்தி வணங்கிக் கேட்பாம்’ என்று கவியரசு கண்ணதாசனாலும், ‘எவரெவரோ எழுதுகின்றார்! இவரைப் போன்றே எழுந்தவர் யார் எழுத்தாலே? பாவேந்தர்தம் தவப்புதல்வர்’ என்று உவமைக்கவிஞர் சுரதாவாலும் போற்றிப் பாராட்டப் பெற்றவர் முத்தமிழ்க் கவியரசர் முடியரசனார் ஆவார்.

பிறப்பும் கல்வியும்

பெரியகுளம் தென்கரையில் சீதாலட்சுமி - சுப்புராயலு இணையருக்கு ஐந்தாவது பிள்ளையாக 07.10.1920 இல் பிறந்தார். அக்குழந்தைக்கு துரைராசு என்று பெயரிட்டனர். எற்கனவே பிறந்த நான்கு குழந்தைகளும் இறந்துவிட, ஒன்றாவது நிலைத்ததே என்று பெற்றோர் அக்குழந்தையைக் கண்போலப் பேணி வளர்த்தனர். பெற்றோர் வளர்த்தனர் என்பதைவிடத் **‘தாய்மாமன் துரைசாமி வளர்த்தார்’** என்று கூறுவதே பொருந்தும்.

துரைராசுவிற்கு பிள்ளைப் பருவத்திலிருந்தே கவிதையுணர்வு தாய்மாமனால் வளர்ந்தது. வேந்தன்பட்டியில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் முதல்வகுப்பு முதல் நான்காம் வகுப்பு வரையிலும், ஐந்து ஆறாம் வகுப்பு மேலைச்சிவபுரியிலுள்ள சன்மார்க்க சபையிலும் பயின்றார். ஐந்து, ஆறாம் வகுப்புகளிலேயே நளவெண்பா, தேவாரம்

---

* வீரமாமுனிவர் கலை இலக்கிய மன்றம், தே பிரித்தோ மேல்நிலைப்பள்ளி, தேவகோட்டை.
* வீரமாமுனிவர் கலை இலக்கிய மன்றம், தே பிரித்தோ மேல்நிலைப்பள்ளி, தேவகோட்டை.

முதலிய இலக்கியங்களும், ஆறுமுகநாவலர் இலக்கண வினா விடையும் கற்பிக்கப்பட்டன.

ஆறாம் வகுப்பில் தமிழ்த் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்றமைக்கு ஆறுமுக நாவலரின் நன்னூல் காண்டிகையுரையை பரிசாகப் பெற்றார்.

மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வுக்காக சன்மார்க்க சபையினரால் நடத்தப்பெற்ற பிரவேச பண்டித வகுப்பில் சேர்ந்து நான்காண்டுகள் பயின்றார். அவ்வகுப்பில் பெற்ற தமிழறிவுதான் துரைராசுவை புலவனாக மிளிரச் செய்தது.

பிரவேச பண்டித வகுப்புத் தேர்வில் இலக்கணம், இலக்கியம், கட்டுரை இவற்றிற்குத் தனித்தனியே தேர்வுத் தாளுண்டு. கருத்து கொடுத்து பாடச் செய்தல், இன்ன எழுத்தில் தொடங்கி இன்ன எழுத்தில் முடியுமாறு பாடச் சொல்லுதல், முறிப்படி தந்து பாடக் கூறுதல் போன்ற எல்லாத் தேர்வுகளிலுமே துரைராசு தான் முதலிடம் பெற்றார்.

வீரப்புலவர் - வீறுகவியரசர்

1939-இல் பிரவேச பண்டிதத் தேர்வும், சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் புதுமுக வகுப்புத் தேர்வும் எழுதி வெற்றி பெற்று, பின்னர் சன்மார்க்க சபையின் கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் வித்துவான் முன்னிலை வகுப்பு பயின்றார். கல்லூரியில் மாணவர் நன்னெறிக் கழகம் என்ற மாணவர் மன்றத்தின் வாரக் கூட்டத்தில் 'புலவர் வீரம்' என்ற தலைப்பில் பேசியமைக்கு ஊக்கமூட்டி கல்லூரி முதல்வர் பு.ரா.மீ அவர்கள் 'வீரப்புலவர்' என்ற விருது அளித்தார் கல்லூரியில் பயின்று வரும் காலத்தில் திருப்பத்தூரில் அறிஞர் அண்ணா சொற்பொழிவாற்றியதைக் கேட்டு தம் துரைராசு என்ற பெயரை முடியரசன் என்று தூய தமிழில் மாற்றிக் கொண்டார்.

கல்லூரி அறிக்கைகளில் 'வீரப்புலவர் முடியரசன்' என்றே குறிக்கப்பெற்றார். பின்னாளில் எவர்க்கும் அஞ்சாமல் துணிந்து தன் கொள்கைகளில் உறுதியோடிருந்து, சமூகத் தீமைகளை எதிர்த்து நின்று தமிழ்ச்சான்றோரால் 'வீறு கவியரசர்' என்று போற்றப்பெறுவதற்கு இதுவே அடித்தளமாக அமைந்தது.

மற்றொருமுறை பாவேந்தர் பாரதிதாசனாரின் பேச்சை திருப்பத்தூரில் கேட்ட பிறகு மொழி இனம்-நாடு குறித்து முடியரசனார் ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினார்.

இயற்றமிழ்க் கவிஞர்

முடியரசனார் கவிதைகளை முதன்முதலில் தொகுத்து வெளியிட்டவர் தமிழண்ணல் ஆவார். 'முடியரசன் கவிதைகள்' என்னும் அந்நூலில் உள்ள பல பாடல்கள் சாகித்திய அகாதெமியால் இந்திய மொழிகளிலும், ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. மொழி-இனம்-நாடு பற்றிப் பேசினாலோ எழுதினாலோ வீண்பழிசுமத்தி சிறையில் தள்ளும் காலச் சூழலில் நாடெங்கும் நடைபெற்ற கவியரங்கங்களில் துணிந்து முழங்கிய மொழிப் புரட்சி இன எழுச்சிக் கவிதைகளை உள்ளடக்கியது 'கவியரங்கில் முடியரசன்' என்னும் நூல்.

'நெஞ்சு பொறுக்குதில்லையே' என்னும் கவிதை நூல் சமுதாயச் சீர்கேடுகளைக் கண்டு கவிஞர் உள்ளம் பொறுக்காது எழுதிய கவிதைகளின் தொகுப்பு. 1985-ஆம் ஆண்டில் வெளிவந்தது.

'மனிதனைத் தேடுகிறேன்' என்னும் கவிதைநூல் மனிதநேய மாண்புகளை மறந்துவிட்ட மனிதர்களைக் கண்டு உள்ளம் வருந்தி எழுதிய கவிதைகளில் தொகுப்பு நூல் இது, கவியரங்கக் கவிதைகளை உள்ளடக்கிய நூல் 'தமிழ் முழக்கம்' என்பதாகும்.

'நெஞ்சிற் பூத்தவை' என்னும் நூல் தமிழ்முழக்கம் நூலைப் போலவே 1999-இல் கவிஞரின் மறைவிற்குப் பின்னர் கவிஞரின் மூத்த மகன் பாரிமுடியரசன் அவர்களின் முயற்சியால் வெளிவந்தது.

'ஞாயிறும் திங்களும்' என்னும் நூல் தந்தை பெரியாரைப் பற்றியும், அறிஞர் அண்ணாவைப் பற்றியும் பாடிய பாடல்களில் தொகுப்பு குறள்நெறி பரப்ப வள்ளுவம் குறித்துப் பாடிய நூல் 'வள்ளுவர் கோட்டம்' ஆகும். மொழிப்பற்றூட்டுகிற 'தாய்மொழி காப்போம்' நூல், சான்றோர்கள் பற்றி முடியரசன் பாடிய 'மனிதரைக் கண்டு கொண்டேன்' நூல், மொழிப் போர்க் காப்பியமான 'பூங்கொடி', மாத்யூ அர்னால்டு என்பாரின் ஆங்கிலக் கவிதையை முனைவர் மா.இராசமாணிக்கனாரின் வேண்டுதலுக்கிணங்க தமிழ் மரபிற்கேற்றவாறு எழுதிய 'வீரகாவியம்' என்னும் காப்பிய நூல், புலவரைப் பாடுபொருளாகக் கொண்ட முதல்

தமிழ்க்காப்பிய நூல் ‘ஊன்றுகோல்’, ‘எக்கோவின் காதல்’ என்னும் சிறுகதை நூல், ‘அன்புள்ள பாண்டியனுக்கு - இளவரசனுக்கு’ கடித இலக்கிய நூல்கள், ‘எப்படி வளரும் தமிழ்?, ‘சீர்திருத்தச் செம்மல் வை.சு.சண்முகனார்; தமிழ் உரை நூல்’, ‘பாடுங்குயில்’, ‘தமிழ்ச்சோலை’ ஆகிய பாடநூல்கள், ‘பாட்டுப்பறவையின் வாழ்க்கைப் பயணம்’ என்னும் தன்வரலாற்று நூல் ஆகியன முடியரசனார் இயற்றமிழ்க்கு ஈந்த தமிழ்க் கொடைகளாகும்

இசைத் தமிழ்க் கவிஞர்

இசையரங்குகளில் தமிழைப் புறந்தள்ளி, வேற்று மொழிகளுக்கு வரவுரைக்கும் நிலைகண்டு நெஞ்சம் குமுறிய கவிஞர் இசைத்தமிழுக்கு ஆக்கம் தேடித்தர இசைப்பாடல்களை இயற்றித் தொகுத்த நூலே ‘காவியப் பாவை’ என்னும் நூலாகும். முத்துத்தாண்டவர், தில்லை விடங்கன் மாரிமுத்தாப் பிள்ளை, சீர்காழி அருணாசலக் கவிராயர், வள்ளலார், வேதநாயகர், கோபாலகிருட்டிண பாரதியார், சுத்தானந்த பாரதியார் வரிசையில் முடியரசனாரும் சேர்ந்து இசைத்தமிழுக்குப் பெரும் பங்காற்றியுள்ளார்.

‘பாடுங்குயில்’ என்னும் நூலில் உள்ள பாடல்களை இசையுடன் பாடுவதற்கேற்றவாறு இயற்றியுள்ளார்.

பல்லவி, அநுபல்லவி, சரணம் என்று பாடப்பெறும் கீர்த்தனைகளை எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என்று தூயதமிழில் பெயரிட்டுள்ளார்.

நாடகத் தமிழ்க் கவிஞர்

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் பாடமாக வைக்க நாடகக் காப்பியம் இயற்றித் தருமாறு முடியரசனார்க்கு வேண்டுகோள் விடுத்ததால் எழுந்ததே ‘இளம்பெருவழுதி’ என்னும் நாடகக்காப்பிய நூல். ‘உண்டாலம்ம இவ்வுலகம்’ என்ற புறநானூற்றுப் பாடலை எழுதிய கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி பற்றி ‘போர்வாள்’ இதழில் (25.09.1948) தான் எழுதிய இளம்பெருவழுதி கதையில் சில மாற்றங்கள் செய்து ‘இளம்பெருவழுதி’ என்ற பெயரிலேயே நாடகக் காப்பியம் இயற்றினார்.

முத்தமிழ்க் கவியரசர் - முடிசூடா முடியரசர்

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என முத்தமிழ்க் கவியரசராய் கவிதை உலகில் முடிசூடா முடியரசராய்த் திகழ்ந்த முடியரசனார் 03.12.1998 ஆம் நாள் இரவு 10 மணியளவில் தன் 79ஆம் வயதில் தன் இனிய கவியிசையை நிறுத்திக்கொண்டார்.

கவிஞர்கள் அப்துல்ரகுமான், தமிழன்பன், இன்குலாப், வைரமுத்து, மு.மேத்தா, பழனிபாரதி, அறிவுமதி, சாமி பழனியப்பன், இந்திரன் உள்ளிட்ட பல கவிஞர்கள் தம் கூட்டு இரங்கல் அறிக்கையில் ‘கவியரசு முடியரசன் இயற்கை எய்திய செய்தியறிந்து தமிழுலகம் தாங்கொணாத் துயருறுகிறது. கவிஞருலகம் கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறது. கவிதையில் மொழித்தூய்மையை வற்புறுத்தியவர் அவர். தாம் கொண்ட கொள்கையில் தடம் மாறாமலும், தடுமாறாமலும், இறுதிவரை வாழ்ந்து காட்டிய அவர் தமிழ்க் கவிஞர் உலகுக்கோர் எடுத்துக்காட்டு’ என்று குறிப்பிட்டனர்.

முடிவுரை

முத்தமிழ்க்கவிஞர் தம் வாழ்க்கைக்கு முடிவுரை எழுதிக் கொண்டாலும், அவர் வழியில் நடைபயில கவிஞர்கள் முன்னுரை எழுதிக் கொள்ள வேண்டும். முத்தமிழ்க்கவியரசர் புகழை நிலைநிறுத்திட அவர் வாழ்ந்த காரைக்குடியில் அவர் நினைவாக மணிமண்டபம் கட்ட அரசும், கவிஞர்களும் செயலாற்றுவது அவரது கவிதைப் பணிக்குச் செலுத்துகின்ற ‘வீரவணக்கம்’ ஆகும்.

முடியரசனாரின் படைப்புகளில் காணலாகும் "துறைதோறும் தமிழ்"

சு.அன்பரசன் *

முன்னுரை

"உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர்தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலவென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்"

என்றார் பாவேந்தர் பாரதிதாசன். தாய்மொழியாக இருந்தும் கூட இன்றைய தமிழ்நாட்டில் தமிழர்களிடையே தள்ளி நிறுத்தப்படுகிற ஒரு மொழியாகத்தான் தமிழ் இருக்கிறது. தமிழின் பெருமைகள் மேடைகளில் முழங்கப்பட்ட அளவுக்கு அதன் வளர்ச்சிக்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படவில்லை. நிரந்தரமாக அதைப் பாதுகாத்து நிலைபெறச் செய்வதற்கான வழிமுறைகளும் காணப்படவில்லை.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதெல்லாம் அழகான முழக்கங்களாக மட்டுமே நம்மிடம் இருக்கின்றன. வாழவைக்காமல் 'வாழ்க! வாழ்க!' என்று மொழியிடம் விண்ணப்பம் செய்பவர்களாக மட்டும் நாம் இருக்கிறோம்.

துறைதோறும் 'தமிழின்' நிலையினை, அன்னைத் தமிழுக்கு நாம் அளித்து வரும் மதிப்பினை, வீறுகவியரசர் முடியரசனாரின் படைப்புகளில் ஆய்ந்து நோக்குங்கால் அவை நமக்குத் தெளிவாகின்றன.

தமிழின் இன்பம்

வள்ளுவப் பெருந்தகை, தமிழ் இன்பம் எத்தகையது என்பதை ஓர் உவமை வாயிலாக விளக்கிக்காட்டுகிறார். பழகப்பழகப் பண்புடையாளர் தொடர்பு எப்படிப்பட்ட இன்பம் தரும்? படிக்கப் படிக்கச் சிறந்த நூல்கள் தரும் உள்ளார்ந்த இன்பம் போலப் பழகப் பழகப் பண்புடையாளர் தொடர்பு இன்பம் தரும் என்று கூறுகிறார்.

"நவில் தொறும் நூல்நயம் போலும் பயில் தொறும்
பண்புடை யாளர் தொடர்பு"

---

* பட்டதாரி தமிழாசிரியர், தே பிரித்தோ மேல்நிலைப்பள்ளி, தேவகோட்டை.

தமிழ், தமிழ் என்று பல முறை அடுக்கியடுக்கிச் சொல்லிப்பார்த்தால் 'அமிழ்து அமிழ்து' என்று ஒலிக்கும். ஆகவே தமிழ் இனிமையானது; இன்பந்தரவல்லது என்பது புலனாகும். இதன் இனிமையையும், இன்பத்தையும் உணர்ந்ததால்தான் பாரதியார்,

"தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார்
ஈங்கமரர் சிறப்புக் கண்டார்"

என்று பாடுகின்றார். தமிழை அமுதென்றும், அதன் சுவையறிந்தோர் அமரர் போல வாழ்வர் என்றும் கூறுகின்றார். "தமிழுக்கு அமுதென்று பேர்" எனப் பாவேந்தர் பாரதிதாசனும் கூறுகிறார்.

பட்டினப்பாலை என்பது பத்துப்பாட்டுள் ஒரு பாட்டு. அதில் கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்ற புலவர், கரிகாற் பெருவளத்தானைப் பாடிய பாட்டிற்கு மன்னன், புலவருக்குப் பதினாறு கோடிப் பொன் பரிசாகத் தந்தான் என்னும் செய்தி,

"பாடியதோர் வஞ்சிநெடும் பாட்டால் பதினாறு
கோடி பொன் கொண்டது நின்கொற்றமே"

என்னும் பாடலால் தமிழ் விடுதூது நூலில் அறியப்படுகிறது. ஒரு நூலுக்குப் பதினாறு கோடி பொன் பரிசாக மன்னன் தந்தான் என்றால், அத்தமிழ் அவனுக்கு எத்தகைய இன்பந்தந்திருக்கக்கூடும். என்பதை அறிய முடிகிறது. அத்தகைய இன்பத்தைத்தரவல்ல நம் அமுதத் தமிழ்மொழி இன்று பல்வேறு துறைகளிலும் என்ன பாடுபடுகிறது என்பதை வீறுகவியரசர் முடியரசனாரின் படைப்புகளிலிருந்து நாம் அறியலாம்.

கல்வித்துறையில்

இயல்பாகவும், எளிமையாகவும் அறிவு வளர்ச்சி பெறத் தாய்மொழி வாயிலாகவே கற்பிப்பது தான் சிறந்த நெறி என்பதை உணர்ந்த ஒவ்வொரு நாடும் கல்விக் கூடங்களில் அதனதன் தாய்மொழியையே பயன்படுத்தி, அறிவுத் துறையில் முன்னேறி வருவதைக் காண்கிறோம்.

ஆனால் விடுதலை பெற்ற பின்னரும் தமிழ்நாடுதான் இயல்புக்கு மாறாகச் சென்று, அறிவுத் துறையில் முழுமை பெறாது திண்டாடிக் கொண்டிருக்கிறது. பாலகர் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை பயிற்று மொழி வேறாக இருக்கின்றது. ஆங்கிலம், இந்தி என்ற

மொழிகள் தாம் ஆட்சி செய்கின்றன. இந்நிலையில் தாய்மொழியுணர்வு தலை தூக்குமா? பிஞ்சு நெஞ்சங்களிலேயே மொழியுணர்வு வேரோடு பிடுங்கி எறியப்படுகிறது. நாட்டின் எதிர்காலச் செல்வங்களாகிய மாணவர்கள் வளர்ந்து உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகள், பல்கலைக்கழகங்கள் வரை அயன்மொழியிலேயே பயில்வாராயின், தாய்மொழியில் அறிவியலை எவ்வாறு வளர்ப்பர்?

அரியணையில் அமர்ந்திருப்போர் தமிழ், தமிழ் என்று வாய்ப்பறை சாற்றினும், கல்வித்துறையிலிருந்து வெளிப்படும் ஆணைகள், அறிக்கைகள் எம்மொழியில் வருகின்றன? அவ்வாணைகள் கல்வி அலுவலர்க்கே தெளிவாக விளங்காமல் தடுமாறச் செய்வதும் உண்டு. மொழி வளர்க்கும் கல்வித்துறையே சீர்குலைந்திருக்கும் போது தமிழ் எவ்வாறு வளரும்?

அரசியல் துறையில்

புதிய கல்விக் கொள்கையில் தமிழ் புறக்கணிக்கப்பட்டுள்ளது. உண்மை நிலையை ஆய்ந்து, நடுவுநிலைமையுடன் கல்விக் கொள்கையை வகுத்து, அவரவர் தாய்மொழிக்கு ஆக்கந்தந்து, சிந்தனையில் ஒற்றுமையுணர்வு காண விழையாது, ஒரு மொழியால் ஒருமைப்பாட்டை வளர்த்துவிடலாம் என எண்ணுகின்றனர். இவ்வெண்ணம் பன்மைப் பாட்டை வளர்க்குமே தவிர, ஒற்றுமையுணர்வை வளர்க்காது.

பலமொழிகள் வழங்கி வரும் ஒரு துணைக்கண்டத்தில் ஒரே மொழி கோலாச்ச விரும்பினால், சிறிதளவேனும் காணப்படும் ஒற்றுமையும் கருகிவிடும் என்பதை உணராத அரசியலாலும் தமிழ் இரண்டாம், மூன்றாம் நிலைக்குத் தள்ளப்படுகிறது.

மதத் துறையில்

தமிழ் நாட்டு மக்கள் பல்வேறு மதங்களைத் தழுவி வருகின்றனர். தாம் விரும்பிய மதங்களை ஏற்றுக்கொண்டு, வழிபடுவது அவரவர் உரிமை. தமக்குச் சிறந்ததாகத் தோன்றிய ஒன்றை வழிபாட்டுக்காக ஏற்றுக் கொண்டதோடு மட்டும் நில்லாது அந்தந்த நாட்டுக்குரிய மொழிகளுக்கும் அடிமைப்பட்டு விட்டனர். தமிழர் என்ற உணர்வை அடியோடு மறந்து விட்டனர்.

பிறநாட்டுத் தலைவர்கள், புரட்சியாளர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோரிடையே கொண்ட பற்றாலும் அவர்தம் கொள்கையிற் கொண்ட காதலாலும் பல்வேறு பெயர்களை வைத்துக் கொள்கின்றனர்.

எந்தெந்த வகையிலெல்லாம் தமிழை ஒதுக்க இயலுமோ அந்தந்த வகையில் தமிழை ஒதுக்கி வருகின்றனர்.

இதழியல் துறையில்

நாளிதழ், கிழமையிதழ், மாத இதழ் என்று பல்வேறு இதழ்கள் தமிழில் வெளிவருகின்றன. அவற்றில் அறியாமல் நிகழும் பிழைகள், அறிந்து செய்யும் பிழைகள் அளவு கடந்தன. சந்திப் பிழைகள் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்ட நாளிதழ்களும் உண்டு. வேண்டுமென்றே அயன்மொழிச் சொற்களைப் பயன்படுத்தி, மக்களுணர்ச்சியை அழிக்கும் இதழ்களும் உண்டு. ஆங்கிலத் தொடர்களையே பயன்படுத்தித் தமிழ்க் கட்டுரைகள், கதைகள் எழுதும் எழுத்தாளர்களும் உண்டு. எழுத்தோவியங்களுக்குத் தலைப்புங் கூட ஆங்கிலமாக வருவதும் உண்டு.

திரைப்படத்துறையில்

தயாரிக்கப்படுவது தமிழ்த்திரைப்படங்களாக இருந்தாலும், தமிழர்களே அவற்றின் நுகர்வோராக இருந்தாலும், அவற்றின் தலைப்புகள், பாடல்கள், உரையாடல்கள் போன்றவற்றில் கூச்சமின்றியும், தங்குதடையின்றியும் ஆங்கிலம் கலக்கப்படுகிறது. ஒரு திரைப்படத்திற்குத் தமிழில் பெயர் சூட்டினால் அப்படத்திற்கு அரசு வரிவிலக்கு அளிக்கிறது. ஆனால் அந்தத் திரைப்படத்தைத் தயாரிக்கும் நிறுவனத்தின் பெயர் வேறு எந்த மொழியில் இருந்தாலும் பரவாயில்லை என்ற நிலை இருக்கிறது.

மொழியில் கலப்படம் செய்தால் அதற்காகத் தண்டனை அளிக்கின்ற பல உலக நாடுகளிடையே, கலப்படம் செய்பவர்களுக்குப் பொருளாதாரச் சலுகை அளிப்பவர்களாக, கையூட்டுக் கொடுப்பவர்களாக நாம் இருக்கிறோம்.

முடிவுரை

உலகின் மக்கள் தொகை வேகமாகப் பெருகிவருகிறது. ஆனால் உலக மக்களின் பலமொழிகள் அதைவிட வேகமாக அருகி மறைந்து வருகின்றன. சொந்த மக்களால் கைவிடப்படுதல், ஆதிக்க மொழிகளால் கழுத்து நெறிக்கப்படுதல், பயன்படுத்தாமல் ஒதுக்கி வைத்தல், தங்களது தாய்மொழியை மதிப்புக் குறைந்ததாக நினைத்தல் எனும் முதன்மையான நான்கு காரணங்களால் மொழிகள் மரணமடைகின்றன.

இங்கே பிறந்து, இங்கே வளர்ந்து, இங்கே வாழ்ந்து இம்மண்ணிலேயே சாகப் போகிறவர்கள் தம் உள்ளத்தில் பிறமொழி ஆளுகைக்கு இடந்தருவது வருந்தத்தக்கது. அனைவரும் இந்நாட்டுக்குரியவர், இம்மொழிக்குரியவர் என்ற உணர்வுடன் வாழ்தல் வேண்டும். தமிழ் நாட்டில் பிறந்து, வளர்ந்து, தமிழர்களாய் வாழும் ஒவ்வொருவரும் தாய் மொழிப் பற்றோடு வாழ்ந்தால் மட்டும் போதாது. ஒவ்வொரு துறையிலும் தமிழின் சிறப்பை உணர்ந்து தமிழ் வளரப் பாடுபடவேண்டும். அதற்கு வீறுகவியரசர் முடியரசனாரின் படைப்புகளைப் படித்தறிந்து அவர் வழியில் நடந்திட வேண்டும்.

முடியரசன் சிறுகதைகள் - ஒரு பார்வை

பேரா.ச.ஆறுமுகம் *

பாவேந்தர் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்களில் ஒருவராகத் திகழ்பவர் முடியரசன். கவிஞராகவே அறியப்பட்ட அவர் சிறுகதைகளும் படைத்திருக்கிறார் என்பது ஒரு வியப்பான செய்தி. 11 சிறுகதைகள் இடம் பெற்ற 'எக்கோவின் காதல்' அவரது ஒரே சிறுகதைத் தொகுப்பு. அக்கதைகள் குறித்துப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

வாழ்வும் படைப்பும்

உடல் நலம் பேணுவோர்க்குத் தேன் சாப்பிட்டால் நல்லது. நெல்லிக்கனி சாப்பிட்டால் நல்லது. எண்ணெய் ஒதுக்கிய உணவுகள் சாப்பிட்டால் நல்லது என்று நினைவுகள் ஓடும். அதைப்போலவே சமுதாய நலம் பேணுவோர்க்கு உயிர் நலம் பேணுதல் நல்லது. பிறருக்கு உதவியாக வாழ்தல் நல்லது. பேதம் ஒழித்தல் நல்லது. ஒற்றுமையாக வாழ்தல் நல்லது. அடிமைத்தனம் போக்குதல் நல்லது, அனைவர்க்கும் கல்வி பரப்புதல் நல்லது என்று நினைவுகள் பாயும்.

மக்கள் நலம் சார்ந்து சிந்திப்போர்க்கு அதை வெளிப்படுத்த வேண்டிய தேவை ஏற்படுகிறது. அதை வெளிப்படுத்தும் நிலையில் அவன் படைப்பாளி ஆகிறான். மக்கள் நலன் சார்ந்த சிந்திப்பில் அவன் நெருக்கம் காட்டுகிறபோது அவன் மக்களின் நெஞ்சச் சிம்மாசனத்தில் அமர்ந்து கொள்கிறான்.

முடியரசன் (1920-1998) பெரிய குளத்தில் பிறந்தவர். சிறுவயதிலேயே அவர் குடும்பம் பிழைப்பை நாடி காரைக்குடிக்குக் குடிபெயர்ந்து தமிழார்வம் காரணமாக அடுத்தடுத்துத் தேர்வெழுதி வித்துவான் பட்டம் பெற்றார். 1947-இல் காரைக்குடி மீ.சு. உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியில் அமர்ந்தார். 28 ஆண்டுகள் பணியாற்றி அங்கேயே ஓய்வு பெற்றார்.

* முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர், சேவுகன் அண்ணாமலை கலைக்கல்லூரி, தேவகோட்டை.

மேற்கண்ட குறிப்புகள் வாயிலாக, அவரது இலக்கியப் பயணம் எதை நோக்கியது என்பதை எளிதில் அறியலாம். தமிழ்நாடு, மொழி, இனம், பகுத்தறிவு போற்றும் தன்மானக் கவிஞராக அவர் உருவானார். பகுத்தறிவுச் சிந்தனையிலும், பைந்தமிழ் போற்றும் மரபிலும் பாரதிதாசனின் தலைமகனாகத் தடம் பதித்தார். பல கவிதைத் தொகுப்புகள், பூங்கொடி, வீரகாவியம் போன்ற சில காப்பியங்கள் தந்து அதனை உறுதிப்படுத்தினார்.

சிறுகதை நாட்டம்

கவிஞர்களால் அறியப்பட்டோர் பலர் நாவல் சிறுகதைப் படைப்பாளிகளாகப் பின்னாளில் மலர்வதுண்டு. ஆனால் சிறுகதைப் படைப்பாளியாகப் படைப்புலகில் நுழைந்த கவிஞர் முடியரசன், மீண்டும் கவிதையுலகிற்கே திரும்பிய நிகழ்வை அழகாகப் பதிவு செய்துள்ளார்.

“தொடக்கத்திலிருந்தே கவிதை எழுதிக்கொண்டிருந்த என்னைக் கதை எழுதுமாறு நண்பர் அறிவழகன் திசைதிருப்பி விட்டார். இது 1947-ஆம் ஆண்டு நடந்தது. இரண்டாண்டுகள் எழுதினேன். அப்போது பல்வேறு இதழ்களில் இக்கதைகள் வெளிவந்தன. சீர்திருத்தக் கருத்துகளுக்கு வலுவூட்ட வேண்டுமென்று கருதிக் கண்ணெதிரில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையே அடிப்படையாகக் கொண்டு இக்கதைகளைப் புனைந்தேன். அவைதாம் அச்சுவடிவம் பெறுகின்றன. பின்னர் இயல்பாகவே என் மனம் விரும்பிக் கொண்டிருந்த கவிதையுலகிற்குத் திரும்பி விட்டேன்’ (கவிஞர் முடியரசன், எக்கோவின் காதல் - முன்னுரை, ப.5)

சீர்திருத்தக் கருத்துகள், கண்ணெதிரே நடந்த நிகழ்ச்சிகள், பல்வேறு இதழ்கள், இரண்டாண்டுப் படைப்பு முயற்சி - இவைகளே அவரைச் சிறுகதைப் படைப்பாளியாகத் தமிழ் உலகிற்கு அடையாளம் காட்டியவை எனலாம்.

படைப்பாளிகளுக்கு எழுதுவது நோக்கம் என்றாலும் அவ்வெழுத்துகள் பலரைச் சென்றடைய வேண்டும் என்பதே அவர்களின் தலையாய நோக்கம். பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்’ என்ற ஆசை எல்லாப் படைப்பாளிகளுக்கும் உண்டு. பாட்டுத்திறம் என்பது படைப்புத் திறனேயாகும்.

‘சிறுகதை என்ற இலக்கிய உருவம் மக்களால் விரும்பப்படும் ஓர் இலக்கியவகையாக இருக்கின்றதென்பதற்காகவே இவர்களும்

எழுதினர்' என்று திறனாய்வாளர் கார்த்திகேசு சிவத்தம்பி, சீர்திருத்தச் சிந்தனையாளர்கள் பற்றிக் குறிப்பிடுகின்றார். (தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்) மக்களால் விரும்பப்படும் இலக்கியவகை என்பதாலேயே முடியரசன் சிறுகதை இலக்கிய உருவத்தைக் கையாண்டார். அதுவும் இதழ்கள் வாயிலாகப் பலரை எட்ட வாய்ப்பாக அமைந்தது.

எக்கோவின் காதல்

இனி முடியரசன் சிறுகதைகள் பற்றிப் பார்ப்போம். சிறுகதைத் தொகுப்பின் தலைப்பையே தலைப்பாகக் கொண்ட கதை, தொகுப்பின் முதல் கதை 'எக்கோவின் காதல்' அக்கதையின் கதைத்தலைவன் பெயர் எழிற்கோ. அந்தப் பெயரில் அவன் கதை எழுதியபோது, கதைக்குப் போதிய வரவேற்பு கிடைக்கவில்லை. முதல் - இறுதி எழுத்துகளைச் சேர்த்து, 'எக்கோ' என்ற பெயரில் எழுதியபோது மதிப்பும் புகழும் கிடைத்தன. படைப்பைப் பார்க்காமல் பெயரை மட்டுமே பார்க்கும் மக்களின் மனநிலை 'அடிமையின் மோகம்' மனநிலை என்று சாடுகிறான் எக்கோ. பழைய போக்கில் ஒன்று அடிமை நுகம் சுமக்காத மனநிலை மக்களுக்கு வேண்டும் என்பதே ஆசிரியர் கருத்து எனலாம்.

'புரட்சி' இதழில் எக்கோ எழுதிவந்த உயிரோட்டமான கட்டுரைகளும் கதைகளும் கதைத்தலைவி மல்லிகாவைப் பெரிதும் ஈர்த்தன. அவர் படிக்கும் கல்லூரிக்கு அவன் பேச்சாளனாக வந்தபோது தன் காதலை வெளிப்படுத்தினாள். "என் காதல் எல்லாம் நாட்டின் விடுதலை மீதுதான்" "நான் உண்மையில் மாக்ஸிம் கார்க்கியைப் போன்றவன்.. அவன் ஒரு சிறந்த எழுத்தாளனாக இருந்ததோடல்லாமல், புரட்சி இயக்கத்தில் பெரிதும் பங்கு கொண்டு பணியாற்றியவன். அவனைப்போலவே நம் நாட்டு எழுத்தாளர்களும் திகழவேண்டும் என்று கனவு காண்பவன் நான்" என்று பதிலிறுத்தான் அவன். "புரட்சி இயக்கத்தில் நானும் உங்களோடு பணியாற்றுவேன்" என்று அவள் இணக்கம் காட்ட இருவருக்கும் திருமணம் நடந்தேறியது.

"நாட்டில் நிலவும் ஏழ்மையை – அதன் பகையாகிய சுரண்டலை ஒழித்துக் கட்டுவதுதான் என் குறிக்கோள்" (எக்கோவின் காதல், ப.30) என்ற அவளது புரட்சிப் பாதை இடையறாது அமைந்தது. எக்கோ அரசாங்கத்திற்கு முரணாக, 'சுடுகாட்டிலே' என்ற கட்டுரையை எழுதியதற்காக ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு,

வேலூர்ச்சிறைக்குக் கொண்டு போகப்பட்டான். 'கொரில்லாப் பெண்ணாய் எக்கோவின் மனைவி போராட்டம் நடத்தி வீரவுரை நிகழ்த்தினாள். விளைவு துப்பாக்கிச் சூடு. போலீசாரின் கைத்தடிகள் சுழன்றன. மல்லிகாவின் தங்கை மஞ்சுளா மயங்கிச் சாய்ந்தாள். மல்லிகா கைது செய்யப்பட்டாள் என்று முடிகிறது கதை.

"முதலாளித்துவத்தைச் சிதறடிக்கும் அணுகுண்டு, வைதிகத்தின் மார்பைப் பிளந்தெறியும் கூரிய ஈட்டிமுனை" என்று எக்கோவின் கட்டுரை, கதைகள் பற்றி, அவனுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகிறாள் மல்லிகா. முதலாளித்துவ எதிர்ப்பு, சுரண்டல், மாக்ஸிம் கார்க்கி போன்ற வார்த்தைப் பிரயோகங்கள், எப்போதும் சீர்த்திருத்தச் சிந்தனைகள் பொதுவுடைமைச் சார்புடையவை என்பதையே காட்டுகின்றன. 'பொதுவுடைமைத் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்' என்ற பாரதிதாசன் வரிகள் இங்கே நினைக்கத்தக்கதாகும்.

முடியரசன் வாழ்க்கை வேறு; படைப்பு வேறு என்று வாழ்ந்தவரல்லர். அவர் படைத்த பாத்திரங்களும் அவரது சிந்தனைகளையே பறைசாற்றி நிற்கின்றன என்று கொள்வதில் தவறில்லை.

சீர்திருத்தச் சிந்தனைகள்

'எக்கோவின் காதல்' என்ற தொகுப்பில் இடம் பெற்ற 11 கதைகளும் சமுதாயச் சீர்திருத்தச் சிந்தனைகளை உள்ளடக்கிய கதைகளே. சற்றேறக்குறைய முதல் கதையான எக்கோவின் காதலில் காணப்படும் சிந்தனைகளின் விரிவாக்கமாகவே எஞ்சிய பத்துக் கதைகளும் அமைந்துள்ளன.

'அத்தை வீட்டில் பேய்', தன்மைக் கூற்றுநிலையில் அமைந்த கதை. கதை சொல்பவன் தமிழாசிரியன் என்பதற்காகவும், வசதிக் குறைவானவன் என்பதற்காகவும் அவன் அத்தை மகள் ஊர்மிளாவைப் பெண் கொடுக்கப் பெண்ணின் தந்தை மறுக்கிறார். அவளுக்கு வேறொரு இடத்தில் திருமணம் நிச்சியமாகிறது. திருமணத்திற்கு முதல் நாள் அவள் இறந்து போனாள் என்ற செய்தி கிடைக்கிறது. 'பணப்பேய்' தான் அவளைக் கொன்று விட்டது என்று உணர்கிறான். தொழில், வசதி காரணமாக அமைந்த சமூக அவலம் இது.

'கண்மூடி வழக்கம்' என்ற கதையில் வரும் இளம் விதவை புனிதம், திருமணமாகி மூன்று மாதத்தில் கணவனை இழந்தவள். அவளை துரை என்ற இளைஞன் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறான். அவளும் சம்மதிக்கிறாள். அவன் ஏழை, வேறு சாதி என்பதால் திருமணத்திற்கு அவள் பெற்றோர் மறுத்துவிட்டனர். துரையின் நண்பன் வேலனின் உதவியோடு துரையும் புனிதமும் யாரும் அறியாமல் வேறிடம் சென்று திருமணம் செய்து கொள்கின்றனர். விதவை மணமறுப்பு, சாதிச்சார்பு என்ற கண்மூடிப் பழக்கங்களைப் புறக்கணிக்கின்றனர்.

'சந்தேக முடிவு' என்ற கதை, வசதிமிக்க ஒருவர் வயதான பின்னும் இளம்பெண்ணைத் திருமணம் செய்யும் கொடுமை நிகழக்கூடாது என்பதைச் சுட்டுகிறது. அவர் நான்காவது தாரமாகத் திருமணம் செய்துகொண்ட இளம் பெண்ணை தம் மூத்த தாரத்தின் மகனோடு இணைத்துச் சந்தேகப்படுகிறார். அது உண்மையில்லை என்று பின்னர் அறிகிறார். சமூக அவலமான 'பொருந்தா மணத்தை' ஆசிரியர் இங்கே சாடுகிறார்.

'கடைமுழுக்கு' என்ற கதை, பழைய வழக்கங்களுக்கு முழுக்குப் போட்டுவிட்டு 'விதவையை' மனப்பூர்வமாகத் திருமணம் செய்து கொள்ளும் ஓர் இளைஞனின் கதை. காவிரிக்குக் 'கடைமுழுக்கு'க்கு வந்த இளம் விதவைப் பெண்ணைச் சந்தித்த சுந்தரம் அவளையே மணமகளாக ஏற்கிறான். விதவை மணத்தை ஆதரிக்கும் கதை இது ஆகும்.

'காக்கையின் கடிதங்கள்' கடிதங்கள் நிறைந்த கதை. தமிழர் என்ற 'இனப்பற்று வேண்டும்' என்று வலியுறுத்தும் கதை. சங்கங்கள், அதன் பொறுப்புகள் அதனால் வரும் போட்டிகளில் மனத்தை இழந்து ஒருவன் கொலையாளியாகவே மாறிவிடுகிறான். கொல்லப்பட்டவனின் மனைவியின் தங்கை கமலததை மணந்து, சிங்கப்பூரில் வாழ்கிறான். பின்னாளில் அதை எண்ணி வருந்துகிறான். அங்கு நடக்கும் 'பாரதிதாசன் விழாவில் அந்த மன மாற்றம் நிகழ்கிறது.

'கிருஷ்ணார்ச்சுன யுத்தம்' வாழ்க்கையில் கெட்டவர்க்கும் நல்லவர்க்கும் நடக்கும் யுத்தமாகக் காட்டப்படுகிறது. கிருஷ்ணன் சுயநலம், அறியாமையின் அடையாளம். அர்ச்சுனன் பொதுநலம்,

'இன்பத் திராவிடம்' காணும் எண்ணத்தின் அடையாளம். அர்ச்சுனனே வெற்றி பெறுவான் என்று உணர்த்தப்படுகிறது கதை. 'திராவிடம்' போற்றும் கதை.

'அணைந்த விளக்கு' சிறந்தக்கதை ஆசிரியர் முதன் முதலில் எழுதிய கதை, 'அழகு' என்ற மாத இதழில் வெளிவந்தது. பாரதிதாசன் புத்தகங்கள் காதல் நினைவுகள், எதிர்பாராத முத்தம் என்று பேச்சு நகர்ந்து அவனுக்கும் கமலத்திற்கும் இடையே காதல் அரும்புகிறது. கடற்கரையில் விதவை, 'அவள் என் நண்பனின் மனைவி என்பதைத் தெரிந்து கொண்ட பிறகும் எப்படி விரும்பும் என் மனம் என்று யோசிக்கிறான். 'என் வாழ்வையும் அணைந்த விளக்காக்கி விட்டாள்' என்று முடிகிறது கதை. சீர்திருத்த வகையில் இக்கதை இணையும் என்பது ஆய்வுக்குரியது. முதன் முதலில் எழுதிய கதை இது என்பதும் கருதத்தக்கது.

'அவமானச் சின்னம்' என்ற கதையில் வரும் கண்ணப்பன் கலப்பு மணத்தில் பிறந்தவன். நண்பன் அவனை 'அவமானச் சின்னம்' என்று சொன்னதைத் தவறாகப் புரிந்து கொண்டு வேதனைப்படுகிறான். 'நம் கழகத்தில் சேர்ந்த பின்னும் மதச்சின்னங்களை அணிந்து கொள்வது 'அவமானச் சின்னம் அல்லவா' என்று அவன் கூறியதைக் கேட்டறிந்து தெளிகிறான். 'மதச்சின்னங்களை அணியாதிருத்தல் நல்லது' என்பது இக்கதையின் கருத்து.

'அழிந்துவிடுமோ' என்ற கதை, மக்களைத் தட்டியெழுப்பும் சமதர்மச் சிந்தனையுடைய நல்ல பாடல்கள் அச்சேற வேண்டும் என்று கனவு காண்பதாக அமைந்த கதை. சிந்தனை மிக்க கவிதைகள் இல்லாமல் போனால் 'புரட்சி அழிந்து விடுமோ' என்ற கவலையில் விளைந்த கதை.

'இரண்டுதந்தி' ஒரு கதையம்சம் நிறைந்த கதை. அரங்கசாமிக்குக் காரைக்குடி அலுவலகம் ஒன்றில் வேலை. தன் மனைவிக்க முதற்பிரசவம். அவசரமாகத் திருச்சிக்குப் புறப்படக் காத்திருக்கிறான். அங்கு கார் நிலையத்தில் மூன்று வயதுக் குழந்தையோடு ஒரு பெண் பிச்சையெடுக்கிறாள் எதிர்பாராமல் கார் மோதி விபத்துக்குள்ளாகி அவள் இறந்து போகிறாள். பாதிப்புக்குள்ளான அப்பெண் உத்தமபாளையத்தில் அவளால்

கருவுற்றவள் என்றும் பெண் குழந்தை அவன் குழந்தை என்றும், அவள் கையிலிருந்த பர்ஸில் அவன் புகைப்படம் இருந்ததைப் பார்த்து அறிந்து துடித்துப் போகிறான். அவன் மனைவி இறந்த செய்தியும் தந்தி விழியாகக் கிடைக்கிறது. அவன் குழந்தையைத் தானே வளர்ப்பதாய் முடிவெடுக்கிறான். மனசாட்சிக்குப் பயந்த மனிதனாகக் கதை நெடுக அரங்கசாமி வார்த்தெடுக்கப்பட்டிருக்கிறான். சாதி, மத பேதமற்ற ஒரு சமத்துவ சமுதாயத்தை வார்த்தெடுப்பதே இக்கதைகளின் நோக்கம் என்பது தெளிவாகிறது.

முடிவாக

வள்ளுவர், பேரறிஞர் அண்ணா, பாரதிதாசன் வழிச் சிந்தனைகளைப் போற்றும் பாங்கினைக் கதைகளில் காணமுடிகிறது. தமிழ்மொழி, தமிழர் நலம், பகுத்தறிவுச் சிந்தனைகள், மூடநம்பிக்கைகளைச் சாடல் என அவரது கவிதைப் படைப்புகள் போலவே இதிலும் செறிந்து நிற்பதைக் காணலாம். முத்தாய்ப்பாக அவர் அழுத்தமாகச் சொல்லும் கருத்து, 'புரட்சி என்பது வீட்டிலேயே தொடங்க வேண்டும்' என்பதாகும். 'வீட்டிலே புரட்சி செய்யாவிட்டால் நாட்டிலே எப்படி புரட்சி செய்ய முடியும்' (ப.27) என்று கவிஞர் கேள்வி எழுப்புகிறார். 'வாய்ச்சொல் வேதாந்தம் ஆகாது' என்பது முடியரசன் கருத்து. அப்படியே வாழ்ந்தும் காட்டியதால் அவர் சிறுகதைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

பன்முகநோக்கில் 'எக்கோவின் காதல்'

முனைவர் இரா. இரவிச்சந்திரன் *

முன்னுரை

கவியரசர் என்ற சிறப்பிற்குரியவர் முடியரசன். இவருடைய இயற்பெயர் துரைராசு. சுப்புராயலு, சீத்தாலட்சுமி தம்பதியருக்கு மகனாகத் தோன்றியவர். கவிதை, காப்பியம், நாடகம், சிறுகதை, எனப் பல இலக்கியப் படைப்புகளைப் படைத்துத் தமிழுலகிற்கு வழங்கியவர். அவருடைய படைப்புகளில் ஒன்றான 'எக்கோவின் காதல்' என்ற சிறுகதை வெளிப்படுத்தும் சமூகச் சிந்தனைகளை எடுத்துக்கூற முற்படுகிறது இக்கட்டுரை. 'எக்கோவின் காதல்' என்ற சிறுகதை 1947 இல் எழுதப்பட்டது. வெறும் கதையாக இல்லாமல் சமூகப்புரட்சியாக, சமுதாயச் சீர்திருத்த நோக்கில் எழுதப்பெற்றதாகும்.

கதைச்சுருக்கம்

"எக்கோ" என்ற புனைப்பெயரில் இலக்கியங்களை இதழ்களில் படைத்து வருபவர் "எழிற்கோ". இவரது படைப்புகளைப் படித்து கருத்துக்களை எழுதி அனுப்புபவராக மல்லிகா படைக்கப்பட்டுள்ளார். ஒருமுறை எக்கோ, மல்லிகா படித்துக்கொண்டிருக்கும் திருச்சி கல்லூரிக்குச் சிறப்பு விருந்தினராக, சிறப்புப் பேச்சாளராக அழைக்கப்பட்டார். முன்வரிசையில் அமர்ந்திருக்கும் மல்லிகாவைப் பார்க்கிறார். மல்லிகாவும் எக்கோவின் அழகிலும் பேச்சிலும் மயங்குகிறாள். இருவரும் மனதால் காதல் கொள்கின்றனர். மல்லிகா எக்கோவைச் சந்திப்பதற்காகச் சென்னைக்கு வருகிறாள். எக்கோவிடம் தன் காதலை வெளிப்படுத்துகிறாள். எக்கோ, "நான் ஒரு புரட்சி வீரன் மக்களுக்காகப் போராடுகின்றவன் எனக்கு காதல் எண்ணத்தைவிட சமூகமுன்னேற்றமே என் நோக்கம்" என்று கூறுகிறான். ஆனால் உள்;ர மல்லிகாவைக் காதலிக்கிறான். இருவரும் அன்பை, காதலைப் பரிமாறிக்கொள்கின்றனர். பதிவுத் திருமணம் செய்துகொள்கின்றனர். விடுமுறை முடிந்து திருச்சிக்கு வந்த மல்லிகா தன் பதிவுத் திருமணத்தைப் பெற்றோரிடம் தெரிவிக்கிறாள். முதலில் பெற்றோர் எதிர்க்கின்றனர். பின்பு சமாதானமாகின்றனர்.

---

* இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி), திருச்சி.

திருச்சியில் படித்துக்கொண்டிருக்கும் மல்லிகா தன் கணவனுக்குக் கடிதம் எழுதுகிறாள். "நம் பதிவுத் திருமணத்தைப் பெற்றோரிடம் தெரிவித்துவிட்டேன். வருகின்ற பொங்கல் விழாவிற்குத் திருச்சிக்கு வருமாறு கேட்டுக்கொள்கிறேன். என் பெற்றோரும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்" என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாள். கடிதத்தைக் கண்ட 'எக்கோ' பொங்கல் விழாவிற்கு வருகிறான். மல்லிகா எக்கோவிடம் பொங்கல் விழா கொண்டாடவேண்டும், குளித்துவிட்டுப் புத்தாடை அணிந்து கொள்ளுங்கள் என்கிறாள். எக்கோவோ புரட்சி வீரனுக்கு பொங்கல் ஏது? விழா ஏது? என்று மறுத்துவிடுகிறான். அந்த ஆண்டு வீட்டில் யாரும் பொங்கல் விழா கொண்டாடவில்லை.

ஓர் அறையில் அழுகுரல் சத்தம் கேட்டு எக்கோ அங்கு செல்கிறான். அங்கு மஞ்சுளா தலைவிரி கோலத்தோடு அணிகலன்கள் அணியப்படாமல் அழுதுகொண்டிருப்பதைக் காண்கிறான். 'யாரம்மா நீ? எதற்கு அழுகிறாய்?' என்று கேட்கிறான். அதற்கு அவள் 'எல்லாம் என் தலைவிதி' என்று கூறிவிட்டு அறையைவிட்டு வெளியேறுகிறாள். அதைப்பற்றி தன் மனைவி மல்லிகாவிடம் கேட்கிறான். அதற்கு மல்லிகா 'அவள் என் தங்கை. அவள் தற்பொழுது விதவை' என்று பதிலளிக்கிறாள். 'இளம்வயதில் விதவையா? மறுமணம் செய்ய வேண்டியதுதானே' என்கிறான். 'மறுமணத்திற்கு அவள் ஒப்புக்கொள்ளவில்லை' என்கிறாள். 'பார்த்தாயா? வீட்டிற்குள்ளேயே புரட்சி இல்லை என்றால் வெளியே எங்கே புரட்சி செய்யப் போகிறாய்' என்று மல்லிகாவிடம் கூறுகின்றான்.

மஞ்சுளாவிடம் பேசவேண்டும் என்பதற்காக காத்திருக்கிறான் எக்கோ. மஞ்சுளா வருகிறாள். ஒரு கடிதத்தை அவரிடம் கொடுத்துவிட்டுச் சென்றுவிடுகிறாள். அக்கடிதத்தைப் பிரித்துப் படித்த அவன் வியந்து போனான். காரணம் மஞ்சுளாவும் அவனைக் காதலிப்பதாகக் குறிப்பால் எழுதியிருந்தாள். இதுதான் பொங்கல் விழாவா? இதற்காகவா நான் இங்கு வந்தேன்? என்று தன்னைத்தானே நொந்து கொள்கிறான். இரவு நெடுநேரம் தன் மனைவி மல்லிகாவிடம் பேசிக்கொண்டிருக்கிறான். அப்பொழுது வாசற்கதவைத் தட்டுகின்ற சத்தம் கேட்கிறது. 'யாரது? இந்த நேரத்தில்...' என்கிறாள் மல்லிகா. 'எக்கோ இருக்கிறாரா?' என்று வெளியே இருந்து குரல் ஒலிக்கிறது.

எக்கோ கதவைத் திறந்து பார்க்கிறான். வெளியே காவலர்கள். 'தங்களைக் கைது செய்ய வந்திருக்கிறோம். தாங்கள் எழுதிய 'சுடுகாட்டிலே' என்ற கட்டுரை அரசாங்கத்திற்கு முரணானது' என்று கூறிக் கைது செய்கின்றனர். மல்லிகா தன் கணவனுக்காகப் போராடுகிறாள். மக்களை ஒன்று திரட்டிக் கூட்டத்தில் பேசுகிறாள். அப்போது அதிகாரி ஒருவர் கூட்டத்தைக் கலைக்கச் சொல்லி உத்திரவிடுகிறார். கலைக்க மறுத்ததால் தடியடி நடத்தியும், கண்ணீர்ப் புகை வீசியும் கூட்டத்தைக் கலைக்கின்றனர். மல்லிகா கைது செய்யப்படுகிறாள். மஞ்சுளா அடிபட்டு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படுகிறாள். இறுதியில் கூட்டம் நடந்த அந்த இடம் ஒரே அமைதியானது. இரத்தம் சிந்தப்பட்ட அந்த இடம் 'எக்கோ' நகரானது.

இலக்கியவியல்

எக்கோவின் காதல் சிறுகதையின் வாயிலாக முடியரசன் பல இலக்கியங்களை மேற்கோளாகச் சுட்டியுள்ளார். எழிற்கோ என்ற பெயரை ''எக்கோ எனப் பெயர் வைத்துக்கொண்டு எழுதத் தொடங்கினேன். அதன்பிறகுதான் என் எழுத்துக்கு மதிப்பும் புகழும் கிடைத்தன. மக்கள் மனம் இன்னும் அடிமையில் மோகம் கொண்டுதான் இருக்கிறது'' (ப.114) என்பது,

'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்?
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?
என்றெம தன்னைகை விலங்குகள் போகும்?
என்றெம தின்னல்கள் தீர்ந்துபொய் யாகும்?'

என்ற பாரதியின் பாடலை நினைவூட்டுகிறது. கதையில் வரும் எக்கோ மக்களுக்காகப் போராடுகின்ற புரட்சியைப் பாரதியோடு ஒப்பிட்டுக்காட்டுகின்ற தன்மை நூலாசிரியரிடம் காணப்படுகிறது. இது நூலாசிரியரின் எண்ணத்தை, சமூக முன்னேற்றத்தை வெளிப்படுத்துகிறது என்பது ஆய்வாளரின் கருத்தாகும்.

மல்லிகா தன் காதலை எக்கோவிடம் வெளிப்படுத்துகிறாள். அதற்கு எக்கோ காதலைவிட சமூகப் புரட்சியே என் எண்ணம் என்கிறான். அதற்கு மல்லிகா ''அன்பரே! உங்கள் கருத்தில், கொள்கையில் எந்த விதத்திலும் சளைத்தவள் அல்லள் நானும், அதனாற்றான் என் கருத்துக்கேற்ற ஒரு வீரனை – செயலாற்றும் தீரனை நான் தேர்ந்தெடுத்தேன். புரட்சியில் ஆடவர்தான் மிஞ்சுவர். பெண்கள் அஞ்சுவர் என்பது உங்கள் முடிவா? நாடு பிறனுக்கு அடிமையாகக்

கூடாது என்ற எண்ணத்தால் தம் கணவன்மாரைப் போர்க்களம் அனுப்பிய பெண்கள் பிறந்த பொன்னாட்டிலேதான் நானும் பிறந்திருக்கிறேன்'' (பக்.114,117) என்கிறார். இது ஒரு பெண்ணின் வீரத்தைக் குறிப்பிடுவதோடு மட்டுமல்லாமல் சங்க காலத்தில் எழுந்த புறஇலக்கியங்களை நினைவூட்டுகிறது. உதாரணமாக புறநானூற்றில் தாய் தன்மகனைப் போருக்கு அனுப்புகின்ற செயலை,

"இன்றும் செருப்பறை கேட்டு விழுப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமுகன் அல்லது இல்லோன்
செருமுகம் நோக்கி செல்கஎன விடுமே" (புறம், 279)

என்று கூறுகிறது. அந்த வீரப்பெண்ணை நினைவு கூறும் வகையில் இப்பாத்திரப்படைப்பு அமைந்துள்ளது.

எக்கோ 'புரட்சி' என்ற பத்திரிகையில் எழுதிய 'சுடுகாட்டிலே' என்ற கட்டுரை அரசாங்கத்திற்கு முரணானது என்று அவரைக் கைது செய்கின்றனர். அப்போது தன் மனைவி மல்லிகாவிடம் இலட்சியத்திற்காகப் போராட வேண்டும் என்றுரைக்கிறான். அப்போது மல்லிகா ''உங்கள் பணியை நான் மேற்கொள்கிறேன். விரைவில் நானும் உங்களைச் சந்திப்பேன். தன் கணவன் குற்றமற்றவன் என்று, முடியுடை வேந்தன் எனவும் பாராது வீரத்தோடு வாதாடிய கண்ணகி என் குலத்தில் பிறந்தவள் தான். மக்கள் மன்றம் இருக்கவே இருக்கிறது. அரசாங்கத்தை அந்த மன்றத்தின் கூண்டிலே நிறுத்துவேன். நீதிதேவன் தீர்ப்பளிக்கட்டும்'' (ப.126) என்கிறாள். இது சிலப்பதிகாரத்தில் கண்ணகி வழக்குரைத்ததை நினைவூட்டும் முகமாக எழுதப்பெற்றிருக்கிறது. கோவலன் கொலை செய்யப்பட்ட பிறகு அச்செய்தியைக் கேட்ட கண்ணகி வழக்குரைக்கிறாள்.

'தேரா மன்னா செப்புவ துடையேன்
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளறு புண்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க'

(சிலம்பு, வழக்குரை காதை)

என்று வழக்குரைத்த பாங்கு இங்கு வெளிப்படுகிறது. நியாயத்திற்காகப் போராடும் வீரப் பெண்ணாக மல்லிகாவின் பாத்திரப்படைப்பு படைக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. அக்கால

மரபுப்படி கண்ணகி மன்னனிடம் வழக்குரைத்தாள். இக்காலநிகழ்வின்படி மல்லிகா அரசாங்கத்தோடு போராடுகிறாள். இது காலவேறுபாட்டால் அமைந்ததே தவிர போராடும் தன்மை ஒன்றுதான் என்பதை எடுத்துக்காட்டுகிறது எக்கோவின் காதல் சிறுகதை.

எக்கோ மல்லிகாவிடம் ''உங்களுக்குக் காதல் இல்லையா என்று கேட்டாயே! இதோ என் காதல் பலித்துவிட்டது. என் காதல் எல்லாம் நாட்டின் விடுதலை மீதுதான். நாட்டுக்காக உழைக்க வேண்டும். உழைத்து உழைத்து உருமாற வேண்டும். அதற்காக நான் இரத்தம் சிந்த வேண்டும். அந்த இரத்தம் மக்கள் வாழ்வு வாழ்வதற்கு நீராக வேண்டும். நான் எதிரியால் தாக்கப்பட்டோ, அரசாங்கத்தின் தண்டனை பெற்றோ, சாக வேண்டும். அந்தச் சாதல்தான் என் காதல்'' (ப.126) என்றுரைக்கிறார். இது நாட்டின்மீது கொண்ட காதலை வெளிப்படுத்துவதோடு பாரதியின்,

'காதல் காதல் காதல்
காதல் போயின் காதல் போயின்
சாதல் சாதல் சாதல்' (குயில்பாட்டு)

என்றுரைப்பதை நினைவூட்டும் முகமாக அமைந்துள்ளது.

'கல்தோன்றி மண்தோன்றா காலத்தே வாளொடு
முன்தோன்றிய மூத்தகுடி எம் தமிழ்க்குடி'

என்ற புறப்பொருள் வெண்பாமாலையின் வைரவரிகளை 20ஆம் நூற்றாண்டு எழுந்த 'எக்கோவின் காதல்' என்ற சிறுகதை மீட்டுருவாக்கம் செய்கிறது. அத்தகைய சிறப்புமிக்க தமிழ்க்குடியில் யாரையும் அடிமைப்படுத்திவிட முடியாது. மனிதன் தோன்றுகின்ற போது வீரத்தோடு தோன்றிய மரபைச் சுட்டுகிறது. காதலையும் வீரத்தையும் இரு கண்களாகக் கருதிய காலத்தில் எழுந்த இலக்கியங்களை மேற்கோள் காட்டுகின்றார் கவியரசர் முடியரசன்.

எக்கோவும் மல்லிகாவும் பார்த்துக்கொண்ட அந்த முதல் பார்வையே எக்கோவிற்குக் கற்பனையைக் கிளறிவிட்டது என்கிறார் நூலாசிரியர். இது காதலில் ஈடுபட்டவர் தன் கற்பனையை இலக்கியங்களில் வெளிப்படுத்துவார் என்பதையும் சுட்டுவதோடு பாரதிதாசனின்

'கண்ணின் கடைப்பார்வை காதலியிற் காட்டிவிட்டால்
மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர் கடுகாம்''

என்ற பாடல் அடிகள் நினைவுக்கு வருகிறது.

உவமையியல்

பண்பு, தொழில், பயன் ஆகியவற்றின் காரணமாக ஒரு பொருளை மற்றொரு பொருளோடு ஒப்புமைப்படுத்திக் காட்டுவதே உவமையாகும். எக்கோவின் காதல் சிறுகதையிலும் நூலாசிரியர் பல உவமைகளைச் சுட்டியுள்ளார். "காலைக் கதிரவன் செவ்வொளி வீசிக்கொண்டு தோன்றினான். அந்தத் தோற்றம், மக்கள் உரிமைக்குப் போரிட்டு இரத்தந்தோய்ந்த உடலுடன் தோன்றும் வீரனைப் போலக் காட்சியளித்தது.(ப.118) என்கிறார். சூரியன் உதிக்கின்ற அந்த தோற்றத்தைக்கூட புரட்சியோடு பார்க்கின்ற ஒப்புமைத் தன்மை நூலாசிரியரிடம் வெளிப்படுகிறது. மல்லிகாவின் தங்கை மஞ்சுளாவின் வாழ்வை 'உடைந்த ஓடு' என்ற கதைவழி வெளிப்படுத்துகிறார். மஞ்சுளா எக்கோவிற்கு எழுதிய கடிதத்தில் ''இந்த உடைந்த ஓட்டைக் கவனியாமல் பொற்பாண்டத்திற்கு மெருகு கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். உடைந்த ஓடாகியது என் குற்றமா? அந்த ஓட்டினை ஒன்றுபடுத்த முடியாவிட்டால் இன்னும் இரண்டு நாட்களில் அந்த ஓடு தெருவில் வண்டியின் சக்கரம் ஏறி நூறு சுக்கலாகக் கிடக்கும்'' (ப.122) என்கிறார். இவற்றில் பல ஒப்புமைகள் காணப்படுகின்றது. உடைந்த ஓடு, தன் விதவை வாழ்வை வெளிப்படுத்துகிறது. அந்த உடைந்த ஓட்டிற்கும் வாழ்வு கிடைக்குமா? என்ற ஏக்கத்தை வெளிப்படுத்துவதாக இந்த ஒப்புமை அமைந்துள்ளது.

சமூகவியல்

'எக்கோவின் காதல்' என்னும் சிறுகதை சமூகத்தில் வாழுகின்ற மக்களுக்குள்ள பிரச்சினைகளை மையமிட்டு எழுதப்பெற்றிருக்கிறது. 'புரட்சி'' என்ற இதழில் எழுதி வருகின்ற எக்கோ மக்களுக்குள்ள எழுத்துரிமை, பேச்சுரிமை பற்றி எழுதுகிறார். புரட்சி என்பது வீட்டிலிருந்தே தொடங்க வேண்டும் என்கிறார். மனித சமுதாயம் உரிமை பெற்று விளங்க வேண்டும் என்கிறார். ''நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும். அவர்கள் விடுதலைப் பறவைகளாகப் பறந்து திரிய வேண்டும். அதற்காக நான் பலியாக வேண்டும். இதுதான் எக்கோவின் காதல்' (ப.128) என்று கூறுகிறார். இவற்றிலிருந்து எழிற்கோவின் காதல் மிகுதியாய் இருப்பது நாட்டுப்பற்றிலேதான் என்பது வெளிப்படுகிறது.

தொகுப்புரை

சிறுகதையானது குதிரைப் பந்தயம் போல் இருக்கவேண்டும் என்றும் அது படிப்பதற்கு விறுவிறுப்பாக இருக்க வேண்டும் என்றும் படிக்கத் தொடங்கியதிலிருந்து அரைமணி நேரத்திலிருந்து ஒரு மணி

நேரத்திற்குள் முடிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்றும் சிறுகதைக்கு இலக்கணம் வரையறுத்துள்ளனர். ஆனால் எக்கோவின் காதல் என்ற சிறுகதை படிப்பதற்கு விறுவிறுப்பாக இருப்பதோடு மட்டுமல்லாமல் சங்க இலக்கியம் தொடங்கி இக்கால இலக்கியங்கள் வரை நினைவூட்டும் முகமாகவே அமைந்துள்ளது. மல்லிகாவின் காதலைவிட அவளோடு வாழ்கின்ற இல்லற வாழ்வைவிட நாட்டின் முன்னேற்றத்தையே குறிக்கோளாகக் கொண்டவர் எழிற்கோ. இது நூலாசிரியர் முடியரசன் நாட்டின் மீது கொண்ட பற்றினையும் சமுதாய முன்னேற்றத்தையும் வெளிப்படுத்தும் முகமாக அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. எழுத்துரிமை, பேச்சுரிமை, நாட்டுப்பற்று, சமூக முன்னேற்றம் போன்ற பன்னோக்குச் சிந்தனைகளை வெளிப்படுத்துகின்ற சிறுகதையாக எக்கோவின் காதல் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

பார்வை நூல்கள்

1. எக்கோவின் காதல் (சிறுகதை) – முடியரசன்
2. சங்கஇலக்கியம் - புறநானூறு – கழகவெளியீடு
3. சிலப்பதிகாரம் - ந.மு.வேங்கடசாமி (உ.ஆ.)
4. புறப்பொருள்வெண்பாமாலை
5. பாரதியார் கவிதைகள்
6. பாரதிதாசன் கவிதைகள்.

கவியரசர் முடியரசனார் கவிதைகளில் பொதுவுடைமை

பேரா. சு.இராசாராம் *

தமிழ் இனப் பெருமை, தமிழ் மொழி உணர்வு ஆகிய இரண்டையும் தம் இரு கண்களாகப் போற்றியவர் கவியரசர் முடியரசனார். அவர் தம் கவிதைகளில் அவற்றை வீறுணர்ச்சியுடன் பாடித் தமிழின மக்களின் மனத்தைக் கவர்ந்த சிறப்புக்குரியவர். அவருடைய படைப்புகளுள் கவிதை மிகுந்த ஆளுமையுடன் திகழ்கிறது. அவருடைய கவிதைகள் இருபதுக்கும் மேற்பட்ட தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. அவை பல்வேறு பாடுபொருள்களைக் கொண்டனவாக உள்ளன. அவருடைய கவிதைகளின் பாடுபொருளை, “தமிழ் இன விடுதலை, சாதியொழிப்பு, பெண்விடுதலை, தமிழ்மொழி மேம்பாடு, பொதுவுடைமை, பகுத்தறிவு, வடமொழி எதிர்ப்பு, வேத இதிகாச மறுப்பு போன்ற கருத்துக்களின் அடிநாதமாகவே இவரது கவிதைகள் இயங்குகிறது” என மதிப்பிடுவர் அரச. முருகுபாண்டியன் (பாரி முடியரசன், என் தந்தை முடியரசன், ப.7) அவ்வகையில் முடியரசனார் கவிதைகளில் இடம்பெறும் பொதுவுடைமை, அவர் காண விழைந்த புத்துலகமாகத் திகழ்கிறது.

தனியுடைமை, பொதுவுடைமை - இருவேறு உலகம்

‘வள்ளுவர் கண்ட உடைமைகள்’ என்னும் கவிதையில் கவிஞர், இவ்வுலகில் தனியுடைமை உலகம், பொதுவுடைமை உலகம் என்னும் இருவேறு உலகம் அமைந்திருப்பதாகப் பாடுவர். இவ்வுலகில் உள்ள அனைத்தும் தனக்கே உரியது என அனைத்தையும் ஏப்பமிடுவோரைக் கொண்டது தனியுடைமை உலகம். இவ்வுலகில் இல்லாமை என்பதே இல்லை என்னும் நிலையை உருவாக்கி அதனைக் காப்பதற்காகப் போராடுவோரைக் கொண்டது பொதுவுடைமை உலகம். இவ்வாறு காணப்படும் இருவேறு உலகங்களுள் பொதுவுடைமை உலகத்தைப் புகுத்துவதற்காக போராடும் ஒரு வழியில் மக்கள் புகுந்துவிட்டதாகக் கவிஞர் மொழிவர். இதனை, எல்லாமே தனக்குரிமை என்று நாளும்

---

* பேராசிரியர், தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம்,காரைக்குடி-3.
(இந்தக் கட்டுரை ரூசா - கட்டம் 2.0 (நிதி ஒப்புதல் கடித எண்: F.24-51/2014-U, Policy (TNMulti-Gen) கல்வித்துறை, இந்திய அரசு, நாள்:09.10.2018) நிதியுதவியில் எழுதப்பெற்றது.)

ஏப்பமிடுந் தனியுடைமை யுலக மொன்றாம்;
இல்லாமை யில்லாமற் செய்து காக்க
எல்லார்க்கும் பொதுவாகும் உடைமை என்று
மல்லாடும் பொதுவுடைமை உலகம் ஒன்றாம்;
மாநிலமே இவ்விருவேறுலகமாகிப்
பொல்லாத விளைவுகளால் மோதி நிற்கப்
போராடும் ஒருவழியிற் புகுந்து விட்டோம்
(க.மு.க., வள்ளுவர் கோட்டம், ப.324)

என்னும் பாடல் எடுத்துரைக்கும்.

ஐம்பூதங்களுள் நிலம் - தனியுடைமை

'பகடைக்காய்' என்னும் கவிதையில், நிலம், நீர், காற்று, தீ, வானம் என்னும் ஐம்பூதங்களுள் நிலத்தை மட்டும் சிலர் தனிவுடைமை ஆக்கியது குறித்துக் கவிஞர் வினா எழுப்புவர். வானிலிருந்து விழும் மழைநீரை எவரும் விலை கொடுத்து உரிமையாக்கித் தனிவுடைமை ஆக்கியதில்லை. சூழ்ந்திருக்கும் காற்றையும் சுடுகின்ற நெருப்பையும் முதலாளிகள் எவரும் தனிவுடைமை ஆக்கியதில்லை. பாழ்வெளி என்று சொல்லப்படும் வானத்தை எவரும் பணங்கொடுத்து தனியுடைமை செய்ததில்லை. நிலத்தை மட்டும் தனிவுடைமை செய்தது ஏன்? என்பர். இதனை,

வீழ்கின்ற புனலனைத்தும் உரிமை யாக்கி
விலைகொடுத்துத் தனியுடைமை என்ப துண்டா?
சூழ்கின்ற காற்றதனைச் சுடுநெ ருப்பைச்
சொத்துடையார் தனியுடைமை ஆக்க லுண்டா?
பாழ்வெளியாம் வானத்தைப் பாரி லெங்கும்
பணங்கொடுத்துத் தனியுடைமை செய்த துண்டா?
வாழ்பூதம் அய்ந்தனுளும் நிலத்தை மட்டும்
வன்புடையார் தனியுடைமை செய்த தேனோ?
(க.மு.க., புதியதொரு விதி செய்வோம், ப.344)

என்னும் பாடல் எடுத்துரைக்கும்.

இயற்கையில் பொதுவுடைமை

முடியரசனார் இயற்கையைப் போற்றும் கவிஞர். அவருடைய கவிதைகளில் இயற்கை உலகம் என்னும் பகுதி தனியாக அமைந்துள்ளது. இயற்கையைப் பாடும்போதும் அதில் பொதுவுடைமையைப் பாடியிருப்பது தனித்தன்மையாகும். 'நிலவு' என்னும் தலைப்பில் பாடும் கவிஞர் அதன் இயல்பில்

பொதுவுடைமையைக் காண்பர். இப்பாடலில் ஏழை, உழைப்பாளி, பணக்காரன் ஆகிய மூவருக்கும் கூறும் வரையறை குறிப்பிடத்தக்கதாகும். ஒரு பொழுது கூட வயிராற உண்ண இயலாமல் உயிர் மட்டும் நிற்க இரந்து உண்ணும் நிலையில் இருப்பவன் ஏழை. திங்கள் தோன்றும் மாலை நேரத்தில் ஒரு வேளை உணவையும் அரைவயிறு மட்டும் உண்டு வருந்துபவன் உழைப்பாளி. நிறைய உண்ணும் பெருவயிறு கொண்டவன் பணக்காரன். இத்தகைய ஏழை, உழைப்பாளி, பணக்காரன் ஆகிய அனைவரும் மகிழுமாறு சிறுகுடிசையின்மீதும் மாடத்தின்மீதும் ஒளி வீசி இன்பம் சேர்க்கின்றது நிலவு. இவ்வாறு வேறுபாடு காட்டாமல் நிலவு ஒளி வீசுவதால் அதன் ஆட்சியைப் பொதுவுடைமை ஆட்சி என்று கவிஞர் போற்றுகிறார். இதனை,

ஒருபொழுதும் வயிராற உண்ணல் காணா
துயிர்நிற்க இரந்துண்ணும் ஏழை, திங்கள்
வருபொழுது அரைவயிறு மட்டும் உண்டு
வருந்துகிற உழைப்பாளி, நிறைய உண்ணும்
பெருவயிற்றுப் பணக்காரன் யாவ ரேனும்
பிழையாது நிலவளித்து மாட மீதும்
சிறுகுடிசை மீதுமொளி வீசி இன்பம்
சேர்க்கின்ற பொதுவுடைமை ஆட்சி கண்டேன்

(க.மு.க., முடியரசன் கவிதைகள் ப.62)

என்னும் கவிதை உணர்த்தும். இவ்வாறு இரவுப்பொழுதில் பொதுவுடைமை ஆட்சி புரியும் முழுமதியைக் கண்டு கவிஞர் மதுவுண்ட வண்டாகி, வாயும் மனமும் குளிர இன்பப் பாடல் பாடுவதாக மொழிவர். பொதுவுடைமை கொண்ட புதிய உலகத்தை விரைவில் காண்பதற்கு முழு மதியரின் ஆட்சி தோன்ற வேண்டும் எனச் சுட்டுவர். (க.மு.க., முடியரசன் கவிதைகள், ப.62). இதில் 'முழு மதி' என்னும் சொல்லாட்சி நிறைமதி, நிறை அறிவு ஆகிய இரண்டையும் சுட்டும். இங்கு அது நிறைந்த அறிவுடைய அறிஞர்களைக் குறிக்கும் வகையில் இடம்பெற்றிருப்பது சிறப்புக்குரியதாகும்.

நிலவின் இயல்பில் பொதுவுடைமையைக் காணும் கவிஞர், கடலின் இயல்பிலும் பொதுவுடைமையைக் காண்பர். கடல் அனைவருக்கும் பொதுவானது, அவ்வாறே அதன் பயனும் அனைவருக்கும் பொதுவானது. ஆனால் உலக மக்கள் கடலில் எல்லையை வகுத்துக் கொண்டு ஒருவரோடு ஒருவர் மாறுபடுவதைக்

கவிஞர் நகையாடுவர். உலகத்துப் பொருள் அனைத்தும் அனைவருக்கும் பொதுவானது என்னும் உண்மைக்கு மாறாக, சிலர் உலகத்துப் பொருள் தமது எனக் கூறி ஒற்றுமையை மாய்க்கின்றனர் என்பர். அத்தகையவர்களைக் கவிஞர் 'கலகத்தார்' எனச் சாடுகிறார். (க.மு.க., முடியரசன் கவிதைகள், ப.66)

பொதுமை காணும் விழைவு

கவிஞர் முடியரசனார் பொதுமை காணும் விழைவை 'பொதுமை காண்போம்' என்னும் கவிதையில் வெளிப்படுத்துவர். வறியவர்கள் வலிமை குன்றி வறுமை மிகுந்து வாடும் போது வலியவர்கள் மட்டும் வளம்பெற்று வளர்வது அறமாகாது என்பது கவிஞரின் எண்ணம். பொதுமை காண்பதற்காக வறியவர்கள் பொறுமையை விடுத்து புலிபோல போருக்கெழுவர். புரட்சி தோன்றும் என்பது கவிஞரின் திடமான நம்பிக்கையாகும். வறுமை நீங்குவதற்கும் வளமை சேர்வதற்கும் பொதுமையே வழி என்பர். இதனை,

வறுமை போக வளமை சேர
 வழிகள் யாவை? தேடுவோம்
வளரும் நாடு பொதுமை யாகி
 வாழ்க என்று பாடுவோம்.
(க.மு.க., புதியதொரு விதி செய்வோம், ப.345)

என்றும் பாடலடி உணர்த்தும். பொதுமை காண விழையும் இவ்வெண்ணத்தை 'பூக்கட்டும் புதுமை' என்னும் கவிதையில்,

துங்கமுறச் சிரித்திருக்கும் அறிவால் ஆய்ந்து
 தூயனவன் சொல்வழியில் பொதுமை காண
இங்கினிநாம் முயலுவமேல் புதுமை பூக்கும்
 புல்லடிமை தேய்ந்து சமநிலையே வாய்க்கும்
(க.மு.க.,புதியதொரு விதி செய்வோம், ப.345)

என வெளிப்படுத்துவர். இப்பொதுமை எண்ணத்தை 'யாவும் பொதுமையடா' என்னும் கவிதையிலும் சுட்டுவர். இவ்வுலகில் பிறந்த அனைவருக்கும் உணவும் உடையும் பொதுமையாகும். ஆனால் ஏழைக்கு இவை இரண்டும் இல்லை, அது விதிப்பயன் என மழுப்புவது மடமையாகும். இவ்வுலகில் பிறந்த அனைவரும் நமதருமைச் சுற்றமாகையால் இவ்வுலகில் உள்ள யாவும் பொதுமை என்பதை அனைவரும் உணரவேண்டும் என்பர். இதனை,

பாழும் வயிற்றுணவு பஞ்சின் உடுக்கையிவை
பாரிற் பிறந்தவர்க்குப் பொதுமையடா
ஏழைக்கிவையிரண்டும் இல்லை விதிப்பயனாம்
என்று மழுப்புவது மடமையடா
தேவை யளவறிந்து யாவும் அடைந்தபினும்
தேடி முடக்குவது குற்றமடா
யாவும் பொதுமையென நீயும் உணர்ந்துநட
யாரும் நமதருமைச் சுற்றமடா
(க.மு.க., புதியதொரு விதி செய்வோம், ப.345)

என்னும் பாடல்கள் காட்டும். 'உலகை மாற்றுவோம்' என்னும் கவிதையிலும் கவிஞர் தனியுடைமைக்கு எதிராகப் போராடும் குணத்தையும் பொதுவுடைமையைப் பறைசாற்றும் எண்ணத்தையும் வெளிப்படுத்துவர். இதனை,

ஒருவனுக்கே உரிமை யென்றால்
உயர்த்திக் கையைக் காட்டுவோம்
(க.மு.க.,புதியதொரு விதி செய்வோம், ப.345)

என்றும்

உடைமை யாவும் பொதுமைஎன்று சாற்றுவோம்

(க.மு.க., புதியதொரு விதி செய்வோம், ப. 346)

என்றும் கவிஞர் பாடுவது புலப்படுத்தும். கவிஞர் படைத்துக் காட்டும் புத்துலகில் பொதுவுடைமையைக் காண்பர். 'நானொரு பாடும் பறவை' என்னும் கவிதையில்,

பாடிடு வேன்புது வுலகை - அங்கே
படைத்திடுவேன் பொதுவுடைமை
(க.மு.க., பாடுங்குயில், ப. 170)

எனப் பாடுவது இதனை நன்குணர்த்தும்.

உலக மாந்தர் பொதுமை

'ஏழை ஏது?' என்னும் கவிதையில் கவிஞர் உடை, உணவு, உடைமை ஆகிய மூன்றும் உலக மாந்தர்க்குரிய பொதுமைகள் என்பர். இவ்வுலகில் ஒருவர் பிறக்கும் போது அவரை ஏழை, பணக்காரர் என வேறுபடுத்துவதில்லை. அவ்வாறே இறக்கும் போதும் வேறுபடுத்துவதில்லை. ஒருவர் மண்ணில் பிறக்கும் போது அவருக்குப்

பெயர் குழந்தை, அவ்வாறே இறக்கும் போது அவருக்குப் பெயர் பிணம். ஏழை, செல்வர் என்னும் பெயர்களெல்லாம் இடையில் வந்த பெயர்களேயாகும். இடையில் வந்த வேறுபாடு தொடர்ந்தால் கேடுதான் விளையும். பிறப்பில் எவ்வித உயர்வும் இல்லை,தாழ்வும் இல்லை. அதனால் உலகில் தீமையே விளையும். உலகத்திற்குத் தீமையைத் தரும் இத்தகைய கேடுகள் நீங்க மனிதர்கள் அனைவரும் தோழமை கொள்ள வேண்டும். தோழமை உணர்வு ஏற்படும்போது இன்பம் சேரும் என்கிறார். (க.மு.க., காவியப் பாவை, ப.124).

'தலைமை வகிப்போம்' என்னும் கவிதையில் கவிஞர் பொதுமையை அறநெறியாகச் சுட்டுவர். பொதுமை நிறைந்த உலகைப் புதுமுறை உலகு என்பர். உலக மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் உதவும் மனத்துடன் சரிநிகராக வாழ வேண்டும் என்பர். இதனை,

புதுமுறை உலகினைப் படைப்போம் - அங்கே
பொதுமையில் அறநெறி விரிப்போம்
உதவிடும் மனத்தொடு சிறப்போம் - உலகில்
ஒருசரி நிகரென இருப்போம்
(க.மு.க., பாடுங்குயில், ப.168)

என்னும் கவிதை எடுத்துரைக்கும்.

'நாளைய நாடு' என்னும் கவிதையில் கவிஞரின் கனவாகப் பொதுமை விளங்குகிறது. உயர்வு, தாழ்வு என்னும் நிலை மறைந்து மக்கள் அனைவரும் நிகர் என்னும் புதுமையும் உலகத்துச் செல்வம் அனைத்தும் மனிதர்கள் அனைவருக்கும் பொது என்னும் பொதுமையும் கவிஞரின் கண்ணின் அருகில் தெரிவதாகப் பாடுவர். இதனை,

ஏற்றமும் தாழ்ச்சியும் இரியும் - மக்கள்
யாவரும் ஒன்றெனத் தெரியும்
மாற்றமெ லாமொரு புதுமை - செல்வம்
மாந்தர்கள் யாவர்க்கும் பொதுமை
(க.மு.க.,பாடுங்குயில்,ப.192)

என்னும் பாடல் உணர்த்தும்.

புத்தொளிப் பொதுமைப் புரட்சி

சமுதாயத்தில் பிறப்பினாலும் பொருளாதார நிலையினாலும் உயர்வு, தாழ்வு நிலவுகிறது. இவ்வுலகை உயர்த்துவதற்காகத் தம் உழைப்பைக் கொடுக்கும் உழைப்பாளி வர்க்கம் தாழ்ந்தோராக ஆயினர். பலருடைய உழைப்பையும் உண்டு கொழுத்தவர்கள் உயர்ந்தோர் ஆயினர். அவ்வாறு தாழ்ந்தவர்கள் எல்லாம் இப்பொழுது நிமிரத்

தொடங்கிவிட்டதால் உழைப்பின் நலம் அனைத்தையும் தமதாக ஆக்க விரும்புவோர், இனிமேல் தாழ்ந்தவர்களை ஏய்க்க முடியாது. (க.மு.க., நெஞ்சு பொறுக்கவில்லையே, ப.214)

பிறப்பினாலும் பொருளாதாரத்தாலும் நிலவும் வேறுபாட்டைக் களையும் நல்லறத்தைப் பின்பற்றி வளரும் நாடே அடிமைகள் இல்லாத நாடாகும். நாட்டு மக்கள் அனைவரும் அறிவுத் திறத்தால் பொதுமை காணும் விழிப்புணர்வு பெற்றுவிட்டனர். பொய்மையாளர்கள் சொல்லும் கதைகளை நம்ப மாட்டார்கள். (க.மு.க., நெஞ்சு பொறுக்கவில்லையே, ப.214)

இதுவரை பொறுத்தது போதும், இனிமேலும் பொறுத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை எனப் பொங்கி எழும் உணர்வு பெற்றுவிட்டனர். உள்ளத்தில் தெளிவும் கண்களில் ஒளியும் பெற்றுவிட்டனர். பொதுவுடைமையை ஏற்க மறுத்து தனியுடைமையை மன்றத்தில் எடுத்துரைக்க வருபவர்களைத் தண்டிக்கவும் அஞ்ச மாட்டார்கள், இவ்வுலகமே சிவப்பாய் மாறும். இவ்வாறு கவிஞர் முடியரசனார் உலகம் சிவக்கும் என்னும் கவிதையில் பொதுவுடைமை குறித்துப் பாடுவது நோக்கத்தக்கதாகும். (க.மு.க., நெஞ்சு பொறுக்கவில்லையே, ப.214)

பொதுவுடைமைச் சமுதாயத்தை ஏற்படுத்துவதற்காகப் புரட்சி தோன்றும். இருளில் உழன்ற மக்கள் பொதுவுடைமை என்னும் புத்தொளியைக் காட்டும் புரட்சிக் கதிரை கண்டுகொண்டனர். இந்நிலவுலகம் முழுவதும் செம்மை என்னும் அழகிய நிறம் கொண்டு தோன்றும் என்று பாடுவர். இதனை,

எத்தனை நாள்கள் ஏய்ப்பர்?
        ஏய்ப்பரை நம்பி வந்தோர்
எத்தனை நாள்பொ றுப்பர்?
        இருளிடை உழன்ற மக்கள்
புத்தொளிப் பொதுமை காட்டிப்
        புறப்படும் கதிரைக் கண்டார்
இத்தரை முழுதுஞ் செம்மை
        எழில்நிறங் கொண்டு தோன்றும்
(க.மு.க.,நெஞ்சு பொறுக்கவில்லையே,ப.214)

என்னும் பாடல் காட்டும்.

புதியதொரு விதி செய்வோம்

நீர், நிலம், நெருப்பு, வானம், காற்று என்னும் ஐம்பூதங்களாலாகிய உலகத்தில் நிறைந்த பொருள்கள் அனைத்தையும் ஒருவரின் தனியுடைமை என்று கருதினால் அதனை வேரோடு சாய்க்கின்ற துணிவு வேண்டும். விளையாட்டுப் பேச்சுகளால் எவ்விதப் பயனும் இல்லை. யாருடனும் பகைமை கொள்ள வேண்டியதில்லை. அனைவரும் ஒன்றுபட்டால் அனைத்துப் பொருள்களும் அனைவருக்கும் பொது என்னும் புதுமை மலரும். போராடும் உலகத்தைச் சாய்ப்பதற்குப் புதியதோர் உலகத்தைப் படைக்க வேண்டும். இவ்வாறு முடியரசனார் பொதுவுடைமை என்னும் புதுமையைப் பூக்கச் செய்வதற்கு ஒற்றுமை அவசியம் என்பர். (க.மு.க., புதியதொரு விதி செய்வோம், ப.343)

ஓர் உலைக்களத்தில் இரும்புக் கருவி சமைப்பதற்கு உலைக்களம், கரி, தீ, துருத்திக் காற்று, இரும்பு, சம்மட்டி ஆகியன துணைக்கருவிகளாகும். சமுதாயத்தில் பொதுவுடைமை என்னும் கருவியைப் படைப்பதற்குரிய வழிமுறைகளை உலைக்களத் தொழிலோடு கவிஞர் உருவகப்படுத்துவது நினைந்து இன்புறுதற்குரியதாகும். முடியரசனார், வறுமையை உலைக்களமாகவும், மதம், சாதி, பட்டினி, நோய், மூடநம்பிக்கை ஆகியவற்றைக் கரியாகவும் போராட்ட உணர்ச்சியைத் தீப்பொறியாகவும் புரட்சி எண்ணத்தைத் துருத்திக் காற்றாகவும் உரிமை உணர்வைச் செந்தீயாகவும் பிறருழைப்பை உறிஞ்சும் இரும்பு மனம் படைத்தவர்களை உலைக்களத்தில் காய்ச்சப்படும் இரும்பாகவும் பொதுவுடைமைச் சட்டத்தைச் சம்மட்டியாகவும் உருவகப்படுத்துவர். வறுமை என்னும் உலைக்களத்தில் மதம்,சாதி,பட்டினி, நோய், மூடநம்பிக்கை என்னும் கரிகளில் போராட்ட உணர்ச்சி என்னும் தீயைப் பற்ற வைத்து, பெரும்புரட்சி என்னும் துருத்திக் காற்றால் எரியச் செய்து பிறருழைப்பை உறிஞ்சும் இரும்பு மனம் படைத்தவர்களைக் காய்ச்சி, பொதுவுடைமைச்சட்டம் என்னும் சம்மட்டியால் அடிப்பதன்மூலம் பொதுவுடைமை என்னும் உருவத்தைப் படைக்க முடியும் என்பர். இதனை,

வறுமையெனும் உலைக்களத்தில் அடுக்கி வைத்த
மதம்சாதி பட்டினிநோய் மூடம் என்ற
கரிகளிலே உணர்ச்சியினை மூட்ட, வீசும்
காற்றெனவே பெரும்புரட்சி தோன்ற, அங்கே
உரிமையெனும் போராட்டச் செந்தீ பற்றும்
உறிஞ்சிவரும் இரும்புகளை அதனிற் காய்ச்சிச்

சரிவுபடாப் பொதுவுடைமைச் சட்டம் என்ற
சம்மட்டி யாலடித்தால் உருவ மாகும்
(க.மு.க., புதியதொரு விதி செய்வோம், ப.343)

என்னும் பாடல் எடுத்துரைக்கும்.

உலைக்களத்தில் இரும்பைக் காய்ச்சிக் கருவிகள் இயற்றும் கொல்லன் செயலைப் பாடும் கவிஞர் அதில் தொழிலாளர்களின் எண்ணத்தையும் உணர்ச்சியையும் பதிவு செய்வர். உலைக்களத்தில் பற்றும் செந்தீ தொழிலாளர்களின் விழிச்சிவப்பைக் காட்டுவதாகவும், பற்றிய கனல் வறுமைத் தொழிலாளர்களின் குழிந்த வயிற்றின் பசி போன்று எரிவதாகவும் கொல்லனின் உலைத்துருத்திக் காற்று தொழிலாளியின் பெருமூச்சு போன்று வீசுவதாகவும் பாடுவர். (க.மு.க., புதியதொரு விதி செய்வோம், ப.343).

தொழிலாளர்கள் தம் உடலையும் உயிரையும் ஒரு பொருட்டாகக் கருதாமல் உழைப்பால் உலகத்தை உருவாக்க முயலும் வலிமையான தோள்களைக் கொண்டவர்கள். அவர்களின் தோள்கள் முதலாளிகளின் கொடுமைகளையும் இன்னல்களையும் வறுமை தந்த துன்பங்களையும் எத்தனை நாள்கள் சுமக்கும். அடிமைகளாகவும் மிதித்து ஏறும் படிகளாகவும் நடத்துவதை எண்ணி அவர்களின் உள்ளம் எத்தனை நாள்கள் பொறுக்கும். அவர்களின் உள்ளம் ஒரு நாள் இடியென முழங்கும். அவர்களின் தோள்கள் என்றாவது நிமிரும். இவ்வாறு தொழிலாளர்கள் தம் உரிமைக்காகப் பொங்கி எழும் நிலையில் பொதுவுடைமைச் சமுதாயம் மலரும் என்பதைக் கவிஞர் பதிவு செய்வர். இதனை,

உடலுயிரைப் பொருளாகக் கருதா திந்த
உலகத்தை உருவாக்க முயன்ற தோள்கள்
கொடுமைகளை மிடிமைகளை வறுமை தந்த
கோணல்களை எத்தனைநாள் சுமக்கும்? மேலும்
அடிமையெனப் படிகளென ஆக்கி வைத்தால்
அத்தனையும் எத்தனைநாள் உளம்பொ றுக்கும்?
இடியென முழங்காதோ அந்த உள்ளம்?
என்றேனும் நிமிராவோ அந்தத் தோள்கள்?
(க.மு.க.,புதியதொரு விதி செய்வோம், ப.343)

என்னும் பாடல் காட்டும்.

பொதுவுடைமை, கவிஞரின் கனவாக உள்ளது. பொருட் துறைகளிலும் பிற துறைகளிலும் சமமான நிலை ஏற்பட வேண்டும் என்பதே கவிஞரின் குறிக்கோளாகும். அவ்வாறு பெறும் பொதுவுடைமையை உயிர்போல் காக்க வேண்டும் என்பர். பொதுவுடைமையை இருட்டுலகில் எழும் விடிவெள்ளியாகவும் இனிய வைகறையாகவும் கண்டு மகிழ்வர். பொருட் துறைகளிலும் பிற துறைகளிலும் பொதுவுடைமையாக்காமல் தனிவுடைமையாக்கிச் சுருட்டுபவர்களை அடையாளங்கண்டு கொண்டோம் என்றும் இதுவரை அறியாமல் தூங்கிக் கொண்டிருந்த விழியிமைகள் இப்பொழுது திறந்து விட்டன என்றும் கூறுவர். பொதுவுடைமை மலர்ந்துவிட்டது என்பதற்குக் குறியீடாக உருத்து எழும் செங்கதிரோனைச் சுட்டுவர். (க.மு.க., புதியதொரு விதி செய்வோம், ப.344). இவ்வாறு கவிஞர் முடியரசனார் கவிதைகளில் பொதுவுடைமை எழுச்சியுடனும் உணர்ச்சியுடனும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

முடிவுரை

கவியரசர் முடியரசனார் தம் கவிதைகளில் பொதுவுடைமைக்குத் தனி இடம் கொடுத்துள்ளார். அவர் காண விழைந்த புத்துலகில் பொதுமை மிளிர்கிறது. கவிஞரின் கனவு உலகமாகப் பொதுவுடைமை உலகம் விரிகிறது. கவிஞரின் விழைவில் உயர்வு தாழ்வுகள் அற்ற, சம உரிமைகள் நிறைந்த பொதுமைச் சமுதாயத்தை உருவாக்கும் முனைப்பு வெளிப்படுகிறது.

துணை நூல்கள்

1. பாரி முடியரசன் (ப.ஆ), 2016, கவியரசர் முடியரசன் கவிதைகள் (முழுத்தொகுப்பு), மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 108.
2. பாரி முடியரசன், 2016, என் தந்தை முடியரசன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 108.

நெஞ்சு பொறுக்கவில்லையே – கவிதைத் தொகுதியில் மாணவர்களின் நிலை

முனைவர் கூ.இராஜலெட்சுமி *

காலந்தோறும் வளர்ந்து வரும் இலக்கியங்களில் புதுக்கவிதை இலக்கிய உலகில் தனிச்சிறப்பிடத்தைப் பெற்றுத் திகழ்கின்றது. சமுதாயச் சிக்கல்களை முருகியல் உணர்வோடு வெளிப்படுத்துகின்றது. அந்த வகையில் கவியரசர் முடியரசனார், தம் பாடல்களின் வழி தமிழ் மறுமலர்ச்சி, இனமீட்சி, சாதி ஒழிப்பு, சமத்துவம், சமுதாயப் புரட்சி, இயற்கை எழில், புதுமைப்புரட்சி போன்ற உன்னத உணர்வை எழுப்பியுள்ளார். இவர் பாவேந்தர் பாரதிதாசனார் பரம்பரைக் கவிஞர்களில் அதிகமாக மேற்கோள் எடுத்தாளப்படும் கவிஞர்களில் முதலாமவராக புகழ் பெற்றவர். சமுதாயத்தை உற்று நோக்கி, அதிலுள்ள அவலங்களை வேரறுக்க நினைக்கும் முடியரசனாரின் நெஞ்சு பொறுக்கவில்லையே என்ற கவிதைத் தொகுதியிலுள்ள மாணவர் சமுதாயத்தை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

முடியரசன் அறிமுகம்

சுப்பராயலு - சீதாலெட்சுமி என்ற தம்பதியினருக்கு மகனாக பெரியகுளம் நகரில் 07.10.1920-இல் முடியரசனார் பிறந்தார். இயற்பெயர் துரைராசு. துணைவியார் கலைச்செல்வி. இவரது நூல்கள் முடியரசன் கவிதைகள், காவியப்பாவை, பாடுங்குயில், தாய்மொழி காப்போம், வள்ளுவர் கோட்டம், ஞாயிறும் திங்களும், நெஞ்சில் பூத்தவை, தமிழ் முழக்கம், புதியதொரு விதி செய்வோம், கவியரங்கில் முடியரசன் போன்ற கவிதை நூல்களும், பூங்கொடி, வீரகாவியம், ஊன்றுகோல் ஆகிய காப்பியங்களும் ஆகும். இவர் காரைக்குடி மீ.சு உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். பாரதிதாசனோடு மிக நெருங்கிப் பழகியவர். 1966-இல் பரம்புமலையில் நடந்த விழாவில் இவருக்குத் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் 'கவியரசர்' என்ற பட்டம் வழங்கிப் போற்றினார். 1973-இல் தமிழக அரசு 'நல்லாசிரியர்' விருது வழங்கிச் சிறப்பித்தது. இவரது பாடல்கள் இந்தியிலும், ஆங்கிலத்திலும், கன்னடத்திலும், உருசிய மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவர் 03.12.1998-இல் இயற்கை எய்தினார்.

* இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, அரசு மகளிர் கலைக்கல்லூரி, சிவகங்கை.

சமூகப்பார்வை

இலக்கியப் படைப்பாளர்கள் சமுதாயத்தைக் கூர்ந்து நோக்குகின்றனர். சமுதாயக் கொடுமைகளைப் படைப்புகள் மூலம் வெளிப்படுத்தி, தங்களின் உணர்வை வெளிப்படுகின்றனர். நவீன காலத்தில், பெண்களுக்கு எதிரான இன்னல்கள் குவிந்து கொண்டே வருகின்றன. பாலியல் வன்முறைக்கு சிறு குழந்தைகளும் தப்பவில்லை. சாதீயம் மற்றும் மதம் பிரச்சினைகள் கட்டவிழ்ந்தே காணப்படுகின்றன. கவியரசர் காலத்திலும் சாதி, மத வெறியாட்டம் நிகழ்ந்துள்ளது. எங்கும் தீமைகள் தாண்டவம் ஆடினாலும் அதனைக் கண்டு ஊமையாயிருப்பவர்களைக் கண்டு,

"எங்கெங்கு காணினும் தீமையடா - உல
கெங்கனும் வாய்மைகள் ஊமையடா"

என்கிறார். எவ்வளவு தீமைகள் நடந்தாலும், வெளியே சொல்ல முடியாத ஊமையர்களைச் சாடியுள்ளார். பொதுவுடமைச் சமுதாயத்தை நாடும் கவிஞர், சுய நலவாதிகளைக் கண்டு கொதிப்படைகின்றார்.

"தந்நலம் ஒன்றையே தேடுகிறான் - அதைச்
சட்டமென் றாக்கிட நாடுகிறான்"

என்கிறார். "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று முழங்கிய பாரதியும் செத்துவிட்டான். ஆனால் உட்புகுந்த சாதிகள் சாகவில்லை. வேதநெறிகள் திராவிடத்தில் தூளாகும் என்றான் பாவேந்தன். ஆனால் வீதிதோறும் முளைத்துக் கொண்டு தான் வருகின்றது. ஒரு உருவம் இல்லாத கடவுளின் பெயரால், மதச் சண்டை நிகழக் கூடாது என சமுதாயத்தைச் செப்பனிட வந்த பெரியார் மாண்ட பின்பும், எம்மதமும் மாண்டு போகவில்லை. உலகினில் மறுமலர்ச்சி காணவந்த இராமலிங்கரின் அருட்பா நூலைக் கற்கின்றனர். கற்ற வழி நிற்கவில்லை என வேதனையோடு வெம்புகின்றார்.

இளைஞர்களின் நிலையைக் கண்டு நெஞ்சம் புலம்புகிறார். அவர்கள், புதர்முளைத்த செடிகள் போல முடியை வளர்ப்பர். மூக்குக் கண்ணாடியாலே முகத்தை மறைப்பர். தொளதொளவென காலின் சட்டை அடியை மறைக்கும் மேலாடை பூப்பொறித்திருக்கும், மேலும் தன் குடிப்பெருமையை மறந்து தெருவிற் செல்லும் பெண்களை வழி மறைப்பர் என தன் உள்ளக் குமுறலை வெளிப்படுத்தும் கவிஞர் திரைப்படத்தில் நடிப்பவர்களையும், திரைப்படத்தையும் சாடுகின்றார். பண்பாடு கறைபடக் கூடாது என்கிறார்.

"பண்பாடே சீர்குலைந்து போன தென்றால்
படத்துறைதான் முதற்களமாம்"

என்று திரைப்பட மோகத்தைக் கவிதையில் வடித்துள்ளார்.

கவியரசர் காணும் மாணவர்கள்

படிக்கும் மாணவ - மாணவியர் பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் சான்றோரின் சொற்படி நடந்து அறவழியில் செல்ல வேண்டும். படிப்பதற்கேற்ற பருவத்தைப் பாழாக்கி விட்டால் பின் வாழ்க்கை வீணாகிவிடும். கல்விக்காக அரசு பல திட்டங்களை நல்கியுள்ளது. அதனையும் பெற்றோரின் கனவையும் தகர்த்துவிட்டால், பின் வாழ்க்கை முழுமதி தேய்ந்து பேரிருள் கவ்வுவது போன்றாகிவிடும். பண்பாடு காக்காமல் குடித்துச் சீரழியும் மாணவர்களைக் கண்டிக்கிறார்.

"படித்திட வந்த நீவிர் பண்பினை மறந்துவிட்டுக்
குடித்திடக் கற்றுக் கொண்டீர்"

என்கிறார். கல்வியை கசடறக் கற்க வேண்டும் கற்ற வழியில் நிற்க வேண்டும் என்ற வள்ளுவரின் வாக்குக்கேற்ப, திரிபறக் கற்று, தெளிந்த நல்லறிவுடன், மருவிய பணிகளை ஏற்று, மற்றவர் வணிகஞ் செய்தும், அரசியல் சார்ந்தும், அனைத்தும் கற்று வாழ வேண்டும். நாளை நாட்டை ஆள்பவர்கள் பழுதுபட்டால், தேரின் அச்சு முறிந்து விட்டால், தேரின் நிலை என்னவாகுமோ? அதே நிலை தான் என்கிறார்.

கட்டிடத்தின் அடித்தளம் சிதைந்து விட்டால், மண்டபம் எழுப்ப முடியாது. விளையும் நேரத்தில் விட்டில் விழுந்தால் களஞ்சியம் நிரம்பாது. மாணவர்களும் இளமையில் கல் பருவத்தே பயிர் செய் என்பதற்கிணங்க, கற்கும் வயதில் கற்க வேண்டும், அவ்வாறின்றி மனம் தடம் மாறினால் வாழ்வு சீரழியும் என்கிறார்.

மாணவர்கள் உயர்கல்வி கற்று, நாட்டை மேன்மையடைச் செய்ய வேண்டும். படிப்பிற்காக பெற்றோர், அழகு தரும் பொருட்களையும், காடுகளையும் விற்று குழந்தைகளைப் படிக்க வைத்து, அவர்களின் எதிர்காலம் ஒளிமயமாக்க விளைகின்றனர். ஆனால் அவர்களின் பொருட்களை அனுபவிக்கும் மாணவர்கள் பெற்றோரை மகிழ்விப்பதில்லை. மாறாக, ஒப்பனை என்ற பெயரில் முடிகளை வளர்ப்பது, மீசை வளர்ப்பது, எப்பாலினத்தவர் எனத் தெரியாத அளவிற்கு தோற்றமளிப்பது எனத் தங்களையே அலங்கோலம் செய்து கொள்கின்றனர். நலங்காணாத புறக் கோலத்தை

அலங்கரிப்பதை விடுத்து, நலங்காணும் அகக்கோலத்தில் நாட்டம் செலுத்த வேண்டும் என்கிறார். இதனை,

"நலங்கோலம் செய்கின்ற பருவம் ஈது
நாகரிக உடையணியும் பருவம் ஆனால்
அலங்கோலஞ் செய்தன்றோ உலவுகின்றார்."

என்ற கவிதை வரிகள் உணர்த்துகின்றன. படிக்கின்ற பருவத்தில் கல்விக்கு மட்டுமே மனம் இடம் கொடுக்க வேண்டும். அதை விடுத்து உணர்வுக்குத் தீனியிட்டால் தொலையாத துன்பம் தான் மிஞ்சி நிற்கும். ஈரோடு பெரியார், ஈடில்லா கலைஞர் இவர்களின் பெயர் கல்லூரிப் பதிவேட்டில் இடம்பெறவில்லை என்றாலும், பிழையின்றி இவர்கள் கற்ற நூல்களை ஓரேட்டில் அடங்க வைக்க முடியாது. ஆகையால் உலக வரலாற்றில் இடம் பிடித்தனர். அரைகுறை கல்வி கூடாது. நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும்.

"அரசியலைக் கற்றுணரும் ஆர்வம் வேண்டும்
அயல்நாட்டு நடைமுறையுந் தெரிதல் வேண்டும்"

என்கிறார். பருவங்கள் பல உண்டு மாந்தருக்கு. எப்பருவத்தில் எதைச் செய்ய வேண்டுமோ, அவற்றைச் செய்ய வேண்டும். குழந்தைப் பருவத்தில் கட்டாயமாகத் திருமணம் செய்து வைக்க நினைக்கக் கூடாது.

மாணவர்கள் நூலகத்தைப் பயன்படுத்த வேண்டும். உலக அரங்கில் அரசியலில் தனித்து நின்ற இராச கோபாலர். மூதறிஞர் என உயர்ந்தவர். பேரறிஞர் அண்ணா அவர்கள், நிகரில்லாப் பேச்சாளர், பண்பாளர், அவருக்கு ஏணியாகத் திகழ்ந்தது கன்னி மாரா நூலகம் தான். பயனுள்ள நூல்களைக் கற்று பார் போற்ற உயர வேண்டும். அதனை விடுத்து பாலுணர்வைத் தூண்டும் இதழ்களைப் படிக்கக் கூடாது. சிந்தனைக்கு வளர்ச்சி தரும் இதழ்கள், சீர்திருத்த இதழ்கள். பொதுமைக்கு வழிவகுக்கும் இதழ்கள், புத்திக்கு விருந்தளிக்கும் இதழ்கள் என இவற்றை எல்லாம் காலையில் விற்பதற்காகக் கடைவிரித்த கடைகாரர், மாலையில் கடையை மூடிவிட்டார். ஏனெனில் வாங்க எவரும் வரவில்லை என கவிஞர் தன் உள்ளக் குமுறலைக் கவிதை வடிவில் புனைந்துள்ளார். அறிவை விரிவுபடுத்தும் நூல்களை வாங்குவோர் எவருமில்லை என்பதை அறியமுடிகிறது.

நாளெல்லாம் படித்தவைகள் எல்லாம் தேர்வெழுதும் போது மறந்து விடும் போது. நடிகையின் பெயர் மட்டும் நினைவிலிருந்து நீங்குவதில்லை. பெற்றோரும் தன் மக்களின் செயல்பாடுகளைக்

கவனித்து நல்வழிப்படுத்த வேண்டும். பெற்றவர்கள் தூங்கினால், பிள்ளைகள் தவறான வழியில் செல்வர் என பெற்றோர்களையும் விழிப்படையச் செய்துள்ளார்.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பர். தெய்வத்தையே பின்னால் தள்ளும் ஆசானின் பணி அளப்பரியது. மாணவர்களின் அக இருளைப் போக்கி, அறிவொளியைப் பெருக்கிக் காட்டியும், செம்மைப் பண்பை ஊட்டியும் நன்னெறிப்படுத்தும் ஆசானைக் கடவுள் என்கிறார் கவிஞர். அத்தகைய நல்லதோர் பணியிலுள்ளோர் குறுநெறி நடந்தால், சமுதாயத்தின் நிலை என்னவாகும் என்கிறார். வானுயர் பணியிலுள்ளவர் வாழ்ந்திட வழிகள் காட்டாமல், வீழ்ந்திடக் குழிகள் காட்டலாமோ? என்கிறார்.

கருவறை பழுது பட்டாற்
கையினிற் குழந்தை ஏது?

என்று கேட்கிறார். ஓடமே பழுதானால் கரையை அடைவது எங்ஙனம், என வினவுகிறார்.

"பாடங்கள் புகட்டும் பாங்கைப்
பையவே மறந்து போனீர்
கூடங்கள் திறவா வண்ணங்
கூடிநீர் தூண்டி விட்டால்
ஏடுகள் கையிற் கொண்டும்
என்னதான் பயனோ சொல்வீர்"

என்கிறார்.

கவியரசர் முடியரசன் அவர்கள் சமுதாயத்தின் மீது ஆழ்ந்த பார்வை கொண்டவர். நல்ல மாணவர் சமுதாயம் உருவாகி நாட்டின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாகத் திகழ வேண்டுமென ஆவல் உடையவர். இளம் பருவத்து இன்னல்களைப் போக்கி, அறவழியில் வாழ கவிதை புனைந்துள்ளார். அவர்களை வழி நடத்தும் பெரும் பொறுப்பு ஆசிரியர் மற்றும் பெற்றோர்களிடமும் உள்ளது என்பதை வலியுறுத்தியுள்ளார். அவரின் வழியில் நடந்து, சமுதாய வளர்ச்சிக்கு இளைஞர்கள் தூண்களாகத் திகழ வேண்டும்.

முடியரசனின் பூங்கொடியில் தமிழின் சிறப்பு

முனைவர் கு.கண்ணன் *

முடிவுரை

"தோன்றின் புகழோடு தோன்றுக" எனும் பாடலுக்கேற்ப அன்னைத் தமிழ்மொழியின் மகனாய்ப் பிறந்து வாழ்ந்து சிறப்பித்தவர், கவியரசு முடியரசன். உலகில் பல காப்பியங்கள் தோன்றினாலும் கண்ணனைய மொழிக்காக்க மொழிக்கொரு காப்பியம் கண்டவர் கவியரசு முடியரசன். சமயம் வளர்க்க காப்பியங்கள் தோன்றிய முற்காலத்தின் இயல்பை பிற்காலத்தில் தோன்றிய கவியரசு முடியரசன் அவர்கள் நாடு, இனம், மொழி, மக்கள் என முதன்மைப்படுத்தி 'பூங்கொடி' எனும் காப்பியம் படைத்து சிறப்பித்துள்ளார். இக்காப்பியத்தில் முடியரசன் தமிழ்மொழிக்கு அணிவித்த சிறப்புகளை ஈண்டு காணலாம்.

தாய்த்தமிழ்

"யாண்டும் கவிதை யாத்திட முனைவோர்
வேண்டு மளவில் விரிந்திடல் கண்டோம்,
ஆயினும் சிலரே அறிவுடைப் புலவோர் :
தாயினும் மேலாம் தமிழ்மொழி ஓங்கிட
நவையறு கவிதை குவிந்திடல் வேண்டும்".

(பூங்கொடி -ப-120)

தாயினும் மேலாம் தமிழ்மொழி ஓங்கி வளர்ந்திட வேண்டின் புதுமையும், பழமையும், மரபும் மீறாமல் கவிதைகள் புனைந்திட பலரும் குவிந்திடல் வேண்டும். தாயொத்த அன்னைத் தமிழுக்கு நம்முடைய சிறப்புகைள நாளும் கவிதை, காப்பியங்களால் அணிந்திடல் வேண்டும் என்கிறார் முடியரசன்.

" தாயெழிற் றமிழை என்றன் தமிழரின் கவிதை தன்னை
ஆயிரம் மொழியிற் காண இப்புவி அவாவிற் றென்றே"

(பாரதிதாசன் கவிதைகள்-ப-87)

---

* ஆசிரியர், குழுமணி அஞ்சல், திருச்சி

என பாவேந்தன் பாரதிதாசனும் தாயெழிற் தமிழ் எனும் பொழுது, தமிழ் மொழியைத் தாயென விழிக்கின்றார்.

புதுமைத்தமிழ்

"பொருளியல் நூலும் புதுப்புதுப் படைப்பும்
அறிவியல் நூலும் அருங்கவித் திரட்டும்
உளநூல் நிலநூல் உண்மைத் தத்துவம்
பலவர லாறும் படைத்தனள் தமிழில்"

(பூங்கொடி – ப-219)

இன்றைய சூழலில் உலகையே ஆட்டுவிக்கும் பொருளதார நெருக்கடியானது பல நிலைகளை கடந்து போராடிக் கொண்டுள்ளது. இந்நாளும் அறிவியல் புதுமைகளும் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. இலக்கிய உலகில் உலகப்பொதுமறை போன்று பல நூல்களும் மொழி பெயர்க்கப்படுகிறது. தத்துவம், வரலாறு, பொருளியல், அறிவியல், நிலவியல் நூல்களும் தமிழ் மொழயில் படைக்கப்பட்டு தமிழ்மொழி நாளும் புதுமை பூண்டுள்ளது என்கிறார் முடியரசன்.

"ஞாயிறு தமிழ்போல் வாழ்க!
நலம்பல விளைத்தே! அன்புத்
தாயுளம் போல் விளங்கித்
தரையெலாம் வளர்த்து வாழ்க!

(அரிமதியின் உவமைப் பூங்கா -ப-22)

இன்று புதிதாய் பிறந்தோம் எனச் சுட்டும் வண்ணம் ஞாயிறு போல் தமிழ்மொழியும் நாளும் புதுமையுடன் விழித்தெழுந்து தாய்போல் விளங்கி தமிழ் உலகம் வளர்க்க வேண்டும் என்கிறார் புலவர் கு-வை. இளங்கோவன்.

மொழிப்பற்று

அவரவர் மொழியில் உயர்பொருள் காணின்
தவறறப் பெயர்த்துத் தாய்மொழி காக்க!
தாய்மொழி விடுத்துப் பிறமொழி விழைவோர்.
ஆய்வுரை கேட்கின் அவர்செருக் கடக்க!
பிழைபடத் தமிழழைப்பேசியும் எழுதியும்
பிழைப்போர்க் காணின் பேரறி வூட்டி!

(பூங்கொடி-ப-70)

அவரவர் மொழியைப் பிழைறக் கற்றோர் யாவரும் பிழைபடா வண்ணம் உயர்பொருள் காணமுடியும். தாய்மொழியறிவின்றி பிறமொழி

பயின்றோரின் ஆய்வுரையானது முழுமை பெறாமலும் பொருள் சிதைவுடன் தமிழைப் பேசியும் எழுதியும் பிழைப்போரின் பற்றின்மையை உணரவேண்டும். தாய்மொழிப் பற்றானது அவரவர்க்கு இயற்கையிலே அமைதல் வேண்டும். அதுவே நலம் பயக்கும். தாய்மொழிப்பற்றும், தாய்மொழிக் கல்வியும் இல்லாதவர் நிலையானது பிழைபட அமையும் என்கிறார் முடியரசன்.

" கண்ணுடைய ரென்பவர் கற்றோர். முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்" (குறள் - 393)

கல்வி கல்லாதவர்க்கு முகத்திரண்டு துன்பம் தரும் புண்ணுடையர் போன்றோர் என்கிறார் வள்ளுவர் பெருந்தகை.

விருந்தோம்பல்

"யாதும் ஊரே யாவரும் கேளிர் என்
றோதி ஓதி உயர்ந்ததோ டன்றி
வருபவர் தமக்கெலாம் வணங்கி வரவுரை
தருவது தொழிலாய்த் தான்கொண் டதுவே –
(பூங்கொடி–ப-17)

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றான் கணியன் பூங்குன்றன். அவ்வழி கற்று உயர்ந்தது தமிழ்மொழியாம். வந்தாரை வரவேற்று வாழ்வளிப்பது தமிழ்மொழிப் பண்பாடாகும். இதனையே இன்றளவும் பல நாட்டினரும், மாநிலத்தினரும் வணிகம், தொழிலாய் இன்றளவும் புலம் பெயர்ந்து வருவதனை ஏற்கும் விருந்தோம்பல் பண்பினைக் கொண்டதாக தமிழ் விளங்குகிறது.

"பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை" (குறள் - 322)

எனும் குறள் வழி வள்ளுவரும் விருந்தோம்பலை வெளிப்படுத்துகிறார்.

தமிழ் வழிபாடு

"முந்திய மொழிகளுள் மூத்ததே ஆயினும்
மந்திர வலிமை செந்தமிழ்க் குளதோ? "
(பூங்கொடி –ப- 225)

காலத்தால் பண்பாடால், நாகரிகத்தால், மூத்த மொழி என்று கொள்ளும் அறிவுடையோர். தமிழுக்கு மந்திர வலிமை

இல்லையேன்றும், வழிபாட்டு மொழியாக ஏற்புடையதல்ல என்று கூறிய காலத்தில் முடியரசன் பின்வரும் பாடல்கள் வழி மறுப்புரை கூறுகின்றார்.

அரவணி இறைவனை ஆரூர் நம்பி
இரவிடைப் பரவையால் ஏவிய தெம்மொழி ?
இடாங்க ருண்ட இளஞ்சிறு மகனை
உடம்பொடும் உயிரொடும் உய்வித்த தெம்மொழி?
ஒடுங்கிய எலும்பினை உருவெழில் குறைவிலா
மடந்தையின் வடிவா மாற்றிய தெம்மொழி?
அருமறை வினைஞரால் அடைபடு கதவம்
திருமறைக் காட்டில் திறந்ததும் எம்மொழி?
மந்திர வலிமை செந்தமிழ்க் கிலையெனில்
இந்தநல் பெருஞ்செயல் எவ்வணம் இயலும் ?

(பூங்கொடி-ப-227)

மேற்கூறிய பண்டையக்கால வரலாற்றுச் சிறப்புக்களை மேற்கோள் காட்டியும் விளக்கியும், தாங்கள் பன்னெடுங்காலமாக கற்பித்த கல்வியின் வழி வெளிப்பட்ட இந்த நல்லருஞ்செயல்கள் யாவும் எவ்வணம் இயலும், தமிழ் மொழிக்கு மந்திர வலிமையுண்டு என்று முடியரசன் நிறுவுகிறார்.

நிறைவுரை

பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்களில் மூத்தவரான கவியரசு முடியரசன் அவர்கள் தமிழ்மொழி மீது ஆழ்ந்த பற்றும், புலமையும் கொண்டவராவார். இவரது படைப்புகளில் தமிழ்மொழி மீது கொண்ட பற்றினை வெளிப்படுத்தும் விதமாக தாய்த்தமிழ், புதுமைத்தமிழ், மொழிப்பற்று, விருந்தோம்பல், தமிழ்வழிபாடு இவற்றின் தேவை மற்றும் சிறப்புகளை வெளிப்படுத்தும் வண்ணம் பூங்கொடி எனும் காப்பியத்தில் புலப்படுத்தியுள்ள செய்திகளை இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது.

முடியரசனின் தலைமை வகிப்போம்

முனைவர் கா. கணநாதன் *

முன்னுரை

மனிதன் தான் வாழ்ந்து பிறவற்றையும் வாழ்விக்கும் பொறுப்பாளன். இது தான் உண்மை. இயற்கை கூடத் தன் உழைப்பைப் பிறருக்குக் கொடுத்துத் தானும் வாழும் வகைமையில் உள்ளது. ஆனால் இன்று உலகம் முழுவதும் உள்ள பல்வேறு நிலைகளில் தலைமை ஏற்கும் மக்களின் நிலை ஏன் கேள்விக்குறியாகி உள்ளது என்று எண்ணிப் பார்த்தால் விடைகாண முடியாதநிலை உருவாகுகிறது. வாழ்க்கையில் சிறந்துவிளங்கும் கருத்தாக ஒன்று தமிழர்களிடம் வழங்கிவருகிறது. **"உயிரை விட மானமே பெரிதென"** வாழ்ந்துள்ளனர் தமிழர்கள். தமிழ் பிறருக்குக் கொடுத்து அவர்களின் முகமலர்ச்சியைக் கண்டு தாம் முகமலர்ந்த நிலை, இலக்கியங்களில் காணப்படுகின்றது. நம்பிக்கை மூலமாக, மக்களைப் பண்படுத்தி மனம் செம்மையுற மானத்தோடு வாழ்ந்துள்ளனர். மாறாக இன்றுசுரண்டலும்,பதுக்கலும் விதிகளென இயற்றிவாழும் தமிழினத் தலைமை வகிப்போரை எவ்வாறெல்லாம் சாடுகிறார் கவிஞர் என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பழமொழியும் தலைமைப்பண்பும்

உலகத்துப் படைப்புகளில் மனிதன் உயர்ந்தவன், அரியவன், பெருமைக்குரியவன் என்றதன் அருமையை அறிந்து வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

"காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளவேண்டும்" என்று கூறுவதை அறநெறியில் நிற்க வேண்டும், ஆக்கம் புரிதல் வேண்டும், அழித்துக்காட்டும் பழிவாங்கும் வினைகடிதல் வேண்டும். மாண்பொருள் சேர்த்தல் வேண்டும். மனதை ஒருநிலைப்படுத்தி இறைவனைச் சிந்திக்க வேண்டும். தக்க சூழ்நிலை வரும்பொழுது பயன்படுத்தி வாழ்க்கையைச்

---

* உதவிப்பேராசிரியர், தமிழ்ப் பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி -3.
(இந்தக் கட்டுரை ரூசா - கட்டம் 2.0 (நிதி ஒப்புதல் கடித எண்: F.24-51/2014-U, Policy (TNMulti-Gen) கல்வித்துறை, இந்திய அரசு, நாள்:09.10.2018) நிதியுதவியில் எழுதப்பெற்றது.)

செம்மையுடையதாக ஆக்கிக் கொள்ளவேண்டும் என்னும் அரியத் தத்துவத்தை இப்பழமொழி உணர்த்துகிறது.

இதைத் தவறாகப் புரிந்துகொண்ட தலைமை ஏற்போர் இப்பொழுதே ஏழ்பிறப்பிற்கும் செல்வம் சேர்க்கவேண்டும் என்று எண்ணியும், மேலும்,

"பதம் கெட்டகழுதையைப் பல்லாக்கில் ஏற்றினால்
இதம் கெட்ட இடமெல்லாம் இறக்கிவிடச்சொல்லுமாம்"

என்ற பழமொழிக்கு ஏற்றவாறு தகுதி இல்லாதவர் தலைமைப் பதவிக்கு வந்தால் எவ்வளவிற்கு கீழ்த்தரமாக நடந்துகொண்டும், கறும்பொருள் ஈட்டுகின்றனர் என்பது இன்றைய நிலையாக உள்ளது. இதை மின்னஞ்சல் பணப் பரிமாற்றமாக, பட்டப்பகல் கொள்ளையைக் கொள்கையாக கொண்டுள்ளனர் என்றால் மிகையில்லை. இவர்களுக்கு பல்வேறு விருதுகளும், பாராட்டுகளும் அரங்கேற்றம் செய்யப்படுகின்றன. இவற்றை எல்லாம் மக்கள் சக்தி ஒன்று கூடி மறுக்கும் காலம் கவிஞர் முடியரசனார் கவிதைகள் மூலம் வெகுவிரைவில் வரும் என எதிர்பார்ப்போம்.

சுரண்டலும் பதுக்கலும்

சுரண்டலும் பதுக்கலும் ஒழிப்போம்- அதற்குத்
துணைவரும் பகைதனைஅழிப்போம் (த.வ.பா.வ.1-2)

கவர்தல் என்பது சுரண்டலின் பொருண்மையாகும். மறைத்தல் என்பது பதுக்கலின் பொருள். இவற்றை முழுமையாக ஒழிக்கவேண்டும். ஒரு நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்போர் தாம் உள்ள காலம் வரை அச்சாணியாகவும் ஆணிவேராகவும் இருக்கவேண்டும். மாறாக தேனீக்கள் சேர்த்து வைத்த தேனை எவ்வாறு தீவைத்து தேனீக்கள் பலவற்றை கொண்டு பொசிக்கி மீதியை விரட்டி அடித்து தேனடையைக் கசக்கிப் பிழிவது போல் செய்து விடுகின்றனர். இதற்கு ஆட்சியாளர்களையும் அடியாட்களையும் துணையாகக் கொண்டு செயல்படுகின்றனர். இதைக் கவிஞர் முடியரசனார் சுரண்டலும் பதுக்கலும் ஒழிப்போம் அதற்குத் துணை வரும் பகைதனை அழிப்போம் என்கிறார்.

பாவேந்தர் பாரதிதாசனோ, "கொலைவாளினை எடடாமிகு கொடியோர் செயல் அறவே" என்கிறார். சுரண்டலும் பதுக்கலும் செய்து

பிழைப்பவரை பழிப்போம் என்றால் குறை செய்தவர் குற்றம் புரிந்தவர் என்போம் என்கிறார். இவர்களை ஒழிக்க புதிய சட்டம் இயற்றப்படவேண்டும் என்கிறார் கவிஞர்.

மனிதஉழைப்பு

> **"மனிதனை உழைப்பினை மதிப்போம் -கொடிய**
> **வறுமையை இடரினை மிதிப்போம்"** (த.வ.பா.வ.5-6)

மனிதனின் உழைப்பினை மதிக்க வேண்டும். கொடிய வறுமையையும் இடரினையும் மிதிக்கவேண்டும் என்கிறார் கவிஞர். மேலும் இனிய நல்ல உலகத்தை உருவாக்குவோம் இதற்கு தடையாக வரும் தடைகள் எதுவானாலும் உடைப்போம் என்கிறார்.

> **"கொலையின் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்**
> **களைகட் டதனொடு நேர்"** (குறள் 550)

எனத் திருவள்ளுவரும் வலியுறுத்துகிறார் வயல்களில் வேலைகள் பலவும் செய்யவேண்டும் அதில் இருந்து வருகின்ற பயன்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளவேண்டும். துன்பம் இல்லை என்று கடிதம் எழுதுவோம். வயல்களில் விளையும் பொருள்களையே உண்ணுதல் வேண்டும் என்கிறார் முடியரசனார்.

இயந்திரங்களுக்கும், தறிகளுக்கும் முன்னுரிமை கொடுத்து ஆடை பலவும் நெய்வோரை வளர்ச்சியடையச் செய்ய வேண்டும். அதில் புதிய சட்டநெறிமுறைகளை உருவாக்கித் தந்து உழைப்போம் என்கிறார் முழுமையான மாட்சிமை பொருந்திய பொருள்களை விளைவிக்க வேண்டும் நம் நாட்டின் நிலை உலகினில் உயர்ந்து சீரும் சிறப்புப் பெற்று வளமுள்ள நாடாக விளங்கவேண்டும்.

கடவுள் கொள்கை

> **"கடவுளை விதியினை மறுப்போம் - தூய**
> **குடமையை உரிமையை மதிப்போம்"** (த.வ.பா.வ.13-14)

செல்வந்தர், வறுமையாளர் என இருக்க வேண்டும் அதுதான் உலகினில் விதியென உள்ளதை மாற்றவேண்டும் என்கிறார். இழிந்தோர், உயர்ந்தோர் பிறப்பால் இருப்பார்கள் என்றும் இது கடவுளின் செயல் எனக் கூறுவார்கள். எனவே தலைமை வகிப்போர் தெய்வத்தையும் ஊழ்வினையையும் மறுக்கவேண்டும் என்கிறார் கவிஞர். கடமையை

உரிமையை மதிப்போம். அறிவின்மையையும், அடிமைத் தன்மையையும் வெறுக்கவேண்டும். நல்ல இயற்கைஅறிவு, தெளிவுமேலும் அறிவுடையோராக விளங்கவேண்டும் என்கிறார் கவிஞர்.

புதியஉலகு

புதுமுறை உலகினைப் படைப்போம்-அங்கே
பொதுமையில் அறநெறி விரிப்போம். (த.வ.பா.வ.25-26)

சுரண்டல், பதுக்கல், வறுமை, துன்பம் நீங்கிய நமது உழைப்பில் வரும் உணவுகளை உண்ணுகின்ற, உடை உடுத்துகின்ற சமுதாயத்தைப் படைக்கவேண்டும் என்கிறார். பொதுத்தன்மையில் அறத்தையும் விரிவாக்குவோம். பிறருக்கு உதவிடும் மனத்தோடு சிறக்க வேண்டும். அனைவரும் ஒருசரிசமம் என இருக்கவேண்டும்.

சோர்வைப் பகை எனத் தகர்க்க வேண்டும். தினந்தோறும் தத்தம் கடமையைச் செய்து உயர்வுபெறுவோம். பக்கத்தார் கவர்ந்து கொண்டால் அவர்களை அழிப்போம், கொல்லுவோம், வெல்லுவோம் என்கிறார் கவிஞர் முடியரசனார்.

முடிவுரை

கொள்கையிலேயே சமரசங்கள் செய்ததில்லை, குப்பைக்கும் பொன்னாடை நெய்ததில்லை, சொல்வேறு செயல்வேறாய் வாழ்ந்ததில்லை என்ற மேத்தாவின் வரிகளுக்கு ஏற்ப திராவிடக் கொள்கையில் பிடிப்பும், தகுதி அற்றவரை எந்நிலையிலும் பாடி விருதுபெறாப் பண்பினர். ஆகவே கவிஞர் முடியரசனார் கொள்கையில் தலைமை வகித்து புதிய உலகைப் படைப்போம் எனச் சூளுரைப்போம்.

துணை நூற்பட்டியல்

1. பாடுங்குயில் கவிதை நூல் எண் 4, தலைமைவகிப்போம். கவியரசர் முடியரசன் கவிதைகள், பதிப்பாசிரியர்-பாரிமுடியரசன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 600 108
2. பாரதிதாசன்-கவிதைகள்
3. திருக்குறள் - தெளிவுரை, ச. பாலசுந்தரம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 600 017 பதிப்பு - 2000

வாழ்வியல் நெறியுணர்த்தும் வீரகாவியம்

சே. கண்மணி *

முன்னுரை

கவியரசர் முடியரசன் 20 ஆம் நூற்றாண்டுக் கவிஞர்களில் முடிசூடா மன்னனாய் வாழ்ந்தவர். 'கவிப்பேரரசர்' என்று கலைஞர் கருணாநிதி அன்புடன் அழைத்த பெருமைக்குரியவர். கவிஞர் கண்ணதாசன் 'தாய்த் தமிழே அவர் முடியை உனக்குத்தான் சாய்ப்பார்' என்று முடியரசனாரின் தமிழ்ப்பற்றை எடுத்துக்காட்டிச் சிறப்பித்துள்ளார்.அறிஞர்களும்சான்றோர்களும் புகழ்ந்து போற்றிய அறிஞர் கவிஞர் முடியரசனார்.

பாட்டரசர் முடியரசர் படைத்த நூல்கள் பற்பல. படிக்கப் படிக்க இன்பம் பயப்பன அவரது கவிதைகள். ஆயினும் என்னைக் கவர்ந்த நூல் வீரகாவியம் என்ற காப்பியமாகும். தமிழர்களின் வாழ்வியல் நெறியைக் காட்டுவது வீரகாவியம். காதலும் வீரமும் கலந்த காவியம். நாட்டுப்பற்றையும் மொழிப்பற்றையும் நயத்துடன் நல்கும் நற்றமிழ்க் காவியம்.
இக்காவியம்,

1. காட்சிப் படலம்
2. திருமணப் படலம்
3. மகப்பெறு படலம்
4. படையெழுச்சிப் படலம்
5. போர்ப் படலம்

என்று ஐந்து படலங்களைக் கொண்டுள்ளது. பதினெட்டு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. காதற்சுவை, வீரச்சுவை, தமிழ்ச்சுவை என்று பல்சுவைக் காவியமாகத் திகழும் வீரகாவியத்தை இக்கட்டுரையின் வழிக்காணலாம்.

---

* தமிழ்த்துறைத் தலைவர், சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர்க் கல்லூரி, மதனாங்குப்பம், சென்னை-99.

வீரகாவியத்தில் காதற்சுவை

அகமும் புறமும் கலந்த வாழ்வு தமிழர் வாழ்வு. நம்முன்னோர் அகத்தில் அன்பும் புறத்தில் வீரமும் கொண்டு இனிய வாழ்வை நடத்தினர். இவ்வீர வாழ்வை முடியரசனார் தம் வீரகாவியத்தில் வெளிப்படுத்தியுள்ளார். காவியத்தின் தலைவனான மாவேழன் மூவக நாட்டின் படைத்தலைவன். தன் நாடான மூவகநாட்டு மன்னனிடம் கோபம் கொண்டு அந்நாட்டை விட்டுச் செல்கிறான். செல்லும் வழியில் களைப்பால் ஆலமர நிழலில் துயில்கிறான். அப்பொழுது அங்கு வந்த வயந்த நாட்டு வீரர் சிலர் மாவேழன் ஏறி வந்த குதிரையைக் கவர்ந்து செல்கின்றனர். விழித்தெழுந்த மாவேழன் தன் குதிரையைக் காணாது கலங்குகிறான். பகைவர்கள் குதிரையைக் கவர்ந்து சென்றதை அறிகிறான். குதிரையின் காலடித் தடம் கண்டு அதன் பின்னே சென்று வயந்தநாட்டை அடைகிறான். மிகச்சிறந்த வீரனான மாவேழன் தன்நாட்டிற்கு வந்திருப்பதைக்கேள்விப்பட்ட வயந்தரசன், அவனைக் காண வருகிறான். சினத்துடன் வரும் மாவேழனின் சினம் தணித்து அவனைத் தன் நாட்டிற்கு விருந்தினனாக அழைத்துச் செல்கிறான்.

அங்கு வயத்தரசனின் மகள் வேல்விழி மீது காதல் கொள்கிறான். திருமணமே வேண்டாம் என்றிருந்த வயந்த நாட்டு இளவரசியும் மாவேழனை விரும்புகிறாள்.

> "செம்புலப் பெயர்நீர் போல
> அன்புடை நெஞ்சம்தாம் கலந்தனவே"

என்று குறுந்தொகைப் பாடல் குறிப்பிடுவதைப் போல அன்பில் பிணைந்தனர். அவர்களின் அன்புப் பிணைப்பைக் கவிஞர்,

> "ஈவாருங் கொள்வாரும் இங்கே இல்லை
> உரிமைதனைக் கொள்வதற்கோர் தடையு மில்லை
> பூவாருங் கொடிக்குரியை நீயே என்று
> பூண்டுள்ளேன் ஓருறுதி கண்ட ஞான்றே
> நீவேறு நான்வேறென் றெண்ண வில்லை
> நீங்கியது நானெனதென் றெண்ண மன்றே!"

என்று வேல்விழியின் கூற்றாகப் பாடியுள்ளார். மேலும் வீரமிக்க மாவேழன்,

"வாளுக்கும் வேலுக்கும் தோற்ற தில்லை
வட்கார்தம் வில்லுக்குந் தோற்ற தில்லை
நீளக்கண் வேலுக்குத் தோற்று விட்டேன்
நீயுரைத்த சொல்லுக்குத் தோற்று விட்டேன்' என்றான்"

என்று வேலுக்கும், வில்லுக்கும் தோல்வியுறாத தான் வேல்விழியின் வேல்போன்ற விழிக்குத் தோற்றதாக நயத்துடன் குறிப்பிடுகிறார்.இருவர்தம் காதலைக் கேள்விப்பட்ட வயத்தரசன் மிக மகிழ்ந்து மணம் செய்ய உடன்பட்டான். இதனால் மனம் மகிழ்ந்த வேல்விழியின் மனநிலையை,

"தான்விழைந்த மணமகனே கிடைத்து விட்டான்
தனைப்பெற்றோன் மறுப்பொன்றும் உரைக்க வில்லை
மான்விழைந்த பார்வையினாள் மனம்போல் வாழ்வு
வாய்த்தமையாற் பூரிப்புக் கொண்டு நின்றாள்
மீன்வளைந்து விளையாடும் குளிர்த டத்துள்
மேவுமெழிற் றாமரைபோல் மலர்ந்திருந்தாள்
தேன்விளைந்த காதலிலே வெற்றி கண்டால்
தெரிவையர்க்கு மேலுமொரு பேறும் உண்டோ?"

ஏன்ற வரிகளில் உணர்த்துகிறார். இவ்வாறு காதலியின் மகிழ்வைக் காட்டிய முடியரசனார், மாவேழன், வேல்விழி இருவரின் அகவாழ்வு,

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது."

என்ற வள்ளுவர் வாக்குப்படி அமைந்ததாகக் காட்டுகிறார் கவிஞர்.

வீரகாவியத்தில் வீரச்சுவை

சங்ககாலத்தில் புறவாழ்வுக்கு அடிப்படைத் தேவை வீரமாகக் கருதப்பட்டது. சங்கத் தமிழ் வீர மறவனான மாவேழனின் வீரத்தைக் கூறும்பொழுது,

"…. வேந்த ரெல்லாம்
வீரனிவன் பெயர்கேட்பின் நடுங்கி நிற்பர்
வெலற்கரிய வலியுடையான்: களிறு சூழ்ந்து
பாரதிரப் போரெதிர்ந்து வரினும் அஞ்சான்
பாய்ந்தவற்றைப் பரபரவென் றிழுத்துச் சாய்த்து
காரதிரும் இடியேறென் றார்த்து நிற்பான்
கட்டழகும் கட்டுடலும் ஒருங்கே பெற்றான்"

என்று காட்டுகிறார் கவிஞர். மாவேழன் தன்நாட்டு மன்னனிடம் சினம் கொண்டு வேற்று நாட்டிற்குச் சென்றாலும் தன்நாட்டின் மீது பகையரசனாகிய நாவல நாட்டு வேந்தன் பெருங்கனகன் படையெடுத்து வந்துள்ளான் என்பதைக் கேள்விப்பட்டவுடன் தன் நாட்டிற்கு விரைந்து செல்கிறான். இக்காட்சி

"உறின், உயிர் அஞ்சா மறவர், இறைவன்
செறியினும், சீர் குன்றல் இலர்."

என்ற வள்ளுவர் கூற்றுப்படி வீரன் மாவேழன் வாழ்வதைக் காட்டுகிறது.வீரன் மாவேழனின் வீரத்துடன் தன்நாட்டின் மீது மிகுந்த பற்றுக் கொண்டுள்ளதைக் கவிஞர்,

"புகழுக்குப் போர்புரியச் செல்வே னல்லன்
புரிகின்ற காதலினும் கடமை ஒன்றே
மகனுக்குப் பெரிதாகும் பிறந்த மண்ணின்
மானத்தைக் காப்பதென்றன் கடமை யாகும்
இகழ்வுக்குத் திருநாட்டை விட்டு விட்டால்
எனையன்றோ எள்ளிநகை யாடி நிற்பர்!
தகைமிக்க தாயைமறந் தாலும் பிள்ளை
தாய்நாட்டை மறப்பதொரு கொடுமை யன்றோ?"

என்ற வரிகளின்வழி மாவேழன் உரைப்பதாகக் காட்டியுள்ளார். தாய்நாட்டைக் காக்கக் கருவுற்ற தன் மனைவியைப் பிரிந்து சென்ற மாவேழன்தன் நாட்டிலேயே தங்கி விட்டான். வேல்விழிக்கு ஆண் குழந்தை பிறக்கிறது. குழந்தையின் தளிர் உடலைத் தழுவி மகிழ்வதை,

"கற்றுணர்ந்த சான்றோரின் பாட லுக்குள்
கரந்திருக்கும் உட்பொருளை உணர்ந்தார் போல"

என்று கற்றுணர்ந்த சான்றோராய் உவமை காட்டியுள்ளார். தன்மகனையும் போர்க்களத்திற்கு அழைத்துச் சென்றுவிடுவானோ என்று அதனை மறைத்து அவள் பெண் குழந்தை பிறந்திருப்பதாக அவனுக்குத் தகவல் அனுப்புகிறாள். அவனது ஆண்மகனான முறுவலன் சிறந்த வீரனாக வளர்கிறான். அவனின் வீரத்தை,

"காட்டுகின்ற பெருவலியால் கார்மு ழக்கால்
கண்டவர்தம் கோளரிஎன் றழைக்க லுற்றார்"

என்று கூறி,அவனின் வீரத்தைப் பலரும் புகழ்ந்து கோளரி என அழைத்ததாகக் குறிப்பிடுகின்றார். தந்தை யாரெனத் தன் தாயிடம் கேட்டு, தன் தந்தைக்குத் துணையாக போருக்குச் செல்கிறான். தந்தையை நேரில் பார்க்காத காரணத்தால் பகைவர்களின் சூழ்ச்சியால் போர்க்களத்தில் தந்தையும் மகனும் எதிரிகளாகப் போரிடுகின்றனர். தன்னுடன் போர் செய்யும் வீர இளைஞனின் வீரத்தையும் ஆற்றலையும் கண்டு வியக்கிறான் மாவேழன். போரில் மாவேழன் தன் மகனுடன் போரிடுகிறோம் என்பதை அறியாமலேயே மகனைக் கொல்கிறான். தன்னுடன் போரிட்டவன் தன் மகன் என்பதை அறிந்து தானும் தற்கொலை செய்து கொள்ளத் துணிகிறான். அதனை மாவேழனின் மகன் கோளரி தடுத்துத் தன் தாயைக் காப்பாற்றுமாறு வேண்டுகிறான். ஆனாலும் தன் மகனைத் தானே கொன்றுவிட்டோம் என்ற குற்றவுணர்ச்சியும் ஆற்றாமையும் மேலிட உயிர்விடுகிறான் மாவேழன். கணவனும் மகனும் போர்க்களத்தில் மாண்டதை அறிந்த வேல்விழி தானும் மடிகிறாள்.

முடிவுரை

வீரகாவியம் முழுமையும் சங்க இலக்கிய வாழ்க்கை முறையைக் காட்டுவனவாகப் படைத்துள்ளார். காதல், பிரிவு, பிரிவுத் துயரம், இல்லறக் கடமை, வீரம், போர், அரசியல், சூழ்ச்சி, மொழிப்பற்று, நாட்டுப்பற்று எனப் பல நிகழ்வுகளை உள்ளடக்கியதாகக் காப்பியக் கூறுகளோடு படைத்துள்ளார். இலக்கியச் சுவையான பா நலன், அணி நலன், உவமை, கற்பனையாற்றல், மொழிநடை என அனைத்தும் காவியத்திற்கு அழகு சேர்த்துப் படிக்கத் தூண்டுகிறது.

முடியரசன் கவிதைகளில் பாடுபொருள்

க.கலைச்செல்வி *

முன்னுரை

பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வந்த ஏற்றமிகு கவியரசர் முடியரசர் இருபதாம் நூற்றாண்டில் இணையற்ற மரபுக் கவிஞராய்த் திகழ்ந்த பெருமையுடையவர். இவர்தம் கவிதைகளில் பாடுபொருள் பரந்துபட்டது. இயற்கை, சமூகம் என்னும் இரண்டையும் இருகண்களாகக் கொண்டது. எனவே முடியரசனாரின் கவிதைகளில் காணலாகும் பாடுபொருள் குறித்துக் காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இயற்கை

கவிஞர்களின் வாழ்விடம் இயற்கையாகும். இயற்கையைப் பற்றிப் பாடாத கவிஞர்களேயில்லை எனலாம். அந்த வகையில் முடியரசர் இயற்கையைத் தாயாகப் பாவித்து "இயற்கைத் தாய் தென்றலென்னும் தொட்டிலில் என்னைக் கிடத்தி தமிழ்பாடும் வண்டொழியால் தாலாட்டுப் பாடுவாள். பாதி உறக்கத்தில் அழுதால் ஆறு, குன்று, அருவி, கடல், மலர் ஆகியவற்றை வேடிக்கைக் காட்டிக் கொஞ்சுவாள். காலையில் சூரியனின் ஒளியைக்காட்டி உறக்கத்திலிருந்து எழுப்புவாள். ஆறு எனும் கைநீட்டி குளிக்க அழைப்பாள். அமைதியாகயிருந்தால் இடியொலியால் அதட்டி மழைத்துளியால் நனைத்து மின்னலாய்ச் சிரிப்பாள். குளிர்மிகுந்து நடுக்கமுற்றால் ஞாயிறு எனும் ஒளி நெருப்பைக் கொணர்ந்திடுவாள். குளிர்காய்ந்தபின் மலர்கள் பறித்து வந்து சூட்டுவாள் என்று பாடுவர்." (முடி.க.பக்.40-41)

இயற்கையின் சீற்றம்

இயற்கைத்தாய் தன்னைத் தாலாட்டியதைப் பாடிய கவிஞர் இயற்கையின் சீற்றத்தையும் பாடுபொருளாக்கியுள்ளார். "இயற்கை அரசி உலா வருவதைக் கண்டு விளக்கு கம்பம், வீதியில் நின்ற தந்திக் கம்பம், கம்பியால் எடுத்த தோரணம், வீடுகள் எல்லாம் தலை வணங்கியது. உயர்பெரு மரங்கள் உச்சியை அசைத்து நெடுக

* முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்ப் பண்பாட்டுமையம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி -3.

வீழ்ந்தது. புள்ளினம் எல்லாம் மருண்டது. ஓடுகள் எல்லாம் மலரென வீழ்ந்தன. சிற்சில குடிசைகள் சிதறி வானில் வாணவேடிக்கை காட்டின. ஊரெலாம் பேரொலி ஓங்கி உயர்ந்தது. உயிர், கை, கால் இழந்தோர் கதறும் அழுகுரல் கேட்டது. வீடு, ஆடு, மாடு இழந்தோர் கூக்குரலும், அண்டையில் நின்ற மரங்கள் அனைத்தும் தம் சிறு குடில்களை அழித்ததை எண்ணி மக்கள் சீற்றம் கொண்டு துண்டு துண்டாய் வெட்டிய பேரொளியும், எங்கும் சிதைந்து அழிந்து போர்க்களம் போல் காட்சியளித்தது. எல்லாத்தை இழந்த மக்களின் கண்ணீர் மழைநீரில் கலந்து வெள்ளமாய் ஓடின" எனப் பெரும் புயலால் சேதமடைந்த மக்களையும் அவர்கள் படும் வேதனையையும் கண்முன் காட்சிப்படுத்துகிறார். இயற்கையின் அழகினை மட்டுமன்றி துயரத்தையும் கவிதையாக்கியுள்ளமை சுட்டுதற்குரியது.

கடல்

முடியரசனார் கடல் இயல்பான நிலையில் மக்களுக்கு தெய்வமாகவும், காதலர்களுக்கு இன்பமாகவும் இருத்தலைப் பல கவிதைகளில் விளக்கியுள்ளார். மனிதர்களில் சிலரை நல்லவர் கெட்டவர் எனப் பாகுபாடு செய்வார்கள். தீமை செய்பவர்களை கவியரசர் சுறாவாகவும், திமிங்கலமாகவும் ஒப்புமை செய்கின்றார். "கடலே! உன்னிடத்தில் இருக்கும் முத்தையும் பவளத்தையும் மனிதர்களுக்குக் கொடுக்கிறாய். அவர்கள் உண்பதற்கு உணவாக மீனைக் கொடுக்கிறாய். ஆனால் அதேசமயம் உன்மீது செல்லும் கப்பல்களைப் பாழாக்குவதற்கு பொல்லாத திமிங்கலத்தையும், சுறாவையும் வைத்திருக்கிறாய் என்கிறார்.

தன் வளங்களையெல்லாம் மனிதர்க்கு அள்ளி வழங்குகின்ற அதே கடல் தான் சில வேளையில் சீறிப்பொங்கி அனைத்தையும் பாழாக்குவதை,

"அன்றிழைத்த தீமையெலாம் போதாவென்
றாவினங்கள் உயிர்போய் மாள
நின்றிருந்த உயர்மரங்கள் வீடெல்லாம் நிலை" (முடி.க.ப.58)

என்றுரைப்பர். சிறார்களின் குறும்புச் செயல்கள் அனைத்தும் காண்போரை வியக்கவைக்கும். குழந்தைகள் கடற்கரையில் விளையாடும் போது மண்ணில் கிளறி விளையாடுவர். இதை முடியரசனார் நண்டுகள் கடற்கரையில் கோலமிட்டதாகக் காட்சிப்படுத்துகிறார்.

மொழிப்பற்று

முடியரசனார் தாய்மொழிப் பற்றாளர். எந்த மொழிக்கும் இல்லாத ஆற்றல் நம் தமிழ்மொழிக்கு உண்டு என்பதை,

"முதலோடு முடிவில்லாப் பெருமை நான்கு
மொழிபெற்றும் மூப்பில்லா இளமைத் தன்மை
அதனோடு மிகுமினிமை காலஞ் சொல்ல
அமையாத பழந்தொன்மை தனிந்தியங்கி
உதவுநிலை வளர்பண்பும் எளிமை யாவும்
உயர் தனிச்செந் தமிழுக்கே உண்டாம் மேலும்
புதுமைபெற முடிசூடி அரசு தாங்கப்
புலவரெலாம் இளைஞரெலாம் உறுதி கொள்வீர்!"
(முடி.க.ப.37)

என்னும் கவிதையில் எடுத்துரைப்பர். வயலுக்கு எப்படி வரப்பு முக்கியமானதோ அதுபோல மொழித்தூய்மை இல்லையேல் மொழியைக் காக்கவியலாது என்பதையும், மொழியைக் காக்கும் வரம்பில்லையேல் எம்மொழியும் அழிந்துபோகும்" என்று மொழிகாத்தலின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பர்.

குயிலினமும் பசுங்கிளிகளும் தத்தம் தாய்மொழியிலே பாடுகின்றன. மனிதர்கள் நாமும் நம் தாய்மொழியில் பேசிப்பாடிட வேண்டுவதை,

"படித்திடுக எனச் சொல்லிக் குயிலினங்கள்
பசுங்கிளிகள் இவற்றைத் தந்தாள்
பிடித்தவற்றைப் பார்க்கையிலோர் அறங்கண்டேன்
பேசுமொழி சொந்த மேயாம்
அடுத்தவற்றின் குரலல்ல நீயுமுன் றன்
அனைமொழியால் பேசு! பாடு!
தடுப்பவர் யார்? என்றன அவ்வேடுகள் தாம்
தாயே தாய் மொழியே வாழ்க" (முடி.க.ப.40)

என்னும் கவிதையடிகளில் எடுத்துரைத்துள்ளார்.

சாதி மறுப்புச் சிந்தனை

'புதுமைப்பெண்' எனும் கவிதையில் "தலைவியின் உடல் உளமாறுபாடுகளைக் கண்டு ஐயுற்ற வினவிய தோழியிடம் தலைவி தான் காதலுற்றதைத் தெரிவிக்கின்றாள். அதற்குத் தோழி உன் காதலால் பொல்லாப்பு வந்துவிடும், தீதுபல நேரும், தேசத்தார்

தூற்றிடுவர், மணப்பதற்கு மாமன் மகனிருக்க வீணாகப் பிறரை விரும்பாதே மறந்துவிடு என எச்சரிக்கிறான். தலைவி காய்ச்சும் இரும்பு கவர்ந்திட்ட நீர் போல என்மனம் தலைவனிடத்தில் ஆயிற்று. நாட்டவர்கள் காதல் நல மறியாதவர்கள், வீட்டார்கள் சொல்லுகின்ற புல்லுரைக்கும் வெற்றுரைக்கும் நான் அஞ்சேன். உள்ளம் விரும்பி ஒருவரை விட்டுவிட்டு வேறொரு மனம் செய்யமாட்டேன் என்று சூளுரைத்தாள்" என்பதில் சாதியை ஒழிக்க காதல் மணங்களால் மட்டுமே முடியும் என்னும் முடியரசனாரின் கருத்து வெளிப்படும்.

முடிவுரை

மனிதனின் உணர்ச்சிகளை ஆட்சி செய்யும் அரசர்கள் கவிஞர்கள் என்பர். அவ்வகையில் கவியரசர் முடியரசனின் கவிதைகள் அனைத்தும் படிப்பவர் மனங்களையும் உணர்ச்சிகளையும் தட்டி எழுப்பி எழுச்சியூட்டும் திறத்தனவாய்த் திகழ்கின்றன. அதற்குக் காரணம் அவர் கவிதைகளின் பாடுபொருள் எனில் அது மிகையாகா.

முடியரசன் போற்றிய முத்தமிழ் அறிஞர்

முனைவர் மு.கலைவேந்தன் *

கவியரசர் முடியரசன் காலத்தை வென்ற கவிமுரசு; காவியம் பலபடைத்த கவிஞரேறு; திராவிட இயக்கச் சிந்தனைகளைக் கவிதை வழியில் மக்கள் மனதில் பதியஞ் செய்தவர்; தமிழ் மொழியின் செந்நெறி மாண்பினை உலகறியச் செய்தவர்; ஆயிரமாயிரம் கவிதைகளை அழகுத்தமிழில் பாடியவர்; ஆற்றொழுக்காக எதுகை, மோனை எழில்திறத்தால் வளமார்ந்தக் கவிதைகளைத் தந்த சீர்திருத்த வானம்பாடி; எந்தச்சூழலிலும் கொள்கைகளை விட்டுக்கொடுக்காத வீறுமிக்கக் கவிஞர்; இனிமையான கவிவளத்தால் ஏற்றமிகு கவிதைகளைத் தந்த கவிஞாயிறு முடியரசன், கலைஞரின் பேச்சாற்றலையும் எழுத்தாற்றலையும் பல்துறை ஆற்றலையும் வியக்கும் வண்ணம் பாடிய ‘அழகின் சிரிப்பில் கலைஞர்’, என்ற தலைப்பில் கூறியுள்ள கவிதையில் காணலாகும் கவியாற்றலையும் கலைஞரின் சிறப்புகளையும் அனைவரும் அறியும் வண்ணம் ஈண்டு உணர்த்தப்பட்டுள்ளது.

கலைஞர் வளர்ந்த முறை

கலைஞர் மு.கருணாநிதி இளமையில் வளர்ந்த முறைப்பற்றியும் தாய் தந்தையரின் அரவணைப்பில் வளர்ந்ததையும், பெரியாரின் பாசறையில் பயின்றமையினையும், அண்ணாவின், பண்புகளைப் பெற்றுக் கொண்டமையையும் கவியரசர் முடியரசன் கூறியிருப்பது எண்ணத் தக்கதாகும்.

“அஞ்சகத்தின் மடி வளர்ந்தாய், முத்து வேலர்
அகம்மகிழ நடைபயின்றாய், ஆரூர்ப் பள்ளிப்
பிஞ்சுமனத் தோழருடன் கல்வி கற்றாய்,
பெரியாரின் ஈரோட்டுப் பள்ளி சென்று
நெஞ்சுரத்தைச் சிக்கனத்தைக் கற்றுக் கொண்டாய்
நெகிழ்ந்துருகும் அண்ணாவின் கருணைமிக்க
நெஞ்சத்தைக் காஞ்சியிலே பெற்றுக்கொண்டாய்

* நிறுவனர், அனைத்துலகத் தமிழ்க் கவிஞர் மாமன்றம், ஔவைக்கோட்டம், திருவையாறு.

நெருக்கடியில் சிரிப்பதற்கு யாங்குக் கற்றாய்”?

கவியரசர் முடியரசனின் இக்கவிதை வரிகளால். பெரியாரிடம் நெஞ்சுரத்தையும் சிக்கனத்தையும், அண்ணாவிடம் கருணை உள்ளத்தையும் கலைஞர் பெற்று அச்சமிலா அரசியல் வாழ்வில் கலக்கமற்று நடத்திய மாண்பினை அறிந்துகொள்ள முடிகிறது.

கலைஞரே காவல் அரண்

கலைஞர் தமிழுக்கும் தமிழர்க்கும் தமிழகத்திற்கும் பாதுகாப்பாக விளங்கியவர். எத்தகையச் சூழலிலும் நடுவண் அரசை எதிர்க்கத் தயங்காதவர்; திராவிட முன்னேற்றக் கழகத்தையும் திராவிட இயக்கக் கொள்கைகளையும் கண்போல் போற்றிப்பாதுகாத்தவர்; இனம் மானங்காக்க அல்லும் பகலும் அயராது உழைத்தவர்; கவியரசு கண்ணதாசன் கூறுவது போன்று.

“அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடைமைடா
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
தாயகம் காப்பது கடமையடா”

என்று பாடியதும் கலைஞரின் மரணமிலாப் பெருவாழ்விற்கு வழிவகுத்தது எனலாம். கவியரசர் முடியரசனும் கலைஞரின் அஞ்சாமையையும் அவர் காவல் அரணாய் விளங்கியமையும் கவிதை மூலம்,

“பாருக்குக் கடல்காவல்; பைந்த தமிழ்ப்பண்
பாட்டுக்கு நீ காவல்; ஆழ்ந்த ஆணி
வேருக்கு மணகாவல்; தமிழர் நாட்டு
வேலிக்கு நீ காவல்; பெருகி ஓடும்
நீருக்குக் கரைகாவல்; கழகத் தோழர்
நெஞ்சுக்கு நீகாவல்; இந்த நாட்டில்
யாருக்கு யார்காவல் என்று மக்கள்
அஞ்சிவரும் இந்நாளில் நீதான் காவல்;”

என்று பாடியிருப்பது எண்ணத்தக்கதாகும்.

மூவினத்தின் முதல்வர்

கலைஞர் தமிழின் உயிராய், மெய்யாய், உயிர்மெய்யாய்த் திகழ்வதனையும் எதிரிகளுக்கு வல்லினமாகவும் அன்பு இருப்பவர்களுக்கு மெல்லினமாகவும் இடைப்பட்டவர்களுக்கு

இடையினமாகவும் திகழ்வதோடு மூவேந்தர்களுக்கும் எடுத்துக்காட்டாக வாழ்ந்து வருபவர் என்பதை கவியரசர் முடியரசன்.

"எதிரிகட்கு வல்லினமாய், நின்னை அண்டி
இருப்பவர்க்கு மெல்லினமாய் இரண்டும் இல்லா
நொதுமலர்க்கோ இடையினமாய் மெய்யெழுத்து
நுவல்கின்ற மூவினமாய் விளங்குகின்றாய்
மதுரைநகர்ப் பாண்டியனார் சேரர் சோழர்
மன்னர்வழி மூவினத்தின் மெய்யும் ஆனாய்"

என்ற கவிதை வரிகளால் அறிந்து கொள்ள முடிகிறது.

மு.க.பெயர்க்காரணம்

கவியரசர் முடியரசன் அனைத்தும் தமிழால் மலரவேண்டும். குறிப்பாக பெயர்கள் அனைத்தும் தமிழிலேயே இருக்க வேண்டும். முகப்பெழுத்தும் - தமிழில் தான் இருக்க வேண்டும் என்பதை நினைவூட்டும் வகையில் கலைஞர் மு.க. என்றும் அதற்கான காரணத்தையும், மெய்யெழுத்தின் முதலெழுத்தாக கருணாநிதி என்று பெயர் உள்ளதையும் அண்ணா உயிரெழுத்தின் முதலெழுத்தாக திகழுமாற்றை, உயிரும் மெய்யுமாக இருவரும் விளங்குவதனை கவியரசர் முடியரசன்,

பதியிலுளார் நின்பெயரை மு.க. என்று
பகர்வதற்குக் காரணமென்? முத்து வேலர்
புதல்வரென உணர்த்துவதற்காக? இல்லை யில்லை
புலிநிகர்த்த நெஞ்சுடையான் எதிலும் என்றும்
முதல்வர் கருணாநிதி என்றுணர்த்து கின்ற
முத்திரைத்தாள் அவ்வெழுத்து மெய்யெழுத்தின்
முதலெழுத்தும் நீதானே; உயிராம் அண்ணா
முதலெழுத்தும் உன்னுடன்தான் இணைந்திருக்கும்"

என்ற கவிமொழிகளால் கலைஞரும் அண்ணாவும், பெயர்களால் ஒருங்கிணைந்த நிலை உணர்த்தப்பட்டுள்ளது.

வள்ளுவர் வழியில் கலைஞர்

கலைஞர் வள்ளுவரை உயிராக மதித்தவர்; திருக்குறளை வாழ்வியல் அறமாகப் போற்றியவர்; வள்ளுவருக்குக் கோட்டமும் உயர்ந்த சிலையையும் அமைத்தவர்; வள்ளுவரின் அறநெறிகளைப் போற்றும் வகையில், அவரின் வாய்மொழியான 'இடுக்கண் வருங்கால்

நகுக' என்ற தொடரினை எவ்வகைத்துன்பம் வந்தாலும் கலங்காது எதிர் கொண்டு செயலாற்றுவதில் கலைஞர் வல்லவர் என்பதை,

"சிரிப்பென்னும் மருந்துண்டேன் அம்மருந்தைச்
சித்தர்திரு வள்ளுவனார் தந்தா ரென்று
உரைக்கின்றாய் நெஞ்சுக்குள் என்சேய் விக்குள்
ஒருசிறிது விழக்கேட்டேன்"

என்று கூறும் கவியரசர் முடியரசனாரின் உள்ளக்கிடக்கையை உணர்ந்து கொள்ள முடிகிறது.

சாதி மதங்களை வெறுப்பவர் கலைஞர்

'இருட்டறையில் உள்ளதடா உலகம் சாதி
இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே'

என்ற பாவேந்தர் பாரதிதாசனின் கவிதை மொழிகளைப் பின்பற்றி வாழுபவர் கலைஞர்; சாதிகளையும் வெறுப்பவர்; சமயங்களையும் சாடுபவர்; இரண்டுக்கும் பகையாக கலைஞர் வாழ்ந்தவர் என்பதை, கவியரசர் முடியரசன்.

"அறுசமயம் பிறசமயம் வெறுப்பவன்தான்
ஆனாலும் அன்பழகற்(கு) அழகன் ஆனாய்
பிரிவுகளும் சாதிக்குப் பகைவன் தான் நீ"

என்று பாடியிருப்பது கொண்டு அறிந்து கொள்ள முடிகிறது.

சிவபெருமானும் கலைஞரும்

அன்பே சிவம் சிவபெருமானின் அன்புள்ளமே சைவ சமயத்திற்கு அடிப்படை; அன்பின் வடிவான உடன்பிறப்பே கலைஞரின் திராவிடக் கொள்கைக்கு அடிப்படை; சிவபெருமானோ தலையில் குறை மதியாகிய பிறையை வைத்திருக்கிறார்; கலைஞரோ சிந்தனைத் திறத்தால் நிறைமதியைத் தலையில் வைத்துள்ளார்; சிவபெருமானோ தலைமதியன், கலைஞரோ, சிரிக்கின்ற முகமதியன், சிவப்பெருமான் சிரித்ததால் முப்புரமும் சுட்டெறிந்தது; கலைஞர் சிரித்தால் முப்புரி சுட்டெறிந்தது என்பதை கலைஞரோடு சிவபெருமானை ஒப்பிட்டு.

"சிவபெருமான் குறைமதியைத் தலையில் வைத்தான்;
சிந்தனையால் நிறைமதியைத் தலையில் வைத்தாய்;
சிவபெருமான் தலைமதியன்; நீயோ என்றும்
சிரிக்கின்ற முகமதியன்; அற்றை நாளில்

அவன் சிரித்தான் முப்புரத்தைச் சுட்டெரித்தான்;
ஆற்றலுளாய்; நீ சிரித்தாய் நம்மை யண்டித்
தவறுசெயும் முப்புரியைச் சுட்டெரித்தாய்;"

என்று, கவியரசா முடியரசன் பாடியிருப்பது அறிந்துணர்ந்து போற்றத்தக்கதாகும்.

இன்பமும் துன்பமும் ஒன்றே

கலைஞர் வாழ்வு ஏற்றமும் இறக்கமும் நிறைந்தது; வறுமையும் வாட்டமும் அடிக்கடி வந்து போனது; இன்பமும் துன்பமும் அடிக்கடி வந்து போனாலும் அவை இரண்டையும் ஒன்றாகக் கருதியவர் கலைஞர் என்பதை கவியரசர் முடியரசன் கூறியிருப்பது நினைக்கத் தக்கதாகும். சிறை சென்றாலும் கோட்டை முதல்வராக சென்றாலும் இரண்டையும் ஒன்றாகக் கருதக்கூடியவர் கலைஞர் என்பதை,

"பாளைநகர்க் கொட்டிலுக்குள் போவென் றாலும்
பாராளக் கோட்டைக்குள் வாவென்றாலும்
பாளைநிகர் சிரிப்புடனே செல்கின்றாய் நீ
பக்குவஞ்சேர் ஞானியென ஆகி விட்டாய்"

என்று பாடியுள்ளமை அறியத்தக்கதாகும்.

பராசக்தியே கலைஞர்

கலைஞர் கலைத்திறமையால் வளர்ந்தவர்; கதைகள் எழுதுவதில் வல்லவர்; கதைகளில் சீர்திருத்தக் கருத்துக்களைப் புகுத்துவதில் தயக்கம் காட்டாதவர்; கதை வசனத்திலும் அனல் பறக்கும்; அடுக்குமொழிகளும் அழகழகாய் வந்து விழும்; திரைப்பாடலும் தெள்ளு தமிழால் சிறந்தோங்கும்; இவ்வாறு பலவகை திறமை கொண்டதால் கலைஞர் திரையுலகின் பராசக்தியாய் விளங்கினார். அரசியலிலும் ஆளுமைப் பெற்றுத்திகழ்ந்தார். தன்னலம் தவிர்த்து பொது நலம் ஒன்றே குறிக்கோளாகக்கொண்டு நாளும் உழைத்தவர் கலைஞர். இரவு, பகல் பாராது அல்லும் பகலும் அயராது பாடுபட்ட ஆற்றல் மிக்க அரசியல் பராசக்தியாகவும் திகழ்ந்தவர் என்பதை கவியரசர் முடியரசன்,

திரையுலகில் பராசக்தி வந்த போதுன்
திறமையெலாம் கண்டவர்கள் புகழ்ந்து நின்றார்;
அரசியலில் பராசக்தி வந்த போதுன்
ஆற்றலெலாம் கண்டவர்கள் வியந்து நின்றார்;
இருபெரிய பராசக்தி வளமை எல்லாம்
எழுத்தாலே வென்றவன் நீ; இனியேல் யார்க்கம்

வருமுலகில் இராசக்தி உன்னை வெல்ல;
வருபகைகள் நண்புகொள ஏங்கி நிற்கும்.

என்று கூறுவது கொண்டு, கலைஞரின் ஆற்றலும் பராசக்தியாக இருந்து பகைமையை வென்ற பாங்கும் அறிந்து கொள்ள முடிகிறது.

பெரியார் - அண்ணா - கலைஞர்

திராவிட இயக்கத் தலைவர்களை வரிசைப்படுத்த நினைத்த கவியரசர் முடியரசன் தொடக்கவுரை எழுதியவர் பெரியார், விளக்கவுரை எழுதியவர் அண்ணா, மக்களிடமும் சட்டமாகவும் செய்து நடைமுறைக்குக் கொண்டு வந்தவர் கலைஞர் என்பதை,

திருவிடத்தின் இனவுணர்வுக் காப்பி யத்தைத்
தெளிவுபெற எழுதியவர் பெரியார்; அந்தப்
பொருளெடுத்து விளக்கவுரை எழுதித் தந்து
புத்துணர்வை ஊட்டியவர் அறிஞர்; மக்கள்
மருளொழிய அறிவொளிகள் பரவி நிற்க
மானமிகு காப்பியத்தைக் கற்றுத்தந்து
வருபவர்தாம் நம் கலைஞர்

என்ற கவிமொழிகளால் கவியரசர் முடியரசன் கூறியிருப்பது எண்ணத்தக்கதாகும்.

கலைஞரின் நெஞ்சம் என்றும் நிலைக்க வேண்டும்; பெரியார், அண்ணா கனவுகள் நிறைவேற்றப்பட்ட வேண்டும்; இனமானம் காக்கப் படவேண்டும் என்பதையெல்லாம் கவியரசர் முடியரசன் தொகுத்து அருந்தமிழால், அணி வகுப்புக்கவிதைகளால், கொட்டும் அருவியாய், பொழியம் மழையாய் பாடியிருப்பது கலைஞர் மீது கொண்ட பற்றையும் திராவிட இயக்கச் சிந்தனைகளை அனைவரும் ஏற்று, போற்றிப் பாதுகாத்து, பின்பிற்றப்பட வேண்டும் என்ற அடிப்படைச் சிந்தனை அனைத்துக் கவிதைகளிலும் எழுச்சியோடு பாடியிருப்பது அனைவரும் அறிந்த கொள்ள வேண்டிதொன்றாகும்.

வீறுகவியரசர் முடியரசன் கவிதைகளில் 'இயற்கை'

முனைவர் நா.கார்வண்ணன் *

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வானில் கவிஞர் முடியரசனாருக்கு ஒரு தனியிடம் உண்டு. முடியரசன் கவிதைகள் 'தமிழியம்' பற்றியதாக இருந்தது. இவர் ஒரு தன்மானக் கவிஞர்; புரட்சிக் கவிஞர்; பெருமிதக் கவிஞர்; இலக்கிய உலகில் சிங்கம் இவர். இவரை யாரும் பணத்தாலோ, பகட்டாலோ வளைக்க முடியாது. சாதியம் ஒழிய வேண்டும் என்பதைத் தம் வாழ்விலும் செயல்படுத்திக் காட்டியவர். தானும் முன்மாதிரியாகக் கலப்புமணம் செய்து கொண்டவர். தம் பிள்ளைகளுக்கும் துணிச்சலாகக் கலப்புத் திருமணம் செய்து வைத்து நடைமுறைப்படுத்திய கொள்கைச் சிங்கம் அய்யா அவர்கள். இவர் இயற்கையைப் பாடும் போது கூட, சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகள் மிகுதியாக இடம்பெற்றிருப்பதைக் காணலாம்.

அழகின் சிரிப்பு

கதிரவன் காலையில் தோன்றுதல், பூமி என்னும் காதலியைக் காண்பதற்கு வருவதாகக் கூறுதல் நல்ல உவமை கதிரவன் காட்சி மிகச்சிறந்த அழகிய காட்சி என்கிறார்.

நாற்று நடும் காட்சி ஓர் அழகு; அதிலும் மகளிரின் கையசைவு ஓர் அழகு; கால் வயிற்றுச் சோற்றுக்கு நாற்று நடுதல் என்று நடவு செய்யும் பெண்களின் நிலையைக் கூறுகிறார். பாரதிதாசன் சொல்வார், 'நடவு செய்த தோழர் கூலி நாலணாவைப் பெறாது' என்பார். அதைப்போன்று வேளாண் மாந்தரின் பரிதாப நிலையைக் கவிஞர் சுட்டிக் காட்டுவார். ஏர்பிடித்த கணவனுக்கு மனைவி சோறூட்டும் காட்சி ஓர் அழகு; பெண்கள் தண்ணீர்க் குடத்தை இடுப்பில் வைத்துத் தூக்கிச் செல்லுதல் ஓர் அழகு; பறவைகளைக் கவண் கல்லைக் கொண்டு விரட்டுதல் ஓர் அழகு; மண்ணைவெட்டி வரப்புக் கட்டுதல் ஓர்அழகு.

கோழியானது தன் குஞ்சுகளுக்கு இரையூட்டும் நிகழ்ச்சி ஓர் அழகு. அதுவும் அன்பு கலந்து இரையூட்டுமாம். எப்படிக் குழந்தைக்கு ஊட்ட வேண்டும் என்பதை அருமையாகச் சொல்லியுள்ளார்.

---

* முதுகலைத் தமிழாசிரியர் (ஓய்வு), தூயவளனார் கல்லூரி மேல்நிலைப்பள்ளி, திருச்சி.

பால் போன்ற நிலவுக்கு விண்மீன் பற்களாம் இதுவும் ஓர் அழகு. குழந்தைப் பேச்சும் ஓர் அழகு. வெம்புலியின் பாய்ச்சல், வீரன் ஏந்தும் வேல் நுனி, தோள் வலிமை, நாகம் படம் எடுத்து ஆடும் அழகு; மயில் தோகை விரித்தாடுதல் ஓர் அழகு.

இங்கெல்லாம் சிரிக்கின்ற அழகைக் கண்ட கவிஞர் உழைப்போரைச் சுரண்டுகின்ற கூட்டத்தைத் தரைமட்டம் ஆக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்குவதால் அவர்களிடம் சிரிப்பில்லை. அரசியல்வாதிகள் மதவாதிகளை துணைக் கொண்டு வாழ்வதால் மக்கள் வாழ்வில் மகிழ்ச்சியில்லை.

ஆறும், மலையும் அழகைத் தருகின்றன. சோறில்லாத் தமிழனை நினைத்து உங்கள் உள்ளம் துடிப்பதில்லை. மாற்றாரிடம் நாட்டைவிட்டு அடிமை வாழ்வு வாழ்கின்றீர். எப்படி அழகு இங்கே சிரிக்கும் என்கிறார். இயற்கை அழகிலும், சிரிப்பைக் கண்ட கவிஞர் சமுதாயச் சீர்கேடுகள் சிலவற்றையும் சாடுகின்றார்.

இயற்கைத் தாய்

தாயானவள் அழும் குழந்தைக்கு ஆறுகாட்டி, குன்றிருந்து வீழ் அருவி காட்டிக் கொஞ்சுவாள். சூரியக் கதிர்கள் பட்டும் உறக்கத்தில் இருந்து எழாத குழந்தைக்கு தாமரையின் மலர்ச்சியைக் காட்டுவாள். தமிழில் வைதார்க்கும் வாழ்வு தருபவள் இயற்கைத் தாய். பாரதிதாசனைப் போல் கவிஞரும் இயற்கையை வருணிக்கிறார்.

மக்களின் பசியைப் போக்கத்தான் ஆறு மலையில் இருந்து கீழே இறங்கி நீரினைத் தந்து வயலினை உழும் உழவர்க்குப் பயன்தந்து விளைச்சலைப் பெருக்கி உதவி செய்கிறதாம்.

எழில்

இத்தலைப்பில் வரும் கவிதையில் கவிஞர் இந்தி எதிர்ப்புப் போரைச் சுட்டுகிறார். நிலவு பற்றிக் கூறும்போது ஏழைக்கும் பணக்காரனுக்கும் ஒன்றாகத் தான் நிலவொளி வீசுகிறது என்கிறார். பொதுவுடைமைத் தத்துவத்தை மிக அருமையாகப் படம்பிடித்துக் காட்டுகிறார்.

காற்று

காற்றைப் பற்றிப் பாடும் போது வடக்கிலிருந்து வருவது வாடை. தெற்கிலிருந்து வருவது தென்றல். வடக்கேயிருந்து எது வந்தாலும் தமிழ்நாட்டுக்கு வாடையைப் போன்று துன்பம் தரும். தெற்கிலிருந்து

எது வந்தாலும் தென்றலைப் போன்று இன்பம் தரும் என்கிறார். எனவே தென்றலைத் தருவதும் இன்பம் தருவதும் தமிழ்நாட:டு மலைகளே என்கிறார். எனவே இன்பம் தரும் தென்றலே வாழ்க! என்கிறார்.

ஆறு

ஆறு பற்றிப் பாடுகையில் ஆற்றில் கழிவு நீர் கலந்தாலும் பிறகு தூய்மையாகச் செல்லும் ஆறு. அதுபோன்று தமிழில் பிறமொழிகள் கலந்தாலும் எப்படியும் பிறகு தமிழ் தூய்மையாகிவிடும் என்ற சிந்தனையை விளக்குகிறார். ஆற்று வெள்ளத்தில் ஏட்டுச் சுவடிகளையும் எறியும் கெட்ட பழக்கம் ஆடிப் பதினெட்டு விழாவில் நிகழ்வதைக் குறிப்பிடுகின்றார்.

சம்பளம் மாதத்தில் பாதி நாள் செலவுக்குத்தான் வரும். மீதி நாள் தாயின் காப்பை அடகு வைத்துச் செலவு செய்வது போல் வானம் பொய்த்த போதும் ஆறு ஊற்றுநீர் தந்து உலகைக் காக்கும் என்று அன்றிலிருந்த அரசு ஊழியர் நிலையை ஒப்பிடுகிறார்.

ஆற்றின் துறைகளில் பலர் நீராடினாலும் சாதி வேறுபாடு அங்கில்லை என்று சாதி ஒழிந்ததையும் சுட்டுகிறார்.

கடல்

கடலைப் பற்றிப் பாடும்போது கடல் உலகிற்கு எல்லாம் பொதுவானது. உலகத்தார்தாம் கடலை என் கடல், உன் கடல் என்று சண்டை போட்டுக் கொள்கின்றனர். எனவே உலகிற்குப் பொதுவுடைமை கடலே என்று பொதுவுடைமைத் தத்துவத்தை மிகச் சிறப்பாகப் பாடுகின்றார்.

முகிலிடை நிலா

இத்தலைப்பில் சந்திரகிரகணம் அன்று பாம்பு சந்திரனை விழுங்குவதாக மக்கள் நம்புகின்றனர். மூடநம்பிக்கையால் அவ்வாறு சொல்வர். அறிவில் நல்லோர் அதை நம்பார். பூமி சுற்றுவதால் சந்திரனை அற்றை நாள் மட்டும் மறைக்கும் என்னும் அறிவியல் உண்மையை எடுத்துக்காட்டுவார் கவிஞர்.

யாரடியோ?

தென்னை மரத்தில் தூக்கணாங் குருவிகள் கூடுகட்டும் காட்சியை அதற்குக் கட்டடக் கலையை கற்றுத் தந்தவர் யாரடியோ? என்கிறார்.

மலையில் பிறந்த மகள்

இத்தலைப்பில் நால்வகை நிலங்களும் அவற்றின் கருப்பொருள்களும் சிறப்பாக வருணிக்கப்படுகின்றன.

வான் மழையே வா

இத்தலைப்பில் நால்வகைப் பாக்கள் சீர், தளை, அடி, வண்ணம், வனப்பு முதலான யாப்பிலக்கணச் சொற்கள் பயின்று வருவது கவிஞருக்கு மரபுக் கவிதையின் மீது இருந்த பற்றைக் காட்டுகிறது.

முடிவுரை

முடியரசனார் தம் கவிதைகளின் மூலமாக, சமூக அவலங்களைச் சாடியவர். மூடநம்பிக்கை ஒழிப்பு, சாதி ஒழிப்பு, சமூகச் சீர்திருத்தம், தமிழ் எல்லாவிடத்தும் கோலோச்ச வேண்டும் என்னும் கொள்கை, இந்தி எதிர்ப்பு, மானுட விடுதலை முதலிய கொள்கைகளை வென்ற கொள்கை வீரர். இவர் கவிதைகளில் பாவேந்தர் பாரதிதாசனின் தாக்கம் மிகுதி. எனவே இவரை 'இரண்டாம் பாரதிதாசன்' என்று அழைத்தனர். இன்னொரு புரட்சிக்கவிஞர் என்றும் அழைத்தனர்.

தமிழுக்குத் தொண்டு செய்தோன் செத்ததில்லை என்று பாரதிதாசன் கூறுவதைப் போல இவர் செய்த தமிழ்த் தொண்டால் இவருக்கும் சாவு இல்லை. அவர் சாகாக் கவிதையால் மூவாத் தமிழோடு நம்மிடையே கவிதை உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார் என்றால் அது மிகையாகாது!

முத்தான நற்கவிதை நூல்கள் யாத்த
முடியரசன் கவியரசன்; காலம் தந்த
புத்தமுதத் தமிழ்பரப்பும் கொள்கை மாறாப்
பெருவீரப் புலவனிவன்! சாதி யத்தை
இத்தரையில் வேரோடு சாய்த்த செம்மல்!
எந்நாளும் காசுக்குப் பாட மாட்டார்!
ஒத்துப்போய்ப் பழியேலார்! பாவேந் தர்க்கே
ஒத்தநிகர் தன்மானக் கவிஞர் ஆவார்!

- கவிஞர் கார்வண்ணன்

வீறுகவியரசர் முடியரசனார் வலியுறுத்தும் தமிழ்வழிக் கல்வி

சே.கிரிஜா *

முன்னுரை

கல்வியறிவு பெற்றவன் அழியா வரம் பெற்றவனாகிறான். இதை வள்ளுவர்,

> "அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கு
> முள்ளழிக்கல் ஆகா அரண்"

என்கிறார்.

> "ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
> தானமும் தவமும் தாம்செயல் அரிது"

என்பது நம் ஔவைப் பாட்டியின் அமுதமொழி. "இளமையில் கல்" என்பது நம் முன்னோர் வாக்கு.

கல்வி மனிதனைப் பண்படுத்துவதோடு அவனைத் தற்சிந்தனை மற்றும் ஆராய்ச்சியறிவாளனாகவும் ஆக்க வேண்டும். அப்போதுதான் அது முழுமையடைகிறது. மனிதனும் முழுமையடைகிறான். இதற்குத் தாய்மொழி வழிக்கல்விதான் சிறந்தது என்பது உலக அறிஞர்கள் - கல்வியாளர்களின் அழுத்தமான கருத்து.

வீறுகவியரசரின் தமிழ்மொழிப் பற்று

தாய்மொழி தமிழின் மீதும், தமிழினத்தின் மீதும், தமிழ்நாட்டின் மீதும் தீராப்பற்றுக் கொண்டிருந்தவர் வீறுகவியரசர் முடியரசனார். தமிழுக்கும், தமிழருக்கும், தமிழ்நாட்டுக்கும் இழுக்கு நேரும் போதெல்லாம் புலியெனச்சீறி, மொழி, இனம், நாடு காக்கப் புரட்சிக் கவிதைகள் படைத்த வீறுகவியரசர். தம் படைப்புகளைப் படையாயுதங்களாக ஏந்தியவர் தமிழர் கைக்குத் தந்தவர். இதனைத் தமிழகத்தின் தலை சிறந்த தலைவர்கள், கவிஞர்கள், அறிஞர்கள், தம் வைர வார்த்தைகளால் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

---

* உதவிப்பேராசிரியர், சேதுபாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி, விசாலயன்கோட்டை.

"கவிஞர் யார்? என்பதற்கு எடுத்துக்காட்டு முடியரசன்" என்று தந்தை பெரியாரும், திராவிட நாட்டின் வானம்பாடி - கவிஞர் முடியரசன் ஆவார். புரட்சிக்கவிஞர் அடிச்சுவட்டில் எத்தனையோ கவிஞர்கள் மக்களிடையே எழுச்சி முரசு கொட்டி வருகிறார்கள் இலட்சிய கீதம் இசைத்து வருகிறார்கள். அந்த வரிசையில் முதன்மையானவர் முடியரசன்" என அறிஞர் அண்ணாவும், "கவிப்பேரரசர் என என்னால் அன்புடன் அழைக்கப் படும் முடியரசனார் வான் பெய்யும் கோடை மழை போலக் கவிதைகள் பொழிபவர். தன்மானத் தங்கம் – தலைதாழாச் சிங்கம் - கொள்கை மாறாக் குன்றம். திராவிட இயக்கத்தின் ஈடு இணையற்ற தளகர்த்தர்களில் ஒருவர். திராவிட இயக்கம் நிமிர்ந்து நின்று இன்று கோலோச்சுகிறதென்றால்... அன்று முடியரசனார் ஆற்றிய இலக்கியப் பணியும் காரணம்" எனக் கலைஞர் கருணாநிதியும், "முடியரசனார் தலைதாழா வாழ்வுக்குச் சொந்தக்காரர். யாருக்காகவும், எதற்காகவும் தன் கொள்கையையும் நிலையையும் மாற்றிக் கொள்ளாத பெருமிதத்துக்குரியவர். ஒரே கொள்கை ஒரே இயக்கம் அவருக்கு. அவை தன்மானக் கொள்கை – தமிழியக்கம் ஆகும்" என மக்கள் திலகம் எம்.ஜி.ஆரும், "என் மூத்த வழித்தோன்றல் முடியரசனே" எனப் பாவேந்தர் பாரதிதாசனும், "முடியரசர் இவரென்றால் மக்க ளெங்கே? / முன்னோடும் பரிஎங்கே? படைக ளெங்கே? / முடிஎங்கே? அரசெங்கே? முரச மெங்கே? / முத்தமிழில் ஒருதமிழ்தான் முடியோ! மற்ற / இடைத்தமிழ்தான் அரசோ! மூன் றாவதான / எழிற்றமிழ்தான் முரசோ!ஓ! சரிதான் இந்த / முடியரசர் பாவரசர் பாடுன்கிறார் நாம் / முழங்காலை நிலந்தாழ்த்தி வணங்கிக் கேட்போம்!" எனக் கவிஞர் கண்ணதாசனும், தமிழ் மானம், தமிழ் உணர்வு, தமிழர் எழுச்சி, சமுதாயப்புரட்சி, பகுத்தறிவு முதலியன பற்றிய எழுச்சிப் பாடல்களை எழுத வந்த இன்னொரு புரட்சிக்கவிஞர்தான் வீறுகவியரசர் முடியரசன். தமிழின் சுவை, தமிழின் அழகு, தமிழினத்தின் பெருமிதம், தமிழினத்தைத் தாழ்த்தும் சிலரது போக்கைக் கண்டு பொங்கிப் பெரும்புனலாய் முடியரசன் பாடல்களில் வழிந்தன" எனத் தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் ஔவை நடராசனும், இன்னும் ஏராளமான சான்றோர்களும் போற்றியுள்ளனர்.

இச்சான்றோரின் கூற்றுகட்குச் சான்றாக வீறுகவியரசரின் கவிதைகளிற் சில அடிகள்:

"செந்தமிழின் உயர்வுதனை வேண்டிநின்று
நிறைசெய்ய உயிரீயும் புலவர் தம்முள்
நிற்குமுதற்புலவன் நான் ஆக வேண்டும்"
(முடியரசன், நூல்: தாய்மொழி காப்போம்)

செம்மொழியாம் தமிழ்மொழி உயர்வுற தன் உயிர் தரும் புலவர்கள் வேண்டுமென்றும், அப்புலவர்களுள் தான் முதல் புலவனாக உயிர் கொடுக்க வேண்டுமென்கிறார்.

"முன்னைப் பழம் பொருளே – வேந்தர்
மூவர் உயிர்த் தமிழே!
என்னைப் பழிப்பவனை – நான்
ஏதும் நினைப்பதில்லை
உன்னைப் பழிப்பவனைப் – பகையா
உள்ளம் நினைக்கு தம்மா!"
(முடியரசன், நூல்: காவியப்பாவை)

சேர, சோழ, பாண்டிய மூவேந்தர்கள் தம் உயிராகப் போற்றிய, நெடுங்காலத்திற்கு முன்பே தோன்றிய, தமிழே! என்னைப் பழிப்பவன் மீது நான் பகை கொள்வதில்லை. ஆனால் உன்னைப் பழிப்பவனைத்தான் நான் பகையாய்க் கொள்வேனம்மா என்கிறார் முடியரசனார்.

"சுற்றிவ ளைத்திடு மெத்துய ரத்தையும்
சுட்டுமு டித்ததை - எறிவேனே
சொத்துந லத்தினை முற்றஇ ழப்பினும்
சொற்றமி ழுக்கெனைத் - தருவேனே"
(முடியரசன், நூல்: பாடும் குயில்)

தன்னைச் சூழும் எத்துயரத்தையும் எரித்தெறிவேன் என்றும், தன் சொத்து முழுவதையும் இழந்தாலும் சொல்வளம் மிக்க தமிழுக்குத் தன் வாழ்வையே தருவேன் என்றும் வீறுபா பாடுகிறார். இப்பாடலடிகளையெல்லாம் படிக்கும் பொழுது, "தமிழ் அவரது உயிர். எமக்குத் தெரிந்தவரை தமிழை இத்துனை நேசித்த ஒருவரை யாம் இதுவரை கண்டதில்லை. அதனால் தமிழ் உள்ள அளவும் வாழ்வு பெறும் கவிதைகளை அவர் தந்து சென்றுள்ளார்" என அறிஞர்

தமிழண்ணல், 'தினமணி' நாளிதழில், முடியரசனார் மறைந்தமைக்காக எழுதிய அஞ்சலிக் கட்டுரையை ஈண்டு நினைத்தற்பாலது.

தமிழ்வழிக் கல்வி

தமிழை உயிர் மூச்சாய்க் கொண்டிருந்த வீறுகவியரசர், அனைத்துத் துறைகளிலும் தமிழே ஆட்சி செலுத்த வேண்டும் என்றும், தமிழ் வழியிலேயே கல்வி கற்பிக்கப் பட வேண்டுமென்றும் வலியுறுத்துகிறார்.

"தமிழக வரைப்பில் தாய்மொழி ஆட்சி
திகழுதல் வேண்டும்............................"
"துறைதொறும் துறைதொறும் தூய நற்றமிழே
ஆட்சி புரியும் மாட்சிமை வேண்டும்"

(முடியரசன், நூல்: பூங்கொடி)

தமிழ் நாட்டில் தமிழர்கள் ஆங்கில மாயைக்கு அடிமையான நிலையை,

"ஆங்கிலமோ பிறமொழியோ பயின்று விட்டால்
அன்னைமொழி பேசுதற்கு நாணு கின்ற
தீங்குடைய மனப்போக்கர் வாழும் நாட்டில்
தென்படுமோ மொழியுணர்ச்சி?............"

(முடியரசன், நூல்: முடியரசன் கவிதைகள்)

ஆங்கிலம் அல்லது அயல் மொழி பயின்றுவிட்டு, தாய்மொழியில் பேச வெட்கப்படும் தீய நெஞ்சுடையவர்கள் வாழும் இத்தமிழ் நாட்டில் எவ்வாறு மொழியுணர்ச்சி தோன்றும்? என மனம் குமுறுகிறார் முடியரசனார்.

"கூவும் குயில்தன் குரலாற் பாடும்
காகம் தன்குரல் கொண்டே கரையும்
இரவற் குரலைப் பெறுவது காணேம்
பறவையின் இயல்பைப் பகுத்தறி வுளநாம்
அறிவதும் இல்லேம் தெளிவதும் இல்லேம்
நமக்குள மொழியை நாடுதல் தவிர்த்துப்
பிறர்க்குள மொழியால் பிதற்றுதல் உடையேம்"

(முடியரசன், நூல்: பூங்கொடி)

என்று பாடுகிறார். குயில் தன் குரலால்தான் கூவும் காகம் தன் குரலால்தான் கரையும். வெவ்வேறு குரலால் கூவுவது இல்லை கரைவதும் இல்லை. அஃறிணைகளாகிய அவைகள் இவ்வாறுள்ள நிலையில் பகுத்தறிவுள்ள உயர்திணையாகிய நாமோ நம் தாய்மொழியில் பேசுவதை, கற்பதைத் தவிர்த்து அயல் மொழியால் பிதற்றுகின்றோம் என்று சாடுகிறார். 'இயற்கைத் தாய்' எனுந்தலைப்பில் பாடிய ஒரு கவிதையில்,

"படித்திடுக எனச்சொல்லி குயிலினங்கள்
பசுங்கிளிகள் இவற்றைத் தந்தாள்
பிடித்தவற்றைப் பார்க்கையிலோர் அறங்கண்டேன்
'பேசுமொழி சொந்த மேயாம்
அடுத்தவற்றின் குரலல்ல நீயுமுன்றன்
அனைமொழியால் பேசு! பாடு!!
தடுப்பவர்யார்?' என்றனஅவ் வேடுகள்தாம்
தாயேதாய் மொழியே வாழ்க"
(முடியரசன், நூல்: முடியரசன் கவிதைகள்)

தன்னைக் குழந்தையாகவும், இயற்கையைத் தாயாகவும் உருவகப்படுத்தி, இவ்வுலகின் இயற்கைக் காட்சிகளையெல்லாம் இயற்கைத்தாய் இவருக்குக் காண்பித்து மகிழ்ச்சியூட்டுவதாக இக்கவிதையில் கூறுகிறார். இயற்கைத்தாயானவள் குயில்கள், கிளிகளைப் பிடித்து இவர் கைகளில் தந்து, 'இவைகளிடமிருந்து படிப்பினை கற்றுக்கொள்' என்கிறாளாம். அப்பறவைகள் இவருக்கு ஓர் அறத்தைப் புகன்றதாம். பறவைகளாகிய நாங்கள் எம் சொந்த மொழியில்தான் பாடுகின்றோம் பேசுகின்றோம். எனவே நீயுன் தாய்மொழியிலேயே பேசு, பாடு, படி என்றனவாம். அழகான உவமையில் உயர்வான படிப்பினையை இக்கவிதையில் கவிஞர் நமக்கு அறிவுறுத்துகிறார்.

ஆரம்பக்கல்வி மட்டுமல்ல உயர் கல்வியிலும் தமிழே வேண்டுமென்கிறார் கவிஞர்.

"கல்லூரிக் கல்விசொலத் தமிழே வேண்டும்
கலைச்சொற்கள் தமிழ்மொழியில் ஆக்கல் வேண்டும்"

....

"நம்பிள்ளை பயில் கல்வி தமிழாய் நிற்றல்
நாடெல்லாம் தமிழாயின் தமிழ வாழ்வு"
(முடியரசன், நூல்: கவியரங்கில் முடியரசன்)

வீறுகவியரசரின் கடிதங்கள், கட்டுரைகள்

தமிழைத் தன் உயிராகக் கருதிப் போற்றி வளர்த்தவர் வீறுகவியரசர். தன் தாய்மொழி இத்தமிழ்நாட்டில் அனைத்துத் துறைகளிலும் செங்கோலோச்ச வேண்டும் எனத் துடித்தவர். அத்துடிப்பைத் தன் கவிதைகள் மட்டுமல்லாது, தான் எழுதிய கடித இலக்கியம், கட்டுரைகள், கதைகளிலும் புலப்படுத்தியுள்ளார்.

"அன்புள்ள பாண்டியனுக்கு..." மற்றும் "இளவரசனுக்கு....." என்று விளித்து முறையே 'அறிவுடைநம்பி' மற்றும் 'முடியரசன்' என்ற பெயர்களில் தம் மைந்தனுக்குக் கடிதம் எழுதுவது போன்று, கடித வடிவில் கவிஞர் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாகிய 'வீறுகவியரசர் முடியரசன் கடித இலக்கியம்' எனும் நூலில், 'தாய்மொழி பேண்' எனும் கடிதத்தில்,

"நாம் இப்பொழுது அடிமை நாட்டிலே வாழவில்லை. உரிமை பெற்ற நாட்டிலே வாழ்கிறோம். அவ்வாறாயின் மொழிக்கும் விடுதலை வேண்டும். நம்மை நாமே ஆண்டு கொண்டிருக்கிறோம். இன்னொருவர் நம்மை ஆளவில்லை. அது போலவே நம் மொழியையும் மற்றொரு மொழி ஆள்வது கூடாது. மொழிக்கும் உரிமை – விடுதலை கிடைத்து விட்டதென்றால் தமிழ்மொழி எங்குஞ் செல்வதற்கு உரிமை பெற்றிருக்க வேண்டும் எந்தத் துறையிலும் ஆட்சி பெற்றிருக்க வேண்டும்.........இசைத் துறையிலே தமிழ் ஒடுக்கப்பட்டுக் கிடக்கின்றது. கோயில்களுக்குள்ளே செல்ல நம் தமிழ் மொழிக்கு உரிமையில்லை. இந்நிலையில் கல்விக்கூடங்களிலும் தலை காட்டுதல் கூடாதென்றால் அடிமைத்தளை இன்னும் அகலவில்லையென்றுதானே கருத்து?........"

"இன்று விண்வெளியிலே வட்டமிட்டு................திங்கள் மண்டிலத்திலே சென்று தங்கி வருமளவிற்கு விஞ்ஞானம் வளம் பெற்ற நாடுகளையுங் காண்கின்றோம். அந்நாடுகளெல்லாம் ஆங்கில மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்டுள்ளனவா? உருசிய நாடு ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டா இந்த நிலையையடைந்துள்ளது? கடந்த

உலகப் பெரும்போரில் அணுகுண்டுக்கிரையாகி, மீண்டும் புத்துயிர் பெற்று தொழில் வளஞ்சிறந்து, உலக அரங்கிலே தலை நிமிர்ந்து நடக்கிற சப்பான் நாடு, அதன் தாய்மொழியைத்தானே பயிற்று மொழியாகக் கொண்டிருக்கிறது! பிரெஞ்சு நாட்டினரும், செருமானிய நாட்டினரும் தத்தமது தாய்மொழியை உயிராகப் பேணுவதைக் காண்கின்றோம். தாய்மொழியைப் பேணும் இந்த நாடுகளெல்லாம் முன்னேறியிருக்கும் பொழுது, அவற்றைப் போல நாமும் தாய்மொழியைப் பேணி அக்கலைகளைத். தமிழில் ஆக்கிக் கொண்டு, கற்றால் – கற்பித்தால் நாம் மட்டுந் தாழ்ந்தா விடுவோம்? தாய்மொழியைப் பேண வேண்டுமென்ற பற்றுள்ளம் வேண்டும் தம்பி. தாய்மொழியை மறந்து, அயல் மொழிக்கே அடிமையாகி, அதற்காகப் பரிந்து பேசும் ஒருவன், தமிழனென்று தன்னைக்கூறிக்கொள்ளத் தகுதியற்றவனாகின்றான்.” என்று எழுதியுள்ளார்.

‘எப்படி வளரும் தமிழ்’ எனும் கவிஞரின் கட்டுரைத் தொகுப்பு நூலில், அதே தலைப்புள்ள கட்டுரையில்,

“இயல்பாகவும் எளிமையாகவும் அறிவு வளர்ச்சி பெறத் தாய்மொழி வாயிலாகவே கற்பிப்பதுதான் சிறந்த நெறி என்பதை உணர்ந்த ஒவ்வொரு நாடும் கல்விக் கூடங்களில் அதனதன் தாய்மொழியையே பயன்படுத்தி, அறிவுத் துறையில் முன்னேறி வருவதைக் காண்கிறோம். அனால் விடுதலை பெற்ற பின்னரும் தமிழ்நாடுதான் இயல்புக்கு மாறாகச்சென்று, அறிவுத்துறையில் முழுமை பெறாது திண்டாடிக் கொண்டிருக்கிறது. பாலகர் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை பயிற்று மொழி வேறாக இருக்கிறது. ஆங்கிலம், இந்தி என்ற மொழிகள்தாம் ஆட்சி செய்கின்றன. இந்நிலையில் தாய்மொழியுணர்வு தலை தூக்குமா? பிஞ்சு நெஞ்சங்களிலேயே மொழியுணர்வு வேரோடு கல்லியெறியப்படுகிறதே? அப்பேசும் பொற்சித்திரங்கள், தம் பெற்றோரை அம்மா, அப்பா என்றழைக்கும் இன்னொலி, தேனாக நம் காதில் வந்து பாயவில்லையே? அயன்மொழி வேரூன்றிய இவ்விளைய உள்ளங்களிலே ‘என் மொழி தமிழ், நான் தமிழன்’ என்ற உணர்வுகள் எப்படியரும்பும்? நாட்டின் எதிர்காலச் செல்வங்களாகிய இவர்கள் வளர்ந்து உயர்நிலைப் பள்ளிகள், பல்கலைக்கழகங்கள் வரை அயன்மொழியிலேயே பயில்வாராயின்,

தாய்மொழியில் அறிவியலை எவ்வாறு வளர்ப்பர்? இரண்டுங்கெட்ட நிலையிற்றானே தடுமாறுவர்” என்று குறிப்பிட்டுள்ளார் வீறுகவியரசர்.

கற்றோரை வேண்டுதல்

“அறிவியல் கற்று வந்தீர்............ ./ பொறியியல் தேர்ந்து வந்தீர்............ / பொருளியல் துறையில் தேர்ந்தீர்........ / மருத்துவத் துறையும் கற்றீர .... உயிரியல் தேர்ந்து கற்றீர / உடலியல் ஆய்ந்து கற்றீர் / பயிரியல் செழிக்கக் கற்றீர் / பலவகை நிலநூல் என்னும் / அயிரியல் அதுவும் கற்றீர் / .... வேதியல் என்று கூறும் / வியத்தகு நூலும் கற்றீர் / ஓதிய பூதம் ஐந்தை / உணர்த்திடும் இயல்கள் கற்றீர் / மூதுணர் வுடையார் சொன்ன / மொழியியல் பலவுங் கற்றீர் / .... / கற்றஅத் துறைகள் யாவும் / கருத்தினில் தேக்கி வைத்துப் / பெற்றநம் தாய்மொ ழிக்குள் / பிறமொழிக் கலைக ளெல்லாம் / முற்றிய வளர்ச்சி காணும் / முயற்சியில் யாது செய்தீர்? / .... / இன்னுமோ அடிமை நீங்கள்? / .... பன்னருங் கலைகள் யாவும் / பைந்தமிழ் அடையச் செய்வீர்!” (முடியரசன், நூல்: தாய்மொழி காப்போம்) எனக் ‘கற்றோரை வேண்டுகிறேன்’ எனும் தலைப்பில் வீறுகவியரசர் பாடிய கவிதையை உற்று நோக்குங்கால், தமிழ்வழிக் கல்விக்கான அவரின் வலியுறுத்தல் நமக்குத் தெற்றென விளங்குகிறது.

நிறைவுரை

தாய்மொழியாம் தமிழ்மொழி தமிழ்நாட்டில் வாழ வேண்டும் தமிழர்கள் தம்மொழியைப் பேணியும், மென்மேலும் வளர்த்தும் உயர்த்த வேண்டும் தமிழ்நாடு முன் போல உலக அரங்கில் தலைநிமிர வேண்டும் என்று தம் இறுதி மூச்சு வரை பாடுபட்டவர் வீறுகவியரசர். அவர் படைப்புகளைத் தமிழர்கள் படித்துணர்ந்தால் தமிழுணர்ச்சி மிளிரும் தமிழ்நாடு மலரும் என்ற நோக்கில், தமிழ்நாடு அரசு அவற்றை நாட்டுடைமை ஆக்கியது. வீறுகவியரசரின் படைப்புகள் முழுமையும் கற்போம்! கற்று அதற்குத்தக நிற்போம்! தாய்த்தமிழை உயர்த்துவோம்!

வீறுகவியரசர் முடியரசன் பார்வையில் குடியானவன்

சே.கிரிஜா *

முன்னுரை

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே இவ்வுலகில் வாளொடு முன் தோன்றிய மூத்தகுடி நம் தமிழ்க்குடி என நம் பண்டைத் தமிழ் நூலான புறப்பொருள் வெண்பாமாலை புகல்கிறது. அவ்வகையில் மனித குல வாழ்க்கைப் பண்பாடு - நாகரிகத்தில் நம் தமிழ்க்குடியே மூத்தகுடி என்ற பெருமைக்குரியது என்பது உலகம் உணர்ந்த உண்மை. அப்பண்பாட்டு வளர்ச்சியில் வேளாண்மை அறிவியலிலும் நாமே முதன்மை பெருகிறோம். இயற்கை சார்ந்த அறிவார்ந்த வேளாண்மையால் நம் உணவை ஊட்டச் சத்து தரும் வகையில் பயிரிட்டுண்டதால் நோய் - நொடியின்றி வாழ்ந்தோம். ஆனால் காலப்போக்கில் இந்நூற்றாண்டு அரசியலாளர்கள் அந்நிய நாட்டாருக்கு விலை போனதால், பன்னாட்டு முதலாளிகள் இந்நாட்டில் நஞ்சுரங்களை நம் மண்ணில் விதைத்து விட்டமையால் இயற்கையோடிணைந்த நம் வேளாண்மையை இழந்து பல்வகை நோய்களால் அல்லலுறுகிறோம்.

நம் மண் நஞ்சானதால் நம் உழவப் பெருங்குடியான நம்மக்கள் வறுமையில் வாடித் தற்கொலை செய்து வருவது வாடிகையாகி வருகிறது. இந்நிலையில், நம் எதிர்காலத் தலைமுறையைக் கருத்தில் கொண்டு நம் பண்டைய வேளாண்மையை மீட்டெடுக்க வேண்டிய கட்டாயத்திலிருக்கிறோம். இதன் வழி நம் உழவ மக்களைக் காப்பாற்றி அதன் வழி நம் நல்வாழ்வையும் மீட்டெடுக்கவேண்டும்.இந்தச் சிந்தனையில் வீறுகவியரசர் முடியரசனார் கவிதைகளில் குடியானவர் நிலை பற்றிய உழவுப் பார்வையைப் பார்ப்பதே இக்கட்டுரையின் பொருண்மையாகும்.

பண்டைத் தமிழரின் வேளாண்மரபு

இன்றைய வேளாண்மை வித்தைகளுக்கும், வேளாண் அறிவியல் முன்னேற்றங்களுக்கும் நம் தமிழ் முன்னோர்களே வழிகாட்டியாக

* உதவிப்பேராசிரியர், சேதுபாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி, விசாலயன்கோட்டை.

இருந்துள்ளனர் என்பது அது மிகைக் கூற்றல்ல. அவர்கள் அன்று கண்டறிந்த வேளாண்மைச் செயல் முறைகளும், தொழில் நுட்பங்களுமே விதையாக விளங்கியது. நம் பழந்தமிழர்கள் பட்டறிவில் பயின்றறிந்த நிலப்பாகுபாட்டை இவ்வுலகில் வேறெந்த நாடும் பயிலவில்லை.

தமிழ்ப் புலவர்களின் நிலவரையறை

நம் பண்டைப் புலவர் தொல்காப்பியர் சற்றொப்ப கி.மு.700 ஆம் ஆண்டு வாக்கில் தோன்றியதாகத் தமிழறிஞர்கள் ஆய்ந்து நவின்றுள்ளனர். அன்றே அவர் படைத்த தொல்காப்பியத்தில் நிலத்தை நான்கு வகையாகப் பகுத்துள்ளார்.

முல்லை நிலம் என்பது காடும் காடு சார்ந்த இடமும், குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்த இடமும், மருதம் என்பது வயலும் வயல் சார்ந்த இடமும், நெய்தல் என்பது கடலும் கடல் சார்ந்த இடமும் ஆகும் என்பதை நாம் அறிந்ததே .இந்நான்வகை நிலங்களின் இயல்பையும் வளத்தையும் நம் முன்னோர்கள் நுணுகி ஆராய்ந்து, இந்நான்கு நிலவகையிலும் நீர்வளங்குன்றி வறண்ட நிலையில் உள்ள பகுதியைப் பாலை நிலம் என்றழைத்தனர். தனியே பாலை நிலமென்றொன்றில்லை.

"கல்லெடுத்து முள்ளெடுத்துக் காட்டுப் பெருவெளியை
மல்லெடுத்த திண்டோள் மறத்தால் வளப்படுத்தி
ஊராக்கி ஓங்கும் நகராக்கி நாடென்ற
பேராக்கி வாழ்ந்த பெருமை அவன்பெற்றான்
மாநிலத்தில் முல்லை மருதம் குறிஞ்சி நெய்தல்
நானிலத்தைக் கண்டபெரும் நாகரிக மாந்தனவன்"

(முடியரசன், நூல் - புதியதொரு விதி செய்வோம்)

இவ்வாறு நம் தமிழ் முன்னோன் தன் உடல் வலிமையால் வேளாண்மைக்குத் தகுந்தவாறு நிலம் திருத்தி முல்லை, மருதம், குறிஞ்சி, நெய்தல் என நான்கு வகை கண்டு, முதற்பெரும் நாகரிகத்தினைப் பெற்ற மனிதன் தமிழனே என்று இவ்வாறு திண்தோள் உயர்த்தி மார் தட்டுகிறார் விறுகவியரசர் முடியரசனார்.

உழவும் உழவரும்

நிலத்தை வேளாண்மைக்குத் தகுந்தவாறு ஆழக்கிளறுதலே உழவு. "பலவுழவு புன்செய் மண்போல் நெகிழ்ந்து" என அகநானூறு (26:24-25) கூறுகிறது. உழும் பாங்கினைப் பெரும்பாணற்றுப்படை (196-200) யும் பகுத்துக்கூறுகிறது.

உழவு என்பது மிகக் கடுமையான உழைப்பாகும். உழவோரின் கடுமையான உழைப்பால்தான் நாம் உணவுண்டு உயிர் வாழ்கிறோம். ஆனால், அவ்வுழவனோ தானுண்ண உணவின்றி ஊருக்கு உயிர் கொடுக்கிறான். வறுமையில் வாடித் தன்னோடு தன் குடும்பத்தினரின் உயிரையும் இழக்கிறான்.

இந்நிலையைத் தன் வீறுகவிதையில்,

"காட்டைத் திருத்திக் கழனி எனவாக்கி
மேட்டைச் சமமாக்கி வேளாண்தொழில் புரிந்தான
பாராளும் காவலர்க்கும் பாட்டாளும் பாவலர்க்கும்
ஏராளும் காராளண் செய்யுதவி ஏராளம்"

"நாட்டுப்பசி போக்க நாற்றை நடுகின்றான்
வீட்டுப்பசி நீக்க வேளாளன் சாகின்றான்"

(முடியரசன், நூல் - புதியதொரு விதி செய்வோம்)

எனப் பதிவு செய்கிறார் வீறுகவியரசர். மேடுபள்ளம் நிறைந்த காட்டை ஏர் கொண்டு ஆழ அகழ்ந்து உழுது வயலாக்கி வேளண்மை செய்யும் வேளாளனாகிய காராளன், நாட்டை ஆளும் அரசர்கள், பாட்டெழுதும் புலவர்கள் உட்பட அனைத்து மக்களுக்கும் உணவளிக்கும் அவன், தன் குடும்பத்தினரின் பசி நீக்க முடியாமல் சாகின்றான் என உழவனின் நிலையைப் பார்த்து நெஞ்சம் குமுறுகிறார் முடியரசனார்.

இது போன்ற கருத்தைத் தனது பிரிதொரு கவிதையிலும் பாடுகிறார்.

"நாடாள்வோர் செங்கோலும் உழவன் ஏந்தும்
நலமிக்க கோலைத்தான் நோக்கி நிற்கும்

வீடாளும் இல்லறத்து மாந்தர் தாமும்
விளைவுசெயும் உழவனைத்தான் நோக்கி நிற்பர்
கூடாது வாழ்க்கையென வெறுத்த காவிக்
கோலத்தார் துறவுக்கும் அவனே காவல்
ஓடாமல் ஏர்நின்றால் உலகம் நிற்கும்
உலகளிக்கும் இறைவனுக்கும் பூசை நிற்கும்"

(முடியரசன், நூல் - வள்ளுவர் கோட்டம்)

நாடாள்வோர் கையிலேந்தும் செங்கோல் கூட உழவன் கைத்தாங்கி உழும் ஏர்க்கோலைத்தான் எதிர்பார்த்திருக்கும் என்றும், மக்கள் மட்டுமல்ல் வாழ்க்கையையே வெறுத்துக் காவியணிந்த துறவிகளும் உழவனுதவியை விரும்புவர். எனவே உலகமே உழவனைத்தான் நாடிநிற்கிறது.அதுமட்டுமா? உழவன் ஏர் பிடிப்பது நின்றால் உலகிற்கு அனைத்தும் அளிப்பதாக நம்பப்படும் இறைவனுக்கே பூசையாகிய உணவும் நின்றுவிடும் என்கிறார் கவிஞர்.

'சுழன்று மேர்ப்பின்ன துலக மதனா
லுழந்து முழவே தலை" (குறள்- 1031)

என்ற திருவள்ளுவரின் திருக்கூற்றும்,

"நீரின்றி அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

என்ற புறநானூற்று (18-18:3)க் கூற்றும் இங்கு நினைவுக்கு வருகின்றன.

'ஏர்நடக்கப் பார்நடக்கும் இல்லை என்றால்
எதுநடக்கும்? பசிநடக்கும் பிணி நடக்கும்
பொல்லாத அத்தனையும் நடக்கும் அன்றோ?
செய்யுள்நடும் உழவனுக்கும் பின் பாட்டாகும்
கூர்தொடுத்த ஏர்முனைக்குப் பின்னே சென்று
கும்பிட்டுட்டுத் திரிந்தேதான் உலகம் வாழும்."

(முடியரசன். நூல்-புதியதொரு விதி செய்வோம்)

வேளாண்மை செய்ய 'செய்' யாகிய வயலில் உழவன் ஏர் ஓட்ட வில்லையெனில், பசி, பஞ்சம், பட்டினி, நோய் போன்றத் தீமைகள் அனைத்தும் விளையும். எனவே பயிர் விளைவிக்கும் உழவனின் ஏருழவை விழைந்துதான் இவ்வுலகம்வாழும் என்கிறார் வீறுகவியரசர்.

"தொழுதுண்டு பின்செல்லும் மாந்தர் தம்மைச்
சுமக்கின்ற உலகமெனும் பெருந்தேர் செல்ல
உழுதுண்டு வாழ்பவனே ஆணி யாக
உதவுகின்றான் எனப்புலவன் உரைத்த பின்னே
எழுதுண்ட கோலாலே எழுதிக்காட்ட என்னுளது?"

(முடியரசன், நூல் - வள்ளுவர் கோட்டம்)

கவிஞரின் இக்கவிதை வரியில்,

"உழுவாரு லகத்தார்க் காணி ய∴.தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து" (குறள் - 1032)

என்ற குறளைச் சுட்டி, உலகம் என்ற வண்டி உருள, உழவன்அச்சாணியாவான்எனவள்ளுவப்புலவனேகூறியபின்னர், நான் என் கவிதையிலே எழுதிக் காட்ட என்ன உள்ளது என்று கேட்கிறார் முடியரசனார்.

"உழுவார்கரம் உயர்வாய்வர / உலகோர்முயல் திருநாள்
உனதாகிய திருநாடொரு / தமிழ்நாடென வருநாள்"

(முடியரசன், நூல் –முடியரசன்கவிதைகள்)

"செய்புரக்கும் உழவோரே செங்கோல் தாங்கிச்
செந்தமிழ ஆட்சியினைச் செய்வர் நம்மோர்
கைசிறக்கும் கலைசிறக்கும் தொழில்சி றக்கும்
காலமெலாம் களிசிறக்கும் தமிழ்சி றக்கும்"

(முடியரசன், நூல்-புதியதொரு விதி செய்வோம்)

'செய்' என்றால் வேளாண்மை செய்யும் வயல் என்று பொருள். வயல் வேண்மை செய்யும் உழவோர் நம்நாட்டில் ஆட்சி செய்யும் நாள் விரைவில் வரும். ஏர்க்கோல் தாங்கும் உழவர் அன்று செங்கோலும் தாங்குங்கால் நம் வாழ்வு சிறக்கும், கலைகள் சிறக்கும், எக்காலமும் மகிழ்ச்சி பொங்கும் என்று உறுதி கூறும் முடியரசர், தமிழ்மொழியும் சிறக்கும் என்ற தன் அவாவையும் இக்கவிதையில் வெளிப்படுத்துகிறார்.

கவிஞன் என்பவன் இயற்கையையும், காதலையும், கற்பனைகளையும் மட்டும் பாடி விட்டுப் போகக் கூடாது. ஓர் உண்மைக் கவிஞனுக்கு சமூக அக்கறையும் வேண்டும் என்பதைஇக்கவிதைகள் வழி வீறுகவியரசர் மெய்ப்பிக்கிறார்.

நிறைவுரை

'குடியானவன்' எனும் சொல் உயர்ந்த பொருளுடைய சொல்லாகும். (எடுத்துக் காட்டாக குடிமக்கள், குடியரசுத் தலைவர், குடியாட்சி). இச்சொல் நம் பண்டையத் தமிழ்ச் சமுகத்தில் பரவலாகப் புழக்கத்தில் இருந்தது. காட்டில் வாழ்ந்த மனிதன் தான் வளமாக வாழுமிடம் நோக்கி நாடி - தேடி இடம் பெயர்ந்து குடி புகுந்து நாகரிகம் பெற்றான். அந்நிலையில் உலகின் முதல் நாகரிகத்துக்குரியவன் தமிழனே. எனவே, உயர்ந்த பொருள் தரும் சொல்லே 'குடி ஆனவன்' என்னும் சொல். காலப்போக்கில், ஆடுமாடு மேய்த்து வந்து, நம்நாட்டில் புகுந்து, நம்மைப் பலவாறு ஏமாற்றி அடிமைப்படுத்திய அந்நிய அநாகரிக் கூட்டத்தால் தமிழன் தாழ்த்தப்பட்டான். குடியானவன் என்றால் தாழ்ந்தவன் என்று தவறான மாயையை நம்மிடமே பரப்பினான். எனவே உயர் தமிழ்க்குடியானவர்களகிய நாம், நமது பாரம்பரிய இயற்கை வேளாண்மையை மீட்டெடுத்து வீறுகவியரசர் முடியரசன் நாடிய குடியானவன்ந லம் நாடி, உழவப் பெருங்குடியினரைக் காப்பாற்றுவதன் வழி நம் நல்வாழ்வையும் காக்க முன்னத்தி ஏராவோம்.

பூங்கொடி ஒரு புதுமைக் காப்பியம்

செ.குணசீலி குழந்தை தெரஸ் *

முன்னுரை

“கவிஞர் யார்? என்பதற்கு எடுத்துக்காட்டுதானய்யா பகுத்தறிவுக் கவிஞர்” என்று தந்தை பெரியாரும், “திராவிட நாட்டின் வானம்பாடிக் கவிஞர்” என்று பேரறிஞர் அண்ணாவும், “என் மூத்த வழித்தோன்றல், எனக்குப் பிறகு கவிஞன்” என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசனும், “வேத்தவைப் பாவலரும் வேற்று மொழிகலக்குந், தீத்திறக் காலை தெளிமருந்தே -- மூத்த முடியரசரின்றி மொழி வனப்புச் செய்யும் முடியரசன் செய்யுண்முறை” என்று மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரும், “தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கின்ற மான் துள்ளும் வேகத்தைக் கவிதையினால் வான் செய்யும் கோடை மழை போலப் பொழிகின்றவர்” என்று தலைவர் கலைஞர் அவர்களும், “கவிஞர் என்றால் இப்படித்தான் வாழ வேண்டும் என்று அவர்களின் வாழ்க்கையைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்” என்று மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்களாலும், பலராலும் பாராட்டப்பெற்றவர் கவிஞர் முடியரசன்.

புத்த சமய சிந்தனைகள் தமிழகம் எங்கும் பரவ வேண்டும் என்ற எண்ணத்தில் சீத்தலைச் சாத்தனாரால் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற காப்பியமே மணிமேகலை ஆகும். இதைப்போல தமிழ் மொழியைப் பரப்புவதற்காக ஒரு காப்பியம் இயற்ற வேண்டும் என்ற ஆர்வ மிகுதியால் பாரதிதாசன் மரபில் வந்த கவிஞர் முடியரசன் 1964ஆம் ஆண்டு இயற்றிய காப்பியமே “பூங்கொடி” காப்பியம் ஆகும். சாத்தனார் இயற்றிய மணிமேகலையில் 30 காதைகளும், கவிஞர் முடியரசன் எழுதிய பூங்கொடியில் 31 காதைகளும் இடம்பெற்றுள்ளன.

---

* உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரி, கோவிலூர்.

பளிக்கறை புக்க காதையும், படிப்பகம் புக்க காதையும்

சாத்தனார் தம் காப்பியத்தில், மணிமேகலையின் மீது உதயகுமரன் விருப்பம் கொண்டான். அவள் சோலைக்குள் சென்றாள் என்பதை அறிந்து, மணிமேகலையை என் தேரில் ஏற்றிவருவேன் என்று உதயகுமர, எட்டிக்குமரனிடம் கூறியதாகப் படைத்துள்ளார். இதில் மணிமேகலையின் உளக்குறிப்பை, உதயகுமரன் அறியவில்லை. இதனை, முடியரசனார் தம் பூங்கொடியில், பூங்கொடியின் அழகைக் கண்டு மயங்கிய கோமகன்,

> "ஒண்டொடி அவள்மன ஒப்புதல் பெற்றுத்
> தண்டமிழ் நிகர்க்கும் தையல் கொழுநன்
> ஆவேன் யான் என ஆவல் துரப்ப" (பூங்: 4:53-55)

என்று முகுந்தனிடம் கூறுவதாகப் படைத்துள்ளார். இதில் தமிழ் பண்பாட்டின்படி பூங்கொடியின் ஒப்புதலைப் பெற்று அவளுக்குக் கணவன் ஆவேன் என்று கூறுவதாகப் படைத்துள்ளார் முடியரசன். சாத்தனார் தம் காப்பியத்தில், கரிகால்சோழன் வழித்தோன்றலாகிய உனக்கு நல்லறிவினையும், அமைதியையும், அரசியல் நீதியையும் வளையல்களை அணிந்த என்னைப் போன்ற பெண்கள் எடுத்துக் கூறலாமோ? என்று சுதமதி, உதயகுமரனுக்கு அறிவுரை கூறுவதாகப் படைத்துள்ளார். இதனை, முடியரசன் தம் காப்பியத்தில் அல்லி கோமகனுக்குக் கூறும் அறிவுரையில்

> "செல்வக்கோவே! சீர்சால் கல்வி
> மல்குறு நினக்கு மங்கையர் அறிவுரை
> குறிப்பது நன்றன் றாயினும் குறிப்பேன்" (பூங்: 4:101-103)

செல்வம் நிறைந்தவனே, பெருமையான கல்வியைக்கற்றவனே மங்கையர் அறிவுரை உனக்குத் தேவையெனில் நான் கூறுவேன் என்று பூங்கொடியின் தோழி, கூறுவதாகப் படைத்துள்ளார்.

சக்கரவாளக் கோட்டமுரைத்த காதையும், கல்லறை காண் காதையும்

சாத்தனார், தமது காப்பியத்தில் பௌத்த சமய நெறிகளை விளக்கியுள்ளார். மணிமேகலா தெய்வம் தருமச் சக்கரத்தினை உருட்டுகின்ற ஆதிமுதல்வனாகிய புத்த தேவனது பாத பீடிகையை வணங்கித் துதித்ததையும் சுடுகாடு, மற்றும் வரம் கொடுக்கும் தேவர்கள் பற்றியும் பாடியுள்ளார்.மேலும் மணிமேகலா தெய்வம் தனது மந்திர வித்தையால் மணிமேகலையை மயக்கி, தழுவிக் கொண்டு மணிபல்லவத்தீவை அடைந்த நிகழ்வுகளையும்குறிப்பிட்டுள்ளார். இத்தன்மையை, கவிஞர் முடியரசன் கால மாற்றத்தைக் காட்டிப்

படைத்துள்ளார். முத்தக் கூத்தன் கல்லறையைப் பூங்கொடிக்கும், அல்லிக்கும் அறிமுகப்படுத்த வரும் தாமரைக் கண்ணி என்னும் தமிழ்த் தேவதை மலர் சோலைக்குள் வரும்போது

தாமரைக் கண்ணி தமிழ்மொழி வாழ்த்திப்
பூமலர் மேனிப் பூங்கொடி தன்னொடு(பூங்: 6:21-22)

எனத் தாமரைக் கண்ணி தோன்றும் இடமெல்லாம் தமிழ் மொழியை வாழ்த்திப் பாடியுள்ளார். சாத்தனார், தம் காப்பியத்தில் சக்கரவாளக் கோட்டம் பற்றி மணிமேகலா தெய்வம் குறிப்பிடும்போது சுடுகாடு என்றால் பயமாக இருக்கும், அங்கே பிணம் தின்னும் பேய்கள் உள்ளது. பாசப் பூதம் இருக்கும் என்றுக்கூறி, அதைக் கண்டு பயப்பட வேண்டாம் என்று கூறியுள்ளார். ஆனால், பூங்கொடியில் பகுத்தறிவுக் கவிஞன்,

பேயென ஒரு பொருள் உண்டெனப் பேசுதல்
ஆயிழை! பேதைமை ஆகும் அறிகதில்!
மனவலி மிக்கார் மருளார் இருளில்
மனவலி குறைந்தார் மருளுவர் ஆதலின்
கட்படுபொருளெல்லாம் கருநிறப் பேயாய்
முற்படும் வாய்சொல மொழிதடு மாறும்
செயலறச் செய்யும், வியர்வுறும் நடுக்குறும்
மயலுறக் கண்ணொளி மங்கிட இருளும்
அச்சம் நெஞ்சில் அறையும் அதுதான்
பேயென உலகம் பேசும் உரமுளார்
ஆயும் அறிவுளார் அஞ்சார் (பூங்: 6:45-55)

என்று பகுத்தறிவோடு தாமரைக் கண்ணி பேசுவதாகப் படைத்துள்ளார். இதனை வள்ளுவர்,

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (குறள்:423)

எந்தக் கருத்தை எவர் சொன்னாலும் அக்கருத்தின் உண்மையைக் காண்பது அறிவு என்று கூறுகிறார். சுடுகாடு பற்றி முடியரசன் கூறும் செய்தியை ஆராய்ந்தால், பொது மக்களிடம் சுடுகாட்டில் பேய் உள்ளது என்ற அச்சம் காணப்படுகின்றது. அந்த அச்சத்தைப் போக்கும் விதமாக தாமரைக்கண்ணி என்னும் தமிழ்த்தேவதை பூங்கொடியிடமும், அல்லியிடமும் முத்தக்கூத்தன் கல்லறையைக் கண்டால் நெஞ்சுரம் ஏற்படும் என்பதை முடியரசனார்,

மொழிக்குயிர் ஈந்தநல் முத்தக்கூத்தன்
பளிக்கறைப் புதைகுழி பாங்குடன் மிளிரும்
அதனைக் காணின் அச்சம் தொலையும்
மதமுறு கொடியர் மனச்செருக் கொழிக்க
நெஞ்சுரம் ஏறும் நிமிர்ந்து நடப்பீர் (பூங்: 6:61-65)

எனக் கூறியுள்ளார். மேலும், முத்தக்கூத்தன் எவ்வாறு இறந்தான் என்பதையும் கூறியுள்ளார்.

முடியரசன் 1964 ஆம் ஆண்டு இந்தப் பூங்கொடி காப்பியத்தை இயற்றியதற்கானக் காரணத்தை வினவியபொழுது, மொழி வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு இல்லறந் துறந்து தன்னலம் வெறுத்துப் பொதுநலம் ஒன்றே பேணித் தன் வாழ்வையே கொடுக்கவல்ல பெண் மகளொருத்தி தமிழகத்திற்கு வேண்டும் என்று கூறுகிறார். தமிழ் மொழியைக் காப்பாற்றுவதற்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும் அறப்போராட்டத்தில் பெண்களும் ஈடுபட்டு குருதி சிந்தி சிறையில் அடைக்கப்பட்டனர். அங்கு உண்ணா நோன்பு மேற்கொண்டிருந்த முத்தக்கூத்தன் வஞ்சகர்களால் அடித்துக் கொலை செய்யப்பட்டான். அவனைப் புதைக்கப்பட்ட கல்லறையைக் கண்டாலும், அவ்வழி சென்றாலும் அச்சம் நீங்கி முழு வலிமை கிடைக்கும். பிறரின் மனச்செருக்கு அழிக்கும். மனவலிமை கிடைக்கும். பெண்கள் அச்சமின்றி செவ்விய நெஞ்சுரத்தோடு நடக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளார் முடியரசன்.

மணிபல்லவம் என்ற தீவு பூங்கொடியில் "கடல் நகர்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. முடியரசன், பூங்கொடியில் மக்களின் அறியாமையை,

"தாய்மொழி வளர்ச்சி தளர்ந்தஇந் நாட்டில்
நோய்என மடமை நுழைந்து பரந்தது"(பூங்: 6:84-85)

எனப் பிற மொழி நம் நாட்டில் புகுவதை கண்டித்துள்ளார்.

பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதையும், திருக்குறள் கற்றுணர்ந்த காதையும்

சாத்தனார், மணிமேகலைக்கு துன்பம் ஏற்படும் பொழுதெல்லாம் மணிமேகலா தெய்வம் தோன்றி, அவளது துன்பத்தைப் போக்கி ஆறுதல் மொழி கூறும். மேலும், மணிமேகலை புத்தபெருமான் சிலையை கண்ட வியப்பில் தன்னை அறியாது, கைகள் இரண்டும்

தலைமேல் குவிய, ஆனந்தக் கண்ணீரை உகுத்து, அப்பீடத்தை மூன்று முறை வலம் வர, அப்பீடிகைக் காட்சியால் தன் பழம் பிறப்பை உணர்ந்து கொள்வதாகவும்,காந்தார நாட்டு அத்திபதி என்னும் அரசனுடைய மைத்துனன் பிரமதருமனுக்கு அறம் புரிகையில் நாவலந்தீவில் பூகம்பம் ஏற்படும். அதனால், அத்தீவினை விட்டு அகன்று விடு என்ற செய்தியை, கவிஞர் முடியரசன் பழம் பிறப்பின் மீது நம்பிக்கை இல்லை என்கிறார். மேலும். பகுத்தறிவோடு நாவலந்தீவு என்பதை அறியாமை இருளில் உள்ள " கடல் நகர்" என மாற்றம் செய்துள்ளார். அக்கடல் வந்த பூங்கொடியைக் காண வந்த நாவலரை வணங்கி, தொழுது, வாழ்த்தி, எழுந்து மணங்கமழ் மாலையிட்டு, அவரிடம் பூங்கொடி

> **நின்மொழி ஏற்று நெடுநாள் பயின்று**
> **மன்னிய குறள்நூல் மாசறத் தெளிந்தேன் (பூங்:9:16-17)**

என்று பூங்கொடி கூறுவதாகப் படைத்துள்ளார். பிறகு பூங்கொடி கடல் நகர் மக்களுக்குத் தமிழ் உணர்வைக் கற்பிக்கிற போது சிலரால் பழியுரையையும், பல இடர்களையும் பெற்றேன் என்று நாவலரிடம் கூறுகிறாள். இதைக் கேட்ட நாவலர்,

> **அன்னாய்! உலகில் அறிவொளி பரப்ப**
> **முன்னுவோர்க் கெல்லாம் முதல்வர விதுவே**
> **தொல்லைகள் பொறுத்துத் தொண்டுகள் ஆற்றின்**
> **எல்லையில் இன்பம் எடுத்தது முடியும் (பூங்:9: 27-31)**

என்று கூறித், தாம் தமிழ்ப்பணி ஆற்றும்பொழுது தன் தலைமேல் கல்போட வந்த செய்தியை

> **பாறைக் கல்லொடு பக்கம் வந்தனர்**
> **வீரச்செயலென விழைந்தனர்(பூங்: 9:40-41)**

என்றும், தமிழ் மொழி உணர்வை மக்களுக்கு ஊட்டும்போது வரும் துன்பம், இன்னல் ஆகியவற்றை ஒரு பொருட்டாக எண்ணுதல் கூடாது என்பதை

> **இடரினைக் கண்டு தொடைநடுக் குறுதல்**
> **மடமை அன்றோ? மதியிலார் செயலது(பூங்: 9:46-47)**

என்றும், நாம் இந்த உடலையும் உயிரையும் பெற்றிருப்பது இந்த உலகைக் காப்பதற்கே என்பதை,

> **உடலும் உயிரும் உலகுக் காக்கினென் (பூங்: 9:45)**

என்று பூங்கொடிக்கு ஊக்கம் மூட்டுகிறார்.

மந்திரம் கொடுத்த காதையும், தொல்காப்பியம் உணர்ந்த காதையும்

இந்தக் காதையில் மணிமேகலா தெய்வத்தின் திருவருளினால், மணிமேகலை பழம்பிறப்பை உணர்ந்து என் பெருங் கணவன் எங்கு உள்ளான்? என்று கேட்டாள். அங்கே, சாத்தனார் சாதுசக்கரன் என்னும் முனிவரை அறிமுகப்படுத்தி நீ வேற்றுரு பெய்துவிப்பதும், வானிலே இயங்கச் செய்வதுமாகிய இரண்டு மந்திரங்களை அறிவுறுத்தி இது புத்தபெருமான் அருளிய திருவரம். இதை உறுதியாய் பெறுவாய் என்றும், ஒன்று மறந்தேன் என்று மீண்டும் இறங்கி வந்து யாக்கை உணவின் பிண்டமாகும். இப்பெரிய மந்திரமானது பெரும்பசியை நீக்கவல்லது என்று சொல்லி வானில் எழுந்து சென்றது.

கவிஞர் முடியரசன் தமது காப்பியத்தில், நாவலர் அறிவுரையில், திருக்குறளை நன்றாகக் கற்றுக் குறள் பரப்பும்போது

> **நற்பொருள் உணர்ந்த பொற்கொடி குறளின்**
> **சொற்பொருள் தெளிந்து சூழ வருவார்க்கு**
> **உணர்த்தும் பணியை உவப்புடன் பூண்டனள் (பூங்: 10:1-3)**

எனக் குறள் பணியை பூங்கொடி மகிழ்ச்சியுடன் செய்தாள் என்று கூறுகிறார். அப்பொழுது தாமரைக் கண்ணித் தோன்றி பூங்கொடியிடம் கோமகன் பாவலன் பெயரால் படிப்பகம் நிறுவிய தன்னலச் செயலைக் குறிப்பிட்டமையால் பூங்கொடி வருத்தம் அடைகிறாள் என்பதை,

> **உன்பெயர் சொல்லித் தந்நலம் நுகர்வோர்**
> **நின்னலம் சிறிதும் நினையார் உளரே (பூங்: 10:53-54)**

என்று முடியரசனார் கூறியுள்ளார்.

சாத்தனார், மணிமேகலையில் பௌத்த சமய உண்மைகளை அறிந்து கொண்டதால் மணிமேகலா தெய்வம் இரண்டு வரம் கொடுத்தது. தமிழ் தமிழ் என்று பேசுவோரெல்லாம் தமிழ் காப்போர் என நினைப்பது தவறு. தமிழுக்கும் அகப்பகை, புறப்பகை என இரண்டு உண்டென மொழிவதோடு யார்? தமிழன், தமிழ் உணர்வு உடையவன் யார்? என்பதை முடியரசனார்,

> **உள்ளமும் உயிரும் உணர்வும் தமிழென**
> **உள்ளுவோன் எவனோ அவனே தமிழன் (பூங்: 10:57-58)**

என்று கூறியுள்ளார். மேலும், அகப்பகை, புறப்பகை ஆகிய இருவகைப் பகையை வெல்ல வேண்டுமெனில் பூங்கொடியே பன்மொழி பயிலவும், பிழைபடத் தமிழைப் பேசியும், எழுதியும் பிழைப்போர்க்கு, பேரறிவூட்டு

என்றும், இலக்கண நூலை இழித்தும், பழித்தும் உரைப்பவர்களின் கொட்டம் அடக்கு என்றும், ஐவகை இலக்கணம் உணர்வார் மொழியில் உயர்வார் என்றும் தாமரைக் கண்ணி பூங்கொடிக்கு எழுச்சியூட்டியதாகப் படைத்துள்ளார் முடியரசனார்.

நிறைவாக

சாத்தனார் தமது காப்பியத்தில் அமைத்த அமைப்பையே, முடியரசனார் பின்பற்றியுள்ளார். சாத்தனார் மணிமேகலையிலும், முடியரசனார்பூங்கொடியிலும் ஆசிரியப்பாவைக் கையாண்டுள்ளனர். கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் படைக்கப்பட்ட மணிமேகலை "அறம்" தழைக்கப் பாடுபட்டாள். 1964 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட பூங்கொடி "தமிழ்" தழைக்கப் பாடுபடுகின்றாள். சாத்தனாரின் அமைப்பை பின்பற்றிய முடியரசனார் தமது காப்பியத்தில் புதுமைக் காதைகளாக படிப்பகம் புக்க காதை, கல்லறை காண் காதை, திருக்குறள் கற்றுத் தெளிந்த காதை, தொல்காப்பியம் உணர்ந்த காதை, இசைப் பணி புரிந்த காதை, நூல் நிலையம் அமைத்த காதை, யாழ் நூல் பெற்ற காதை, சொற்போர் நிகழ்த்திய காதை, அறப்போர் நிகழ்த்திய காதை எனப் படைத்துள்ளார். சமயத்தைப் பரப்புவதையே குறிக்கோளாகக் கொண்டு படைக்கப்பட்ட காப்பியம் மணிமேகலை ஆகும், தமிழ் மொழி வளர்ச்சிக்காக இல்லறம் துறந்து, தன்னலம் விடுத்து, பொதுநலம் பேணும் பெண்கள் தமிழகத்தில் உருவாக்கப்பட வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு படைக்கப்பட்ட பூங்கொடி ஒரு புதுமைக்காப்பியம் ஆகும்.

மொழியுரிமைக் குரலோன் முடியரசனார்

பெ.குபேந்திரன் *

தற்காலத் தமிழ் இலக்கியத்தில் பாரதியும், முடியரசனும் தவிர்க்க இயலாத சாதனையாளர்கள். இருவரும் இலக்கியத்தின் பல்வேறு வடிவங்களில் ஆளுமை செலுத்தியிருந்தாலும் கவிதைகளில் மிகவும் சிறப்பு மிக்கவராய் வெற்றிக் கொடியை நாட்டியுள்ளனர். மேலும் கவிஞர்கள் சாதாரண மக்களின் வாழ்க்கை உண்மைகளை எளிமையான நடையில் படிப்போரை உணர வைக்கக்கூடிய ஆற்றல் படைத்தவர்கள். அதுபோல தமிழின உணர்வும், தன்மான உணர்வும் தலைதூக்கி நின்றிட, தன் படைப்பகளின் சிறப்பால் பாரதியைப் போலவே தமிழர்களின் இதய சிம்மாசனத்தில் சிறப்போடு அமர்ந்திருப்பவர் கவியரசர் முடியரசனார் ஆவார். உவமை, உருவங்களில் பழமையையும் புதுமையையும் இணைத்த முடியரசனார் வளமான கற்பனை, எளிய சொல்லாட்சி, மனித உணர்வுகளின் படப்பிடிப்புகளால் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தவர். அவ்வகையில் முடியரசனாரின் கவிதைகளில் வெளிப்படும் தமிழ்ப்பற்று, காப்பிய பதிவு, அரசியல் குறித்து வெளிப்படும் தமிழ்ப்பற்று, காப்பியப் பதிவு, அரசியல் குறித்து விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ்ப்பற்று

முடியரசனார்க்கு மொழி-இனம்-நாடு குறித்த கண்ணோட்டம் மிகத் தெளிவாக இருந்தது. மக்கள் மனதில் தமிழ்ப்பற்றை ஊட்டவல்ல பல பாடல்களிலும் கவிஞரின் தமிழ்ப்பற்று மிகுந்திருப்பதைக் காணலாம். மேலும் தாய்மொழி மீது பற்றின்றி வாழ்பவரை நோக்கி, தமிழ் மொழியை காப்பதற்கும் இந்தி மொழியை அழிப்பதற்கும் வாளேந்திப் போர் புரியுமாறும் அழைப்பு விடுக்கின்ற முடியரசனாரின் மனம்,

> "உலகத்து முதன்மொழியாம் தமிழைத் தங்கள்
> உயிர்மூச்சாக் கொண்டிலங்கும் தமிழ் நாட்டிற்
> கலகத்தை உருவாக்கும் வெறியர் கூடிக்
> கடுகளவுத் தகுதியிலா இந்தி தன்னைப்
> பலகட்டுக் கதைகூறிப் புகுதலிட்டார்

---

* முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்ப் பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி - 3.

படையெடுத்தார், தடியெடுத்தார், பயனே யில்லை
நிலை கெட்டோர் மூன்றுமுறை முயன்று பார்த்தும்
நினைப்பொன்றும் பலிக்கவில்லை தோல்வி கண்டார்"

என இந்தி மொழியை அழிக்கவும், தமிழ் மொழியை தூக்கி நிறுத்துவதற்கும் கவிஞர்கள் பல்வேறு முறையில் தனது கவிதையின் வாயிலாக படையெடுத்தும், தடியெடுத்தும் பயனில்லாமல் போய் தோல்வி கண்ட நிலையினை இக்கவிதையின் வழிவிளக்குகிறார்.

தமிழ் மொழி பேசும் கோவில் பூசாரி கோவில் வழிபாட்டில் தமிழ் மொழியில் அர்ச்சனை செய்யாமல் வேறு மொழியில் செய்தால் அவர்களின் வாலை சற்று நறுக்கி விடவேண்டும் என்கின்ற தமிழ்ப்பற்று கொண்ட முடியரசனார்,

"வடமொழி ஒன்றே ஏற்பர்
வண்டமிழ் ஏலா ரென்றால்
கடவுளர் உருவக் கல்லைக்
கடலிடை வீச லன்றி
இடமுடைக் கோவி லுக்குள்
இன்னுமேன் வைத்தல் வேண்டும்?" (மு.கவி.ப.67)

எனும் பாடல் வரிகளில் மூலம் வடமொழி பேசுபவர்கள் இனிமேல் கோவில் கருவறைக்குள் அர்ச்சனை செய்யக் கூடாது என்று தன் கவிதையின் வழி தம் சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

செந்தமிழினை,

"வெள்ளையனும் நமக்குரிமை தந்து விட்டு
வெளிப்போந்தான் ஆதலினால் ஆங்கிலத்தால்
எள்ளளவும் செந்தமிழ்க்குத் தீமை யில்லை
இனியதமிழ் அரியணையில் அமரும் என்றே
உள்ளமதிற் பொங்கி எழும் ஆர்வம் கொண்டோம்"
(மு.கவி.ப.125)

எனும் அடிகள் ஆங்கிலத்தால் தமிழுக்கு இடையூறு இல்லை என்றும் விரைவில் தமிழ் அரியணையில் அமரும் என்பதை இக்கவிதை வரிகள் பறைசாற்றுகின்றன.

காப்பியப் பதிவு

பழந்தமிழ் காப்பியங்கள் மக்களைத் தன்வயப்படுத்துவதையே முதன்மையாகக் கொண்டிருந்தன. அவை செய்யும் வடிவாயினும் கதை கூறும் பாங்கில் அமைந்து சமுதாயத்திற்குத் தேவையானதைக் கூறியதே அதற்குக் காரணமாகும். அவ்வகையில் முடியரசனாரின் காப்பியங்களில் கல்வி, தமிழ்ப்பற்று, மதம், மொழி, இனம், பொருளாதாரம், பெண்ணுரிமை, அரசியல், தொழில் அனைத்திலும் ஏற்றத் தாழ்வுகளும் வேற்றுமைகளும் நிலவிய போதிலும் அயலானிடமிருந்து விடுதலை பெற அனைவரையும் ஒன்று படுத்துவதே அன்றைய படைப்பாளர்களின் கொள்கையாக இருந்தது. குறுகிய காலத்தில் புரிந்து விரும்பி ஏற்கும் நிலையில் படைக்கப்பட்ட காப்பியங்கள் பழைய தமிழ்க்காப்பியங்களைப் போன்று பெரிதாக இல்லாமல் மிகச் சிறிதாக படைக்கப்பட்டிருந்தாலும் முதல், இடை, கடை முடிவுப் பகுதிகள் ஆகிய அனைத்தும் ஒன்றோடொன்று தொடர்புடையனவாய் முழுமை பெற்றனவாய்ப் படைக்கப்பட்டன. அவ்வகையில் படைக்கப்பட்ட முடியரசனாரின் பூங்கொடி, வீரகாவியம், ஊன்றுகோல் ஆகிய மூன்று காப்பியங்கள் போற்றுதற்குரியன.

தமிழ் இனத்திற்குப் பெருமை சேர்த்திட வேண்டும் என்பதை முடியரசனார் ‘தமிழ் காப்போம்’ எனும் நூலில்,

“கண்ணகிக்கு வரப்போகும் இடர்நி னைந்து
கண்ணீரை நிறைத்துடலம் தோன்றா வண்ணம்
வண்ணமலர் பலகொண்டு மறைத்துச் சென்றாள்
வையையெனும் குலக்கொடிஎன் றிளங்கோ சொல்வர்”
(மு.கவி.ப.13)

எனும் அடிகளில் இளங்கோவடிகள் சிலப்பதிகாரப் காப்பியம் எழுதப் போகும் முன்னரே கண்ணகிக்கு வரும் இடர்நிலையினை தனது கவிதைகளின் மூலம் காப்பியத்திற்கு உண்டான பதிவுகளை முடியரசனார் கூறியுள்ளார்.

அரசியல்

சமூகத்தில் இது வேண்டாம் என்று எதை ஒதுக்கினாலும், நியாயமான சிந்தனை ஓட்டங்களைக் கொண்ட மனிதன் வேண்டாம் என்று ஒதுக்கியதைப் பற்றிப் பேசாமல் இருக்க முடியாது அவ்வகையில் கவியரசர் “முடியரசனாரின் படைப்புகள்” என்ற கவிதைத் தொகுப்பு நூலில் பல இடங்களில் சமூக நோக்கில் அரசியலைச் சாடுகிறார். நம் நாடானது பலகட்சிகள் உருவாகி நாட்டை சாதி அடிப்படையில்

வாக்குகளைப் பெற்று தமிழ் நாட்டை சீரழித்து வருகின்றனர். அவற்றிலிருந்து விடுபட அந்நாள் எந்நாள் வரும் என்பதினை,

“நன்றுபடாச் சமயங்கள், பிரிவு கொண்ட
நாலுவகை வருணங்கள், அவற்றுட் சாதி
என்றுபல ஆயிரங்கள், பகைமை கொண்டை
இயங்கிவரும் பலகட்சி இவற்றுட் சிக்கி
ஒன்றுபடாத் தமிழ்நாடே நீதான் இங்கே
உருப்படுமோர் நாள்வருமா? அந்நாள் எந்நாள்?
(மு.கவி.ப.131)

எனும் அடிகளில் வேதனையுடன் கூறுகிறார்.

“தேர்தலை நினைத்து விட்டேன்
சிந்தையும் உறங்க வில்லை
நேர்மையை அங்குக் காணேன்
பொய்ம்மையே நெறியக்கண்டேன்
தேர்வரும் நாளைப் போலத்
தெருவெலாம் கூச்சல் கேட்டேன்
ஊர்வலம் பலவுங் கண்டேன்
உண்மையே காண வில்லை” (மு.கவி.ப.170)

எனும் அடிகளின் மூலம் தேர்தல் வந்ததும் அரசியல்வாதிகள் தெருவெல்லாம் கூச்சல் போட்டு உண்மையைத் தவிர பொய்யுரைகளை மட்டுமே பொதுக்கூட்டங்களில் பேசுவதினை தம் கவிதையின் வழி சாடியுள்ளார்.

முடிவுரை

முடியரசனார் தம் கவிதைகளில் வழி தமிழ் மொழியின் உரிமைக்கு குரல் கொடுத்தவர் இவர். சுயமரியாதைக் கொள்கையைத் தன் எழுத்திலும், பேச்சிலும் செயலிலும், கருத்திலும், உயிர் மூச்சாய்க் கொண்டதனால் இவரது படைப்புகள் பற்றி நிறைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டால் இருபதாம் நூற்றாண்டுத் தமிழின், மரபுக் கவிதைக் கூறுகள் மேலும் புலப்படும்.

முடியரசனாரின் வாழ்வும், தமிழ்ப்பணியும்

பெ.குபேந்திரன் *

இருபதாம் நூற்றாண்டின் கவிதையுலகில் புதுமை பூத்த மரபுக் கவிஞர் முடியரசனார் ஆவார். இவரது படைப்புகளில் இலக்கண, இலக்கிய வளமையினையும், மொழி வளத்தையும், நுட்பத்தையும், செறிவையும், கற்பனை நயத்தையும், எளிய நடையினையும், சிறந்த கருத்துக்களையும் கொண்டு ஒருங்கே வெளிப்படுத்தக் கூடிய வகையில் அமைந்திருப்பதின் வழி தம் கவிதைக் கருவியைக் கூர்தீட்டிய முடியரசனார் தம் முன்னோர் வழி நின்றாலும், தனித்துவமாய்த் தன் படைப்புகளை அமைத்துக் கொண்டதன் மூலம் இலக்கிய உலகில் தடம்பதித்த கவிஞர் வரிசையில் ஒருவராகத் திகழ்ந்து விளங்கினார். பாவேந்தர் பாரதி தாசனாராலும் உவமைக் கவிஞர் சுரதாவாலும் போற்றிப் பாராட்டினைப் பெற்றவர் முத்தமிழ்க் கவிஞர் முடியரசனார் ஆவார். அவ்வகையில் இவரது வாழ்க்கைச் சுவடுகளையும் தமிழ்ப் பணியினையும் எடுத்தியம்பும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

இல்லறம் ஓர் நல்லறம்

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞரான முடியரசனார் அவர்கள் 07.10.1920-ஆம் ஆண்டு பெரிய குளம் தென்கரையில் சீதாலட்சுமி - சுப்புராயலு இணையிருக்கு ஐந்தாவது பிள்ளையாக பிறந்தார். ஏற்கனவே பிறந்த நான்கு குழந்தைகளும் இறந்த காரணத்தினால் இவர் தாய்மாமன் துரைசாமி முடியரசனாரை கண்ணும் கருத்துமாய் பாதுகாத்து வளர்த்து வந்தார். முடியரசனாரின் இயற்பெயர் 'துரைராசு' என்பர் இவர் தந்தை பெரியார், அறிஞர் அண்ணாவின் மீது பற்று கொண்டமையால் அவர்களின் கொள்கை வழிக் கலப்புத் திருமணமாக கவிஞர் முடியரசனார் 02.02.1940-ஆம் ஆண்டு கலைச்செல்வி என்பவரைத் திருமணம் செய்து கொண்டார் இல்லறத்தின் பலனாக குமுதம், அல்லி என்ற இரண்டு பெண்மக்களும், பாரி, அன்னம், குமணன், செல்வம் என்ற நான்கு ஆண்மகனும் உள்ளனர். தம் மக்களை ஒழுக்க நெறியில் வாழச் செய்தவர் தமது ஆறு மக்களுக்கும் திருமணம் செய்து கொடுத்து ஐந்து பேரன்களும், நான்கு பேத்தியும் கண்டவர். இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என

---

* முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்ப் பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-3.

முத்தமிழ்க் கவிஞராய் கவிதை உலகில் முடிசூடா முடியரசராய்த் திகழ்ந்த முடியரசனார் 03.12.1998-ஆம் நாள் தான் 79-ஆம் வயதில் இயற்கை எய்தினார்.

வீரப்புலவர்

1934-இல் பிரவேச பண்டிதத் தேர்வும், சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் புதுமுக வகுப்பத் தேர்வில் வெற்றி பெற்ற இவர் கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் மாணவர் தன்னெறிக் கழக மன்றத்தில் பேசியமைக்காக 'வீரப் புலவர்' என்று விருதினை பெற்றார். மேலும் கல்லூரியில் பயின்று வந்த காலத்தில் அறிஞர் அண்ணா சொற்பொழிவாற்றியதைக் கேட்டு தம் துரைராசு என்ற பெயரை 'முடியரசன்' என்று மாற்றிக்கொண்டார். இதன் மூலம் சிறு வயதிலேயே தமிழ்ப்பற்று கொண்டதால் சமூகத்தில் நடக்கும் இனம், மொழி, நாடு குறித்து ஆழ்ந்து சிற்திக்கத் துவங்கிய இவர் தமது கவிதைகளில் கருத்தை உணர்ச்சியோடு எடுத்தியம்பியுள்ளார்.

ஆசிரியர் பணி

"ஆசிரியப் பணி அறப்பணி அதற்கே உன்னை அர்ப்பணி" என்ற சான்றோர் வாக்கிற்கேற்ப விடா முயச்சியாலும், கடின உழைப்பாலும் தனக்கென்று தனி முத்திரையைப் பெற்ற முடியரசனார் தமிழ் ஆசிரியராக சென்னையில் உள்ள முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப் பள்ளியில் (1947-49) இரண்டு ஆண்டுகள் பணி புரிந்து வந்தார். பின்னர் காரைக்குடியில் உள்ள மீனாட்சி சுந்தரரேசனார் உயர்நிலைப் பள்ளியில் (1949-78) 29 வருடங்களாக தமிழாசிரியராக பணி புரிந்தும் பல்வேறு பொறுப்புகளில் இருந்து மாணவர்களுக்கு கவிதையினை புகுட்டியும் பல்வேறு அமைப்புகளில் இருந்த தமிழினை வளர்த்த பெருமை இவருக்குண்டு.

இவரது படைப்புகள்

கட்டுரை

தமிழ் இலக்கணம், பாடுங்குயில்கள், சீர்திருத்தச் செம்மல் வை.சு.சண்முகனார். எப்படி வளரும் தமிழ்?, பாட்டுப் பறவையின் வாழ்க்கைப் பயணம் என கட்டுரை தொகுப்புகள் வெளிவந்துள்ளது.

கவிதை

முடியரசனாரின் கவிதைத் தொகுப்புகளாக முடியரசன் கவிதைகள், காவியப்பாவை, கவியரங்கில் முடியரசன், பாடுங்குயில், நெஞ்சு பொறுக்கவில்லையே, மனிதனைத் தேடுகின்றேன், தமிழ்

முழக்கம், நெஞ்சிற்பூத்தவை, ஞாயிறும் திங்களும், வள்ளுவர் கோட்டம், புதியதொரு விதி செய்வோம், தாய்மொழி காப்போம், மனிதரைக் கண்டு கொண்டேன் என்னும் 13 கவிதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன.

பிறநூல்கள்

காப்பிய நூல்களாக பூங்கொடி, வீரகாவியம், ஊன்றுகோல், இளம் பெருவழுதி என்னும நாடகக் காப்பிய நூல்களும் இதில் அடங்கியுள்ளது.

கடித இலககிய நூல்களான அன்புள்ள பாண்டியனுக்கு மற்றும அன்புள்ள இளவரசனுக்கு என்னும் இரண்டு நூல்களில் பல்வேறு சிறப்பு அம்சங்களைக் கொண்டு கடிதத்தின் சிறப்பினை விவரித்து எழுதியுள்ளார்.

சிறுகதைத் தொகுப்பாக 'எக்கோவின் காதல்' என்னும் தலைப்பில் முடியரசனார் அவர்கள் சிறுகதையினை அவற்றில் தொகுத்துள்ளார்.

கவிஞரது நூலின் சிறப்புகள்

1986-ல் வெளிவந்த 'நெஞ்சு பொறுக்குதில்லையே' என்னும் கவிதை நூல் நாட்டில் உள்ள சமுதாயப் பிரச்சினைகளை கண்டு முடியரசனார் அவர்கள் நூலின் வாயிலாக விடுதலை பெற்ற பின்பும் நம் நாட்டின் சமுதாயம் சீர்குலைந்து உள்ள நிலைமையினை விவரித்து எழுதியுள்ளார்.

'தமிழ் முழக்கம்' மனிதனைத் தேடுகிறேன் எனும் கவிதை நூல்களின் வாயிலாக நாட்டில் உள்ள மக்கள் மனிதநேய மாண்புகளை மறந்து ஒருவருக்கு ஒருவர் அடித்துக் கொண்டு வாழும் நிகழ்வினையும் ஒருவன் முன்னேற என்ன வேணுமானாலும் செய்வான் என்பதினையும் விளக்கி காட்டியுள்ளார்.

தீண்டாமை காரணமாக கலப்புத் திருமணம் செய்துகொண்ட இவர் தந்தை பெரியாரையும், அறிஞர் அண்ணாவையும் தம் இரு கண்களாய் போற்றி அதன் வழியில் பின்பற்றியும் வந்தவர் என்பதற்கிணங்க 'ஞாயிறும் திங்களும்' என்னும் நூலில் தநதை பெரியாரைப் பற்றியும், 'வள்ளுவர் கோட்டம்' என்னும் நூலில் அறிஞர் அண்ணாவைப் பற்றியும் புகழ்ந்தும் தீண்டாமையினை விளக்கியும் கூறியுள்ளார்.

இவர் மொழிப்பற்று மிக்கவர் என்பதற்கிணங்க எடுத்துக்காட்டாய் 'தாய்மொழி காப்போம்' என்னும் நூலில் மொழியின் வளர்ச்சியினையும், வீழ்ச்சியினையும் விவரித்து கூறியுள்ளார்.

சிலப்பதிகாரம் எவ்வாறு காப்பியத்திற்கு சிறப்புப் பெற்று திகழ்கின்றதோ அதே போல முடியரசனாரின் காப்பிய நூல்களில் ஒன்றான 'வீரகாவியம்' என்னும் காப்பிய நூல் தமிழரின் மரபிற்கேற்றவாறு வரையறுத்து படைத்துள்ளார்.

தமிழ் மொழியில் வேற்று மொழிகள் புகுந்து பெரிதும் காணப்படுவதினை கண்ட இவர் அதனை அகற்றும் வகையில் மேடைகளில் இசைப் பாடியும் பாடியுள்ளார். அவ்வகையில் இவரது சிறந்த நூலான 'காவியப் பாவை' நூலில் இசைத் தமிழ் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதினையும், இசைத்தமிழே முதன்மை மொழி என்பதினை பல்வேறு மேடைகளில் ஏறி பாடிய இவர் இசையின் கீர்த்தனைகள் இசையுடன் பாடும் போது பல்லவி, அநுபல்லவி, சரணம் என்ற அடிப்படையினை தமிழ் மொழிக் கொண்டு எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என தூய தமிழ் மொழியில் மாற்றிய பெருமை முடியரசனார்க்கு உண்டு. மேலும் இசை நூல்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதினை 'பாடுங்குயில்' நூல்களின் வழி தெளிவாக விவரித்து எழுதியுள்ளார்.

முடிவுரை

சாதாரண மனிதன் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து மடிகின்றான் அவன் தன் வாழ்வை வாழ்ந்து கழிப்பதோடு அமைந்து விடுகிறான். இவற்றுக்கு மாறாக முடியரசனார் தமிழ் மீதும், தமிழ் இனத்தின் மீதும், தமிழ் இலக்கியங்களின் மீதும் தீராக் காதல் கொண்ட இவர் தனது படைப்புகளின் வாயிலாக சமுதாயத்தை நல்ல முன்னேற்றத்திற்கு கொண்டு சேர்த்த பெருமையினை இவரது படைப்புகள் வழி அறிய முடிகின்றது.

காத்திருப்போம்...

இளங்கம்பவாரிதி ஆ.குமார் *

"வாடிய பயிரைக்கண்ட போதெல்லாம் வாடினேன்" என்றார் வள்ளலார். கவிஞர்களின் கவினூறு நெஞ்சம் கனிந்து துடிக்கும் மென்மை பெற்றது போலும்! தமிழ்க்கவிமரபில் நெஞ்சத்துடிப்பும், ஈடுபாடும் தொன்றுதொட்டு வரும் கவிமரபு போலும்! நம்முடைய வீறுகவியரசர் முடியரசனாரும் நெஞ்சம் துடித்து நெகிழ்ந்து பாடுகிறார்.

"நெஞ்சத்துடிப்பு" என்று கவியரசர் பாடியுள்ள பாடல்களே இதற்குச் சான்றாகும். வீறுகவியரசர் வீடுவேண்டி நெஞ்சம் துடித்தாரில்லை; புகழ்வேண்டித் துடித்தாரில்லை; செல்வம் வேண்டித் துடித்தாரில்லை; தாய்த்தமிழகம் இப்படி நலிந்து கிடக்கிறதே என்று துடியாய்த் துடிக்கின்றார்.

எழில் சுமந்த தமிழ் நாட்டார் வந்தவர்களிடம் ஏமாந்து குனிந்துபோன பித்தராகிவிட்டாரே, என்று கவிஞர் நெஞ்சம் துடித்துப்போகிறார்; நாட்டில் இருப்போர் நல்லவர் யார்? கெட்டவர் யார் என்று கூர்ந்து பார்க்கும் நிலையில் தமிழ் மக்கள் இல்லையே; வாய் இனிக்கப் பேசுவோரைத் தமிழ்மக்கள் நம்புகிறார்களே! சாதி இல்லை என்று முரசறைந்த பாரதியும் போய்விட்டான்; ஆனால் தமிழகத்திற்குள்ளே புகுந்துவிட்ட சாதியம் போகவில்லையே! கடவுள் பெயரால், மதத்தின் பெயரால் பகை மூட்டம் மூண்டு எழுகின்றதே! ஆறறிவுப் போர் தொடுத்த பெரியாரின் முழக்கங்கள் என்ன ஆயின? இராமலிங்கர் அருட்பாவை ஓதுகின்றார், ஆனால் சழக்குகள் ஓயவில்லையே! என்றெல்லாம் கவியரசர் நெஞ்சம் துடித்துப் பாடிச்செல்கிறார்!

கல்வி வளர்ந்தது; நிலையங்கள் பெருகின; பத்திரிகைகள் எழுந்தன! அவரவரும் எழுதுகோல் ஏந்தினர்! ஏடுகள் மலர்ந்தன! ஆனால் விளைந்தது என்ன? கவிஞர் வினா விடுத்து, துடித்துப்போகின்றார். எழுத்தெல்லாம் காம மயக்கம்; பத்திரிகை

* செயலாளர், கே.எம்.எஸ். சிந்தனைச் சோலை, தேவகோட்டை.

முழுதும் மனமயக்கம்! இதற்குத்தான் படிப்பா? இதற்குத்தான் எழுதுகோலா? என்றெல்லாம் கேட்டுக்கவிஞர் மனம் வெதும்பி, **கதை இதுவா? கலை இதுவா இளைய நெஞ்சம் கருகிவிடும் வழியன்றோ!** எனத்துடித்தேன்' என்று கவியரசர் துடித்துப்போகிறார்!

கலை, இலக்கியம், நடிப்பு, திரை என்ற அனைத்துத் துறைகளிலும் தீமை புகுந்துவிட்டது கண்டு வீறுகவியரசர் வேதனை அடைகிறார். மக்கள் நெஞ்சம் தெருப்புழுதிபோல ஆகிவிட்டதே என்று துடித்துப்போகிறார். திரைப்படம் என்ற காட்சி ஊடகம் மிகவும் கெட்டுப்போய்,கேடுகளே தமிழ் நிலத்தில் பரவிவிட்டது கண்டு கவியரசர் பாடியுள்ள ஒரு பாட்டு நினைப்பதற்குரியது; சிந்திப்பதற்குரியது; திரைப்படம் என்னும் கருவியை மாமேதை போன்ற சிந்தனையாளர்கள் கையில் எடுத்துக்கொண்டது சரியே! படைப்பதற்கு முன் வந்ததும் சரியே! ஆனால் படைத்தது என்ன? என்று வினா எழுப்பி, அதனால் விளையும் சமுதாயக் கேடுகளை எண்ணிக் கவிஞர் நெஞ்சம் பதைக்கிறார். திரைப்படம் என்னும் காட்சி ஊடகம் வழியே இளைஞர்களுக்கு, மாணவர்களுக்கு, சமுதாயத்துக்குச் சொல்ல வேண்டிய எத்தனையோ பல நல்லறங்கள் இருக்க முழுதும் எதிர்மறையாய், ஆபாசமாய், காமக்கிளர்ச்சியாய்ப் படைக்கின்றீர்களே! எனக் கேட்டுக்கவிஞர் நெஞ்சு பதைபதைக்கின்றார்.

> "கற்பழிப்பு, களவாடல், கடத்தல் என்ற
> கயமையெலாம் கற்பிக்கும் கதைகள், கெட்ட
> சொற்பெருக்கம் கொண்டொழுகும் காமப் பாட்டு,
> துள்ளிவரும் நடனமெனப் பேயின் ஆட்டம்
> மற்போர்கள் செய்வதுபோல் காதற்காட்சி,
> மாமேதை இயக்குநர்கள் திறமை எல்லாம்
> கற்போர்கள் நெஞ்சத்தைக் கெடுப்ப தல்லால்
> கடுகளவு நலமேனும் தருவ துண்டோ?"

என்று கேட்டுக் கவிஞரின் நெஞ்சம் துடியாய்த் துடித்துப்போகிறது. இந்த நிலை என்று மாறும்? மடியும்?

காலம் வரும்; பொறுத்திருப்போம்! வீறுகவியரசர் முடியரசனாரின் கவிதைகளை நெஞ்சிலேற்றிக் காத்திருப்போம்!

பூங்கொடியின் மாண்புகள்

முனைவர் அ.சங்கர்தாஸ் *

நாட்டினையும், மக்களையும் ஏட்டில் காட்டுவது தான் இலக்கியம். காலத்தையும் வென்று வாழும் திறம் படைத்த எண்ணங்களுக்கு எழுப்பிய சின்னங்களாகவும் இலக்கியங்கள் திகழ்கின்றன. சமூகச் சீர்கேடுகளைத் தடுத்து சீர்திருத்தப் பாதையில் மக்களை நெறிப்படுத்துவது இலக்கியத்தின் குறிக்கோள். மக்களின் வாழ்வியல், சமூகமேம்பாடு, பெண்களின் உணர்வுநிலை, பண்பாடு, உணர்ச்சித்திறன், உள்ளுணர்வு போன்றவற்றை உயிரோட்டத்துடனும் விளக்கிக்காட்டுவது இலக்கியத்தின் பணியாகும். இவ்வாறு போற்றுதற்குரிய இலக்கியங்களில் தனக்குள் ஒரு வரம்பு செய்து கொண்டு வந்தது காப்பியங்களாகும். இவை தோன்றிய கால முதலே புதுமையும் புரட்சியும் உடையதாகக் காணப்பட்டது. அவை காலந்தோறும் வளர்ச்சிநிலையில் பண்புகள், மரபுகள் மாறாமல் வந்துள்ளது என்பதற்கு இக்காலக்காப்பியங்கள் சான்றாக அமைகின்றன. முதன்மைக் காப்பியத்திற்கு இணையான இக்காலக் காப்பியங்களில் தனக்கென ஒரு கொள்கையை வகுத்துக்கொண்டு பகுத்தறிவுக் கருத்துக்களையும், சமூக மாற்றங்களையும் முன்வைத்த காப்பியப்புலவரில் முடியரசனார் என்பவர் தனிததுவம் பெறுகிறார். அவர் படைத்த பூங்கொடி எனும் காப்பியத்தில் பூங்கொடி எனும் பெண் தலைப்பாத்திரத்தின் மாண்புகள் எவ்வாறு புரட்சி பொருந்தியதாக உள்ளது என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

காதலுணர்வு

உலகத்து உயிர்கள் காதலென்னும் தன்மைக்குள் அகப்பட்டு வாழ்கின்றனர். அவற்றில் பெண்களின் அகப்பண்புகளில் உயிர்ப்பானது காதலுணர்வு. இதனை பெத்தரண்சரல் என்ற மேல்நாட்டு அறிஞர் “மனித வாழ்க்கையில் காதலை இன்றியமையாதவற்றுள் ஒன்றாக நான் கருதுகிறேன். அதன் இயல்பான போக்கில் தேவையின்றிக் குறுக்கிடும் அமைப்பு எதையும் நான் வெறுக்கிறேன்” என்றார். பூங்கொடியின் மேல் கோமகன் என்பவன் காதல் கொள்கிறான். இவளோ மக்களுக்கு நன்மை

---

* உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரி, கோவிலூர்.

புரியவேண்டும் என்பதற்காக துறவு வாழ்க்கையை மேற்கொள்ள நினைக்கிறாள். அச்சமயத்தில் கோமகன் தன் காதல் செய்தியை பூங்கொடியின் தாய் தேன்மொழியிடம் கூறுவதை அறிகிறாள். அவள் மனம் நடுங்குகிறது. காரணம் அவள் மனது காதல் வயப்பட்டுவிடுமோ என்ற எண்ணம், மற்றொரு பக்கம் தாய் இவனை திருமணம் செய்துகொள் என்றால் துறவு வாழ்க்கையை இழந்துவிடுவோமோ என்ற அச்சம் இவளை உள்ளூற நடுங்கவைக்கிறது. இதனை,

"………………… இம்மகன் என்மேற் காதல்
மிடுமனத் தானென மேலொரு நாளில்
தேன்மொழி அனையிடம் செப்பக் கெட்டுள்ளேன்
யானிவண் செய்வது யாது' என நடுங்கினாள்"
(பூங்கொடி-படிப்பகம் புக்ககாதை,60-63)

என்ற காப்பிய வரிகள் எடுத்துரைக்கின்றன.

ஒற்றுமையுணர்வு

மக்களில் உயர்வு தாழ்வுகள் இருக்கக்கூடாது என்பதில் உணர்ச்சி பொங்க குரல் கொடுத்தவன் பாரதி. அவர் சாதிய ஏற்றத்தாழ்வு, பெண் விடுதலையைப் பற்றி கவிதை வரிகளில்,

"சாதிகள் இல்லையடி பாப்பா குலம்
தாழ்த்தி உயர்த்திச் சொல்லல் பாவம்"
(பாப்பா பாட்டு,14)

என்கிறார். தேசிய முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் சமூகக் கொடுமையான சாதிய ஏற்றத்தாழ்வு இவற்றிலிருந்து மனித இனம் விடுதலையடைந்து தேசிய ஒருமைப்பாடு உருவாக்கப் பாடுபடுபவர்களில் பூங்கொடியின் செயல்பாடு மகத்தானது. இதனை,

"தாழ்வும் இழிவும் சாதியில் வேண்டா
குலமும் தேவும் ஒன்றெனக் கொள்க
நலந்தரும் இவைஎன நவின்றேன் ஈண்டை
ஏற்போர் உளரேல் ஏற்று வாழ்க
ஏலாராயின் இவணின் றொழிக"
(பூங்கொடி-கடல்நகர்புக்ககாதை,113-117)

எனும் அடிகள் சுட்டுகின்றன. சாதியத்தாழ்வும், இழிவும் இருக்கக்கூடாது. ஏற்போர் ஏற்கட்டும் இல்லையேல் அவர்கள் ஒழியட்டும் என்பதில் பூங்கொடியின் ஒற்றுமை உணர்வு புலப்படுகிறது.

வீரப்பண்பு

பெண்கள் தங்கள் உணர்ச்சி பொங்க போர், வீரம், மொழிப்பற்று போன்ற தன்மையில் உயர்ந்தவர்களாகக் காணப்பட்டார்கள் என்பதை சங்க இலக்கியங்கள் பகர்கின்றன. பூங்கொடி தமிழுக்கு நெடும்பகை வந்தபோது அதைப்பார்த்து எதுவும் செய்யாமல் இருந்துவரும் அரசு செங்கோலரசா என்று,

"நெடும்பகை தமிழுக்கு நேர்ந்ததே என்று
குடும்பப் பணியாக குறித்தறப் போரிற்
....
மங்கையர் இவரென மதித்தது மின்றிச்
செங்கை பிணித்துத் தெருவிடை யிழுத்துச்
செல்லுமோ ரரசும் செங்கோ லரசோ"
(பூங்கொடி-சிறையகம் புகுந்தகாதை,36-41)

எனும் அடிகள்வழி அரசை எதிர்த்துக்கூறும் பூங்கொடியின் வீரப்பண்பு வெளிப்படுவதைக் காணமுடிகிறது.

நூலகத்தைக் காப்பாற்றும் செயல்திறன்

பூங்கொடிக் காப்பியத்தில் ஒருரிநாட்டு அரசன் கலைநூல்கள் பலவும் தொகுத்து கலைமகள் எனும் பெயரில் நூலகம் அமைத்தான். அந்நாடு அயலவர் ஆட்சிக்கு உட்பட்டபோது அந்நூலகம் செயற்படாமல் சிதைந்தது. கலையார்வமுடைய பூங்கொடி அங்கு சென்று சிதைந்த ஒலைச்சுவடிகளைச் சேகரித்து நூலகத்தைக் காப்பாற்றினாள். இச்செயலினை,

"அயலவர் ஆட்சியிற் சிக்கிய ததனால்
செயற்படல் இன்றிச் சிதைந்தது நூலகம்
வீடுகள் தோறும் ஏடுகள் தேடிப்
பாடுகள் உறும்யான் பயன்தரும் என நினைந்
தோடினேன் ஆங்கே தேடினேன் ஏடுகள்"
(பூங்கொடி-ஏடுபெற்றகாதை,71-75)

எனும் அடிகள் சுட்டும்.

நன்றியுணர்வு

பெண்களின் உயரிய பண்புகளில் ஒன்று நன்றிமறவாமையாகும். காப்பிய பெண் தலைமை மாந்தரான பூங்கொடியின் பிறப்பு பற்றிய செய்தியை நிலக்கிழார் என்பவர் சுவரில் இருக்கின்ற புகைப்படத்தைப் பார்த்துக் கூறுகிறார். தன் பிறப்புணர்ந்த பூங்கொடி பெரியோர்களை மதித்து நன்றியுணர்வினை வெளிப்படுத்தினாள். இதனை,

> "இளம்அறி யாவணம் எழுந்ததோ ரன்பு
> தழைத்ததென் னுளத்தே தந்தையின் உறவை
> விளைத்ததித் தொடர்பு வீய்ந்தஎன் றந்தை
> ....
> உற்றுழி உதவிய ஒருபெருங் கருணைக்கு
> நாளும் நாளும் நன்றியறி வுடையேன்"
> (பூங்கொடி-கிழார்திறம் அறிந்தகாதை,12-22)

எனும் அடிகள் புலப்படுத்துகின்றன. என் தந்தையை யார் என்று அறிய உதவிய கருணை உள்ளங்களுக்கு நாள்தோறும் நன்றி எனக்கூறுவதன்வழி அறியமுடிகிறது.

கலைத்திறன்

முத்தமிழ்க் காப்பியமாகவும், முதன்மைக் காப்பியமாகவும் விளங்குவது சிலப்பதிகாரம். அதனில் மாதவி கலையார்வம் மிக்கவனாய் ஆடற்கலையில் அரங்கேறி பரிசுபெற்றாள். அவளின் கலைத்திறனைப் போல பூங்கொடியும் கலையார்வம் மிக்கவளாக உள்ளதை,

> "கலையில் கூத்தினைக் கண்கவர் அரங்கில்
> இலைநிகர் எனுமாறேற்றினர் கலைஞர்
> இசையொலி கடலொலி பிறக்கிட எழுந்தது
> வசையெனப் பிறமொழிப் பாடல்கள் வழங்கிலர்
> தமிழே இனிமைத் தமிழே இசைத்தனர்"
> (பூங்கொடி-விழாவயர்காதை,72-76)

எனும் அடிகள் குறிப்பிடுகின்றன. இதனில் கூத்து, இசையொலி, வசையெனப்பாடி கலையை வளர்த்து அவற்றின் மூலம் பல இசைத்தொண்டு செய்துள்ளாள் என்பது புலப்படுகிறது.

மனஉறுதிப்பாடு

பெண்கள் மன உறுதிப்பாடு கொண்டவர்கள். எடுத்தசெயலை செவ்வனே செய்து முடிக்கும் வல்லமை உடையவர்கள். கற்பில் திண்மை உள்ளம் படைத்தவர்கள். அத்தன்மையில் பெண்கள் காணப்படல் வேண்டும் என்பது வள்ளுவரின் எண்ணம் அதனால் தான்,

"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்" (குறள்.54)

என்று குறிப்பிடுகிறார். அதனைப்போல பூங்கொடி தான் எடுத்த பணியைச் செம்மையாகவும் திண்மையுடனும் மனஉறுதிப்பாட்டுடன் செய்ததை,

"நின்றன் பெருமையும் நீணிலம் அறியும்
எத்துயர் வரினும் எடுத்த பணியே
....
நின்வழி கொண்டேன் நிலையில் நிற்பேன்
என்பெரு வாழ்வை ஈந்தன பணிக்கே"
(பூங்கொடி-சொற்போர் நிகழ்த்தியகாதை,62-67)

என்ற அடிகள் விளக்கும். இன்பங்களைத் துறந்து துறவுநிலையில் எத்துயர் வந்தாலும் என்னுடைய செயலில் உறுதியுடன் வாழ்வேன் என்று உணர்ச்சி பொங்கச் சூளுரையாகச் சொல்லுவதின்வழி அறியமுடிகிறது.

தமிழ்ப்பற்று

பெண்கள் பற்றுக்கும், பாசத்திற்கும் கட்டுப்பட்டவர்கள். எதனைக் குறிக்கோளாக நினைக்கின்றார்களோ அதிலிருந்து பின்வாங்கமாட்டார்கள். அதனில் தமிழ்மீது பற்று உடையவர்கள் அதன் சுவை, இனிமை போன்றவற்றை அனுபவித்தால் எக்காலத்திலும் மாறமாட்டார்கள். அத்தமிழ்மொழியை பாரதியார்,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவ தெங்கும் காணோம்"
(பாரதியார் கவிதை தமிழ்,1)

என்ற கவிதை வரிகள் புலப்படுத்தும்.

பூங்கொடி தமிழ்மீது அதிகப்பற்று கொண்டவளாகக் காணப்படுகிறாள். அவளுடைய உணர்வு சிறப்புப்பெறறு மேலோங்கிக் காணப்படுகிறது. அதனை,

“அன்னாய் என்னுயிர் அன்னாய் தமிழே
ஒன்னார் மனமும் உருக்குத் தமிழே
அகப்பகை புறப்பகை கடந்தாய் தமிழே
....
இறக்கும் வரைநின் பணியே யல்லால்
துறக்கமொன் றுண்டெனத் துணியேன் தமிழே”
(பூங்கொடி-ஏடு பெற்ற காதை,131-139)

எனும் அடிகள் எடுத்துரைக்கும். தமிழ் உயிராகவும், அகப்பகை புறப்பகை கடந்தது என்றும் நான் இறக்கும் வரையில் உன்னை வளர்க்கும் பணியே. அதற்காக என் உயிர் துறக்க நேர்ந்தால் அதற்குமேல் எனக்குச் சிறப்பு எதுவும் உண்டா என்று உயரிய தன்மையில் பூங்கொடி தமிழைப் போற்றுதலை உணரமுடிகிறது.

முடிவுரை

மனித உணர்வுகளில் காதல் முதன்மையானது என்றாலும், நாடு, மொழி, இனம் என்ற கடமையுணர்வு வருகின்ற பொழுது காதலைத் துறந்து செயலுக்கு செம்மை பெறவைக்கும் என்பது பூங்கொடி வழியாக அறியமுடிகிறது. எல்லோரும் ஒற்றுமையாக இருக்கவும், பெண்கள் வீரமிருந்தவர்களாக இருக்க வேண்டும் என்பது பூங்கொடியின் செயல்வழியாக அறிய இடமுண்டு. நூலகத்தை காப்பாற்றும் அறிவுத்திறன் பெரியோர்களை மதித்துப் போற்றும் நன்றியுணர்வு பூங்கொடியின் மாண்புகளில் உயர்ந்ததாகக் காணப்படுகிறது. கலையார்வத்தில் மேன்மை பெண்களுக்கான மனஉறுதிப்பாடு, தமிழ்ப்பற்று போன்றன பூங்கொடியின் வழியாகக் காணப்படுவது சிறப்புக்குரியதாகும். எல்லாவகை மாண்புகளிலும் பூங்கொடி எனும் பெண் தலைப்பாத்திரத்தின் வழியே காப்பியப்புலவன் கூறியிருப்பது பெண்கள் உயர்ந்த நிலையில் வைத்து போற்றுதற்கு உரியவர்கள் என்பதை வெளிக்கொணர்வதாக உள்ளது. இவ்வாறான சிறப்புக்களை இக்காப்பியம் வெளிப்படுவது சமூகத்தின் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்கின்றது என்பது போற்றுதற்குரியது.

வீறுகவியரசர் முடியரசன் படைப்புலகம்

முனைவர் கா. சிவகாமி *
க. சங்கீதா *

முன்னுரை

பாவேந்தர் புரட்சிக்கவிஞர் வழியில் சுயமரியாதை இயக்கச் சுடராக கவியரசர் முடியரசனார் திகழ்ந்தார். திராவிட இயக்கப் பெரும் பாவலராக மிளிர்ந்ததோடு பகுத்தறிவு, தன்மானம், தமிழரின் நலன் ஆகிய கோட்பாடுகளில் பிறழாத பெருமையுடன் விளங்கியவர். கொள்கை உரனும், தமிழ் திறனும், படைப்பாற்றலும், அஞ்சா நெஞ்சமும் அழகுறப் பெற்ற முடியரசன், பெருந்தகைமைபிறங்க, நெறி திறம்பாமல் வாழ்ந்த நேரிய பாவலரின் பண்புகளே பெரியகுளத்தில் ஓர் எளிய குடும்பத்தில் 07.10.1920-ஆம் தேதியன்று பிறந்த கா.சு.துரைராசு என்பவர் வாழ்வில் படிப்படியாக வளர்ந்து முன்னேறி 1943-ஆம் ஆண்டு தமிழில் வித்வான் பட்டம் பெற்றார். காரைக்குடி மீ.சு. உயர்நிலைப்பள்ளியில் 1949-ஆம் ஆண்டு இறுதியில் ஆசிரியப் பணியில் அமர்ந்த முடியரசன் அங்கேயே 28 ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணி புரிந்து 1978-ஆம் ஆண்டில் தமது 58-ஆம் வயதில் ஓய்வு பெற்றார். காலத்தால் அழியாத பல உயரிய படைப்புக்களைத் தமிழன்னைக்குப் படைத்து அணிகலன்களாய்ச் சூட்டியுள்ளார். கவிஞரின் நூல்கள் பல்கலைக் கழகங்கள் மற்றும் பள்ளிகளில் பாட நூல்களாக வைக்கப்பட்டுள்ளன. இத்தகைய பெரும் சிறப்பிற்குரிய வீறு கவியரசர் முடியரசன் படைப்புலகத்தின் சிறப்புக்களை எடுத்துரைப்பதாய் இக்கட்டுரை அமைகிறது.

வீறுகவியரசர் முடியரசனின் தனித்திறன்

கவிதையுணர்வு என்ற வேல் முடியரசனுக்குபிள்ளைப் பருவத்திலேயே அவருடைய தாய்மாமனால் வழங்கப்பட்டது. தன் 14-ஆம் வயதிலேயே கவி எழுதும் ஆற்றல் பெற்ற முடியரசன் 20-ஆம் வயது வரை இறையுணர்வுப் பாடல்கள் எழுதினார். 21-ஆம் வயது முதல் அறிஞர் அண்ணா, பாரதிதாசன் ஆகியவர்களின் பேச்சைக் கேட்ட பிறகுதான், நாடு, மொழி, இனம், சமுதாயச் சீர்திருத்தம்,

---

* பேராசிரியர், தமிழ்த்துறை, அரசு மகளிர் கலைக்கல்லூரி, கிருட்டிணகிரி..

* முனைவர்பட்ட ஆய்வாளர், அரசு மகளிர் கலைக்கல்லூரி, கிருட்டிணகிரி.

சமுதாய முன்னேற்றம், பகுத்தறிவு மற்றும் பொதுவுடமை ஆகிய பொருண்மைகளிலேயே தமது படைப்புலகை அமைத்துக் கொண்டார். (பாட்டுப் பறவையின் வாழ்க்கைப் பயணம், ப.12).

முடியரசன் எழுத அமர்ந்துவிடின் அவரை முழுமையாக மறந்து விடுவார். இல்லத்தை மறந்து விடுவார். அவரைச் சுற்றி நிகழ்வனவும் அறியார். அப்பொழுது அவர் பறந்து திரியும் உலகம் வேறு, முடியரசனுக்குக் கவிதை எழுதுவதற்க்கென்று ஒரு நேரம் கிடையாது. எந்த நேரத்திலும் அவர் எழுதுவார். எவ்வளவு நேரமானாலும் எழுதுவார். விரைவாகவும், எளிமையாகவும் எழுதுவார். காரில் செல்லுகையில், கால் நடந்து உலாவுகையில், டென்னிஸ் பந்தாடும்போதும், பலருடன் அரட்டையடித்துக் கொண்டிருக்கும்போதுங்கூட அவரால் பாட முடிந்தது. ஆனால் ஒன்று அவர் மனநிலை சரியாக இருக்க வேண்டும். பெரும்பாலும் அடித்தல் திருத்தலின்றி எழுதுவார். எழுதியபின் அங்கொன்றும், இங்கொன்றுமாகச் சொற்களை மட்டுமே மாற்ற முனைவார். நண்பர்களிடம் பாடிக்காட்டுவார். திருப்தி தருகிறதா என ஆய்வார். சிலர் கவிதை பாடும்போது பிரசவ வேதனைப்படுவதுண்டு. முடியரசனுக்கோ எண்சீர் விருத்தம், வெண்பா, அகவல் முதலிய பாவங்கள் வேதனைப்பட்டதாகவே அறிந்ததில்லை. (தமிழண்ணல், தென்றல், 4.12.54).

கனவிலும் கவிதை பாடுவது என்பது முடியரசனுக்கே இருந்த தனித்-திறனாகும். கனவிற்பாடிய கவிதையை மறுநாள் காலையில் எழுந்து வரி மாறாமல் எழுதிவிடும் அவரது ஆற்றல் வியப்பிற்குரியதாகும். இஃது இயற்கை வழங்கிய அருட்கொடை என்றே கூற வேண்டும் என்பர் ஆ.பழனி (ஆ.பழனி, கவிஞுரைப் பற்றி, முடியரசனின் நெஞ்சு பொருக்கவில்லையே, ப.12). கவிதையைப் படைக்கும்போது இவ்வாறு வலியறியாது கற்பனை வானிற்பறந்து கொண்டிருந்த காரணத்தினால் பேரறிஞர் அண்ணா அவர்கள் முடியரசனை “திராவிட நாட்டின் வானம்பாடி” என குறிப்பிட்டார் போலும்.

முடியரசனின் படைப்புலகம்

வளைந்து கிடக்கும் மேற்குமலைத் தொடரும் அதில் மேய்ந்து திரியும் மேகக்காட்சியும், இசைபாடும் புள்ளினமும், இறங்கி வரும் சிற்றாறும், வெள்ளிக்

காசைச் சுண்டிவிட்டார்போல துள்ளிக் குதிக்கும் கெண்டை மீன்களும், வெடித்துச் சிரித்துக் காண்பவர் விழியைக் கவரும் வாசமலர்க்குளமும், துரைராசுவின் இதயத்தை கவர்ந்தன, என்னவோ

செய்தன. தாய்மாமன் துரைசாமி ஊட்டிய இலக்கியச்சாறுடன் தன் வேலையைத் தொடங்கி விட்டது. விளைவு? இளைஞன் துரைராசு கவிஞர் முடியரசன் ஆனார். (முடியரசன் கவிதைகள், ப.26) எனப் பாவலர் மணி ஆ.பழனி, கவியரசரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கும் கருத்தை இங்கே மனங்கொள்ளத் தக்கது ஆகும்.

கவிஞர் முடியரசன் தம் 78 ஆண்டு கால வாழ்க்கையில் (1920-1998) படைத்த படைப்புகள் பல. 'எனது நேரம்' என்ற கவிதையில் (பாடுங்குயில், ப.19) கவிஞரே குறிப்பிடுவதுபோல், அவர்,

> **"வீட்டை நினைப்பது சிறிது நேரம் - மனைவி**
> **வேட்கை யிருப்பதுஞ் சிறு நேரம்**
> **................................. - கவிதை**
> **நயந்து தொடுப்பதும் நெடுநேரம்"**

ஆம், அவர் தம் வாழ்நாளில் நெடுநேரத்தை நீண்ட காலத்தை இடுப்பு வலியுடன் செலவழித்தது படைப்புப் பணியில்தான். இடுப்பு வலியின்றி மகப்பேறு நிகழுமோ? அவ்வலியைத் தாங்கிக் கொண்டு ஈன்றெடுத்த மகனைச் சான்றோன் எனக் கேட்டத்தாய், ஈன்றபொழுதினும் பெரிதுவக்கும் அன்றோ! முடியரசனின் தமிழ் இலக்கியப்பணி சிறிது என்றாலும், படைப்பாளர் வரிசையில் முடியரசனுக்கும் ஓர் இடமுண்டு. "நமக்குத் தொழில் கவிதை" என்ற கோட்பாடுடையவர் முடியரசன். அவ்வப்போது தோன்றும் உணர்ச்சிகளுக்கும் சூழ்நிலைகளுக்கும், கவிதை வடிவம் கொடுப்பார். நீண்ட காலத்தை செலவழித்தது கவிதைத் துறையில்தான். அவர் மிகுதியாகப் படைத்ததும் கவிதைப் படைப்புகளைத்தான். 13 கவிதைத் தொகுப்புகள் (கவிதை, கவியரங்க கவிதை, இசைப்பாடல்) மூன்று காப்பியங்கள் ஒரு காப்பிய நாடகம் மற்றும் திரைப்படப் பாடல்கள் என்றாற்போல் கவிதை வடிவங்களிலேயே முடியரசன் தம் படைப்பாற்றலைப் பெரிதும் வெளிப்படுத்தி உள்ளார். எனினும் ஒரு சிறுகதைத் தொகுப்பு, இரண்டு கடித இலக்கியம், மூன்று கட்டுரைத் தொகுப்புகள் மற்றும் இரண்டு வாழ்க்கை வரலாறுகளை

கவிஞர் முடியரசன் படைத்து தமிழ் உரைநடை ஒவ்வொரு வளர்ச்சிக்கும் பெரிதும் பங்களித்துள்ளார். படைப்பையும், தம் வாழ்விலும், தமிழர் வாழ்விலும் தடம் பதித்த ஒவ்வொருவருக்குக் காணிக்கையாக்குவது கவிஞருடைய சிறப்பியல்பு.

மேலும், தமிழகமெங்கும் உள்ள பல நகரங்களில் நிகழ்ந்த இலக்கிய விழாக்களில், வானொலியில் உலகத்தமிழ் மாநாட்டில் நடைபெற்ற கவியரங்குகளில் பங்கு கொண்டுள்ளார்.

முடியரசனின் படைப்புகளின் சிறப்பு

முடியரசன் படைப்புகளில் கவித்திறன், உரைநடைத்திறன், இலக்கணச் செழுமை, கருத்துப்பொலிவு, மரபு காத்தல், சந்த இனிமை, உவமை நயம், கற்பனை வளம், சுவை நிறைவு, சொல்லாக்கம், இயற்கை வர்ணனை, மொழியுணர்ச்சி, தமிழ் வழிபாடு, எழுச்சியுணர்ச்சி, புதுமை புகுத்தல், சிலேடை நயம் என படைப்புக் கூறுகள் அனைத்தையும் காணலாம். தமிழியம், மறுமலர்ச்சி, புரட்சி, பொதுவுடமை, சமுதாயச் சீர்திருத்தம், சமூக முன்னேற்றம், பகுத்தறிவு, அரசியல், தத்துவம், பெண்ணியம், விதவை மறுமணம் இயற்கை, காதல், மாணவர் நலன் மற்றும் பல்வகைத் தடங்களிலும் படைப்புப் பயணத்தைக் கடந்துள்ளார் முடியரசன்.

முடிவுரை

முடியரசன் படைப்புலகைக் காணும்போது, அவர் தம் வாழ்க்கை ஒரு போராட்ட களமாகவே இருந்து வந்ததை நாம் உணர்கிறோம். அவர் தம் படைப்புலகு ஒப்பற்ற சமர்க்களமாகவே இயங்கியதை நாம் அறிகிறோம். தமிழ் மொழியைத் தன் தெய்வமாக வணங்கிய முடியரசன் இந்தியின் நுழைவைத் தடுக்க தமிழர்கள் அனைவரும் ஒன்றுகூட வேண்டுமெனக் கருதிய அவர், இந்திமொழி ஆதிக்கத்தை முடிக்கட்டும் இன்றோடு கூடி எங்கும் முழங்கட்டும் போது முரசு பகைவர் கூட்டம் அலறட்டும், சிதறட்டும் அஞ்சி நின்றே (முடியரசன், 'நெஞ்சத் துடிப்பு' நெஞ்சு பொருக்கவில்லையே, ப.25) எனப் போர் முரசு கொட்டியவா. தமிழ் வழிபாடும், சமுதாயச் சீர்திருத்தமுமே இவரது படைப்புகளில் அடி நாதமாய் ஒலிக்கிறது" என்னும் மா. இராமலிங்கத்தின் கூற்றும் (மா. இராமலிங்கம், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம், ப.151) இங்கு நினைவு கூறத்தக்கது.

முடியரசனின் படைப்புகளான முடியரசன் கவிதைகள் (1966) மற்றும் வீரகாவியம் (1973) தமிழக அரசால் வழங்கப்படும் தங்கப்பதக்கப் பரிசில் பெற்றது. இவரது படைப்புக்களை ஆய்வு செய்து பல ஆய்வாளர்கள் ஆய்வியல் நிறைஞர் பட்டமும் முனைவர் பட்டமும் பெற்றிருக்கின்றனர். இந்தியாவில் பல பல்கலைக் கழகங்களில் இவரது படைப்புகள் பாடங்களாகத் திகழ்கின்றன. பாடல்கள் பல

பல்கலைக்கழகங்களிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும், தமிழ்ப்பாட நூல்களிற் சேர்க்கப்பட்டுள்ளன. 2000-ம் ஆண்டு தமிழக அரசால் முடியரசனின் படைப்புகள் அனைத்தும் நாட்டுடமையாக்கப்பட்டது. மேலும், முடியரசனின் படைப்புகளில் பல விருதுகளையும், பட்டங்களையும், பரிசில்களையும் மற்றும் தமிழ் அறிஞர்களின் பாராட்டுகளையும் பெற்றுத் தந்து அவருடைய தமிழ்த் தொண்டுக்குப் பெருமையும், புகழும் சேர்த்துள்ளன. மேலும் முடியரசன் கவிதைகளில் சில பாடல்கள் சாகித்திய அகாதெமியால் இந்தியிலும், ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

முடியரசனின் இலக்கியப் பணிகளுக்காக தமிழக அரசு 1974ஆம் ஆண்டு நல்லாசிரியர் விருதும், 1989ஆம் ஆண்டு பாவேந்தர் விருதும், 1998-ஆம் ஆண்டு கலைமாமணி விருதும் வழங்கியது.

வீறுகவியரசர் முடியரசனின் படைப்புலகம் பரந்து விரிந்து காணப்படும் ஒரு உலகமாகும். தமிழ் மொழியின் சிறப்புக்களை உலக அளவில் சிறப்புடையச் செய்தவர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர்களில் இவரும் ஒருவர். உலக மானுடன் பருகும் தாய்ப்பாலாக தமிழ்மொழி இருக்க வேண்டும் என்பதே இவருடைய படைப்புக் கொள்கை. மனிதகுலம் மற்றும் தமிழ்மொழி மேம்பாட்டினை நோக்கி இயங்கும் முடியரசனின் படைப்புலகம் வெற்றிப் பாதையில் சென்றுக் கொண்டே இருக்கும். அவரது பயண வழிகளும், வெளிகளும் வருங்காலத் தேவைகளை நோக்கி விரிந்து பரந்து செல்லும். எனவே வீறு கவியரசர் முடியரசனின் படைப்புகள் அவரது புகழை என்றும் நிலைபெறச் செய்திருக்கும் என்பது திண்ணம்.

வீறுகவியரசர் முடியரசன் கடித இலக்கியப் படைப்புகளில் உரைநடை உத்திகளும் திறனும்

முனைவர் கா. சிவகாமி *
க. சங்கீதா *

முன்னுரை

தமிழ் இலக்கிய வகைகளில் கடித இலக்கிய வகையும் ஒன்று. நீண்ட நெடுங்கால வரலாறு கடிதத்திற்கு உண்டு. தனிப்பட்ட மனிதர்கள் தங்கள் உணர்வுகளை, விருப்பங்களைத் தெரிவிப்பதற்கு இது உதவியது. தமிழக அரசியல் வரலாற்றில் தம் கட்சித் தொண்டர்களுக்கென அறிஞர் அண்ணாதுரை அவர்களும், கலைஞர் மு.கருணாநிதி அவர்களும் எழுதியவை சிறப்பிற்குரியன. இந்திய வரலாற்றில் நேரு தன் மகள் இந்திராவிற்கு எழுதிய கடிதங்கள் தனித்தன்மை கொண்டவை. தமிழ் இலக்கிய உலகில் அறிஞர் மு.வரதராசன் எழுதிய 'தம்பிக்கு' 'தங்கைக்கு' 'அன்னைக்கு' 'நண்பர்க்கு' என எழுதியவை இலக்கியத்தரம் கொண்டவை. இதுபோலவே கவியரசர் முடியரசன் காலத்தால் அழியாத கடித இலக்கியம் சில படைத்துள்ளார். முடியரசன் தன்னுடைய கடித இலக்கியப் படைப்புகளில் கையாண்டுள்ள உரைநடை உத்திகளும், திறனையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

முடியரசன் கடித இலக்கியம்

1999-ஆம் ஆண்டில் வெளிவந்த "கவியரசர் முடியரசன் கடித இலக்கியம்" என்னும் இந்நூல், தந்தை மைந்தனுக்கு எழுதும் கடித வடிவில் முடியரசனால் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாகும். 'அன்புள்ள பாண்டியனுக்கு' என்று பள்ளியில் பயிலும் தன் மகனுக்கு 'அறிவுடை நம்பி' எனும் பெயரில் முடியரசன் எழுதிய 15 கடித கட்டுரைகளின் தொகுப்பு 'அன்புள்ள பாண்டியனுக்கு' என்ற தலைப்பில் ஒரு பகுதியாகவும், 'இளவரசனுக்கு' என்று கல்லூரியில் கற்கும் தன்

* பேராசிரியர், தமிழ்த்துறை, அரசு மகளிர் கலைக்கல்லூரி, கிருட்டிணகிரி.

* முனைவர்பட்ட ஆய்வாளர், அரசு மகளிர் கலைக்கல்லூரி, கிருட்டிணகிரி.

மகனுக்கு 'முடியரசன்' என்ற பெயரிலேயே கவிஞர் எழுதிய 17 கடிதக் கட்டுரைகளின் தொகுப்பு 'அன்புள்ள இளவரசனுக்கு' என்ற தலைப்பில் மற்றொரு பகுதியாகவும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

'அன்புள்ள பாண்டியனுக்கு' எனும் கடிதத் தொகுப்பு மட்டும் 1967இல் வெளிவந்து தமிழ்நாடு அரசு பாடநூல் குழுவால் ஏற்கப்பட்டு எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு துணைப்பாடமாக வைக்கப்பட்டிருந்தது. பள்ளி கல்லூரிகளில் பாடமாக வைக்க வேண்டிய நூல் கவியரசர் முடியரசர் கடித இலக்கியம்.

திருக்குறள் கருத்துகள்

திருக்குறட் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அறிவுரை புகல்வனவும், இலக்கிய இன்பம் பற்றியனவும், கடவுள் என்ற கருத்தாக்கத்திற்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு பற்றியனவும், தமிழர் போக்கினை எண்ணிப் புலம்புவனவும், கவிதை பற்றியும், கவிதை எழுதுவது எப்படி என்பது பற்றியும், மக்களிடையே பெருகி வரும் பண்பாட்டுணர்ச்சியை மீண்டும் தூண்டுவனவுமான பல நல்ல அறநெறிக் கருத்துக்களைக் கடித வடிவில் இந்நூலில் இளைஞர் உள்ளங்களில் கவிஞர் விதைக்கின்றார் (முடியரசன், அன்புள்ள பாண்டியனுக்கு, முன்னுரை).

மேலும் அறன் வலியுறுத்தல், அன்புடைமை, இனியவை கூறல், வாய்மை, ஒப்புரவு ஒழுக்கம், கல்வி, கேள்வி, மடியின்மை, செய்நன்றி மறவாமை, சொல்வன்மை, பணிவுடைமை, மானம் முதலான திருக்குறள் அதிகாரங்களை மாணவர்களின் உணர்வு, அறிவிற்கேற்பத் தெளிந்த நடையில் முடியரசன் குறிப்பிட்டுள்ளார். இடையில் "தாய்மொழி பேண்", "தாயகம் காத்து நில்" எனும் இரு தலைப்புகளில் தமிழ் மாணவர்களுக்குத் தாய்மொழி உணர்வையும், நாட்டுப் பற்றையும் மனங்கொள்ளும் வகையில் வரைந்துள்ளார். நாலடியார், திருக்குறள், புறநானூற்றுக் கருத்துக்களை இடையிடை தக்காங்கு ஆள்கின்றார். இந்நூலைப் படிப்பவர்கள் சோர்வோ, மனத்தளர்வோ அடையா வண்ணம் மாணவர்களுக்கு ஏற்படும் ஐயங்களைத் தாமே எழுப்பிக் கொண்டு விடை கூறுவதும். வளர்த்தெடுக்கும் நோக்கில் அவர்களுக்குக் கிடைக்கும் சிறப்புகளைப் பாராட்டியும் நூலை எழுதியுள்ளார்.

மாணவர்களே நாளைய மாந்தர்களாக மாறப் போகின்றவர்கள். அத்தகு மாணவர்களை இளமையிலேயே நல்வழியில் செலுத்தி உண்மை, ஒழுக்கம், உழைப்பு முதலிய பண்புகளுடன் மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று முதலியவற்றையும் ஊட்டி வளர்த்தால் பிற்காலத்தில் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் விளங்குவார்கள் என்ற எண்ணத்தில் முடியரசன் இக்கடித இலக்கியத்தைப் படைத்துள்ளார். சிறுவருக்கு அறக்கருத்துக்களை உணர்த்துகிறார் என்பதிலும் தமிழர் தம் பண்பாட்டை விளக்கவும் இந்நூலைப் படைத்துள்ளார் என்பதற்கு அவரது கூற்றே சான்றாக அமைகிறது. "மனம், சொல், செயல் மூன்றுந் தூய்மையுடையனவாக இருத்தல் வேண்டும் என்பதே தமிழ் அறம்" (முடியரசன், அன்புள்ள பாண்டியனுக்கு, ப.3) எனும் தொடரினைக் கொண்டு இதனை உணரலாம்.

முடியரசனின் கடித இலக்கிய உத்தி

முடியரசன் தந்தையாக நின்று தம் மகனுக்கு ஒரு தந்தை உரைக்கும் அறிவுரைகளாக எழுதியுள்ளார். அவ்வாறு எழுதுங்கால் பல உத்திகளைக் கையாண்டு செய்திகளைப் பிஞ்சு உள்ளங்களில் பதிய வைக்கின்றார். புடிப்பு இன்னும் சில நாளில் முடிந்து விடுவதாக மகன் எழுதினான் எனச் சுட்டித் தம் கருத்தை மகனுக்கு உணர்த்தும் முறையில் சில எண்ணங்களை முன் வைக்கிறார்.

"இதனைப் பற்றி (கல்வி) எழுத வேண்டுமென்ற எண்ணம் உன் கடிதத்தைப் படித்தப் பிறகுதான் தோன்றியது. சில ஆண்டுகளில் படிப்பு முடிந்து விடும். அதன் பிறகு ஏதேனும் ஒரு வேலையில் அமர்ந்து நம் குடும்பத்திற்கு உதவியாக இருப்பேன் என எழுதியுள்ளாய். குடும்ப பொறுப்புணர்ச்சி இப்பருவத்திலேயே உன்னிடம் காணப்படுவது மகிழ்ச்சிக்குரியது தான். ஆனால், படிப்பு முடிந்து விடும் என்று நீ எழுதியிருப்பதுதான் சரியில்லை. அதனால்தான் அதைப்பற்றி உனக்கெழுதுகிறேன் "(முடியரசன், அன்புள்ள பாண்டியனுக்கு பக.34) என்று பள்ளியில், கல்லூரியில் படிப்பது மட்டும் அமர்ந்து படித்து முடிப்பது என்பது முழுமையான கல்வி அன்று. வாழ்நாள் முழுவதும் கல்வியாளர்கள் கற்க வேண்டும் என்ற நோக்கில் முடியரசன் குறிப்பிடுகிறார்.

முடியரசன் காட்டும் உயர்ந்தவர்களின் வாழ்க்கை

தமிழ்நாட்டு மாணவர்களை நல்வழிப்படுத்துவதிலும், அவர்கள் இம்மொழியையும், நாட்டையும் காக்கும் வீரர்களாக விளங்குதல் வேண்டும் எனும் நோக்கிலும் தம் கடித இலக்கியத்தில் செயற்கரிய செயல் செய்த சான்றோர்களின் வாழ்க்கையை நினைவுப்படுத்திக் கருத்துரைக்கின்றார் முடியரசன். ஆசிரியர் பணி செய்த முடியரசன் உளவியல் நிலையில் இவ்வாறு செய்கின்றார்.

"ஓதாமல் ஒருநாளும் இருக்கக் கூடாது. திரு.வி.க., மறைமலை அடிகள், உ.வே.சா. போன்ற பெருமக்கள் எப்பொழுது புத்தகத்தைக் கீழே வைத்தார்கள்? இறுதி வரை புத்தகமுங்கையுமாகவே விளங்கினார்கள். அதனால் உயர்ந்தார்கள். நம்மையும் உயரச் செய்தார்கள்" (முடியரசன், அன்புள்ள பாண்டியனுக்கு, ப.39) என்று திரு.வி.க., மறைமலை அடிகள், உ.வே.சா. போன்ற தமிழ்ப் பணி புரிந்த சான்றோர்களை நினைவு கூர்வதும், அவர்களைப் போல் பொதுத் தொண்டில் ஈடுபட்ட மாணவர்களை ஊக்குவதும் கவிஞரின் நல்லுணர்வைக் காட்டுகிறது.

முடியரசனின் கடித இலக்கியத்தில் மொழியுணர்ச்சி

மக்களிடமும், மாணவர்களிடமும் மொழிப்பற்றின் தேவையை முடியரசன் தம் பாடல்களில் அழுத்தமாகக் குறிப்பிடுகிறார். ஆங்கிலத்தின் இன்றியமையாமையை மகன் அறிஞர்களின் பேச்சைக் கேட்டு எழுதியமைக்கு முடியரசன் ஆங்கிலத்தின் தேவையையும் தாய்மொழியின் இன்றைய புறக்கணிப்பு நிலையையும், இதனால் ஏற்படவிருக்கும் கேட்டினையும், மாணவர்களுக்கு முடியரசன் தெளிவுபடுத்தியுள்ளார்.

"இன்னொருவர் நம்மை ஆளவில்லை, அதுபோலவே, நம் மொழியையும் மற்றொரு மொழி ஆள்வது கூடாது, மொழிக்கும் உரிமை விடுதலை கிடைத்துவிட்டதென்றால் தமிழ்மொழி எங்குஞ் செல்வதற்கு உரிமை பெற்றிருக்க வேண்டும். இசைத் துறையிலே தமிழ் ஒதுக்கப்பட்டுக் கிடக்கிறது. கோவில்களுக்குள்ளே செல்ல நம் தமிழ் மொழிக்கு உரிமையில்லை" (முடியரசன், அன்புள்ள பாண்டியனுக்கு, ப.51) என்னும் சான்றின் வழி மக்களைப் போலவே மொழியும்

விடுதலையுடன் கையாளப் பெறல் வேண்டும் எனவும், தமிழ் மொழிக்கு அத்தகு உரிமை தேவை எனவும் வலியுறுத்திக் கூறுகிறார்.

"அறிவியல் கலைகளை ஆங்கிலம் பெற்றுள்ளது உண்மைதான். அதற்காக எந்தக் காலத்திலும், இரவல் பெற்றே வாழ வேண்டுமா? ஆவ்வாறு வாழ வேண்டுமென்று நியதியா? நம் தாய்மொழியும் அம்மொழியைப் போல் எப்பொழுதுதான் அந்தக் கலைகளைப் பெற்று விளங்குவது?... அக்கலைகளையெல்லாந் தாய்மொழியில் ஆக்கிக் கொள்ள வேண்டுமென்ற முயற்சியிலல்லவா நாம் இறங்க வேண்டும்? அவ்வாறு செய்யக் கருதாது, ஆங்கிலத்திற்றான் கற்க வேண்டும், ஆங்கிலத்திற்றான் கற்பிக்க வேண்டுமென்று அடம் பிடித்தால் நாம் விடுதலை பெற்றுவிட்டதாகச் சொல்லிக்கொள்வதில் பொருளில்லை" (முடியரசன், அன்புள்ள பாண்டியனுக்கு, ப.52, 53) என்று மொழியுணர்வு, மொழிப் பண்பாடு பற்றிய ஒரு தெளிந்த சிந்தனையை முடியரசன் மாணவர்கள் உள்ளங்கொள்ளும் வகையில், காட்டியிருப்பது அவரின் ஆளுமையையும், மொழிப் பற்றையும் காட்டுகின்றன.

முடிவுரை

கவியரசர் முடியரசன் கவிதை எழுதுவதில் வல்லவர் என்பது போலவே உரைநடை படைப்புகளான கடித இலக்கியம் படைப்பதிலும் வல்லவராக விளங்கியுள்ளமையை அவருடைய படைப்புகளான "அன்புள்ள பாண்டியனுக்கு", "அன்புள்ள இளவரசனுக்கு" போன்ற நூல்கள் உணர்த்துகின்றன. முடியரசனுடைய கடித இலக்கியம் திருக்குறளின் பிழிவாகவும், மொழியுணர்வு ஊட்டும் வாயிலாகவும் அமைந்துள்ளது.

தம் கருத்துக்களை மாணவர்கள் எளிதாகப் புரிந்து கொள்ளவும், அவருடைய கருத்துகளுக்கு வலிமை சேர்க்கின்ற வகையில் உத்திகளைக் கையாண்டு அவரது கடித இலக்கியத் திறமை வெளிப்பட்டு நிற்பதை நாம் உணர முடிகிறது. டாக்டர் மு.வ. அறிஞர் அண்ணா ஆகியோர் படைத்த புகழ்பெற்ற கடித இலக்கிய வரிசையில் கவியரசர் முடியரசன் படைத்த கடித இலக்கியமும் கைகோர்க்கிறது.

வீறுகவியரசர் முடியரசன் சிறுகதை இலக்கியப் படைப்புகளில் உரைநடை உத்திகளும் திறனும்

முனைவர் கா. சிவகாமி *
க. சங்கீதா *

முன்னுரை

ஒரு படைப்பாளி தான் எண்ணும் கருத்துகளைப் படிக்கும் வாசகர்கள் எளிதில் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகக் கையாளும் நெறிமுறையே உத்தி என கூறப்படுகிறது. அவ்வுத்தியின் வாயிலாக படைப்பாளியின், தனித்திறன், சொற்களைக் கையாளும் திறன், மொழிநடை, ஆளுமைத் திறன், சொல்லாற்றல் திறன், எடுத்துச் சொல்லும் பாங்கு ஆகியவற்றை அறிய முடிகிறது (ஆதித்தன் ஏ. மொழியியல் ஆய்வுகள், ப.எண்.23). இக்கருத்தை மையமாகக் கொண்டு முடியரசன் சிறுகதைப் படைப்புகளில் உரைநடை உத்திகளும் திறனையும் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

எழுதும் முறை

சிறுகதை எழுதுகிறபொழுது, ஒருவர் கதையை முன்னர் அமைத்துக் கொண்டு தக்க பாத்திரங்களைக் கதைக்கு ஏற்ப இயைத்துக் கொள்ளுதல் கூடும். அன்றி, பாத்திரங்களை முதலில் தேர்ந்தெடுத்துக் கொண்டு அவர்களுக்கு ஏற்ப நிகழ்ச்சிகளை உண்டாக்கிக் கொள்ளுதல் கூடும். அன்றி, ஒரு சூழ்நிலையைப் படைத்துக் கொண்டு அதனுள் இயையுமாறு கதை நிகழ்ச்சிகளையும் ஆட்களையும் உருவாக்கிக் கொள்ளுதல் கூடும். சிறுகதை எழுதுகிறவர்கள் நிகழ்ச்சிகளைப் படர்க்கையில் வைத்துத் தெரிவிக்கலாம். கதைத் தலைவனோ கதைத் தலைவியோ தானே பேசுவதுபோல அமைக்கவும் செய்யலாம், கடிதங்கள் மூலமோ, நாட்குறிப்புக்கள் மூலமோ, பிற பாத்திரங்கள் மூலமோ ஒன்றன்பின் ஒன்றாகச் செயல்கள் வெளிப்படுமாறு செய்யலாம். இந்த மூன்று வகைகளில் எதனை வேண்டுமானாலும் சிறுகதை ஆசிரியர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்பது மரபு.

* பேராசிரியர், தமிழ்த்துறை, அரசு மகளிர் கலைக்கல்லூரி, கிருட்டிணகிரி.
* முனைவர்பட்ட ஆய்வாளர், அரசு மகளிர் கலைக்கல்லூரி, கிருட்டிணகிரி.

பெரும்பாலும் தன் கதைகளில் முதலில் கதையின் வாயிலாகத் தான் சொல்ல வந்த கருத்துகளையும், அதற்கேற்ற கதையையும் அமைத்துக் கொண்டு ஒப்பற்ற பண்புகளைப் பெற்றிருக்கும் தக்க பாத்திரங்களை கதைக்கு ஏற்ப அமைத்துக் கொண்டு, மேலே குறிப்பிட்ட மூன்று வகையான கதை சொல்லும் உத்திகளையும் கையாண்டு திறமையாகவும், எளிமையாகவும், வலிமையாகவும் தன் சிறுகதைப் படைப்புகளின் வாயிலாக தமிழர்களுக்கு உணர்த்திவிட முடியும் என்று முடியரசன் நம்பினார்.

பாத்திரப் படைப்பு

கற்பனைப் பாத்திரங்களைப் படைக்கும் பொழுது படிப்போர் உள்ளத்தில் அவை உண்மையே போலத் தோன்றும்படிப் படைத்தல் வேண்டும். நம் வீட்டிலோ அடுத்த தெருவிலோ உள்ள உண்மை ஆட்களைப் போல நமக்குத் தோன்றும்படி படைக்கப்படும் பாத்திரங்கள் கதைக்கு வலுவூட்டுகிறது என்பதில் ஐயமில்லை. அந்த வகையில் முடியரசன் உயிரோடு திகழ்வாரைப் போல பல பாத்திரங்களைத் தமது கதைகளிற் படைத்துள்ளது அவருடைய கற்பனைத் திறனைக் காட்டுகிறது. பாத்திரங்களைப் பற்றி எழுதுகின்ற முறையும் இரண்டு வகைப்படும். ஒரு வகையில் கதையாசிரியரே பேசுவார். மற்றொரு வகையில் பாத்திரங்கள் தம்முன் பேசிக் கொள்ளுகின்ற வகையினால், அவர்கள் இயல்பு புலப்படுத்தப்படுவதோடன்றிக் கதையும் தொடர்ந்து நிகழ்ந்து விடும்.

முடியரசனின் பதினோரு சிறுகதைகளில் இரண்டு தந்தி, கிருஷ்ணார்ச்சுன யுத்தம், சந்தேக முடிவு மற்றும் கதையாசிரயரே கதை கூறும் முதலாவது வகையைச் சார்ந்தது. மேலும் கடைமுழுக்கு, அழிந்து விடுமோ, அவமானச்சின்னம், அணைந்த விளக்கு, காக்கையின் கடிதங்கள், கண்மூடி வழக்கம் மற்றும் அத்தை வீட்டில் பேய் போன்ற ஏழு கதைகள் பாத்திரங்கள் தம்முன் பேசிக் கொள்ளுகின்ற இரண்டாவது வகை உத்தியின் வாயிலாக கூறப்பட்ட கதைகளாகும். இரண்டாவது கூறப்பட்ட முறைப்படி எழுதுவது முன்னைய முறையைவிடச் சிறந்தது என்று மேலை நாட்டார் நம்புகின்றார்கள்.

நிகழ்ச்சி அமைப்பு

நிகழ்ச்சி கனவாகவோ, நினைவாகவோ இருக்கலாம். ஆயினும், கனவும் நினைவுபோல இருக்கும்படி செய்யவல்ல திறமுடைய எழுத்தாளர்களுக்குச் சிறந்த மதிப்பு உண்டு. அழிந்து விடுமோ மற்றும் இரண்டு தந்தி என்ற சிறுகதைகளில் கதை நகர்வுக்கான உத்தியாக

தான் கூற வந்த கருத்தையும், பாத்திரங்களின் முன் வாழ்க்கையைப் பற்றி விளக்கவும், பாத்திரங்களின் கனவு வாயிலாக கூறியிருப்பது முடியரசனின் கற்பனைத் திறமும் கதை சுறும் திறனுமே கதைக்கு உயிர் தருகின்றன. மேலும் சிறுகதை ஒவ்வொன்றிலும் ஒரேவொரு நிகழ்ச்சி சிறந்து இடம் பெறுதல் நல்லது. அதனை ஒட்டிய பல்வேறு நிகழ்ச்சிகளைப் பற்றியும் விளைவுகளைப் பற்றியும் ஆசிரியர் கவலை கொள்ளுதல் கூடாது. வாசகர்கள் எதிர்பார்த்தாலும் கூடாது. ஆனால் வல்லவனாகிய ஒரு எழுத்தாளனுக்குச் சில நிகழ்ச்சிகளையும் ஒன்றேபோல நோக்கும் திறன் அமைந்திருத்தல் உண்டு. கதை ஒவ்வொன்றையும் முற்றுற் முடித்துக் காட்ட வேண்டிய அவசியம் இல்லை. கதையை இன்னும் வளர்த்தியிருந்தால் ஒன்றும் பெரியதொரு பயன் விளைந்திருக்க மாட்டாது என்ற நம்பிக்கை வாசகர்களுக்கு ஏற்படக் கூடிய வகையில் முடிவு இருந்தாற்போதும். எடுத்துக்காட்ட விரும்பிய பாத்திரத்தின் ஒரு பகுதியை படம் பிடித்துக் காட்டுவது போதுமானது, சிறுகதைகளில் ஒரே நோக்கமும், ஒரே விளைவுந்தான் எதிர்பார்க்கப்படுகின்றன. ("Singleness of aim and singleness of effect are the two great can I one by which we have to try the value of short story – as a piece of art." – W.H. Hudson in his introduction to the study of literature. P.445) நோக்கம் நிறைவேறும் வகையில் கதை அமைந்திருத்தல் போதுமானது பல எழுத்தாளர்களுக்கு இது கைவரப்பெறாததால்தான் புதினங்களை எழுதத்தலைப்படுகிறார்கள் என்று சொல்வது தவறாக மாட்டாது.

முடியரசன் தன் கண்ணெதிரில் நடந்த நிகழ்ச்சிகளையே அடிப்படையாகக் கொண்டு தன் சிறு கதைகளை வடிவமைத்து தான் சொல்ல வந்த சமுதாய மேம்பாட்டுக் கருத்துக்களை எக்கோவின் காதல், அத்தை வீட்டில் பேய் என்னும் கதை வாயிலாகவும், பெண்ணியக் கருத்துக்களை கண்மூடி வழக்கம், சந்தேக முடிவு, கடை முழுக்கு, அணைந்த விளக்கு, அவமானச் சின்னம், இரண்டு தந்தி போன்ற கதைகள் வாயிலாகவும் மற்றும் தமிழ் / தமிழின உணர்வுக் கருத்துக்களை காக்கையின் கடிதங்கள், கிருஷ்ணார்ச்சுன யுத்தம், அழிந்துவிடுமோ என்ற கதைகள் வாயிலாகவும் வாசகர்களுக்குக் கொண்டு சேர்த்து சமுதாய முன்னேற்றத்திற்கும் / தமிழின உணர்வுக்கும் வித்திட்டுள்ளார்.

பயன்

சிறுகதை எழுதுகிறவர்கள், 'கதை' பொய் என்ற உணர்ச்சி வாசகர்கள் இடத்தில் உண்டாகும்படி எழுதுவார்களேனால், அக்கதையில் நன்மை பல உண்டு என்றாலும், அவை முழுப்பயன் அளித்தல் இல்லை என்ற நம்பிக்கை பெயின் என்பார்க்கு உண்டு. ("If a story once fell to be false, then all its virtues are of no avail" – Paine P.39) மெழுகுவர்த்தி பார்ப்பதற்கு அழகாகவும், தொடுவதற்கு இனியதாகவும் முகருவதற்கு மணமுடையதாகவும் இருந்தாலும் அது எரியவில்லை என்றால், எவ்வாறு தக்க பயன் விளைத்தல் இல்லையோ அவ்வாறே மெய் போன்றது என்ற உணர்ச்சியை எழுப்பாத சிறுகதை முழுப்பயன் தராது என்பது நம்பிக்கை. அந்த வகையில் முடியரசனின் சிறுகதைகள் அனைத்தும் தன் சொந்த வாழ்க்கை அனுபவத்தை கதையாக்கியதால் புத்துயிர் பெற்று எதிர்பார்த்தப் பயனைத் தந்தது.

மொழிநடை

மொழிநடை என்பது தனக்கே உரிய முறையில் ஒருவர் ஒரு கருத்தினை வெளிப்படுத்தும் பாங்கு ஆகும். இத்தகைய தனித் தன்மைகளின் பிரதிபலிப்பும் ஆசிரியரை உணர்த்தும் பாங்கும் கவிதை அல்லது உரைநடைப் படைப்பிற்கு அதிகமான திறனைத் தந்து வாசகனை ஈர்க்கின்றன. தொடர்ந்து வாசிக்கச் செய்கின்றன. (ஆதித்தன்.ஏ. மொழியியல் ஆய்வுகள், ப.எண்.23) மேலும், நடை என்பது ஓர் ஆசிரியரின் தனித் தன்மையை வெளிப்படுத்தக்கூடியது. அவரை இனங்கண்டு கொள்ளும் வகையில் அவ்வாசிரியர் தன் நடையை அமைப்பார். எழுத்தாளர்கள் பயன்படுத்தும் நடையை வெறும் வார்த்தைக் கோவை மட்டும் ஒருவனை எழுத்தாளன் ஆக்குவதில்லை. வார்த்தைச் செட்டும் அதன் பிரயோகமுந்தான் அவனை எழுத்தாளன் ஆக்குகிறது. இந்தப் போக்கைத்தான் நாம் பாணி என்கிறோம். பாணி ஒவ்வொருவருக்கும் தனி நடை என்பது ஒருவரின் உடை போன்றது என போப் சுட்டிக் காட்டுகிறார் (சிதம்பர நாதன் இலக்கிய விமர்சனம், ப.எண்.130). ஆசிரியர் தன் அனுபவத்தைக் கற்பனை மூலம் எண்ணிப் பார்த்து அதனைத் தன்னுடைய சொல்லாட்சியில் கவிதையாகவோ, உரைநடையாகவோ, வெளிப்படுத்தும்பொழுது படிப்பவர்களின் ஆர்வமும் கதையுடனான தொடர்பு அவர்களை உணர்ச்சிக்குள்ளாக்குகின்றன. அவ்வகையில் முடியரசனின் சிறுகதைகளில் வெளிப்படும் நடையை நோக்குவோம்.

முடியரசனின் சிறுகதை மொழிநடை

முடியரசனின் சிறுகதை நடை, தெளிவாகவும், விளக்கமாகவும் பாமர மக்களும் ஓரளவு படித்தவர்களும் புரிந்து கொள்ளும்படி எளிய சொற்களைக் கொண்டு அமைந்துள்ளது. அவரின் நடையில் ஆங்கிலம் போன்ற பிறமொழிச் சொற்களையும் தம் சிறுகதைகளில் கையாண்டுள்ளார். முடியரசனின் மொழிநடை அவருடைய கவித்துவம் மற்றும் அவருடைய தனிப்பட்ட குணப்பண்புகளையும் அவருடைய வாழ்க்கையைப் பற்றிக் கொண்டுள்ள தமிழுணர்வையும், பகுத்தறிவுக் கருத்துக்கள் மற்றும் சமுதாய மேம்பாட்டுக் கருத்துக்களையும் அவருடைய கற்பனைத் திறனையும் வெளிப்படுத்தக் கூடியதாகும். முடியரசன் தன் வாழ்க்கையில் தன் கண்ணெதிரே நடந்த நிகழ்ச்சிகளையே அடிப்படையாகக் கொண்டு, தாம் வெளியிட வேண்டிய உணர்ச்சிகளையும் சிந்தனைகளையும் தெளிவாகவும், முழுமையாகவும் தம் சிறுகதைகளில் புலப்படுத்தியுள்ளார்.

நடையின் பகுப்பு

“சிற்பக் கலைக்கு கல்லும், செம்பும், ஓவியத்திற்கு வண்ணமும், இசைக்குச் சந்தமும் எப்படியோ அப்படியே இலக்கியத்திற்கு மொழி அடிப்படையாக அமைகிறது. மொழியைப் போன்றே அதன் நடையும் இன்றியமையாதது” என்ற ரெனிவெலக்- *(Rene Wellek and Austinvarren Theory of Literature, P.22)* கூற்றுப்படி முடியரசனும் தமது படைப்பில் உள்ள கதை மாந்தர்களின் பாத்திரத்திற்கு மெருகூட்டுகிறார். அவரது நடையில் எதுகை, மோனை, உருவகம், உவமை, வட்டாரமொழி, உரையாடல், சூழ்நிலைக்கேற்ற நடை, கற்பனை, நகைச்சுவை, கவிதை வடிவம், ஓசைநயம், குறியீடுகள் போன்ற உத்திகள் மேற்கொண்டுள்ளார்.

வட்டார மொழி

மொழியைப் பற்றி மு.வரதராசன் ‘ஒரு மொழியின் பல்வேறு பிரிவுகள், இடம், தொழில், ஜாதி, நாகரிகம் முதலியவற்றின் வேறுபாடுகளுக்கு ஏற்ப ஒரு மொழியே சிறிது வேறுபட்டு நிற்கும் கிளைகளாகும் (வரதராசன்.மு. மொழிவரலாறு, ப.எண்.166), என்று குறிப்பிடுகிறார். எப்படி நம்மிடமிருந்து நிழலைப் பிரிக்க இயலாதோ அவ்வாறே மொழியைப் பிரிக்க இயலாது. வட்டார மொழியின் துணையைக் கொண்டே மக்கள் ஒருவருக்கொருவர் இன்ப, துன்ப நிகழ்ச்சிகளைப் பரிமாறிக் கொள்கின்றனர். ‘சந்தேக முடிவு’ என்ற சிறுகதையின் கதாபாத்திரமான பரமேசுவர ஐயர் தனது பிராமணர் பேச்சின் மூலம் உரையாடுவதாக முடியரசன் கதைப்போக்கை அமைத்துள்ளார்.

சிறுகதையில் உரையாடல்

சிறுகதையில் அமையும் உரையாடல் கருவின் வளர்ச்சி, கதையின் இயக்கம், கதாபாத்திரங்களின் பண்பு, கதாபாத்திரங்களின் சூழல் அமைப்பு, விளக்கம் முதலியவற்றிற்குக் காரணமாக அமைதல் வேண்டும். சொல்லுவதும், காட்டுவதும் கதையாசிரியரின் வேலைகள். முடியரசன் சிறுகதைகளில் தனிமொழிகளும், அகமான ஊடுருவல் முறையிலும் நனவோடை முறையிலும், கனவில் கூறுவது போலவும் விளக்கமாக உரைநடை அமைந்துள்ளது. இவரது சிறுகதைகள் உயிரோட்டமும், கருத்துச் செறிவும், உவமை நலன்களும், கற்பனையும் அமைந்த உரையாடல்கள் அமைந்துள்ளன. இக்கூறுகளால் கதையோட்டம் சிதறாமல் தெளிந்த நீரோடை போன்று காட்சி தருகின்றது.

பத்தி பிரிப்பு

சிறுகதைகளில் சொல்லாட்சியும், பத்திப் பிரிப்பும் இன்றியமையாதனவாகும். தூய தமிழச் சொற்களைக் கொண்டு எளிய நடையில் பத்திப் பிரிப்பவர் முடியரசன். இவரது சிறுகதைகளில் பத்தி வடிவில் படிப்பவரைக் கவரும் முறையில் அமைந்துள்ளது.

“நான் திட்டங்களை மட்டும் தீட்டிக் கொண்டிருக்கும் வெறும் எழுத்தாளன் மட்டுமல்லன். செயலில் இறங்க வேண்டும் என்று விரும்புகிறவன். நான் உண்மையில் மாக்ஸிம் கார்க்கியைப் போன்றவன். அவன் ஒரு சிறந்த எழுத்தாளனாக இருந்ததோடல்லாமல், புரட்சி இயக்கத்தில் பெரிதும் பங்கு கொண்டு பணியாற்றியவன். அவனைப் போலவே நம் நாட்டு எழுத்தாளர்களும் திகழ வேண்டும் என்று கனவு காண்பவன் நான்” என்ற தன் கொள்கையை எக்கோவின் காதல் என்ற சிறுகதையில் கதைநாயகன் வாயிலாக முடியரசன் கூறிவிடுகிறார்.

ஓசை நயம்

முடியரசன் கவிதைகளை நோக்கினால் அவற்றில் கவிதைக்குரிய இலக்கணங்கள் அமைந்துள்ளன. கற்பவர் மனதைக் கவரும்படி உணர்ச்சி, கற்பனை, வடிவம், ஓசை நயத்துடன் காணப்படுகின்றன. இசை நயத்திற்கு மனிதனின் உணர்வுகளைத் திருப்பி விடும் ஆற்றல் உள்ளது. இவ்வாற்றலை “இரண்டு தந்தி” என்ற சிறுகதையில், முடியரசன் மிகச் சிறப்பாகக் கையாண்டுள்ளார்.

> “மாய வாழ்வு சதமாகுமா-மானிடனே நீ
> மனதை அலைய விடலாகுமா”

என்ற முடியரசனின் வரிகளை படிக்கும்போதே மனித வாழ்வின் தத்துவம் புரிகின்றது.

குறியீடுகள்

சிறுகதைகள் படிப்பவரின் உணர்ச்சியைத் தூண்டும் வகையில் அமைய வேண்டுமெனில் அவற்றில் குறியீடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. முடியரசன் மற்றக் குறியீடுகளைக் காட்டிலும் வியப்புக்குறியை அதிகம் பயன்படுத்தியுள்ளார்.

முடியரசனின் **'அணைந்து விடுமோ'** என்ற சிறுகதையில், "கண்ணா! புராணங்களைப் பொசுக்கச் சொன்ன உன் பேனாமுனை இன்று அவைகளுக்கு அரணாவதா! உன் கற்பனை, சினிமாவிலா நுழைய வேண்டும்? அது சீர்திருத்த உருவிலே நுழைந்திருந்தாலும் நான் மகிழ்ந்திருப்பேன். மக்களை மறுபடியும் மடமைக்கு இழுத்துச் செல்கிறதே உன் கற்பனை!" (முடியரசன், எக்கோவின் காதல்-அணைந்து விடுமோ - ப.எண்.202) என்ற வரிகளில் பலமுறை வியப்புக்குறியைப் பயன்படுத்தியுள்ளார். இடைச்சொற்களை அவர் எடுத்தாளும் வகையில் பொருள் அழுத்தமும் சொற்செறிவும் தெளிவும் அமைந்து சிறுகதைக்கு ஒரு மறுமலர்ச்சியைக் கொடுக்கின்றன. இவர் சொற்களை ஏற்ற வகையில் கையாளும் திறன் இவருடைய சிறுகதைகளுக்கு மேலும் மெருகூட்டுகிறது. (இக்கதையில் கண்ணன் என்ற பாத்திரப்படைப்பு, ஒரு பெரும் புகழ்பெற்ற கவிஞரை அவரின் அன்றைய காலக்கட்ட நிலையை மறைமுகப்படுத்துகிறது.)

சிறுகதை முடிவு

சிறுகதையில் முடிவு இன்பமாக இருத்தல் வேண்டும் என்று சிலரும், துன்பமாக இருத்தல் வேண்டும் என்று சிலரும் நினைக்கிறார்கள். துன்ப முடிவினாலேயே ஒரு கதை கலையழகுடையதாகிவிடும் என்ற தப்பான கருத்து சிலரிடத்திற்கு பரவி வருகிறது. துன்பியல் முடிவினால் தானோ இன்பியல் முடிவினால்தானோ கலையழகு பெற்று விடாது, கலையழகிற்கு ஏனைய பல காரணங்கள் உண்டு என்பதை மதித்தல் வேண்டும் என்பார் பெயின். (Happiness and unhappiness have nothing to do with art, the artistic ending is the right and inevitable ending") நாம் வாழும் இக்காலத்தில் மக்கள் எதனையும் விரைந்து செய்ய விரும்புகின்றனர். அதனால் கதைகளை விரைவிற் படித்து முடித்துவிட வேண்டும் என்ற எண்ணம் பலரிடத்திற் பரவியுள்ளது. (முனைவர் அ.சிதம்பரநாதன் செட்டியா, தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், ப.8).

அவ்வெண்ணத்தை நிறைவேற்றும் வகையில் முடியரசனின் சிறுகதை முடிவுகள் அமைத்துள்ளதை அவரின் கதைகளின் முடிவின் மூலம் அறிய முடிகிறது. முடியரசன் பயன்படுத்திய கற்பனைத் திறனும், கூறும் திறமுமே கதைக்கு உயிர் தருகின்றன. அவர் கூறவரும் நிகழ்ச்சிகள் கூறப்படும் முறையில் இருந்தே கதையின் உணர்வும், தாழ்வும் விளங்கும். நிகழ்ச்சிகள் கொண்ட அவர் கதைகள் முடிவைக் கூறியே தீர வேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. இன்பமாகவும், துன்பமாகவும் மட்டும் முடிவு இல்லாமல், கலைத்தன்மையுடன் முடிந்திருப்பதுதான், முடியரசன் சிறுகதைகளை வெற்றியடைய வைத்து வாசகனைத் திரும்ப படிக்கத் தூண்டுகிறது.

“போற்றுவாரின்றி அழிந்துவிடுமோ இந்தப் புரட்சிக் கவிதைகள் என்று அன்று வருந்தினேன், இன்று அவன் புகழ் அழிந்து விடுமோ என்று அஞ்சுகிறேன். இவன் மாறியதால், புரட்சி அழிந்து விடுமோ, மக்கள் விழிப்புணர்ச்சி அழந்துவிடுமோ என்று துடிக்கிறேன்” என்று கதைநாயகனான கவிஞர் கண்ணனின் நண்பன் கனவு கண்டு கொண்டிருந்தபோது அவர் மனைவி அவரை எழுப்பிவிட்டதாகவும், ‘அவளும் சிரித்தாள், நானும் சிரித்தேன்’ (முடியரசன், எக்கோவின் காதல், ப.எண்.204) என்று “அழிந்து விடுமோ” என்ற சிறுகதையை முடியரசன் முடிக்கிறார்.

முடிவுரை

இலக்கியம் என்பது காலந்தோறும் மாறிவரும் மக்களின் உணர்ச்சி, அவர்களின் வாழ்க்கை முறையைப் படம் பிடித்துக் காட்டுவதோடு, சமுதாய முன்னேற்றக் கருத்துக்களை எளிமையாகவும், வலிமையாகவும் பதிவு செய்வதாகும். இவ்வகையில் முடியரசன் தமிழுக்கு ஆற்றிய பங்கு மகத்தானதாகும். அதற்கு ஒருவகைக் காரணம், அவர்தாம் கூறுகின்ற கருத்துக்களுக்கு வலிமை சேர்க்கின்ற வகையில் தனது சிறுகதைப் படைப்புகளில் பல உத்திகளைக் கையாண்டு அவரது மொழியாற்றல் வெளிப்பட்டு நிற்பதை உணர முடிகிறது.

வீறுகவியரசர் முடியரசனார் கடிதவிலக்கியத்தில் வாழ்வியல் அறம்

சுழல் சத்தியப்பிரியன் *

முகவுரை

தமிழ்த் தேசியப் புரட்சிக் கவிஞரான வீறுகவியரசர் முடியரசன் கவிதை, இசைப்பாடல், காப்பியம், கட்டுரை, சிறுகதை வடிவங்களில் மட்டுமல்லாது கடிதவிலக்கியத்திலும் ‘அன்புள்ள பாண்டியனுக்கு’, ‘இளவரசனுக்கு’ ஆகிய தலைப்புகளிலான நூல்களில் தனித்துவமிக்க தம் எழுத்தாற்றலை எண்பித்துள்ளார். மாணவர்களை வழிநடத்த பாடநூலாக எழுதப்பெற்ற கவிஞரது கடிதவிலக்கியம் சுட்டும் வாழ்வியல் அறம் பற்றி சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலே இக்கட்டுரையின் தோற்றுவாய் ஆகும்.

இளவரசனுக்கு

‘இளவரசனுக்கு’ என்னும் தலைப்பிலான இந்நூலில் பதினேழு கடிதங்கள் உள்ளன. ஒவ்வொரு கடிதத்திலும் ‘அன்புள்ள அரசு’ என்று விளித்து ‘இப்படிக்கு, உன் தந்தை முடியரசன்’ என்று கடிதம் நிறைவுறுவதாக அமைத்துள்ளார். ‘எனது கடமை’ என்னும் முதல் கடிதத்தில் ‘நாடு பயனுற வாழ வேண்டும். பகையுணர்வை விட்டு விலக்கி பண்போடு பழகுதல் வேண்டும். கட்டுப்பாடும் அடக்கமும் உடையவனாக இருந்தால் உயர்வு தானாய் வரும். பணிந்து நடக்க வேண்டுமே தவிர தாழ்வு மனப்பான்மையுள்ளவனாக அடிமையுள்ளம் உடையவனாக வாழப் பழகக்கூடாது’ என்று அறிவுறுத்துகிறார்.

மேலும், நாட்டை ஆள்வோரும், வீட்டை ஆள்வோரும் தத்தமது கடமைகளைச் சரியாகச் செய்தால் அறம் தழைக்குமென்றுரைக்கின்றார். ‘ஒற்றுமை வேண்டும்’ என்னும் கடிதத்தில் மொழி முன்னேற்றம், நாட்டு நலம், இன ஒற்றுமை இவற்றை அடிப்படையாகக் கொண்டு குறள்நெறி பரவவேண்டும். பொது நன்மைக்காகச் சிறு சிறு கருத்து வேறுபாடுகளை விட்டொழித்து ஒன்றுபட்டு வரும் உளப்பாங்கு வளர்ந்து, விரிந்து, பரந்து பயன்தர வேண்டுமென்று விழைகின்றார்.

---

* பொறுப்பாசிரியர், சுழல் திங்களிதழ், முடியரசனார் தெரு, மானகிரி-630 307.

அன்புள்ள பாண்டியனுக்கு

'அன்புள்ள பாண்டியனுக்கு' என்னும் நூல் தமிழக அரசு பாடத்திட்டக் குழுவினரால் பள்ளி மாணாக்கர்க்குப் பாடமாக வைக்கப்பெற்ற பெருமைக்குரியது. இந்நூலில் 'அறஞ்செய விரும்பு' முதலாக 'மானம் போற்று' ஈறாக பதினைந்து கடிதங்கள் இடம் பெற்றுள்ளன.

கடிதத் தலைப்புகள் அனைத்தும் அறநெறியுரைப்பனவாக அமைந்துள்ளன. ஒவ்வொரு கடிதத்தின் நிறைவிலும் அக்கடிதப் பொருண்மையோடு தொடர்புடைய குறட்பாக்களைத் தந்துள்ளார்.

அன்பும், அறனும்

'அன்பாய் இரு' என்னும் தலைப்பிலமைந்த கடிதத்தில் 'யாவரிடத்தும் அன்பு செலுத்தக் கற்றுக் கொண்டால் பகைவனும் பகைமை பாராட்டாமல் நண்பனாக மாறிவிடுவான். தீங்கு செய்தாரிடத்தும் அன்பு காட்ட வேண்டும். குடும்ப வாழ்க்கைக்கு அன்பு எவ்வாறு இன்றியமையாததோ அதைப் போலவே சமுதாய வாழ்க்கைக்கும் அன்பு கட்டாயம் வேண்டப்படுவதாகும். வாழ்வு செழித்து வளர சமுதாயத்திற்கூடிவாழ, பொதுநலம் பேணும் அன்புடையவராக வாழ வேண்டும்' என்று அறிவுறுத்துகிறார்.

இதைப்போன்று 'இணக்கம் அறிந்து இணங்கு' என்னும் கடிதத்தில் 'உண்மை நட்பின் இயல்பைப் புரிந்து, வேண்டும் நட்பை விரும்பி வேண்டா நட்பை விலக்கி, நல்வாழ்வு வாழ வேண்டும்' என்று வேண்டுகோள் விடுக்கின்றார்.

ஔவையின் ஆத்திச்சூடி வரியான 'அறஞ்செய விரும்பு' என்பதைத் தலைப்பாக கொண்ட கடிதத்தில் 'உயர்ந்த இன்பத்தையும் சிறந்த பொருளையும் அடைய முதலில் அறத்தை விரும்ப வேண்டும். அறம் ஒன்றுதான் மக்களுக்கு இன்பம் பொருளோடு புகழையும் கொடுக்க வல்லது. ஆதலால் அறத்தைவிட உயர்ந்த ஆக்கம் உலகில் வேறொன்றுமில்லை. அறத்தினை மறப்பதைவிடக் கேடு வேறொன்றுமில்லை. அதனால் இயன்ற அளவு, இடைவிடாது, செல்லும் வழியெல்லாம் அறம் செய்ய விரும்ப வேண்டும். நல்லன எண்ணுதல், நல்லன சொல்லுதல், நல்லன செய்தல் இவையே அறம். செல்வம்

அழியும்; யாக்கை அழியும்; ஆனால், செய்த அறம் என்றுமே அழியாது. அத்தகைய அறத்தை ஏதோ செய்வோம் என்று கடனுக்காற்றுதல் கூடாது' என்று வலியுறுத்துகின்றார்.

உண்மையும், ஒழுக்கமும்

'உண்மை விளம்பு' என்னும் தலைப்பிலமைந்த கடிதத்தில் 'வாயாற் பொய்யா தொழுகுவது வாய்மை; மெய்யால் பொய்யா தொழுகுவது மெய்ம்மை; உள்ளத்தாற் பொய்யா தொழுகுவது உண்மை. இவ்வாறு சொல், செயல், மனம் மூன்றானும் பொய்யாதொழுக வேண்டும் பொய்யாமையில் வழுவாது நின்றொழுகினால் ஏனைய அறங்கள் தாமே வந்தெய்தும். இப்பிறவியில் உயர்ந்த புகழெய்த விரும்பும் ஒருவன் பொய்யாமை என்னும் ஓரறத்தைத் துணையாகக் கொள்ள வேண்டும்' என்று உண்மையெனும் பேரறத்தைப் போற்றியுரைக்கின்றார்.

தம் கடமைகளை நன்கு அறிந்த நல்லறிவாளர் வளமை சுருங்கி வறுமையுற்றபோது ஒப்புரவு செய்வதிலே தளரமாட்டார் என்று 'ஒப்புரவுவொழுகு' என்னும் கடிதத்தில் குறிப்பிடுகிறார்.

'கல்வியின் பயன் அறிவு, அறிவின் பயன் ஒழுக்கம்' என்னும் கொள்கையில் உறுதியுடைய முடியரசனார் கனிவும், கண்டிப்பும் நிறைந்தவர். நல்லாசிரியர் விருது பெற்ற தமிழாசிரியர். மாணவர்களுக்கு மட்டுமல்லாது அனைவருக்குமே ஒழுக்கத்தின் மேன்மையை அறிவுறுத்தும் கவிஞர் 'இரு திணைக்கும் பொதுவாகவுள்ளது உயிர், அதனால் ஒரு திணைக்கும் தனிச்சிறப்பு விளைவதில்லை. ஆனால் ஒழுக்கம் தனிச் சிறப்பைத் தருகிறது. அவ்வொழுக்கமே அவனை உயர்திணையாக்குகிறது. அதனால் சிறப்புத் தராத உயிரைவிடச் சிறப்பைத் தரும் ஒழுக்கமே உயர்ந்தது' என்று 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்னும் குறட்பா அடிக்குப் பொருத்தமான பொருளுரைக்கின்றார். மேலும் ஒழுக்கம் என்பதற்குப் பொருள் கூறும் வீறுகவியரசர் 'அறநூல்கள் விதித்தனவற்றைச் செய்தலும், விலக்கினவற்றை விடுத்தலும் ஒழுக்கமாகும். செய்ய வேண்டுவனவற்றைக் கூறுதல் விதித்தல்; செய்யத் தகாதனவற்றைக் கூறுதல் விலக்கல்' என்று அறத்தை வலியுறுத்துகின்றார்.

பணிவும், துணிவும்

'பணிவுடன் பழகு' என்னும் கடிதத்தில் 'கல்வியும் புகழும் வளர வளர செருக்குணர்வு வளர்வது இயல்பு. ஆனால் அச்செருக்குணர்வை முளையிலேயே கிள்ளி எறிந்தால்தான பணிவென்னும் நல்லுணர்வு தளிர்த்துச் செழித்து வளரும். மெய்யடக்கம், நாவடக்கம், மனவடக்கம் இம்மூன்றும் அனைவர்க்கும் இன்றியமையாது வேண்டப்படுவன. வாழ்விற் சிறந்து விளங்க இவை துணை செய்யும்' என்று பணிவின் பெருமையைப் பறைசாற்றுகிறார்.

மானம் காத்து நிற்பதே வீரம் என்னும் கொள்கையுடைய வீறுகவியரசர் முடியரசனார் 'எக்காலத்தும் எத்தகைய சூழ்நிலையிலும் தந்நிலையிலிருந்து தாழாமையும், தாழ்வுவரின் உயிர் வாழாமையும், தம்குடிப் பிறப்புக்குத் தாழ்வுவரும் செயல்களைச் செய்யாமையுமே மானம் ஆகும். புகழையும், மானத்தையும் நிலைநிறுத்தவேண்டுமென்ற கொள்கையுடைய சான்றோர் தாம் பிறந்த குடிக்கு இழிவுதரும் தாழ்வான செயல்களைச் செய்யவே மாட்டார்' என்று 'மானம் போற்று' என்னும் தலைப்பிலான கடிதத்தில் தெளிவுறுத்துகிறார்.

நிறைவுரை

வீறுகவியரசர் முடியரசனார் சொல் வேறு, செயல் வேறு என்றிராமல் தன் நூல்களில் சொன்னவாறே வாழ்ந்து காட்டிய பண்பாளர் ஒளிவுமறைவு இல்லாத குற்றம் குறையில்லாத அற வாழ்வை வாழ்ந்து காட்டிய அறவோர். அவரின் படைப்புகள் வழி அவர்கூறும் வாழ்வியல் அறங்களைக் கற்று நிற்க வேண்டியது தமிழ்கூறு நல்லுலகத்தின் கடமையாகும்.

புரட்சிப் பாவலர் - முடியரசனார்

ம.சத்தியப் பிரியா *

முன்னுரை

அகவாழ்விலும் புறவாழ்விலும் தான் ஏற்றுக் கொண்ட கொள்கைகளில் கிஞ்சித்தும் பிறழாமல் எழுத்திற்கும் வாழ்விற்கும் இடைவெளிவிடாமல் வாழ்ந்துகாட்டியவர் புரட்சிப் பாவலர் முடியரசனார் ஆவார். யார் யாரையோ தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடும் தமிழ்ச் சமூகம், அவர்களின் தகுதிக்கு மீறிய சன்மானங்களை வழங்கி மண்டியிட்டுப் போற்றும் நிலையைக் காணுகையில் கொள்கை வழி நின்றோரையும் செம்மாந்த வாழ்வை வறுமை நிலையிலும் விடாப்பிடியாய்க் காத்து நின்ற தன்மானச் சான்றோரையும் கண்டு கொள்ளாமல், அவர்களுக்குத் தகுந்த மதிப்பளிக்கத் தவறிவிட்டது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அத்தகையோர் வரிசையில் கொள்கைவழி நின்ற குணக்குன்றாம் புரட்சிப் பாவலர் முடியரசனார் பற்றி சுருங்கச் சொல்லி அவர் புரட்சிப் பாவலர் என்பதை உணரச் செய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

பாடும் பறவை - முடியரசன்

வீறுகவியரசர் இயற்றிய 'பாடுங்குயில்' என்னும் நூலில் 'நானொடு பாடும் பறவை' என்னும் தலைப்பில் தன்னைப் பற்றிக் குறிப்பிடும் கவிஞர்

'நானொடு பாடும் பறவை – பொழிவேன்
நாடொறும் பாடல் நறவை .....
முந்திய தமிழிசை நடையில் - கவிதை
மொய்ம்புறப் பாடுதல் உடையேன்
கொள்கை கொணர்ந்ததை முடைவேன் - அந்தக்
கூட்டினில் வந்தே அடைவேன் தெள்ளிய
தமிழ்மழை விழைவேன் - என்றும்
தித்தித் திடஇசை பொழிவேன்....
ஈயென எதிலும் அமரேன் - நறுமலர்
எதுவோ அதையே நுகர்வேன்.......

* பட்டதாரி தமிழாசிரியை, அரசு மேல்நிலைப்பள்ளி, கண்டமானடி, விழுப்புரம்.

வாழ்மையைப் பெரிதாக் கருதேன் - என்றும்
வாய்மையை மீறித் திரியேன்
தாழ்விலுஞ் செம்மைக் குரியேன் - என்றன்
தாயகம் காக்கும் குறியேன்'

என்று தன் வாழ்க்கையைப் பாடலாக்கிக் காட்டியுள்ளார்.

தேன் போன்ற பாடல்களைப் பாடும் பறவையான தான், கொண்ட கொள்கைகளில் கொஞ்சமும் பிறழாமல் பாடல்களை இயற்றி அவற்றைப் பழந்தமிழிசையில் தருவதாகவும், நறுமலர் எதுவோ அதிலமர்ந்து அதிலுள்ள தேனை மட்டுமே நுகரும் தும்பிதான் எனவும், வாய்மை மீறாத வாழ்க்கை வாழ்பவன் என்றும், வறுமையிலும் செம்மை காத்து தாயகம் காப்பேன் என்றும் தன் குறிக்கோளையும் கொள்கையையும் நெஞ்சம் நிமிர்த்திப் பாடுகின்றார். இத்தகைய நெஞ்சுரம் நாம் கதாநாயகர்களாகக் கொண்டாடித்தீர்க்கும் எத்தனை கவியரசர்களுக்கு வரும்? பாடியவாறே வாழ்ந்துகாட்டிய, வாழ்ந்ததையே பாடிக் காட்டிய அப்பழுக்கற்ற நேர்மையின் மறுவுருவம்; சான்றாண்மையின் திருவுருவம் வீறுகவியரசர் ஆவார்.

புரட்சிப் பண்பாடிய பாவரசர்

'கவிஞர் முடியரசன் ஓர் அற்புதக் கவிஞர். பொருளீட்டுவதற்காக ஆபாசங்களையும் அருவருப்புகளையும் பாடும் கவிதாசர்களிடையே முடியரசன் வேறுபட்டு நின்று மனிதமுன்னேற்றத்துக்காகவும், தமிழ் விடுதலைக்காகவும், அடிமை விலங்கை உடைக்கவும் பாடிய புரட்சிக்கவிஞராக நான் காண்கிறேன்' என்று வீறுகவியரசரை வியந்து போற்றினார் எழுத்தாளர் ஜெயகாந்தன் (முடியரசன் கவிதை முத்துக்கள், ப.248, சாகித்திய அகாதெமி வெளியீடு)

முடியரசனாரின் கவிதைகளில் புரட்சியும் எழுச்சியும் மேலோங்கி இருக்கும். அவர் கவிதைகள் படிப்போர்க்கும் கேட்கும் பாமரர்க்கும் புரட்சியுணர்வைத் தூண்டும் ஆற்றல் மிக்கவை.

"புழுவாவுனை இகழ்வார் முனம் / புலியேறென எழுவாய்
பொதுவாழ்வினில் நிலையோடிரு / புதுவாழ்வினை அடைவாய்
தொழுதே வளர் உடல் வாழ்வது / தொலையாயெனில் உனையே

தொழுநோயொடு திரிவாரினும் / இகழ்வாரிதை நினைவாய்
மொழிவாழவும் இனம் வாழவும் / முயல்வாய் தமிழ் மகனே
முரணாதொரு முகமாயெழு / முடியாததும் உளதோ?
இழிவாகிய நிலை ஓடிட /எடுவாள் பகை மலையோ
எழுவாய் தலை நிமிர்வாய் உனை /எதிர்வாரினி இலையே"
(புலியேறென எழுவாய், நூல்: முடியரசன் கவிதைகள்)

என்னும் பாடலைச் சான்றாகக் கொள்ளலாம். "தமிழ் மானம், தமிழ் உணர்வு, தமிழர் எழுச்சி, சமுதாயப் புரட்சி, பகுத்தறிவு முதலியன பற்றி எழுச்சிப் பாடல்களை எழுத வந்த இன்னுமொரு புரட்சிக்கவிஞர்தான் கவியரசர் முடியரசர்" என்று தமிழறிஞர் ஒளவை நடராசன் அவர்களும்,

"புரட்சிக்கவிஞர் பாரதிதாசனை நான் நேரில் பார்த்ததில்லை. நாங்கள் பார்த்த பாரதிதாசன் கவிஞர் முடியரசன் தான். இன்னொரு பாரதிதாசன் அவர்" என்று பேராசிரியர் சுப.வீ அவர்களும்,

"தமிழ் நாட்டின் 'இரண்டாம் பாவேந்தர்' ஒருவரெனில் கவியரசர் முடியரசர் அன்றோ" என்று கவிச்சுடர் கவிதைப்பித்தன் அவர்களும்

"படைப்பாட்டுப் பாவேந்தர் மறைந்தார்! அந்தப்படைத் தலைமை இன்று முடியரசர் பெற்றார்! இவர் மீசை, அவர் மீசை! எழுச்சி மிக்க இவர் நெஞ்சம், அவர் நெஞ்சம்! அவரிழப்பை இவராலே இந்நாளில் ஈடு செய்தே இறவாத தமிழுக்கே உறவாய்த் தொண்டு நாம் புரிவோம்" எனக் கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்களும் கூறிய புகழுரைகள் (கவிதைக்குப் பிறந்த மகன் கவியரசர் முடியரசன், ப.31, கலைஞன் பதிப்பகம்) வீறுகவியரசர் புரட்சிப் பாவலர்தாம் என்பதற்கு அரண் சேர்க்கின்றன.

கனல் கக்கும் சொற்பிழம்புகள்

'பாடுங்குயில்' என்னும் நூலின் 'நற்பணியாற்றுவோம்' எனும் கவிதையில்

'ஏழைமை நீங்கிடச் சூளுரைப்போம் - தீமை / எங்கெழு மாகினும் வாளெடுப்போம் / தோழமை பாடிட யாழெடுப்போம் - மக்கள் / துன்பங்கள் யாவையும் தூளடிப்போம் / சாதிகள் ஆக்கிய தீமைகளை –

அந்தச் சாத்திரக் குட்டையின் ஆமைகளை / மோதித் தகர்த்திடல் தீமையிலை – நீங்கள் / மூண்டெழு வீரினும் ஊமைகளோ? / சோம்பலை ஏய்த்தலை நீக்கிடுவோம் - கெட்ட / சூழ்ச்சிகள் வஞ்சனை போக்கிடுவோம் / கூம்பிய தோள்களை ஏற்றிடுவோம் - நாளும் / கூடும் உழைப்பினை யாக்கிடுவோம் / வாய்ப்பறை சாற்றலைத் தைத்திடுவோம் - நெஞ்சில் / வாய்மையை நேர்மையை வைத்திடுவோம் / ஏய்ப்பதை நாமினிநைத் தெறிவோம் - பொய்யை ஏறி மிதித்ததைப் பிய்த்தெறிவோம் வேதங்கள் பூதங்கள் என்றுரைத்தால் அந்த / வீணரின் கொள்கையைக் கொன்றழிப்போம்' என்று கனல் கொப்பளிக்கும் சொற்பிழம்புகளால் தமிழர்களின் உள்ளங்களில் புரட்சித்தீயை மூட்டியனார் இது போன்ற புரட்சிப் பாக்கள் பலவற்றால் அன்னைத் தமிழுக்கு அணிமகுடம் சூட்டிய புரட்சிப் பாவலர் முடியரசனார் ஆவார்.

தன்மானக் கவியரசர்

"தணலென நிரப்பு (வறுமை) வந்து / தனியெனைத் தகைத்துத் தாக்க / அணுகினும் ஏழை யென்றால் / அரசன்யான் ஏற்பதில்லை!" எனச் செந்தமிழ்க் கவிதையால் தம் செம்மாந்த வாழ்வைச் சுட்டிக்காட்டிய வீறுகவியரசர் பொருளுக்கும் பதவிக்கும் அடிபணிந்தவர் அல்லர். இருமுறை அரசவைக் கவிஞர் பதவி தன்னைத் தேடிவந்தபோதும் துச்சமெனக் கருதி அதை ஏற்க மறுத்தவர்.

மதுக்களிப்பிலும், மாது சுகத்திலும் மூழ்கிக் கிடந்து ஊருக்கு உபதேசித்த, காசுக்குப் பாடி கால்பிடித்து பதவி தேடி, தேசத்தை தன்னினத்தைத் தாழ்த்திவிட்டு தேட்டையிடப் பாடும் போலிக் கவிஞர்கள் மத்தியிலும் துதிபாடிகள், அடிவருடிகள் தமிழை விற்றுப் பிழைப்பவர்கள் இடையேயும் மாசற்ற பொன்னாய் வஞ்சனைத் தூசுகளால் மறைக்கப்பட்டவர் தன்மானக் கவியரசர் முடியரசனார் ஆவார். எச்சூழலிலும் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ள முனையாத முடிசாய்க்கா முடியரசர் அவர்.

'கொலை வாளைக் கழுத்துக்குப் பின்வைத்த போதும் / கொட்டிப் பொற்குவியலை முன்வைத்த போதும் / தலைதாழாச் செம்மாப்பின் தமிழ் அரிமா! எங்கள் / 'தன்மானக் கவியரசர்' முடியரசர் அன்றோ! / வலைவீசிப் பார்த்தார்கள் நாற்காலி காட்டி! / வாவென்றும் அழைத்தார்கள் பணப்பேழை நீட்டி! / அலை வீசும் செல்வாக்கில்

நாடாண்ட பேர்கள் / அரசவைக் கவிஞரா? அமைச்சரா? உன்றன்விலை என்ன? / இரண்டிலே எது வேண்டும்? என்றார்! / வெகுண்டெழுந்(து) 'என்பாதச் செருப்புக்கும் ஈடோ / மலைபோல் நீர் கருதிடும் பதிவி?' என்றார்த்தே / மார்தட்டி நின்றவர் நம் முடியரசர் அன்றோ?' என்ற கவிச்சுடர் கவிதைப்பித்தனாரின் வரிகள் புரட்சிப்பாவலரின் பெருமித உயரத்தை நாம் அண்ணாந்து பார்க்க வைக்கும்.

முடிவுரை

பெரியார், அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர் போன்றோரின் நட்புறவைப் பெற்றிருப்பினும் தனக்காக எதையும் அவ்வுறவின் மூலம் பெற்றுக் கொள்ள எள்ளளவும் முயலாத தன்மானமும், தன் குடும்பத்தினருக்குக் கூட ஆட்சியாளர்களிடம் சாதித்துக் கொள்ளாத பேராண்மையும் மொழி - இனம் - நாடு காக்கத் தன் கவிதை வாள் சுழற்றிய வீரமும் அவரைத் தனித்துவமாய் தன்மானக் கவியரசராய் புரட்சிப் பாவலராய் நமக்கு முன்னிறுத்துகிறது; பின்பற்றச் செய்கிறது.

பாடுங்குயில் கவிதைகளில் வாழ்வியல் நெறிகள்

முனைவர் சு.சத்தியவதி *

முன்னுரை

நம் தமிழ்மொழி இன்று செம்மொழியாகப் பீடுநடைபோட அதன் தொன்மையும் இனிமையும் இலக்கண இலக்கிய வளமும் மட்டுமல்லாமல் இவ்வளங்களைக் கொண்டு சேர்த்த வடிவம் செய்யுள் வடிவமன்றோ! இச்செய்யுள் வடிவமே நம்மொழிக்குப் பெருமை சேர்த்த வடிவமாகும். இலக்கியத் தாயின் மூத்த மகள் கவிதை. அவளின் இளையமகள் கட்டுரை என்பார் க.ப.அறவாணன். இருபதாம் நூற்றாண்டில் கவிதை வளர்ச்சிக்கு அணிசேர்த்த பெருமகனார்களுள் வீறுகவியரசர் முடியரசனும் குறிப்பிடத் தகுந்தவர். இவருடைய 'பாடுங் குயில்' கவிதைத் தொகுப்பில் காணப்படும் வாழ்வியல் நெறிகளைக் காணும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

நன்னெறி

'இளைஞர்களே கேளுங்கள்' எனும் கவிதையில் இன்றைய இளைஞர்களைப் பண்படுத்தும் சிந்தனை வெளிப்படுகிறது. கலை, அரசியல் அறம், கடமை, பொதுவுடைமை, சமத்துவம், மொழிப்பற்று என நன்னெறிகளை விதைக்கும் செயலை,

"சாதியின் வேரை வெட்டுங்கள் நெஞ்சில்
சமநிலைப் பண்பை ஒட்டுங்கள்
மேதினி எல்லாஞ் சுற்றுங்கள் - அங்கே
மேன்மைகள் கண்டே பற்றுங்கள்"

என்பதன் வழி அறியலாம்.

'கற்றறிந்த நாவினர் சொல்லார்தம் சோர்வஞ்சி' என நாலடியார் கூறுகிறது. அன்று கற்றவர் பண்புடன் திகழ்ந்தனர். இன்று கற்கும் இளைஞர்கள் பண்பற்றுத் திகழும் பாங்கினை

* தமிழாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, பீர்க்கலைக்காடு.

"நாடக வேடங்கள்போல் - தலையில்
நார்முடி காட்டுகின்றீர்!
கற்பவர் செய்கையிதோ – நாட்டைக்
காப்பவர் நீவிரன்றோ?
நெற்பயிர் காண்வயலில் - களைகள்
நீக்கிட முன்வருவீர்"

எனும் வரி (கற்றவர் செயலா) விளக்கும். பயிர் செழிக்கக் களையை நீக்குவது போல் கற்பவரும் தம் வாழ்வு செழிக்கத் தம்மைப் பண்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது இதன் வழி கூறப்படுகிறது.

பொதுவுடைமை

இயற்கை அன்னை வாரிக்கொடுத்த ஐந்து பூதமும் உயிர்களுக்குப் பொதுவானது. ஆனால் மனிதன் தன் காலடியில் பட்ட நிலத்தை மட்டும் தனியுடைமை ஆக்கிக் கொண்ட புதுமையை,

"அஞ்சு பூதமும் ஆருயிர்ப் பொதுமை
ஆயினும் மாந்தன் ஆக்கினன் புதுமை
எஞ்சிய நிலத்தில் எல்லைகள் இட்டான்
இதுதனி யுடைமை எனவிதை நட்டான்"

எனும் கவிதை (ஐந்து பூதம்) அழகுற எடுத்துரைக்கிறது.

நிலையாமை

எழிலும் மணமும் கொண்ட மலரின் வாழ்நாள் ஒரு நாளாக இருந்தாலும் மனிதருக்குப் பயன் தந்து மடிந்து விடுகிறது. மனிதனும் தான் வாழும் நாளில் மலரைப் போல பலன் தர வேண்டும். ஏனெனில்,

"அழகும் மணமும் நிலையலவே – பாரில்
ஆடியடங்கும் முறையுளதே"

என வாழ்வு நிலையற்றதென்பதை 'மலர் தந்த பாடம்' கவிதை புலப்படுத்துகிறது.

நடுவு நிலைமை

சமூகத்தில் உயர்ந்த நிலையிலுள்ளோர் நேரடியாகவோ மறைமுகமாகவோ குற்றம் செய்வதல்லாமல் அதனை நியாயப்படுத்த

முயல்வதும் குற்றமேயாகும் என்பதைக் 'குற்றங் குற்றந்தான்' கவிதை பதிவு செய்கிறது.

"கற்றவர் என்போர் கயமைகள் யாவும்
கலைஎனும் பேரால் செய்தா லென்ன
இழிச்செயல் ஒன்றினை யார்செய் தாலும்
குற்றங் குற்றந்தான் ஒரு
சட்டஞ் சட்டந்தான்"

என்பதில் அனைவருக்கும் சமமாகச் சட்டம் திகழ வேண்டும் எனும் நடுவுநிலைமை நிலைநாட்டப்படுகிறது.

முன்னேற்றம்

மனிதன் தனக்கு நேரும் துன்பங்களுக்குத் தலையெழுத்துக் காரணமென நம்புகிறான். பழமையில் ஊறிப்போன இத்தகைய எண்ணங்களை நீக்கித் தன்னம்பிக்கையுடன் உழைத்தால் வறுமையிலிருந்து விடுபட்டு முன்னேறலாம் என்பது,

"நான்முகன் உன்மண்டை ஓட்டில் - ஏதோ
நாட்டினான் என்பதை நெஞ்சைவிட் டோட்டில்
ஏன்வறு மைத்துயர் நாட்டில்? – தம்பி
ஏறுமுன் னேறுழைப் பாலுயர் கோட்டில்"

என்று 'ஏறு முன்னேறு' கவிதையில் எடுத்துரைக்கப்படுகிறது.

வாய்மை

மனிதன் தான் செய்யும் கயமைகள் யாவுக்கும் கடவுள் எனும் நாமம் சூட்டி நியாயப்படுத்தும் மூடத்தனம் மாறி வாய்மை அறத்தை மேற்கொள்ள வேண்டுமென்பதை,

"நெஞ்சின் மாசை ஓட்டுவாய் - நல்ல
நினைவை யங்கே கூட்டுவாய்
வஞ்சம் நீக்கி வீட்டுவாய் - செய்கை
வாய்மை யாக்கிக் காட்டுவாய்"

என 'மூடம் என்று மாறுமோ' கவிதையில் கூறி வாய்மை நெறி வாழ அறிவுறுத்தப்படுவதைக் காணலாம்.

முடிவுரை

சமூகத்தின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்ட படைப்பாளனால்தான் சிறந்த படைப்புகளை நல்க முடியும். முடியரசனார் தமிழ்மொழி மீதும் தமிழ்ச்சமூகத்தின் மீதும் கொண்ட ஆழ்ந்த உணர்வுகளே பல்சுவைக் கதம்பமாம் ஷபாடுங் குயில்' கவிதைகளைப் படைத்தளிக்கக் காரணமாகும். இக்கவிதைகளில் சில மனிதனின் நெறியற்ற செய்கைகளைக் கூறுவதுடன் மனிதனை நெறிப்படுத்தும் செயல்களையும் இனிதே எடுத்துக் கூறுவதை மேற்கண்ட கருத்துகள் வழி அறியலாம்.

முடியரசனார் கவிதையும் திருநாவுக்கரசர் தேவாரமும் பாடுபொருள் - ஓர் ஒப்பீடு

முனைவர் சு.சத்தியவதி *

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டில் தமிழுக்காகவும் தமிழ் மக்களுக்காகவும் கவிதை வரிகளால் மட்டுமின்றித் தன் வாழ்வையும் அர்ப்பணித்த செம்மல் வீறுகவியரசர் முடியரசனார். கோட்டுப் பூப்போல மலர்ந்து பின் கூம்பாது தன்னுடைய கொள்கைகளில் உறுதிகொண்டவர். இவரது 'புதியதொரு விதி செய்வோம்' கவிதைத் தொகுப்பில் அமைந்துள்ள 'நீர்பானை ஓட்டையானால்?' கவிதையைத் திருநாவுக்கரசர் தேவாரத்துடன் (திருமுறை 5, 122(17) திருப்பூந்துருத்தி – பாவநாசத் திருக்குறுந்தொகைப் பதிகம், 2770-2779) ஒப்பிட்டுப் பாடுபொருளைக் காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முடியரசனாரும் தேவாரமும்

முடியரசனார் கவிதைகளை ஒருமுறை வாசித்தால் அவரது சுவாசம் தமிழ்மொழியும் தமிழ்ச் சமூகமும்தான் என்பது புலனாகும். சொல்வது யார்க்கும் எளிதானது. சொல்லிய வண்ணம் செயலாற்றுவது அரிதென்றார் வள்ளுவர். இவர் தாம் சொல்லிய வண்ணம் செயலாற்றியவர். தமிழ் இலக்கியங்களை ஆழ்ந்து கற்றவர் என்பதை அவருடைய படைப்புகளே உறுதிசெய்யும். தீந்தமிழ் பண்களாம் தேவாரத்திலும் பற்று கொண்டவர் என்பதைக் கடித இலக்கியத்தில் திருக்குற்றாலம் சென்று வந்தேன் பகுதியில் "தேவாரப் பெருமக்கள் குற்றாலத்து இறைவனை நினைந்து, தம்மை மறந்து உள்ளுருகிப் பாடுங்கால் அங்கு ஆர்த்து வீழும் அருவியை, அசைந்தாடும் நறுமலரை, குளிர்புனற் சாரலை, கொழுமலர்ச் சோலையை, வானுயர் மரங்களை, வளந்தரும் இடங்களையெல்லாம் மறந்தாரல்லர், அக்காட்சிகள் அனைத்தும் அவர்தம் அகக்கண்ணை விட்டகன்றில. அதனால் அக்காட்சிகளை அப்படி அப்படியே படம்பிடித்துக் காட்டுகின்றன அவர்தம் பாடல்கள். அவர்தம் பாடல்களில் அவ்வோவியங்களைக்

---

* தமிழாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, பீர்க்கலைக்காடு.

காணும் பொழுதெல்லாம் நானும் குற்றாலத்தில் இருப்பதாகவே எண்ணி என்னையும் மறந்துவிடுவேன்'' என்று கூறுவதைக் கொண்டு அறியலாம்.

'வாழ்வுப் பாதையில் பக்தி' எனும் கவிதையில் பக்தி என்ற பெயரில் நடக்கும் கயமைகளை எடுத்துக்காட்டி அன்பே பக்தி என்றும் அவ்வன்பால் உள்ளம் பண்படுதல் பக்தி என்றும் எடுத்துக் காட்டுகிறார். திருநாவுக்கரசரும் திருக்குறுந்தொகைப் பதிகத்தில் பக்தி என்ற பெயரில் நடக்கும் ஆரவாரங்களை எடுத்துக்காட்டி இறைவனிடம் மனதைச் செலுத்துதலே சிறந்த பக்தி எனக் கூறுகிறார். பக்தி என்பது மனச்செம்மை அடைதல் என்பதைத் திருநாவுக்கரசர் காட்டிய வழி இவரும் குறிப்பிட்டுள்ளதை அறியமுடிகிறது.

பாடுபொருள் ஒப்பீடு

'நீர்பானை ஓட்டையானால்...?' கவிதையில் முடியரசனார் சாதியின் பெயரால் பிரிவினைகளை ஏற்படுத்திவிட்டு இப்பிரிவினைகளை நீக்கத் தக்க செயல்முறைகளை நாடாது பிறவழிமுறைகளால் யாதொரு பயனுமில்லை என்று கூறுவதுடன் இன உணர்வுடன் ஒன்று கூடித் தமிழினம் தலைநிமிர வேண்டுமென்று கூறுகிறார். தமிழரெல்லாம் தமிழர் என்ற ஒரே சாதி அடையாளத்தை மட்டும் கொண்டிருக்க வேண்டுமென்ற அவரது அவாவினை,

"சேர்ப்பாரை ஒன்றாகச் சேர்க்காமல்
செயன்முறையிற் செய்து காட்ட
ஏற்பாடு செய்யாமல் எத்தனைதான்
முயன்றாலும் என்ன கண்டாய்
உனையொன்று வேண்டுகிறேன் உன்னினத்தை
முன்னேற்ற ஒன்று சேர்வாய்''

என்பதன் வழி அறியமுடிகிறது.

திருநாவுக்கரசரும் திருக்குறுந்தொகைப் பதிகத்தில் பக்தி எனும் பெயரில் நடக்கும் ஆரவாரங்களைத் தவிர்த்து இறைவனிடம் மனதைச் செலுத்துதலே உண்மையான பக்தி என உரைப்பதுடன் முதல் பதிகத்தில் பழியும் பாவமும் நீங்குவதற்குரிய வழிமுறையைக் கூறுகிறார்.

"பாவமும் பழிபற்றுஅற வேண்டுவீர்
ஆவில் அஞ்சு உகந்து ஆடும் அவன்கழல்

மேவ ராய்மிக வும்மகிழ்ந்து உள்குமின்
காவ லாளன் கலந்தருள் செய்யுமே" (பதி.1 : 2770)

என்றும்,

"கங்கை ஆடில் என் காவிரி ஆடில்என்
கொங்கு தண்கும ரித்துறை ஆடில்என்
ஓங்கு மாகடல் ஓதநீர் ஆடில்என்
எங்கும் ஈசன் எனாதவர்க்கு இல்லையே" (பதி.2:2771)

என்றும் குறிப்பிடுகிறார்.

- சாதிப் பிரிவினைகளைக் களைய மேற்கொள்ளும் வீணான வழிமுறைகளைத் தவிர்த்து இனவுணர்வுடன் தமிழினம் ஒன்றுபட வேண்டுமென்பதே முடியரசனார் கவிதை உணர்த்தும் கருத்து.
- பக்தி எனும் பெயரில் நடக்கும் பிற ஆரவாரங்களால் எப்பயனுமில்லை, இறைவனை மனதில் எண்ணிப் போற்றி வாழ வேண்டுமென்பதே திருநாவுக்கரசர் பதிகம் உணர்த்தும் கருத்து.
- முடியரசனார் தமிழினத்தை ஒன்றுபடுத்த விழைகிறார். திருநாவுக்கரசர் இறைவன்பால் மனதை ஒன்றுபடுத்த விழைகிறார். இருவருடைய சிந்தனையும் ஒன்றுபடுத்துதல் எனும் தன்மையில் ஒன்றுவதை அறியமுடிகிறது.
- முடியரசனார் தமிழின ஒற்றுமையையும், திருநாவுக்கரசர் உண்மையான பக்தியையும் பாடுபொருளாக்கியுள்ளதை உணரமுடிகிறது.

உவமை ஒப்பீடு

சாதிப் பிரிவினைகளை நீக்க உரிய செயல்முறைகளைச் செய்யாமல் வீணான வழிமுறைகளை நாடுவதை ஓட்டை நீர்பானையை உவமையாகக் கொண்டு முடியரசனார் விளக்குகிறார்.

"நீர்பானை ஓட்டையடா! நிரப்புகிறாய்
தண்ணீரை, நிறைதல் உண்டோ?"

நீர்பானை – மனது
ஓட்டை – சாதிப்பிரிவினைகள்
நீரை நிரப்புதல் – சாதிப்பிரிவினைகளைக் களைய மேற்கொள்ளும் வழிமுறைகள்

நீர்பானை என்ற மனதில் சாதிப் பிரிவினை என்ற ஓட்டையை வைத்துக் கொண்டு சாதிப் பிரிவினைகளை நீக்க வேண்டும் என்ற நீரை நிரப்பினால் பானை நிறையுமோ? நிறையாது என்பதே இவ்வுவமை விளக்கும் கருத்து.

திருநாவுக்கரசரும் திருக்குறுந்தொகையில் ஒன்பதாம் பதிகத்தில் உண்மையான பக்தியின்மையை ஓட்டைக் குடத்தை உவமையாகக் கொண்டு விளக்குகிறார்.

“கோடி தீர்த்தம் கலந்து குளித்து அலை
ஆடி னாலும் அரனுக்கு அன்பு இல்லையேல்
ஓடு நீரினை ஓட்டைக் குடத்து அட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோடு ஒக்குமே” (2778)

குடம் – மனது
ஓட்டை – பக்தியின்மை
நீரை நிரப்புதல் – பக்தியென்னும் பெயரில் மேற்கொள்ளும் ஆரவாரங்கள்

குடம் என்னும் மனதில் பக்தியின்மை என்ற ஓட்டையை வைத்துக் கொண்டு பக்தியெனும் பெயரில் மேற்கொள்ளும் சடங்குகளை நீராகக் கொண்டு நிறையச் செய்தால் ஓட்டைக் குடம் நிறையுமோ? நிறையாது. மூடன் சடங்குகளைச் செய்து விட்டோம், நாம் பக்தியுடன் இருக்கிறோம் என நினைத்தல் ஓடுகின்ற நீரை ஓட்டைக்குடத்தில் மூடிவைத்துவிட்டு, தண்ணீர் அந்நிலையிலேயே உள்ளது என்று நம்புகின்ற தன்மையை போன்றதாம் என்பதையே மேற்கண்ட உவமை விளக்குகிறது.

- சாதிப் பிரிவினைகளை நீக்க மேற்கொள்ளும் முயற்சி ஓட்டை நீர்பானையைப் போல் பயனற்றது என்கிறார் முடியரசனார்.
- உண்மையான பக்தியில்லாமல் இறைவனை அடைய மேற்கொள்ளும் சடங்குகள் ஓட்டைக் குடம் போன்று பயனற்றது என்கிறார் திருநாவுக்கரசர்.

இங்ஙனம் இருவரும் தங்கள் கருத்துகளை விளக்க எடுத்துக் கொண்ட உவமையும் ஒத்த தன்மையுடையதை அறியவியலுகிறது.

முடிவுரை

- திருநாவுக்கரசர் வாழ்ந்த காலம் சைவம் தழைத்தோங்கிய காலமாகும். மக்கள் பக்திமார்க்கத்தில் செல்லும் வகையில் இறைவன்பால் மனதை ஒன்றுபடுத்துமாறு கூறுவதிலிருந்து பக்தியைப் பாடுபொருளாக அமைத்துள்ளதைக் காணமுடிகிறது.

- முடியரசனார் தற்காலத்தில் தமிழினம் சாதியின் பெயரால் பிளவுபட்டுக் கிடப்பதால் இன உணர்வுடன் ஒன்றுபட வேண்டுமெனக் கூறுவதிலிருந்து ஒருமைப்பாட்டுணர்வைப் பாடுபொருளாக அமைத்துள்ளதைக் காணமுடிகிறது.

- இருவர்தம் பாடுபொருளும் வேறுபட்டாலும் மக்களை நெறிபடுத்தும் வகையில் பாடுபொருளை அமைத்துள்ளதை அறியவியலுகிறது.

- இருவரும் தங்கள் கருத்துகளை விளக்க எடுத்துக்கொண்ட உவமையும் ஒப்புமை உடையதாய் உள்ளதை அறியவியலுகிறது.

மனித வாழ்வின் பிரதிபலிப்பே இலக்கியமாகும். இலக்கியப் படைப்பாளர்கள் சமூகத்தின் அந்தந்த காலகட்டங்களின் சூழ்நிலைக்கு ஏற்ப மக்களுக்கு நல்வழி காட்டியுள்ளதை இதன்வழி அறியவியலுகிறது.

கவியரசர் முடியரசன் கூறும் வள்ளுவர் வழி தமிழ்ச் சமூகம்

முனைவர் இரெ.சந்திரமோகன் *

முன்னுரை

உலகுக்கே நயத்தக்க நாகரிகம் கற்பித்த தமிழ்ச்சமுதாயத்தில் இன்று நடந்துவரும் சீர்கேடுகள் ஏராளம். காரணம் பிறமொழிப்பற்று, பிறகலாச்சார ஆதிக்கம். அத்தோடு பொருள்மயமாக்கல், வணிகமயமாக்கல், உலகமயமாக்கள் என்ற போர்வையில் சில நாடுகள் கீழை நாடுகளைச் சந்தைகளாக்கிவிட்டன. அதற்கு அடிமையானது தமிழினம். இத்தகைய காரணிகள் துவங்கப்பட்ட காலம் கவிஞர் முடியரசர் ஆசிரியராய் பணியாற்றிய காலம். சாதிச்சண்டைகள் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் திணிக்கப்பட்ட காலம். அறிவியலில் ஆபத்துக்கள் துவங்கிய காலம். அரசியலில் பொது நாகரிகம் நலியத் துவங்கிய காலம். மறைந்து, தளர்வடைந்தது தமிழர் மட்டுமல்ல.. தமிழும் தான். தமிழனுக்கு வீரத்தை அள்ளித் தந்த கவிஞர்கள் பாரதி, பாரதிதாசன் என்ற வழியில் தரமான கவிதைகளை யாத்தவர் வீறுகவி முடியரசனார். கவிஞர் முடியரசனாரின் பாடு பொருட்கள் பல இருக்க, தமிழின் நிலையையும் தமிழனின் நிலையையும் கண்டு பொறுக்காமல் "நெஞ்சு பொறுக்குதில்லையே" என்ற பாரதியின் வரிகளைத் தலைப்பாக்கிப் பாடிய அவரது படைப்புகள் காலத்தை விஞ்சி நிற்கின்றன.

சாதிகள் தமிழனின் வாழ்வில் இடைச்செருகல்கள். அந்நியம். அதை அனைத்து பாடல்களிலும் அவர் குறிப்பிடுவார். தம் வாழ்விலும் சாதிமறுப்பினை கடைபிடித்தார். அவரது கனவு தமிழ்நாடு வள்ளுவர் நெறியை போற்றும் நாடாக வேண்டும் என்பது. அதில் இருந்து விலகியவர்களை ஆள்பவர் ஆயினும் கடுமையாக எதிர்த்தார். வள்ளுவர் வழியில் இருந்து மாறுபடும் செயல்களைச் செய்யும் பொழுது தான் சார்ந்த நிறுவனங்கள், ஆள்பவர்கள் யாராயினும் திருந்துமாறு வலியுறுத்துவார். திருவள்ளுவர் நாள் திருக்குறள் மேடைகளில் அவரது அளப்பறிய கவியாற்றல் வெளிப்படுவதை பலர் கண்டுள்ளனர்.

---

* துணைத்தலைவர், வீறுகவியரசர் முடியரசன் அவைக்களம், காரைக்குடி.
முன்னாள் முதல்வர், சேவுகன் அண்ணாமலை கலைக்கல்லூரி, தேவகோட்டை.

இன்பச்சுவை இருக்கும்-வெப்பரிய
முப்பால் நல்ல அறம் இருக்கும் நாடும் பொருள் இருக்கும்
சொல்லரிய அமுது அருந்தி மொய்ம்பு பெற வளரீரோ!!
எப்பாலும் சொல்லேல் இனி.

என வள்ளுவர் கோட்டம் என்ற கவிதையில் பதிவுசெய்கின்றார் முடியரசனார்.

வள்ளுவர் நெறியில் ஆட்சி வரவேண்டும் என்பது முடியரசனாரின் ஆசை. தனக்கு ஒரு நாட்டை அவர் கற்பனை செய்கிறார்.

"பேரால் முடியரசன் பேரிடர்கள் உற்றாலும்
பேரா முடியரசன் பெற்று வந்தேன் கொற்றத்தை
வள்ளுவனார் சொல்லி வைத்த வாழ்வு குறள் நெறியில்
எள்ளளவும் கோடாது ஒழுகிவரும் கொற்றவன் யான்!
முப்பால் முகிலாகி மும்மாரி திங்கள்தோறும்
தப்பாமல் பெய்வதினால் தண்ணீர் நிறைந்திருக்கும்.

கம்பனின் ராமராஜ்யம் விஞ்சும் நாட்டினை வள்ளுவர் நெறியில், அன்பு அரசனும், மதிகொண்ட அமைச்சர்களும், நெஞ்ச வயலில் அன்புநீர் பாய்ச்சி, உழவு செய்து உலகெங்கும் கொண்டு செல்லும் இன்ப உலா காட்சி நம்மை பரவசப்படுத்தும். துன்பத்தை நீக்கி இன்பத்தை ஊட்டும் திருவள்ளுவர் நெறியில் ஆட்சிகள் இல்லையே என்ற ஏக்கம் முடியரசனார்க்கும் நமக்கும் வருவது இயற்கைதானே!

வெண்ணிலவை வள்ளுவர் கோட்டம் கவிதையில் நான்காவது பகுதியாக ஏன் சிரித்தேன் என்று பாடியுள்ளார். பாடல் திருவாசகத்தை போன்று நம்மை உருக்கும்.

அண்டப்பெருவெளியில் ஆடிச்சுழன்றுவரும்
உண்டைப் பெருவடிவம் உற்றதொரு பூதலத்தில்

என துவங்கும் பாடல் தொடர்ந்து புல்லினங்கள், கடல் பகுதி, காற்று என்று இயற்கையின் காட்சிகளை நம் கண்முன் கொண்டுவரும். நமக்கு கனவுக்காட்சி தரும். உதாரணமாக நிலாவை பற்றிய அவர் பாடல்

"மேகத் திரைக்குள் மேனி மறைத்தாலும்
வேகத்தோடு மீண்டும் விண்ணுலவி வந்து வந்து காட்டி நலம்

கொட்டும் குளிர்மதியைக் கோதிலா வெண்ணிலவைக்
கண்டுகளிப்பதற்கும் காட்டும் அதன் எழிலை
உண்டு சுவைப்பதற்கும் உற்ற வழி இல்லை
பண்டைத் தமிழ் தந்த பண்ணமைந்த யாழ் இருந்தும்
சுண்டித் தெளித்து இன்பம் துய்க்க வரவில்லை.........

என்ற வரிகள் நெஞ்சைப் பிளக்கும்.

பாருலகப் பேரறிஞன் பாவலனாம் வள்ளுவன்தான்
கூரறிவுப்பேருணர்வால் கூறிவைத்த பொன்மொழியை
மாநிலமே காணாத மாநிதியை பெற்றிருந்தும்
அப்பெருமை தேர்ந்து உணர அவ்வழியில் சென்று ஒழுக
எப்போதும் சிந்திக்க இங்கே திறன் இல்லை

என்றும் பணக்காரன் பட்டினி கிடப்பது போல், எல்லாம் இருந்தும் "சோமாலியா குழந்தை"போல் நைந்து இருக்கும் தமிழன் நிலை குறித்து சிந்தித்த மாபெரும் கவிஞர் முடியரசனாரென்பேன். இடைச்செருகலாய் சில வரிகள் உரிமையோடு கேலி செய்யும். இந்த ஏளனக் கேள்வியை பாருங்களேன்!!

பிறப்பொக்கும் அனைத்துயிர்க்கும் என்று சொல்லிப்
பேராசான் ஆண்டு இரண்டாயிரங்கள் செல்ல
இறப்புக்குள் போய்விட்டான் என நினைத்தே
எத்தனையோ ஆயிரங்கள் சாதிசொல்லிப்
பிறப்பிக்கும் ஆற்றலினைப்பெற்றுவிட்டோம் ...
பிறகெதற்கு வள்ளுவர்க்குத்திருநாள் ஒன்று?
என்று எனக்கு தெரியவில்லை!!

இப்படி ஏளனம் செய்த கவிஞர் உடனடியாக ஒரு வீச்சோடு நம்மை அறைவதுபோல் ஒரிரு வரிகள் சொல்வார்.

வேதியனைப் பஞ்சமனைப் படைக்கும் வேதம்
வேற்றுமையை நமக்குள்ளே இன்னுமோதும்
மேதினியைப்பால்படுத்த வந்த சாதி
மேலும் இனி வாழ்வதுதான் என்ன நீதி?
ஓதிவரும் குறளுக்குத் திருநாள் என்றால்,

உண்மையில் சாதியினி ஒழிதல் நன்றாம் .

என்பார். அடித்த கை அணைப்பது போல், இறுதியில் குழந்தையை தாய் கொஞ்சுவது போல் மென்மையாய் முடிப்பார்" சாதியினி ஒழித்தல் நன்றாம்" என்று. 2000 ஆண்டுகளுக்கு பின்னர் வள்ளுவர் முடியரசனார் வடிவில் பிறந்தாரோ!! என்று ஐயம் தோன்றும் அளவிற்கு கவிஞர் முடியரசன் கடிதோச்சி மெல்ல இதமாய் முடிப்பார்.

திருவாசகம்-மணிவாசகரின் திருப்புலம்பல் என்பர். அதுபோன்று தமிழுக்காகப் புலம்பியது முடியரசன் கவிதைகள்.

சிறக்கின்ற வாழ்வியலைக் கற்றோமல்லோம்
சிறு விலங்குக்கூட்டம் என வாழ்ந்து விட்டோம்
என்ற சொல்லைக் கூறிய மறுகணம்

வாழ்வைப் பிணி என்றும் பிறவாமை வேண்டும் என்றும் பாடல்களைக் கேட்ட நாம் "வாழ்க்கை இன்பம்" என்று கூறிய வள்ளுவன் பாடல்களை மறந்தோமே!! தமிழர்களே? என்று வாஞ்சையோடு கேட்பார்.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று இறும்பூது எய்திய நிலை இன்று?

இன்றைய தமிழனின் நிலை என்ன? உலகம் எங்கும் ஓட ஓட விரட்டி விட்டனர். தமிழ்நாட்டில் ஒருபுறம் கையது கொண்டு மெய்யது பொத்தி, காலது கொண்டு மேலது தழுவி ,பேழையில் இருக்கும் பாம்பென வாழ்கின்ற விவசாயி கிடக்கின்றான். இளைஞர்களுக்கு வேலை இல்லை. பசியும் பஞ்சமும். இலவசங்களுக்காக மக்கள் கை ஏந்தக் காத்திருக்கும் அவல நிலை. காசு என்றால் பிணமும் வாய் திறக்கும். இருக்கிறவன், இல்லாதவன், ஆள்பவன், ஆளப்படுபவன் அனைவரும் கையேந்தும் அவமானம். கல்விக் கூடங்கள் வியாபாரக் கூடங்களாய் பரிணமிக்கின்றன. கல்விக்கடவுள் பிரம்மன் அடிமுடி விசயத்தில் பொய்சொன்னான். அதனால் பொய் சொல்லும் போட்டி உயர் கல்வி கூட்டங்களில். ஒருகாலத்தில் அறிவும் அருளும் செல்வமும் நிறைந்த தமிழனை உலகம் கைகூப்பி வணங்கியது. ஆனால் அந்நிலை நீங்கி இன்றைய நிலையில் தமிழன் வாழ்வில் நடந்ததுதான் என்ன?

குறள் மனப்பாடம் செய்து ஒப்பிப்பது திருக்குறளுக்கு கோவில் அமைப்பது திருக்குறள் உரைகள் எழுதுவதுமேற்கோள் காட்டிப் பேசுவது இவை மட்டுமே குறள் வழி நடப்பது ஆகாது. கையேந்துவதும், கையூட்டு வாங்குவதும் தமிழன் அறியாப் பண்பாடு.

தன் நெஞ்சறிவது பொய்யற்க

கற்பெனப்படுவது சொல் திறம்பாமை

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்..

என்று உலகளாவிய தமிழர் வாழ்வியலில் உதித்த திருக்குறள், அதன் உதயத்திற்கு களமான தமிழ்நாடு, இக்காலத்தில் இருக்கும் நிலையை நினைத்தால் நெஞ்சு பொறுக்குதில்லையே.

அந்த ஒப்பற்ற தன்மானத் தமிழன் எங்காவது உள்ளானா? உலகின் எந்த மூலையிலாவது இருக்கின்றானா? என்ற சந்தேகம் அனைவருக்கும் உள்ளது. தமிழ்நாட்டில் வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் எங்கும் காண்கின்றோம். உண்மைத் தமிழன் கடல்கோளினால் அழிந்துபோயினனா?

நாமெல்லாம் தமிழர்களா? என்ற நிலையில் குருதி கொதிக்கின்றது. ஆனால் அத்தனையும் தாண்டி தமிழன், வள்ளுவரைப் போற்றும் தமிழன், தமிழர்கள் ஒரு சிலர் உலகில் உள்ளனர். நல்லார் ஒருவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை போல் உலகைத் தாங்குகின்றனர், என்பார் முடியரசனார்.

இதோ அப்பாடல்

**"குறள் பிறந்ததிரு நாட்டில் பிறந்த மாந்தர்
குறையுடைய வாழ்வினராய் வாழ்ந்தாரேனும்
அருள் நிறைந்த மனத்தினராய் குறள் காட்டும்
அருநெறியில் வலுவின்றி ஒழுகும் சான்றோர்
ஒரு சிலர் தாம் ஆங்கே வாழ்தலாலே
உலகம் இன்னும் அழியாமல் நிற்க கண்டோம்!.
தெருளறிவு தருநூலை ஓதி ஓதித்
தெளிந்தொழுக முயன்றிடுவோம் வாரீர்! வாரீர்!
உள்ளமது குழைந்து உமை வேண்டுகின்றேன்
ஒப்பரிய குறள் நெறியை உடைமையாக்கி**

அள்ளு தமிழ்ப்பா மொழியை நெஞ்சில் தேக்கி
அளப்பரிய இன்பத்தில் திளைப்போம் வாரீர் !!

திருக்குறள் பற்றிய முடியரசனார் கவிதைகள் அனைவரும் படிக்கவேண்டிய கவிதைகள் எத்தனை கவிதைகள் என்று எண்ணுவதை விட ஏதாவது ஒரு கவிதையை இக்கால மாணவருக்கு எடுத்து இயம்புதல் தமிழ் வளர்க்கும் பணியாகும். திருக்குறள் உலகப்பொதுமறை. இதனைப் பாடும் முடியரசனார் கவிதையை இன்றைய இளைஞர்க்கு எடுத்துச் சொல்வது பொருத்தமாக இருக்கும்.

“இயேசு பெருமான் ஏத்தும் முகமதுவும்
பேசும் உலகப் பெருநெறியின் தத்துவமும்
போதி முனிவன் புகன்றவையும் மாவீரர்
ஓதி உணர்த்தும் உயர்ந்த அருள்நெறியும்
நெஞ்சைக் கனிவிக்கும் நேர்மை மிகு ஆத்திகமும்
நெஞ்சத்துணிவுரைக்கும் நேரில்லா நாத்திகமும்,
நின்று உலகம் நோக்கும் நிலைத்த சமத்துவமும்,
எல்லாப் பொருளும் இதன்பால் உள”

என்ற வரிகள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ் மொழியில் திருக்குறள் என்ற நூலிருந்தது. அதன்கண் இன்றும் கோலோச்சும் தத்துவங்கள் பல இருந்தன என்றும் சொல்லி நம்மை தலைநிமிர்ந்து வாழ சொன்ன வரிகள். அவை தமிழனின் முகவரிகள். அதைத் தன்மானக் கவிஞர் முடியரசன் குரலில் கேட்ட பலர் இன்றும் உளர். குறள் வழி ஆட்சி அமைய குறளின் பெருமையை வருங்காலத் தமிழருக்கு எடுத்துச் செல்வோம். சாதி மதம் மறப்போம். சங்கத்தமிழ் வளர்ப்போம்.

பன்முக நோக்கில் முடியரசன் தமிழ் வழிபாடு

கு.செ. சரசுவதி *

முன்னுரை

ஒரு மனிதனுக்கு மொழிப்பற்றும், தேசப் பற்றும் மிக மிக முக்கியமானதாகும். மற்ற எல்லா மேன்மைக்கும் இதுவே அடிப்படையாக அமைகிறது. **"எமக்குத் தொழில் கவிதை இமைப்பொழுதும் சோராதிருத்தல், நாட்டுக்கு உழைத்தல்"** என்னும் மகாகவி பாரதியாரின் கூற்றிற்கிணங்க வாழ்ந்து காட்டிப் பல கவிதைகள் படைத்தவர் வீறுகவியரசர் முடியரசன் ஆவார். அவ்வகையில் முடியரசன் தமிழ் வழிபாடு பன்முகநோக்கில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

வீறுகவியரசர் முடியரசனின் வாழ்வும் தமிழும்

தமிழ்நாட்டின் மூத்த தலைமுறைக் கவிஞர்களுள் ஒருவர் கவியரசு முடியரசன் ஆவார். துரைராசு என்னும் தனது இயற்பெயரை முடியரசன் என்று மாற்றிக்கொண்டார். இவர் தேனி மாவட்டம்இ பெரிய குளத்தில் சுப்பராயலு - சீதாலட்சுமி தம்பதியினருக்கு 07.10.1920 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் பாரதிதாசனோடு மிக நெருங்கிப் பழகி அவருடைய முற்போக்கு எண்ணங்களை ஏற்றுப் பாடியவர். மேலும் திராவிட இயக்கக் கவிஞரான இவர் தந்தைப் பெரியார், பேரறிஞர் அண்ணா, கலைஞர் போன்றோருடன் நெருங்கிப் பழகியவர். இவர் 02.02.1949- ஆம் ஆண்டு சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டு, சடங்குகளை மறுப்பவராக தனது வாழ்வில் வாழ்ந்து காட்டியவர். இவர் காரைக்குடி மீ.சு.உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். இறுதியாக 03.12.1998 அன்று இவரது மறைவின் பொழுதும் சடங்குகள் ஏதுவும் வேண்டாம் என்ற கொள்கையின் காரணமாக அவ்வாறே அவரது இறுதிப் பயணம் நிறைவேற்றப்பட்டது.

பாரதி என்ற வித்திலிருந்து முளைத்த பாரதிதாசன் என்ற செடி அச்செடியிலிந்து வந்தது முடியரசன் என்ற கொடி. "புரட்சிக் கவிஞர் பரம்பரையில் புத்துலக உணர்வு படைக்கும் பகுத்தறிவுச் சிந்தனைகளை வடிப்பதில் தேர்ந்தவர் கவிஞர் முடியரனார். தந்தை பெரியார்,அறிஞர் அண்ணா வழியில் தன்மானச் சுடராகத் திகழ்ந்தவர். இவர் இயற்றிய

---

* முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம்.

கவிதை நூல்கள் ஒவ்வொன்றும் தமிழுக்கு ஆக்கம் செய்யும் செம்மொழிச் செல்வமாகும். கவிஞர்களிடையே ஒரு முடிசூடா மன்னராகத் திகழ்ந்தவர் கவியரசனார்''என்று பேராசிரியர் க.அன்பழகன் புகழாரம் சூட்டுவதால் இவரது படைப்பாற்றலின் சிறப்பினையும், மேன்மையினையும் அறிய முடிகிறது. இவர் 13-கவிதைத் தொகுதிகளையும்,3-காப்பியங்களையும், 1-நாடகக் காப்பியத்தையும்,2-கடித இலக்கியத்தையும், 1-சிறுகதையையும், 1-இலக்கண நூலையும், 3-கட்டுரைத் தொகுதிகளையும்,1-தன் வரலாற்று நூலென ஆகமொத்தம் 25-படைப்புகளைத் தன்னேறில்லாத் தமிழுக்குதந்தருளிய தன்னிகரில்லாப் படைப்பாளராகவும், கவியரசராகவும் திகழ்ந்தவர்.

வீறுகவியரசர் முடியரசன் தமிழ் வழிபாடு

இருபதாம் நூற்றாண்டின் இமயக் கவிஞராக வாழ்ந்த வீறுகவியரசர் முடியரசனார் கவிதைகளில் தாய்மொழியுணர்ச்சி, தமிழின எழுச்சி, தமிழகத்து வளர்ச்சி, சாதியொழிப்பு, சமூகப் புரட்சி, பகுத்தறிவுக் கொள்கை, பொதுவுடமை நிலைநாட்டல், சம உரிமைக் காத்தல், மனிதநேயம், மக்கள் நலம் ஆகியவற்றை எதிரொலிப்பதாக அமைந்துள்ளது. அவ்வகையில் இக்கொள்கைகளை 'முடியரசனின் தமிழ் வழிபாடு' என்னும் தொகுப்பின் மூலம் காணலாம்.

பூங்கொடியில் தமிழைத் தாயாகவும், தனது உயிராகவும் நினைத்துப் பாடியுள்ளார். இதனை **"தாயே உயிரே தமிழே நினைவணங்கும், சேயேன் பெறற்கறிய செல்வமே-நீயே, தலைநின்றாய் இவ்வுலகில்தாள்பணிந்தேன் நீயிங், கிலையென்றால் இன்பமெனக் கேது"**-பக்கம்:20(பூங்கொடி) என்னும் கவிதை வரிகளால் இவரது தாய்மொழிப் பற்றையும், தாய்மொழியை தனது உயிராகவும் நினைத்திருந்ததை அறியமுடிகிறது. மேலும் தமிழே அனைத்திற்கும் முதன்மையானது, சிறப்பானது என்னும் கருத்தினை தனது கவிதை நயத்தால் எழிலுடன் எடுத்துரைத்துள்ளார். இதனை **"தகப்பன் தாயெனத் தகுவழிகாட்டி, மிகப்பல் லறநூல் மொழிந்தாய் தமிழே!,உலகம் வியக்க ஒப்பிலாக் குறளால், கலகம் தவிப்பாய் கன்னித் தமிழே!,............... மொழிவளம் மிகுந்தாய் முதன்மைத் தமிழே!** -பக்கம்:25 (பூங்கொடி) என்னும் கவிதை வரிகளால் மொழிப் பற்றையும், மொழி உணர்வின் அவசியத்தையும் இச்சமூகத்தின் பார்வைக்கு எடுத்துக்காட்டியுள்ளார்.

செந்தமிழ் மொழியினை நந்தா விளக்காகவும், மொழிகளுக்கெல்லாம் மூத்த மொழியாகவும், ஞான ஒளியினைத்தரும் மொழியாகவும், பொய்யா விளக்காகவும், ஓய்வறியாது உயிர்களைக் காக்கும் உயர்கொடை விளக்காகவும் விளங்கும் தமிழ்த்தாயே இவ்வுலக மக்கள் அனைவரும் மகிழ்வுடன் வாழ காத்தருள்புரிந்து,எடுத்தபணிகள் சிறப்புடன் முடிந்திட வேண்டும் என்றும் வேண்டி வணங்குகிறார். இதனை **“செந்தமிழ் மொழியே சீர்சால் விளக்கே, முந்திய மொழியே முழுமையின் ஒளியே, கற்றோர் நெஞ்சங் களிக்கும் வகையில், ஞான ஒளியினை நல்கிடும் விளக்கே,……………,செய்யும் பணிகள் செவ்விதின் இலங்கிடக், கைகுவித் தேத்தினேன்காத்தருள் தாயே”** - பக்கம்:26 (மனிதனைத் தேடுகிறேன்) என்னும் கவிதையடிகளால் இவரது மொழி நடையும், எளிய சொல்லாட்சியையும் அறியமுடிகிறது.

தன்னேகரில்லாத் தமிழே என்றும் என்னுள் இருப்பாய் என்று தமிழ்த் தாயை வணங்கி வேண்டும் வகையில் தனது கவிதையின் வாயிலாக விண்ணப்பம் விடுக்கிறார். இதனை **“ஆழமாப் பயின்றே னல்லேன், அகலமும் அற்றே யாகும், யாழநின் னருளாலம்மே, யாப்பென ஒன்று கட்டிச், சூழும்நின் னடிக்கே சூட்டிச், சொக்கிநான் வணங்குகின்றேன், ஏழையின் இளகும் நெஞ்சில்,என்றும்நீ இருத்தல் வேண்டும்”**-பக்கம்:30 (ஊன்றுகோல்) என்றும் கவிதை வரிகளால் அறியமுடிகிறது.

இவ்வுலகில் அனைத்தும் நீயே என்பதைத் தனது எளிய கவிதை நடையால் விளக்கியதோடு, இவ்வுலக மக்கள் அனைவரும் உன்னையே நினைத்து வாழ்ந்து போற்றுவதே சாலச் சிறந்தது என்பதை நயம்பட எடுத்துரைத்துள்ளார். இதனை **“உயிர்நீ உடல்நீ உளம்நீ வளம்நீ, பயிர்நீ பயன்நீ பயன்தரு பொருள்நீ, வெயில்நீ மழைநீ விழிநீ மணிநீ,பயில்தரு சுவைநீ பழகிய மொழிநீ, வெளிநீ வளிநீ புனல்நீ அனல்நீ, விளைவுறு நிலம்நீ விதைநீ முளைநீ, ஒளிநீ வயல்நீ உயர்வுறு மலைநீ, அளிநீ தொழில்நீ அளவில கலைநீ”**-பக்கம்:32 (காவியப் பாவை) என்னும் கவிதை வரிகளால் அறியமுடிகிறது.

தொன்மைத் தமிழைப் போற்றிப்பாடும்போது தனது கவிதையில் எதுகை மோனைச் சொற்களைக் கையாள்வதில் தனிச்சிறப்பானதொரு ஆற்றலைப் பெற்றவர் முடியரசனார் ஆவார். இதனை **“காவுக்குள்**

மலரை வைத்தாய், கண்டுக்குள் சுவையை வைத்தாய், பூவுக்குள் தேனை வைத்தாய், பூமிக்குள் பொன்னை வைத்தாய், ஆவுக்குள் பாலை வைத்தாய், ஆர்வத்தில் ஊறும் என்றன், பாவுக்குள் அனைத்தும் வைப்பாய், பாருக்குள் முதன்மைத் தாயே" பக்கம்:37 (நெஞ்சு பொறுக்கவில்லையே) என்னும் கவிதை வரிகளால் அறியமுடிகிறது.

தமிழன்னையின் சிறப்பினையும் தமிழிலக்கியச் சிறப்பினையும் அதனைப் படைத்தளித்த பழம்பெரும் புலவர்களின் பெருமைதனையும் போற்றும் வகையில் இவரது தமிழ் முழக்கம் என்னும் தொகுப்பில் வெளிவந்துள்ள கவிதைகளால் அறியமுடிகிறது. இதனை "காலத்தை வென்றவளே கற்பனைக்கும் எட்டாமல், ஞாலத்தில் நின்றொளிரும் நந்தா மணிவிளக்கே,..........,சாதி சமயமென்று சண்டையிட்டு மாயாதீர், சோதி வடிவொன்றே தூய இறை என்று, வள்ளலருட்பாவில் வடித்தெடுத்த தேன்சுவையே உள்ளம் உருகி உணர்விக்குந் தெள்ளமுதே,என்றும் புகழ்பாடி என்னம்மை தாள்பணிந்தேன்"-பக்கம்:38-40 (தமிழ் முழக்கம்) என்னும் கவிதை வரிகளால் அறியமுடிகிறது. மேலும் தமிழை தெய்வத் திருமகளாகவும், என்றும் செம்மொழியாக விளங்கிய சிறப்பினையும் தமது கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார். இதனை "சீரிளமை குன்றாத தெய்வத்திருமகளே, ஆடிப் பெருக்காலும் ஆர்த்த நெருப்பாலும், வாடிச் சிதையாமல் வாழ்ந்து வருபவளே,............ அவ்வவர்தம் தாய்மொழிக்கே ஆக்கங்கள் தந்தாலும், செவ்வியநல்லாற்றல் சிதையாமல் நிற்பவளே" - பக்கம்:43 (தமிழ் முழக்கம்) என்னும் வரிகளில் அறியமுடிகிறது.

கவிஞர் முடியரசன் அவர்கள் தனது ஐம்பத்து நான்காம் அகவை பிறந்த நாளில் என் தமிழுக்கு நன்று செய்ய இன்று பிறந்தேன் என்றும் முப்பாலும் சுவைத்து தமிழன்னைக்கு என்றும் இளங்குழந்தையாக தவழ்ந்து வாழ்வேன் என்றும் அவரது தமிழ்ப்பற்றாலும்,ஆர்வத்தாலும் மனமுருகி கவிதை பாடியுள்ளதால் அறியமுடிகிறது. இதனை "அன்று பிறந்தேன் அரைநூற்று மூன்றன்பின், இன்றும் பிறக்கிறேன் என்தமிழுக்கு - நன்றுசெய, என்றும் பிறப்பேன் இளங்குழந்தை போலிருப்பேன்,தொன்றுதமிழ் முப்பால் சுவைத்து"- பக்கம்:51 (பாடும்குயில்) என்னும் கவிதையடிகளால் அறியமுடிகிறது. இத்தோடு மட்டுமல்லாது, தமிழ்த் தாயாகிய நீயே எனக்கு உறவுக்காரர் என்றும், உன்னைத் தவிர யார் மீதும் எனக்கு பற்றில்லை என்றும் தனது மனக்குமுறலை வெளிப்படுத்தி என்னை நீ என்னை

ஏற்றுக்கொள்வதில் எவ்வித தவறும் இல்லை என்றும், உன்னையே நினைத்து ஏங்கும் உனது பிள்ளையை ஏங்கவைத்துப் பார்ப்பது நீதியோ என்று தமிழன்னையை உரிமையோடு கேட்கும் வகையில் தனது பாடல் வரிகளைப் படைத்துள்ளார். இதனை **"தாயுன தின்னருள் பாடவைத்தாய் துன்பந் தாக்கிட ஏனுளம் வாடவைத்தாய் - அம்மா"** என்றும் **"உன்னை விடுத்தொரு சுற்றமில்லை- நெஞ்சில், ஒட்டிய வேறொரு பற்றுமில்லை, என்னைப் புரப்பதில் குற்றமில்லை - அம்மா,ஏங்குதல் நீதியோ பெற்றபிள்ளை?"** (பக்கம்:54, பாடும்குயில்) என்னும் கவிதை வரிகளால் அறியமுடிகிறது.

கவிஞர் முடியரசன் அவர்களின் திராவிடக் கொள்கையினாலும் தன்மான உணர்வினாலும் பல மாநில மத்திய அரசுகளின் விருதுகளும், விருதுகளும் தவிர்க்கப்பட்டுள்ளன. இதனை அவரது பாடல்வரிகள் உறுதிசெய்யும் வகையில் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. இதனை **"பதவியும் பட்டமும் பணங்களுங் காட்டிப், பகட்டினும் எதற்கும் பணியேன் கைநீட்டி, முதுமொழி என்மொழி முத்தமிழ் மொழியை, மொய்ம்புறக் காத்திட முனைந்திடும் வழியைப் பாடிக்"** (பக்கம்:57, தமிழ்மொழி காப்போம்) என்னும் பாடலடிகளால் அறியமுடிகிறது.

தமிழின்றி நானில்லை என்றும் தன்னேரில்லாத் தமிழ்க் கவியாய் முடிக்கெல்லாம் அரசனாகவும் விளங்கிய கவிஞனின் உள்ளத்து உணர்வுகளை தனது கவிதை மொழியால் வடித்துள்ளதால் அறியமுடிகிறது. இதனை **"தென்னகத்துத் திருமகளே! கனியே! நெஞ்சில், தித்திக்கும் கனிச்சாறே! சுளையே! தேனே!, என்னகத்து நின்றுநடம் ஆடும் பாவாய்!,எழிலரசி! எஞ்ஞான்றும் இளமைத் தோற்றம்,.................., உன்னலத்தைக் காதலித்தேன் உயிர்மூச்செல்லாம் உனக்கென்றே வாழ்கின்றேன் தமிழணங்கே"** (பக்கம்:64, முடியரசன் கவிதைகள்) என்னும் கவிதை வரிகளால் அறியமுடிகிறது.

தமிழைத் தனது காதலியாக நினைத்து அவளுக்குக் கவிதை படைத்துள்ளார். இதனை **"மீறிய காதலினால் - தமிழே, மெய்ம்மறந்தே உழல்வேன், கூறிய நின் வழியால் - எனைநீ, கொல்வது தான் சரியோ"**என்றும் **"காதல் உலகினிலே - அகப்பொருள், காவிடன் நடுவினிலே, மேதைகள் ஆக்கியதோர்- மாளிகை, மீதினில் நாமிருப்போம், மாதுநீ யாழெடுத்தே - இசை, மாரி பொழிந் திடுவாய்,**

காதற் களி யினில் நான் - பற்பல, காவியம் பாடிடுவேன்" (பக்கம்:67-68, காவியப்பாவை) என்னும் கவிதை வரிகளால் தமிழைத் தனது காதலியாக போற்றிப் புகழ்ந்துள்ளார்.

தமிழைத் தன் மனைவியாக எண்ணிக் கவிதை வரிகளால் வருணித்துப் பாடியுள்ளார். இதனை "சிந்தாமணி தவழும் - மார்பில், சேர்ந்து திளைத் தசுகம்! எந்த விதம் உரைப்பேன் - எழுதி ஏட்டினில் காட்டுவதோ?" என்றும் "அங்குநம் கூட்டுறவால் - பிறந்த, அன்புக் குழந்தைகளை, சங்கக் கவிதை என்றே - உலகம், சாற்றிப் புக ழுமடி" (பக்கம்:69-70, காவியப்பாவை) என்னும் கவிதை வரிகளால் அறியமுடிகிறது.

முடிவுரை

கவியரசு முடியரசன் அவர்கள் "தனக்கெனத் தனிப்பாணி வகுத்துக்கொண்டு கவிதையே மூச்சாக வாழ்ந்தவர். அவருக்கு அது ஒரு தொழிலாக மட்டுமின்றி உயிர்மூச்சாகவும் இயங்கி வந்தது. தமிழ் அவரது உயிர் எனக்குத் தெரிந்தவரை தமிழை இத்துணை நேசித்த ஒருவரை யாம் இதுவரை கண்டதில்லை. அதனால் தமிழுள்ள அளவும் வாழ்வுபெறும் கவிதைகளை அவர் தந்துச் சென்றுள்ளார்"என்று முனைவர் தமிழண்ணல் அவர்கள்புகழ்ந்துள்ளார். தமிழுக்காக வாழ்ந்து தன்மானக் கொள்கையை கடைசிவரை கைவிடாத வீறுகவியரசர் முடியரசன் அவர்களின் கடைசி கவிதைவரிகளிலும் தமிழன்னையின் மலரடிக்கே தன்னை அர்ப்பணித்துள்ளளார். இதனை "வாளால் பிளப்பினும் வாழ்நாள் இழப்பினும் வஞ்சமனக் கேளார் குழுமிக் கெடுதிகள் சூழினும் பூமியில்வாழ் நாளெலாம் வாட்டும் நலிவே உறினும் நற்றமிழே ஆளாதல் திண்ணம் அடியேன் நினது மலரடிக்கே! (பக்கம்:62, பாட்டுப்பறவையின் வாழ்க்கைப் பயணம், தன் வரலாறு) என்னும் கவிதையால் அறியமுடிகிறது. தமிழுலகில் தம் கவிதையால் என்றும் வாழ்ந்து வரும் கவியரசர் முடியரசன் அவர்களின் புகழும், படைப்புகளும் தமிழ்க்கூறும் நல்லுலகம் உள்ள வரையில் நிலைத்து நிற்கும்.

வீறுகவியரசர் முடியரசன் படைப்புலகம் "ஞாயிறும் திங்களும்"

சி.சரவணக்குமார்*

படைப்பாளன் என்பவன் காலத்தால் உருவாகிறான் காலத்தை உருவாக்குகிறான். தனது படைப்புகளால் தான் வாழும் காலத்தில் மட்டுமல்ல எதிர்காலத்திலும் சமுதாய மாறுதல்களைக் கொண்டு வருவதில் பெரும் கவனம் செலுத்துகிறார். அவன் கண்ட சமுதாயத்தையும் அவன் தம் கண்களால் கண்ட சமுதாயத்தையும் பிரதிபலிக்கச் செய்கிறான். அப்படிக் காலத்தால் உருவான படைப்பாளிகளில் ஒருவர் கவிஞர் "முடியரசன்". கண்ணதாசன் அவர்கள் கூட,

"மும்முடியை சூடி தலையில் முடித்த முடியரசன் எம்முடியும் தலை வணங்கும் இயற்கையாலே கவிஞர் தம்மரிய கவிதையினால் கவியரசனார் தாய்த்தமிழே அவர் முடியை உனக்கேதான் சாய்ப்பார்."
அவரது காலத்தில் அரசியல் ரீதியாக எழுதப்பட்ட கவிதைகள் பலப்பல. ஆளும் வர்க்கத்தை நேரடியாக பார்த்து பார்த்து இந்திய மக்களின் வாழ்க்கை நிலையை ஒட்டுமொத்தமாக தன்னுடைய கவிதைகளில் வாயிலாக கூறியவர். அவை பல வரவேற்புகளையும் பெற்றன. இக்காலத்தில் ஏற்படும் அபாயங்கள் அத்தனையும் ஆசையால் வந்தது தான். என்பதையும் அவர் உலகத்தை நோக்குங்கள் மதத்தினால், சாதியினால், இனத்தினால் இன்று தீவிரவாதப் போர்வையில் சண்டைகள் நடைபெற்று வருவதையும் தனது "ஞாயிறும் திங்களும்" என்ற கவிதைத் தொகுப்பில் திறம்படக் கூறியிருப்பதைக் காணலாம்.

பெரியார்: (ஞாயிறு)

இந்த உலகத்தில் தீயகுணம் கொண்டவனை நல்லவன் என்றும் தலைவன் என்றும் சிறிய கடுகினை மலை என்றும் கழுதையை யானை என்றும் ஒன்றுக்கும் உருப்படாதவர்களை முதலாளிகள் என்றும் உயரத்தில் மக்கள் வைத்து கொண்டாடுகிறார்கள். செருப்பை மிதிக்கும்

---

* தமிழாசிரியர், வாசன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, சத்திரக்குடி.

இச்சமூகம் அச்செருப்பையே மதிக்கும் இச் சமூகத்தில் நாம் பிறந்து விட்டோமென்று தன்னைத்தானே நினைத்துப் புலம்புகின்ற மக்கள் மனதில் குரல் கொடுக்க கிளம்பியவர் பெரியார். அவரைப் பற்றி கவிஞர் தாசி ஆனந்தன் கூறுகையில்,

"அறிவைத் தடுப்பாரை
மானம் கெடுப்பாரை
வேரோடு பெயர்க்க வந்த கடப்பாரை" - காசி ஆனந்தன்

என்று கவிஞர் எடுத்துரைக்கிறார் மனிதனுக்கு ஏற்படுகின்ற இன்னல்களையெல்லாம் கதிரவனைப் போல் சுட்டெரிக்கும் பெரும் பேரிடராக வந்தவர் பெரியார் அவர்

"பட்டிதொட்டிகள் பட்டன உயிர்களில் மட்டிகள் போலினும் வாழ்ந்திடும் மாந்தரை கொண்டித் தொழுவத்தில் கட்டிய மாட்டென மேய்கின்ற கோழிகளாமெனச் சண்டையிடும் மதச்சாத்திரக் குப்பையில் சாதியில் கட்டுண்டு சாய்ந்து கிடந்தோரை அண்டிப்பிழைத்தவர் ஆட்சி பிடித்தனர் ஆட்சி புரிந்தவர் மாட்சி யிழந்தனர். மண்டியிடும் பல தொண்டு புரிந்தனர்.மாலையில் தூங்கினார் கண்கள் திறந்திட" (ஞா.திங்க.மு-பக்-35)

என்று கவிஞர் முடியரசன் அவர் மக்கள் மனங்களில் உள்ள ஏற்றதாழ்வுகளை தட்டி எழுப்பினார். என்பதை கவிஞர் கூறும் விதம் சிறப்பு காரணம் நாட்டில் உள்ள மக்களின் குறைகளை யார் சொன்னால் யார் கேட்பார்கள் என்று கவிஞர்களுக்கு தெரிந்த யுத்தி விஞ்ஞானம் வளர்ச்சி காலங்கள் தோன்றினாலும் அஞ்ஞானம் வளர்ச்சி பெற மனிதர்கள் கற்றாலும் அவர்கள் கல்லாதவர்களாகவே இருக்கிறார்கள். சாதி,மதம், இனம் பெண்ணடிமை, உரிமை இல்லாமல் இருக்கின்றனர். அந்நிலைமாற்றுவதற்கே கதிரவன் வந்துவிட்டான் கதிரவன் இருளை அகற்றுவது போல மன இருளை அகற்றுவதற்கு கதிரவன் வந்துவிட்டான் என்று கவிஞர் முழங்குகிறார் முடியரசன் தம் கவிதைகளில்,

"தீண்டாமை ஒழிப்புப் போர் நடத்திக் காட்டிக்
தீமைகளை முறியடித்த வைக்கம் வீரர்
வேண்டாத பெண்ணடிமை தொலைவதற்கும்

வீழ்ந்து விடா தமிழினத்தின் வந்தனைக்கும்
ஈண்டையா போர் நடத்தி வெற்றி கண்டார்
ஈங்கின்றி பிறநாட்டில் பிறந்திருந்தால்
ஆண்டுள்ளோர் ஆபிரகாம் லிங்கன் என்பார்
அறிவுரைத்த சாக்கடீ என்று உரைப்பார்"

என்று கவிஞர் தம் கவிதை வாயிலாக எடுத்துரைக்கிறார். பண்டைய தமிழ் மக்கள் வாழ்ந்த வாழ்க்கை வாழ வேண்டும். அதிகார வர்க்கம் அகல வேண்டும் கதிரவன் எல்லோருக்கும் வெளிச்சம் கொடுப்பதுபோல் இச் சமூகம் எல்லோருக்கும் ஓர் தீண்டாமை சமூகமாக இல்லாமல் மாறவேண்டும். அதற்கு பல போராட்டங்கள் தியாகங்கள் செய்த பெரியாரின் சிறப்பை எடுத்துரைக்கிறார். அவர் கூறுகையில் பெரியாரின் பேச்சு சூடானது நான் அறுவை மருத்துவன் எப்படியும் நோயாளி பிழைக்க வேண்டும் என்று தான் நினைப்பேன் தவிர நோயாளிக்கு வலிக்கும் என்று நான் கவலைபட மாட்டேன் என்று கவிஞர் முடியரசன் அவர்கள் பெரியாரைக் கதிரவனுக்கு ஒப்பிட்டு கூறுகிறார்.

அண்ணா: (திங்கள்)

இன்றைய சூழலில் மக்களிடம் போதுமான அறிவு ஏதும் கிடையாது. கையில் அதிகாரம் இருப்பவர்கள் இருப்பதால் தான் உலகையே திருப்பிபோடுகிறார்கள். நதிபோகின்ற திசையில் மாற்றி வடக்கே செல்லட்டும் அந்நிலையில் உள்ளவர்களை தம் பேச்சால் அவர்களின் செவிகளுக்கு நல்ல மருந்தாக, விருந்தாக தம் பேச்சால் பலவிதமான அறிவுரைகளை புகுத்தியவர் பேரறிஞர் அண்ணா. காரணம் எதையும் கேட்கும் பக்குவம் யாரிடத்திலும் இல்லை. காரணம் வாழ்க்கையில் ஆத்திகம் நாத்திகம் பேசுபவர்களிடம் போய் அறிவுரை கூறினால் அவர்கள் சாதி மதம் இனம் என பிரித்து போய் விடுவார்கள் அப்படிப் பட்டவர்களை இறைவன் படைத்தது தவறில்லை அவன் வைத்த விதம் தான் தவறு இறைவன் ஐம்புலங்களையும் வெளியில் வைத்து அதை இயக்குகின்ற மனதை மட்டும் அவன் உள்ளேயே வைத்துவிட்டான். என்று கவிஞர் முடியரசன் கூறுகையில் அப்படிப்பட்டவர்கள் தம் பேச்சால் ஈர்க்கும் வல்லமை கொண்டவர் பேரறிஞர் அண்ணா அவர் காஞ்சி கதிரவன் மட்டுமல்ல

"பகுத்தறிவு பெருங்கடலுள் முளைத்து வந்த பகலவனை அறியாமை இருட்கணத்தை செகுத்தொழிக்கும் பரிதினை துயிலை நீக்க

சிவந்தெழுந்த சூரியனை அரசியல் வான் தகைப் பண்ணொளிகளைப் பாய்ச்சி எங்கள் தமிழ் செழிக்க கிளிந்த செஞ்ஞாயிற்றை உகப்புடனே தமிழினம் மலர்ந்து தோன்று உயிர்த்தெழுந்த கதிரவனை வாழ்த்தநின்றோ" (ஞா.திங்க.மு-பக்-49)

என்று கவிஞர் முடியரசன் தம் கவிதை வாயிலாக சிறப்பிக்கிறார்

தொடக்கத்தில் அரசியலில் ஈடுபட்டு அவர் பட்ட அனைத்தையும் பொருட்படுத்தாமல் தமிழையும் தமிழரின் சிறப்பையும் எடுத்துரைக்கும் வண்ணமாக திகழ்ந்தவர் அவர். காரணம்,மனிதனின் உள்ளத்தில் உள்ள எண்ண அலைகள் எப்போதும் குறைவதில்லை அது அவர் தமிழின் மீது கொண்ட எண்ண அலைகள் அவை முட்டி மோதிக்கொண்டு தான் வரும் அவைகள் சிதறும் போது வருகின்ற இன்பம் தான் தமிழ் என்று அழகாக கூறுகின்றார். அப்படிபட்ட தமிழை எடுத்துரைக்க உள்ளதாக அண்ணா இருக்கிறார் என்பதை கவிஞர் முடியரசன் அவர்கள் தம் வாயிலாக,

"நாடாண்ட இனத்தவன் நீ உலகில் மூத்த நாகரீக தமிழ் மொழிக்குச் சொந்தக்காரன் ஏடாண்ட இலக்கிய நூல் ஆயிரங்கள் ஈங்குண்டு சான்றோர் எடுப்பார் நீ. கேடாண்ட நரி குணத்தார் சூழ்ச்சியாலே? கீழாய் விழித்திரு நீ மானம் எங்கே? பேயாண்ட பிறப்பா நீ என்று பாடம் கற்பித்த பேராசான் எங்கள் அண்ணன்" (ஞா.திங்க.மு-பக்-56) என்று தமிழுக்கா, தமிழை வாழ வைப்பதற்கா பேறறிஞர் அண்ணா பெரும் பங்காற்றினார். என்று கவிஞர் முடியரசன் தம் கவிதையில் எடுத்துரைக்கிறார்.

உள்ளத்தில் நடக்கும் அத்தனைக்கும், விதிதான் காரணம் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு. என்றால் அதே விதியை மதியால் வெல்லலாம் என்றும், உலகத்தை நோக்குங்கள் மத்தினாலும் ஆதிக்கத்தினாலும் சமூகம் பல இன்னல்களுக்கு உட்பட்டு கிடக்கின்றன. அவற்றை தகர்ப்பதற்கு ஞாயிறும் திங்களும் வருவது போல நாமும் வர வேண்டும். ஏனென்றால் நாம் வாழ்வதற்கு பல இன்னல்களை சந்திக்க வேண்டியிருக்கிறது. மேற்சொன்ன ஒரு உதாரணம் பெண்ணடிமை, தீண்டாமை, மொழியுணர்வு, வரி இவைகளுக்கு எல்லாம் மொழி

கிடையாது. அவைதான் நம்மை சாடுகின்றன எனவும் கவிஞர். A.M.ராமையாதாஸ் அவர்கள் கூட தம் பாடல் வரியில்,

“தனிமையாக ஒரு வாலிபன்
இருந்தால் தர வேண்டும் பிரமச்சாரி வரி
தலிகட்டியே குடும்பம் நடத்தினால்
அவனும் தர வேண்டும் சம்சாரவரி
இங்கு தடிக்கி விழுந்த வரி
குனிந்து நிமிர்ந்த வரி
இட்லி வரி , சட்னி வரி, பட்டினி வரி”

என்று கவிஞர் கூறுகின்றார்.

ஆகவே நமக்கு நடக்கின்ற போராட்டங்களை (ஞாயிறும் திங்களும்) கேட்பது போல நம் போராட்டங்களை நாம் கேட்க வேண்டும் என்று கவிஞர் முடியரசன் கூறுகின்றார

'அன்புள்ள இளவரசனுக்கு' நூலில் முடியரசனார் காட்டும் வாழ்வியல் நெறிகள்

மு.சிவசுப்பிரமணியன் *

1920ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஏழாம் தேதி பெரியகுளம் எனும் ஊரில் சுப்புராயலு – சீதாலட்சுமி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர். முடியரசனின் இயற்பெயர் துரைராசு. முடியரசன் கடித இலக்கியத் தொகுப்பாகிய 'அன்புள்ள இளவரசனுக்கு' என்பதில் இடம்பெறும் 17 கடிதங்களில் கூறப்படும் வாழ்வியல் நெறிகளைத் தொகுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

கடமைகள்

முதல் மூன்று கடிதங்களாக உள்ள 'எனது கடமை, ஒற்றுமை வேண்டும், ஒழுக்கம் ஓம்பு' ஆகியவற்றில் மானிடர்க்குரிய கடமைகளை முடியரசன் எடுத்துரைக்கிறார்.

'எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே'

என்ற ஔவையின் வரிகளில் ஒரு ஆடவன் தன் நாட்டிற்கு செய்ய வேண்டிய கடமையை உணர்த்துகிறார். 'ஈன்று புறந்தரல் என்றலைக் கடனே' எனும் அடியைக் குறிப்பிட்டு குழந்தை பெற்று வளர்த்து ஆளாக்குவது தாயின் கடமை, அவனை சான்றோனாக்குவது தந்தையின் கடமை, வேல் வடித்துக்கொடுப்பது கொல்லனுக்குக் கடமை, பயிற்சியால் நன்னெறிப்படுத்துவது வேந்தனுக்குக் கடமை, போர்க்களம் புகுந்து களிறுகளையடக்கி வெற்றி வீரனாகத் திரும்புவது அந்த இளைஞனுக்கு கடமை என பொன்முடியார் பாடிய புறநானூற்று பாடல் வழி கடமைகளை எடுத்துரைக்கிறார்.

ஒரு மனிதன் துயில் எழுவது முதல் உறங்குவது வரையிலான ஒழுக்கநெறிகளைக் கூறுகிறார். 'நல்லன கொண்டு அல்லன தள்ள

* முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்ப் பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-3.

வேண்டும்' என்று மாணவர் கடமையாகக் கூறி, அதற்கு நீரையும் பாலையும் பிரித்துண்ணும் அன்னத்தை உவமையாக்கி விளக்குகிறார்.

'குற்றாலத்திற் பெற்ற இன்பம்' எனும் தலைப்பிலான கடிதத்தில், மாணவர்கள் நடந்து கொள்ளும் தவறான செயல் பற்றியும் அதனை நீங்கி நற்பெயர் பெறுதல் குறித்தும் கூறுகிறார்.

பயண அனுபவச்செய்திகள்

முடியரசன் தமது, திருக்குற்றாலம் சென்று வந்தேன், கண்குளிரும் குற்றாலம், குற்றாலத்து அருவிகள், குற்றாலத்திற் பெற்ற இன்பம் ஆகிய நான்கு தலைப்புகளிலான கடிதங்களில் குற்றால எழில், அருவிகள், சிறப்பு, பயண அனுபவம் குறித்து விளக்குகிறார்.

வானமுகட்டை முத்தமிடும் மலைமுகடுகள், மலைமுகடுகளில் தவழும் முகிற்கூட்டங்கள், அவற்றின் மழைத்துளி, அதனால் வளம் பெறும் காடுகள், சோலைகள், வயல்கள் ஆகியவற்றை வருணித்துரைக்கிறார் முடியரசன். மதுரையிலிருந்து இரவு இரண்டே முக்கால் மணியளவில் புறப்படும் தொடர் வண்டி என்று குறிப்பிட்டு, காலை ஒன்பது மணியளவில் தென்காசியை அடைந்ததாக அக்கால பயண நேரத்தைக் குறிப்பிடுகிறார். அங்கிருந்து குற்றாலத்திற்கு மூன்று கல் தொலைவு எனக்கூற அதன் சாலைப்பயணத்தை இரசித்துரைக்கிறார்.

'கண்குளிரும் குற்றாலம், குற்றாலத்து அருவிகள், குற்றாலத்திற் பெற்ற இன்பம்' ஆகிய மூன்று தலைப்புகளிலான கடிதங்களில் குற்றாலம் குறித்து பயணக்குறிப்புகளை தமது மகனிற்கு எழுதியுள்ளார். மேற்குத்தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாகிய குற்றால மலையின் வேறு பெயர்களாக திரிகூடமலை, பொதிய மலை என்று குறிப்பிடுகிறார். அவர் தங்கியிருந்த கண்ணாடி மனை என்பதன் முன்றிலில் இருந்த சிறிய பூங்காவில் சண்பகம், சந்தனம், தென்னை, கமுகு முதலிய மரங்கள் பல்வகை மலர்ச்செடிகளும் இருந்ததைக் கூறுகிறார்.

குற்றால அருவிகள்

குற்றாலத்தை நெருங்குகையில் இடப்பக்கமாக பிரியும் வழி புலியருவியை அடையும். இப்புலியருவி செயற்கை அழகுடையது என்கிறார். ஒரு பனை உயரத்திலிருந்து கீழே ஆழமான சுனையொன்றில்

வீழும் பேரருவியையும், அது வீழும் இடத்தை 'பொங்குமாங்கடல்' என்றுரைக்கப்படுவதையும் கூறுகிறார்.

பேரருவியிலிருந்து சிறிது தொலை மேற்கே சென்று இடப்பக்கம் திரும்பி மேலேறிச் சென்றால் 'சிற்றருவி' காணப்படும். பேரருவியில் தாம் நீராட அஞ்சினாலும் இதில் துணிந்து நீராட முற்பட்டதாகக் கூறுகிறார்.

அடுத்த 'குற்றாலத்து அருவிகள்' என்ற கடிதத்தில் குற்றாலத்தில் மேற்கே ஏறக்குறைய இரண்டரைக்கல் தொலைவில் 'ஐந்தருவி' இருப்பதையும் வழியில் 'பொதிகைமலைப் பதிப்பகம்' என்றுள்ள காலஞ்சென்ற டி.கே.சிதம்பர முதலியார் இல்லம் இருப்பதையும் சுட்டுகிறார் முடியரசன். முற்குறிப்பிட்ட சிற்றருவியிலிருந்து மேலேறிச் செல்ல சண்பகாதேவி என்ற அருவியை அடையலாம் எனக்குறிப்பிடுகிறார். அதன் முதன்மைப் பெயரையும் அதற்கான காரணத்தையும் பின்வருமாறு கூறியுள்ளார். முற்காலத்தில் சண்பக அடவி என்று அழைக்கப்பட்டுள்ளது. அடவி என்னுஞ் சொல்லுக்குக் காடு என்னும்

பொருளுண்டு. சண்பக மரங்கள் நிறைந்த காடாக இருந்ததால் சண்பக அடவி என்றழைத்தனர். சண்பக அடவி நாளாக நாளாகச் சண்பகாடவி என்றாகிப் பின்னர் சண்பகாதேவியாக மருவிவிட்டது என்றுரைக்கிறார்.

'குற்றாலத்திற் பெற்ற இன்பம்' என்னும் கடிதத்தில் அச்சம் நீங்கி பேரருவியில் நீராடி மகிழ்ந்ததை உரைக்கிறார். குற்றாலத்துக்கு அருகில் 'பம்புளி' எனும் ஊர் இருப்பதாகக் குறிப்பிட்டு அதன் இயற்பெயரை விளக்கிக் கூறுகிறார் முடியரசன். பசிய சோலைகள் நிரம்பிய இடமாதலின் 'பைம்பொழில்' என்று நல்ல தமிழ்ப்பெயரை இட்டதாகவும் அதனை சிதைத்து பம்புளி என்று மாற்றி விட்டதாக சொல்லின் செல்வர் இரா.பி.சேதுப்பிள்ளை விளக்கியுள்ளதை எடுத்துக்காட்டுகிறார்.

கடித வழி பலபொருள் ஒரு சொல் விளக்கம்

முடியரசன், 'பொருள் மாறி வரும் சொற்கள்' என்ற கடிதத்தில் ஒரு சொல்லின் பொருள் காலந்தோறும் பலவாறு மாறி வந்துள்ளதை எடுத்துரைக்கிறார்.

'ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன்' (புறம்- 72)

என்ற புறநானூற்றுப் பாடலில் கேள்வி என்பது கல்வியறிவு அல்லது நூலறிவு எனப் பொருள்படுகிறது.

'ஆறெழுத் தடக்கிய அருமறைக் கேள்வி
நாவியன் மருங்கில் நவிலப் பாடி' (திரு-186)

என்ற திருமுருகாற்றுப்படையின் வரிகளில் கேள்வி எனும் சொல் மந்திரம் என்பதைக் குறிக்கிறது.

'வேய்வை போகிய விரல்உளர் நரம்பிற்
கேள்வி போகிய' (பொரு-17)

என்ற வரிகளில் கேள்வி என்னும் சொல் இசை எனப் பொருள்படுகிறது. பெரும்பாணாற்றுப்படை 16ஆம் பாடல் வரியில் கேள்வி என்பதற்கு யாழ் என்றும் பதிற்றுப்பத்து 21 வரியில் வரும் கேள்வி என்பதற்கு வேதம் என்றும் பொருள் வருவதைக் கூறுகிறார். திருக்குறளில் கேள்வி என்ற அதிகாரத்தில் 418வது குறளில் வருவதும் அதே பொருளையே தருகிறது. இதன்வழி கேள்வி என்னும் சொல்லுக்கு கல்வியறிவு, மந்திரம், இசை, யாழ், வேதம், செவியாற் பெறப்படும் கேள்வியறிவு எனப் பல பொருள் உண்டு எனக் கூறுகிறார்.

இதுபோன்று புரிதல் என்பதற்கு விரும்புதல், பொருந்துதல், முறுக்குதல், ஆராய்தல், ஆக்கப்படுதல் என்ற பல பொருளுடையதாக சான்று காட்டி விளக்குகிறார். இக்காலத்தில் புரிதல் எனும் சொல் நன்கு விளங்கிக்கொள்ளுதல் என்ற பொருளில் விளங்குவதைக் குறிப்பிடுகிறார்.

தூங்குதல் என்னும் சொல் செறிதல், தொங்குதல், சோம்புதல் என்ற பொருள்களில் பண்டைக்காலத்தில் வழங்கியதை நிறுவுகிறார். தற்காலத்தில் உறங்குதல் எனும் பொருள் தருவதை கூறுகிறார்.

தனித்தமிழ் போற்றுதல்

முடியரசன் தமது அனைத்து கருத்துக்களிலும் தமிழின் சிறப்புக்களை பதிவு செய்துள்ளார். தமது சொற்றமிழ்பாடு, பைந்தமிழ்ப்பின் சென்றவன், எது குறுகிய மனப்பான்மை?, பிறமொழிப் பயிற்சி எப்பொழுது?, மனம் இருந்தால் வழியா இல்லை ஆகிய கடிதங்களில் தனித்தமிழ் சொற்களை வலியுறுத்தியும் பிற மொழிச் சொற்கள் இயல்பாக தமிழுடன் கலந்து பயன்படுத்துவதை கண்டித்தும்

எழுதியுள்ளார். சொற்றமிழ்ப்பாடு என்பதில் தமிழ் வழிபாட்டு முறை பெரியபுராணம் வழி நிறுவுகிறார்.

1958 ஆம் ஆண்டு 'எழில்' என்ற இதழில் 'பாண்டிய நாடன்' எனும் புனைப்பெயரில் கதைக்கூற்றில் எழுதிய இரண்டு கட்டுரைகளை அவ்வாறே கடிதத்தில் எழுதி தூயதமிழினை வலியுறுத்துகிறார். 'பைந்தமிழ்ப்பின் சென்றவன்' என்ற தலைப்பில் பல்லவர் ஆட்சியில் தமிழ்க்கவிக்காக திருமால் நாகப்பாய் சுருட்டி நகர் நீங்கியதையும் பின் அதே கவிக்காக நகர் திரும்பியதையும் குறிப்பிடுகிறார்.

எது குறுகிய மனப்பான்மை?, பிறமொழிப் பயிற்சி? ஆகிய தலைப்புகளிலான கடிதங்களில் வடமொழிப் பெயர்களை சொற்களை தமிழாகவே கருதி பயன்படுத்துவதை கடிந்துரைக்கிறார். பிற மொழிகளை வெறுக்காது அவற்றை உரிய நேரங்களில் மட்டும் சரியாக பயன்படுத்துமாறு கருத்துரைக்கிறார். 'எது சரி' என்ற தலைப்புடைய கடிதத்தில் தமிழில் பயன்படுத்தப்படும் ஒற்று, சொற்பிழைகளை எடுத்துக்காட்டுகிறார்.

'கவிஞனாக விரும்புகிறாயா?, கவிதை படைப்பதெப்படி? ஆகிய கடிதங்களில் கவிதை எழுதுவதற்கான இயல்புணர்ச்சியையும் இலக்கண நெறியையும் இணைப்பதற்கான முறையைக்காட்டுகிறார். உரைநடைக்கும் கவிதைக்குமான வேறுபாட்டை தூண், சிலை இரண்டையும் சான்றாக்கி விளக்குகிறார். கவிதையில் வழுவமைதியை ஏற்றுக்கொள்ளலாம் எனவும் அதற்காக முழுவதும் அதனைப்பின்பற்றக் கூடாது எனவும் கூறுகிறார்.

முடிவுரை

'அன்புள்ள இளவரசனுக்கு' என்ற கடித இலக்கிய தொகுப்பு முடியரசன் தனது மகனுக்கு எழுதியவை. இக்கடிதங்களில் தமிழ் இலக்கிய கருத்துக்கள், குற்றால அருவிகளின் இயற்கை எழில், தனித்தமிழின் சிறப்பு, பலபொருள் தரும் ஒரு சொல், கவிஞன், கவிதை பற்றிய நெறிகள் குறித்து கூறியுள்ளார் முடியரசன்.

பாடுங்குயில் கவிதைத் தொகுப்பில் முடியரசனாரின் பல்நோக்குச் சிந்தனைகள்

முனைவர் இரா.சுகுணா*

முன்னுரை

கவிஞன் என்பவன் சமுதாய மாற்றத்தில் புதுவித மலர்ச்சியில் தன்னை இணைத்துக் கொண்டவன். வாழ்வின் உயர்ந்த சிந்தனைகளையும், அதன் கோட்பாடுகளையும் உருவாக்கிச் சமுதாயத்திற்கு வழங்கும் வழிகாட்டி ஆவான். நாட்டுப்பற்றுச் சிந்தனை, பொதுவுடைமை, தமிழ்ப்பற்று முதலியவற்றைக் குறிப்பிட்டுத் தமது கவிதைகளின் மூலம் சமூகச் சீர்த்திருத்தம் செய்தவர் கவிஞர் முடியரசன் ஆவார்.

1983-இல் வெளியான முடியரசனாரின் ஷபாடுங்குயில்' என்ற கவிதைத் தொகுப்பானது தமிழ்ப்பற்று, பகுத்தறிவு, கல்வி, அரசியல்புரட்சி, உழவுத்தொழிலை வளர்த்தல் முதலிய பல சிந்தனைகளைக் கருத்தில் கொண்டு வீரமிக்க கவிதைகளைப் படைத்துள்ளார்.

தமிழ்ப்பற்று

தமிழ் மொழியில் பலதுறை அறிவு நூல்களையும் பயின்ற முடியரசனார், தமிழ் மொழியைத் தன் தாயாகவும், தன்னைச் சேயாகவும் பாவித்து கவிதை படைக்கிறார்.

> "இடும்பை தவிர்த்திடும் முப்பாலே - என்னை
> இனிதே வளர்த்திடும் தாய்ப்பாவாம்"
> "நின்னருள் மாமழை பொழிந்திடுவாய் - நானும்
> நீங்கா ததனுள் நனைந்திடுவேன்
> என்னுயிர் நீதான் தமிழம்மா - என்னை
> எடுத்தொரு முத்தம் அருளம்மா"
> (நானொரு குழந்தை ப.34)

எனப் பாடுகிறார்.

* உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரி, கோவிலூர்.

பகுத்தறிவு

பெரியாரின் பகுத்தறிவு சுயமரியாதைக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட முடியரசனார். தந்தை பெரியாரால் பகுத்தறிவுக் கவிஞர் முடியரசன்' எனப் போற்றப்பட்டார்.

"தொண்டு செய்து பழுத்தபழம்
தூய தாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகுதொழும்
மனக்குகையில் சிறுத்தை எழும்"

என்ற பாவேந்தர் வரிகளில் பெரியாரின் சிறப்பானது எழுத்தியம்பப்படுகிறது. அவராலே கிடைக்கப் பெற்ற பாராட்டு என்பது முடியரசனாரின் பகுத்தறிவை எடுத்தியம்பும் தன்மையை சிறப்புற வெளிப்படுத்தியுள்ளது.

'கடையவர் உயரியர் பிறப்பால் இருப்பர்
கடவுளின் செயலென உரைப்பார்
கடவுளை விதியினை மறுப்போம் - தூய
கடமையை உரிமையை மதிப்போம்"
(தலைமை வகிப்போம், ப.4)

"கடவுள் கடவுள் என்கிறாய் - நாளும்
கயமை யாவுஞ் செய்கிறாய்
மடமை நோக்கிச் செல்கிறாய் - நல்ல
மதியை அந்தோ கொல்கிறாய்
செய்யுந் தீமை யாவுமே - அந்தத்
தேவன் என்றால் தீருமோ?
பொய்யும் மெய்ம்மை யாகுமோ? காட்டுப்
பூனை புலியென் றாகுமோ?"
(மூடம் என்று மாறுமோ, ப.8)

என்று 'கடவுள்' பெயரைக் குறிப்பிட்டு நாட்டில் தீமையைச் செய்யும் மனிதர்களைச் சாடுகிறார்.

கல்வி

கல்வி அறியாமையைப் போக்கி அறிவை வளர்க்கும் தன்மையுடையது. செல்வத்துள் கல்வியை சிறந்த செல்வமாகப் போற்றத்தக்கது. நிலைத்த தன்மையுடையது. கல்வியற்ற மக்கள்

விலங்குகளோடு ஒப்பர் எனக் குறள் பகலும். கல்வி ஒருவருக்கு அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் நல்குவதுடன் அவர் துன்புற்றுச் சோர்ந்தவிடத்தும் உதவும் என்கிறது நீதிநெறி விளக்கம். கல்வியானது ஆண்களுக்க மட்டுமே உரியது என்ற நிலை ஏற்பட்டபோது ‘பெண்ணிற்கும் கல்வி வேண்டும்’ என்ற கோட்பாட்டினை வலியுறுத்தி பாவேந்தர் போன்ற கவிஞர்கள்,

“கல்வியில்லாத பெண்கள்
களர்நிலம் அந்நிலத்தில்
புல் விளைத்திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைவதில்லை”

என்று பாடினார். அவர்கள் வழி கவிஞர் முடியரசனாரும் ஷபடியாத பிள்ளை’ என்ற கவிதையில் கல்வியின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறார்.

“வேர்விட்ட ஆல்வற்றி நின்றால் தொங்கும்
விழுதன்றோ தாங்கிப் பிடித்திடல் நன்றாம்
நாட்டுக்கும் வீட்டுக்கும் கேடு - கல்வி
நாடிப் படிக்காத வாழ்வன்றோ காடு”
(படியாத பிள்ளை ப.24)

எனப் பெற்றோருக்கு அடங்காத பிள்ளை பெறக்கூடிய துன்பத்தையம் கல்விகற்காத மக்கள் இருக்கும் நாடு காடு போன்றது என்பதையும் இக்கவிதையில் விளக்குகிறார். மேலும் ஷநாளைய நாடு’ என்னும் கவிதையில் அவர் விரும்பும் பெண் கல்வியினைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

“அதோ அதோ ஒரு நாடு - கண்ணின்
அருகில் தெரிவதை நீ பாடு
பேதைமை முற்றிலும் அழியம் - அங்குப்
பெண்ணின வாழ்வுகள் தழையும்
ஓது நல் ஞானமும் ஒளிரும் - அவர்
ஓர் நிகராமெனல் மிளிரும்” (நாளைய நாடு, ப.31)

எனப் பாடுகிறார்.

அரசியல் புரட்சி

'புரட்சி' என்பதற்கு நேர்பொருள் புரளுதல், மாறுதலடைதல் என்பதாகும். அரசியலில் பெரிய மாறுதலுக்கு அடிப்படையான சில நிகழ்ச்சிகளைக் குறிக்க இந்தப் புரட்சியானது பயன்படுகிறது. 'சமுதாயத்தால் எழுத்தாளன் பாதிக்கப்படுகிறான். அத்துடன் சமுதாயமும் அவனால் பாதிக்கப்படுகிறது. இலக்கியம் வாழ்வை உருவாக்கி அளிப்பதோடு அதைச் சீருமைக்கவும் ஓய்கிறது"[1] என்ற கோட்பாட்டிற்கேற்ப கவிஞர் முடியரசனார் வாழ்ந்தவர். (இரா.நெடுஞ்செழியன், புரட்சிக்கவிஞர்.ப.22)

அரசியலில் ஏற்படக் கூடிய தீமையைத் தம் பாடல் வரியால் துணிவுடன் சாடியவர்.

"சுரண்டலும் பதுக்கலும் ஒழிப்போம் அதற்குத்
துணைவரும் பகைதனை அழிப்போம்
இரண்டிலும் பிழைப்பவர்ப் பழிப்போம் - அவர்க்கே
இனியொரு விதிமுறை விதிப்போம்"
(தலைமை வகிப்போம், ப.4)

என அரசியலானது சுரண்டலும், பதுக்கலும் நிறைந்ததுதாக மாறியுள்ளது. அத்தகைய அரசியலை ஒழித்து

"மனிதனை உழைப்பினை மதிப்போம் - கொடிய
வறுமையை இடரினை மதிப்போம்
இனிய நல்லுலகினைப் படைப்போம் - அங்கே
எதிர் வரும் தடைகளை உடைப்போம்"
(தலைமை வகிப்போம், ப.4)

உழவுத் தொழில்

எல்லாரும் உண்ணுமாறு உழவுத்தொழில் செய்து அதனால் தாமும் உண்டு வாழ்பவரே உரிமையுடன் வாழ்பவராவார். மற்றவரெல்லாம் பிறரை வணங்கி அதனால் உண்டு அவர் பின் செல்லும் அடிமைகளாவார். இதனை வள்ளுவர்.

"உழுது உண்டு வாழ்வாரே வாழ்வார் மற்று எல்லாம்
தொழுது உண்டு பின் செல்பவர்" (குறள்.1033)

எனக் குறிப்பிடுகிறார். இத்தகைய சிறப்புடைய உழவுத் தொழிலினைச் செய்யும் உழவர்கள் நீர்ப்பாசன வசதி இன்றி துன்பப்படுவதைக் கண்டு மனம் நொந்து

"முழுமதி வடிவினில் குறையும் - அதுவும்
முழுமையும் ஒருநாள் மறையும்
உழுபவன் வடிவினினல் குறையின் - என்தன்
உளமே கனலாய்ப் பகையும்"
(எப்படி பொறுப்பேன், ப.6)

எனப் பாடுகிறார். மேலும் வயல்களில் உழைப்பினைக் கொடுத்து உழுபவர்களின் வறுமைத் துயரையும் நீக்குதல் வேண்டும் என்பதை,

வயல்களில் உழைப்பினைக் கொடுப்போம் அங்கே
வருபயன் அனைத்தையும் எடுப்போம்
துயரிலை என மடல் விடுப்போம் உழைப்பால
சுரந்திடும் பொருட்கள் மடுப்போம்"
(தலைமை வகிப்போம், ப.4)

எனப் பாடுகிறார்.

முடிவுரை

தமிழ் இலக்கியத் துறையில் முடியரசனார் தொடாத துறைகளே இல்லை எனலாம். தமிழுணர்வு, பகுத்தறிவின் இன்றியமையாமை, கல்வியின் அவசியம், அரசியல் வாதிகளின் தீய குணங்கள், விவசாயத்தைப் போற்றல் முதலியவற்றைப் பற்றி 'பாடுங்குயில்' என்ற தமது கவிதைத் தொகுப்பில் சமூகப் பிரச்சினைகளை எடுத்துக் கூறியுள்ளார்.

'நெஞ்சு பொறுக்கவில்லையே' வெளிப்படுத்தும் முடியரசனாரின் நெஞ்சக் குமுறல்கள்

கா.சுபா *

முன்னுரை

நெஞ்சு பொறுக்குதிலையே - இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்து விட்டால்

என்று வேதனைப்படுகிறான் முண்டாசுக் கவிஞன் பாரதி. அவனைப் போலவே இவ்வுலகில் நடைபெறும் சமூகச் சீர்கேடுகளைக் கண்டு மனம் வருந்துபவர் இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களுள் குறிப்பிடத் தக்கவராய்த் திகழும் வீறுகவியரசர் முடியரசனார். அவரது படைப்புகள் ஒவ்வொன்றும் சமூக அக்கறையை வெளிப்படுத்துபவை. அந்த வகையில், அவருடைய 'நெஞ்சு பொறுக்கவில்லையே' கவிதை நூல் வெளிப்படுத்தும் முடியரசனாரின் நெஞ்சக் குமுறல்களைப் பதிவு செய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

இன்றைய இளைஞர்களின் நிலை

நாட்டின் எதிர்காலத் தூண்கள் என்று வருணிக்கப்படும் இளைஞர்கள் பொறுப்புணர்வு சிறிதும் இன்றி, எவ்வித கடமை உணர்வும் இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர். நாகரிகம் என்ற பெயரில் தம் உடல், நடை, பாவனைகளில் காண்போருக்கு வெறுப்பை உண்டாக்கும்படியாகவே நடந்து கொள்கின்றனர். குடிப்பதும், பெண்களைக் கேலி செய்வதுமே அவர்களது இயல்பாகக் கருதுகின்றனர். இந்நிலையைக் கண்ட முடியரசனார்,

படி மறப்பர் நடை மறப்பர் தெருவிற் செல்லும்
பாவையரை வழி மறைப்பர், கூத்தடிப்பர்;
குடிகெடுக்கும் காளைகளைக் காணும் போது
குமுறி மிகத் துடிதுடிக்கும் எனது நெஞ்சம் *(நெஞ்சு.ப.13)*

என்று மனவேதனைப்படுகிறார்.

---

* முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்ப் பண்பாட்டுமையம், அழகப்பா பல்கலைக் கழகம், காரைக்குடி.

இளைஞர்கள் அரசியலில் ஈடுபடுவதை முடியரசனார் ஆதரிக்கவில்லை. படிக்கும் பிள்ளைகளுக்கு அரசியல் தேவையில்லாத ஒன்று என அவர் கருதினார் (நெஞ்சு.ப.26).

இளைஞர்கள் திரைப்படத்தில் தன் பொழுதை வீணடிப்பதைக் கண்டு மனம் கொதிக்கிறார் முடியரசன். இளைஞர் பலர் நடிகர், நடிகையரின் பின்னே தங்கள் வாழ்க்கையைத் தொலைத்து நிற்கின்றனர். நடிகரின் படத்திற்குப் பாலபிஷேகம் செய்வது, நடிகரைத் தன் தலைவராகக் கொள்வது போன்றவை இளைய சமூகத்தைச் சீரழிக்கும் செயல்கள் ஆகும். இளைஞரின் ஆற்றலெல்லாம் திரைப்படத்தில் விணாவதைக் கண்ட முடியரசன்,

வியர்வையினால் உடல்நனைய விலையுயர்ந்த
          உடைகிழிய விரைந்து சென்று
வெயில்நடுவே மற்றவரை வீரமிகு
          தோள்களினால் விலக்கித் தள்ளி
அயர்விலராய்க் கூட்டத்தின் அணியுடைத்துப்
          புகுந்துவரும் ஆண்மை மாக்கள்
செயலெல்லாம் படம்பார்க்குஞ் சீட்டொன்றைப்
          பெற்றிடத்தான்; வீரம் வாழ்க (நெஞ்சு.ப.92)

என்று எள்ளி நகையாடுகிறார்.

மேலும், எதிர்காலமே இளைஞர்கள் கையில் என்று பெரியோர் நம்பி இருக்க, இளைஞர்களின் வாழ்க்கை உதிர்காலம் போல உருள்வதாகக் கூறி இளைஞர்களின் இன்றைய நிலையைக் குறித்த தன் மனக்குமுறல்களைப் பதிவு செய்கிறார்.

இப்படி எதிர்காலம் குறித்து ஒரு சிறிதும் அக்கறையின்றி பொழுது போக்கித் திரியும் இளைஞர்களை நோக்கி,

அன்பருடன் நகைமொழிகள் பலவும் பேசி
அரட்டையடித் தலைவதுதான் பொழுது போக்கா?
நண்பருடன் திரைப்படங்கள் பார்த்து விட்டு
நடுத்தெருவில் திரிவதுதான் பொழுது போக்கா?
என் பெருமை கண்டீரோ? பொழுதை எல்லாம்
இவ்வண்ணம் போக்கடித்தால் பயனே இல்லை;

மின்பொழுதும் வீணின்றி நூல்ப டித்து
மேம்படுக, பருவத்தே பயிரைச் செய்க (நெஞ்சு.ப.22)

என்று பொழுதை வீணாக்காது நூல் பல படித்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என அறிவுரை பகர்கிறார்.

இன்றைய பெண்களின் நிலை

இன்று பெண்களுக்குப் பாதுகாப்பு என்பதே இல்லாத நிலை. என்று ஒரு பெண் நள்ளிரவு பன்னிரெண்டு மணிக்குத் தனியாகச் செல்கிறாளோ அன்றுதான் இந்த நாடு உண்மையாகச் சுதந்திரம் அடைந்ததாகக் காந்தியடிகள் கூறுவார். ஆனால் இன்றோ பகலில் கூட பெண்கள் தனியாக வெளியே செல்ல இயலாத நிலை. எங்கு நோக்கினும் பாலியல் வன்முறைகள், காதலை மறுத்த பெண்ணை நோக்கித் திராவகம் வீசுதல், கொலை செய்யப்படுதல் உள்ளிட்ட கொடுஞ்செயல்களே அரங்கேறி வருகின்றன. இந்நிலையைக் கண்ட முடியரசனார்,

தந்தையொடு சென்றாலும் தங்கொழுநர்
உடன் செலினும் தைய லர்க்கிங்
கெந்தவொரு காப்புக்கும் இடமில்லை
ஏதேதோ நேரும் தொல்லை (நெஞ்சு.ப.86)

என்று குறிப்பிடுகிறார்.

வரதட்சணைக் கொடுமை

பெண்கள் என்னதான் 'ஆணுக்குப் பெண் இளைப்பில்லை'யெனக் கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் முன்னேறி இருந்தாலும் திருமணம் என்று வரும்பொழுது வரதட்சணையால் துன்பப்படும் அவலநிலையே நிலவுகிறது. அதிலும் மணமகனின் கல்வி, பணி போன்றவை உயரும் தரத்திற்கேற்ப திருமணச் சந்தையில் அவனுக்குரிய விலையும் அதிகரிக்கிறது. வரதட்சணைக் கொடுமை குறித்து முடியரசனார்,

கண்கவர் எழிலைப் பாரான்
கல்வியின் பெருமை காணான்
பெண்மகள் குணத்தை நோக்கான்
பிறவுயர் பண்பும் நோக்கான்

உண்மையில் மனப்பொ ருத்தம்
உள்ளதா எனவும் எண்ணான்
பொன்பொருள் மட்டுந் தானே
புன்மகன் நோக்கு கின்றான் (நெஞ்சு.ப.71)

என்று தன் உள்ளக் குமுறலை வெளிப்படுத்துகிறார்.

எது பெண்களின் முன்னேற்றம்?

பெண்கள் பலர் புடவை, நகை போன்றவற்றில் அதீத ஆர்வம் கொண்டு விதம் விதமாக அவற்றை அணிவதிலே பெருமகிழ்வு கொள்கின்றனர். ஆனால் பெண்களின் முன்னேற்றம் இவ்வாறு ஒப்பனை செய்துகொள்வதில் இல்லை என்பதை,

கடைச்சரக்கால் உடலழகு காண்பவர்க்குத்
தெரிவுறவே காட்டி விட்டுக்
கடைத்தெருவில் திரிவதுவா கன்னியர்க்கு
முன்னேற்றம்? கலைகள் யாவும்
படிப்பதிலே நூல் பலவும் படைப்பதிலே
இல்லறத்துப் பாங்கு கற்று
நடப்பதிலே உயர்பதவி தொடுப்பதிலே
முன்னேற்றம் நாட வேண்டும் (நெஞ்சு.ப.90)

என்று கூறி அறிவுறுத்துகிறார்.

சாதிகளோ சாகவில்லை!

தொழில் காரணமாக ஏற்பட்ட சாதி பின்னர் மக்களிடையே உயர்வு தாழ்வைக் கொண்டுவந்தது. இவ்வேறுபாடுகளைக் களைய கவிஞர் பலர் வலியுறுத்தினர். பாரதியும், பாரதிதாசனும் ஷசாதிகள் இல்லை' என்று பாடினாலும் இன்னும் நம் சமுதாயத்தில் சாதியை ஒழிக்க முடியவில்லை என வருந்தும் முடியரசனார்,

'சாதிகளே இல்லையடி பாப்பா நம்முள்
தாழ்வுயர்வு சொல்லுதலே பாவம்' என்றே
ஓதியஓர் பாரதியும் செத்து விட்டான்
உட்புகுந்த சாதிகளோ சாக வில்லை
'வேதியர்கள் தாம்வாழ வகுத்து வைத்த
வேதநெறி திராவிடத்தில் தூள்தூள்' என்று

மோதினன் நம் பாவேந்தன்; வீதிதோறும்
முளைப்பதலால் தூளாக வில்லை யிங்கே"
(நெஞ்சு.ப.11-12)

என்று பாடி தன் உள்ளக் குமுறலை வெளிப்படுத்துகிறார்.

கையூட்டு

இன்று இலஞ்சம் கொடுத்தால்தான் எந்த வேலையும் நடக்கும் என்ற நிலை. எங்கும் இலஞ்சம் எதிலும் இலஞ்சம் என்பதாய் அனைத்துத் துறைகளிலும் இலஞ்சம் தலைவிரித்தாடிக் கொண்டிருப்பதைக் கண்டு மனம் குமுறுகிறார் (நெஞ்சு.ப.47). நீதித்துறையையும் இலஞ்சம் விட்டு வைக்கவில்லை என்பதை,

மாசறி யாத நீதி
மன்றிலும் கையூட் டென்னும்
காசுதான் தீர்ப்பை வாங்கும்
கயமையைக் காதாற் கேட்டேன்

என்று பாடுகிறார். மேலும், காசுக்காகக் கடமையை விற்பவர்களை,

கைப்பணம் ஒன்றுக் காகக்
கடமையை விற்கும் மாக்கள்
பொய்ப்பிணம் போல்வர்; நாட்டில்
நோய்செயும் புழுக்க ளாவர்; (நெஞ்சு.ப.38)

என்று சாடுகிறார்.

சட்டமன்றத்தின் நிலை

மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் மக்கள் நலத்திட்டங்கள் குறித்து விவாதிக்காமல், தகாத மொழி பேசி, தாக்குதல் நடத்துவதை முடியரசனார் தன் கவிதையில் (பூக்களிற் புழுக்கள்) பதிவு செய்துள்ளார்.

அரசு மருத்துவமனைகளின் நிலை

தனியார் மருத்துவமனைகளில் மருத்துவம் பார்க்க வசதியற்ற ஏழை மக்கள்தான் அரசு மருத்துவமனையை நாடி வருகின்றனர். ஏற்கனவே நோயால் உடலும், உளமும் நொந்து வரும் அவர்களிடம்

மருத்துவமனைப் பணியாளர்கள் பரிவு காட்டாமல் எரிந்து விழுகின்றனர். மேலும் சிலர் அந்த நோயாளிகளாகிய ஏழைகளிடம் கையூட்டுப் பெறுகின்றனர். இந்த அவலநிலையை முடியரசனார்,

வெடுக்கெனப் பேசு வோரும்
விறைப்புடன் கனன்று தேளின்
கொடுக்கெனக் கொட்டு வோரும்
கொடுப்பதைச் சுருட்டு வோரும்
படுக்கையிற் கிடப்பார் தம்மைப்
பாவிகள் படுத்தும் பாடு
நடுக்கமே கொள்ளச் செய்யும்
நலிந்தவர் யாது செய்வர்? (நெஞ்சு.ப.41-42)

என்று வருந்துகிறார். இவையன்றி, அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளுக்காக வைத்திருக்கும் மருந்துப் பொருட்கள், உணவுப் பொருட்கள் ஆகியவை வெளியில் விலை போவதையும் சுட்டிக் காட்டியுள்ளார் (நெஞ்சு.ப.42).

திரைப்படத்தின் தீமைகள்

பெரும்பாலும் இன்றைய திரைப்படங்கள் பாலுணர்வையும், வன்முறையையும் தூண்டுவனவாகவே உள்ளன. எவ்வித நற்கருத்துகளும் இன்றி வெறும் பொழுதுபோக்கை மட்டுமே மையமாகக் கொண்டு இன்றைய திரைப்படங்கள் அமைகின்றன. இதனைக் கண்ட முடியரசனார்,

பண்பாடே சீர்குலைந்து போன தென்றால்
படத்துறைதான் முதற்களமாம் ; அதை நினைந்தால்
கண்பாடு கொள்வதற்கு மனமே யில்லை;
கயமைகளின் விளைநிலந்தான் அந்தப் பூமி
(நெஞ்சு.ப.29)

என்று பாடுகிறார். இதன் மூலம் பண்பாடு பெரிதும் சீர்குலையத் திரைப்படங்கள் காரணமாக அமைந்துள்ளமையைச் சுட்டிக் காட்டுகிறார்.

நாளிதழ்களின் நிலை

'கத்தி முனையை விட பேனா முனை கூர்மையானது' என்பர். அந்த அளவிற்கு எழுத்து சமூக மாற்றத்தை உண்டாக்க வல்லது. ஆனால் நற்சிந்தனைகளை விதைக்க வேண்டிய நாளிதழ்கள் இன்று

வியாபார நோக்கம் கொண்டு சமூகத்தைச் சீரழிக்கும் செய்திகளை வெளியிடுகின்றன. இதைக் கண்டு மனம் குமுறும் முடியரசனார்,

நடிகையரை ஆய்வதற்கா நாளிதழ்கள்?
நாட்டவர்தாம் நடத்து கின்ற
கெடுதிகளைத் தெரிவதற்கா கிழமையிதழ்?
இளநெஞ்சிற் கீழ்மை யெல்லாம்
படியவிடும் நோக்கிற்கா பாழிதழ்கள்?
இவைவிடுத்தாற் பயனில் மூடக்
கொடுமைவளர் பேரிதழ்கள்! காசுபெற
எதுசெயவும் கூச வில்லை (நெஞ்சு.ப.67)

என்று வேதனைப்படுகிறார்.

முடிவுரை

வீறுகவியரசர் முடியரசனார் தன் ‘நெஞ்சு பொறுக்கவில்லையே’ படைப்பின் வழி, இன்றைய இளைஞர்களின் நிலை, பெண்களின் நிலை, வரதட்சணைக் கொடுமை, சாதி வேற்றுமை, கையூட்டு, சட்டமன்ற அவலம், அரசு மருத்துவமனைகளின் நிலை, திரைப்படத்தின் தீமைகள், நாளிதழ்களின் நிலை போன்றவற்றை வெளிப்படுத்துவதன் வழி சமூகச் சீர்கேடுகளைச் சுட்டிக் காட்டியுள்ளார். அச்சீர்கேடுகள் குறித்தான தன் நெஞ்சக் குமுறல்களை ஆழமான மொழியாளுமையால் பதிவு செய்துள்ளார். மேலும் இளைஞர்கள், பெண்களின் முன்னேற்றத்திற்குரிய அறிவுரைகளைப் பகிர்ந்துள்ளார்.

தமிழிசை காத்த தன்மானப்பாவலர்

பேரா.சே. செந்தமிழ்ப்பாவை *

முன்னுரை:

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டு மேடைகளில் தமிழிசை கேட்பதென்பது அரிதாக, தமிழிசை என்றால் என்ன என்று கேட்கும் நிலையே இருந்தது. இந்நிலை மாறவேண்டும் என்பதற்காகத் தம் எண்ணம், சொல், செயல் என அனைத்திலும் குமுகாயம் குறித்தே சிந்தித்து வந்த முடியரசனார் அவர்கள் தமிழிசைகாக்க வீறுகொண்டெழுந்தார். தமிழிசை காக்க பல நூல்களைப் படைத்தார். இப் படைப்புகளின் வழி முடியரசனாரின் தமிழிசைக் காப்பு முயற்சி குறித்து எடுத்துரைப்பது இவ்வுரையின் நோக்கமாகும்.

காலந்தோறும் தமிழிசை

தமிழை முத்தமிழ் என்று பாகுபடுத்தியுள்ளமை தமிழர்களின் இசையறிவைப் புலப்படுத்தும். ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தொல்காப்பியம் கருப்பொருள் பற்றியுரைக்கும் பொழுது ஐந்நிலத்திற்கும் உரிய பண்களைக் குறிப்பிடுகிறது. பதிற்றுப்பத்து, பரிபாடல் பாடல்கள் அனைத்தும் பண்வகுக்கப்பெற்ற சிறப்புடையன. திருஞானசம்பந்தர் ஒவ்வொரு திருத்தலத்திற்குச் செல்லும்போதும் திருநீலகண்ட யாழ்ப்பாணரை உடனழைத்துச் சென்று பண்ணோடு பாடல் பாடியுள்ளார். தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன் என்பது திருநாவுக்கரசர் வாக்கு. இப்படிக் காலந்தோறும் இயற்றமிழோடு இசைத்தமிழ் இயைந்தே வந்த நிலையில் 19, 20-ஆம் நூற்றாண்டுகளில் இந்நிலை முற்றிலும் மாறுபட்டது. தமிழ்நாட்டு மேடைகளில் தமிழிசை கேட்பது அரிதானது. பெரும்புகழ் பெற்ற இசைவாணர்களும் இசையரங்குகளில் பிற மொழிப் பாடல்களையே பெரிதும் பாடினர். தமிழ்நாட்டில் தமிழிசைக்கு இடமில்லா நிலைகண்டு

---

* பேராசிரியர் & இயக்குநர், தமிழ்ப்பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

*(இந்தக் கட்டுரை ரூசா - கட்டம் 2.0 (நிதி ஒப்புதல் கடித எண்: F.24-51/2014-U, Policy (TNMulti-Gen) கல்வித்துறை, இந்திய அரசு, நாள்:09.10.2018) நிதியுதவியில் எழுதப்பெற்றது.)

வருந்திய முடியரசனாரின் வருத்தமே அவரைத் தமிழிசை காக்கத் தூண்டியது.

காவியப்பாவை எனும் இசைத்தமிழ்

முடியரசனார் தமிழிசை காக்க மேடையில் பாடும் வகையில் 1955-ஆம் ஆண்டு 75 இசைப்பாடல்களுடன் கூடிய காவியப்பாவை எனும் நூலை எழுதி வெளியிட்டார். இவை எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என 75 பாடல்களும் இசைப்பா வடிவில் அமைந்தன. இது மட்டுமன்றி முடியரசனாரின் கவிதைகளில் நெஞ்சில் பூத்தவை எனும் நூலில்-15, பாடுங்குயில்-78, மனிதரைக் கண்டு கொண்டேன்-2, தாய்மொழி காண்போம்-13, புதியதொரு விதி செய்வோம்-3, வள்ளுவர் கோட்டம்-1, ஞாயிறும் திங்களும்-12, முடியரசன் கவிதைகள்-1 என மொத்தம் 200 பாடல்கள் இசைப்பா வடிவில் பாடப் பெற்றுள.

பூங்கொடி காப்பியத்தில் இசைத்தமிழ்

பூங்கொடி காப்பியம் மொழி வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு புனையப் பெற்றது. இக்காப்பியத்தில் 31 காதைகளில் முப்பது காதைளிலும் தமிழிசை குறித்தே பேசப்பெற்றன.

காப்பிய நாயகியாகிய பூங்கொடி மீனவன், மலையுறை அடிகள் எழிலி, அருண்மொழி, நாவலூர் அமுதம், சண்டிலி என்னும் பாத்திரங்களின் வாயிலாக தமிழிசைக்குக் குரல் கொடுக்கின்றார். மொழிக்காகக் காப்பியம் பாடத் தொடங்கியவர் இங்ஙனம் தமிழிசைக் குறித்து அதிகம் பாடுவதற்குப் பாரதி உரைக்கும், "முத்துசாமி தீட்சிதர் தியாகையர், பட்டணம் சுப்பிரமணிய அய்யர் முதலியவர்களின் கீர்த்தனைகளிலே சிலவற்றை அதிக சங்கதிகளுடன் பாடுவோரே முதல் தர வித்துவான். இந்தக் கீர்த்தனங்களெல்லாம் சமஸ்கிருதம் அல்லது தெலுங்கு பாஷையில் இருக்கின்றன. ஆகவே முக்காலே மும்மாகானி வித்வான்களுக்கு இந்தக் கீர்த்தனங்களின் அர்த்தம் தெரியாது. எழுத்துக்களையும் பதங்களையும் கொலை செய்தும் விழுங்கியும் பாடுகிறார்கள். அர்த்தமே தெரியாதவனுக்கு 'ரஸம்'தெரிய நியாயம் இல்லை. தமிழ்நாட்டு ஜனங்களுக்கு இரும்புக்காதாக இருப்பதால் திரும்பத் திரும்பத் திரும்ப ஏழெட்டுப் பாட்டுக்களை வருஷக்கணக்காகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்ச் சபைகளில் எப்போதும் அர்த்தம் தெரியாத பிற பாஷைகளில் பாட்டுக்களைப் பாடுதல் நியாயமில்லை. அதனால் நமது ஜாதி சங்கீத

ஞானத்தை இழந்து போகும்படி நேரிடும்'' (மகாகவி பாரதியார் கட்டுரைகள், ப. 218) என்னும் தமிழக நிலை காரணமாகும்.

பூங்கொடி காப்பியத் தொடக்கத்திலேயே அருண்மொழி எனும் மாந்தரை தமிழிசை பயின்ற இசைவாணியாக அறிமுகப்படுத்துகிறார். இதனை,

செவ்விய இசைநூல் இவ்வுலகக் குள்ளன
அவ்வள வும்பயில் அறிவினல்: பிறமொழி
இசைபல முயன்று வசையற வுணர்ந்து
நசையுடன் ஆய்ந்து நம்தமிழ் இசைக்கே
ஆக்கம் தந்தவள்: அரியதோர் இசைப்புனல்
(பூங்கொடி -2-18-22-2:147)

என்னும் அடிகள் புலப்படுத்தும். இத்தமிழிசைவாணியாகிய அருண்மொழி கணவன் இறந்ததன் பின் பாட மறுக்க, தமிழிசைகாக்க அவரது மகளாகிய பூங்கொடியையாவது பாடச் செய்ய வேண்டும் என்று மலையுறை அடிகள் கேட்க அருண்மொழியும் அதனை ஏற்றுத் தம் மகளாகிய பூங்கொடியிடம், ''தோமறு தமிழிசை துலங்குதற்கு நீ அப்பணியை மேற்கொள்ளுதல் வேண்டும். உன் தந்தையின் இறப்பால் இசைப்பணியைத் துறந்தோம், நாமே தமிழிசைப் பணியைத் துறந்தால் நம் தமிழிசை யாங்ஙனம் சீர்பெறும்? நம் துயரைப் பெரிதாக எண்ணியிருத்தல் தன்னலமாகும். எனவே நீ தமிழிசை காக்கப் புறப்படு'' என்று அனுப்பி வைப்பதாக உரைப்பர். (பூங்கொடி: 15:7-15) இச்செயல் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தன் இளவயது மகனைப் போர்க்களத்திற்கு அனுப்பிய மூதின்மகளின் செயலைப் போல அமைந்துள்ளமை சுட்டத்தக்கது.

மலையுறை அடிகள் சுட்டும் தமிழிசையின் சிறப்பு

தமிழிசை காக்கப் புறப்பட்ட பூங்கொடியிடம் மலையுறை அடிகள் தமிழிசையின் சிறப்பினை, ''தமிழிசை அமிழ்தத்தை ஒத்தது. ''மனமொழி செயல் என அனைத்தைபும் தன்வயப்படுத்தும் தனியொரு ஆற்றல் தமிழிசைக்குண்டு. கொடுமை நிறைந்த விலங்கு, கடுவிடமுடைய அரவு போன்றவற்றையும் படிந்திடச் செய்யும் பாங்குடையது: (பூங்கொடி 18: 232- 235).எனவே நீ நற்றமிழ் வளர நாளும் திருப்பணி புரிவதோடு மிக இன்றியமையாத பணி ஒன்றும் செய்தல் வேண்டும். துய்ப்பேர், பிணிக்கும் தொன்மைசேர் இசைநூல்

மெய்ப்பாடலனைத்தும் மேவிய கூத்துநூல் ஏராளமானவை தமிழில் இருந்தன. அத்துணை நூலும் அழிந்தன கடலால் என நொம் இரங்கி வருந்தியிருந்தோம். ஆனால் அதை கட்டுக்கதையெனக் கூறுவோறும் உளர். அதனால் தகுமிசை அரங்கில் தாய்மொழி விடுத்துப் புகுமொழி இசைத்திடும் புண்மை இங்கு நடைபெறுகிறது. மீண்டும் தமிழிசை வேண்டும் என்று நாம் கூறினால் அதை மொழி வெறுப்புணர்ச்சி என்கின்றனர். அகப்பகை தமிழை அழிக்கின்றது. அதை நீ காக்க வேண்டும் என்பவர் (பூங்கொடி:12:93-100) மேலும்

இசைத்தமிழ் முழக்குக எங்கணும் பெரிதே!
வசைத்தொழில் புரிவோர் வாய்தனை அடக்குக!
இசைப்பணி புரிதல் இனி நமக் கேலாது
வசைத்தொழில் ஈதென வாளா விருந்தனை
திசைத்திசைச் சென்று செந்தமிழ்ப் பாட்டின்
இசைத்திறன் காட்டுதி இனிந் தாயே!
இன்னுயிர் ஈந்தும் இசைத்தமிழ் பேணி
தோமறு பணி செய்த துணிந்தெழு நீ
(பூங்கொடி-12:120-128)

என்றுரைப்பது தமிழிசை காக்கப்படவேண்டும் என்னும் முடியரசனாரின் அவாவினைப் புலப்படுத்தும்.

பண்டைய இசை நூல்கள் பற்றியுரைத்தல்

இசைக்கெனத் தனிநூல்கள் தமிழில் இல்லை என்று ஒரு குறை கூறப்படுகிறது. இதைப் பற்றிச் சிந்தித்த கவிஞர் மீனவன் மாந்தர் வழியாக சுவடியின் மரபு தெரிவுறு காதையில் “கூடல் மாநகரில் மீனவன் மாணவர்கட்குத் தமிழ் கற்றுக் கொடுக்கும் வேளையில், மாணவன் ஒருவன் இசையும், கூத்தும் இயம்பும் தமிழ்நூல் ஒருநூலாயினும் உருவொடு காண்கிலேம் என ஐயம் எழுப்ப, ..மனநலிவுற்ற மீனவன் பலப்பல அந்நூல் படைத்தது. தமிழ்மொழி, நிலைத்தடு சான்றுகள் நிறைதலும் காண்குவை: நெருப்பும் நீரும் செருத்தொழில் புரிந்தன. உருக்குலைந்தொழிந்தன. ஓங்குயர் நூல்பல: ஆடிப்பெருக்கில் ஆற்றொடு விடுத்தோம்: தேடிச் சுவைத்தன செல்லும் பூச்சிகள். சுவடிகள் தவறினும் அந்நூல் தமிழுக்கு இல்லை என்று கூறுதல் கட்டுக்கதை. அதை நம்ப வேண்டாம்: அளப்பரும் புகழ் நூல் சிலப்பதிகார உரை தரும் ஆசான் அடியார்க்கு நல்லான் புரையற உரைத்தது புலமுளோர் அறிவர”(பூங்கொடி. 141:10-40)

யாழும் குழலும் எழுப்பிய இசைதான் வாழும் தமிழோ? வருமொழி இசையோ? அவ்விசைக் கருவிகள் ஆய்ந்து கண்டவர் செவ்விய தமிழர்: சிறந்த இக்கருவிகளை எதற்காக இயற்றியவர்: இசைப் பொருட்டன்றோ? பாணன். பாடினி பாடற்றொழிலோர் எல்லாம் எம்மொழிப் பாடல் இசைத்தனர்? திணைகள் ஐந்தெனச் செப்பிய முன்னோர் இணையும் வகையால் பண்ணும் இசைத்தனர். இசை எலாம் மறந்தே இலை எனல் முறையோ? ஆதலின் நம்பால் அனைத்தும் இருந்தன' (பூங்கொடி. 14:44-56) என்று பண்டைத் தமிழரின் இசைத் தமிழ் மேன்மையை எடுத்துரைப்பர்

தமிழிசைக்கு எதிர்ப்பு

இசை மேடைகளில் தமிழிசை பாடவேண்டும் என்றபொழுது அதற்கு எதிர்ப்பு எழுந்தது. அவ்வெதிர்ப்பை எழிலி எனும் மாந்தரின் வழி எழிலி என்னும் இசைச்செல்வி தமிழிசை தவிர பிற இசை பாடுவதற்கு இசையாதவள். தமிழிசை முழுவதும் ஓதியறிந்தவள்: தமிழிசையின் மேன்மையை விரும்பாத செல்வர்கள் சிலர் எழிலியை மொழி வெறி கொண்டவள் எனப் பழித்துத் தொல்லைகள் தந்த போதும் அதனைப் பொருட்டாகக் கருதாதவள் என்றும் தமிழிசைக் காக்க அவள் மேற்கொண்ட செயல்களை,

.... எடுத்த நற்பணியில்,
ஆக்கமும் கேடும் அணுகுதல் உண்டென்
றூக்கமும் உரனும் மீப்பட லாயினள்
மயல்ஒழிந் தாரெலாம் மதத்தனர் போற்றினர்
தளிர்க்கும் அவள்புகழ் தணிப்பார் இல்லை
இவ்வணம் இசையால் ஏற்றம் பெற்றனள்
(பூங்கொடி- 16: 21-24)

என்று பாராட்டியுரைப்பர். மேலும் இவ்எழிலியிடம் பூங்கொடி இசை கற்கச் செல்லுகின்றாள். இசையின் அரசியாகிய எழிலி இசையின் இலக்கண நுணுக்கம் பாடல் பாடும் முறை:, ஏடுகளில் உள்ளதை வாசித்தறியும் முறை, குழல்,யாழ், முழவு முதலாகிய கருவிகளை இசைக்கும் முறையைக் கற்றுக் கொடுத்ததோடு இசையின் முழுமையையும் அறியச் செய்தாள். (பூங்கொடி.17: 10-20)

எழிலி பூங்கொடியின் கற்றறியும் திறனை அறிந்து உள்ளக்களிப்படைந்து. இவளால் இசைத்தமிழ் இசையுறல் திண்ணம் இசைப்பணியைத் தரணியில் ஆற்றிட என்பின் ஒருவரும் இலரே எனத்

துன்பத்தில் துவளுங்காலை அந்நலிவகற்றிட இவ்ஆழிழை வந்தாள்: இதனால் பைந்தமிழ் இசைத்தொழில் பரம்பரை அறாஅது என்று மகிழ்ந்து தமிழிசையைக் காக்கும் இவள் நெடுநாள் வாழவேண்டும் என்று வாழ்த்தினள். (பூங்கொடி 17: 21- 31). இதன் விளைவாகப் பூங்கொடி இசைத்துறைக்குப் பாடல்கள் இதன் இயற்றினாள். குற்றமில் மீனவன் நற்றமிழ் சுவடியின் துணைகொண்டு தமிழிசைத் தொண்டுகள் ஆற்றினாள். இவள் தம் இசைத் தொண்டு கண்டு அவள் தாய் அருண்மொழி ஈன்ற ஞான்றினும் பெரிதும் உவந்தனள். (பூங்கொடி 18:1-7) என்று பலபட உரைப்பர்.

நாவலூர் அமுதம், மீனவன், மயில்வாகனர்

நாவலூர் அமுதம், மீனவன், மயில்வாகனர் என்னும் மூன்று மாந்தர்கள் மறைந்து போன இசை நூல்களைக் கண்டறிந்து அதைப் பூங்கொடியிடம் கொடுப்பதை, நாவலூர் அமுதம் என்னும் மூதாட்டி கூத்து, இசை தொடர்பான இருநூல்களைக் கண்டறிந்து விலைக்குப் பெற்று வந்து அதைப் பூங்கொடியிடம் கொடுத்து, இசையும் கூத்தும் தமிழில் இலை எனும் வசைமொழி கூறிவருவோர் மடமை தொலைக்க, இதனைக் கைக்கொள்க என்றனள் (பூங்கொடி.11:107-120)என்றும்

மீனவன் தமிழிசைச் சுவடிகளைக் கண்டறிந்து அதில் உள்ளவற்றை எல்லாம் அறிந்து கூடல் நகரம் முழுவதும் தமிழிசைப்பாடல் ஒலியைப் பரப்பினன். இசையின் இயலெலாம் இசைத்து மகிழ்வுடன் இருந்த பொழுது வடபுலத்தைச் சார்ந்த ஏமகானன் என்பவன் மீனவனின் தமிழிசைப் புலமையைச் செவிமடுத்து அவனைக் காண வந்து மீனவனைப் பாராட்டிவிட்டு தமிழிசையோடு என்னிடம் வடபுலத்திசையும் கற்றுக்கொண்டு இரண்டையும் சேர்த்து நீ பாடினால் உன் புகழ் மேலும் உயரும் என்றான். இதைக் கேட்ட மீனவன்,

> "குயிலின் குரலொடு கோழியின் குரலும்
> இணையின் என்னாம் இந்நாள் வரையும்
> துணைவிழி மூடித் தூங்கிய மாந்தர்
> கண்விழித் தெழுந்து கருத்துடன் தமிழிசைப்
> பண்தொடுத் திசைக்கப் பயிலுங் காலை
> மீட்டும் மற்றோர் இசைபுக விழையின்
> காட்டும் ஆர்வம் கருகிச் சாகும்
> அரும்பிய ஆர்வம் அணிமல ராகி

விரிந்து நறுமணம் வீசுதல் ஒன்றே
என்குறிக் கோள்என எடுத்துரைத் தனனே"
(பூங்கொடி:14:118-127)

என்றும் உரைப்பர். இங்ஙனம் தமிழிசைக்காகப் பாடுபட்ட மீனவன் கொலை செய்யப்படுகிறான். உயிர் போகும் தருவாயிலும் தன்னிடமிருந்த இசைத் தமிழ்ச் சுவடியைக் கலைமகள் நிலையம் சேர்க்கப் பணித்த்பின் உயிர் துறக்கின்றான். அச்சுவடியைப் பெற்ற மலையுறையடிகள் அதைப் பூங்கொடியிடம் கொடுத்து நல்லிசை பரவச் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறார். இதைப் போன்று யாழ்நூல் பெற்ற காதையில், மயில்வாகனர் என்பவர் 14 ஆண்டுகள் நுண்ணிதின் ஆராய்ந்து ஏழிசை யாழின் இயல்திறமும் உணர்ந்து யாழ்நூல உருவாக்கியமை: அந்நூலைப் பூங்கொடியிடம் வழங்குதல்: யாழ்நூல் பெற்ற பூங்கொடி தமிழசைக்கிந்நூல் தற்காப்பாகவும், கடல்சூல் உலகில் இசைக்கோர் அணிகலனாயும் விளங்குவதை அறிந்து அதனை உருவாக்கிய மயில் வாகனரிடமே அதுகுறித்துக் கேட்டல், அவரும் சிற்றிசை,பேரிசை,செயிற்றியம், குணநூல், முற்றிய சயந்தம், முறுவல் என்பன போன்ற சங்கத்திசை நூல் அனைத்தையும் சுட்டி, பண்முறையையும் விளக்கியுரைத்ததோடு சிலப்பதிகாரம் முதல் அருணகிரியாரின் அருள் திருப்புகழ்வரையுள்ள இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள இசைக்குறித்தும் அவற்றின் பண்களின் வகைகள் குறித்தும் எடுத்துரைத்தல் (பூங்கொடி.26.56.160) போன்றவை தமிழிசை காக்க முனைந்த விபுலானந்தர் போன்றோரின் பணிகளை மனத்துக் கொண்டு எழுதப்பட்டவையாகும்.

தமிழிசைப்பள்ளி உருவாக்கம்

மலையுறையடிகள் என்பர் தமிழிசை வளர்ப்பதற்காக தமிழிசைப்பள்ளி ஒன்றை நிறுவினார் எனக் குறிப்பிட்டு அங்ஙனம் நிறுவுதற்குரிய காரணத்தை, "தமிழிசையைக் கற்றுக் கொடுக்கக் கூடிய நிறுவனம் ஒன்றும் இல்லை. இந்நிறுவனம் இருந்தால் பலரும் தமிழிசை கற்பதற்கு வாய்ப்புண்டு. இங்கு கற்பவர்கள் எல்லாத்திக்கிலும் சென்று தமிழிசையைப் பரப்புவர். மேலும் ஈடில்லாத இப்பணி பகைவர் மறைத்த பழந்தமிழ் இசைத்திறன் பகலவன் கதிரொலி பரவுதல் போலப் புத்துயிர் பெற்றுப் புவியெங்கும் பரவி மேம்படும். உளத்தொளி இன்றி ஓங்கியிருட் கிடந்து நொந்திடும் மாந்தர் உய்ந்திடவும் இது உதவும். (பூங்கொடி. 18: 28-36) என்றுரைப்பர். மேலும் தமிழிசைப்

பள்ளியில் பல்வேறு பகுதியைச் சார்ந்த பலரும் சேர்ந்து பயிலத் தொடங்குவதாகவும் அயல்மொழி பேசும் சண்டிலி எனும் பெண் பூங்கொடியிடம் தமிழிசை பயில வருவதாகவும் அவருக்குத் தமிழிசை கற்றுக் கொடுப்பதையும்

"பசிதின வருந்திய பைதன் மாக்கட்கு
நசையொடு பெருஞ்சோறு நல்குதல் என்ன
இசைபயில் பசியால் இரப்போர் தமக்கெலாம்
குாரிகை உவந்த கனியிசை யமுதம்
வாரி வாரி வழங்கினன் பெரிதே
(பூங்கொடி 18: 287-291).

என்று பாடுவர்.

பிறமொழி இசைவிற்பன்னரும் தமிழிசை கற்றமை

தொன்மைமொழி, தன்மொழி என இரண்டிலும் இசைகற்றுத் தேர்ந்த செருக்குடையவளாய் விளங்கிய அயல் மொழி பேசும் சண்டிலி என்னும் பெண் மகள் தமிழிசையைத் தற்செயலாகக் கேட்டு உள்ளமும் உணர்வும் உருகிட இன்ப வெள்ளம் பாயும் வியசினை இதுபோல் இந்நாள் எல்லை யாண்டும் கேட்டிலேன் என்நா சிறிதால் எவ்வனம் புகழ்வேன்? (பூங்கொடி18: 221-225) என்று புகழ்துரைப்பதாகச் சுட்டுதல்,

அறப்போர் நிகழ்த்திய காதையில் முத்தமிழ் மாநாட்டில் கூடிய பன்னாட்டறிஞர்கள் பன்னாட்டு இசையையும் பகுத்துணர்ந்து ஆராய்ந்து தென்னாட்டிசையின் திறத்தினை வியந்து எந்நாட்டிலும் எங்கும் இதுபோல் கண்டதில்லை என்று பாராட்டியதாக உரைத்தல் (பூங்கொடி.29:10-13)

விடுதலைக்காதையில் இயலிசை கூத்தென்னும் என்தமிழ் உரிமை எய்து முன் நான் இறக்க விரும்பவில்லை என்னும் பூங்கொடியில் கூற்று (பூங்கொடி: 31:32-33) ஆகிய அனைத்தும் முடியரசனாரின் தமிழிசை காக்க எழுந்த தன் முனைப்பு உணர்வுகளாகும்.

முடிவுரை

20-ஆம் நூற்றாண்டில் இசைத்தமிழ் காக்க எழுந்த இன்தமிழ்ப் பாவலர் முடியரசனார் ஆவர். தமிழக அரங்குகளில் தமிழிசை பாடப்பட வேண்டும் என்பதில் முனைப்புடன் இருந்த முடியரசனார் இசை

அரங்குகளில் பாடுவதற்கென்றே காவியப்பாவை என்னும் நூலைப் படைத்தார். தமது படைப்பு முழுவதும் ஒல்லும் வகையால் இருநூற்றுக்கும் மேற்பட்ட இசைப்பாடல்களைப் படைத்ததோடு தமிழிசை காக்க பூங்கொடி என்னும் காப்பியத்தையும் படைத்தளித்தார்.

தற்காலத்தில் தமிழிசை பாடுவதற்கு தமிழர்களிடையே எதிர்ப்புள்ளமையைக் கண்டு அவர்தம் மடமையைப் போக்க பண்டைத் தமிழிசையின் சிறப்பு, மேன்மை ஆகியவற்றைப் பூங்கொடியில் எடுத்துரைத்ததோடு தமிழிசைப்பள்ளி தொடங்க வேண்டியதன் தேவை, தமிழர்கள் தமிழிசை காக்கச் சிறை செல்லவும், உயிர் விடவும் தயங்கமாட்டார் என உரைப்பவை அனைத்தும் முடியரசனாரின் தமிழிசைப் பற்றையும் தமிழிசை காக்க எழுந்த தன்மானப் பாவலராக அவர் திகழ்ந்ததையும் புலப்படுத்தும். மேலும் பூங்கொடியில் தமிழிசைகாக்க முற்பட்ட மாந்தர்களான நாவலூர் அமுதம் கொடுமுடி எழிலி, மயில்வாகனர் போன்றோர் நிசத்தில் தமிழிசைகாக்க முற்பட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், கொடுமுடி கே.பி. சுந்தராம்பாள், யாழ் நூல் தந்த விபுலானந்தர் ஆகியோரை மனதில் கொண்டு படைத்ததாகும். இங்ஙனம் தாம் மட்டுமன்றித் தம் காலத்தில் தமிழிசை காக்க முற்பட்ட அனைவரையும் தம் படைப்பில் சுட்டியுள்ளமை தமிழிசை காப்புப் பணியில் முடியரசனாரின் வெளிப்பாட்டுணர்வை நன்கு புலப்படுத்தும்.

கவியரசர் முடியரசன் படைப்புகளில் சமூகச்சிந்தனை

ந.செந்தில் *

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃ்திலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று (குறள் : 236)

என்ற பொய்யாமொழிப்புலவர் மெய்மொழிகிணங்க மண்ணில் வாழ்வாங்கு வாழ்ந்து, வள்ளுவன் வாய்மொழியை உலகிற்கு உணர்த்தி மறைந்தவர் கவிஞர் முடியரசன் அவர்கள். இவர் தன் வாழ்நாளில் பெரும்பங்கை தமிழுக்காகவும், தமிழர்களுக்காகவும், தன் எழுத்தின் மூலம் நிலைநிறுத்தி இலக்கியத்தின் அனைத்துப் பரிமாணங்களிலும் தனது கொள்கை குன்றாநெறியோடு கூடிய தடத்தினை ஆழமாகப் பதித்து தமிழுக்குப் புதியதோர் அணியினைச் சேர்த்தவர் வீறுகவியரசர் முடியரசன் என்று சொன்னால் அது மிகையல்ல!!.

“அகமென்றும் புறமென்றும் வாழ்க்கையினை
அழகாகவகுத்துக் கொண்டு
அன்றுதொட்டுவாழ்ந்துவருகின்ற இளம்
அருமைமிகுநம்தமிழ் இனம்தான”

என்று அழகாக எடுத்துரைப்பார் நமது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், அவரின் வாக்கிற்கிணங்க தமிழ்ச் சமுதாயத்தை நன்கு அறிந்து தமிழ் உலகிற்காக வாழ்ந்தவர் கவியரசர் முடியரசன் அவர்கள் எனவேதான் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இவரின் நூல்களைநாட்டுடைமையாக்கி இவருக்குப் பெருமை சேர்த்தார். நமது இனமானப் பேராசிரியர் பெருந்தகை. அன்பழகன் அவர்கள் கூறுகின்றபோது “கவியரசர் முடியரசன்”கவிதை நூல்கள் ஒவ்வொன்றும் தமிழுக்குஆக்கம் செய்யும் செம்மொழிச் செல்வமாகும்” என்று புகழ்ந்துரைக்கின்றார். மொழிஞாயிறு தேவநேய பாவாணர் அவர்களால்,

வேத்தவைப் பாவலரும் வேற்றுமொழிகலக்குந்
தீத்திறக் காலைதெளிமருந்தே - மூத்த
முடியரசரின் மொழிவனப்புச் செய்யும்
முடியரசன் செய்யுண் முறை

* வழக்கறிஞர் , மாநில இலக்கிய அணிப் புரவலர், திராவிட முன்னேற்றக் கழகம்.

என்று வாழ்த்துகளை வழங்கியுள்ளார். இத்தனை புகழுக்கும் சொந்தக்காரராகிய கவியரசர் முடியரசனார் அவர்களைப் பற்றி **'கவியரசர் முடியரசன் படைப்புகளில் சமூகச்சிந்தனை"** என்ற தலைப்பில் நான் எடுத்துரைப்பது என்னவெனில் தமிழ் மொழிக்காகவும், தமிழ் இன எழுச்சிக்கும் வளர்ச்சிக்கு இவரது படைப்புகள் எத்தகைய சமூகசீர்த்திருத்தக் கோட்பாட்டை நிலைநிறுத்தியது என்பதை நாடறியச் செய்வதே.

இவர்தம் படைப்புகளாகிய முடியரசன் கவிதைகள், காவியப் பாவை, கவியரங்கில் முடியரசன், பாடுங்குயில், நெஞ்சுபொறுக்கவில்லையே, மனிதனைத் தேடுகிறேன், தமிழ் முழக்கம், நெஞ்சிற் பூத்தவை, ஞாயிறும் திங்களும், வள்ளுவர் கோட்டம், புதியதொரு விதிசெய்வோம், தாய்மொழிகாப்போம், மணிதரைக் கண்டுகொண்டேன், என்ற கவிதை நூல்களும், பூங்கொடி, வீரகாவியம், ஊன்றுகோல், போன்ற காப்பியங்களும், இளம்பெருவழுதி நாடகம் போன்றவைகளும் எக்கோலின் காதல் என்ற சிறுகதைத் தொகுப்பு, அன்புள்ளபாண்டியனுக்கும், அன்புள்ள இளவரசனுக்கும் என்ற கடித இலக்கியத்தையும், தமிழ் இலக்கணம், பாடுங்குயில்கள், சீர்திருத்தச் செம்மல் வை.சு.சண்முகனார், எப்படிவளரும் தமிழ் போன்ற கட்டுரைத் தொகுப்புகளும் பாட்டுப்பறவையின் வாழ்கைப்பயணம் என்ற தன் வரலாற்று நூறும் படைத்து இலக்கியத்துள் புதுமை படைத்தல்.

இவைகள் அத்தனை நூல்களின் வாயிலாக ஆசிரியர் பெருந்தகை அவர்கள் எடுத்துரைக்கும் நெறிமுறைகோட்பாட்டை ஆய்ந்தோமேயானால் தமிழகக் கலாச்சாரம் பண்பாட்டை ஒட்டிய கருத்தாக்கங்களையும், தான் எண்ணிய சீர்மிகு மொழிக் கோட்பாட்டையும் எளிமையான முறையில் இன்றைய மாணவர் சமுதாயம் எளிதாக புரிந்துக்கொள்ளும் விதத்தில் மனதில் கொண்டு நன்னெறியோடும், நேர்கொண்ட பார்வையோடும் சீரிய நடைபோட தன் எழில்மிகு வண்ணத்தமிழில் சீர்மிகு கருத்துக்களை வருங்காலச் சந்ததியினருக்கு படைத்திருக்கின்றார் என்று சொன்னால் அதுமிகையல்ல.

இவர், தமிழ்ச் சமுதாயம் எப்படிவாழ்வின் ஒழுக்க நெறிகளோடு கலாச்சாரம் பண்பாட்டை ஒட்டி தனிமணித வாழ்க்கை சிறப்புற அமைய வேண்டும் என்று எண்ணினாரோ, அதையே தன் சொந்த வாழ்விலும், எத்தகைய சூழ்நிலையிலும், நெறிபிறழாமல் வாழ்ந்துக் காட்டிய பெருமை வீறுகவியரசர் முடியரசனார் பெருந்தகையைச் சாரும். கொள்கை வழி கலப்புத் திருமணம். கொள்கை குன்றா நெஞ்சுறுதி தன்னலம் கருதாப்

பொதுவாழ்வு இப்படி இவரின் பெருமைகளையும் இவர் விட்டுச் சென்ற நன்னெறியையும் சொல்லிக்கொண்டே போகலாம் - மொத்தத்தில் இவரே ஒரு நடமாடும் நன்னெறிப் புத்தகமாய் விளங்கினார் என்று சொன்னால் அதுமிகையல்ல.

இவர் படைத்தருளிய ஒவ்வொரு படைப்பும் தமிழ்ச் சமுதாயத்திற்கு முத்தாய்ப்பான கருத்தோவியமாய் அமைந்தது என்று சொன்னால் காலத்தால் போற்றப்பட வேண்டிய ஒன்று இவரது படைப்புக்கள் இன்று பள்ளிகளிலும் கல்லூரிகளிலும், மாணவர்களுக்கு நன்னெறி கற்பிக்கும் நற்றமிழ்ச் சான்றாய் அமைந்துள்ளன. இவர் ‘இலக்கியத்தில் படிப்போர் நெஞ்சத்திற்கு தமிழின்பால் அமுதூட்டியவர்’’ இவர் “இலக்கணப் பகுப்பாய்வை எளிமையாய் முழுமையாக்கினார்:. இத்தகைய பெருமைகளையும் உள்ளடக்கி தமிழுக்காகவே வாழ்ந்தவர். தன் கடைசிகாலம் வரைதமிழ்ச் சமுதாயத்திற்காகவும் தமிழ் மொழிக்காகவும் அரும்பணியாற்றியுள்ளார்.

இத்தகையப் பெருந்தகைதன் படைப்புகள் மூலம்,தமிழ் மொழியும், தமிழர் வாழ்வும் எத்தகைய உயரத்தை எட்டவேண்டும் என்று அனுதினமும் எண்ணினாரோ அத்தகைய நிலையில் அவர் விட்டுச் சென்ற சமூகச்சீர்திருத்தக் கோட்பாடுகள் கூடிய நன்னெறி அத்தனையும் பின்பற்றி காத்தோம் என்று சொன்னால் “தமிழர்கள் வாழ்வு வளம் பெறும்” “தமிழ்ச் சமுதாயம் நலம் பெறும்” என்று கூறிகவியரசர் முடியரசன் பெருந்தகை அவர்களின் நிலையைப் போற்றி அவரின் மொழியுணர்வையும் நன்னெறியையும் காப்போம்.

கவிஞர் முடியரசனின் தமிழ்மொழிப்பற்று

சு.சோனைமுத்து *

முன்னுரை

உலகப் பெருமொழிகளுக்கு இணையாக, ஒப்பற்ற இலக்கண இலக்கியங்களைக் கொண்டிருப்பது தமிழ்மொழியாகும். தனிப்பெருஞ்சிறப்புடைய தமிழ் மொழியில், இலக்கணங்களும், இலக்கியங்களும் பெரும்பரப்பைக் கொண்டுள்ளன. தமிழின் சிறப்புப் பெட்டகங்களாகத் தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும் திகழ்கின்றன. தமிழ் மரபு, தொன்மை, மொழி போன்றவற்றின் சிறப்பை எடுத்துரைக்கும் வகையில் இந்நூல்கள் திகழ்கின்றன. குறிப்பாகத் தமிழ் மொழியின் சிறப்பினை எடுத்துரைக்கும் வகையில் தொல்காப்பியத்தில், 'தமிழ்' என்ற சொல்லாட்சி குறித்த பதிவுகள் காணப்படுகின்றன.

"தமிழென் கிளவியும்" (தொல். நூ.385)
"செந்தமிழ் சேர்ந்த" (தொல் .நூ.883)

எனும் நூற்பா அடிகளை இக்கருத்திற்குச் சான்றுகளாகச் சுட்டலாம். களப்பிரர்களின் வருகையால் தமிழ்மொழி அழியும் நிலைக்குச் சென்ற போது தமிழுக்கு மீண்டும் பக்தி இலக்கியங்களே புத்துயிர் தந்தன.

திராவிட மொழிக் குடும்பங்களில் தமிழே முதன்மையான மொழியாகும். காலத்தால் அழிக்க முடியாத தனிப்பெரும் மொழியாகத் திகழ்ந்த தமிழ் மொழி, அந்நிய மொழிகளிகளின் வருகையால் கெடத்தொடங்கியது. பிற மொழித் திணிப்பைத் தொடர்ந்து தமிழகத்தில் பல மொழிப் போராட்டங்கள் தோன்றலாயின.

இந்தித் திணிப்பிலிருந்து தமிழ்மொழியைக் காப்பதனைத் தமிழ்ச் சான்றோர்களும் கவிஞர்களும் தமது தலையாய கடமையாகக் கொண்டு அவற்றை தங்களின் படைப்புகளிள் வாயிலாக வெளிப்படுத்தி உள்ளனர். இந்தித் திணிப்பை எதிர்த்துக் கவிபாடிய கவிஞர்களுள் முடியரசன் முதன்மையானவர். அவரின் மொழிப் பற்றை எடுத்துரைப்பது இவ் ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

* முனைவர் பட்ட ஆய்வாளர், மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி, சிவகங்கை.

ஒரு சமூகத்தின் கட்டுக்கோப்பினைத் தன்னுள் இருத்தி வைத்துக் கொள்ளுகின்ற மொழியின் வழியாகவே, ஒரு சமூகத்தின் பண்பாட்டு முறைமைகள், அடுத்த தலைமுறையினருக்குக் கடத்தப்படுகின்றன. ஒரு மொழி என்பது ஓர் இனத்தின் அடையாளமாகத் திகழ்கிறது. ஈராயிரம் ஆண்டுகள் தொன்மை சான்ற தமிழ்மொழி இன்றும் சீரிளமையோடு நடைபோடுவதற்கு, தமிழில் இடம்பெற்றுள்ள பல்வகை இலக்கண, இலக்கியச் செழுமைகளே காரணம் எனலாம்.

“பேசப்படுவதும் கேட்கப்படுவதுமே உண்மையான மொழி ஆயினும் எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் அடுத்தநிலையில் வைத்துக் கருதப்படும் மொழியாகும். இவைகளே அன்றி வேறுவகை மொழிநிலைகளும் உண்டு. அவை எண்ணப்படுவது, நினைக்கப்படுவது கனவு காணப்படுவது ஆகியவைகளும் மொழியே ஆகும்” என மு.வ. குறிப்பிடுகின்றார். பாவாணரும் “ஒரு வகுப்பார் அல்லது நாட்டார் தம் கருத்தைப் பிறருக்குப் புலப்படுத்துதற்கு ஒரு கருவியாக கொள்ளும் ஒலித்தொகுதியே ‘மொழி’ என்பர். தமிழ் என்றால் ‘அமிழ்தம்’ என்று பொருள்படும் “காதலி ஒருத்தி தன் காதலனோடு கொஞ்சிப் பேசும் மொழிகூடத் தமிழ் மொழியாகத் தான் இருக்க வேண்டும்” என்கிறார் பாரதிதாசன்.

தமிழின் சிறப்பு

பாண்டிய நாட்டு மன்னர்கள் முதல் இக்கால பாவேந்தர்கள் வரை தமிழ் வளரச் செய்தவர்கள்

“பாண்டியநன் னாட்டகத்துச் சங்கங் கண்டு
பாவேந்தர் கோவேந்தர் ஒன்று கூடி
ஈண்டுபுகழ்ந்த தமிழாய்ந்து மொழியைப் பேணி
இலக்கியங்கள் படைத்து முன் தமிழ வாழ்வு
-கவியரங்கில் முடியரசன் படைப்புகள் (ப-8)

இன்பத்தமிழைக் கற்றால் கவலையும் நோயும் பறந்து போகும் இது பொய்யில்லை உண்மை என்கிறார் கவிஞர்.

“காதலியே கேலியில்லை தமிழ்சு வைத்தால்
குவலைஎலாம் பறக்குதடி தளர்ச்சி நோயும்

ஏதடி என் இன்னமுதே என்றன் உள்ளம்
இன்பத்துள் மூழ்குதடி என்று சொன்னேன்
-முடியரசன் கவிதைகள் ப-123

என்று தமிழை புகழ்ந்து பாடியுள்ளார். பேருலகமே ஒருலகம் என உலகமக்களை ஒன்றிணைக்கும் மொழி நம் தமிழ் மொழியே

"பேருலக வெறியர்க்குப் புத்திவர நெறிகாட்டி
ஓருலக வழிகாட்டும் உயர்மொழிதான் எங்கள் தமிழ்"
-கவியரங்கில் முடியரசன் (ப-44)

காலத்தைக் கடந்து கற்போர் நெஞ்சில் இன்றும் நிலைத்து நிற்பது தமிழ். கடல் கடந்து உலகமொழிகளை வென்றமொழி இலக்கண இலக்கிய வளம் கொண்ட முத்தமிழ் மொழி என்கிறார்.

"காலத்தைக் கடந்தமொழி கற்போர் நெஞ்சைக்
கவருமொழி தரை கடந்து கடல் கடந்து
ஞாலத்தை வென்றமொழி என்றுங் குன்றா
நாவன்மை படைத்தமொழி இலக்க ணத்தின்
கோலத்தை முழுமைபெற வடித்துக் காட்டும்
குறைவில்லா அறிவுமொழி இலக்கி யத்தின்
மூலத்தைக் கண்டமொழி சுவைகள் விஞ்சும்
மும்மைமொழி அன்புமொழி தமிழேயாகும்"-
தமிழ்மொழிக்காப்போம்(ப 29)

என்று போற்றிப் பாடியுள்ளார். 'செந்தமிழ்' என்பதற்கான பெயர்க்காரணத்தை முடியரசன்,

"எண்ணி லடங்காத எத்தனையோ நன்மொழிகள்
மண்ணிற் பிறந்து வளமையுறக் காலத்தே
தன்வளமை காட்டித் தனிப்பெருமை கொண்டிலங்கிச்
சொன்மரபு மாறாமல் தூய நிலைநாட்டி
வாழ்க்கைப் பெருநிலத்தை வளமாக்கிச் செம்மைதனைச்
சேர்க்கப் பொருள் நூலைச் செப்பிப் பெருமையோடு
செப்பமுறச் செய்தமையால் செந்தமிழென் றோதினாரோ?
(தமிழ்மொழிக்காப்போம்(ப 95)

எனத் தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தி எதிர்ப்பு

கட்டாய இந்தித் திணிப்பை எதிர்த்தும், தமிழ்மொழியின் சிறப்புகளைப் போற்றியும் கவிஞர் முடியரசன் பல பாடல்கள் புனைந்துள்ளார். இந்தியாவில் இந்திக்கே முதன்மை என்றால் இந்நாட்டை இரண்டாக பிரிக்கவும் அஞ்ச மாட்டோம்.இந்திய நாட்டின் சுதந்திரம் இந்திமொழிக்கே என்றால் தமிழ் மொழியைக் காக்கத் தயங்கமாட்டோம். என்பதனை

" இந்தியத்தில் ஒருமொழிக்கே ஏற்றமெனில்
இரண்டுபடும் இந்த நாடு
விந்தியத்தின் வடபுலமே விடுதலையின்
முந்தியெழுந் தார்ப்பரிக்க முயலாதோ
உரிமைபெற? அடிமை யென்றால்
வந்தெதிர்த்து விடுதலைக்கு வழிவகுக்கும்
நாளைவரும் வயவர் கூட்டம்.

தாய்மொழிக்காப்போம்(ப-37)

என்ற கவிதையின் மூலம் அறியமுடிகிறது. உங்கள் மொழி உங்களுக்குப் பெரிது என எண்ணுவது உங்கள் கடமை எனில் எங்கள் தமிழைக்காப்பது எங்கள் கடமை என்கிறார்.

"உங்கள் தாய்மொழி இந்தியாம் -நீர்
ஓம்பிப் போற்றுதல் நன்றியாம்
எங்கள் தாய்மொழி செந்தமிழ் - அதை
ஏத்திக் காத்திடல் எம்கடன்"

-தாய்மொழிக்காப்போம் (ப-39)

வந்த மொழி இந்தி மொழி நாடாளும் எனில் தமிழ் மொழிப் பற்றுள்ள யாவரும் வாழ்வதிலே யாது பயன். தமிழர்கள் சமயம்,சாதி,என்ற பிரிவினைவிடுத்து மொழியைக் காக்க வாமகனே என அறைக்கூவல் விடுகிறார் கவிஞர்.

"வந்தமொழி நாடாள வாய்த்த தமிழ் ப்டேக
வாழ்வதிலே யாதுபலன்?வாளேந்தி வாமகனே
ஏந்தமதம் எக்கட்சி என்றெதுவும் பாராமல்
எமதுதமிழ் எமதுதமிழ் என்றோடி வாவென்று"

-தாய்மொழிக்காப்போம்(ப-43)

என்று தாய்மொழி காக்கத் தமிழருக்கு அழைப்பு விடுக்கின்றார்.

மொழிப்போர் ஈகியர்

பிறந்தவர்கள் யாவரும் இறப்பது உறுதி ஆயினும் இந்தி மொழியைத் திணிக்க எண்ணும் மாந்தருக்கு எச்சரிக்கையாக வீர உள்ளம் கொண்ட சின்னச்சாமி தன்னுடைய உடல்மேல் எரியூட்டி வெந்து நின்றதைப் பாடுகின்றார்.

> "பிறப்போர்தாம் இறப்பதுவே இயற்கை என்ற
> பேருண்மை உணர்ந்தொருவன் எரியை யூட்டி
> வரப்போகும் இந்திக்கோர் செவ்வி ளக்காய்
> மறக்கோலங் கொண்டுடலம் வெந்து நின்றான்
> அறப்போரில் நிற்பவர்க்கே சின்னம் ஆனான்"
>
> -தாய்மொழிக்காப்போம் (ப-27)

> "உங்கள் தாய்மொழி இந்தியாம்-நீர்
> ஓம்பிப் போற்றுதல் நன்றியாம்
> தாய்மொழி செந்தமிழ் -அதை
> எங்கள் ஏத்திக் காத்திடல் எம்கடன்"
>
> -தாய்மொழிக்காப்போம் (ப-39)

என்று தம் எண்ணங்களிலும் எழுத்துக்களிலும் மொழிப்பற்று கொண்ட கவிஞர் அதனை இடைவிடாது தன்னுடைய கவிதைகளில் பாடிப் போற்றுகின்றார். மொழிக்காக தன் இன்னுயிர் தந்து தமிழர்கள் வணங்குகின்ற சாமியாக சின்னச்சாமி இருக்கின்றார் என்பதை இப்பாடலின் வழி அறிய முடிகிறது.

முடிவுரை

தாய்மொழியின் மீது பற்றுக் கொண்ட முடியரசனார், தன் கவிதைகளின் வாயிலாக, சமூகத்திற்கு சொல்ல வேண்டியதைக் கடமையாக எண்ணி மொழிபற்று கொண்டு இந்தியை முழுமையாக எதிர்த்தும் பாடியுள்ளமையை இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகின்றது.

முடியரசனாரின் 'தாய்மொழி காப்போம்' நூலில் தமிழுணர்ச்சி - ஓர் ஆய்வு

தகடூர் தமிழ்க்கதிர் *

முன்னுரை:

பாரதிதாசன் பரம்பரையில் கவியரசர் முடியரசன் வீறு பெற்ற தமிழ் விடுதலைக் கவிஞர். அவரது குரல் தமிழ் நிலத்தில் விடியல் உணர்வைத் தந்தது. வீறு பெறச் செய்தது. அவ்வகையில் வீறு பெற்றவர்களில் நானும் ஒருவன். எனது கவிதைகளில் அவரையும், அவரது கவிதையில் என்னுடைய உணர்வும் பிரதிபலிப்பதைக் காண முடிந்தது. எனவே, அவரது நூல்களில் எனது உணர்வுகள் கண்டவழி 'தாய்மொழி காப்போம்' நூலில் அவரது தமிழுணர்ச்சியைச் சிறிது காண்போம்.

1. தாய்மொழி

"செந்தமிழே! உயிரே! நறுந்தேனே!
செயலினை மூச்சினை உனக்களித்தேனே! –(1)

என்று பாவேந்தர் பாரதிதாசனார் தமது உயிரை தமிழாகக் காண காரணம் தாய்மொழி மற்ற மொழியிலும் உயர்ந்ததாக காணப்பட்டதாலேயே ஆகும். செயலையும் மூச்சையும் தமிழுக்கே அளித்த பெருமைக்குக் காரணம் தமிழின் அமிழ்தத் தன்மையே!

2. தமிழுணர்ச்சி

உயிரினும் மேலான தமிழைக் காத்தலே தமிழுணர்ச்சி எனலாம். அந்த தமிழுணர்ச்சி பாரதிதாசனார்க்கும் முன் பாரதியாரால் ஒலித்தது. இது உலகின் குரலாகவும் காண முடிந்தது.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்-(2)

என்று பாரதி பாடி வழிகாட்டினார். அந்த வழியே பாரதிதாசன் பரம்பரையாக வீறு கொண்டு தமிழுணர்ச்சி வழங்கியவர் முடியரசன் ஆவார்.

---

* ஆசிரியர், வெண்பா விளக்கு சிற்றிதழ், கிருட்டிணகிரி.

3. முடியரசன் அறிமுகம்

முடியரசன் அவர்களின் இயற்பெயர் துரைராசு என்பதாகும். அவரது பெற்றோர் சுப்பராயலு-சீதாலெட்சுமி ஆவார். 07.10.1920-ல் பெரியகுளத்தில் பிறந்தவர். இவர் வாழ்ந்த ஊரான காரைக்குடியில் 3.12.1998இல் மறைந்தார். இருபத்தைந்துக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்தவர், கவியரசர் விருது பெற்ற இவர் 'என் மூத்த வழிதோன்றல் முடியரசனே!' என பாரதிதாசன் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

4. முடியரசனின் தாய்மொழி காப்போம் நூலில் தமிழுணர்ச்சி ஓர் ஆய்வு

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு" – (3)

என்று பாடிய பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பரம்பரையில் மூத்த கவிஞர் என்ற சிறப்பு பெற்ற கவியரசர் முடியரசன் அவர்கள் சிறந்த தமிழுணர்ச்சி கொண்டிருந்தார். இருபத்தைந்து நூல்கள் படைத்த முடியரசன் அவர்களின் 'தாய்மொழிக் காப்போம்!' நூல் எண்ணற்றோரின் பாராட்டைப் பெற்றது. இந்நூலில் அவரது தமிழுணர்ச்சி பற்றி இனி காண்போம்.

"முத்தமிழே உனை எப்பகை ஆகினும்
முற்றிட முன்வருமேல்
எப்படை மோதினும் அப்படை யாவையும்
எற்றி முருக்கிடுவேன் - (4)

என இந்நூல் தொடர்கிறது.

1. மொழிச் சிறப்பு

"தமிழென்று சொல்லடா வாயெலாம் இனிக்கும்
தமிழுக்குப் புதுத்துறை நாளும் பிறக்கும் - (5)

என தமிழின் சிறப்பை நான் பாடினேன். இத்தகைய மொழிச்சிறப்பை எனக்கு முன்னே பாடிய முடியரசனார்,

"பிறந்தநிலம் ஒன்றுண்டு வணங்கல் வேண்டும்,
பேசுமொழி ஒன்றுண்டு போற்றல் வேண்டும்

சிறந்தபொருள் இவற்றின்மேல் ஒன்றும் இல்லை
சிந்தித்தே இவைகாக்க முனைவோம் வாரீர்!"

என தமிழ் நிகரற்ற சிறந்த பொருள் எனக் கூறுகிறார். –(6)

"பாடிக்கொண் டேயிருப்பேன்-என்
பைந்தமிழைச் செந்தமிழை நான்
ஓடிக்கொண்டே யிருக்கும் ஊறுஞ்செங் குருதி
ஓடா துறைந்தே ஓய்ந்திடும் நாள்வரை – (7)

என செம்மாந்து தமிழைப் போற்றுகிறார் முடியரசனார். மேலும் தமிழின் சிறப்பை,

"உலகினில் முதன்முதல் நிலவிய மொழியெனும்
உரைபெறுந் திருமகளாம்
உயர்தனி மொழியென அயலவர் புகன்றிட
ஒளிதரு செம்மகளாம்
அலைபல எதிரினும் நிலைபெறும் கலைமகள்
அமுதெனும் மொழியினளாம்
அழகிய கழகமொடு உலவிய தமிழ்மகள்
அணிநலம் பரந்திடவே" – (8)

எனப் போற்றுகிறார். இவரது வாழ்வு பற்றி கூறும்போது,

"நெருப்புபுனல் செல்கறையான் வாய்கள் தப்பி
நின்றொளிரும் ஏடுடையாய் அம்மா நின்றன்
சிரித்தமுகம் காண்பதற்கே என்றும் வாழ்வின்
சிரியன்னெக் காப்பதுநின் கடமை யாகும்! – (9)

என்கிறார்.

2. மொழிப் பிறழ்ச்சி

சிறந்த மொழியும் பணி, பதவி, வேற்றுமொழி மோகம், அறியாமை என மொழிப் பிறழ்ச்சி ஏற்பட நேரிடுகிறது. இக்கால் அறிவில் சிறந்தோர் குரல் கொடுக்க அப்பிறழ்ச்சி போக்கடிக்கப்பட்டு மீண்டும் மொழி உயிர் பெறுகிறது. இவ்வகையில் முடியரசனார்,

"உலகத்து முதன்மொழியாம் தமிழைத் தாங்கள்
உயிர்மூச்சாக் கொண்டிலங்கும் தமிழர் நாட்டிற்
கலகத்தை உருவாக்கும் வெறியர் கூடிக்
கடுகளவுந் தகுதியிலா இந்தி தன்னைப்
பலகட்டுக் கதை கூறிப் புகுத்த விட்டார்
படையெடுத்தார், தடியெடுத்தார், பயனே இல்லை!"– (10)

என இந்தி மொழியின் படையெடுப்பை நசுக்கிப் போடுகிறார். கவியரசர் முடியரசனார் மேலும்,

"வஞ்சமனம் படைத்தவர்தாம் வேற்று நாட்டு
வரிவடிவைப் புகுத்துதற்கு முயலு கின்றார்" – (11)

எனத் தொடர்பு மொழியாம் ஆங்கிலத்தை அனைத்திலும் பயன்படுத்தி தமிழை அழிக்க முயல்வதை முடியரசன் அவர்கள் எதிர்க்கிறார். மேலும்,

"உயர்தனிச் செம்மொழிஎன் றேத்திடும் மொழியில்
அயன்மொழிச் சொல்லும் ஆங்கில எழுத்தும்
பெயவிழை வேறிவன் பேசினர் எழுதினர்
மயலுறு தமிழனும் மயங்கினன் ஒப்பினன்,
உறங்கும் தமிழ்மகன் உணர்ச்சிதான் என்னே!" – (12)

என்கிறார். மற்றும்,

"ஆகாச வாணிக்குக் கால்க ளான
அரியதமிழ் வானொலியைத் திருப்பி விட்டால்
வேகாத மொழிகளிலே எழுதி வைத்த
விளங்காத பாடல்களே செவியில் வீழும்" – (13)

என்கிறார். மேலும்,

"எவர்படைத்தார் கற்சிலையை? கோவில் தம்மை
எவரெடுத்தார்? தமிழ்புகுத்தத் தடையா? அந்தத்
தவறிழைத்தார் யாரிங்கே? ஆண்ட வர்க்குத்
தமிழென்றால் நச்சுமிழும் எட்டிக் காயா? – (14)

என்கிறார் கவியரசர் முடியரசனார்.

3. மொழிப் போர்

மொழி மனிதனின் விழி, உலகைப் பார்க்கும் உன்னத விழியே தமிழ்மொழி. எனவே, விழியைப் பாதுகாக்க வேண்டிய போர் மண்ணிடையே நிகழ்ந்து வருகிறது. உலகாண்ட தமிழினம் இன்று ஒரு மாநில மொழியாக சுருங்கி விட்டது. அதுவும் மாநிலத்திலும தமிழ்மொழி பல்வேறு இடையூறுகளைப் பெற்று வருகிறது. இதை உணர்ந்த பாவேந்தர் பாரதிதாசனார், 'தமிழியக்கம்' என்ற நூலை எழுதினார். அவர் வழிவந்த கவியரசர் முடியரசனார் அவர்களோ 'தமிழ்மொழி காப்போம்' என்ற நூலைப் படைத்துள்ளார். அதில்,

"கூத்தும் இசையுங் குறிக்கின்ற நூலெங்கே?
ஏத்தும் இசைநூலில் ஏனையவை தாமெங்கே?
பாழுங் கடல்கோளும் பாவிப் பகைக்குலமும்
சூழும் கொடுவிசையால் சொல்லரிய ஏடுகள்தாம்
ஆடிப் பெருக்கிவிட்டோம் அந்தோ நெருப்பிலிட்டோம்,
வேடிக்கை மாந்தர் விளையாட்டை என்னென்போம்!
அஞ்சியஞ்சிச் சாகாமல் ஆளடிமை யாகாமல்
எஞ்சியவை காப்போம் இனி" – (15)

என்கிறார். வடவரின் மொழிக் கொள்கையை எதிர்த்து,

"தொன்றுதொட்டு தமிழ்மொழியின் எழுத்துக்கெல்லாம்
தூயவரி வடிவுண்டு தெளிவும் உண்டு
கொன்றுவிட்டுத் தமிழெழுத்தை அவர்தம் தேவ
நாகரியாம் குறுக்கெழுத்தைக் கொள்வ தற்கே
நின்றுவிட்டார் வடபுலத்தார், ஒருமைப் பாட்டை
நிலைநிறுத்தும் நோக்கமென ஊறு கின்றார்" – (16)

என்று கூறுகிறார். மேலும் வந்த மொழிகளை,

"வந்த மொழிக்குயர் வாழ்வு - நின்
வண்டமிழ் வாழ்வுக்கு வந்தது தாழ்வு!
வெந்தது சோறெனத் தின்று - பாரில்
வீழ்வதும் தாழ்வதும் நின்தொழி லன்று" – (17)

என்று சீறுகிறார். எனினும்,

**"தாய்மொழியைக் காக்களனில் உயிர்கள் நல்கும்
தாலமுத்து நடராசன் இன்றும் உண்டு" – (18)** என்கிறார்.

4. அரசின் செயல் :

அரசு என்றும் தமிழ்மொழியின் சிறப்பைக் காக்க வேண்டும். எல்லா துறையிலும் ஏற்றமிக்க தமிழ்மொழியை வளர்க்க வேண்டும். அரசு பதவி வகிப்போரும் பதவிபோயினும் தமிழ் காக்க வேண்டும்.

**"தேர்தலிலே நாற்காலி பற்று தற்கே
இவ்வண்ணம் தமிழ்தமிழென் றியம்பு கின்றார்!
என்றுரைப்பர் நாற்காலிப் புத்தி கொண்டார்" – (19)**

என்று கவியரசர் முடியரசனார் கூறுகிறார். மேலும்,

**"ஆன்றவிந்த கொள்கையினர் தமிழ்மொழிக்கே
அரசுரிமை வேண்டியதும் குற்றம் ஆமோ?" – (20)** என்கிறார்.

முடிவுரை :

கவியரசர் முடியரசனாரின் தமிழுணர்வை தாய்மொழிக் காப்போம் நூலில் கண்டோம். அவரது உணர்வு போற்றப்பட வேண்டிய நல்லுணர்வாகும். அவர் ஏற்போம் தமிழ் காப்போம், அவர் பாடலோடு இக்கட்டுரையை நினைவு செய்வோம்.

அடிக்குறிப்புகள் :

1). பாரதிதாசன் பாடல்கள்,
2). பாரதியார் பாடல்கள்,
3). பாரதிதாசன் பாடல்கள்,
4). கவியரசர் முடியரசன் கவிதைகள்-பக்.365,
5). தகடூர் தமிழ்க்கதிர் மழைஒலி பக்.27,

முடியரசன் கவிதைகள் :

6). பக்.366, 7). பக்.388, 8). பக்.387, 9). பக்.365, 10).பக்.368, 11).பக்.366, 12).பக்.376, 13).பக்.375, 14).பக்.374, 15).பக்.365, 16).பக்.369, 17).பக்.374, 18).பக்.369, 19).பக்.366, 20).பக்.366.

வெப்பம் கொப்பளிக்கும் கவிதைகள்

கவிஞர் சென்னிமலை தண்டபாணி *

தமிழ்க்கவிதை வெளியில் தன்னிகரற்றக் கவிதைப் பறவையாய்ப் பறந்தவர் வீறுகவியரசர் முடியரசனார் என்பதுவிட்டில் பூச்சியின் வெளிச்சமன்று. மாறாமல் சுழலும் மாணிக்கச் செம்பரிதி போல் ஒளிவீசும் உண்மை. தமிழின் மேன்மையை, தமிழினத்தின் மாண்பை தன்எழுத்துகளின் வழி உலகத்தார் செவிகளில் உரக்கச் சொன்னவர். ஏற்றத்தாழ்வற்ற சமுதாயம், போற்றத்தக்க வகையில் மேலெழவேண்டுமென்றால் அங்கே மூடநம்பிக்கைகள் முளைவிடக்கூடாது. சாதி, மதவேற்றுமைகள் சாளரத்தைத் திறக்கக்கூடாது. முகாகவி பாரதியும் புரட்சிக்கவிஞரும் போட்டு வைத்த தடத்தில் தன்பாட்டுப் பயணத்தைத் தொடர்ந்த கவிஞர், தன்மானம் தலைகவிழாத இனமானக் கவிஞராக வாழ்நாளெல்லாம் இயங்கியவர். பகுத்தறிவு இயக்கங்களும் பண்பட்டவர்களும் தொடர்ந்து தொய்வின்றிப் பாடுபட்டும் சாதிகளின் ஆணிவேரை அறுத்தெறிய முடியாதச் சமுதாயச் சூழ்நிலையைக் கண்டு கொதிக்கிற கவிதைமனம் அவருடைய மனம். சாதியின் கோரமுகம் வாழ்வை எப்படிப் பாழ்படுத்திக்கொண்டிருக்கிறது என்பதை நாம் கண்கூடாகக் கண்டுகொண்டிருக்கிறோம். ஆனால் கவியரசரோ தன்வாழ்நாளெல்லாம் தன்படைப்புகளில் சாதிமறுப்பை முன்னெடுத்தவர் மட்டுமல்ல, தன்சொந்தவாழ்விலும் அதைக்கடைப்பிடித்தவர். தன்மக்களுக்கும் சாதிமறுப்புத் திருமணங்களையே நடத்தி வைத்தவர். தன் இல்லத்தின் ஒவ்வொரு திருமண அழைப்பிதழிலும் சாதிவேற்றுமை கூடாது என்பதற்குப் பலரின் பொன்மொழிகளை அச்சிட்டு வழங்கி, "சாதியை நாட்டில ஒழிக்கமுடியவில்லையே என்ற ஏக்கம் இருப்பினும் என்வீட்டிலாவது சாதி ஒழிந்ததே என்ற பொந்திகை (திருப்தி)யுடன்இருப்பேன்" என்று தன்னுடைய தன் வரலாறான "பாட்டுப்பறவையின் வாழ்க்கைப்பயணம்" நூலில் பதிவு செய்த கவிஞர், தன் திருமணத்தையே சாதி மறுப்புத் திருமணமாக 2.2.1949 ல் செய்து கொண்டவர். ஏன்? நாட்டில் சாதி ஒழிய வேண்டும் என்கிற எண்ணம் கொழுந்து விட்டெறிந்ததே காரணம். கொள்கை மறவராய்த் தமிழின்

---

* உதவி ஆணையர் (ப.நி), வணிக வரித்துறை, கோயம்புத்தூர்.

நல்வழி நடந்த கவிஞரின் கவிதைகளில் சாதிமறுப்பு எப்படியெல்லாம் மோதித் தெறிக்கிறது என்பதை இக்காலகட்டத்தில் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஏனென்றால் சாதிக்குள் சாதிகளாக ஆழவேரோடிப் பொய் முகங்களோடு தமிழினம் பெருங்குழிக்குள் விழுந்து அழுந்திக் கிடக்கிற அவலமான காலகட்டத்தில் அவர் கவிதைகளை மீட்டெடுக்க வேண்டியகடப்பாடு தமிழ்ச் சமூகத்திற்கு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட வேணடியிருக்கிறது. நாற்காலிகளைத் தேடியும், தக்கவைத்துக் கொள்ளவும் துடிக்கும் ஆசையில், சாதிஒழிப்பு, தமிழ் வளர்ப்பு போன்ற கொள்கைகள் யாவும் பொக்கென உதிர்ந்து போய்விட்டனவோ என்று எண்ணம் எழுவதைத் தடுக்க முடியவில்லை. காலங்கடந்து கண்ணீர் விட்டுக் கதறுவதற்குள் விழித்துக் கொள்ளவேண்டுமென்றால் கவியரசரின் சாதிமறுப்புக் கவிதைகளின் சாரத்தையும், காரத்தையும் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டிய கடப்பாடு இன்றைய கல்விசார் உலகுக்கு இருக்கிறது என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இருபது வயதில் கடவுளைக் குறித்துக் கவிதைகள் எழுதியகரங்கள் இருபத்தொன்றாம் வயதில் சமுதாயம், மொழி, நாடு. இயற்கை, பொதுமைஎன்றதிசைகளைநோக்கித்திரும்பின. இருபத்தொன்று வயதை எட்டிப்பார்த்த போது கவிஞரின் உள்ளம் "சாதி என்பது நமக்கு ஏனோ?" என்ற வினாவை வீசியது. அதேதலைப்பில் எழுதிய கவிதை முதன்முதலாக அச்சில்ஏறி 1942ல் அறிஞர் அண்ணாவின் "திராவிடநாடு" இதழில் வெளிவந்தது. அதனால் தான் தந்தை பெரியார் "கவிஞன் யார்?" என்பதற்கு எடுத்துக்காட்டுத்தானய்யா திராவிட இயக்கப் பகுத்தறிவுக் கவிஞர் முடியரசன்" என்றார். அண்ணாவோ "திராவிட நாட்டின் வானம்பாடி" என்றார். "என் மூத்தவழித் தோன்றல் முடியரசனே" என்றார்புரட்சிக்கவிஞர். இளம் நெஞ்சில் எழுந்த அனல் இறுதிவரை அணையவேயில்லை.

சாதிச்சழக்ககலச்சாத்திரத்துச் சூழ்ச்சிகளை
மோதித்தகர்த்தெறிய முன்னேற்றம் பெற்றிலங்கக்
கட்டாயம் வேண்டும் கலப்புமணம் என்றதுண்டு.
தட்டாமல் அவ்வாறே சாதிதனைத் தொலைத்தேன்.
சாதிக் கலப்பைத்தான் சாற்றி நடந்ததன்றி

ஓதும் மொழிக்கலப்பை ஓர்நாளும் சொன்னதில்லை" (முடியரசன், நூல்-ஞாயிறும்திங்களும்)

என்று தன்மனத்தின் ஒலித்த குரலை மக்கள் மன்றத்தில் ஒலித்தார் கவிஞர். சாதிப்பற்றுதான் சமுதாயத்தில் புரையோடிக் கிடக்கிறபுற்று. அந்தப் புற்றுக்குப் பால் வார்த்துத் தான் பலர்தங்கள் வாழ்வின் "பற்றுகளை" த்தீர்த்து விட்டு பலவற்றையும் "வரவு" வைத்துக கொண்டிருக்கிறார்கள். ஆனால் எடுத்ததெற்கெல்லாம் வாய் அளக்கிற அப்படிப்பட்ட பேர்வழிகள் "சாதி" என்று வருகிறபோது கள்ளமவுனத்தோடு கண்மூடிக்கொள்கிறார்கள். இந்தக் கேடு கெட்ட நிலையை எண்ணிக் கொதிக்கிற கவிஞர்

"சாதிகள் ஆக்கிய தீமைகளை—அந்தச்
சாத்திரக் குட்டையின் ஆமைகளை
மோதித் தகர்த்திடல் தீமையிலை—நீங்கள்
மூண்டெழு வீரினும் ஊமைகளோ?"
(கவியரசர்முடியரசன்கவிதைகள்பக் 190)

என்று கேட்டார். கவிஞரின் உலகம் எப்படிப்பட்டதாக இருந்தது? அவர் வாழ்ந்த கவியுலகம் தனி உலகம். நடைமுறை உலக வாழ்விலிருந்து வேறுபட்டதாக அவர் உலகம் எப்படிப்பட்டதாக இருக்கிறது? இதோ

"மடம்படு சாதிகள் தொலையும் –அங்கு
மதமெனும் போர்வைகள் கலையும்
கடவுளின் கதைகளும் விலகும்—செம்மைக்
கதிரவன் ஒளிதரப்பொலியும்" (க.மு.க. பக் 191)

என்று பாடுகிறார். "எனது உலகம்" என்று 25.2.1979ல் எழுதிய கவிதையின் வரிகள் இவை. எனவே சாதி, மதம், கடவுள் என்கிற கருத்தாக்கம் போன்றவற்றின் மறுப்பாளராகவே இருந்திருக்கிறார் கவிஞர். ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை எண்ணிய நெஞ்சம் அவருடைய நெஞ்சம். அந்தநெஞ்சுரம் தான் "அரசவைக்கவிஞர்" பதவியையும் துச்சமெனக்கருதியது. செல்வச்சீமான்கள் முன்சிரந்தாழ்த்தாத கவிஞர்

தன் வீடு, தன்பிள்ளை, தன்குடும்பம், தன்சம்பாத்யம் என்று வாழாத வாழ்க்கையைக் கொண்டவராகச் சிறகடித்துப் பறந்தார்.

தமிழின் செழுமையான மரபில் கிளைத் தெழுந்த கவிஞரின் கவிதைகள் முன்னவர்கள் கண்ட கனவெல்லாம் மண்மூடிப் போனதை அறிந்து கொதித்தன.

“சாதிகளே இல்லையடி பாப்பா நம்முள்
தாழ்வுயர்வு சொல்லுதலே பாவம்” என்றே
ஓதிய ஓர்பாரதியும் செத்துவிட்டான்.
உட்புகுந்த சாதிகளோ சாகவில்லை.
“வேதியர்கள் தாம் வாழவகுத்து வைத்த
வேதநெறி திராவிடத்தில் தூள்தூள்” என்று
தினன்நம்பா வேந்தன், வீதிதோறும்
முளைப்பதலால் தூளாக வில்லையிங்கே!” (க.மு.க. பக்:197)

சாதிகள் ஒழிய வேண்டும் என்று இந்த இரண்டு கவிஞர்கள் மட்டும் தான் பாடினார்களா? அவர்கள் கண்ட கனவுகள் பொய்த்துப் போயினவா? இல்லவே இல்லை. கவிஞர் தன் “நெஞ்சத் துடிப்பு” கவிதையில் அடுத்தடுத்துப் பாடுகிறார்.

“சாதி எனச்சமயமென முளைத்து வந்த
சழக்குகளை விட்டுவிட்டேன்”என்றுகூறி
மேதினியில் மறுமலர்ச்சி காணவந்த
மேன்மைமிகும் இராமலிங்கர் அருட்பாநூலை
ஓதிவரும் தொண்டருக்குப் பஞ்சமில்லை.
சழக்குகளை ஒழிக்கத்தான் நெஞ்சமில்லை.
யாதினி நாம்செய்வதென எண்ணிஎண்ணி
அகமெல்லாம் துடிதுடிக்கும் வெம்பும் சோரும்”
(க.மு.க. பக்,197)

என்கிறார். எங்கெங்கும் சாதிவெறி புரையோடிக் கிடக்கிறது. துணிந்து துண்டிப்பார் இல்லை. அதற்கும் ஒரு துண்டைப் போர்த்தித் தோழமையோடு தோள் நிற்கிறவர்களே அதிகம். இன்றைக்குளவர் எவர் தமிழர் என்று பட்டியலிட்டுக் கொண்டு திரிவோரைப் பார்க்கிறோம். இந்தக் கூத்தையார் அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்கள்? யாருடைய

கைப்பாவைகள் இவர்கள்? தமிழினத்தை மெல்லக்கொல்லும் விடமாக இவர்கள் நுழைந்து கொண்டிருக்கிறார்கள். எல்லா நாடகங்களும் ஆட்சியையும் அதிகாரத்தையும் மையமாக வைத்து நடத்தப்படுகின்றன. மக்கள் ஏமாந்து கொண்டிருக்கிறார்கள். பெற்ற சுதந்திரம் வெற்றுச் சுதந்திரமாக விம்மி அழுகிறது. தேர்தலில் சாதிகள் கடித்துக் குதறிக்கொள்கின்றன. கள்ளக்காசுக்கு இரையாகிப் போனவாக்காளர்கள். அவர்களை விலைபேசித் திரியும்வேட்பாளர்கள். நல்ல கேலிக்கூத்தாக இருக்கிறது தேர்தல். கொதிக்கிறது கவிஞர் நெஞ்சம். "தேர்தலால்கண்டபயன்" என்று கவிஞரின் மனம் பட்டியலிட்டுப் பார்க்கிறது. பெற்ற விடுதலையை உற்றுப்பார்க்கிறது. அதனால்

"சாதிகளும் பொய்ம்மொழியும் தன்னலமும்
கையூட்டுந்தழைக்கும் நாட்டில்
ஏதுபயன் விடுதலையால்? என்னபயன்
தேர்தலினால்? எத்தர்வந்தே
ஓதுகிற மொழியெல்லாம் உண்மையென
நம்புமவர் உணர்வுகெட்டு
மேதிகளாய் உளமட்டும் மேதினியில்
தேர்தலினால் மேன்மையில்லை" (க.மு.க.பக்.207)

என்று துடிக்கிறது. ஆகாயத்தில் வீடுகட்டித் தருகிறேன் என்றால் அதையும் நம்பி வாக்களித்தால் எருமைகளைப் போலத்திரிய வேண்டியதுதான் என்கிற கவிஞர் சட்டமன்றம் எப்படி இருக்க வேண்டும் என்றும் கூறுகிறார்.

"சாதியைத்தான் முன்வைத்துச் சார்கின்றார்
வேட்பாளர்.. சமயம் பார்த்துச்
சாதிக்கோர் அமைச்சரெனச் சண்டைவரும்.
சாதிக்கா சட்டமன்றம்?
மீதிப்பேர்நிலை என்னாம்? வீழ்ந்தவரும்
மேன்மை பெறவேண்டு மென்று
சாதிப்போர் வேண்டுமலால் சாதிப்போர்
தேவையில்லை சட்டமன்றில்" (க.மு.க. பக் 207)

அடித்தட்டு மக்கள் மேலே வரவேண்டும் என்று உழைப்பவர்கள், சாதிப்பவர்கள் தான் சட்டமன்றத்திற்கு வேண்டுமேயல்லாமல் சாதிப்போரை நடத்திக்கொண்டு, ஆதிக்கச் சக்திகளாகத் தங்களை வரித்துக் கொள்பவர்கள் தேவையில்லை என்கிறார். எவ்வளவு துல்லியமான கணிப்பு இது. அங்கங்கே அங்கங்கே சில ஆதிக்கச்சாதிகள். அவர்கள் அந்தந்தப் பகுதிகளையே ஆட்டிப் படைக்கிறார்கள். அடித்தட்டு மக்கள் மேலே எழுவது எப்போது? ஒவ்வொரு சாதிக்காரருக்கும் தன்சாதி ஆதிக்கச்சாதியாக இருக்கவேண்டும் என்கிற எண்ணமே எழுந்து நிற்கிறது. அப்படியானால் தமிழ்ச்சமூகம் விழுந்தழியாமல் என் செய்யும்? இந்தமண்ணில் எப்படிச்சாதிகள் உருவாயின என்பதற்குப் பல்வேறு ஆய்வுகள் உண்டு. ஆதிக்கச்சக்திகள் தங்களைக் கட்டிக் காத்துக் கொள்ளக் கட்டிவிட்ட கதைகளுக்குள் கட்டுண்டுபோனவர்கள் சாதிகளின் கோரப்பிடிக்குள் சருகாக உதிர்கிறார்கள். இதை

"பிறப்பினால் உயர்வுதாழ்வு
பித்தனாற் பேசுகின்றார்
கருப்பினால் தோற்சிவப்பால்
பிளவுகள் காட்டுகின்றார்.
பொறுக்குமா இன்னும்வையம்
என்றுளம் பொங்கி நின்றால்
தருக்கினாற் சாற்றுகின்றார்
சாத்திரம் வகுத்ததென்றே" (க.மு.க. பக் 213)

என்று" உலகம்சிவக்கும்" என்கிற கவிதையில் உரக்கச் சொல்கிறார். என்றாலும் நாளுக்கு நாள் சாதிகள் பலவகையான வலைகளைப் பின்னி நம்மை இழுத்துக் கொண்டிருக்கின்றன. நாம் இரையாகிறோம். உச்சநீதிமன்றம் மெச்சத்தகுந்த தீர்ப்பைச் சொல்லியும் அதைத்துச் சமமென எண்ணி, ஏற்றுக்கொள்ள முடியாத பிற்போக்குவாதிகளும், மதவாதிகளும், சாதிவெறியர்களும் எப்படியெல்லாம் நாடகங்களை நடத்திச்செய்தி ஊடகங்களில் கொதிப்பைப் பெய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்துக்கொண்டு தானிருக்கிறோம். பெண்களுக்கெதிரான நிலைப்பாடு என்ற அளவில் மட்டும் இதைச்சுருக்கிப் பார்க்கக்கூடாது. நூளை இந்த வெறுப்பையும், எதிர்ப்பையும் எல்லாநிலைகளிலும் அவர்கள் முன்னெடுத்தச் செல்ல

முயல்வார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும். அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்று நிறைவேற்றப்பட்ட சட்டம் நடைமுறைக்கு முழுமையாக வர இன்னும் எத்தனை காலமாகுமோ தெரியாது. ஏனென்றால் ஆதிக்கச் சக்திகளின் வலிமையான ஆயுதமே சாதிகளை முன்வைப்பது தான். 19.4.1970ல் கவிஞர் திருச்சி வானொலியில் "வாழ்வுப்பாதையில் - பக்தி" என்று கவிதை பாடினார். அக்கவிதையில்

"தொட்டருகில் சென்று தொழ உரிமையில்லை
தூரத்தேநின்று தொழக்கூறுகின்றார்
மட்டவிழும் மலர்தூவித்தாய் மொழிச்சொல்
வழிபாடு செய்வதற்கும் வழியேயில்லை" (க.மு.க.பக்.233)

என்றெல்லாம் பாடினார். எதிர்ப்புக் குரல்கள் ஏராளமாக எழுந்தன. ஆனால் கவியரசரோ அசைந்து கொடுக்கவில்லை. கொண்ட கொள்கையில் உறுதியாக நின்றார். அவர் பாடியதில் ஒருதுளி கூடக் கற்பனையில்லை. நாட்டு நடப்பைப் போட்டுடைத்தார். தமிழனின் நிலையை எண்ணித் துடிக்கிறார் கவிஞர். 'தமிழன் ஏக்கம்" என்ற கவிதையில்

"தமிழன் என்றதுமே—மிகப்பரி
தாபம் பிறக்குதம்மா!
இமயம்வென்றானே — அவன்இன்று
ஏற்றங்குறைந்தானே!
சமையம் போகாதோ? – தொல்லைதரும்
சாதிதொலையாதோ?
சமத்துவவாழ்வு — மீண்டும்
தளிர்த்துச்செழிக்காதோ?" (க.மு.க.பக்.112)

என்று தவிக்கிறார். ஏனென்றால் கவிஞருக்குத் தெளிவாகத் தெரியும். இன்றைய நிலைக்கு என்ன காரணம் என்பது?

"சாதிச்சழக்குகளும்-பொய்மைச்
சாத்திரக் குப்பைகளும்
மோதிப்பகைக் குணத்தால்-சண்டை
மூண்டுமலிந்ததுவே!" (க.மு.கபக் 121)

என்ற காரணத்தையும் சொல்கிறார். சாதிக்கு ஒருகட்சியைத் தொடங்குகிறார்கள். ஆடாத ஆட்டமெல்லாம் ஆடுகிறார்கள். இதற்காகத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா என்பது போல் பதவியும், பணமும் சேர்ந்த பின் தோட்டம், பண்ணைவீடு. தொழில், சிறுகுறு அடியாள்படை என்று அடங்கிக் கொள்கிறார்கள். அதற்குள் சமுதாயத்தை எவ்வளவு நாறடிக்கமுடியுமோ அவ்வளவுக்கும் நாறடித்து விடுகிறார்கள். அடுத்த தலைமுறையைப் பற்றிய அக்கறைகிஞ்சித்தும் இல்லை. அவர்களுக்குத் தேவை விளம்பரம், பதவி, பணம். அவ்வளவுதான். இந்தநிலையை அப்படியே படம்பிடித்துக்காட்டுகிறார் கவிஞர். தெருத்தெருவாகப்பாடிக் கொண்டுவரவேண்டிய பாடல்அது.

அதுதான் "சொல்லும் செயலும்"
சாதி தொலைந்திடச் சொலுந்தோழா—உன்பால்
சாற்றிடுவேனொரு மொழிகேளாய்.
வீதியில் எங்கணும்பேசி முழக்கினை
வீட்டினுள் வந்ததும் பூசிவளர்த்தனை
பேருக்கும் புகழுக்கும் பேசத்துடித்தாய்
பேதங்கள் கண்டுள்ளம் கூசிநடித்தாய்.
ஊருக்கு மாத்திரம் கூறிமுடித்தாய்
உள்ளத்தில் இல்லத்தில் எங்கே விடுத்தாய்.
சாதியின் பேராலே வீதிகள் சமைத்தாய்
சங்கங்கள் ஒவ்வொரு சாதிக்கும் வைத்தாய்.
ஓதிடும் பள்ளியில் ஒட்டியே வைத்தாய்
உண்மையில் தேர்தலில் ஓங்கிட வைத்தாய்."

(-க.மு.க. பக் 123-124)

இந்தப் பாட்டு வரிகள் ஓட்டுக்கு உடுக்கையடிப்பவர்களுக்கு வேட்டு வைக்கும் வரிகள். மக்கள் உணரவேண்டிய வரிகள். சொல்லும் செயலும் வேறுவேறாக இருக்கிற போலி அரசியல்வாதிகள் சாதியின் கட்டமைப்பில் தங்கள் கட்சிகளைக் கட்டிக்காத்துக் கொள்ள முயல்கின்றன. உண்மையில் அவர்களின் சுயநலமே அவர்களை ஆட்டிப்படைக்கிறது. மானுட அன்பை அறியாதவர்கள் அவர்கள். அப்படிப்பட்டவர்கள் திருந்தாதவரை ஏற்றத்தாழ்வுகளை அவர்கள் உருவாக்கிக்கொண்டே இருப்பார்கள். இதை,

மனிதனை மனிதன் விரும்பிவிட்டால்—நெஞ்சில்
மானிட அன்பே அரும்பிவிட்டால்
தனிமனிதன் மனந்திருந்திவிட்டால்—உலகம்
சரிநிகர் சமமாய் உயருமடா!" (க.மு.க.பக்.128)

என்கிறார். ஆனால் இதை அவர்கள் அறிந்தும் அறியாதவர்கள் போலத் தங்கள் பிழைப்பை நடத்துவார்கள். 28.9.1958ல் மதுரை எழுத்தாளர் மன்றக் கவியரங்கில் கவிஞர் "தமிழ்வாழ்வு" என்ற தலைப்பில் பாடிய கவிதை வரிகளை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும்.

"ஒரு கடவுள் ஒருசாதி என்றபாங்கில்
ஓரினமாய், அயலவரும் உறவாய் நண்பாய்ப்
பெருமையுடன் தமிழ்மொழியை நாட்டைப்பேணிப்
பீடுபெற வாழ்வதுவே தமிழவாழ்வு.
பெருகுதொகைக் கடவுளரும், உயர்வு தாழ்வு
பிறவியினால் பேசுகின்ற எண்ணில் சாதிக்
குறுமனமும், பேதைமையும் அடிமைப்பண்பும்
கொள்வதுவோ தமிழ்வாழ்வு? கொடுமைவாழ்வு."
(க.மு.க. பக் 149)

இங்கே, கவிஞர் சொல்கிற கொடுமை வாழ்வைத்தான் நாம்பெற விழைகிறோமா? இதைத்தான்

"உலகம்மாறி உருள்கிறது
மனமும் சுருங்கி மருள்கிறது.
கலகம் காண விரைகிறது
கடமையாவும் குறைகிறது.
சமயம் சாதிப் பிளவுகளால்
சண்டை ஒன்றே வளர்வதனால்
இமயம்குமரி இடைவெளியில்
எங்கும் பண்பே தளர்கிறது." (க.மு.க. பக் 171)

என்று நாட்டுநிலையைக் கண்ணுற்றுப் பாடுகிறார். அதற்காக இளைய சமுதாயத்திற்குச் சொல்கிறார்.

"இளைஞர்களே கேளுங்கள்" என்கிறார்.
"சாதியின் வேரை வெட்டுங்கள்—நெஞ்சில்

சமநிலைப்பண்பை ஒட்டுங்கள்.
மேதினி எல்லாஞ் சுற்றுங்கள்— அங்கே
மேன்மைகள் கண்டே பற்றுங்கள்" (க.மு.க.பக்177)

ஆம். கிணற்றுத் தவளைகளாய்க் கிடக்கக்கூடாது என்கிறார் கவிஞர். ஆனால் நம்மைக் கிணற்றுத் தவளைகளாக வைத்திருப்பதற்காக எத்தனை எத்தனையோ வலைகள் பின்னப்படுகின்றன. நாம் கேட்டுக்கொண்டே இருக்கவேண்டிய கேள்வியை வீறுகவியரசர் நம்மிடம் விட்டுச்சென்றிருக்கிறார். அதுதான்

"மேதினியைப் பாழ்படுத்த வந்த சாதி
மேலுமினி வாழ்வது தான் என்னநீதி?"

இந்தக்கேள்வி உரக்க ஒலிக்கப்பட வேண்டும். சாதி, மதங்களை முன்னிறுத்தி வருவோரின் முதுகில் இந்தவரிகளே சாட்டையைச் சொடுக்கும். முடியரசனாரின் கவிதை வெளியில் சாதிமைக்கு எதிராக அவர்தொடுத்த பெரும்போரின் சிறுகாட்சியை மட்டுமே இங்கே காட்டியிருக்கிறேன்.

செம்மாந்த வாழ்க்கை வாழ்ந்த கவியரசர் தன்னைப்பற்றிய குறிப்பைக் கவிதையில், சுருங்கச் சொல்லியிருக்கிறார். சுருக்கென்று சொல்லியிருக்கிறார்.

"கூடாரங் கூடாரமாகக் குடிபுகுந்து
சூடாத பூக்கொய்து சூடிப்பழிசுமந்து
மானந்தனை யிழந்து மற்றவர்தம் தாள்பிடித்துக்
கூனல் மனத்தோனாய்க் கொள்கையை விற்றதிலை.
நேற்றொன்று கூறிநிலைநாட்டி இன்றதனை
மாற்றியுரைக்கும்மதி சிறிதும் பெற்றதிலை. (க.மு.க.பக்289)

அவரைப்பற்றி அவரே வரைந்த கவிதைச் சித்திரம் இது. அவர் கவிதை வெளியை ஒருசுற்றுச் சுற்றி வருகிற எவருக்கும் அவர் கொள்கை மாறாத, மறவாத கவிஞர் என்பது புரியும். சாதி மறுப்பை வாழ்நாளெல்லாம் பாடியபாட்டுப் பறவையின் கீதம் இன்று எவர் செவியிலும் விழுவதாகத் தெரிவதேயில்லை. என்ன காரணம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டிய தருணமிது. இப்படியே நிலைமை நீடித்தால் தமிழன் எவர் எவர் முன்போ தலைகுனிந்து நின்று

கொண்டிருக்கவேண்டிய நிலை வந்து தீரும். தடுமாறாத, தடம் மாறாத கொள்கைகளோடு சீரோடு வாழ்ந்த வீறுகவியரசரைக் குறித்து ஈரோடு தமிழன்பன்,

“எவரும் அடிமைப்படுத்த முடியாத
முடியரசன் மூச்சுகளை
வாழ்வு முடித்தது உண்மையாகலாம்.
அவர்கவிதைகளே அவருடைய மூச்சுகளாக
அவர் வாழ்கிறார் என்பது எப்படிப் பொய்யாகலாம்.?
கொள்கைக்கு விடுமுறை கொடுத்துவிட்டுக்
குனிந்துஎவர் முன்னும் நின்றதில்லை முடியரசன்.
முடியரசன் பெருமிதஉயரம் எந்தஇமயத்திற்கும் இல்லை.
முடியரச வெப்பம் எந்தச்சூரியனுக்கும் இருப்பதில்லை”

என்று குறிப்பிட்டிருப்பதையே நாம் வழிமொழிய வேண்டிய காலகட்டமிது. உறங்கியும், உறங்குவது போல் நடித்தும் கிடக்கும் நம்மவர்கள் முடியரசனார் கவிதைகளை முன்னெடுக்கவேண்டும். வெப்பம் கொப்பளிக்கும் அவர் கவிதைகள் சாதிமதச் சகதியில் நமுத்துக்கிடக்கும் தமிழர்களின் நரம்புகளில் சூடேற்றட்டும்.

வீறுகவியரசர் முடியரசனார் ஊட்டிய தமிழுணர்ச்சி

கவிஞர் தமிழ்தாசன்*

'செந்தமிழே என்னுயிரே புலவர் நெஞ்சில்
சேர்ந்தாடும் எழில்மயிலே என்னுட் பொங்கி
உந்திவரும் உணர்வதனால் கூவிக் கூவ
உவகைதரும் பூங்குயிலே மொழிக்கு லத்தில்
முந்திவரும் தெய்வதமே என்னைச் சூழ்ந்து
மொய்த்துவரும் துன்பமெலாம் நீங்கி யின்பம்
தந்துவரும் ஆரணங்கே அன்பே நின்றன்
தாள்வணங்கி நிற்கின்றேன் அருள்வாய் அம்மா''
முடியரசன் நூல் (பாடுங்குயில்)

பாரதியார் கவிதா மண்டலத்திலிருந்து பாவேந்தர் பாரதிதாசன் புறப்பட்டது போல் பாரதிதாசன் கவிதா மண்டலத்திலிருந்து மோனையைப் போல் முன்னே நிற்பவர் வீறுகவியரசர் முடியரசர்.

'தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'' என்பது பாவேந்தர் பாரதிதாசன் தமிழ் முழக்கம். இதனை அடியொற்றி முடியரசனும் செந்தமிழை என்னுயிரே என்றும் என்னைச் சூழ்ந்து வரும் துன்பமெல்லாம் நீங்கி, இன்பம் தந்துவரும் தமிழ்த்தாயை தாள்வணங்கி நிற்கின்றார், வீறுகவியரசர் முடியரசர்.

உணர்ச்சியின் வெளிப்பாடு

கவிதைக்கு உயிர்த்துடிப்பைத் தருவது உணர்ச்சி. உள்ளத்தில் எழுகின்ற உணர்வினை உடம்பின் வழியாக வெளிப்படுத்துவது மெய்ப்பாடு எனப்படும்.

'நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப''
(-தொல்காப்பியம் 1197)

இதனை வீறுகவியரசர் இவ்வாறு பாடுகிறார்.

---

* கிராம நிர்வாக அலுவலர், உசிலம்பட்டி.

பாரைத் திருத்திப் பயன்படுத்தப் பண்படுத்தி
ஏரைப் பிடித்தோன் எழில் கொழிக்கக் கண்டிருந்தான்
....
....
மருட்கைச் சுவை தோன்றும்: மாநிலத்தில் முன்னோர்
மீண்டும் பெருமிதமே மேலோங்கும் அஃதன்றி
அவலச்சுவை நம்மை ஆட்டிப்படைத்து விடும்
நாட்டில் உலவிவரல் நமக்கெல்லாம் இளிவரலே
தோன்றும் நகைச்சுவையே தோழர்களையே நம்மைஎலாம்
பாடுகின்ற பாடலிலும் பாயும் பெருவெகுளி அந்தோ!
என மயங்க அச்சச் சுவை தோன்றும்
உள்ளங்களித்தே உவகைச் சுவை தோன்றும் பாட்டுச்
சுவையறிந்த பாரோரே நாம்வாழும்
நாட்டுச் சுவையறிவர் நன்கு
முடியரசன் நூல் (-வள்ளுவர் கோட்டம்)

'அர்ச்சனை பாட்டே ஆகும்
ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார்
தூமறை பாடும் வாயார்"

எனக்குப் பிடித்த அர்ச்சனை, வாடும் பூவால் நிகழ்வதை விட வாடாத தமிழ்ப்பாவால் நிகழ்வது ஒன்றே என இறைவன் சிவபெருமான் கூறுவதாகச் சேக்கிழார் குறிப்பிடுகிறார்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

எழுத்துகளுக்கு அகரம் முதன்மையானது. அதனைப் போலவே உலக்கு ஆதி பகவனாம் இறைவன் முதன்மையானவன் ஆக இறைவனுக்கு அகரம் உவமையாயிற்று. 'உவமை என்பது உயர்ந்தவன் மேற்றே" என்னும் தொல்காப்பிய இலக்கணப்படி ஆண்டவனுக்கு உவமையாகும். அகரம் அவனினும் உயர்ந்தது என்பது திருவள்ளுவர் மனத் துணிவு.

இங்கே, தமிழே என் தெய்வம் எனக் கூறி, எனது நெஞ்சமெனும் கோவிலிலே அருள்புரிய வேண்டுமென்றும், நல்ல மணந்தருவதோடு

செய்யுள் இயற்றும் போதெல்லாம் சொல்லாட்சியில் ஆளுமை பாய்ந்து வரவேண்டும் என்று தமிழையே தெய்வமாக வேண்டுகிறார்.

'கோவில் எனது நெஞ்சம் -தனிலே / கூடி யருள் புரிவாய்
காவியம் பாமாலை - அணிந்தே / காத்திட வேண்டு மம்மா
நாவில் மிசை யிருப்பாய் - எனக்கு / நல்ல மனந் தருவாய்
பாவினில் சொல்லெல்லாம் சத்தி / பாய்ந்து வரவேண்டும்''
முடியரசன் நூல் -(காவியப்பாவை)

உலகின் மூத்த மொழி

"நின்றவனை வந்த நெடியோன் அடி பணிந்தான்
அன்றவனும் அன்பொடு தழீஇ அழுத கண்ணால்
நன்று வரவு என்றுபல நல்லுரை பகர்ந்தான்
என்றும் உள தென்தமிழை இயம்பி இசைகொண்டான்''
கம்பராமாயணம் (-ஆரண்யகாண்டம்)

அகத்தியருக்கு முன்பே என்றும் உள்ளது தென்தமிழ் என தமிழின் பெருமை நிலை நிறுத்துகிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பன்.

'சதுர்மறை ஆரியம் வருமுன் சகமுழுதும் நினதாயின்
முதுமொழி அனாதியென மொழிகுவதும் வியப்பாமே''

என்று மனோன்மணியம் சுந்தரனார் பாராட்டியிருக்கிறார்.

தமிழாகிய என்தாய் மொழிகளில் மூத்தவள் மட்டும் அல்ல பல வளங்களைப் பெற்று செல்வக்குடியில் பிறந்து, மூவேந்தர் அவையில் நலமோடு வளர்ந்தவள் என் தமிழன்னை என்று தமிழின் மாண்பை பாடுகிறார் , வீறு கவியரசர் முடியரசர்.

'செந்தமிழ் என்பவளாம் - நல்ல / செல்வக் குடிமகளாம்
முந்தை மொழிகளிலே - அவளும் / மூத்தவ ளாய்ப் பிறந்தாள்
முந்திய மூவரசர் - அவையில் / மொய்ப்புறத் தான் வளர்ந்தவள்
வந்தவள் யாவருக்கும் - செல்வம் / வாரி வழங்கிடுவாள்''
முடியரசன் நூல் (-காவியப்பாவை).

என்னைத் தருவேன்

'சுற்றிவ ளைத்திடு மெத்துய ரத்தையும்
சுட்டுமு டித்ததை - எறிவேனே
சொத்துந லத்தினை முற்றஇ ழப்பினும்
சொற்றமி ழக்கெனத் - தருவேனே''
முடியரசன் நூல் (பாடுங்குயில்)

எரிமலைப் பிழம்பாய் இந்தக் கவிதை வரிகள்.

வலிமையுண்டு வீரம் உண்டு

'வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள் எங்கள் வெற்றித் தோள்கள்'' என்றார் பாவேந்தர் பாரதிதாசன். பாவேந்தர் பரம்பரையின் முதற்பாவலர் வீறுகவியரசர் முடியரசனின் ஆளுமையில் உணர்ச்சி பொங்கும் தமிழ் முழக்கம், தன்மான உணர்வைத் தட்டியெழுப்புவதைக் காண்மின்,

'தூங்குகிற தமிழ்ப்புலியை இடறி வீழ்ந்த
துணை விழிகள் இல்லாதான் நிலைமை போல
ஏங்குகிற வடவர்தமக் கொன்று சொல்வேன்
என்னினத்தார் மொழிவெயில் சளைத்தா ரல்லர்
வீங்குகிற தோளுக்கு விருந்து வைக்க
விழைவீரேல் மொழிப்போரைத் தொடர்க போரைத்
தாங்குகிற வலிமையுண்டு வீரம் உண்டு
சாவதற்கும் அஞ்சாத துணிவும் உண்டு பிறிதோர் இடத்தில்,
உலகத்து முதன்மொழியாம் தமிழைத் தங்கள்
உயர்மூச்சாம் கொண்டியிருக்கும் தமிழர் நாட்டிற்
கலகத்தை உருவாக்கும் வெறியர் கூடிக்
கடுகளவும் தகுதியிலா இந்தி தன்னைப்
பலகட்டுக் கதைகூறிப் புகுத லிட்டார்
படையெடுத்தார் தடியெடுத்தார் பயனே இல்லை
நிலைகெட்டார் மூன்றுமுறை முயன்று பார்த்தும்
நினைப்பொன்றம் பலிக்கவில்லை தோல்வி கண்டார்.
முடியரசன் நூல் (-தாய்மொழி காப்போம்)

தமிழர் போர் வீரம் வெற்றியை மட்டுமே இலக்காக கொண்டதல்ல. மானம் காக்கும் மறக்குல மாண்பையும் நோக்கமாய் கொண்டது. நல்ல கவிஞன் சொற்களைக் கொண்டு கவிதையை உருவாக்குவதில்லை. உணர்வுகளைக் கொண்டே அதை உருவாக்குகிறான்.

"உணர்ச்சிக்கு நான் ஆட்படும் பொழுதெல்லாம் அவ்வுணர்ச்சியை வெளிப்படுத்தித் தீர வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்படுவதுண்டு அதன் வெளிப்பாடே கவிதைகள்'' என்கிறார், அடிபணிந்து குறுகாத தமிழ்காக்கும் போராளியாம் இனமானக் கவிஞர் வீறுகவியரசர் முடியரசர்.

தமிழ்மொழிக்கும் தமிழர்க்கும் ஆற்றிய பணிகள் அளப்பரியன. தம் வாழ்விலும், சொல்லிலும், நிமிர்ந்த நன்னடையும் நேர் கொண்ட பார்வையும் திமிர்ந்த ஞானச் செருக்கும் கொண்டவர்.

"மொழியுணர்ச்சி பாடுகென்றீர் உணர்ச்சி கடந்து
மொழியுங்கால் பிழைபொறுத்துச் சிந்தித் தாய்ந்தால்
பழியுணர்ச்சி தோன்றாது, வருவோன் செல்வோன்
பழிக்கின்றான் நம்மொழியை செவி மடுத்தும்
எழுமுணர்ச்சி கண்டோமோ? வடக்கு வேந்தன்தன்
இழித்துறைத்தான் தமிழாசை எனுஞ்சொற் கேட்டு
முழுமூச்சோ டெதிர்த்தானே அவன்கு லத்து
முளைத்துவரும் காளைகள்நாம் வெட்கம் வெட்கம்"

முடியரசன் நூல் (தமிழ் உலகம்)

தமிழ் வழிபாடு

'வழிபடு துறையிலும் வண்டமிழ் வேண்டுதும்
இழிநிலை போதும் இறைவன் திருமுணர்
எம்முயர் மொழியே இசைத்திடல் விழைகுதும்
இம்மொழி கேட்டோர் எரியெனக் கனன்றனர்.

கலைக்கோர் உறைவிடம் கட்டியோர் தமிழா
உள்ளுறை கடவுளும் உரியவற் நமக்கே
அள்ளுறை வணங்குவோர் அயலவர் அல்லர்
இறைவினை புரிவோர் ஏதிலர் அல்லர்
முறைஎது? வழிபடு மொழிஎது? புகல்வீர்!

முடியரசன் நூல் (-பூங்கொடி காப்பியம்)

தமிழும் கடவுளும்

சிவபெருமான் மனைவியுடன் முருகன் என்னும்
சிறுவனையும் உடன்கொண்டு மதுரை நாட்டில்
உவகையொடு தமிழ்மொழியின் சுவையைக் கூடி
உண்ணுதற்கே அவதரித்தார் என்பர் சைவர்
தவமுனியாம் திருமழிசை பாடல் கேட்டுத்
தண்டமிழின் பின்சென்றான் திருமால் என்பர்
இவரெல்லாம் சமயத்தில் தமிழைக் கூட்டி
இனிதாகப் பேசிடுவார் ஏற்றங் கொள்வார்
கோவிலுக்குள் தமிழ்மொழியைப் புகுத்தல் காணின்
கொதித்தெழுவார் மேற்படியார் முதலில் நின்று
தேவனுக்குத் தமிழ்சொல்லல் தீமை என்பார்
தேவருக்குப் பாடையுண்டு அதைவிடுத்துச்
சீவனிலாத் தமிழ்சொன்னால் செத்தோம் என்பார்
சிவன்மாலும் செத்தொழிவார் என்பார் அந்தோ்
கூவுகிற இக்குரற்குச் செவிகொ டுத்துக்
குலைவதுவோ தமிழ்வாழ்வு ஆய்ந்து சொல்வீர் !

(கவியரங்கில் முடியரசன்)

கவியரங்கில் தமிழ்மணம்

திராவிட நாட்டின் வானம்பாடி எனப் பேரறிஞர் அண்ணாவால் புகழப்பட்ட வீறுகவியரசர் முடியரசர். தமிழகமெங்கும் சென்று ஏராளமான கவியரங்கங்கள் சொற்பொழிவுகள் மூலம் தமிழுணர்ச்சியை மூட்டினார். திராவிட இயக்க முற்போக்குக் கொள்கைகளை பரப்பினார். முடியரசனைத் தன்மானக் கவிஞர், தமிழியப்புரட்சிக் கவிஞர், பெருமிதக் கவிஞர் என்றும் கூறுவர்.

நம்பெயரில் தமிழிருத்தல், ஆடல் பாடல்
நாம்காணும் நிழற்படங்கள் தமிழைக் காட்டல்
செம்மையுறு திருமணத்தில் தமிழை ஓதல்
செய்தித்தாள் நற்றமிழை எழுதிக் காட்டல்
நம்மினத்தார் உழைப்பிலுருப் பெற்ற கோவில்
நல்லதமிழ்ப் பாட்டொலியே முழங்கச் செய்தல்
நம்பிள்ளை பயில்கல்வி தமிழாய் நிற்றல்
நாடெல்லாம் தமிழாயின் தமிழ் வாழ்வு.

(கவியரங்கில் முடியரசன்)

தமிழ்வாழ இனம் வாழ எழுச்சிமிக்க கவிதை வாளேந்தி கொள்கை முழக்கமிட்ட திராவிட இயக்கத்தின் போர்முரசாம் கவிஞர்களிடையே முடிசூடா மன்னராகத் திகழ்ந்தவர் முடியரசனார்.

'மறையோர் வருவாரோ? மந்திரங்கள் சொல்லி
முறையால் சடங்கெல்லாம் முற்ற முடிப்பாரோ?
வேண்டும் திருமணத்தில் வேள்வி நெருப்புண்டோ?
ஆண்டு நிகழும் அருவினைகள் செல்ல எனச்
சேயிழையே நம்மணத்தில் செந்தமிழே பாட்டிசைக்கும்
காயெதற்கு நல்ல கனியிருக்க? நீயிருக்க
நானும் அருகிருக்க நம் அன்னல் முன்னிலையில்
தேனும் சுவைப்பாலும் சேர்ந்ததுபோல் வாழ்ததொலிக்க'
(கவியரங்கில் முடியரசன்)

தொல்காப்பியர் எழுத்துக்கும் சொல்லுக்கும், பொருளுக்கும் மட்டும் இலக்கணம் சொன்னவர் அல்லர்; வாழ்வியல் நெறிமுறைக்கும் காதல் களவுக்கும், கற்புக்கும், போருக்கும், வீரத்துக்கும் கூட இலக்கணம் வகுத்தவர்.

மந்திரம் என்பது என்ன? பொருள் புரியாது முணுமுணுக்கும் வேத கோசங்களா? இல்லை மந்திரம் என்பது செம்மாந்த புலமையும் சிந்தையின் நிறைவும் வாய்ந்த சான்றோர்கள் வாய்ச்சொல்லே மந்திரம் என்பர்.

'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப." (தொல்காப்பியம் 1426)

தமிழர் திருமண முறையில் பொய்ச்சடங்குகள் போலிச் சமய வேறுபாடுகள் இல்லை என்பதை,

'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப." (தொல்காப்பியம் 1089)

என்று தொல்காப்பியம் சுட்டிக் காட்டுவது தொல்காப்பியரின் பரந்துபட்ட ஞானத்தை மட்டுமல்ல இழந்துவிட்ட தமிழர் புகழுக்கான காரணத்தை இடித்துக் காட்டுவதாகவும் உள்ளது. சான்றோர்களின் பெருமையை , இந்த உலகில் அழியாமல் நிலைத்து நிற்கும் அவர்களது அறவழி நூல்களே எடுத்துக் காட்டும்.

தொல்காப்பியத்தைப் பின்பற்றி வான்புகழ் வள்ளுவப் பெருந்தகையும்

'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.''

என்று குறிப்பிடுகின்றார். மொழி இழந்து, முகம் இழந்து, முகவரி இழந்து, தன்னை இழந்து, தன்மானம் இழந்து, வாழ்ந்துவரும் தீதறியா நன்மனத்தோரே, பேதுடையாரே, தமிழனமே விழித்தெழுவது எந்நாளோ?.

தன் செழுங்கவிதைகளால் தமிழுணர்ச்சியூட்டி, வீரமூட்டி, கொள்கையில் குன்றமென உயர்ந்து நின்று, பகுத்தறிவுடனே முற்போக்கான பார்வையில், செம்மொழிக்கு ஆக்கஞ் செய்யும் நோக்கில், தமிழின உணர்வோடும், மொழியுணர்வோடும் பாடிப் பறந்த தமிழ்நாட்டுப் பாட்டுக்குயில் வீறுகவியரசர் முடியரசனாரின் கவிதைகள் எந்நாளில் தமிழ்நாடு முழுவதும் முழங்கப்படுமோ, அந்நாளே தமிழினம் விழித்தெழும் நன்னாள்.

வீறுகவியரசர் முடியரசனார் படைப்புகளில் காணலாகும் அறச்சீற்றம்

முனைவர் தமிழ் முடியரசன் *

முகவுரை

குமுகாயத்தில் நிகழுகின்ற அவலங்களுக்கு எதிராகத் தம் பாட்டுத் திறத்தால் உரிமைக்குரல் எழுப்பி, மக்களை ஒன்று திரட்டிப் போராடுவதும், சீர்கேடுகள் ஏதும் தம் நாட்டு மக்களை அணுகாதபடி காத்து நின்று, மூடப் பழக்க வழக்கங்களை முட்டறுத்து முன்னேற்றப் பாதையில் வழிநடத்துவதும் பாவலர்தம் கடமையாகும். அக்கடமையினின்று சிறிதும் வழுவாமல் சென்ற நூற்றாண்டின் முன்னோடிப் பாவலர்களாய்த் திகழ்ந்தவர்கள் பாரதியும், பாரதிதாசனும், முடியரசனும் ஆவர். பாரதிதாசனுக்குப் பிறகு 'பாரதிதாசன் பரம்பரை' என்று ஒரு கவிஞர் பட்டாளமே புரட்சி மிகுந்த பாடல்களைப் பாடி அக்கடமையினைத் தொடர்ந்தது. பாரதிதாசனாரின் பாட்டுப் பரம்பரையில் மூத்த வழித் தோன்றலாய், தன்மானக் கவிஞராய், தமிழியப் புரட்சிக் கவிஞராய்த் திகழ்ந்தவர் வீறுகவியரசர் முடியரசன் ஆவார். அவரது படைப்புகளில் காணலாகும் அறச்சீற்றத்தை இக்கட்டுரை வழி காணலாம்.

முடியரசனாரின் அறச்சீற்றம்

பாட்டுப் பரம்பரையில் பாரதியைத் தன் பாட்டனாராகவும், பாரதிதாசனைத் தன் தந்தையாகவும் ஏற்றுக் கொண்டவர் முடியரசனார். அவர்தம் கவிதைகள் பலவற்றில் குமுகாயச் சீர்கேடுகளைக் கடிந்துரைக்கும் சீற்றத்தையும், கொடுமை கண்டு தாளாது கொதித்தெழும் வெப்பத்தையும் காண முடிகின்றது.

தன்னலம் துறந்து குமுகாய நலனுக்காக அறத்தை நிலை நாட்டச் சீறுகின்ற சீற்றத்தை 'சினம்' என்று கூறவியலாது என்பதால் அதனை அறச்சீற்றம் என்றுரைப்பதே பொருந்தும்.

'எங்கெங்கு காணினும் தீமையடா, உலகெங்கும் வாய்மைகள் ஊமையடா' என்று பாடும் கவிஞர்

---

* செயலாளர், வீறுகவியரசர் முடியரசன் அவைக்களம், காரைக்குடி.

எங்கெது காணினும் வஞ்சமடா – அதை
எப்படித் தாங்கிடும் நெஞ்சமடா
இங்கெவர் போக்கிலும் குற்றமடா - இதை
எண்ணிடும் போதெல்லாம் செற்றமடா
எங்கணுங் கீழ்மையைச் சாடிடுவேன் - மனம்
ஏற்றம் பெறக்கவி பாடிடுவேன்
(நெஞ்சு பொறுக்கவில்லையே, ப.9)

என்னும் பாடலில் குமுகாயத்தில் புரையோடிக் கிடக்கும் தீமைகளைக் களைகின்ற, நோய்களுக்கு மருத்துவம் பார்க்கின்ற பாட்டு வைத்தியராகவும் காட்சியளிக்கின்றார்.

இனவுணர்வு

தன்னிகரில்லாத் தமிழினம் தரம் தாழ்ந்து உழல்வதைக் கண்டு தவிக்கும் கவிஞரின் உள்ளத்தை,

நாயினுங் கீழென வாழ்வதுவோ – திரு
நாட்டின் பெரும்புகழ் சாய்வதுவோ?
ஈயென எங்கணுந் தோய்வதுவோ? – மனம்
ஈனத் தனத்தினிற் பாய்வதுவோ?
போயெதிர் காலத்தை நோக்குகிறேன் - மனம்
புண்பட்டுப் போவதால் தாக்குகிறேன்
வாயினை எப்படி மூடிடுவேன்? – உயர்
வாய்மையைக் காத்திடப் பாடிடுவேன்
(நெஞ்சு பொறுக்கவில்லையே, ப.9)

என்னும் பாடல் எடுத்தியம்புகிறது. தமிழர்களின் கடந்த காலத்தையும், எதிர்காலத்தையும் நிகழ்காலத்தில் நின்றுகொண்டு ஒப்பிட்டுப் பார்க்கும் கவிஞர் தமிழினம் தழைத்தோங்க வழியுரைக்கின்றார்.

தமிழினத்தை மடமையுள் வீழ்த்துவதற்கும், மக்களைச் சாய்ப்பதற்கும் கடவுளும், விதியும், மற்றைய சாத்திரக் கசடுகளும் தான் உடந்தையென்றால் அவற்றையெல்லாம் கடலினுள் வீசிவிட்டு நல்வாழ்விற்கு வழிகாணுவோம் (நெஞ்சு பொறுக்கவில்லையே, ப.80) என்று அழைப்பு விடுக்கின்றார்.

பழி என்றால் உலகமே பெறுவதாயினும் மறுத்தும், புகழ் என்றால் உயிரைக் கொடுத்தேனும் பெறும் மாண்பும் உடைய புறநானூற்றுத் தமிழர் வாழ்ந்த நாட்டில் புகழுக்காகவும், பொருளுக்காகவும் வஞ்சப் பொய்மொழிகள் பல பேசி, நடித்து, உடல் வளர்த்துத் திரியும் வாழ்க்கையை மேலோர் வெறுப்பர் என்றும், உயிர் விடுத்தும் மானத்தைக் காக்கும் வாழ்வையே பகுத்தாயும் அறிவுடையோர் உயர்ந்ததென்பர் என்றுமுரைக்கும் கவிஞர்,

'பாழ் வயிற்றைக் காப்பதெனில் நாயுங் காக்கும்
ஒரு மானங் காப்பதுதான் முறைமை என்றால்
உலகத்தில் வருமானம் போதுமே என்பார்
திரிமானஞ் செய்திருந்து பதவிக் காகத்
தீமை எலாம் செய்துயர்வார்; கொள்கை தன்னிற்
சரியான பிடிமானம் இல்லார் ஒன்றில்
தங்காமற் கிளைதோறுந் தாவித் தாவி
வருவார்தம் வாழ்க்கையிலே மானம் எங்கே
மறைந்துளதென் றாய்ந்திடினும் காண்ப துண்டோ?'

(வள்ளுவர் கோட்டம், ப.47)

என்று பாடி மானமிழந்து வாழ்வது தமிழர் வாழ்வு இல்லை என்று வெகுண்டுரைக்கிறார்.

மொழிப்பற்று

'ஆங்கிலமோ பிறமொழியோ பயின்று விட்டால் அன்னை மொழி பேசுதற்கு நாணுகின்ற தீங்குடைய மனப்போக்கர் வாழும் நாட்டில் தென்படுமோ மொழியுணர்ச்சி?' என்று வினவும் கவிஞர்

எதைக் கண்டு துடிப்பதடா? அந்தோ இங்கே
எதைக்கண்டு கொதிப்பதடா? தமிழ் நாட்டில்
பதைக்கின்ற நிலையல்லால் அமைதி யில்லை;
பைந்தமிழின் நிலைகாணின் நெஞ்சே வேகும்;

(நெஞ்சு பொறுக்கவில்லையே, ப.14)

என்று உள்ளம் வெதும்புகிறார்.

முன்னைப் பழமைக்குப் பழமையும், பின்னைப் புதுமைக்குப் புதுமையும் சீர்மை பெற்றுத் திகழும் நம் தாய்மொழியை எவர் எவரோ பழித்துரைப்பது கண்டும் உணர்ச்சியற்ற மரக்கட்டை போன்றிருக்கும் தமிழர்களைக் கண்டு சீறுகிற கவிஞர்,

பொறுத்திருக்கும் பண்பினுக்குத் தமிழனைப் போல்
பூமிதனில் யாங்கணுமே கண்ட தில்லை;
சுறுக்கென்று சொல்வதெனில் மானம் விட்டோர்
சூடுகெட்டோர் நமைப்போல யாண்டும் இல்லை;
கிறுக்கரெனத் தொழும்பரென அறிவு கெட்டுக்
கீழாகிப் பாழாகித் திரிகின் றோமே!
(புதியதொரு விதி செய்வோம். ப.162)

என்று வேற்று மொழிக்கு அடிமையாகத் திரியும் நிலையை வெறுக்கின்றார். தாய்மொழிப் பற்றுடைய, தன்மானக் குணமுடைய, வீரம் நிரம்பிய தமிழர்களே தேவையென்றுரைக்கும் கவிஞர்,

தாய்மொழி பழித்துப் பேசுந்
தறுதலை எவனுந் தோன்றின்
பாய்புலி யாவர் எங்கள்
பைந்தமிழ் மறவர் என்று
கூய்வரும் மொழியைக் கேட்டுக்
குளிர்ந்ததென் னுள்ள மெல்லாம்;
நாய்களின் வாலைச் சற்று
நறுக்கித்தான் வைக்க வேண்டும்
(தாய்மொழி காப்போம், ப.66)

என்று வெஞ்சினம் உரைக்கிறார். தாய்மொழி வழிக் கல்விதான் சிறந்ததென்று பல்துறை அறிஞர்களும், கல்வியாளர்களும் வலியுறுத்தும் வேளையிலும் தனியார் பள்ளிகள் பலவற்றில் தாய்மொழி வழிக் கல்வி மறுக்கப்படும் நிலையைக் கண்டு நெஞ்சம் குமுறும் கவிஞர்,

அறிவுபெறச் சிந்திக்க ஆய்வு செய்ய
அதற்குரிய நூல்கற்க மேன்மை காணக்
குறியுடையோன் பள்ளிக்குட் செல்லுங் காலை
குலவவரும் இந்தியுடன் ஆங்கிலந்தான்
தெரிவுசெயும் மொழியென்பார்க் கடிப ணிந்தால்
தென்னாட்டு மொழியெதற்குத் தமிழைப் பேசித்
திரிகின்ற இனமெதற்கு? மான மின்றித்
தின்றலையும் வாழ்வெதற்கு? சாவே மேலாம்
(தாய்மொழி காப்போம், ப.51)

என்று 'தமிழ் பயிற்று மொழியாக இல்லாத தமிழகத்தில் தமிழர்கள் மட்டும் இருந்து என்ன பயன்? மொழியைக் கொன்ற பிறகு இனம் எதற்கு?' என்று வினாவெழுப்புகின்றார்.

சாதி மறுப்பு

சாதிகள் ஒழிய வேண்டுமென்று பாடியதனோடு நில்லாமல் தானும் சாதிமறுப்புத் திருமணம் செய்து கொண்டு, தன் பிள்ளைகள் அறுவர்க்கும் சாதிமறுப்புத் திருமணம் செய்து மற்றவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்த கவியரசர் முடியரசனார், பாவேந்தரின் கொள்கைகளைக் கடைபிடிக்காது, அவருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுவதால் எந்தப் பயனுமில்லை என்பதை உணர்ந்திருந்த கவிஞர்,

எவன்விட்டான் சாதியினை? எவன் செய்தான்
கலப்புமணம்? எவனோ எங்கோ
தவறிவிட்டான் செய்துவிட்டான் தவிக்கின்றான்
மற்றவனோ சாதி தன்னைச்
சுவர்வைத்துக் காக்கின்றான் சொல் வீரங்
காட்டுகிறான் துணிய வில்லை;
இவன்கெட்ட கேட்டுக்கு நூற்றாண்டு
விழாவெடுக்க எழுந்தும் விட்டான்
(புதியதொரு விதி செய்வோம், ப.173)

என்று வெதும்புகிறார். 'சாதிகள் இல்லையடி பாப்பா நம்முள் தாழ்வுயர்வு சொல்லுதல் பாவம் என்று முழங்கிய பாரதி செத்துவிட்டான், ஆனால் பாழும் சாதிகளோ சாகவில்லை' (நெஞ்சுபொறுக்கவில்லையே,ப.11) என்று உள்ளம் குமுறுகிறார்.

'சாதிக்கொரு கட்சி, வீதிக்கொரு சங்கம்' – என்ற பிரிவினைகள் இருக்குமட்டும் தேர்தலினால் எந்த மேன்மையும் தமிழர்க்கு வரப் போவதில்லை என்பதை உணர்த்தும் வகையில்,

சாதிகளும் பொய்மொழியும் தன்னலமும்
கையூட்டும் தழைக்கும் நாட்டில்
ஏதுபயன் விடுதலையால்? என்ன பயன்
தேர்தலினால்? எத்தர் வந்தே
ஓதுகிற மொழியெல்லாம் உண்மையென
நம்புபவர் உணர்வு கெட்டு

மேதிகளாய் உள மட்டும் மேதினியில்
தேர்தலினால் மேன்மை யில்லை
(நெஞ்சு பொறுக்கவில்லையே, ப.54)

என்று பாடுகின்றார்.

நிறைவுரை

பாரதி பாடிய அக்கினிக் குஞ்சாய் மொழி, இன விடுதலைக்காகவும், சாதி, மூடப்பழக்கங்களை எதிர்த்தும் அறச் சீற்றத்தோடு பாடிய கவியரசர் முடியரசனாரின் கவிதைகள் காலங்களைக் கடந்து நின்று படிப்போரின், கேட்போரின் மனச்சான்றை உலுக்குகின்ற வீரியமிக்கவை. வீறுகவியரசர் முடியரசனாரின் அறச்சீற்றம் தன்னலம் துறந்த பொதுநலம் சார்ந்தது என்பதை இக்கட்டுரை வாயிலாக நாம் அறிய முடிகின்றது.

வீறுகவியரசர் நிறுவிய வள்ளுவர் கோட்டம்

அ.சி.தியாகராாசன்*

முகவுரை:

தமிழினத்தின் அடையாளமாக உலகெங்கும் பறை சாற்றப்படக்கூடிய தகுதியும் பெருமையும் வாய்ந்த ஒரே நூல் திருக்குறள் என்ற சான்றோர்களின் கருத்தை வேரூன்றச் செய்வதில் பேராவாக் கொண்டிருந்தவர் வீறுகவியரசர் முடியரசனார். திருவள்ளுவர் பற்றியும் திருக்குறள் குறித்தும் பல்வேறு காலக்கட்டங்களில் அவர் வடித்த கவிதைகளின் தொகுப்பே 'வள்ளுவர் கோட்டம்' எனும் நூல்.

இந்நூலின் முன்னுரைக்கு அவர் இட்ட தலைப்பு 'கோட்டவாயில்.' கோட்டவாயிலின் தொடக்கமே "உலகப் பெருமையை நமக்கு ஈட்டித்தந்த ஒரே நூல் திருக்குறள். அத்தகு சிறப்பு வாய்ந்த நூல் தமிழ் மறை என்றுசாற்றவும்படுகிறது.உலகப் பொதுமை ஓதுவதால் பொதுமறை எனவும் புகலப் படுகிறது. அத்தகு பெருமை வாய்ந்தது நம்மறை" என்று மிகச்சிறப்பாகத் திருக்குறளுக்கு மகுடம் சூட்டுகிறது.

நூல் பெயர்க் காரணம்

"வள்ளுவம் பற்றிய பாடல்கள் தொகுக்கப் பெற்றமையால் வள்ளுவர் கோட்டம் என்னும் பெயருடன் இந்நூல் உலா வருகிறது" என்று முடியரசனார் தம் முன்னுரையில் குறிப்பிடுகிறார். ஆயினும் கூர்ந்து நோக்குமிடத்துகற்களால் சென்னையில் அழகுற அமைக்கப்பட்ட மாளிகையாம் வள்ளுவர் கோட்டம் போன்று, கவிநயமிக்க சொற்களால் காலத்தை விஞ்சி நிற்கும் ஒரு கோட்டம் எழுப்ப வேண்டும் என்ற எண்ணக் கிடக்கை அவர் மனத்துள் இருந்திருக்க வேண்டும். அந்த எண்ணத் தூண்டலே இப்படிப் பெயரிட அவரை உந்தியிருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது.

கவிஞரின் ஆதங்கம்

உலகப் பொதுமறை என்று ஏற்றுக்கொள்ளப்படத்தக்க அறநூலுக்கு 'தேசிய நூல்' என்ற முத்திரை கூடப் பெற முடியவில்லையே என்ற மனக்குமுறல் கவிஞருக்கு இருந்திருக்க

* திருக்குறள் பட்டயப் படிப்பாளர், பாரதிதாசன் பல்கலைக்கழகம்.

வேண்டும். அதற்குக் கூட அரசியல் மற்றும் பிற காரணிகள் இருக்கலாம் என்று கவிஞர் ஆற்றுப்பட்டிருப்பார். ஆயினும் நம் தமிழ் மக்களே குறளின் பெருமையை உணராமல் இருப்பதும் குறள் வழி நிற்க முனைப்புக் கொள்ளாததும் வீறுகவியரசரை வெகுவாக நோகச் செய்திருக்க வேண்டும்.

"திருக்குறள் எங்கள் வாழ்க்கைத்
திருமறை என்று கூற ஒருத்தரை இங்குக் காணேன்"
(கவிதைத் தலைப்பு – உய்யுமோ தமிழர் நாடு)

"வள்ளுவனை விற்றதுபோல் நினைந்து கொண்டு
வள்ளுவற்கும் நமக்குமினி உறவே இல்லை
உள்ளுவதும் முறையிலைஎன்றெண்ணிப் போலும்
ஒதுக்கியது தமிழ்மறையைத் தமிழர் நாடு"
(கவிதைத் தலைப்பு – எந்நாளோ?)

என்றெல்லாம் கவிஞர் பாடுவதிலிருந்து எவ்வளவு மனம் வெதும்பி தம் உள்ளஉணர்ச்சிகளை எழுத்தில் வடித்திருக்கிறார் என்பது புரியும். மக்களெல்லாம் தமிழ் மறையின் பெருமை உணர்ந்து அதன் வழி நின்று தங்களைச் சூழ்ந்திருக்கும் பிணியும் மடமையும் நீங்கி உய்வது எப்போது என்பதையும்

"சாதியினால் சமயத்தாற் பிளவுபட்டுத்
தனியுடமைப் போக்கதனால் தாழ்வுபட்டு
மோதுண்டு போகாமல் காத்து நிற்கும்
முன்னேற்றக் கொள்கைஎனும் சமத்துவத்தை
ஓதுகின்ற குறள் நூலைப் பெற்றிருந்தும்
ஒன்றேனும் பற்றாமல் ஒழுகுகின்றோம்
தீதகன்று மாந்தரெலாம் வாழவேண்டிச்
செயல்வடிவம் தருதிருநாள் எந்த நாளோ?"

என்ற வரிகளால் தன்வேதனையைவெளிப்படுத்துகிறார் கவிஞர்.

கவிஞரின் தன்னடக்கம்

நாடறிந்த கவிஞர் நற்றமிழ் வித்தகர் பாவேந்தர் வழித்தோன்றல் பண்பட்ட தமிழ் அரிமா வீறுகவியரசர் என்றெல்லாம் அறியப்பட்ட காலத்திலேயே வள்ளுவர் கோட்டத்தை வடிக்கின்ற வேளையில்

"மூவாப் புகழ்கொண்ட முப்பாற் சிறப்பை ஒரு
நாவால் தொகுத்துரைக்க நாம்முனைதல் - மேல்வானைக்
கையால் முழம்போட்டுக் காட்ட நினைப்பதுவாம்"

(கவிதைத் தலைப்பு –முப்பால் அமுது)

என்று மிகவும் தன்னடக்கத்தோடு கவிஞர் சொல்வது 'வியவற்க எஞ்ஞான்றும் தன்னை (குறள் 439) 'பணியுமாம் என்றும் பெருமை' (குறள் 978) என்கிற குறள் நெறிகளோடு ஒத்து, எந்த வகையிலும் தம்மை முன்னிறுத்தாமல், வள்ளுவத்துக்குச் சிறப்புச் செய்வதிலேயே கவிஞர் குறியாக இருந்திருக்கிறார் என்பதைப் புலப்படுத்தும். வள்ளுவத்திலேயே தோய்ந்த கவிஞர் மிகவும் தன்னடக்கத்தோடு பாடுவது சற்றும் வியப்பன்று.

தமது குறள் நெறி வாழ்க்கையிலும் கவிஞர் மிகவும் உறுதியாகவும் நம்பிக்கையோடும் இருந்திருக்கிறார்.

"வள்ளுவனார் சொல்லிவைத்த வாழ்வுக் குறள்நெறியில்
எள்ளளவுங் கோடா தொழுகிவருங் கொற்றவன்யான்"

(கவிதைத் தலைப்பு –குறள்நெறிக் கொற்றம்)

என்று கவிஞர் தம்மைப் பற்றிக் கூறியுள்ளது இங்கு நோக்கத்தக்கது. அவ்வாறே தம் தமிழ் இனத்தாரும் குறள்நெறியைக் கடைப்பிடித்து வாழவேண்டும் என்பதை,

"மடமை அகன்றிட மாந்தெனென் றுயர்ந்திட
வாழ்வினைத் துலக்கிடத் தாழ்வினை விலக்கிட"
"எதையெதையோ மறை என்றுநீ போற்றினை"
"காயினைக் கவர்ந்தனை கனியினை மறந்தனை
கருத்தினில் ஒருகுறள் நிறுத்திடின் உயர்ந்தனை"

(கவிதைத்தலைப்பு – திருக்குறள் நம்மறை)

என்ற வரிகளால் உணர்த்துவார். தமது குறள்நெறி நடக்காமல், ஆரவாரத்துக்காக தம் பெயரில் விழா எடுப்பது கண்டு திருவள்ளுவரே வருந்துவதாக

"என்பெயரைச் சொல்லி எடுக்குந் திருநாளில்
என்னை யறியா திருக்கின்றாய்..."
(கவிதைத் தலைப்பு –கனவின் நிழல்)

என்று குறிப்பிடுவார். திருக்குறளைப் பற்றிய விழிப்புணர்வு அற்றவர்களாக தம் இனத்தவரும் கற்றறிருந்த பெருமக்களும் கூட இருப்பது கண்டே 'வள்ளுவர் கோட்டம்' வாயிலாக தமிழரின் மனக்கதவைத் திறக்க வீறுகவியரசர் முயற்சித்திருக்கிறார்.

பல்வேறு மேடைகளில் வள்ளுவர் நெறியையும் அதன் பிழிவையும் கவிஞர் பாடியிருப்பதை அறம், பொருள், இன்பம் என்ற குறளின் முப்பால் அடுக்கிலேயே நாம் காணலாம்.

அறம்

சிறப்பினும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு (குறள் 31)

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற (குறள் 34)

என்ற குறள்களால் அறத்தின் சிறப்பை,அதன் கூறுகளை வள்ளுவர் வரையறை செய்வார்.இதையே வீறுகவியரசர்

"அறத்தைவிடச் சிறப்பளிக்கும் ஆக்கம் இல்லை
அவ்வறத்தை மறப்பதைப்போற் கேடும் இல்லை
அறத்தாலே வருவதொன்றே இன்பம் ஆகும்
அஃதின்றேல் புகழில்லை பொருளும் இல்லை"
(கவிதைத் தலைப்பு –அறத்தின் வழிகாட்டி)

என்று விரித்துரைக்கின்றார். அறச்செயலை எல்லோரும் செய்ய வேண்டும் அதுவே மனக்கவலை தீர்க்கும மாமருந்து என்றும் அறுதியிட்டுக் கூறுகின்றார்.

மாடமாளிகைகள், கூட கோபுரங்கள், வளந்தரு நிலங்கள், வந்திறங்கிய ஊர்திகள், பொன்னும மணியும் புதுக்கிச் செய்த அணிகலன்களைக் காட்டிலும் வள்ளுவர் காட்டும் அன்பு, அடக்கம், ஒழுக்கம், பொறை, அருள் ஆகியவையைக காலமெலாம் உயர்வும் மேன்மையும் தரக்கூடிய உடைமைகள் என்பதை

"மனமென்னுங் குரங்கடக்கி, வரம்புமீறும்
வாயடக்கி, நினைந்தவெலாஞ் செய்து காட்டும்
தினவென்னுஞ் செயலடக்கி, மயலடக்கித்
திரிபின்றி வாழ்பவர்க்குத் தாழ்வேயில்லை"
(கவிதைத் தலைப்பு –வள்ளுவர் கண்ட உடைமைகள்)

என்னும் வரிகளில் வீறுகவியரசர் விளம்புகிறார்.

"ஏதிலார் குற்றம் போல் தம் குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மண்ணும் உயிர்க்கு"

என்ற புறங்கூறாமை பற்றிய வள்ளுவத்தை

ஏதிலார் குற்றம் எடுத்தியம்பித்
தீதுகள் சேர்க்கத் தெரிந்தனை நின்பாற்
சேர்ந்து குற்றம் தேர்ந்துணர் பெற்றிமை
பெற்றாயல்லை பெற்றனையாயின்
உற்றொரு தீதும் உனைவருத்தாதே"
(கவிதைத் தலைப்பு –வாழ்க்கைக்குத் தலைவன்)

என்னும் வீறுகவியரசர் கவித்துளிகள் புடம்போட்டுக் காட்டும்.

திருக்குறளின் விழுமியங்களுக்கு வலு சேர்க்கும் குரலில்
"எத்துணைதான் கற்றாலும் ஒழுக்கமென்ற
இலக்கணத்தைக் கல்லாதான் அறிவேயில்லான்"
(கவிதைத் தலைப்பு – வள்ளுவர் கண்ட உடைமைகள்)

என்று கடுமையாகவே ஒழுக்கமின்மையைச் சாடியும் கவிதை படைத்த வீறுகவியரசர் அதே கவிதையில் அருட்செல்வம் குறித்துப் பாடுகையில்,

'பொருளுடைமை புல்லர்க்கும் வாய்ப்ப தாகும்
…….. அருளுடைமை சான்றோர்க்கே அமைவதாகும்''

என்பார். இதையேவள்ளுவப் பெருந்தகை

"அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள (குறள் 241)

என்ற குறளால் சூட்டுவார்.

பொருள்:

திருக்குறளின் பெரும்பான்மையான பகுதி பொருட்பாலிலேயே அடங்குவது நாம் அறிந்ததே.

"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு" (குறள் 247)

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள் (குறள் 751)

என்ற குறள்களால் பொருட்செல்வத்தின் இன்றியமையாமையை விளக்கும் வள்ளுவர்

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்றுடைய ரேனும் இலர்" (குறள் 430)

என்ற குறளின் மூலம் அறிவு இல்லாதவர்க்கு வேறு எந்த செல்வச்சிறப்பு இருந்தாலும் அதனால் பயன் இல்லை என்பார்.இதையே வீறுகவியரசர்சொல்கிறார். . . .

"அளப்பரிய செல்வங்க ளுடைய ரேனும்
அறிவென்னும் ஒருசெல்வம் இல்லா ராயின்
வளப்பமது காணாத வறிய ராவர்
வளரறிவு பெற்றரே எலலாம் பெற்றார்."
(கவிதைத் தலைப்பு – வள்ளுவர் கண்ட உடைமைகள்)

மேலும் வள்ளுவர் வலியுறுத்திய ஊக்கம், ஆள்வினை, நாண், பண்பு, மானம், சால்பு ஆகிய விழுமியங்களையே வள்ளுவர் கண்ட உடைமைகளாகக் கவிஞர் குறிப்பிடுகிறார்.

"உரங்தோயு முடலழகன் கண்கா லாய
உறுப்பழகன் ஆயினுநற் பண்பில் லானேல்
அரம்போலுங் கூரறிவிற் பெரிய னேனும்
அவன்மாந்தன் எனவுரையா துலகம் நல்ல
மரம்போலுங் தோற்றத்த னெனப் பழிக்கும்."
(கவிதைத் தலைப்பு –வள்ளுவர் கண்ட உடைமைகள்)

என்று

"அரம் போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பில் லாதவர்" (குறள் 997)

என்ற குறளுக்கு பொருத்தப்பாடு காண்கிறார் கவிஞர்.

சாதி சமயப் பிரிவுகளால் பிறப்பில் வேற்றுமை காணும் புல்லறிவுக்கு 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்ற சொல்லால் நல்லறிவு காட்டிய வள்ளுவரின் வழி நின்று

"வேக்காடு சாதிக்கு வைக்கும் நாளே
வியனுலகப் புகழ்நமக்குக் கிட்டும் நாளாம்
நோக்காடு கொண்டொழுகுஞ் சமுதா யத்தில்
நூறுவகைச் சாதிகளாற் பயனே இல்லை"
(கவிதைத் தலைப்பு - சாதிப்போர்)

என்று முழங்குகிறார் வீறுகவியரசர்.

"வாலாட்டி நாளெல்லாம் வம்புசெயும் மாந்தரைமுப்
பாலூட்டி ஆளாக்கும் பாவலன்......."
(கவிதைத் தலைப்பு -இம்மைநலம்துய்ப்போம்)

என்று வள்ளுவருக்குக் கவிஞர் சூட்டும் புகழாரம்.

"இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு" (குறள் 987)

என்ற குறளின் எதிரொலியாகவே அமைந்திருப்பதும்கண்கூடு.

வீறுகவியரசர் முடியரசனாரைத் தன்மானக்கவியரசர்என்றும் கூறுவர். அவரின் தன்மான உணர்வு தமிழ் இலக்கிய,அரசியல் உலகு நன்கறிந்தஒன்று. அந்த உணர்வை வெளிக்காட்டுவதாகவே அவரது கவிதை ஒன்றில்,

"உயிர்விடுத்தும் மானத்தைக் காக்கும் வாழ்வே
பகுத்தாயும் அறிவுடையார் உயர்நததென்பர்
பாழ்வயிற்றைக் காப்பதெனில் நாயுங் காக்கும்"
(கவிதைத் தலைப்பு –மானங்காப்போம்)

என்று சொற்கள் சாட்டையாகச் சுழலும். வள்ளுவ நெறியில் கவிஞருக்கு உள்ள ஈடுபாடு, இதே கவிதையில் வரும்,

"தன்னிலையிற் றாழாமை வேண்டும் வேண்டும்
தாழ்வுவரின் வாழாமை வேண்டும் வேண்டும்
தன்னுயிரை மிகச்சிறிதா எண்ணல் வேண்டும்
தகுமானம் ஒன்றனையே காத்தல் வேண்டும்"

என்ற வரிகளில் உணரப்படும்.

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்" (குறள் 969)

என்ற குறளோடும் கவிஞரின் உணர்வு பொருந்தி நிற்கும்.உலகத்தார்க்கு ஆணியாக விளங்குகிற உழவர் பெருமக்களைப் பாடும் போது

"அழுதுண்டு வாழ்கின்றான் உலகைக் காக்க
அமுதுதிரும் அவ்வுழவன் முறையோ ஈது?"
(கவிதைத் தலைப்பு –சிரிப்பும் அழுகையும்)

என்று உழவர்பெருமக்களின் துயர நிலையைக்கவிஞர் எடுத்துரைப்பது

"உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம் என்பார்க்கும் நிலை" (குறள் 1036)

என்ற திருக்குறளின் எச்சரிக்கை மணியைப் போன்றே நம் காதுகளில் ஒலிக்கிறது.

காமத்துப்பால்

இந்தப்பால் அருந்தப்படக்கூடாதது என்பது போன்று

"காமமெனுஞ் சொல்லொலியைக் கேட்டு நெஞ்சங்
கலங்கியிது கொடுநெறியாம் வேணடா"
(கவிதைத் தலைப்பு –குறள்மனிதன் குறிக்கோள்)

என்று பாமரரைஏய்க்கிற சிலரை நமக்குக்காட்டி,நயத்தக்க பண்பாட்டுக் கூறாக வள்ளுவர் மொழிந்த காமத்துப்பாலை

"விற்போலும் விழியுடையார் ஆண்மை சேர்க்கும்
விழைவுடையார் காதலராய் உலவக் கண்டேன்
பொற்பாரும் மெய்க்காதல் விழைவரன்றிப்
புனைந்துவரும் மெய்காதல் கருத மாட்டார்
கற்பாளர் கைகளினால் தொடவும் மாட்டார்
கண்களினால் காதல்மொழி பேசி நிற்பார்
மற்போர்கள் நிகழ்த்துகிற மறவரைப் போல்
மண்தரையில் புரள்கின்ற நிலையும் வேண்டார்"
(கவிதைத் தலைப்பு – வள்ளுவர் உலகில் குடும்ப வாழ்வு)

என்று காதலின் உயர்வை விரித்துரைப்பார். முற்றாக 'ஆருயிர்கள் தளிர்ப்பதற்கே காமஞ் சொன்னார்' என்று காமத்துப் பாலின் நோக்கத்தையும் கவிஞர் எடுத்தியம்புவார்.

முடிவுரை

இவ்வளவு பெருமைக்கும் சிறப்புக்கும் உரிய திருக்குறள் நெறியை இதுகாறும் பின்பற்றத் தவறிய தமிழ் மாந்தர். அறிவுத்திறம் பெற்று விளங்கவும் தங்கள் வாழ்க்கையை செம்மைப் படுத்திக் கொண்டு அமைதியும் வளமும் மிக்க நாட்டை உருவாக்க திருக்குறளைக் கற்றுணர்ந்து அதன் நெறிவழி செயல்பட வேண்டும் என்று

"ஒப்பரிய குறள்நெறியை உடைமையாக்கி
அள்ளுதமிழ்ப் பாமொழியை நெஞ்சிற் றேக்கி
அளப்பரிய இன்பத்தில் திளைப்போம் வாரீர்"
(கவிதைத் தலைப்பு –வள்ளுவன் கண்ட உடைமைகள்)

என்கிற வரிகளால் அழைப்பு விடுக்கிறார். வரும் காலத்திலேனும் மக்கள் குறள் நெறி உணர்ந்து வாழ வேண்டும் என்பதை

"பெற்ற புலத்தால் பெரியோன் குறளையினிக்
கற்றுக் கசடறுத்துக் கற்றவற்றை நெஞ்சிருத்திப்
பாட்டை தெளிந்துணர்ந்து பாட்டை விலகாமல்
நாட்டில் நடை பயில்வோம் நாம்"
(கவிதைத் தலைப்பு –நடை பயில்வோம்)

என்று குறள்வழி நடக்கக் குரல் கொடுக்கிறார் வீறுகவியரசர்.

இவ்வாறு வீரியமிக்க கவிதைகளால் திருக்குறளின் சிறப்பையும், அதன்பால் தமக்குள்ள ஈடுபாட்டையும் எடுத்தியம்புகிற வீறுகவியரசரின் வள்ளுவர் கோட்டம் எனும் இக்கவிதைக் கோட்டம் திருக்குறளின் மாட்சிமைக்கு காலமெலாம் கட்டியங்கூறி, அரசு எழுப்பிய அழகு மண்டபமாம் 'வள்ளுவர் கோட்டம்' போன்றே தமிழ் இனத்தின் இன்னொரு அடையாளச் சின்னமாக விளங்கும் என்பது உறுதி.

'நெஞ்சு பொறுக்கவில்லையே' நூலில் காணலாகும் குமுகாயச் சீர்திருத்தம்

சு.தொண்டியம்மாள் *

கவிஞர் முடியரசன்

"கூண்டின் கதவுகள் திறந்தன என்
கோலச் சிறகுகள் விரிந்தன
யாண்டும் நினைவுகள் பரந்தன என்
ஆசைக்கனவுகள் உயர்ந்தன"

எனப் பாடுங்குயிலாய்ப் பாரதிதாசன் கவிதைப் பரம்பரையில் பூத்த மலர்தான் கவிஞர் முடியரசன் தமிழகத்தின் மூத்த தலைமுறைக் கவிஞர்களில் ஒருவர்.

கல்லூரியில் பயின்றுவந்த காலத்தில் சிவகங்கை மாவட்டம் திருப்புத்தூரில் அறிஞர் அண்ணா ஆற்றிய சொற்பொழிவைக் கேட்டு துரைராசு என்ற தமது பெயரை முடியரசன் என மாற்றிக் கொண்டார்.

பாரதிதாசனின் சொற்பொழிவைக் கேட்டு நாடு, மொழி, இனம், பற்றிப் பாடியவர் பகுத்தறிவுக் கொள்கையால் ஈர்க்கப்பட்டவர். இதன் விளைவாக தனது 21 ஆம் வயதில் 'சாதி என்பது ஏனோ?' என்னும் தனது முதல் கவிதையை எழுதினார்.

நெஞ்சு பொறுக்கவில்லையே (1918)

இந்திய நாடு விடுதலை பெற்று முப்பத்தெட்டு ஆண்டுகளுக்கு பிறகு படைக்கப்பட்ட நூல் நெஞ்சு பொறுக்கவில்லையே இந்நூலில் அவரது உள்ளக் குமுறலும் ஆதங்கமும் வெளிப்படுகிறது. "விடுதலை பெற்ற பிறகு அடிமை அகன்றது. மக்களாட்சி மலர்ந்தது மகிழ்ச்சி. ஆனால் விடுதலை பெறுவதற்காகச் சிந்திய குருதியைவிடப் பெற்ற பின் சிந்தும் குருதிதான் மிகுதியாக வருகிறது. குடியரசு நாடு போர்களில் வெற்றி அறிவியல் முன்னேற்றம் என்று முன்னேறிச் சென்றாலும், பண்பாடு, ஒழுக்க நெறி, சாதி சமய பூசல்கள் போன்றவைகளில் முன்னேறவில்லை. பிறரைச் சுரண்டி வாழ்வது, ஏமாற்றிப் பிழைப்பது, தலைவர்களைச் சுட்டுக் கொல்வது போன்ற பண்புகளில்தான் முன்னேறி

---

* கௌரவ விரிவுரையாளர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவாடானை.

உள்ளோம்'' எனத்தன் கவிதையின் மூலம் உள்ளக்குமுறலை வெளிப்படுத்தினார்.

'நெஞ்சு பொறுக்குதில்லையே' என்ற தலைப்பில் கவியரசு முடியரசன் உலகத்தில் எங்கு பார்த்தாலும் தீமைகள் மட்டுமே காணப்படுகின்றன. வாய்மைகள் ஊமையாகவும், இளையவர், கற்றறிந்த முதியவர், ஆண்கள், பெண்கள் அனைவரும் தங்களது வாழ்க்கைக்காகத் தீவினைகளையே செய்கின்றனர். ஆறறிவு படைத்த விலங்காகவும் தந்நலம் மட்டுமே கருதுகின்றனர் என்று மக்களை சாடுவதோடு இனிவரும் காலம் இளைஞர்கள் கையில் உள்ளது என்பதைக் காளைகளாகிய இளைஞர்கள் நாட்டைக் காக்கத் தீமைகளைக் களையவும், நல்ல நூல்களைப் படித்துத் தீய குணங்களை விரட்டியடித்து நல்ல பண்புகளையும், தூய எண்ணங்களையும் வளர்த்திட வேண்டும் என்று தன் வேதனைகளை உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்தியுள்ளார்.

சாதி ஒழிப்பு

"சாதிகள் இல்லையடி பாப்பா'' என்று கூறிய பாரதியும் இறந்துவிட்டான். ஆனால் நம்மிடையே சாதிகள் இன்னும் சாகவில்லை. பாவேந்தர், பெரியார், இராமலிங்கர் போன்றவர்கள் கூறிய அறிவுரைகள் மேடைகள் தோறும் கூறப்பட்டாலும் எதுவும் மாற்றம் அடையவில்லை. எதிர்காலம் இளைஞர்கள் கையில் என்று தம்பி வானம் பெரியோர்களின் நிலை என்று மாறும். பத்திரிக்கைகளும், திரைப்படங்களும் நன்மையை ஊட்டாமல் தீமைகளையே விதைக்கின்றனர்.

சாதி ஒழிப்பு மட்டும் இல்லாமல் பிறமொழி ஆதிக்கத்தையும் ஒழிக்க வேண்டும் எனத் தன் கவிதைகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

நாளைய சமுதாயம் இன்றைய மாணவர்களாகிய இளைஞர்களின் கைகளில் உள்ளது என்பதை உணர்ந்த கவிஞர் முடியரசன் தன் கவிதைகளில் அவர்களைச் சாடுவதையும் மறக்கவில்லை.

காளையரும் மங்கையரும் அகத்து றைக்குள்
களவியலை ஒத்திகைபார்த் திருக்குங் கூடம்
தோளுயரும் பொழுதத்தில் ஆசா னோடு
தொடுக்கின்ற போர்நடத்தும் களமும் ஆகும்

என்று கருதும் மாணவர்களின் இன்றைய நிலையை எண்ணி நகையாடுகிறார். மாணவர்கள் அவர்களின் கடமையையும், பெற்றோரின் கனவுகளையும், நாட்டின் முன்னேற்றத்தையும் உள்ளத்திலிருத்திச் செயல்பட வேண்டுமெனத் தனது ஆதங்கத்தினை பாடல் வரிகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

இன்றைய நிலையில் மாணவர்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை விடுத்து பிற வழியில் செல்கின்றனர் என்பதை அறிவுத் தேடலுக்கான நூலகத்தையும், இதழ்களையும் தன் கையில் எடுக்காமல் தேவையற்ற ஒப்பனைகளிலும், அரசியலிலும் ஈடுபட்டு தங்கள் வாழ்க்கையை தீய வழியில் எடுத்து செல்கின்றனர் என்பதை ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றார்.

பெற்றோர் - ஆசானின் பணி

எந்தக் குழந்தையும் மண்ணில் பிறக்கையில் நல்ல குழந்தை தான் அது நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே என்னும் வரிகளுக்கு ஏற்பத் தங்களது கடமைகளை பெற்றோர்கள் சரிவரச் செய்ய வேண்டும். தங்கள் நிலையை மறந்து தூங்கினால் பிள்ளைகளின் வாழ்க்கையும் தூங்கிவிடும். மாதா, பிதா, குரு, தெய்வம் என்று கூறுவதால் தெய்வத்திற்கு முன்னதாக ஆசான் போற்றப்படுகிறான். ஆதலால் மாணவர்களின் நிலை அறிந்து அவர்களுக்குத் தேவையான நல் அறிவுரைகளையும், நன்மை, தீமைகளையும் எடுத்துக் கூறி அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். ஆசான் என்பவன் அறிவை மட்டுமல்லாமல் அனைத்தையும் கற்றுத்தரும் கடவுளாக விளங்க வேண்டும் என்று தன் கருத்துகளைத் தெளிவாக கூறியுள்ளார்.

புலவர்களின் நிலை

நாளையுல காள்பவரை நமதுகையில்
ஒப்படைத்தார் நாட்டு மக்கள்
காளைகளைச் சிறுவர்களைக் கண்மணிபோற்
காப்பது நம் கடமையாகும்

நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்று கூறிய நக்கீரன் மரபில் வந்த புலவர்கள் தங்களின் கடமைகளை அறிந்து செயல்பட்டார்கள். ஆனால், இன்றைய புலவர்களின் நிலை தலைகீழாக மாறியுள்ளது. குணங்களையும், குற்றங்களையும் நல்வழியில் எடுத்துச் செல்ல வேண்டும். தனது பொறுப்புகளையும் பணியையும் சரிவரச் செய்ய வேண்டும் என்று சாடுகிறார்.

நியாயம்:

பெயரில் மட்டுமே உள்ளது நியாயம். நியாயத்தை விற்பர் நியாய விலைக்கடையில். விடுதலை அடைந்து விட்டோம். விழாக்கள் நடத்தி விட்டோம். விண் கூடத்தில் ஏறிவிட்டோம். ஆனால் என்ன பயன் ஏழை மக்களின் நிலை மாறவில்லை. விடுதலையால் பயன் ஏதும் இல்லை வேளைதொறும் நுகர்பொருள் வாங்கிச் செல்லும் பாமரனின் நிலையில் எந்த மாற்றமும் இல்லை. நிழலில் அமர்ந்திருப்போருக்கு வெயிலின் கொடுமை தெரிவதில்லை. பெரும்புரட்சி ஏற்பட்டால் மட்டுமே இந்த நிலை மாறும். மக்களின் துயர் நீங்கும் என்று தம் பாடல் வரிகளில் அழுத்தமாக பதிவு செய்துள்ளார்.

நடனப் பாடல்களுக்கான கவியரசர் முடியரசன் கவிதைகள்

முனைவர் மா.சுப.சரளா *
வே.நிருபா *

தமிழின் சிறப்பு

காலத்தால் அளவிட இயலாத தொன்மை வாய்ந்த மொழி தமிழ்மொழியே. நம் தாய்மொழியான தமிழ்மொழி அதன் பரிணாமவளர்ச்சியில் பல்வேறு வரிவடிவங்களைப் பெற்று, வளர்ந்து, தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற மொழிகளை உருவாக்கி இன்று செம்மொழி எனும் அடைமொழியைப் பெற்று இன்னும் வளர்ந்து உலக அரங்கில் வெற்றி நடை போட்டுகொண்டிருக்கிறது என்றால் அது மிகையாகாது. இயல் இசை நாடகம் எனும் மூன்று பிரிவுகளைத் தன்னுள் கொண்டுள்ள தமிழ்மொழி பிற மொழிகளுக்கு இல்லாத பலவகைச் சிறப்புகளை கொண்டு திகழ்கிறது. ஒரு மொழியை இசை மற்றும் நாடகத்துடன் இணைத்துப் பார்க்கும் இயல்பே நம்மொழி கொண்டுள்ள சிறப்புகளுள் ஒன்றாகும். மொழியோடு தமிழ்க்கலைகளும் வளர்க்கப்பட்டது என்பது அறிஞர் கூற்று.

நடனக்கலை

“ஆயகலைகள் அறுபத்து நான்கு” என்ற கம்பரின் வரிகளுக்கு ஏற்ப, எழில்மிகு கலையாக விளங்கும் நடனக்கலை நாம் போற்றி வளர்த்த தமிழ்கலைகளுள் ஒன்றாகும். உலக மக்களுக்கு தமிழகம் அளித்த அரிய கலை பரதக்கலை. முந்தைய காலத்தில் கூத்து என்றும், சதிர் என்றும் அழைக்கப்பெற்று பின்பு பரத நாட்டியம் என்ற பெயரோடு திகழும் ஒரு கவின் கலையாகும். இது தமிழரின் கலை என்பதற்கு எடுத்துக்காட்டாக அகத்தியம், தொல்காப்பியம், சிலப்பதிகாரம் போன்ற தமிழ் தொன்நூல்களில் பரதநாட்டியம் பற்றிய குறிப்புகளும், ஆடல்முறைகளும் இலக்கணமாக வகுக்கப்பட்டுள்ளதன் மூலம் அறியலாம். மனதில் தோன்றும் கருத்தினை அல்லது உணர்ச்சியினை, கவின்மிகு கவிதை வரிகளின் மூலம் ஆடுபவரின் அங்க அசைவுகளை வகைப்படுத்தி தாளத்திற்கேற்ப இசையோடு சேர்ந்து காண்பவர் எளிதில் உணர்ந்து கொள்ளும் வண்ணம் அமைந்த

---

* இயக்குநர், நுண்கலைத்துறை, அழகப்பா பல்கலைக்கழகம்.
* ஆராய்ச்சி மாணவர்: (AURF), நுண்கலைத்துறை, அழகப்பா பல்கலைக்கழகம்.

கலையே பரதக்கலை. இதன்மூலம் நடனக்கலை முத்தமிழையும் தன்னுள் கொண்டது எனக் கூறலாம்.

பதவர்ணத்தின் அமைப்பு

இத்தகைய சிறப்பு வாய்ந்த நடனக்கலையில் பலவிதமான பாடல் அமைப்புகள் உள்ளன. அவற்றுள் முக்கியமானதாகக் கருதப்படுவது வர்ணம் என்னும் உருப்படியாகும். பெரும்பாலும் நாட்டியத்தில் ஆடப்பெறும் வர்ணங்களைப் "பத வர்ணம்" என்று வகைப்படுத்துவர். இதில் கவிதைவரிகள் (சாகித்யம்) மிகுதியாக இருக்க வேண்டும். பாடல்வரிகளுக்கு ஏற்ப அபிநயமும் பின்பு ஸ்வரக்கோர்வைகளுக்கு ஏற்ப அடவுகளும் அமைக்கப்படும். பதவர்ணத்தின் முதல் பகுதியில் (பூர்வாங்கம்) பல்லவி, அனுபல்லவி, முக்தாயிஸ்வரம், முக்தாயி ஸ்வர சாகித்யமும், இரண்டாம்பகுதியில் (உத்தராங்கம்) சரணம், சிட்டை ஸ்வரங்கள், சிட்டை ஸ்வரங்களுக்கான பாடல்வரிகளும் காணப்படும். உத்தராங்கத்தின் முக்கிய அமைப்பாக சரணத்தை அடுத்துவரும் முதல் இரண்டு அல்லது மூன்று சிட்டை ஸ்வரங்கள் ஒரு ஆவர்த்தனமாகவும் (தாள வட்டம்), பின்னர் வருவம் கவிதை வரிகளும் ஸ்வரங்களும் இரண்டு அல்லது நான்கு ஆவர்த்தனமாக இருத்தல் வேண்டும்.

கவியரசர் முடியரசனின் செயலாக்கம்

இத்தகு பதவர்ண அமைப்பிற்கு ஏற்ப கவியரசரின் படைப்புகள் இருப்பது சிறப்புக்குரியதாகும். ஓசை சந்தத்துடன் கூடிய ஒத்திசை பண்புச் சொற்களால் உணர்ச்சி, கற்பனை மற்றும் கருத்துக்களை வெளிப்படுத்த உதவும் இலக்கிய வடிவமே கவிதையாகும். இச்சிறப்பு வாய்ந்த கவின்கலைக்கு அரசராகத் திகழும் முடியரசன் அவர்கள் சமூகமும், மக்களும் எப்படி இருக்க வேண்டும் என்ற நோக்கோடு தமது கவிதைகளை அமைத்துள்ளார். (உதாரணமாக) சங்க இலக்கியம் பற்றிய கவிதையே பரதத்தின் முக்கிய உருப்படியான வர்ணமாகக் கையாளப்பட்டுள்ளது.

"சாற்றி வளர்த்திடுவாய் -நம்
சங்க இலக்கிய பெருமையெல்லாம் இங்கு"
-சங்க இலக்கியம் (காவியப்பாவை)

சங்க இலக்கியத்தின் சிறப்பை எளிமையான தமிழில் அனைவரும் அறியும் வண்ணம் பதவர்ணத்திற்கு ஏற்றாற்போல்

இயற்றியுள்ளது கவியரசரின் (ஏநசளயவடைவைல) செயலாக்கத்தை எடுத்துரைக்கிறது. இந்த சங்க இலக்கிய வர்ணமே காரைக்குடி கலைக்கோயில் நடனப்பள்ளியில், கலைமாமணி முனைவர் மா.சுப.சரளா அவர்களின் முதல் நடன அரங்கேற்றத்திற்கு ஆடப்பெற்றதோடு, கவியரசர் முடியரசன் முன்னிலையிலேயே அரங்கேறியது என்பது சிறப்புக்குரிய ஒன்றாகும்.

மேலும் ஸ்வரஜதி எனப்படும் நடன உருப்படிக்கு முனைவர் சரளா அவர்கள் சந்தமாகப் பாட, சிங்கார ரசத்தில் அமைந்த பாடல்வரிகளைத் தவிர்த்து, குழந்தைகளும் உணர்ந்து நடம்புரியும் வண்ணம், எளிய தமிழில் பக்திரசத்தில் இயற்றித் தந்தது மற்றொரு சிறப்பாகும்.

"ஓடி வா வேகமாக மாமயிலுடன்"

இசை மற்றும் நடனக்கலையின் நுணுக்கங்களை அறிந்து கவிதை படைப்புகளை அமைத்த கவியரசர் முடியரசன், நடனக்கலையின் சிறப்பை

பாடற் கலைசொன்னோம் பாடல் துணையாக
ஆடற் கலையும் அறிந்தவனே நம்முன்னோன்
விண்ணில் தவழ்ந்து விளையாடும் கார்முகிலைக்
கண்ணெதிரில் கண்டு களித்தெழுந்த வண்ணமயில்
தோகை தனைவிரித்துத் துள்ளிவினை யாடுகையில்
ஓகை மிகவாக உள்ளந்தான் துள்ளியதால்
அன்றுமுதல் ஆடுகிறான் ஆடுகிறான் அம்பலத்தே
நின்றுநடம் ஆடுகிறான் நேரில்லாக் கூத்தே;
குரவை துணங்கை கொடுகொட்டி என்று
பரவிவர நாளும் பலவகையில் கண்டுநின்றான்;
கூத்தன் விறலி குறிக்கும் பொருளென்ன?
வேத்தியலும் மக்கள் விரும்பும் பொதுவியலும்
சொல்லும் பொருளென்ன? சொல்லுதலும் வேண்டுவதோ?
கல்லுந்தான் சொல்லாதோ ஆடறக் கலத்திறனை?
-என்று தமிழ் முழக்க நூலிலும்

எடுப்பு

ஆடினாள் நடம் ஆடினாள் / அங்கும் இங்கும் எங்கும் ஓடி- ஆடினாள்

முடிப்பு

சடையோடு மலராடச் / சதிராடும் அவளோடு
நடைபோட முடியாமல் / மடவன்னந் தடுமாற- ஆடினாள்
முழவாளர் விரலாட / முன்கையில் வளையாட
இழைபோல்என் உயிராட / மழைகாணும் மயில்போல –ஆடினாள்
அடதாளம் பிழையாமல் / அழகாகக் காலாட
உடனாடு கிண்கிணியும் / மேகலையும் ஊடாட –ஆடினாள்
வடந்தாங்கும் குடமாடக் - குடந்தாங்கும் இடைஆடத்
தடந்தோளில் குழையாடத் / தணியாதென் மனமாட- ஆடினாள்
விரலாலே மலர்காட்டி / விழியாலே எனைவாட்டிக்
குரலாலே குழலோட்டிக் / குவிமுல்லை நகைகாட்டி –ஆடினாள்

எடுப்பு

ஆடவாராய் என்னோட டாடவாராய் / ஆடுமெழில் மாதரசே!-ஆடவராய்

தொடுப்பு

பாடும்முறை நானறிந்து பாடிடுவேன் பெண்மயிலே
பைந்தமிழே! என்னுயிரே! பாடியபின் தாமதமேன்

முடிப்பு

கட்டுதுகிற் கச்சின்மிசை முத்துவடம் ஆடக்
கைத்தலங்கள் மொய்த்தவிரல் கற்றமறை நாடப்
பட்டுடுத்தும் சிற்றிடையில் மேகலைகள் பாடப்
பற்றுகழற் கெச்சையொடு தெக்கணத்துக் கூத்து
அஞ்சனமைக் கண்ணிரண்டும் கஞ்சமலர் விஞ்ச
அம்பொனடிச் செஞ்சிலம்பு தஞ்சமெனக் கெஞ்ச
மஞ்சள்ஒளி தங்குமெழில் கொஞ்சுமுக வஞ்சி
வந்தெனது நொந்துழலும் வேதனைதீர் நெஞ்சில்
மெல்லியலே உள்ளமதை நல்விழிகள் சொல்ல
மெய்யுருகி என்மனமும் நின்மனமும் புல்லச்
சொல்லுதொறும் தாள்விரல்கள் தாளவழி செல்லத்
துள்ளிவரும் மான்பிணைபோல் சூழ்ந்துவரும் வல்லி!

-என்று காவியப் பாவை நூலிலும் எடுத்துரைத்துள்ளார்.

முடிவுரை

இதன் மூலம் நடனப் பாடலுக்கான கவியரசர் வரிகளையும், நடனக்கலை பற்றிய கவியரசர் மேற்கோள்களையும் கண்டோம். மொழியை தெய்வமாகக் கருதி வழிபடும் வழக்கமும் நம் தமிழினத்தில் மட்டுமே காணமுடியும். முத்தமிழும் தெய்வீகக் கலைகளாக வளர்ந்து வருகின்றது.

"முத்தமிழில் இயற்றமிழே
சிங்கநடை போடும்
முத்திரையாய் இசைத்தமிழும்
சிந்துகவி பாடும்
முத்தாய்ப்பாய் நாடகமும்
சிறப்பாய் மேடை ஏறும்
முப்புரமும் முத்தமிழே
சிகரமாய் புவியில் வாழும்

-வாழ்க தமிழ்! வளர்க தமிழ்க்கலை!

வீறுபாவரசர் முடியரசனார் முரசொலித்த நாட்டுப்பண்

புலவர் ஆ.நெடுஞ்சேரலாதன் *

முன்னுரை:

இரண்டு நூற்றாண்டுகள் (19, 20) தமிழகப் படைப்பிலக்கிய வரலாற்றில் பன்முக வளர்ச்சி அடைந்துள்ளதை அறிகின்றோம். ஆங்கிலேயர்கள், போர்த்துக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், இசுலாமியர்கள், மராட்டியர்கள், பின் வந்த தெலுங்காட்சியர் அனைவரும் இலக்கியம் இலக்கணம் படைத்திருந்தாலும், தமிழகத்தில் தமிழும் தமிழனும் படிப்படியாக அடிமை நிலைமை அடைந்த வரலாறும் உண்டு. விடுதலைக்கு முன்னும் பின்னும் பாரதியும் அவர் வழிப் பாவலர்களும் சிறிது விழிப்புணர்வை ஊட்டினர். பாரதிதாசன் பெரியார் பாதையில் பயணம் செய்திட முன்வந்த போதுதான், அவரின் வழித்தோன்றல்கள் மறுமலர்ச்சிப் பாடல்கள், இதழ்கள், நாடகங்கள், திரைப்படங்கள் மூலம் முற்போக்குக் கருத்துக்களை விதைத்தனர். இக்காலகட்டத்தில் வீறுபாவலர் முடியரசனார் படைப்பிலக்கியங்கள் படைத்துத் தன் எண்ணத்தை எழுத்துருவில் வடித்து நூலாக்கித் தமிழ்ப்பணி செய்தார். அவரின் ‘காவியப்பாவை’ எனும் இசைப்பாடல் தொகுப்பு நூலில் 27ஆம் பாடலாகத் தமிழில் ‘சனகண’ எனும் பாடலோசையில் தன் தமிழ்நாட்டின் தமிழரின் அருமை பெருமைகளைக் கொண்டு ‘நாட்டுப்பண்’ பாடியுள்ளார்.

நாட்டுப்பண் பாடியதன் நோக்கம்

எங்கும் எதிலும் பெரியார், அண்ணா, மறைமலையார், பாவாணர் கருத்தமைந்த படைப்பிலக்கியங்களை எழுதி எழுதி வெளியிட்டார். பகுத்தறிவு வாழ்வியல் அவரை ஊக்கமும் ஆக்கமும் கொள்ளச் செய்துள்ளது. பள்ளியில், விழாக்களில், காலை வழிபாட்டுக் கூட்டத்தில் அனைவராலும் சேர்ந்திசையாகப் பாடப்படும் இரவீந்திரநாத் தாகூரின் இந்திய நாட்டு வாழ்த்துப் பாடலைக் கேட்டறிந்த வீறுபாவரசர் அதைப்போலவே ஓசையிலொரு பாடல் புனைந்து அதைக் ‘காவியப்பாவை’யில் அச்சேற்றியுள்ளார். இவருக்குக் காந்தியம்,

* தமிழாசிரியர், ஆட்சிப்பொறுப்பாளர், பாவாணர் கோட்டம், முரம்பு.

பெரியாரியம், மார்க்சியம் பற்றி நன்கு தெரியும். தமிழியம் என்பதை உயிர் மூச்சாகக் கொண்டவர். இந்தியத்தையும் திராவிடத்தையும் பார்த்தறிந்தவர். தமிழ்நாடு மூவேந்தர்களால் ஆளப்பட்ட வரலாறும் அவர்கள் கோட்டை, கொடி கொண்டு அரசாண்ட வரலாறும் படித்தறிந்த பாவலர், தம் தமிழ்நாட்டில் விடுதலைப்பண் இசைக்க ஏற்ற ஓசையில், வடிவில், கருப்பொருளில், உயிர்ப்பொருளில், தூயதமிழில் உணர்ச்சி பொங்கப் பாடுவதற்கு 'நாட்டுப்பண்' தந்துள்ளார்.

பாவரசரின் பாடுபொருள்

வீறுபாவரசர் நூலை வெளியிடமுன் வந்த போது தமிழ்நாட்டின் தமிழ் மீட்பு நடவடிக்கைகள் பலரால் பல வகையில் பல தளங்களில் நடை பெற்றன. தமிழிசைப் பாடல்கள் பாட முடியாது என்றும், அதைக் கருவறைக் கடவுளுக்கு முன் பாடமுடியாது என்றும், தமிழ், கடவுள் மொழி கிடையாது என்றும், தமிழிசை பாடிய மேடை தீட்டாகி விட்டது என்றும், பண்ணமைந்த பாடல்களான தேவார, திருவாசகங்கள், ஓதுவார் தொழில் முறைப் பாடல்கள் என்றும் சொல்லிச்சொல்லித் தமிழ் மொழி, இனப் பண்பாட்டுப் பகைவர்கள் அணி திரண்டு நின்றனர். அவர்களுக்கு எதிரணியில் அரசர் அண்ணாமலை, அறிஞர் அண்ணா, தந்தை பெரியார், சர்.ஆர்.கே.சண்முகம் போன்றோர் ஒன்று பட்டுத் தமிழிசை இயக்கம் கண்டு எழுச்சி கொண்ட காலத்தில் முடியரசனார் நாட்டுப்பண் பாடித் 'தமிழால் முடியும்' எனப் பாரதிதாசனின் 'இசையமுது' போல் 'காவியப்பாவை'யை அரங்கேற்றினார். நாட்டுப்பண்ணின் பாடுபொருளாகத் தமிழ் நாட்டாரின் ஒருமைப்பாடும் தோழமையும் வீரமும் புகழும் நலமும் மேலோங்க வேண்டுமென்பதேயாகும்.

பன்முகச் செய்திப் பாடல்

இந்திய நாட்டின் நாட்டுப்பண் விளக்கத்திற்கும் பொருளுக்கும் எதிராகத் தமிழ் நாட்டுப் பண்ணில், தமிழ் நாட்டு வாழ்த்தில் தமிழுணர்வையும் ஊக்கத்தையும் ஏக்கத்தையும் ஏணிப்படி போல் இயற்றியுள்ளார். பாடல் எழுதிட அடிப்படையான கரணியங்கள் பல இருந்தாலும் பாவரசரின் உள்ளக் கிடக்கை என்னெவென்பதைப் பாடலில் வரும் கருத்துகள், உணர்வுகள், எழுச்சிகள் காட்டுகின்றன. நாட்டின் சிறப்பை நற்றமிழ்ப் புலவர்கள், நாவலர்கள், பாவலர்கள் விதவிதமாய்ப் பாடியுள்ளனர். நம் முடியரசனார், அவர் வாழ்ந்த காலத்தில் குமுகாயச் சீரழிவுகளையும், மூடக் கருத்துகளையும், பிற்போக்குத் தனத்தையும் கருத்தில் கொண்டு 'தமிழ் நாடு' தனித்தன்மையுள்ள விடுதலை பெற்ற

நாடாகத் திகழ ஆசைப்பட்டார். அந்த ஆசையின் வெளிப்பாடுதான் 'நாட்டுப்பண்' பாடல் என்பதில் ஐயமில்லை. தமிழிளைஞர்களை 'வாரீர்' என்றும் 'பாரீர்' என்றும் அழைக்கின்றார். தமிழ் நாட்டை உயிர், உடல், பொருள், செல்வம் எனச் சொல்லி அதை மேலோங்கச் செய்திட வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றார்.

நாடு பற்றிய ஒப்பீடு

நூற்றுக்கணக்கான பாவலர்கள் நாடு பற்றி நூற்றுக்கணக்கான வரிகளை எழுதிக் குவித்துள்ளனர். பாரதிதாசன், "தமிழ் நாடே என் தாய் நாடே நீ" என்றும், "தமிழைச் சேர்த்தாய் எங்கள் உயிரில் / அமிழ்தைச் சேர்த்தாய் எங்கள் வாழ்வில் / தமிழ்நாடே நீவாழ்க" என்றும் பாடிக் களித்தார். பெருஞ்சித்திரானாரும் "நமது தாய்நாடு நற்றமிழ் நாடு" என்று பாடினார். முடியரசனாரோ,

"உயிருடல் பொருள்திரு நாடெனும் நினைவே
ஓங்கிட வேண்டுவம் நாமே"

என்று பண்ணிசையுடன் 'சனகண' பாடலை நினைவூட்டி முரசொலித்துள்ளார்.

முடியரசனாரின் விருப்பம்

பகைவர் முன் தூங்காது, அஞ்சாது நின்று தமிழ்நாட்டைக் காக்கப் பணிக்கின்றார். உலக நாடுகளோடு தொடர்பு கொண்டும், தோழமை கொண்டும் தமிழராட்சி தமிழகத்தில் நடை பெற விரும்புகிறார். தன் விருப்பத்தைத்

"துஞ்சாது நின்று குலையாம லிந்நாட்டைத்
தோழமை கொண்டுல காள்வோம்"

எனப் பண்ணமைத்துப் பாடல் வழி வெளிக்காட்டியுள்ளார். தமிழக வரலாற்றில் சங்ககால அரசர்களும் இடைக்கால அரசர்களும் படைவலியால் கடல் கடந்து சென்று தங்களின் கொடிகளை நாட்டிப் பகை வென்று வாகை சூடி வந்ததையும் வடநாடு சென்று கனக விசயரின் தலையில் இமயக்கல்லேற்றிக் கண்ணகிக்குக் கோயில் உருவாக்கிய வரலாற்றையும் சாவா, சுமத்திரா, மலேசியா, இந்தோனேசியா போன்ற பகுதிகளைக் கைப்பற்றிய சேர, சோழ மன்னர்களையும் எண்ணிப் பார்த்து,

"நெஞ்சு கெடாவகை உரமாய் நின்றால்
நிற்பவர் எதிரில் உளரோ?
படைபலம் நாமே பாரீர்!!
தடைகளை நீக்கிட வாரீர்!
நாமே தமிழுல காள்வோம்!"

தமிழகத்தையும் தமிழர்கள் வாழும் நாடுகளையும் ஒன்றிணைத்து ஆள்வோம், தமிழால் உலகாள்வோம் என அழைப்பு விடுக்கிறார். அவரின் கனவு நனவாகி வருகிறது. புலம் பெயர்ந்தோர், வேலை தேடிச் சென்றோர் கோடிக்கணக்கில் அயலகங்கள் எண்பத்தைந்தில் இன்று வாழ்ந்து வருகின்றனர். பலர் வெளிநாடுகளில் ஆட்சி அதிகாரத்தில் உள்ளனர். சில நாடுகளில் தமிழ் ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப் பட்டுப் பணத்தாள்களில் இடம் பெற்று விட்டது. இறுதியாகப்

"புகழ்வளர் நம்முயர் தாயக நினைவே
போற்றுவம் போற்றுவம் நாமே"
நலமே மிகவே பெறவே
பலபல நல மிக வே"

என்று பாடியதன் மூலம் தமிழ்நாடு மங்காப் புகழுடைய நாடு, வரலாறும் வளமும் உடைய தமிழ்நாடு புகழ் பெற்ற மன்னர்கள், வள்ளல்கள் வாழ்ந்த நாடு. முடியரசனாரின் நட்புக்குரிய அறிஞர் அண்ணா ஆண்ட நாடு. உடல் நலம், உள்ள நலம், பண நலம், அறிவு நலம், பண்பு நலம் கொண்ட தமிழர்கள் தமிழகத்தில் நன்மைகள் பெற்று வாழ வேண்டும் என்று முடியரசனார் விரும்பியதாலேதான் "நலமே மிகவே பெறவே, பலபல நல மிகவே" என்று முடிக்கிறார்.

முடிவுரை

"கொள்கைக்கு விடுமுறை கொடுத்து விட்டுக்
குனிந்து எவர் முன்னும் நிற்கவில்லை"

என்று வாழ்வியல் குறிக்கோளில் பயணித்த பாவரசர் இல்லத்திலும் இயக்கத்திலும் இறுதி மூச்சடங்கியது வரையிலும்

"குடும்பம் எனக்கோர் நடை வண்டி – நல்ல
கொள்கை வெறிதான் தொடர்வண்டி"

எனப் பாடி எதையும் தாங்கும் இதயத்தோடு எதிர் நீச்சல் போட்டுப் பயனுள்ள கொள்கைப் பாவரசராகப் பகுத்தறிவுப் பாவரசராக வாழ்ந்து வரலாறு படைத்துள்ளார் முடியரசனார்.

கவியரசர் முடியரசனாரின் படைப்பில் அறிஞர் அண்ணா

முனைவர் சி.பரமேஸ்வரி *

'திராவிட நாட்டின் வானம்பாடி', 'கவிப் பெருங்கோ' என்று எக்காலத்திலும் அழைக்கப்பெறும் கவியரசர் முடியரசனார் பல்வேறு கவிதைகளையும், காப்பியங்களையும் படைத்துத் தமிழ்ச் சமுதாயத்திற்குத் தன்மான உணர்வூட்டினார். பகுத்தறிவுக் கொள்கையில் தேர்ந்து, வேற்றுமொழி ஆதிக்க எதிர்ப்பினில் முனைந்து பைந்தமிழ் காத்திடும் கடமையை இளைய தலைமுறையும் மாணவர் உலகும் தெளிந்து ஏற்றிடச் செய்யும் பணியில் அயராது ஈடுபட்டார். பல்வேறு கவியரங்குகளில் தலைமையேற்றுப் பாடிய கவிதைகளும், அவர் தனிப்பாடல்களும் அடங்கிய நூலே 'ஞாயிறும் திங்களும்' எனும் கவிதைத் தொகுப்பு நூல்.

"ஞாயிறு வெம்மை தருவது; திங்கள் தண்மை தருவது. இரண்டும் பொருளை விளக்கிக் காட்டுவன. அவ்விரண்டும் ஒளி தருவன. உலகிற்கு இரண்டுமே இன்றியமையாதன.

தந்தை பெரியார் பேச்சு, சூடானது. அவரே தம்மைப் பற்றி, 'நான் அறுவை மருத்துவன். எப்படியும் நோயாளி உயிர் பிழைக்க வேண்டும் என்பதுதான் என் நோக்கமே தவிர, நோயாளிக்கு வலிக்குமே என்று கவலைப்பட மாட்டேன்' என்று கூறியிருக்கிறார்.

பேரறிஞர் அண்ணா பேச்சு, குளிர்ச்சியானது. நோயாளியும் நலம் பெற வேண்டும் : நோயாளி முகஞ் சுழிக்காமலும், ஏற்றுக்கொள்ள வேண்டும். அதனால் அவர் கூட்டு மாத்திரை தரும் இயல்பினர். அவ்விரு பேச்சும் பிணி வாய்ப்பட்ட தமிழினத்திற்கு எக்காலத்தும் வேண்டப்படுவனவே.

ஆதலின் பெரியாரை ஞாயிறாகவும், அண்ணாவைத் திங்களாகவும் குறிப்பிட்டு அவ்விருவரையும் பற்றிப் பாடிய பாடல்களைச் சேர்த்து ஞாயிறும் திங்களும் எனப் பெயரிட்டுள்ளேன்" என்று முடியரசனார் தன் நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். 'ஞாயிறும்

---

* உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், அழகப்பா அரசு கலைக்கல்லூரி, காரைக்குடி.

திங்களும்' என்ற நூலில் முடியரசனார் அறிஞர் அண்ணாவின் தமிழுணர்வினைக் கவிதைகளாக்கியுள்ளார்.

வீரவுணர்வு

தமிழ் மண்ணில் பிறந்த தமிழ்மொழியானது தொன்மையும் வளமையும் மிக்கது. பல மொழிகளுக்குத் தாயாகும் தகுதி பெற்றது. சீரிளமை மங்காது என்றும் கன்னித்தமிழாக விளங்கும் தமிழினை செந்தமிழ், தென்தமிழ், வண்டமிழ், தண்டமிழ், இன்றமிழ், தீந்தமிழ், தேன்தமிழ், அருந்தமிழ், உயர்தமிழ், கோதில்தமிழ் என்று பல்வேறு பெயர்களால் வழங்கும் சிறப்புப் பெற்றது. இச்சிறப்பு வாய்ந்த தமிழிற்குத் தீமை விளைவிக்க எண்ணி வடபுலத்தார். இந்தியினைத் திணிக்க முற்பட்டபோது அறிஞர் அண்ணா வீறு கொண்டெழுந்தார்.

பாரத நாட்டில் செப்பும் மொழிகள் பதினெட்டு என்றாலும் மக்கள் அனைவரும் சிந்தனையில் ஒன்றுபட்டவர். வடபுலத்து வாழ்மாந்தர் செப்பும் மொழி ஒன்றென்று இந்தி மொழியினைத் தமிழ் நாட்டில் புகுத்த முற்பட்டபோது தமிழ் நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும் தமிழ்ப்பற்றோடு திகழ்வதை,

"செந்தமிழ்க்குத் தீங்கு சிறிதும் வரஒவ்வோம்
இந்திக்குத் தென்னாட்டில் என்றும் இடமில்லை,
ஒற்றுமைக்குத் தீமை உருவாக்க எண்ணாதீர்
பற்றுமக்குத் தாய்மொழியில் பாரித் திருப்பதுபோல்
எங்களுக்கும் தாய்மொழியில் ஈடில்லாப் பற்றுண்டு
பொங்கும் மொழியுணர்வைப் புல்லென் றிகழாதீர்
என்றெல்லாம் கூறி இடித்துரைத்தும் கேளாராய்த்
தென்றல் உலவுந் திருநாட்டில் இந்தியினை
வன்பில் திணித்தார் வடபுலத்து வாழ்மாந்தர்"

(ப.66)

என்று எடுத்துரைக்கிறார் வீறுகவியரசர்.

போர்க்கோலம்

நாம் ஆளப் பிறந்தவர்களேயன்றி யாருக்கும் அடிமையில்லை. எனவே,

"போர்க்கோலம் பூணுங்கள் போற்றுங்கள் தாய்மொழியை
யார்க்கும் அடிமையலோம் ஆளப் பிறந்தவர்நாம்
கொன்று குவித்தாலும் கூட்டில் அடைத்தாலும்
நின்றமரில் தோளை நிமிர்த்துங்கள்"

(ப.67)

என்று அறிஞர் அண்ணா அறைகூவல் விடுத்து இந்தி மொழியினைப் புறங்கண்டதாகப் பாடுகிறார் வீறுகவிராயர்.

தாய்மொழிப்பற்று

தமிழ்நாட்டில் இந்தியினைப் புகுத்த முற்பட்டபோது அறிஞர் அண்ணா, பதைபதைத்த உள்ளத்துடன் இந்தியினைத் தமிழ்நாட்டில் நுழைய விடாது வீரவுணர்வுடன், தமிழிற்குக் களங்கம் ஏற்படா நிலையில் காவல் செய்தார். இதனை,

"வடபுலத்து வெறிமனத்தர் கூடி நின்று
வளர்மொழியாம் தமிழ்மொழிக்கு மாறாய் இங்குப்
படபடத்த ஒலிஎழுப்பும் இந்தி தன்னைப்
பரப்புதற்கு, வஞ்சகத்தால் புகுத்து தற்குப்
படமெடுத்த பாம்பெனவே முனைந்து விட்டார்
பதைத்தெழுந்து நம் அண்ணன் தமிழர் நாட்டுள்
விடமறுத்தான் படையெடுத்தான் போர்தொ டுத்தான்
வீரத்தால் தாய்மொழிக்குக் காவல் செய்தான்."

(ப.86)

என்றும், செந்தமிழுக்குத் தீங்கென்றால் அரச பதவி எமக்குப் பெரிதல்ல. தமிழ்மொழியை வாழ வைக்க வேண்டி சிறை புகவும் தயங்கமாட்டோம். வாழ்வும் சாவும் விளையாட்டு என்றெண்ணி பகைமுடித்துத் தமிழை வாழ வைப்போம் என்பதனை,

செந்தமிழ்க்குத் தீங்கென்றால் அரசி ருக்கை
சிறிதெமக்குப் பெரிதன்று தாய்மொ ழிக்கு
நொந்திருக்கும் நிலைவந்தால் பொறுக்க மாட்டோம்
நொடிப் பொழுதில் துச்சமென உதறி விட்டு
வந்திருப்போம் போர்தொடுப்போம் தமிழ்மொ ழிக்கு
வாழ்வுதரச் சிறைபுகுதத் தயங்க கில்லோம்
வெந்துயர்க்கும் அஞ்சுகிலோம் வாழ்வும் சாவும்
விளையாட்டென் றெண்ணிடுவோம் பகைமுடிப்போம்"

(ப.89)

என்றும் பாடுகிறார்.

வாழ்வும் சாவும் விளையாட்டென்றல்

தன்னுயிரை விடத் தமிழையும் தமிழ் நாட்டையும் உயிராகக் கருதினார். இறந்த உயிரை மீளப் பெறுதல் இயலாது. இத்தகைய

அரியவுயிரினைத் தாய் மொழியையும் தமிழ் நாட்டையும் காப்பதற்காகத் தயக்கமில்லாது கொடுப்பேன்.

"சாவென்றால் ஒருமுறைதான் நம்மைச் சாரும்
சாய்ந்தபினர் மறுமுறையும் உயிரை யிங்கு
வாவென்றால் வாராது : போகும் அந்த
வறியவுயிர் தாய்மொழியைக் காப்ப தற்கே
தாவென்றால் தந்திடுவேன் தயக்கங் கொள்ளேன்
தமிழ்நாடு தனைக்காப்பேன்" (ப.89)

என்றுரைத்தார்.

மறந்தறியாத் தமிழ்ப்பற்று

தமிழ்மொழியை உயிராகவும், உணர்வாகவும் தெய்வமாகவும் உடம்பின் நாடி நரம்பெல்லாம் ஓடும் குருதியாகவும் கருதியவர் முடியரசனார். தென்னாட்டின் மண்ணில் சேயாகப் பிறக்கத் தவம் புரிந்தேன். என்னுயிரின் மூச்சு தென்பொதியக் காற்று. என்னுடலின் செங்குருதி பொன்னிமகள் ஊட்டிய பால். தமிழ்த்திருநாட்டை மறந்தறியேன்.

" பொன்னை மறப்பேன் பொருளை மறந்திருப்பேன்
என்னை மறப்பேன் இனிய மனைமறப்பேன்
அன்னைத் தமிழ்மொழியை அண்ணா மறந்தறியேன்
என்னை யுருவாக்கும் என்னுயிரை, என்னுணர்வை,
நான்வணங்குந் தெய்வத்தை, நாடி நரம்பெல்லாம்
தான்புகுந்த செங்குருதி தன்னை மறப்பேனோ?! (ப.114)

என்று அண்ணாவிடம் கூறுகிறார் முடியரசனார்.

சமூக நீதிமான்

சமூக நீதியையும் தமிழின உணர்வையும் வளர்க்கும் வழியினை,

தூற்றாதீர் பிறப்பழியை, மேடை ஏறித்
தொடுக்காதீர் வசைமொழியைக் காசுக் காக
மாற்றாதீர் தமிழ்மரபை, கருத்தை மட்டும்
மறுத்துரைப்பீர், தனிஒருவர்ப் பழித்தல் வேண்டா,
மாற்றாரின் தோட்டத்து மல்லி கைக்கும்
மணமுண்டு தெரிந்ததனை நுகர்க" (ப.123)

என்று கூறினார்.

போற்றும்படி வாழ்தல்

கடமை, கட்டுப்பாடு, கண்ணியத்தினை போற்றி வாழ்ந்த அறிஞர் அண்ணா, தன்னுடன் கூட இருந்து வளர்ந்தோர், பிரிந்து சென்றவிடத்துத் தன்னுள்ளம் நோகப் பழித்தாலும் பழிக்கமாட்டார். பழி தூற்றுவதைத் தொழிலாகக் கொண்டு இன்னாமை செய்தாலும் அவர் நாணும்படி இடனறிந்து புகழ்ந்துரைப்பார். இப்பண்புகளால் பிறர் போற்றும்படி வாழ்ந்ததனை,

"உடனிருந்து வளர்ந்தோர்தாம் பிரிந்து சென்றே
உளம்நோகப் பழித்தாலும் பழிக்கமாட்டான்
இடுபழியே தொழிலாகக் கொண்டு வாழ்வோர்
இன்னாமை செய்தாலும் அவர்தாம் நாண
இடனறிந்து புகழ்ந்துரைப்பான் அதனால்அந்த
எதிரிகளும் மனந்திரிந்து மதிக்க லானார்
கடமையினைப் புரிந்திருந்தான் கட்டுப் பாட்டைக்
காத்திருந்தான் கண்ணியமாம் வாழ்வும் பெற்றான்"

(ப.69)

என்று எடுத்துரைப்பர்.

அறிஞரெனும் சொல்லுக்குரியர்

அறிவுடைய மாந்தரும் அளப்பிலா நூல் பயின்றோரும் அறிஞர் ஆகார். நெறிப்படயொழுகி, அருள்சுரந்து, மக்கட் பண்புடன் பிறரின் துயரம் நீக்கி, நல்ல குறிக்கோளுடைய வாழ்வியல் நெறி மலரத் தம்மைக் கொடுப்பவரே அறிஞராவார். இவ்வனைத்துப் பண்புகளும் நிறைந்த அண்ணா, அறிஞரெனும் சொல்லுக்கு உரியராவதை,

"நெறியொழுகி, அருள்சுரந்து, மக்கட் பண்பு
நிறைந்திருந்து. பிறர்துயரம் துடைத்து, நல்ல
குறியுடைய வாழ்வுநெறி மலரத் தம்மைக்
கொடுப்பவரே அறிஞராவார் அனைத்துங்கூடி
அறிஞரெனும் சொல்லுக்கே உரிய ரானார்"

(ப.70)

என்பது விளக்கும்.

வாழ்வெலாம் நலஞ்செய்தவுள்ளம்

அறிஞர் அண்ணா, தன்னுடைய உள்ளத்தில் பொறுமையென்ற உயர் பண்பினைக் கொண்டவர். பொறாமையானது அவரின் உள்ளத்தில் எள்ளளவும் இல்லை. பிறரின் வறுமை கண்டு இரங்கும் உள்ளத்துடன்,

"வளர்தமிழின் வாழ்வுக்கே வாழ்ந்த வுள்ளம்
சிறுமையினைக் காணுங்கால் சீறும் உள்ளம்
சினமென்னுஞ் சுடுநெருப்பைச் சேரா வுள்ளம்
வருபவரைக் கைகொடுத்து வளர்க்கும் உள்ளம்
வாழ்வெல்லாம் நலஞ்செய்தே வளர்ந்த வுள்ள" (ப.109)

மாகத் திகழ்ந்தார்.

இவ்வாறு அறிஞர் அண்ணா, தமிழ்நாடு, தமிழ்மொழி, தமிழினத்தின் மேம்பாட்டிற்காகத் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டமையை முடியரசனாரின் 'ஞாயிறும் திங்களும்' என்ற நூலின்வழி அறியப்படுகிறது.

புதிய விடுதலை

பேரா.மு.பழனிஇராகுலதாசன் *

'அல்லவை தேய அறம் பெருகும்' – என்பார் வள்ளுவர்; இது தானாக நடந்து விடாது; தானாய் எல்லாம் மாறும் என்பது பழையபொய் என்பார் பட்டுக்கோட்டை. இலக்கியத்தின் நோக்கம் போராடுவதே என்பார் சோவியத்துப் படைப்பாளர் மக்சிம் கார்க்கி. எழுதுகோலும் எழுத்தும் தெய்வம் என்றார் மகாகவி பாரதி. புதியதோர் உலகம் செய்வோம் என்று முழங்கினார் பாவேந்தர். எழுதுகோல் உயர்த்திக் கவிதை படைக்க முன்வந்த கவிஞர் முடியரசனாருக்கும் படைப்புநெறி இதுவாகத்தான் இருந்தது; அதாவது ஒரு புதிய பாதைக்காகப் போராடவேண்டியது அவசியமாக இருந்தது.

இந்திய – தமிழக அரசியல் வரலாற்றின் படி 1947-இல் விடுதலை வந்தது; அதாவது அடிமைப்படுத்தியிருந்த ஆங்கிலேயர் இந்தியாவுக்கு விடுதலை அறிவித்துவிட்டு நீங்கினர்; 1950-இல் 'இந்தியக் குடியரசு' அறிவிக்கப்பட்டது; பண்டித சவகர்லால் நேரு நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்; நாட்டுப் பிரிவினை, புதிய அரசியல் சட்டம், அண்ணல் காந்தி மறைவு என்று நிகழ்வுகள் நடந்தன; உரிமைக் கொடியேற்றிப் புதிய திசை புலர்ந்தது. இந்தியா முழுவதிலும் சிந்தனையாளர்கள் "மக்களுக்கு விடுதலை கிடைத்ததா?" என்று குரல் எழுப்பினர்; நம்முடைய வீறுகவியரசு முடியரசரும் கேள்வி எழுப்பினார். நாம் விடுதலை பெற்றுள்ளோம் என்பதன் அடையாளம், நமது நாடு சனநாயக நாடு என்பதன் அடையாளம், நாம் நடத்தும் தேர்தல்கள் அல்லவா! என்று பலரும் முழங்கினர்; இந்திய, தமிழக அரசியலை, அது நடத்தும் தேர்தலை நமது வீறுகவியரசர் எதிர்த்தும், மறுத்தும் உரத்துக் குரல் எழுப்பினார். காரணம் இங்கே நடக்கும் 'தேர்தல்' என்பது போலியானது; பொய்மையும் புரட்டுகளும் நிரம்பியது; எனவே நம்கவிஞர் 'தேர்தலால் கண்ட பலன்' என்ற ஓர் அரசியல் கவிதை படைத்தார். அந்தக் கவிதை மூலம் "எங்களுக்குப் புதிய விடுதலை" வேண்டும் என்று முழங்கினார்.

---

* தலைவர், விடுதலை வீரர் கேயெம் எஸ் சிந்தனைச் சோலை, தேவகோட்டை.

நாம் விடுதலை அடைந்துள்ளோம் என்பதற்கு உரிய அடையாளம் நாம் நடத்தும் தேர்தல்களும், தேர்தல்களுக்குப் பிறகு நாம் அமைத்துக்கொள்ளும் அரசுகளும் அல்லவா என்று கட்சிக்காரர்கள் உரத்து முழங்குகிறார்கள். நமது கவிஞர் முடியரசனார் இதனை ஏற்கவில்லை; நடத்தப்படும் தேர்தல்கள் போலியானவை; பொல்லாங்குகள் நிரம்பியவை; சாதி, மதம், காசு, பணம் இவற்றால் மாசுபட்டவை என்று சுட்டிக்காட்டுகிறார்; தேர்தல் என்றும், நமது அரசு என்றும் மக்கள் ஏமாற்றப்படுகின்றனர் என்று கவிஞர் தெளிவுபடுத்துகிறார். அந்த வகையில் "தேர்தலால் கண்ட பலன்" என்ற கவிதை அரசியல் கவிதையாய், ஒரு புதிய விடுதலையை நோக்கிய ஓர் அரிய படைப்பாய் அமைகிறது.

'சனநாயகம், தேர்தல்கள், திட்டங்கள் என்று முழங்குகிறார்களே, இவற்றில் சிறிதேனும் உண்மை உண்டா?' என்று கவிஞர் கேட்கின்றார். 'வாக்களிக்க மக்கள் கையூட்டு வாங்குகிறார்கள்; பின்னர் அரசியலார் அந்த மக்களிடமே கையூட்டுப் பெறுகின்றார்கள். இதுதான் சன நாயகமா? இது தான் விடுதலையா?' என்று வீறுகவிஞர் வேதனைப் படுகின்றார். தேர்தல் அறிவிக்கப்படும் நாள் தொடங்கி, வேட்பாளர் தேர்வு, அமைச்சர் தேர்வு, சட்டமன்ற நடவடிக்கைகள் அனைத்திலும் சாதியும் பணமும்தானே தாண்டவம் ஆடுகின்றன, பிறகென்ன விடுதலை என்று கவிஞர் கேட்கின்றார்.

"சாதியைத்தான் முன்வைத்துச் சார்கின்றார்
வேட்பாளர்; சமயம் பார்த்துச்
சாதிக்கோர் அமைச்சர் எனச் சண்டை வரும்;
சாதிக்கா சட்ட மன்றம்;"

என்றும்,

"சாதிகளும் பொய்ம் மொழியும் தன்னலமும்,
கையூட்டும் தழைக்கும் நாட்டில்,
ஏது பயன் விடுதலையால்? என்னபயன்
தேர்தலினால்?"

என்றும் நமது கவிஞர் கேள்வி எழுப்புகின்றார்.

சட்டத்தின் எழுத்துக்களில் 'விடுதலை' என்பது இருக்கிறது; ஆனால் சமுதாயத்தில் 'விடுதலை' இல்லையே என்று வினா எழுப்புகிறார் கவிஞர். தேர்தல் நடக்கிறது; ஆனால் நேர்மை இல்லையே; போடுகின்ற வாக்குச் சீட்டெல்லாம் புகைந்து போகின்றனவே! பதிவாகும் சீட்டெல்லாம் எப்படி எப்படியோ பெயர் மாறிப் பறந்து போய்விடுகின்றனவே; இப்படி, சாதியாய், பணமாய், முறைகேடுகளாய் நடைபெறும் தேர்தல்களை விடுதலைத் தேர்தல்கள் எனக் கொள்ள முடியுமா? என்று கவிஞர் கேட்கிறார்.

சாதி, சமயம், பணம் இவற்றையெல்லாம் தவிர்த்த தேர்தலும், தேர்தல்வழி அரசும் அமைவதுதான் நியாயமான விடுதலை ஆகும்; இல்லையெனில் நமது சுதந்திரம் என்பது ஒரு போலியான சுதந்திரம் என்பதே கவிஞரின் கருத்து. "புதிய விடுதலை" விரைவில் வரும் என்று காத்திருப்போம்!

வீறுகவியரசர் முடியரசனார் கூறும் வள்ளுவத்து வாழ்வியல்

முனைவர் மு. பழனியம்மாள் *

முன்னுரை

உலகியலின் கூறுகளை எல்லாம் ஆய்ந்து உணர்ந்தவர் வள்ளுவர். ஒப்பற்ற பேரறிஞனாகிய வள்ளுவர் இயற்றிய அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலினையும் கூறும் திருக்குறளின் சிறப்பினை நாம் சொல்ல எண்ணினால் அது மேல் உள்ள வானத்தைக் கையால் முழம்போட்டுக் காட்ட நினைப்பது போல அளந்து எடுத்துரைக்க முடியாததாகும் என்கிறார் முடியரசர். திருக்குறளிலுள்ள வாழ்வியற் சிந்தனைகளை எடுத்துரைத்து அதனைப் பின்பற்றாததால் மனிதன் எய்தும் இழிநிலையையும் அதனைக் கடைப்பிடிப்பதால் எய்தும் நன்மைகளையும் தம் நூலில் எடுத்துரைத்துள்ளார் முடியரசர். அதனைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

அறம்

திருக்குறளில் உள்ள அறக்கருத்துக்கள் காலமெல்லாம் துன்பங்கள் சூழ்ந்த போதும் கவலையிலா மனிதனென வாழ வழிகாட்டுவன. அறத்தைவிடச் சிறப்பளிக்கும் ஆக்கம் இல்லை. அவ்வறத்தை மறப்பதைப் போல கேடும் இல்லை.

"அறத்தாலே வருவதொன்றே இன்பம் ஆகும்
அஃதின்றேல் புகழில்லை பொருளும் இல்லை"

(வள்ளுவர் கோட்டம், ப – 31)

என்கிறார் முடியரசர்.

மேலும் மனிதனின் தனிநிலை, குடும்பநிலை, சமுதாயநிலை ஆகிய மூன்று நிலைகளிலும் அவன் கடைப்பிடிக்க வேண்டிய அறங்களை இனங்காட்டுகிறார்.

தனிநிலை

மனிதன் இனிய சொற்களைப் பேசுவதே உகந்தது. இதனைக் கூற விழையும் முடியரசர்,

---

* உதவிப் பேராசிரியர், நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரி, கோவிலூர்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்ப காய்கவர்ந் தற்று" (குறள்எண் - 100)

என்ற திருக்குறளை நினைவூட்ட,

"இன்னுங்கேள்! முகமலர்ந்தும் இனிது தேர்ந்தும்
இளகுமனம் பொருந்திவரும் இனிய சொற்கள்
பன்னுதலே அறமாகும்." (வள்ளுவர் கோட்டம், ப – 31)

என்று மொழிகிறார்.

மேலும் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் ஆகியவற்றை நம் மனத்திலிருந்து பறித்தெறிந்து வாழ்வதுதான் அறமாகும் என்கிறார்.

குடும்பநிலை

ஒவ்வொரு மனிதனும் தன்வாழ்வை வடிவமைத்துக் கொள்ளும் உரிமை உடையவனாவான். அவன் இல்லறம், துறவறம் என்ற இருநிலைகளில் எதனையும் கைக்கொண்டு வாழலாம். எவ்வறத்தினைப் பின்பற்றினாலும் அதில் உண்மையாகவும் முழு ஈடுபாட்டோடும் இருக்க வேண்டும் என்கிறார் முடியரசர்.

"இல்லறத்து நெறிநிற்போன், துறவ றத்தில்
இருந்துதவம் நோற்பாரின் நோன்மை கொள்வான்."
(வள்ளுவர் கோட்டம், ப – 32)

என்ற வரிகளின் மூலம் இல்லற வாழ்வின் மேன்மையைத் தெரிவித்துள்ளார்.

"இன்பப் பூங்கா இல்லற வாழ்வே
என்பதை மறந்தோம் இடரினில் புகுந்தோம்."
(வள்ளுவர் கோட்டம், ப – 51)

என்று கூறும் முடியரசர், இல்லறத்தில் மாலையிட்ட மங்கையை வஞ்சிக்காமல் மனம் விரும்பி இனிய சொற்களைப் பேசி ஒன்றுபட்டு வாழ்வதே நல்லறம் என்கிறார்.

"குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்" (குறள் எண் - 66)

என்னும் குறளுக்கிணங்க, காலையில் எழும் பரிதியைப் போல குழந்தையைப் பெற்று, அக்குழந்தை மொழிகின்ற மழலை போல வரும் இன்பம் இங்கே வேறு ஒன்றும் இல்லை என்கிறார் முடியரசர்.

சமுதாய நிலை

சமுதாய அளவில் அறப்போர், மறப்போர் என்ற இருநிலைகள் உள்ளன. அறப்போர் புரிய வேண்டுமானால் பொருள் தெரிந்திருக்க வேண்டும். துன்பம் தரும் செயல்களே மறப்போரில் உண்டு. அதனால்,

> **"மறப்போரை அறஞ்சேர்த்து வழங்கல் ஏனோ?**
> **மக்களதைச் செயநினைதல் நன்றோ? என்றேன்."**
>
> (வள்ளுவர் கோட்டம், ப – 32)

என்கிறார். மேலும் மறப்போர் என்பது பிறர் உயிரை எடுப்பதாகும். அறப்போரோ தன்னுயிரைக் கொடுப்பதாகும். சிறப்பான தமிழ்மானம் காக்க வேண்டுமானால்,

> **"சிறந்ததடா இவ்வறப்போர், செயலிற் காட்டு!"**
>
> (வள்ளுவர் கோட்டம், ப – 33)

என்கிறார் முடியரசர்.

பொருள்

வாழ்க்கையைப் பொருளுடையதாக வாழ்தல் வேண்டும் என்பர். ஆனால் தற்காலத்தில் பொருள் என்ற சொல்லிற்கான பொருள் செல்வத்தையே குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

> **"அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து**
> **தீதுஇன்றி வந்த பொருள்"** (குறள் எண் - 754)

என்கிறது திருக்குறள்.

> **"பொருளே குறிக்கோள்! பூமியில் பிள்ளைகள்**
> **பெறலே குறிக்கோள்! பெருவயி றாரத்**
> **தினலே குறிக்கோள்! இவ்வணந் திரிந்தால்**
> **அதுவா வாழ்வு? அதுவோ இன்பம்?"**
>
> (வள்ளுவர் கோட்டம், ப – 51)

என்ற முடியரசரின் வரிகள் குழந்தைச் செல்வத்தையும் பணத்தையும் பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கக் கூடாது என்ற அழகான வாழ்க்கைச் சிந்தனையைச் செப்புகின்றன. மேலும்,

"பொருளுடைமை புல்லர்க்கும் வாய்ப்ப தாகும்
பூமிதனில் உடைமைக்குள் உடைமை என்னும்
அருளுடைமை சான்றோர்க்கே அமைவ தாகும்."

(வள்ளுவர் கோட்டம், ப – 43)

என்ற வரிகள் பொருட்செல்வமானது சிறுமைக்குணம் உடையவருக்கும் கிட்டும். ஆனால் அருளாகிய சிறந்த செல்வம் சான்றோர்களுக்கு மட்டுமே கிடைக்கும் என்ற கருத்தை உணர்த்துகின்றன.

இன்பம்

இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக பாவிக்கும் மனப்பான்மை நமக்கு வர வேண்டும் என்ற சீரிய வாழ்வியல் சிந்தனையை வள்ளுவர் வழி இயம்புகிறார் முடியரசர். வாழ்வை இன்பமென எடுத்துரைத்த திருக்குறளை விட்டுவிட்டு வெறுமையான சில உரைகளை நம்புவதால் நமக்கு பல துயரங்களும் தாழ்வுமே வருகின்றன என்கிறார். ஆற்றுக்கு இரண்டு கரைகள் இருப்பது போல வாழ்விற்கும் இன்பம், துன்பம் என்ற இருகரைகள் உண்டு காற்றில் தென்றலும் உண்டு. வாடையும் உண்டு. இருப்பினும் நாம் காற்றை வெறுப்பது கிடையாது. அதுபோல வாழ்வில் இன்பம், துன்பம் கலந்து வரும் நிலைகண்டு வாழ்வினை வெறுத்தல் கூடாது என்கிறார். வாடைக் காற்று வீசும்போது போர்வையைப் போர்த்திக் கொண்டு வருந்தாமல் நடுங்காமல் தடுத்துக் காப்பது போல தேடுவதற்கரிய வாழ்வினில் துன்பம் வந்து சேரும்போது ஊக்கம் கொண்டு பாடுபட்டால் அத்துன்பம் விலகிப் போகும் என்கிறார் முடியரசர். இதனை,

"தேடரிய வாழ்வுதனில் துன்பம் வந்து
சேருங்கால் துவளாமல் ஊக்கங் கொண்டு
பாடுபட அத்துன்பம் விலகிப்போகும்
பாருய்ய வந்தவனாம் வள்ளு வன்சொல்
ஏடதனில் இவ்வுண்மை நன்கு தோன்றும்
இடுக்கண்கள் வருங்காலை நகுதல் வேண்டும்."

(வள்ளுவர் கோட்டம், ப – 24)

என்ற பாடல்வரிகள் உணர்த்துகின்றன. மேலும் இன்பத்தின் பின்பக்கம் துன்பம். அந்த இடருக்குப் பின்பக்கம் இன்பம். இந்த எண்ணத்தை மனத்தில் கொண்டு வாழ்ந்தால் வாழ்க்கை இனிக்கின்ற கனியாகும் என்கிறார் முடியரசர்.

இறவாப்புகழ்

சிறுகுழந்தையாகப் பிறக்கின்றோம், வளர்கின்றோம், நம் வாழ்வில் கள்ளம், கயமை போன்றவற்றை புகுத்திக் கொள்கின்றோம். அதனால் வாழ்வு பள்ளத்திலுள்ள கழிநீரின் தேக்கம் போல பாழாகிவிட்டது என்கிறார் முடியரசர். மேலும் வளர்ந்தபின் காதல், உறவுகள் ஆகியவற்றால் வரும் இன்பங்களைக் காண்கின்றோம். பின்னர் துன்பங்களைச் சிலநாள்கள் அனுபவித்து விட்டு இறக்கின்றோம். அவரவர் புகழைப் பறைசாற்றுவது போல இறந்த பின்னும் நாம் எச்சமாக விட்டுச் செல்ல வேண்டிய புகழினைத் தரும் வாழ்வியலைக் கற்காமல், சிறுவிலங்குக் கூட்டமாக வாழ்கிறோம் என்கிறார் முடியரசர். இதனை,

"இறக்கின்றோம் இறுதியிலே இறந்த பின்னர்
எச்சமெனும் புகழொன்று நிலைத்து நிற்கச்
சிறக்கின்ற வாழ்வியலைக் கற்றோ மல்லோம்
சிறுவிலங்குக் கூட்டமென வாழ்ந்து விட்டோம்."

(வள்ளுவர் கோட்டம், ப – 23)

என்ற பாடல்வரிகள் உணர்த்துகின்றன. நல்வினைகள் நிறைய உள்ளன. அவ்வினைகளை மேற்கொண்டு இறந்த பின்னும் மனிதன் இறவா புகழுடன் வாழ வழி கூறுகிறார் முடியரசர்.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு" (குறள் எண் - 231)

என்ற திருக்குறளுக்கேற்ப பிறருக்குக் கொடுத்தலாகிய நல்வினையால் புகழைப் பெறலாம்.

முடிவுரை :

முடியரசர் திருக்குறளில் இடம்பெற்றுள்ள அறக்கருத்துக்களைக் கூறி, அவ்வறத்தின் வழியில் பொருளை ஈட்டி, இன்பமுடன் வாழ அறிவுறுத்துகிறார். நாம் இறந்த பின்பும் இறவாப்புகழுடன் நிலைத்திருப்பதற்கு செய்ய வேண்டிய நல்வினைகளை மொழிகிறார். முடியரசர் இயம்பிய வள்ளுவத்து வாழ்வியலில் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் மனிதன் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய முறைமை நன்கு புலப்படுகிறது.

வீறுகவியரசர் முடியரசனார் படைப்பில் கற்பனைவளமும் காட்சித்திறமும்

வீர.பாசுக்கரன் *

தமிழ்க் கவிதை மரபு மிகவும் நீண்டது; நெடியது; சொல்வளமும் பொருள்வளமும் நிரம்பியது. காலம்தோறும் தமிழ்க்கவிதை – காலம்தோறும் தமிழ்க்கவிஞர்கள் என்றுஆராயும் திறனாய்வார்கள் "பாவேந்தர் வழி மரபுக்கவிஞர்கள்" என்று தலைப்பிட்டு ஆராய்ந்து வருகின்றனர்; இப்படியான ஆய்வு தகுதி வாய்ந்ததும் தவிர்க்கப்பட முடியாததும் ஆகும். அந்தவகையில் பாவேந்தர்பாரதிதாசன் வழிவந்தமரபுக்கவிஞர்வரிசையில் வீறுகவியரசர் முடியரசனார் இன்றியமையாத ஓர் இடத்தை வகிப்பவர் ஆகிறார். முடியரசனார் வகிக்கும் இடம்பற்றிக் குறிப்பிடும் திறனாய்வாளர் முருகுசுந்தரம் என்பார், **"முடியரசன் கவிதைநடை பண்டைய இலக்கியநடையை ஒத்தது. இவருடைய படைப்புக்களைப் படிக்கும்போது சங்க இலக்கியப்பாடல் களைப் படிப்பது போன்ற உணர்வே ஏற்படும்"** (புதிய தமிழ் இலக்கிய வரலாறு – தொகுதி III சாகித்திய அகாதெமி, பக்.521) என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

கவிஞர் ஒருவருடைய படைப்பில் அவர்தம் கவிதைத்திறன் எவ்வாறு வெளிப்படும்? கற்பனையால் வெளிப்படும்; இனிய சொல்லாட்சியால் வெளிப்படும்; அரிய உவமையால் வெளிப்படும்; மனம் கவரும் முரண் சுவையால் வெளிப்படும்; ஆழமான பொருள் விளக்கத்தால் வெளிப்படும்; இனிய சொல்லாட்சி, எளிய உருவகம், உவமை, முரண்சுவை, பொருள் விளக்கம் என்று பார்க்கும் போது முடியரசனாரின் படைப்புக்களில் தொடுகின்ற இடமெல்லாம் இவை தட்டுப்பட்டுக்கொண்டே இருக்கிறது; கவிஞர் மீரா "பச்சை மருக்கொழுந்துத் தமிழை உன் உயிரில் வைத்தாய்" என்று ஓர் இடத்தில் சுட்டிக்காட்டுவது போல, தொடுகின்ற இடமெல்லாம் வளமும், திறமும் மணக்கின்றன, இனிக்கின்றன.

---

*முனைவர் பட்ட ஆய்வாளர், அழகப்பா அரசு கலைக்கல்லூரி, காரைக்குடி.

சில இடங்கள் சான்றாகக் காண்போம். "இயற்கைத் தாய்"என்றபடைப்பில் இடம் பெறும் கற்பனைகள் மிகவும் எளியவை; ஆனால் அரியவை; காட்சிகள் படிப்படியாய் வளர்ந்து, நம் இதயத்தில் நீங்காத இடத்தைப் பிடித்துக் கொள்கின்றன. கவிஞரின் படைப்பில் "ஆறு" இயற்கைத் தாயாக இடம்பெறுகிறது. தாயாகிய ஆறு, ஒருநாள் விடியற்காலைப் பொழுதில் கவிஞரை, "வா,வா, குளிக்கவா" என்று அழைக்கிறாள். மகனாகிய கவிஞர் 'மாட்டேன்' என்று பிடிவாதமாக மறுக்கிறார்; இயற்கைத் தாய் விடவில்லை; இடி என்னும் ஒலியைஎழுப்பி, அதன்மூலம் அதட்டுகிறாள்; உடன் மழையையும் கொண்டுவந்து குளிக்குமாறு செய்துவிடுகிறாள். குளிக்க மறுத்த மகனாகிய கவிஞர் மழையில் நனைந்து நீராடியவராய் நிற்கிறார்; குளிக்கமறுத்த மகனை மழையை வருவித்துக் குளிக்க வைத்துவிட்டோமே என்று இயற்கைத்தாய் மகிழ்ந்து நகை புரிகின்றாள். எப்படி? இயற்கைத்தாய் மின்னலை உண்டாக்கிச் சிரித்தாள் என்கிறார் முடியரசனார். அந்த மெல்லிய கொடி போன்ற மின்னல் தான் இயற்கைத்தாயின் சிரிப்பு! மகன் குளித்துமகிழ்கிறான்; குளித்துமகிழும் காட்சியோடு இயற்கைத்தாய் நின்றுவிடவில்லை; நீண்டநேரம் பெருமழையில் நனைந்து,நனைந்துகுளித்துவிட்டதால் மகனுக்குக் குளிர் வந்துவிடுமாம். அந்தக்குளிரைப் போக்க வேண்டுமல்லவா! இயற்கைத்தாய் குளிரைநீக்க "ஞாயிறு" என்னும் வெப்பத்தைக் கொண்டுவருகிறாள்! மகன் இப்போதுவெப்பத்தில் குளிர்காய்ந்து குளிரைப் போக்கிக்கொண்டான்! இப்படி வருணனை செய்யும் குளியல் காட்சிப்படைப்பு முடியரசனாரின் கற்பனைக்கும் கனிவுக்கும் மிகச்சிறந்த சான்றாக அமைகிறது.

மகிழ்ந்து, மகிழ்ந்து குளித்த மகனை அப்படியே விட்டுவிடமுடியுமா? ஆடிப்பாடி குளித்து மகிழ்ந்த மகனுக்குக் கல்வி-படிப்பு வேண்டுமல்லவா! கவியரசர் முடியரசனாரின் கற்பனைமேலும் மேலும் இனிய காட்சியால் விரிவாக்கம் பெறுகிறது! தாயானவள் மகனின் கல்வியை மறக்கக்கூடாது அல்லவா! அதற்கும் இயற்கைத்தாய் ஓர் அற்புதமான வழி அமைக்கிறாள். எப்படி? "குயில் கூட்டங்களே, பச்சைக்கிளிகளே, வாருங்கள்" என்று அழைத்துபாட்டும் பாடமும் சொல்லுமாறு அமைக்கிறாள். "மகனே, இவற்றோடு பேசியும் பாடியும் உனதுகல்வியைச் செழுமைப்படுத்திக்கொள்" என்கிறாள். அப்படியே, இயற்கைத்தாய் அமைத்துக் கொடுத்தபடி,மகன் குளித்து, குளிர்காய்ந்து,

மகிழ்ந்து பாடமும் பயிலத் தொடங்குகிறான். இயற்கைத் தாய் என்ற கவிதையில் இத்தகையகருத்தும், கற்பனையும் இனியவை, எளியவை; அருமைப்பாடு உடையவை!

இந்த இனிய கற்பனைப் படைப்பில், இறுதியாக வீறுகவியரசர் முடியரசனார், சுட்டிக்காட்டும் இடம்தான் மிக முக்கியமான இடம். மொழியே விழியென வாழ்ந்து, கவிதை புனைந்த கவிஞர் இறுதியில் மொழிகுறித்தும் சுட்டிக் காட்டுகிறார். இயற்கைத்தாய் காட்டிய வழிக்கு ஏற்ப, இப்போது, மகன் கிளிகளோடும், குயில்களோடும் பேசத் தொடங்குகிறான். அந்தக் கிளிக்கூட்டமும், குயில் கூட்டமும் எந்த மொழியில் பேசும்? அவைகளுக்கு உரிய தாய்மொழியில் தானேபேசும்? மகனாகிய இவன் மொழியில் அவை பேச முடியுமா? இந்த வேறுபாட்டை உணர்ந்த மகன் மயிலும் குயிலும் அவைகளுக்கு உரியதாய் மொழியில் தானேபேசும்! அதுதானே இயற்கை! என்று உணர்கிறான். "பிடித்து, அவற்றைப் பார்த்தேன், அப்போது ஓர் அறம் கண்டேன்" அவை அவைகளுக்குரிய சொந்த மொழியில் பேசுகின்றன! அவை வேறுயாரோ ஒருவருடைய மொழியில் பேசவில்லையே!" என்று மகன் உணர்வதாகக் கவிஞர் படைக்கின்றார். அந்தப்பறவைகளும் மகனைப் பார்த்து, "நீயும் உன்னுடைய அன்னை மொழியில் பேசு! பாடு!"என்று அறிவுறுத்துகின்றனவாம்!

"இயற்கைத்தாய்" என்ற ஓர் அழகிய கற்பனைப் படைப்பில், இவை அனைத்தும் தந்து கவியரசர் ஓவியம் தீட்டுகிறார்.

"படித்திடுகஎனச்சொல்லிக் குயிலினங்கள்
பசுங்கிளிகள் இவற்றைத் தந்தாள்!
பிடித்தவற்றைப் பார்க்கையில் ஓர் அறம் கண்டேன்"

என்று இயற்கையைப் படைத்து அதன் வழியே "மொழிஅறம்" உணர்த்தும் வீறுகவியரசர் முடியரசனார் மறக்க முடியாதவர்!

'கவியரங்கில் முடியரசன்' நூலில் வீறுகவியரசர் சாற்றும் சாதி ஒழிப்புச் சிந்தனைகள்

சே.பாண்டிச்செல்வி, செ.கமலா *

முகவுரை

"இலக்கியத்தின் நோக்கம் காலத்தைப் பிரதிலிப்பது மட்டுமல்லாமல் மனிதனுக்கு வாழக் கற்பித்து அவனது வாழ்க்கையை நெறிப்படுத்துவதுமாகும். அத்தகைய நோக்கில் முடியரசனாரது படைப்புகளில் இயற்கை அழகும், தமிழுணர்வும், சமுதாய நோக்கும், பகுத்தறிவுச் சிந்தனையும், வாழ்வியலுக்கான நெறிமுறைகளும் நிறைந்துள்ளன. இயற்கை அழகின், தமிழுலகின் வனப்பும் சமூகச் சீர்திருத்த, சாதியொழிப்புச் சினப்பும் அவரது தனித்தன்மையை எடுத்துக்காட்டும்" (முனைவர் ம.ஸ்டீபன் மிக்கேல் ராஜ், கல்வி டுடே, மாத இதழ்). அத்தகைய பெருமைமிக்க வீறுகவியரசர் முடியரசனாரின் கவியரங்கில் முடியரசன் என்னும் நூலில் காணலாகும் சாதி ஒழிப்புச் சிந்தனைகளைப் பற்றி எடுத்துரைக்கிறது இக்கட்டுரை.

கவியரங்கில் முடியரசன்

இருபதாம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலம் - கவிஞர்களின் கவிதைப் புரட்சியாலும், இலக்கியவாதிகளின் எழுத்துப் புரட்சியாலும், கலைஞர்களின் கலைப்புரட்சியாலும் தமிழ்ச் சமூகம் எழுச்சியுறத் தொடங்கிய காலமாகும்.

தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு, தமிழ்ப்பண்பாடு, குமுகாயச் சீர்திருத்தம் - இவை பற்றிப் பேசினாலோ எழுதினாலோ அது புரட்சியை மூட்டும் பொல்லாங்கு எனவும், நாட்டைத் துண்டாடத் தூண்டுவது எனவும், ஆளும் வர்க்கமும் ஆதிக்கச் சாதி வர்க்கமும் அலறி, அநியாயக் குற்றச்சாட்டுகளை அள்ளிச் சுமத்தி அடக்குமுறைகளை அவிழ்த்துவிட்ட காலமது. அக்காலகட்டத்தில் நாடெங்கும் நடைபெற்ற கவியரங்குகளில் ஏறித் துணிந்துநின்று சமூகப் புரட்சிக் கவிதைகளை சங்கநாதமாய் முழங்கியவர் வீறுகவியரசர் முடியரசனார். 1954 முதல் 1960 ஆம் ஆண்டு வரையில் கவியரங்கேறிய முடியரசனார் கவிதைகளில் அச்சரங்கேறிய சில கவிதைகளின் தொகுப்பே

---

* தமிழாசிரியர்கள், கம்பன் கற்பகம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, காரைக்குடி.

'கவியரங்கில் முடியரசன்' என்ற இந்நூல் ஆகும். இது 1960 ஆம் ஆண்டு வெளிவந்தது.

தமிழ் வாழ்வு

'கவியரங்கில் முடியரசன்' என்னும் நூலின் முதல் கவிதையாய் அமைந்தது 'தமிழ் வாழ்வு' என்னும் கவிதை. அக்கவிதையில் தமிழ் வாழ்வு எது? கொடுமை வாழ்வு எது? என்பதை வேறுபடுத்தும் கவிஞர்,

> "ஒரு கடவுள் ஒரு சாதி என்ற பாங்கில்
> ஓரினமாய், அயலவரும் உறவாய் நண்பாய்ப்
> பெருமையுடன் தமிழ் மொழியை நாட்டைப் பேணிப்
> பீடுபெற வாழ்வதுவே தமிழ் வாழ்வு;
> பெருகுதொகைக் கடவுளரும், உயர்வு தாழ்வு
> பிறவியினால் பேசுகின்ற எண்ணில் சாதிக்
> குறுமனமும் பேதைமையும் அடிமைப் பண்பும்
> கொள்வதுவா தமிழ் வாழ்வு? கொடுமை வாழ்வு"

என்று பாடுகின்றார்.

'ஆடவர்' என்னும் தலைப்பிலான கவிதையில் வேட்டுவ குலத்தில் பிறந்த குகன் என்னும் வில்லாளனுக்கும், நாடு கொடுத்திடும் நாயகன் இராமனுக்குமிருந்த சாதி கடந்த நட்பைப் போற்றுகிறார். சாதியைத் துறந்தவரே 'ஆடவர்' என்னும் பொருளையும் குறிப்பால் உணர்த்துகிறார்.

வேண்டா எண்ணம்

தன்னினத்தை உணவுக்காகப் பகைக்கும் நாய் போல உயர்பதவி பெறுவதற்குத் தன்னினத்தைக் கொன்று குழி தோண்டுவது வேண்டா எண்ணம். தெருவில் போவோர் வருவோரைக் கேலி செய்யும் சிறுபுத்தி நல்லவர்க்கு வேண்டா எண்ணம் என்று வேண்டாத எண்ணங்களை அடுக்கியுரைக்கும் கவிஞர்,

> "ஒருகுலமே உண்டெனஇவ் வுலகுக் கோதும்
> உயர் நாட்டிற் சாதிமுறை வேண்டா எண்ணம்"

என்னும் வரிகளில் 'ஒன்றே குலம்' என்று வாழ்ந்த நம் பழந்தமிழ் நாட்டில், சாதி என்னும் சாக்கடையைத் தூக்கிச் சுமப்பது வேண்டா எண்ணம் என்று அறிவு புகட்டுகின்றார்.

வாக்கின்படியே வாழ்ந்த கவிஞர்

எவ்வளவு பெரிய கவிஞனாயினும் தான் சமூகத்திற்குக் கூறிய அறிவுரைகளைத் தன் சொந்த வாழ்வில் முழுவதுமாய்க் கடைப்பிடித்து ஒழுகினாராவென்று இதுவரை தெரியவில்லை. ஆனால் முடியரசனாரோ சொல் வேறு செயல் வேறாய் வாழ்ந்ததில்லை. வாழ்வும் வாக்கும் ஒன்றெனவே வாழ்ந்தவர். இதுவும் முடியரசனாரின் தனித்தன்மையே.

"சாதி ஒழிய வேண்டுமெனக் கவிதை பாடியவர்களில் கவியரசு முடியரசனார் தவிர, அதைத் தன் வாழ்வில் கடைப்பிடித்தவர்கள் வேறு யாரேனும் இருக்கிறார்களா? என்று எனக்குத் தெரியவில்லை" என்பது தவத்திரு குன்றக்குடி அடிகளார் வாக்கு.

"பாவரசர் முடியரசனார் தன் குடும்பத்திலும், சாதியிலும், ஊரிலும் சிக்கல் உருவாக்குகிற சாதியத்தின் மீது துணிச்சலாகக் கை வைத்ததுதான் அவரது நெஞ்சுரத்தைக் காட்டுகிறது. அவர் தன்னை ஒரு கவிஞராக மட்டும் அடையாளப்படுத்திக் கொண்டு பேரும் புகழும் பெற்று வாழ்ந்திருக்க முடியும். ஆனால் கொள்கை வழியில் தன் இல்லற வாழ்வையும், தன் குடும்பத்தின் அடுத்த தலைமுறையினரையும் அத்தகைய புரட்சிப்பாதையில் வழி நடத்தியிருக்கிறார்" என்று வி.சி.க தலைவர் தொல்.திருமாவளவன் வீர வணக்கம் செலுத்துகிறார்.

"சமூக மாற்றம் குறித்துப் பேசுகிற பலபேர் தன் குடும்பத்தை விட்டு விட்டு ஊருக்கும் உபதேசம் செய்து போலி வாழ்க்கை வாழ்ந்துவரும்போது கவிஞர் முடியரசனார் மட்டும்தான் தான் பின்பற்றும் சாதி மறுப்பு, பகுத்தறிவு, சமதர்மம் போன்ற கொள்கைகளைத் தன்குடும்பத்தாரையும் பின்பற்ற வைத்தார். அவரது குடும்பமே ஒரு சமதர்மப் பூங்காவாகும். உண்மையான தமிழ் மரபு என்பது இதுதான். இவரன்றோ புரட்சிக் கவிஞர்" என்று போற்றிப் புகழ்ந்தார் பேரா.அரசமுருகுபாண்டியன்.

தான் சாதிமறுப்புத் திருமணம் செய்து கொண்டதோடு மட்டுமல்லாது தன் பிள்ளைகள் அறுவர்க்கும் சாதிமறுப்புத் திருமணம் செய்வித்து தன்னளவில் சாதியை ஒழித்து வாக்கின் படியே வாழ்ந்து

காட்டிய வழிகாட்டியாகவும் திகழ்ந்த மாபெரும் கவிஞர் முடியரசனார் ஆவார்.

யாவரும் கேளிர்

'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்னும் தலைப்பிலமைந்த கவிதையில் சாதி சமயச் சழக்குகளற்ற சமத்துவ சமுதாயம் காண விழைந்த வீறுகவியரசர்

'விலங்கினத்தின் கீழினமாய் விளையாடித் திரியாமல்
குலங்கருதி மேலென்றுங் கீழென்றும் குறியாமல்
அவ்வவர்தம் நெறிபோற்றி அன்பொன்றே குறியென்று
தோழமையால் ஒன்றாகித் தூய்மையொடு உறவாகி
வாழ விழைக என வகுத்ததுவே அதன் பொருளாம்;
சாதிச் சழக்குண்டு சமயப் பிணக்குண்டு
கீழான இக்குணத்தில் கேளிர் எனுமெண்ணம்
பாழாம் நிலையன்றிப் பண்படுமோ நீர் சொல்லும்!'

என்று முரண்களையெல்லாம் அழித்தொழித்து முன்னேற்றம் காண்பதற்கு, சாதி வேறுபாட்டைக் காணாத சமத்துவ சமுதாயம் மலர வேண்டுமென்று அறிவு புகட்டுகின்றார்.

பாரதி – வீரன்

'கவியரங்கில் முடியரசன்' என்னும் நூலில் பதின்மூன்றாவது வரிசையிலமைந்த கவிதையே 'பாரதி – வீரன்' என்பதாகும். இக்கவிதையில் தான் 'யார் கவிஞன்?' என்பதற்கு வீறுகவியரசர் இலக்கணம் வகுத்துள்ள வரிகள் அமைந்துள்ளன.

"காசுக்குப் பாடுபவன் கவிஞன் அல்லன், கைம்மாறு விழைந்து புகழ் பெறுதல் வேண்டி, மாசற்ற கொள்கைக்கு மாறாய் நெஞ்சை மறைத்து விட்டுப் பாடுபவன் கவிஞன் அல்லன், தேசத்தைத் தன்னினத்தைத் தாழ்த்திவிட்டுத் தேட்டையிடப் பாடுபவன் கவிஞன் அல்லன் மீசைக்கும் கூழுக்கும் ஆசைப்பட்டு மேல் விழுந்து பாடுபவன் கவிஞன் அல்லன்" என்று கவிஞன் அல்லாதோரின் குண நலன்களை வெளிச்சம் போட்டுக் காட்டிய கவிஞர்.

"ஆட்சிக்கும் அஞ்சாமல் யாவரேனும் ஆள்க எனத் துஞ்சாமல் தனது நாட்டின் மீட்சிக்குப் பாடுபவன் கவிஞன் ஆவன்; மேலோங்கு கொடுமைகளைக் காணும்போது காட்சிக்குப் புலியாகிக் கொடுமை மாளக் கவிதைகளைப் பாய்ச்சுபவன் கவிஞன் ஆவன்; தாழ்ச்சி சொலும் அடிமையலன் மக்கட்கெல்லாம் தலைவனெனப் பாடுபவன் கவிஞன், வீரன்" என்று கவிஞர்க்குரிய இலக்கணம் உரைக்கின்றார். உரைத்த இலக்கணத்திற்கு சிறந்த இலக்கியமாய் வாழ்ந்துகாட்டிய முன்னுதாரணக் கவிஞரான முடியரசனார் சாதியை ஒழித்துக் காட்டிய சாதனையாளராய் பெருவுருவெடுத்து உயர்ந்து நிற்கிறார்.

'சாதியினால் தாழ்வுயர்வு பேசிப் பேசிச்
சாத்திரத்தை வேதத்தைச் சான்று காட்டிப்
பாதியில் நாம் படுகுழியில் வீழ்ந்து விட்டோம்;
பறையனென்றும் குறவனென்றும் பார்ப்பான் என்றும்
ஆதியிலே இல்லாத பழக்கந் தன்னை
அணுகவிட்டோம்; அடிமையுற்றோம்; மிடிமைப் பட்டோம்;
ஆதலினால் சாதியினை ஒழிக்க வேண்டி
'ஆடுவமே' எனும்பாடல் பாடித் தந்தான்'

என்று 'சாதிகள் இல்லையடி பாப்பா' எனப் பாடி முழக்கிய பாரதியைப் போற்றுகிறார்.

நிறைவுரை

'மேதினியைப் பாழ்படுத்த வந்த சாதி மேலுமினி வாழ்வதுதான் என்ன நீதி? என்று சாதியெனும் அரக்கனை ஒழிக்க தம் கவிதைக் கைவாளைச் சுழற்றிய வீறுகவியரசரின் கொள்கை வழியைப் பின்பற்ற வேண்டியதும், போற்றிப் பரவ வேண்டியதும் தமிழர் அனைவரது கடமையாகும்.

வீறுகவியரசர் கவிதைகளில் வீறுஉணர்வியம்

பாரிமுடியரசன் *

முதலாக

'வீறு' என்றசொல்லுக்கு 'வீரம், பெருமிதம்' என்று பொருள் கூறுவரெனினும், அவற்றையும் தாண்டி நுட்மான, ஆழமான பொருளுடையது அச்சொல். எதை இழப்பினும் கொள்கைத்தீவிரம், உறுதி, தன்மானம், போர்க்குணம், விடாத்தன்மை என்பவையே அவை.

> **"வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்**
> **ஊறெய்தி யுள்ளப் படும்" (குறள் - 665)**

வீறுபெற்ற மாண்புடையவரின் செயல் அரசாள்வோர் வரைசெல்லும். எனவே அவர் மக்களால் மதிக்கப்படுவர் என்கிறார் வள்ளுவர். "உறுதி கொண்ட நெஞ்சினாய் வாவாவா" இது பாரதியார் கூற்று.

மேற்கூறிய கூற்றுகளுக்குச் சான்றாக 'முடியரசன்' வீறுபெற்று நிற்றலையும், 'வீறுகவியரசர்' எனும் அடைமொழிக்கு அவரே உரியர் என்பதையும் கோடிடுவதே இக்கட்டுரைப் பொருண்மை.

யார்கவிஞன்?

மக்கள் மொழியாலும், இனத்தாலும், நாட்டாலும், சாதிமதங்களாலும் அடிமைப்பட்டு, ஆதிக்கவாதிகளால் அல்லறப்பட்டு, அதிகார வர்க்கத்தால் அலைக்கழிக்கப்பட்டு இன்னலுறும் நாட்டிலே வாழும் கவிஞன் ஆனந்தப் பள்ளுப் பாடமாட்டான். நெஞ்சம் குமுறும் எரிமலையாவான். மக்களை மீட்கக் குருதி கொதிக்கும் கவிதைகள் கொட்டுவான்.தன்னலம் துறந்து தன் குடும்பப் பற்றகற்றி, ஒப்புரவு, மனித நேயம், சமத்துவம் - இவைகளில் அக்கறை கொண்டு, கவிதைக் கைவாளைச் சுழற்றுவான். அவனே உண்மைக் கவிஞன். அக்கவிஞரே முடியரசன். கவிஞனுக்கு இலக்கணம் வகுத்த அவரே இலக்கணமும் ஆனார்.

---

* எழுத்தாளர், காரைக்குடி.

"வேலெடுத்துப் போர்தொடுத்த வீரம் எங்கே?
வெங்குருதி வாளெங்கே? தோள்கள் எங்கே?
கோலெடுத்த பேரெல்லாம் ஆள வந்தார்
கொட்டாவி விட்டபடி தூங்கு கின்றாய்!
மாலுடுத்த தமிழ்மகனே! மானம் எங்கே?
மயங்காதே விழி! எழு! பார்! உலகை நோக்கு!
கால்பிடித்து வாழ்வதுவோ தமிழ வாழ்வு?
கானத்துப் புலிப்போத்தே வீரங் காட்டு!"

(முடியரசன், நூல்:கவியரங்கில்முடியரசன்)

வீறுகவியரசர்

"பேரால் முடியரசன் பேரிடர்கள் உற்றாலும்
பேராமுடியரசன் பெற்று வந்தேன் கொற்றத்தை;
....
வாள்பிடித்து முன்செல்வேன் வால்பிடித்து பின்செல்லேன்
கோள்பிடிக்க அஞ்சிடுவேன் கோல்பிடிக்க அஞ்சுகிலேன்;
தாள் பற்றி நின்றறியேன் தக்க கவியெழுதத்
தாள்பற்றி நிற்பதுண்டு; தன்மான நெஞ்சுண்டு;"

(முடியரசன், -நூல் - வள்ளுவர் கோட்டம்)

முடியரசன் எனும் பெயர் கொண்டவன் நான்; பேரிடர்கள் வரினும் கொள்கை பெயரமாட்டேன், கவிதை எழுதத் தாள் பிடிப்பேன். அல்லவை மாய வாள் பிடித்து முன் நிற்பேன். ஆனால் தன்மான நெஞ்சுள்ள நான் என்னலனுக்காக எவர் காலும்பிடிக்க மாட்டேன், யார் பின்னும் செல்ல மாட்டேன் என இக்கவிதையில், 'பேரால், பேரா', 'வாள், வால்', 'கோள், கோல்', 'தாள் (கால்), தாள்' என்று சொற்சிலம்பம் ஆடுகிறார்; வீறுகவிதை பாடுகிறார். வயிற்றுக்கு எயிற்றைக் காட்டும் கவிஞரல்லவே வீறுகவியரசர்.

"கூடாரங் கூடார மாகக் குடிபுகுந்து
சூடாத பூக்கொய்து சூடிப் பழிசுமந்து
மானந்தனை யிழந்து மற்றவர்தம் தாள்பிடித்துக்
கூனல் மனத்தேனாய்க் கொள்கையை விற்றதிலை;"

(முடியரசன், நூல் -ஞாயிறும்திங்களும்)

'உயிர்விடுத்தும் மானத்தைக் காக்கும் வாழ்வே
பகுத்தாயும் அறிவுடையார் உயர்ந்த தென்பர்
பாழ்வயிற்றைக் காப்பதெனில் நாயுங் காக்கும்'
(முடியரசன், -நூல் - வள்ளுவர் கோட்டம்)

"நாட்டு வாழ்வை நச்சி நின்று
நாளும் நெஞ்சில் நாடினேன்
வீட்டு வாழ்வில் நாட்டமின்றி
வீறு கொண்டு பாடினேன்"
....
இட்ட கோடு வட்ட மாக
எல்லைக்குள் உலாவினேன்
தட்டு நேரில் முட்டும் போதும்
தாண்ட வில்லைகால்களே" .... (நூல் - பாடுங்குயில்)

"தணலென நிரப்பு வந்து
தனியெனைத் தகைதுத் தாக்க
அணுகினும் ஏழை யென்றால்
அரசன் நான் ஏற்பதில்லை!" (நூல் -நெஞ்சிற்பூத்தவை)

"சுற்றிவ ளைத்திடு மெத்துய ரத்தையும்
சுட்டுமு டித்ததை - எறிவேனே
சொத்து நலத்தினை முற்றஇ ழப்பினும்
சொற்றமி ழுக்கெனைத் - தருவேனே.

தொற்றிய ணைத்தவ ளைப்பெறு மக்களைத்
தொட்டிடர் பற்றினும் - மருள்வேனோ?
சொக்கிட வைத்திடும் எப்பொருள் கொட்டினும்
தொட்டுளம் விற்றிட - வருவேனோ?

கற்றம னத்தினிற் குற்றம கற்றிடும்
கட்டழ குத்தமிழ் - மொழிமாதே
கத்துகடற்புவிமெத்தமடத்தனம்
கற்றடிமைப்படத் - தரியேனே.

பெற்றநி லத்தினர் உற்றஇ டுக்கனைப்
பியத்தெறி யத்திறம் - அருள்வாயே.
பித்தம னத்தினர் நற்றெளி வுத்திறன்
பெற்றிட நற்கவி - பொழிவேனே.

(முடியரசன், நூல்: பாடுங்குயில்)

இவை போன்ற ஏராளமான கவிதைகள், அவரின் தன்மானவீறுக்குக் கட்டியங் கூறும். தன்மானம் விட்டுக்காசுக்குக் கால் பிடித்து, ஊடக வெளிச்சத்தில்விளம்பரம் பெற்று, பூடகம் போட்டு, பொய்யுடல் பாடி, மக்கள் மய(க்க)க் கவிஞரானோர் சிலர். இவர்களைப் 'கவிச்சக்ரவர்த்திகள்' எனப் படிப்பறிவற்ற பாமரர்கள் பகர்வது பாவமல்ல. ஆனால், தமிழ்ப் படித்தோர் ஏற்றிப் போற்றுவதுதான் ஏற்க முடியாத வேதனை. விளம்பர வெளிச்சத்தில் வீழ்ந்த விட்டில் பூச்சிகளாகி விட்டனர் தமிழறிந்தோர் பலர். இவர்களால் எப்படித் தமிழ் வாழும்? எவ்வாறு தமிழர் வளர்வர்? தமிழ் வளர்க்கத் தமிழ்ப் பயின்றார் அன்று; தான் வாழத் தமிழைக் கொண்டோர் - கொன்றோர் சிலர் இன்று, முன்னவரால் தமிழ் வாழ்ந்தது; பின்னவரால் தமிழ் வீழ்ந்தது.

நடிக நங்கையரின் அங்கங்களைப் பாடிப் பணம் சேர்த்த, 'ஒரு கையில் மதுவோடும்மறு கையில் மாதுகளோடும் மயங்கியும் முயங்கியும் கிடக்கும் நிலையில் உயிர் பிரிதல் தான் வாழ்வெடுத்ததன் பெரும் பேறு' - என்ற காசுக்கவிஞர்கள் வாழ்ந்த காலத்தில், வீறுகவிஞராக முடியரசன் வாழ்ந்தார். 'கண்ணாடி மாளிகை' எனும் திரைப்படத்திற்கு பாடல்கள், உரையாடல்கள் எழுதினார். தன்மானத்திற்கும், தமிழ்மானத்திற்கும் திரைப்படத்துறை இசைந்துவராததால் தேடிவந்த அவ்வாய்ப்புகளையில்லாம் உதறித்தள்ளிவிட்டு தமிழாசிரியப்பணிக்கு மீண்டு ஆயிரமாயிரம் மாணவர்களுக்குத் தமிழுணர்ச்சியூட்டினார். வறுமையில் வாடினாலும் செம்மாந்தப் பெருமிதவாழ்வு வாழ்ந்தார். பணத்துக்கோ - அரசபதவிக்கோ பாடவில்லை. தமிழாட்சிக்கும், நாட்டின் மீட்சிக்கும் பாடினார். காட்சிக்குப் புலியாகிக் கொடுமைமாளத் தன் கவிதைவாளைப் பாய்ச்சினார். வீச்சுடன்பாடி வீரக்கவியும் வீறுகவியுமானார். ஒப்பற்ற காவியங்களயும், ஓங்காரக் கவிதைகளையும் படைத்துத் தன் தமிழ்த்தாய்க்குக் காலத்தால் அழியாத இலக்கிய அணிகலன்களைச் சூட்டினார்.

திராவிட இயக்கத் தளத்தில், தமிழியக்கக் களத்தில்நிமிர்ந்து நின்று தமிழியவிடுதலை, சாதியொழிப்பு, பெண்ணுரிமை, பகுத்தறிவு, மறுமலர்ச்சி, குமுகச்சீர்திருத்தம். மாந்த-பொருளாதாரநிகர்மை, பொதுவுடைமை ஆகியவற்றிற்காகத் தன் கவிதைக் கைவாளேந்திப் போராடினார். தன்மானக் கொள்கை வேலேந்திக் களமாடினார். தமிழ்மொழி-இனப்பகைவர்க்கு அவர் கவிதைகள் இடி முழக்கமென ஒலித்தன. தன்மான-திராவிட இயக்கங்கள் இவர் கவிதைகளால் வளர்ந்தன. திராவிடநாட்டு வானம்பாடியாக - தமிழ்நாட்டுப் பாடுங்குயிலாக - தமிழியப் புரட்சிக் கவிஞராக - பொதுவுடைமைப் புதுமைக் கவிஞராகத் திகழ்ந்தார். தன் கவிதைக் கொள்கையில் நெகிழாததால் மைய, மாநில அரசுகளின் அரிய பல விருதுகளை இழந்தார்.

"கவிஞர் முடியரசன் ஓர் அற்புதக்கவிஞர். பொருளீட்டுவதற்காக ஆபாசங்களையும் அருவருப்புகளையும் பாடிய கவிதாசர்களிடையே அவர் ஒருவர் தான் வேறுபட்டுத் தனித்துநின்று மனித முனேனற்றத்திற்கும், தமிழ் விடுதலைக்கும், தமிழரின் அடிமை விலங்கை உடைக்கவும் தன்கவிதை வாளை வீசிய புரட்சிக்கவிஞராக முடியரசனாரைக் நான் காண்கிறேன்". சாகித்ய அகாடமிகளையும், ஞானபீடங்களையும் அவர் திரும்பிகூடப்பார்க்கவில்லை. தன் கொள்கை இலக்கை நோக்கியே அவர் குறியாய் இருந்தார்" (புதின எழுத்தாளர் ஜெயகாந்தன்)

தனித்துவம்

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய கவிஞர்கள், 'அடியவன்'எனப் பொருள் தரும் 'தாசன்'என்ற பின்னொட்டைத் தமது பெயருடன் சூடிக் கொண்ட காலத்தில், தன்னை அடியவன் என்று கூறிக் கொள்ளாமல் 'அரசன்'எனப் பெயர் புனைந்து, செம்மாந்தப் பெருவாழ்வு வாழ்ந்த பெருமிதக் கவிஞர் முடியரசனார். "காணாது ஈத்த இப்பரிசிலுக்கு யான் ஓர் வாணிகப் பரிசிலன் அல்லேன்...... முற்றிய திருவின் மூவரே ஆயினும் பெட்பின்றி ஈதல் வேண்டலமே" எனும் சங்கப் பாடலின் வைரவரிகளுக்குச் சான்றாக 'நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை, திமிர்ந்த ஞானச்செருக்கு' எனச் சங்கப் புலவர் போல் வாழ்ந்தவர். தமிழுயரப் பாடியதன்றித் தானுயரப் பாடியதில்லை. தான் ஏற்ற கருத்தை எதற்கும் அஞ்சாது எடுத்துரைக்கும் இயல்பினர்.

எவ்வளவு பெரிய கவிஞனாயினும் தான் சமூகத்துக்குச் சொன்ன அறிவுரைகளைத் தன் வாழ்வில் கடைப்பிடித்தொழுகினராவென்று தெரியவில்லை. ஆனால் முடியரசனாரோ சொல் வேறு செயல் வேறாய் வாழ்ந்ததில்லை. சாதிச் சகதிக்குள் நாறிக் கிடக்கும் இச்சாதியச்சமூகம் தன்னை ஒதுக்குமே என்ற கவலையோ, அச்சமோ கிஞ்சிற்றுமில்லாது சாதியைத் தூக்கி எறிந்தவர். தன் குடும்பத்திலும் சாதியை ஒழித்தவர். இது வீறுகவியரசரின் தனித்தன்மை.

"சாதி ஒழிய வேண்டும் எனக் கவிதை பாடியவர்களில் கவியரசு முடியரசனார் தவிர, அதைத் தன் வாழ்வில் கடைப்பிடித்தவர்கள் வேறு யாரும்உள்ளனரா?என்று எனக்கு தெரியவில்லை"

(தவத்திரு குன்றக்குடி அடிகளார் (பழையவர்) வாக்கு.)

படைப்பாளியை விடப் படைப்பு பெரிது என்பது உண்மைதான். ஆனால் படைப்பாளி தன் படைப்பில் கூறிய நல்லொழுக்க நெறிகளைத் தன் சொந்த வாழ்விலும் தவமாக மேற்கொண்டும், தன் படைப்பைத் தன் வாழ்வுக்காக அன்றி மக்கள் வாழ்வுக்காக அர்ப்பணித்துத் தன் வாழ்வைஈகம் செய்யும் பொழுதும் தன் படைப்புக்கும் மேலாக அப்படைப்பாளி உயர்ந்து நிற்கிறான். இது முடியரசனார்க்குத்தான் முற்றிலும் பொருந்தும்.

எனவே தனித்த ஓர் அடையாளத்தையும், தனித்த ஓர் கவிதைத் தன்மையையும் கொண்ட முடியரசனாரை, 'பாரதிதாசன் பரம்பரையின் தலைமகன்'என்ற எல்லைக்குள் சுருக்குவது ஏற்புடைத்தல்ல. சொல்-செயல்இணைந்து இறுதி வரை வாழ்ந்து சென்ற ஓர் புதிய-புரட்சி வரலாற்றின் தந்தையேவீறுகவியரசர்.

"இந்திய விடுதலையை முதன்மையா கக் கொண்டு பாரதி பாடினான்; அவன் வழி நின்றோர் பலர்; அவருள் தலைமை பாரதிதாசனுக்கு. பாரதிக்குப் பின் திசை மாறிய பாரதிதாசன் தமிழை முதன்மைஆக்கினார்; அவர் வழி நின்றோருள் தலைமை முடியரசனாருக்கே" (சாலமன் பாப்பையா)

"சென்ற தலைமுறைக் கவிஞர்களுக்கெல்லாம் முடியரசனார் தான் முன்னோடி - வழிகாட்டி, தலைமைக்கவிஞர்" (பெருங்கவிஞர் மீரா)

"நாட்டுரிமை, மொழியுரிமை பெற்றால் அன்றி / நற்றமிழர் தலைநிமிர்தல் இல்லை என்றார்! / வேட்டையிட வேற்றுமொழி நுழைந்த போது, / வெகுண்டெழுந்தே கவிவாளால் விரட்டி வைத்தார்! / கோட்டையினை ஆளுபவர் குறட்டை விட்டால், / குரல்கொடுத்து எழுப்பிவிட்டார்! உண்மை, இந்தப் / பாட்டரசர் பாட்டையில்தான் கவிஞர் கூட்டம் / பாடல்களைப் படைக்கின்றார்; மறுப்பார் உண்டா?" (கவிஞர் வேழவேந்தன், முன்னாள் அமைச்சர்)

தமிழியம்

தமிழ்மொழி, இனப்பகைவர்க்கு அவரது வீறுகவிதைகள் இடி முழக்கமென முழங்கின. தன்மான-திராவிட-தமிழியக்கங்கள் இவரது கவிதைகளால் வளர்ந்தன. அவ்வீறுணர்வுக் கவிதை இடிகளில் சில அடிகளை ஈண்டுக்கண்ணோட்டலாம்.

"முத்தமி ழேஉனை எப்பகை யாகினும்
முற்றிட முன்வருமேல் ∴
எத்தடை மோதினும் அப்படையாவையும்
எற்றிமு ருக்கிடுவேன்"
(முடியரசன், நூல் -தாய்மொழிகாப்போம்)

"வந்தமொழி நாடாள வாய்த்த தமிழ் பீடேக
வாழ்வதிலே யாது பலன்? வாளேந்தி வாமகனே
எந்தமதம் எக்கட்சி என்றெதுவும் பாராமல்
எமதுதமிழ் எமதுதமிழ் என்றோடி வா...."
(முடியரசன், நூல் -தாய்மொழிகாப்போம்)

"யாருக்கு நீயஞ்சிச் சாகிறாய்? -மொழிப்
போருக்கு வா! எங்குப் போகிறாய்?
பாருக்குள் நீ இன்று மூத்தவன் - தமிழ்
வேருக்கு நீபுனல் வார்த்தவன்"
(முடியரசன், நூல் -தாய்மொழிகாப்போம்)

"எங்கேஉனதுமறை? எங்கே உனதுநெறி?
எங்கே உனதிறைவன்? என்றால் விழிக்கின்றான்;

இங்கே புகுந்தமறை இங்கே புகுந்தநெறி
இங்கே புகுந்தஇறை என்பவற்றைக் காட்டுகிறான்;
அந்தோ தமிழினத்தான் தன்னை யறியாது
நொந்தே கிடக்கின்றான் நோயிற் படுக்கின்றான்;
சொந்தமெது வந்ததெது சொல்ல வகையறியான்
வெந்ததைத் தின்று வெறுமனே சாகின்றான்;
விண்முட்ட வாழ்ந்து வியந்த வரலாறு
மண்முட்டச் சாய்ந்து மடிவதோ? பீடுடுத்து
வாழ்ந்தவரலாறு வீழ்ந்து மறைவதோ?
தாழ்ந்து கெடுதல் தகுமோ?.........."

(முடியரசன், நூல் -தமிழ்முழக்கம்)

"நாடுமொழி இனங்காக்கத் தொடுக்கும் போரில்
நல்லுரிமை வேட்கையினைத் தடுப்ப தற்குக்
கூடுசிறைக் கம்பிக்கும் வலிமை யில்லை;
கொட்டுகின்ற குருதியினைக் கண்ட போதும்,
நாடுகிற பதவிதனை யிழந்த போதும்,
நடுக்குறுத்தும் கொடுவறுமை வந்த போதும்,
கேடுபல தொடர்ந்தாலும் தூக்கு மேடை
கிடைத்தாலும் அஞ்சாதிவ் வுரிமை வேட்கை"

'தென்றல்தவழ் நாட்டினரே! முரசொ லித்துத்
தென்னகத்தைத் திருநாட்டை மீட்ப தற்கு
மன்றங்கள் அமைத்திடுவீர் போர்வாள் ஏந்தும்
மாவீரர் படைசேர்ப்பீர்! இனமுழக்கம்
நின்றெங்கும் எழுப்பிடுவீர்! சிறையைக் காட்டின்
நிமிர்ந்திருந்த முல்லைமலர்ச் சோலை என்பீர்!
கொன்றொழிக்கக் கயிறெடுத்தால் கழுத்தைக் காட்டிக்
குலவுமெழில் முத்தாரம் என்று கொள்வீர்!'

'வீரமிகு நம்நாடு பாரில் ஓங்க
விடுதலைப்போர் தொடங்கிடுவீர்! உரிமை பெற்றுத்
தீரமிகு தனியரசாய் மக்க ளாட்சி
செழித்தோங்கச் செய்வதுநும் உரிமை யாகும்;"

(முடியரசன், நூல் --கவியரங்கில்முடியரசன்)

"புழுவாயுனை இகழ்வார்முனம்
புலியேறென எழுவாய்"
... ...
மொழிவாழவும் இனம்வாழவும்
முயல்வாய்தமிழ் மகனே!
... ...
இழிவாகிய நிலைஓடிட
எடுவாள்பகை மலையோ?"
எழுவாய்தலைநிமிர்வாய்உனை
எதிர்வாரினிஇலையே"
(முடியரசன், நூல் –முடியரசன்கவிதைகள்)

வெள்ளையன் விடுத்துச் சென்றான்
விரகினில் எடுத்துக் கொண்டாய்
கொள்ளையும் அடித்து விட்டாய்
கொடுஞ்செயல் பலவுஞ் செய்தாய்
வெள்ளைநெஞ் சுடைய யானும்
விடுதலைப் பயனுங் காணேன்
தள்ளையைக் கொல்ல வந்தால்
தலைமகன் பார்த்தா நிற்பான்?

என்னுடன் உன்னைக் கூட்டி
இணைத்தனன் எவனோ வந்து
பின்னுமென் னுடைமை யெல்லாம்
பிடுங்கினை! என்றன் தாய்க்கும்
இன்னலே செயநி னைத்தால்
இனியுமுன் தொடர்பெதற்கு?
சொன்னதும் பிரிந்து போபோ
சுடுமொழி தோன்று முன்னே'

'என்சொலைக் கேட்டு நெஞ்சுட்
சீறினை! என்ன செய்வாய்?
வஞ்சனை பலவும் செய்வாய்

வழக்குகள் தொடுத்து நிற்பாய்
வெஞ்சிறைக் கூட மென்று
வெருட்டுவாய் அடபோ பேதாய்
அஞ்சினேன் என்றால் என்றன்
அன்னையைக் காப்ப தெங்கே?
(முடியரசன், நூல் -தாய்மொழிகாப்போம்)

"எங்கள்குல மானத்தை ஏற்றமிகும் வீரத்தை
இங்கவர்தாம் போற்றாராய் எள்ளிஎமை மோதவரின்
போர்க்களிற்றின் காலடியில் புக்கழியும் வேய்முளைபோல்
சேர்த்தழியச் செய்திடுவேன்.... ....

மாற்றான் படையெடுத்து வந்தான் எனப்புகன்ற
மாற்றம் செவிப்புகுத மானத்தான் ஓரிளைஞன்
வேலெடுத்தான்போர்தொடுத்தான்வீரச்சமர்க்களத்தில்
காலொடித்தான்கையொடித்தான்கண்ணிமைக்கும்நேரத்தில்
சாகடித்தான் பற்பலரைச் சாகாரை நாற்புறமும்
போகடித்தான் ஆனாலும் தன்னுயிரைப் போக்கடித்தான்"
(முடியரசன், நூல் -தமிழ்முழக்கம்)

'ஆளடிமை செய்யாமல் ஆண்ட இனத்தவன்நீ
வாளுடையதோளுயர்த்தி வட்டமிட்டு போர்முழுதும்
வெற்றிக்கொடி நாட்டி வீரப் புகழுயர்த்தி
சுற்றித் திரிந்தவன்நீ சோர்ந்து கிடப்பதுவோ?
நாட்டை நினைந்தாயா? நாடாண்ட உன்னினத்தின்
பாட்டை நினைந்தாயா?பாடகலக் கேடகலத்
தன்னாட்சி பெற்றுயரச் சற்றும் நினைந்தாயா?
உன்னாட்சி பெற்றுங் குயர நினைந்தாயா? ∴
சாதிதொலைத்தாயா? சாத்திரக் குப்பைகளை
மோதித் தகர்த்தாயா? மோத நினைந்தாயா
(முடியரசன், நூல் -ஞாயிறும்திங்களும்)

'வீறு படைத்தவர் வீரர் படைக்குலம் வெல்போரில்
கூறு படுத்தலின் வீழும் உடற்பிணங் கூத்தாடும்
மாறு கெடுத்தனம் மானம் மிகுத்தனம் என்றேதாம்

சாறு குடித்தலிற் சால மதர்த்துடல் தள்ளாடும்'
(முடியரசன், நூல்- இளம்பெருவழுதி)

இவை போன்ற அவரின் பாடல்களைப் படிக்கும் பொழுது,வீரத்தில் நம் தோள்கள் விம்மும்.போர்க்களத்தில் நின்று வாளெடுத்துப் போராட நம் கைகள் துடிக்கும்.

நிகரமை

முடியரசனார் கவிதைகளில் பொதுவுடைமை-புரட்சி-மனிதநேயம்-சீர்திருத்தம்நிறைந்த கருத்துகள் பொங்கும். இழப்பதற்கு ஏதுமற்ற தொழிலாளி அடிமை விலங்கொடித்து எழுச்சிபெறப் புரட்சியூட்டும்.அவற்றின் வீறுணர்வில் இங்குவிழியோட்டுவோம்.

"வறுமைமிக்குவலிமைகெட்டு
வறியர்வாடும்போதிலே
வலியர்மட்டும்வளமையுற்று
வளர்வெதென்னநீதியோ?
பொறுமையற்றுப்புலிநிகர்த்துப்
பொதுமைகாணும்போரிலே
புரட்சிதோன்றும்புதிய
புரளிஎன்னநேருமோ?
(முடியரசன், நூல் -புதியொதொரு விதி செய்வோம்)

ஏழைமைநீங்கிடச்சூளு ரைப்போம் - தீமை
எங்கெழுமாகினும்வாளெடுப்போம்
தோழமைபாடியாழெடுப்போம் - மக்கள்
துயரங்கள்யாவையும்போக்கடிப்போம்
(முடியரசன், நூல்-பாடுங்குயில்)

பலர் வறுமையிலும் சிலர் வளமையிலும் வாழுவது நீதியல்ல எனவும் ஏழமையை நீக்கிடச் சூளுரத்து, தீமைகளை வீழ்த்த வாளெடுத்து, மக்கள் துயரங்களைப் போக்கடித்துத் தோழமை கொள்வோம் எனப் பொதுவுடைமைச் சிந்தனையைத் தூண்டுகிறார்.

கவியரசு முடியரசனாரின் கவிதைகளில்கனல் தெறிக்கும். சமூக சமதர்மத்துக்கு எதிரான கருத்துக்களைச் சாடுவார். முடியரசனாரின் கவிதைகள் காலத்தை வென்று நிற்கும்".

(–தா. பாண்டியன், பொதுவுடைமைக் கட்சித் தலைவர்)

குமுகம்

'எங்கெங்கு நோக்கினும் நேர்மை நெளிந்து கிடக்கிறது. நாணயம் நலிந்து கிடக்கிறது. ஒழுங்கு மழுங்கிக் கிடக்கிறது. தூய்மை துவண்டு கிடக்குகிறது. சுருங்கக் கூறின் மனச்சான்றே மறைந்து கிடக்கிறது.......இவ்வாறு நேர்மை முதலியன குறைந்து, பண்பாடுகள் மறைந்து மக்கள் மாறிவரும் நிலைமையைக் காணும் பொழுதெல்லாம் நினைந்து நினைந்து உருகி உருகி, நெஞ்சம் குமுறுவதுண்டு. அக்குமுறலின் வெளிப்பாடே 'நெஞ்சு பொறுக்கவில்லையே' எனும் இத்தொகுப்பிற் காணப் பெறும் கவிதைகள்........நடுவு நிலைமையில் நின்று நாட்டைப் பார்க்கிறேன். நாட்டைச் சுற்றிக் குற்றங்களும் குறைபாடுகளும் முற்றுகையிட்டுக் கிடப்பதைக் காணுகிறேன். அவை கடியப்பட வேண்டுமென்பதற்காகக் கண்டிக்கிறேன். அக்கண்டனத்தில் என் நண்பர்களும் சிக்கலாம்; அதற்கென் செய்வது? கண்டனத்துக்குள்ளானோர் வருந்துவர் என்பதையும் அறிவேன். மாணவன் வருந்துவான் என்பதற்காக ஆசானும், மகன் வருந்துவானே என்பதற்காக அன்னையும் கண்டிக்காமல் இருந்து விடின் நிலைமை என்னாவது?......"குமுகாயம் மண்புக்கு மாயுமே என்று குமுறும் எனது நெஞ்சம், கடமையைச் செய்யத் தூண்டுகிறது. எனது கடமையை நான் செய்கிறேன்" என்று தன் நூலின் முன்னுரையில் முடியரசனார் முன் மொழிகிறார். அவர் நெஞ்சக் குமுறலின் வீறுணர்வில் எழுந்த எரிமலைக் கவிதைகளின் சீற்றத்தில் வெடித்துச் சிதறிய வெப்பப் பிழம்புகளை நாம் நெஞ்சிறுத்துவோம்.

"எதைக்கண்டுதுடிப்பதடா? அந்தோ இங்கே
எதைக்கண்டு கொதிப்பதடா? தமிழர் நாட்டில்
பதைக்கின்ற நிலையல்லால் அமைதி யில்லை
பைந்தமிழின்நிலைகாணின்நெஞ்சேவேகும்"

(முடியரசன், நூல்-நெஞ்சு பொறுக்கவில்லையே)

"எங்கெங்குக் காணினும் வஞ்சமடா - அதை
எப்படித் தாங்கிடும் நெஞ்சமடா

இங்கெவர் போக்கிலும் குற்றமடா - இதை
எண்ணிடும் போதெலாம் செற்றமடா
எங்கணுங் கீழ்மையைச் சாடிடுவேன் - மனம்
ஏற்றம் பெறக்கவி பாடிடுவேன்"
(முடியரசன், நூல்-நெஞ்சு பொறுக்கவில்லையே)

'பத்தியின் பேரால் நடந்தா லென்ன
பகுத்தறி வாலது நடந்தா லென்ன
கற்றவன் தீமை புரிந்தா லென்ன
மற்றவன் அதையே செய்தா லென்ன
குற்றங் குற்றந்தான் - ஒரு
சட்டஞ்சட்டந்தான்'
(முடியரசன், நூல்-பாடுங்குயில்)

வக்கிரமங்களைக் கண்டு வாளாவிருக்கும் கவிஞரல்லரவர்; அக்கிரமங்களை வீழ்த்தக்கவிதை வாளெடுத்த கவிஞர்.வீறுகவியின் வாள்வீச்சில் வீழ்ந்தவர்கள் வீணர்கள் மட்டுமல்ல; குத்துப் பட்டவர்கள் அவரின் நண்பர்களும்தான்; ஏன், அவர் பெற்ற பிள்ளையும் கூட. "அதற்கென் செய்வது நாட்டைக் காக்கும் போரில் வாளுக்கெதிர் வருபவன் நண்பனாயிருந்தாலென்ன? பெற்ற மகனாயிருந்தாலென்ன?" என்கிறார் வீறுகவியரசர்.

முடிவாக:-

"ஓங்கும் விளம்பரங்கள், உற்ற துணைபுரிந்து
தாங்குந் திருக்கைகள், தாங்காத் துயரகற்றிக்
காக்குந் திருவுளங்கள் கண்டதிலை இன்றுவரை;
ஏக்கம் அதனாலே எள்ளளவும் கொண்டதிலை;
நாட்டின் நலம்நினைந்து நல்ல கனவுலகில்
பாட்டுப் பறவையெனப் பாடி வருபவனை
வீட்டுத் துயர்வந்தா வீழ்த்திவிடும்? வீழ்ந்துவிடின்
பேட்டுத் தனமாகும் பிள்ளைச் செயலாகும்;"
(முடியரசன், நூல் -ஞாயிறும்திங்களும்)

என்று பாடியவர் வீறுகவியரசர். விளம்பரத்தை வெறுத்தவர். விளம்பர வெளிச்சம் அவர் மீது வீசவில்லையெனினும், இத்தகைய ஒப்பற்ற கவிஞரை வாழ்வும் வாக்கும் ஒன்றென வாழ்ந்த வாய்மைக் கவிஞரை - வீறுகவிஞரை ஏற்றிப் போற்றத் தமிழ்ச் சமூகம் தவறிவிட்டது.

"அவர் கவனமில்லாம் எப்பொழுதும் தமிழ்மீதும், தமிழ்பேசும் சமுகத்தின் மீதுமே இருந்தது. அதனால் அவர் சொந்த வாழ்க்கையில் அக்கறை செலுத்தவில்லை. தன்னைப் பற்றி நினைகக் கூட நேரமில்லாமல் தமிழ் பற்றியே நினைத்து வாழ்ந்த அவரைத் தமிழகம் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. இது தமிழறிந்தவர்களின் குறையேயாகும். அவர் ஒரு கவிஞர் மட்டுமல்லர். புல கவிஞர்களை உருவாக்கியரும் ஆவார்." (-மு.விசுவநாதன், கானாடுகாத்தான், 5.12.98-'தினமணி' நாளிதழில்)

1950-60களில் தமிழகத்தில் தமிழ்க்கொடி தாங்கி, கவிதைக் கைவாளேந்தி. இலக்கியச் செங்கோலாட்சி செய்த முடியரசன் வரலாற்றை இன்றையத் தமிழுலகம் சரிவரப் படிக்கவில்லை. அவரை நேற்றையத் தமிழ்ச்சமுகம் மறைத்து விட்டாலும், இன்றையத்தமிழ்ச்சமுகம் மறந்து விட்டாலும், எதிர்கால எழுச்சியில் உருவாகும் நாளையத் தமிழ்ச்சமூகம் முடியரசனாரை முன்னிறுத்தும் என்பது உறுதி.

"இவருடைய (முடியரசன்) கவிதைப் படை வரிசையில் நாளைய தலைமுறை நிச்சயம் அணிவகுக்கும். அந்த நாளை எண்ணியெண்ணி இன்புற இன்றே இவர் கவிதைப் படைப்புகளைத் தேடிப்பிடித்துச் சுவைப்போம்". (முனைவர் பெ.கி.பிரபாகரன், நூல்:மனத்தை விட்டகலாத கவிஞர்கள்,பக்.42)

கவிஞரின் குரல் முழக்கம் இன்று ஓய்ந்திருக்கலாம். ஆனால் அவரின் கவிதை முழக்கம் என்றென்றும் ஓயாது ஒலித்துக் கொண்டேயிருக்கும்.

வீறுகவிமுடியரசர்கவிபாடிமுத்தமிழுக்குமுடிசூட்டுவோம்!
வீரத்தமிழ்மூவேந்தர்செந்தமிழஆட்சிநிலைநாட்டுவோம்!!
சாதிமதற்றசமநிலைத்தமிழ்நாடுமீட்டுக்காட்டுவோம்!!!

வீறுகவியரசர் முடியரசனின் மொழிப்பற்று

அ.ரா.பானுப்பிரியா *

வீறுகவியரசர் முடியரசன் கவிதை நூல்கள் ஒவ்வொன்றும் தமிழுக்கு ஆக்கம் செய்யும் செம்மொழிச் செல்வமாகும். அவரின் ‘தாய்மொழி காப்போம்’ என்னும் கவிதை நூலின் வாயிலாக அவரிடம் காணப்படும் தாய்மொழிப் பற்றினை வெளிப்படுத்தும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

தமிழே வெல்லும்

காலத்தைக் கடந்த மொழியாகவும், கற்போர் நெஞ்சைக் கவரும் மொழியாகவும், கடல் கடந்து உலகத்தை வென்ற மொழியாகவும், நாவன்மை படைத்த மொழியாகவும், இலக்கண இலக்கிய மூலத்தைக் கண்ட அறிவு மொழியாகவும், திகழக்கூடிய ஒரு அன்பு மொழியென்றால் அது நம் தாய்மொழியாகிய தமிழ் மொழியாகத்தான் இருக்க முடியும். இவ்வகையான பெருமையெல்லாம் கொண்ட உலகையே ஆண்டு வந்த எம் தாய்மொழியாகிய வளம்மிகுந்த தமிழ்மொழியை, வளமேயில்லாத சிறுமொழியாகிய இந்தி மொழியால், அடிமையுற்று வாழ்விழந்து போய்விடுமோ, இல்லவேயில்லை.. வெற்றி வாகை சூடி என்றும் தமிழ்மொழியே வெல்லும் என வீரமுழக்கமிட்டுக் கூறுகின்றார் வீறுகவியரசர்.

மொழிகாப்போம்

‘எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்’ நம் நாட்டில் மாற்றார் ஆட்சிமுறை புகுந்தமையால் தமிழர் கண்ட எண் வடிவம் மறைந்து வருகின்றன. அதனால் மக்கள் இரண்டு கண்களில் ஒரு கண்ணை இழந்தவராகக் காணப்படுகின்றனர். எஞ்சியுள்ள எழுத்தும் முன்னோர் கண்ட இயல்புடனே நிலைத்திருக்கும் என்பதில் உறுதியில்லை. வஞ்சமனம் படைத்தவர்கள் வேற்றுநாட்டு வரிவடிவத்தைப் புகுத்த முயல்கின்றனர். இதனை நினைக்கும் பொழுது நெஞ்சு வெந்து போகின்றது.

* முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்ப் பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

"அஞ்சுவதும் கெஞ்சுவதும் மடமையாகும் அனைவரும்
ஒன்று சேர்த்து கேட்பது தான் நமது கடமையாகும்"
(நூல்:தாய்மொழி காப்போம்)

எனக் கூறுகின்றார். இந்திய நாட்டில் உள்ள ஈரேழு மொழிகளாகிய பதினான்கு மொழிகளுக்கும் தனித்தனியாக உரிமை வேண்டும். ஒருமொழி மற்றொரு மொழிமேல் ஏறி வீற்றிருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. எந்தத்துறையாக இருந்தாலும் அதில் தமிழ்மொழி ஆட்சி வேண்டும். எங்கள் எண்ணம் நிறைவேறவேயில்லை. ஏனெனில் வாழ்வதோடு சாவதே மேல் என்கிறார். இதனை,

"என்னாட்டிற் கலைக்கூடம் ஆட்சி மன்றம்
எத்துறையும் தமிழ்மொழியின் ஆட்சி வேண்டும்
இந்நாட்டம் நிறைவெய்த வில்லை என்றால்
இருந்தென்ன வாழ்ந்தென்ன சாவே மேலாம்"
(நூல்:தாய்மொழி காப்போம்)

என்னும் அடிகள் புலப்படுத்தும்.

தேர்தலில் ஆட்சியைப் பிடிப்பதற்காக 'தமிழ், தமிழ்' என உரைக்கின்றனர். ஆட்சியைப் பிடித்த பின்பு அதனை மறந்துபோய் விடுகின்றனர். தமிழைவிட ஆட்சி என்ன உயர்ந்தனவா இல்லைவேயில்லை. செந்தமிழ் உயர்வு வேண்டி போராடிச் சிறை செல்லும் புலவர்களுள், உயிரீயும் புலவர்களுள் முதல் புலவனாக நானாக வேண்டும் என்கிறார்.

உயிர் கொடுப்போம்

இந்திமொழி வரவால் நமது தாய்மொழியின் நிலை கீழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றது என எவ்வளவு எடுத்துக் கூறினாலும் அதனை ஆட்சியில் இருப்பவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அறப்போர் பல நடத்தி உயிர்கள் பலியான போதிலும், இந்திவெறி கொண்ட மாந்தர் இன்றவரை அதனை காது கேளாதவராக இருந்து வருகின்றனர். விரல் ஐந்தும் தனித்தனியே இருந்தாலும் வேலேந்தும் பொழுது இணைந்து இருக்கும். அதனைப்போல இந்திய மாநிலங்கள் தனித்தனியே இயங்கி வந்தாலும், வேற்றுநாட்டால் பகைவரும்போது உறவுணர்ந்து தோள் தந்து இணைந்து நிற்கும். அவ்வாறு நின்று,

"உறவுக்குக் கைகொடுப்போம் எனினும் எங்கள்
உரிமைக்கு குரல்கொடுப்போம் தென்புலத்தின்
மறுதிக்கில் வாழ்வோர்கள் குரலைக் கேட்க
மறுத்துவிடின் உயிர்கொடுப்போம்"

என வீறுகவியரசர் வீரமுழக்கமிட்டு உரைக்கின்றார்.

மொழிப்போர்

மணற்பரப்பும் பூங்காவுள் கள்ளிக்கூட்டம் வளரவிடாமல் தடுப்பதும், வாழைத்தோப்பில் மந்திபடை வராமல் தடுப்பதும், உணவளிக்கும் நெல்வயலுள் உதவாக்காளான் படரவிடாமல் தடுப்பதுபோல, இணையில்லாத் தமிழ் வழங்கும் தமிழ்நாட்டில் இந்திமொழி புகுவதையும் தடுப்பது நமது கடமையாகும் என்கிறார்.

சிங்கம் வாழும் காட்டில் அஞ்சிவரும் நரி ஆட்சி அமைக்க நினைப்பது போல, குயிலினத்தை கோட்டான் ஆள நினைப்பது போல, தொன்னூல்கள் பல தொடுத்த பெட்டகத்துள் சிறிய கறையான் ஆள நினைப்பது போல, செந்தமிழின் பேழைக்குள் இந்திமொழியும் ஆள நினைக்கின்றன. இதனை நாம் தகர்த்து எறிய மொழிப்போரைத் தொடங்க வேண்டும் என்கிறார். அறப்போரைத் தொடங்குவதற்குக் காஞ்சி செம்மல் அண்ணா தம் முரசொலியை முழங்கவிட்டார். வரப்போகும் மொழிப்போரில் அணிவகுக்கும் வயப்புலிகள் கூட்டமொரு கடலையும் மிஞ்சும், இறப்போர்கள் சிந்துகின்ற குருதி வெள்ளம் எழுந்தெழுந்து தலைகளுடன் அலைகள் வீசும், தமிழ்மொழிக்குள் நுழைய நினைக்கும் இந்தி இதனுள் சிக்கிச் சீர் இழந்து நாணிழந்து சிதறி ஓடும் என்கிறார்.

ஆண்டமொழி அடிமையாவதால் தன்மான உணர்வு கொண்டு எழுந்தெழ வேண்டும். பொறுக்கும் வரை பொறுத்திருந்தோம் பொறுத்த நம்மைப் புழுவென்று கருதுகின்றனர். குனிந்து கொண்டே இருக்கும் வரை ஏறுபவர் ஏறிப்பார்ப்பார். அதனால் இளைஞர்படை நிமிர்ந்தெழுந்து வீறுகொண்டால் தருக்குடையார் தலை உருளும், உடல்கள் சாயும். எனவே தன்மானம் உணர்வு கொண்டு போர்முரசு முழங்கட்டும் எனக் கூறுகின்றார்.

போரைத் தாங்குகின்ற வலிமையும், வீரமும் தம்மிடம் உண்டு எனவும், சாவதற்கு அஞ்சாத துணிவும் தம்மிடம் உண்டு எனவும்

கூறி, மொழிப்போரைத் தொடங்குவதற்கு மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டும் செய்தி புலப்படுகிறது.

அந்தநாள் வந்தே தீரும்

இந்திய நாட்டில் இந்திமொழி நுழைந்தால் நம் நாட்டில் முழங்கட்டும் போர்ப்பறை, ஒவ்வொரு தமிழ் மகனும் வாளேந்திப் போருக்கு வருக, வெறியோடு போராடினால் வெற்றி வாகைச் சூடலாம் எனக் கூறுகின்றார். உறவுக்குக் கைகொடுப்போம் எங்கள் நாட்டின் உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்று பலமுறை கூறியும் பயன் ஒன்றும் விலையவில்லை. கொதித்தெழுந்து 'உயிர் கொடுப்போம்' என்று கூறியும் விரலெடுத்துச் செவிவழியை அடைத்துக் கொண்டனர்.

"விடுதலையாற் பெறும்பயனை நமக்கு மட்டும்
தரமறுத்தால் உயிரெடுப்போம்"

என முழங்கும் தமிழ்த்திருநாள் ஒன்றிங்கு வந்தே தீரும் எனக் கூறுகின்றார்.

மொழிப்பற்று

கன்னட மாநிலம் காணும் ஆசையில் சென்றுள்ளார். அங்கு பிருந்தாவனத்தின் அழகினை ரசித்து நகர்வலம் வந்துள்ளார். வரும் வழியில் இசையரங்கு அதனுள் சென்று பொருள் விளங்கும் இசையினை ரசித்தார். மயங்கும் வேளையில் மற்றொரு பாடல் ஒலிபரப்பு ஆனது. கலகம் விளைந்தது, இசையும் நின்றது. ஏனென வினாவிய போது,

"இசைவலார் பிறமொழிப் பாடல் இசைத்தலாற்
சினந்தெழு வோரிது செய்தனர்"

என்றனர். மொழிவெறி என்றேன். தாய்மொழிப் பற்றின் தகைமை உணர்ந்து வாயிதழ் அசைந்தன. ஆனால் நம் தமிழ்நாட்டில் ஒலிபரப்பாகும். ஆகாசவாணி வானொலியில் தமிழிசைக்குச் சிறுபொழுது ஒதுக்கி, பிறமொழிப் பாடலுக்கு அதிகநேரம் ஒதுக்குகின்றனர். அதனால் தமிழ் மக்கள் மொழிப்பற்று கொண்டு இதனை எதிர்த்து நாம் போராட வேண்டும். நம் ஒவ்வொருவரிடமும் தாய்மொழிப்பற்று பிறப்பில் இருந்தே வரவேண்டும் என்கிறார்.

சட்டம் இயற்றுக

எம்மொழியும் சமம் தான் என்று கூறினால் இணைந்து வாழ்வோம், நும்மொழிதான் சிறந்தது என்று கூறி எம்மொழிக்குள் நுழைந்தால் தனிநாடு நொடியில் தோன்றும் என்கிறார்.

"நன்மையென்றால் கைகொடுப்போம் - மாறாக
தீமையென்றால் போர்தொடுப்போம்"

என சட்டத்தில் எழுதுக எனக் கூறுகின்றார்.

முடிவுரை

தமிழர் அனைவரும் தன்னிலை மறந்து தமிழ்மகன் என்னும் மெய்ந்நிலை பெறவேண்டும். பிறமொழிக்கலப்பில் இருந்து தமிழ்மொழியைக் காக்கப் போராட்டவுணர்வு வேண்டும். எனவே அனைவரும் எழுந்து வருக. தம் தாய்மொழியைக் காப்போம் என அழைக்கின்றார்.

மூச்சும் பேச்சும் தாய்மொழி - முடியரசன் காட்டிய நேர்வழி

கவிஞர் எல்.பிரைட் *

தாய்மொழி வழிக் கல்வியே மிகச் சிறந்த கல்வி என உலகின் பல்வேறு நாடுகளிலும் நிறுவப்பட்டுள்ளது. தாய்மொழி வழிக் கல்வியை மேற்கொண்ட பல்துறை தமிழர்கள் பலரும் பெரும் சாதனையாளர்களாக வலம் வந்திருக்கிறார்கள். இதைத்தான் கவிஞர் முடியரசனார்,

"தமிழ்நாட்டின் சிறப்பனைத்தும் புகல்வ தென்றால்
தனிப்பிறவி எடுத்தவர்க்கும் இயலா தாகும்;"

என்று கூறி பெருமிதத்தில் நெஞ்சம் நிமிர்த்தி நிற்கிறார். இவ்வுண்மைகளையெல்லாம் மறைக்கும் விதமாக கிராமப்புறங்களில், அரசுப் பள்ளிகளில் தமிழ் வழிக் கல்வியை மேற்கொள்ளும் மாணவர்கள் மெட்ரிக்குலே'ன் தரத்திலான பாடங்களைக் கற்க இலாயக்கற்றவர்கள் என்பது போன்ற கருத்தை, முன்பு தமிழக அரசால் நியமிக்கப்பட்டிருந்த சமச்சீர் கல்வி ஆய்வுக்குழு பரப்ப முனைந்திருப்பது கண்டிக்கத்தக்கது.

முதலில் தாய்மொழிக் கல்வி தேவையா? தேவையற்றதா? என்கிற விவாதமே தேவையற்றது. பெற்ற தாய் வேண்டுமா? வேண்டாமா? என்கிற விவாதமே தேவையற்றது. அந்தக் கேள்வி எழுவதே உணர்வுப்பூர்வமானாலும் சரி, அறிவுப்பூர்வமானாலும் சரி நியாய மற்றது.

தாய் என்கிற உறவும், தாய்மொழியும் ஓருயிர் பெற்றுள்ள இரண்டு வடிவங்கள்தான்.

"காலத்தைக் கடந்த மொழி கற்போர் நெஞ்சைக்
கவருமொழி தரைகடந்து கடல் கடந்து
ஞாலத்தை வென்றமொழி என்றுங் குன்றா
நாவன்மை படைத்தமொழி இலக்க ணத்தின்
கோலத்தை முழுமைபெற வடித்துக் காட்டும்
குறைவில்லா அறிவுமொழி இலக்கியத்தின்

* பட்டதாரி அறிவியல் ஆசிரியர், தே பிரித்தோ மேல்நிலைப் பள்ளி, தேவகோட்டை.

மூலத்தைக் கண்டமொழி சுவைகள் விஞ்சும்
மும்மைமொழி அன்புமொழி தமிழே யாகும்.''

என்று முடியரசனார் உரக்கச் சொல்லிய உண்மைக்கிணங்க தமிழ் ஒரு மிகுந்த மேன்மையான பண்படுத்தப்பட்ட மொழி. இம்மொழி நாட்டின் பழம்பெரும் இலக்கிய வளம் உடையது என்கிறார். வடமொழியை ஆய்வு செய்த ஜெர்மானிய அறிஞர் மார்க்ஸ் முல்லர். தமிழ்மொழிக்கு இயற்கையிலேயே உள்ள ஈர்ப்புசக்தியின் காரணமாகத்தான் அயல் நாட்டு அறிஞர்களாகிய ஜி.யு.போப், கால்டுவெல், வீரமாமுனிவர், சீகன் பால்கு ஐயர், ராபர்ட் டி நொபிலி போன்றவர்கள் தமிழைக் கற்பதோடு நிறுத்திக்கொள்ளாமல், அவற்றில் மொழிச் சீர்த்திருத்தமும், தேன் சுவை சொட்டும் இலக்கியங்களும் படைத்துப் பெருமை அடைந்தனர்.

''மொழிகாக்க முனையாத நாடு – பாரில்
மூலைமுடுக் கெங்குமுண் டாவென்றுதேடு
வழிகாட்டி நிற்றல்கண் கூடு – போரில்
வாளுக்கும் தோளுக்கும் வாகைதனைச் சூடு''

என்று உலகமெங்கும் தாய்மொழி காக்க, தலைகொடுக்கவும் தயங்கி நிற்கும், எந்த நாட்டு மக்களாயினும் அக்கோழைகளைப் பார்த்து கொந்தளித்து, வாளுக்கு இரையாக்குங்கள் என்று வங்கக்கடலென பொங்கியெழும் முடியரசனாரின் உணர்ச்சிப் பெருக்கிற்கிணங்க, பொருளாதாரத்தில் முன்னேறிய நாடுகளாகக் கருதப்படுகிற ஜெர்மனி, ஜப்பான், பிரான்ஸ், இத்தாலி, சீனா, கொரியா போன்ற நாடுகளில் தாய்மொழி வழிக் கல்வியே பின்பற்றப்படுகிறது. 1970-களில் இருந்தே ஈழத்தில் மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற்கல்விகள் தமிழர்கள் தமிழிலேயே பயில்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

மேற்குவங்கம், குஜராத், கர்நாடகம், கேரளம், மகாரா'டிரம் முதலான மாநிலங்களில் மாநில மொழியைக் கற்காமல் யாரும் மேல்படிப்புக்குப் போகமுடியாது. தமிழ்நாட்டில் மட்டுமே 'அ', 'ஆ' தெரியாதவர்கள் கூட முனைவர் பட்டம் வரை சென்று விடமுடியும். சிங்கப்பூர், மலேசியா, இலங்கை போன்ற அயல்நாடுகளில் எல்லாம் தமிழ் ஆட்சிமொழி. ஆனால், தாய்வீடான தமிழகத்தில் தமிழின் நிலை பரிதாபமாக உள்ளது.

மேல்நாட்டுச் சாத்திரங்களை தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும் என்கிறான் மகாகவி பாரதி. எதற்கு? அதற்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணம் இருக்கிறது. தமிழ்மொழியில் அவை மொழி மாற்றம் செய்யப்படும் வரை. அதுவரை ஆங்கிலம் தேவையா? எனில், ஒருவகையில் தேவைதான். உலக மொழியாக இருக்கிற காரணத்தால், பல்வேறு நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட அறிவியலை, படைக்கப்பட்ட இலக்கியங்களை, எழுதப்பட்ட வரலாற்றைப் படித்துத் தெரிந்துகொள்ளப் பயன்படும் மொழி என்ற அளவில் ஆங்கிலம் போதுமானது. தமிழக அரசின் பாடத்திட்டத்தில் ஆங்கிலம் ஒரு பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

ஆங்கில மொழியை எழுதவும், பேசவும், கற்றுக்கொள்ளவும் விரும்புகிறவர்கள் இந்த வாய்ப்பையே சரியாகப் பயன்படுத்திக் கொள்ளலாமே? அனைத்துப் பாடங்களையும் ஆங்கிலத்தில்தான் கற்க வேண்டும் என்ற நிலைக்குப் போகும் போது, அது, நமது தாய்மொழியாகிய தமிழின் செல்வாக்கைக் குறைத்து, ஆங்கில மொழியின் ஆதிக்கத்துக்கு வழிவகுத்துவிடாதா?

மேலும் வீட்டில், விளையாட்டுத்திடலில், நண்பர்களிடம் பேசுகையில், காதலிக்குக் கவிதை எழுதுகையில் தாய்த் தமிழ் வேண்டும். படிப்பதற்கு மட்டும் ஆங்கிலம் வேண்டும் என்றால் அது எவ்வளவு முரண்பாடான மனப்போக்கு? ஓரளவு ஏற்புடைய காரணம் இருந்தும், உலக மொழியாகிய ஆங்கிலத்தையே அண்டவிட நம் உள்ளம் பதறுகிறது. நிலைமை இப்படி இருக்க, இந்தியாவின் வடமாநிலங்களில் சில இடங்களில் மட்டுமே கோலோச்சிக் கொண்டிருக்கக் கூடிய இந்திப் பேய் தொந்தி துருத்தி, நம் தாய் மொழியாகிய தமிழை தின்று கொழுத்து, விழுங்கப் பார்க்கிறது. சங்கம் வைத்து வளர்த்த தமிழ் மீது, சில ஆக்கிரமிப்புகள் வந்து விழுந்து அசிங்கப்படுத்த அனுமதிப்பானா தமிழ் மறவன்? அதிலும் விடுவாரா நம் முடியரசர். வீறுகொண்டு எழுந்தார்.

"வீடென்ன மனையென்ன மக்க ளென்ன
வீணுக்கு வாழ்வென்ன பதவி என்ன
நாடென்ன மொழியன்னை நலியும் போது
நாமென்ன மரமென்று நினைந்தார் போலும்?
ஓடென்ன மெலிந்ததென்ன? நரம்பி லெல்லாம்
ஓடுவது புண்ணீரா? செந்நீர் வெள்ளம்;
ஈடென்ன கண்டதுண்டு தமிழ்மொ ழிக்கே?
ஈந்திடுவோம் நம்முயிரை; வாகை கொள்வோம்"

என்று எரிமலையாய் வெடித்து, புலியைப் போல் உறுமுகிறார்.

மொழி என்பது கல்வி சார்ந்த பிரச்சனை மட்டுமன்று. அம்மொழி பேசுகிற இனத்தின் நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றைப் பிரதிபலிப்பதுமாகும். அந்த வகையில் ஆங்கிலம், இந்தி மொழிகளின் ஆதிக்கத்தை வளரவிடுவது, பாரம்பரியம் மிக்க, பழமை வாய்ந்த நமது தமிழர் நாகரிகத்தையும், பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் நாமே குழிதோண்டி புதைப்பதற்குச் சமமாகாதா?

இந்தச் சிந்தனையின் அடிப்படையில் தான் தாகூர் தனது 'கீதாஞ்சலி' கவிதை நூலை, தாய்மொழியான வங்காள மொழியிலேயே முதன் முதலில் எழுதினார். காந்தியடிகளும் தனது ஷசத்திய சோதனை' நூலை குஜராத்தி மொழியிலேயே படைத்தார். 1956-ஆம் ஆண்டில் இந்தியா மொழிவாரி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டதும் இந்த உணர்வின் அடிப்படையில் தான். இதைத்தான், தனது தீப்பிழம்புக் கருத்துக்களைத் தித்திக்கும் தமிழ் மொழியில் இப்படிச் சொல்ல வருகிறார், வீறுகவியரசர் முடியரசனார்.

"தத்தமது நாகரிகம் மொழிகள் பண்பு
தனித்தன்மை எள்ளளவும் கெடுத லின்றி
ஒத்துரிமை உணர்வுடனே மாநிலங்கள்
உளமொன்றி வாழ்வதுதான் தமது வேட்கை;
பித்தரென வெறியரென ஒருமை என்ற
பெயர்சொல்லி இந்தியினால் தைத்து விட்டால்
எத்தனைநாள் ஒட்டிருக்கும்? குனிந்த மாந்தர்
இருதோளும் விரித்தெழுந்தால் தெறித்துப் போகும்"

ஆங்கிலத்தில் படித்தால் தான் அதிமேதாவிகளாக உருவாக முடியும் என்கிற மாயை சிலரால் திட்டமிட்டே உருவாக்கப்பட்டு, அதே தவறான கருத்து மக்களிடமும் நிரம்பி உள்ளது. இந்தியக் குடியரசுத் தலைவர் பொறுப்பை மேன்மைப்படுத்திய அறிவர் அப்துல்கலாம், பேரறிஞர்கள் வா.செ.குழந்தைசாமி, மு.அனந்தக் கிருஷ்ணன், ஆதி சேஷய்யா, மருத்துவர் பி.ராமமூர்த்தி, ச.முத்துக்குமரன், இஸ்ரோவில் பெரும் பொறுப்பு வகித்து பெருமை சேர்த்த மயில் சாமி அண்ணாதுரை, சிவன் போன்றோர் கிராமத்துப் பள்ளிக்கூடங்களில் படித்து உயர்நிலைக்கு வந்தவர்கள்தான். அவர்கள் பெரும் சாதனையாளர்களாக உருவாவதை

எந்தவிதத்திலும் தமிழ் வழிக் கல்வி பாதிக்கவில்லை. மாறாக வளர்ந்திருக்கிறது.

இன்னும் ஒரு வியப்பிற்குரிய செய்தி என்னவென்றால், தமிழ் இலக்கணமானது, கணிப்பொறிக்குரிய கணிதத் தன்மையோடு ஒத்துப் போகிறதாம். இது வேகமாக வளர்ந்து வரும் கணினியுகம் என்பதால், நாளை உலகத்துக் கணிப்பொறிகளிலெல்லாம் நமது தாய்த் தமிழே அதிக செல்வாக்குப் பெற்றிருக்கப் போகிறது என்பதில் சந்தேகமே இல்லை.

தொடக்கக் கல்வி, தாய்மொழி வழியாகவே கொடுக்கப்பட வேண்டும் என்பதே உலக அளவில் அறிஞர்கள் பலரின் ஒருமித்த கருத்து. காந்தியடிகள் கூட கல்வி உளவியல்படி, தாய்மொழியில் நல்ல அடித்தளம் அமைத்தால்தான், பிறமொழியறிவு கை கூடும் என்கிறார். முதல் வகுப்பு முதல் பள்ளி இறுதி வகுப்பு முடிய தாய்மொழியே பாட மொழியாகவும், பத்தாம் வகுப்புக்குப் பிறகே பிற மொழியைக் கற்க வேண்டும் என்று கூறினார்.

"எம்மொழியும் சமமாக இனியதொரு
வழிசெய்க இணைந்து வாழ்வோம்
நும்மொழிதான் கோலோச்ச நுழைப்பீரேல்
தனிநாடு நொடியில் தோன்றும்;
நன்மையெனிற் கைகொடுப்போம் நலிவுதரிற்
போர்தொடுப்போம் நயச்சொல் பேசும்
எம்மொழியும் இனிவேண்டா எழுதுங்கள்
சட்டத்தில், இதுதான் நேர்மை"

என்று முடியரசனார் எதிர்காலத்தைத் தீர்க்க தரிசன மாய் கணித்ததைப் போலவே, முன்பொரு முறை உச்சநீதிமன்றத் தீர்ப்பு ஒன்று, தொடக்கக் கல்வி அவரவர் தாய்மொழியிலேயே இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. நிலைமை இப்படி இருக்க, சமச்சீர் கல்விப்புயல் தமிழ் வழிக் கல்வியையும் சேர்த்து அழித்துவிடும் என்பது போன்று பணமுதலைகளின் அடிவருடிகள் கருத்துச் சொல்லி வருவது கண்டிக்கத்தக்கது தானே?

ஆங்கிலத்தைக் காதலிப்பவர்கள், இன்று நீதிமன்றங்களில் ஏறி, தமிழை சிறைக்குள் தள்ள கங்கணம் கட்டிக் கொண்டு

செயல்படுகிறார்கள். அவர்களுக்குச் சில அரசியல்வாதிகளும் வழக்குரைஞராக மாறி வாதாட முடிவெடுத்துச் செயல்படுவதுதான் கொடுமையிலும் கொடுமை.

"விரித்துவரும் வலையிலெல்லாம் தப்பி நின்று
வீழாமல் சிரிக்கின்ற தமிழ ணங்கே!
குறித்துவரும் பகையஞ்சிப் புறமிட் டோடக்
கூரறிவுப் படைதந்த எங்கள் தாயே!
நெருப்புப்புனல் செல்கறையான் வாய்கள் தப்பி
நின்றொளிரும் ஏடுடையாய் அம்மா நின்றன்
சிரித்தமுகங் காண்பதற்கே என்றும் வாழ்வேன்
சிறியன்எனைக் காப்பதுநின் கடமை யாகும்"

-முடியரசனார்

என்னும் வீறுகவியரசரின் பாடல் வரிகளை நெஞ்சில் நிறுத்தி மொழி காக்க முனைந்தெழுவோம்.

வீறுகவியரசர் படைப்புலகம் - பூங்கொடி

வி.பூபதிராஜா *

மொழி வளர்ச்சியை குறிக்கோளாகக் கொண்டு இல்லறம் துறந்து, தன்னலம் வெறுத்து பொதுநலம் ஒன்றே பேணித் தன் வாழ்வையே கொடுக்கவல்ல பெண்மகளாக ஒருத்தி நம் தமிழகத்திற்கு வேண்டுமென எண்ணி மறுமலர்ச்சிப் பின்னணியில் கவிஞர் முடியரசன் மொழிக்காப்பியம் என்ற ஒன்றை உருவாக்கி அதன்பின் மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்று சிறையில் நோய்வாய்ப்பட்டு பின் மரணமடையும் பூங்கொடியைத் தலைவியாகக் கொண்ட காப்பியத்தில் மொழிப்போராட்டம் தோன்றி சமூக வரலாற்றுப் பின்னணிகள் மற்றும் மறுமலர்ச்சியின் எதிர்பார்ப்பின் தேவைகளை பூங்கொடி எவ்வாறு நிறைவு செய்கிறார் என்பதைக் காப்பியமாய்ப் படைத்த கவிஞர்,

> "கண்ணனைய மொழிகாக்க
> கடிமணத்தை துறந்த ஒரு
> பெண்ணணங்கின் வரலாறு
> பேசும்மொரு காப்பியம்"

என்று கவிஞர் எடுத்துரைப்பதைக் காணலாம்.

பூங்கொடி

> "வன்னெஞ்சினர் அவ்வள்ளியின் வாழ்வை
> இகழ்ந்தும் அறிவேன், என் வயிறீன்ற
> மகளே யாயினும் வள்ளியின் மகளே
> பூங்கொடி என்று பொருந்தினேன் ஆதலின்
> அங்கவள் தன்னை இசைத்துறை அறுத்து
> பாங்குடன் பொதுநலப் பணிக்கே ஆக்கினேன்"
>
> (பூங்-மு-பக்-9-10)

என்று கவிஞர் முடியரசன் பூங்கொடியை அறிமுகம் செய்கிறார். காரணம் பூங்கொடியின் துணிச்சலும் வீர உணர்வும் தான் அன்று மணிமேகலை ஆருயிர்களுக்கு அமுதுபடைத்தாள் இந்தப் பூங்கொடியோ தமிழ் உணவு தருகிறாள். தமிழகம் எங்கும் விழாக்கோலம் கொண்ட பொழுது அவள் கொண்ட அந்தத் திருக்கோலமே தான் இன்று அது பெரும் கோலமாக மொழிக் காப்பியமாக வளரத் தொடங்கியது. காரணம் பூங்கொடியின்

* தமிழாசிரியர், ஏபிசிஸ் கேம்பிரிட்ஜ் பள்ளி, நாரணமங்கலம்.

அழகு அனைவரையும் கவர்ந்தது. எப்படி மணிமேகலை அழகும் கொண்டு விளங்கிய காரணத்தால் சாத்தனார் மணிமேகலையை சமயத் தொண்டிற்க்காக துறவியானாள் அதுபோல கவிஞர் முடியரசன் பூங்கொடியை சமூகத் தொண்டிற்காக மொழி இனம் காக்கும் போராட்டத்திற்கு அவளை ஈடுபடுத்துவதற்காக அவள் இல்லற வாழ்வைத் துறந்தாள் பூங்கொடி. அவளின் அழகும் அவளை பாதித்தது இருப்பினும், மொழியுணர்வுக்காக தன்னையே அர்ப்பணித்து துறவறம் மேற்கொள்கிறார். அவள் மீது காதல் கொள்ளும் கோமகன் பூங்கொடியை திருமணம் செய்ய ஆவல் கொள்கிறான். பூங்கொடியோ துறவறம் மேற்கொள்ள இருக்கிறாள். கவிஞர் முடியரசன் அவளின் அழகை வர்ணிக்கும் பொருட்டு,

" உடனுறை தோழி அல்லி உரைப்போன்
பூங்கொடி நல்லாள் பொற்பின் செல்வி
தேங்கெழில் இளமை செறிதரு சிற்பம்
சிற்றிடை கொடியை சிரிக்கும் பிறையெனும்
நெற்றிப் புருவம் வில்லினை நிகர்க்கும்
அவ்வில்லடியில் அம்பென இருவிழி
செவ்விதன் நிற்கும் செவ்வாயிதழில்" (பூங்-பக்-13-14),

என்று நயம்பட நல்குகிறார் கவிஞர் முடியரசன்.

பூங்கொடியின் போராட்டம்

அருண்மொழி தன்தோழி தேன்மொழியிடம் தன் கணவன் வடிவேல் இறந்து விட்டான் அதுவும் படுகொலை செய்யப்பட்டான் என்பதை கவிஞர் முடியரசன்,

"சொல்லின் செல்வர் சோர்வளி தொண்டர்
அல்லும் பகலும் ஒருவிர்த் தமிழே
வெல்லும் வகையால் வீரம் விளத்தவர்
நல்லவர் இவரை நரிக்குணம் விஞ்சிய
கொல்லும் பகைக்குணம் கொண்டோர் ஒருசிலர்" (பூங்-பக்-10)

என் கணவனை கொன்று விட்டனர் என்று அருண்மொழி புலம்பும் காட்சியைக் கண்டு பூங்கொடி

"அழுதிடல் ஏனெனின் அப்பெரும் துயரை
கழுவும் ஆற்றல் கண்ணீர் குளதென

நம்புவர் அதனால் நலிவுங்குறைவர்
பூங்கொடி தனக்கோ பொங்கிய துயரம்
நீங்கிற் றிலது நெஞ்சம் விம்மத்
தேம்பி தேம்பி தெரிவை அழுதனள்" (பூங்-பக்-12-13)

என்று கவிஞர் பூங்கொடியின் இந்நிலையையும் இந்நிலையே பூங்கொடியை இல்லற வாழ்வைத் துறக்கவும், போராட்டத்திற்கு நல்ல ஆயுதமாக இருந்தது. இருப்பினும் பூங்கொடி கடல் நகர்க்கு சென்று மழை பொழிந்து கயவர் வீசிய கல்லடிப்பட்டும் அஞ்சாமல் இருந்தால் தாமரைக் கன்னி மீண்டும் கடல் நகருக்குள் வந்து பூங்கொடிபால் கோமன் செய்யும் தமிழ்ப்பணியை ஆதரித்தாள். தமிழரின் தமிழ் ஏடுகளை தேடி அலைந்தும், மூதாட்டியின் வாயிலாக பல இசைகளைக் கூறு இருபெரும் சுவடிகளைப் பெற்று பூங்கொடி தாயகம் திரும்பினாள். பிறகு பல இன்னல்களைச் சந்தித்த பூங்கொடி மறைமலை அடிகளிடம் நிகழ்ந்ததைக் கூறி மீனவன் என்பான் விட்டுச் சென்ற சுவடுகளை நான் கொண்டு வந்துள்ளேன் என்றும் அதைக்கொண்டு பல போராட்டங்களை அவள் தொடுத்தாள்.

"கூத்தும் இசையும் இருநூல்ஏத்தும் படியாய் என் வழிப்பட்டன வாழ்த்து கூறி மகிழ்ந்தவை புரட்டினேன் நெருப்பார் அண்டு நெஞ்சம் வேதுபெற்றிருப்பது போல் இன்பம் விளைந்து இசையும் கூத்தும் தொழிலும் இல்லை எனும், வசைமொழி கூறி வருவோர் மடமை தொலைக்க இவ விருநூல் துணைசெய்யும் என நான் விலைக்கு பெற்றிப் வேடுகள் கொணர்ந்தேன்" (பூங்-பக்-63-64) என கவிஞர் கூறுகையில் இவையே போராட்டத்திற்கு அடித்தளமாக இருந்தன என்பதை கவிஞர் எடுத்துரைக்கிறார்.

பூங்கொடியின் தொண்டு

பூங்கொடி இசை நுணுக்கமும் யாப்பிலக்கணமும் தெளிந்து இரு துறையிலும் வல்லவளாக திகழ்ந்தாள். மேலும் சண்டிலி என்னும் வடபுல பெண்ணும், இத் தொண்டிற்கு உதவியாக இருந்தாள். இவளுடைய தொண்டினால் கோனூர் வள்ளல் மாளிகையில் மயில்வாகனரைக் காணும் பேறும் பெற்றாள். தமிழுக்காக அவர் எழுதிய பதினான்கு ஆண்டுகள் ஆழ்ந்து எழுதிய யாழ் நூலை, பூங்கொடியிடம் தமிழ்த் தொண்டிற்காகக் கொடுத்தார். அயல் நாடுகள் எல்லாம் சென்று பூங்கொடி பலவுஞ்சென்று தமிழின் சிறப்பை இரவும்பகலும் பாராது தொண்டு செய்தாள். இதனைக் கவிஞர்,

"விளக்கிடை நின்றான் வீங்கிருள் புகுவோன்

துளக்கம் கொள்வேன் துணை விழிப்புலனும்
ஒளியிழந் தொருபொருள் உணரா திருக்கும்
....
உழைப்போர் வருதுயர் ஒன்றுங் காணார் அரிதாய்
மலைப்பாய் தோன்றிய அப்பணி சிறிதாய்
எளிதாய் செயற்படும் அதனால்
என் மொழி யாவும் ஏற்றுளம் பதித்து
தென்மொழி உயரத் தேன்மொழி தொண்டு செய்"(பூங்-பக்-70-71)

பூங்கொடியின் இத்தொண்டு பல இன்னல்களையும் போராட்டங்களையும் சந்திக்க நேர்ந்தது. அறப் போர் தொடங்கியது.

"அறப்போர் வெல்லும் அன்னை மொழியே
மறப்போர் ஆட்சி மண்ணினுட் செல்லும்
எனச்சில தலைவரும் இயம்பினர் அங்கண்" (பூங்-பக்-235)

என்ற முழக்கமோடு பூங்கொடியின் போராட்டம் பல பல. பூங்கொடியின் உணர்வு பெரும் சிறைக்கு தள்ளப்பட்டது.
இதனைக் கவிஞர்,

"ஒட்டியும் வெட்டியும் உரைபல நிகழ்த்தி
பட்டி மன்றெனப் பலர் பலர் நிற்க
அறப்போர் நிகழ்த்திய அறிவையர் தாமும்
குறிப்பே றுடையார் குன்றுறையடிகளும்
இறப்பே எனினும் ஏற்போம் என்ற
வரிப்போத தையரும் வாழ்த்தொலியுடனே
சிறை கோட்டத்து சென்றனர் சிரித்தே". (பூங்-பக்-236)

அவர்கள் சிறை சென்றதையும், தமிழின் மீது கொண்ட பற்றின் காரணமாக சிறைச்சாலைகள் கூட இவர்களுக்கு தமிழ்ச் சோலை என்று இருந்தனர்.என்பதை முடியரசன் கூறுகிறார்.

20ஆம் நூற்றாண்டின் பெண் எழுச்சி, பெண் முன்னேற்றம், பெண் விடுதலை எனப் பல்வேறாக இருந்தாலும் தமிழுணர்வுக்காக தமிழுக்காக மணிமேகலையின் மறுபிறவியாக பூங்கொடி அவதரித்து தமிழ் உணர்வுக்காகவும், மொழிக்காகவும் பழந்தமிழரின் பழமையை மீட்கவும், நாம் வாழும் காலம் தமிழுக்காகவும் தமிழர்களுக்காவும் வாழவேண்டும் என்ற தமிழ் உணர்வை நமக்கு கவிஞர் முடியரசன் பூங்கொடியின் வாயிலாக எடுத்துரைத்துள்ளார்.

தன்னேரிலாத் தமிழியப் புரட்சிக் கவிஞர் - முடியரசன்

ஐ.பெர்னால்டு ஜார்ஜ் ராஜ்*
ப.அருண்*

முன்னுரை

பேச்சு, கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல், ஓவியம் போன்ற பல்வேறு கலைகளில் பிறர் உள்ளங்களை ஈர்க்கும் தனித்துவ ஆற்றல் கவிதைக்கு உண்டு. இந்திய - ஆசியக் கவிஞர்களின் எண்ணிக்கை எண்ணிலா அளவிற்கு காலங்காலமாய்த் தோன்றி மறைந்தாலும், மிகச் சிலரே காலங்கடந்தும் கவிதைகளில் கவிதைகளாய் வாழ்கின்றார்கள். அவர்களுள் இருபதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் தோன்றிய தன்னேரிலாத் தமிழியப் புரட்சிக் கவிஞர் பற்றிக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்

மன்னரையும், மங்கையரையும் பாடித் தளர்ந்து போயிருந்த தமிழ்க் கவிதையை விடுதலைப் போராட்டத்திற்கான வீறுமிக்க தளத்திற்குக் கொண்டு வந்து நிறுத்தியது இருபதாம் நூற்றாண்டு கவிஞர்களின் மகத்தான சாதனையாகும். அவர்களுள் முன்னோடியாக பாரதியாரும், பாரதி வழிவந்த பாரதிதாசனும், இவ்விருவரையும் தம் கவிதைப் பரம்பரையின் முன்னோடிகளாகக் கொண்ட முடியரசனும் மிக முக்கியமானவர்கள்.

முப்பெருங்கவிஞர்கள் மூவருள் முடியரசனார் தனித்துவமாய் தமிழியப் புரட்சியைத் தம் படைப்புகளில் எழுச்சியோடு ஊட்டி தனிப்பெரும் கவிஞராய், பரம்பரையுணர்வு மிக்க பாவலராய்த் தோற்றமளிக்கிறார்.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ விசுநாதம் அவர்கள் முடியரசனாரைக் குறிப்பிடும் பொழுது ‘இருபதாம் நூற்றாண்டின் இலக்கியவாதிகளுள் இணையற்றவர் கவியரசர் முடியரசனார்’

---

* வீறுகவியரசர் முடியரசனார் அவைக்களம், தே பிரித்தோ மேல்நிலைப் பள்ளி, தேவகோட்டை.
* வீறுகவியரசர் முடியரசனார் அவைக்களம், தே பிரித்தோ மேல்நிலைப் பள்ளி, தேவகோட்டை.

(முடியரசன் கவிதைமுத்துகள், சாகித்திய அகாதெமி வெளியீடு, ப.246) என்று புகழ்ந்துரைக்கிறார்.

கவிஞர் வைரமுத்து அவர்கள் 'இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞரான முடியரசனார் என் மனதை ஆட்கொண்ட கவியரசர், கனல் தெறிக்கும் கவிதைகளால் தமிழுணர்ச்சியை நம் உதிரத்தில் ஏற்றியவர். அவருடைய கவிதை வரிகள் தமிழுக்குக் கல்வெட்டு வரிகள்' என்று போற்றுகிறார் (கவிதைக்குப் பிறந்த மகன் கவியரசர் முடியரசன் கலைஞன் பதிப்பகம், ப.146)

தமிழ்த் தேசியம்

பாரதி இந்தியாவை முன்னிறுத்தித் தம் பாடல்களை இயற்றினார். பாரதியை வழிகாட்டியாகக் கொண்ட பாரதிதாசன் பாரதி வழிநின்றும், பின்னாளில் 'திராவிடம்' பாடினார். பாரதி, பாரதிதாசன் வழிமரபில் வந்த முடியரசன் முழுக்க முழுக்க தமிழியம் பாடும் தமிழ்த் தேசியக் கவிஞராகத் தம்மை நிலை நிறுத்திக் கொண்டார்.

மொழி-இனம்-நாடு-சமூகம் ஆகிய தளங்களில் தம் கவிதைக் கருவியைக் கூர்தீட்டிய முடியரசனார் தம் முன்னோர் வழிநின்றாலும், தனித்துவமாய் தன் படைப்புகளை அமைத்துக் கொண்டார்.

'பாரதியார் இக்கவிஞருக்குப் பாட்டனார்; பாரதிதாசனார் இக்கவிஞருக்கு தந்தை போன்றவர். அப்பெருங்கவிஞர்களுடைய வழியில் சென்று ஒவ்வொரு விதத்தில் அவர்களையெல்லாம் வென்றுவிட்டார் இவர் (முடியரசனார்)' என்று முடியரசனார் பற்றி டாக்டர் அ.சிதம்பரநாதன் அவர்கள் 14.04.1960இல் வழங்கிய பொன்னுரை (கவியரங்கில் முடியரசன் ப.9) பாட்டனையும், தந்தையையும் கவிதை மரபில் வென்ற முடியரசனாரின் தனித்துவத்தைக் காட்டுகிறது. 'தம்மின் தம் மக்கள்' என்ற வள்ளுவ வாக்கிற்குச் சான்றுபகர்கிறது.

'நமக்கென்று நாடுண்டு மொழியும் உண்டு; / நாகரிகத் தொன்மைமிகு இனமும் உண்டு; / சுமக்கின்ற அடிமைமனம் போதும் போதும்; / சுரண்டுகின்ற வடவரொடு தொடர்பு போதும் / எமக்கென்று தனியாட்சித் திருநாடிங்கே / எழுப்பிடுவோம்..' எனக் கிளர்ந்தெழுந்து கவிப்போர் தொடுத்தார்.

'உழுவார்கரம் உயர்வாய்வர / உலகோர் முயல் திருநாள் / உனதாகிய திருநாடொரு தமிழ் நாடென வருநாள்' எனப் பாடித் தன்னாட்சித் தமிழ்நாடு அமைந்தால் தான் உழவர் உயர்வார் என்றார்.

தன்னேரிலாத் தமிழியப் புரட்சி

'முடியரசனார் மாபெரும் தமிழ்த் தேசியப் பாவலர்; தமிழின எழுச்சிப் பாவலர்; தமிழுணர்ச்சியும் தமிழ் வீறும் மிக்க அவரது பாடல்கள் தமிழ்த் தேசியப் படைக்கலன்களாகும்' என்றார் பெருஞ்சித்திரனார்.

'கவியரசர் முடியரசனார் தமிழ்த் தேசியம் பாடி வானம்பாடியாகக் கவிதை வானில் சிறகடித்துப் பறந்தவர். தமிழின விடுதலைக்காக ஓயாது குரல் கொடுத்தவர்' என்று போற்றிப் புகழ்ந்தார் பழ.நெடுமாறன்.

பண்டைய அகன்ற பரந்த பைந்தமிழ்நாடு காலப்போக்கில் ஆரியத்தின் சூழ்ச்சியால் இன்றையத் தமிழ்நாடாகச் சுருங்கி அடிமையாகிக் கிடக்கிறது. எஞ்சிய தமிழகமும் சாதி சமயச்சழக்குகளால், வேற்றுமொழி அடிமை மோகத்தால், பொருளாதார வேற்றுமையால் அழிந்துவிடாமலருக்க தமிழினம் விழிப்புற்று மீட்சியுற்றால் தான் விடிவு தோன்றும்.

மொழி-இனம்-நாட்டைப் பிணைத்திருந்த அடிமை விலங்குகளை அறுத்தெறிய தமிழியப் புரட்சி என்னும் கவிதைவாள் கொண்டு போராடியவர்தான் முடியரசனார்.

'முத்தமிழே உனை எப்பகையாயினும் முற்றிட முன் வருமேல் எத்தடை மோதினும் அப்படையாவையும் ஏற்றிமுருக்கிடுவேன்' (தாய்மொழி காப்போம், ப.1) என்றும், 'முந்தைத் தமிழ் கெடுக்க மூண்டெழுந்து நோக்கமுடன் எந்தத்துணை கொண்டிங்கு எந்தமொழி வந்தாலும் நோவுக்கும் அஞ்சோம் தமிழ்காப்போம்' (தாய்மொழி காப்போம், ப.76) என்று முழங்கியவர் முடியரசனார்.

'திராவிட நாட்டு வானம்பாடி கவிஞர் முடியரசன்' எனப் பேரறிஞர் அண்ணாவால் அழைக்கப்பெற்று, திராவிட இயக்கக் கவிஞராக அறியப்பட்டு, தமிழ்த் தேசியம் பாடும் தமிழ்நாட்டு

வானம்பாடியாக, தமிழைப் பாடுங்குயிலாக, தமிழின விடுதலை பாடிய தன்னோரிலாத் தமிழியப் புரட்சிக் கவிஞராகத் திகழ்ந்தார் முடியரசன்.

'என் மூத்த வழித்தோன்றல்.. எனக்குப் பிறகு கவிஞன் முடியரசன்' என்றார் பாவேந்தர் பாரதிதாசன்.

கவிஞர்களின் பார்வையில்..

'தளையறுத்து தமிழ்ப்பகையின் தலை யறுக்கும் / தளைதட்டா வெண்பாக்கள் இவரின் தோட்டா / இலைஇளநீர் கொட்டிய தாய் இனிமைப் பேச்சு / 'குடி' யறியாச் சிந்தனைகள் தமிழே மூச்சு / எவரெவரோ எழுதுகின்றார் / இவரைப் போன்றே / எழுந்தவர்யார் எழுத்தாலே? பாவேந்தர்தம் / தவப் புதல்வர்! தமிழ்ப்புலவர்!... / யுகப்புரட்சி எழுத்தாளா! தமிழர் கைக்கு உயிர்நூற்கள் படைப்பாளர் என்று போற்றினார் உவமைக் கவிஞர் சுரதா. 'உலக மொழிகளுள் தேசியக் காப்பியம் என்று சொல்லத்தக்க நூல்கள் மூன்று அம்மூன்றனுள் ஒன்றான 'பூங்கொடி' என்னும் பைந்தமிழ்க்காப்பியம் படைத்தவர் கவிஞர் முடியரசன்' என்று புகழ்ந்தார் பன்மொழிப்புலவர் கா.அப்பாத்துரை.

'மும்முடியை ஓர்தலையில் முடித்த முடியரசர் / எம்முடியும் தலைவணங்கும் இயற்கையிலே கவிஞர் தம்மரிய கவிதையினால் கவியரசர் ஆனார் தமிழ்த்தமிழே அவர்முடியை உனக்குத்தான் சாய்ப்பார்' என்று பாடினார் கவியரசு கண்ணதாசன்.

'மொழியென் றாலே முத்தமிழ் ஒன்றே மொழியென்பார் / அழியென் றாலே தமிழ்ப்பகை அழிக்க அணிவகுப்பார் / பழியென்றாலோ கோடி கொடுப்பினும் பண்ணாதார் / முடியரசர் எனும் பெயரார் முடியசாயார் / தமிழ்ப்பகையை முடிக்கும் சான்றோர்' என்றார் கவிக்கோ அப்துல்ரகுமான்

'முடிசூடா அரசர் எங்கள் முடியரசன் / முகம் மலரும் அகம்மலரும் கவியரசர்! தமிழ்த்தாயின் இதயத்தில் வாழுகின்றார் / தமிழாலே இன்றும் நமை ஆளுகின்றார்!' என்று புகழ்ந்தார் கவிஞர் மு.மேத்தா.

‘நாங்கள் நெருப்பைக் கற்றோம், நெருப்பை வாசித்தோம், நெருப்பை எழுதினோம், பாரதிதாசன், முடியரசன்’ என்றார் கவிஞர் இன்குலாப்.

‘தன்மானக் குன்றம் - கொள்கை மாறாச்சிங்கம் - திராவிட இயக்கத்தின் முன்னோடிக் கவிஞர் - திராவிட இயக்கத்தின் ஈடு இணையற்ற தளகர்த்தர்களில் ஒருவர்’ என்று நெகிழ்ந்தார் கவிஞர் மு.கருணாநிதி.

‘முடியரசனாரைத் தமிழக அரசவைக்கவிஞராகக் காண ஆசைப்படுகிறேன்’ என்று தெரிவித்தார் குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா.

‘கண்ணிமைபோல் தமிழ்காத்தான்.. முடியரசன் களப்புலவன் ஆனான் கண்டீர்! நிலைகுலைந்த தமிழ் மண்ணில் முடியரசன் நிமிர்வெழுந்த காலம் செய்தான்.. தலைநிமிர்ந்த இலக்கியனாய் தமிழ் மண்ணில் வரலாற்றில் தடம் பதித்தான்! மலைபிளந்து வெடித்த மிழ் நெருப்பானான்.. மறுமலர்ச்சி படைத்தான் அம்மா!’ என்று முரசு கொட்டினார் உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன்.

‘முடியரசன் பெருமித உயரம் எந்த இமயத்திற்கும் இல்லை, முடியரச வெப்பம் எந்தச் சூரியனுக்கும் இருப்பதில்லை’ என்று பெருமிதம் பாடினார் கவிஞர் ஈரோடு தமிழன்பன்.

‘புலித்தடத்தைக் கவிதைகளில் பதித்தவர் யார் ? கூரெழுத்து! யாருக்கும் தலையைத் தாழா / கோலெழுத்து! முடியரசர் என்னும் பேரே’ என்று பாடினார் கவிஞர் பழநிபாரதி.

‘மூச்சாகத் தமிழ்குடித்து முனைப்போடு கவிசெய்து

எங்கள் தமிழுக்கே என்றும் வாழ்ந்திருத்த முடியரசனர்!’

என்று போற்றினார் கவிஞர் அறிவுமதி. ‘தெரிந்தெடுத்த தமிழ் வரிசைப் பாவாணர்க்குள் தீப்பந்தம் முடியரசன். தன்னுழைப்பை விருதுகட்கு விற்றிடாத தறுகண்மை முடியரசன். ‘கவிதை வானில் மின்னுகின்ற விண்மீனாய்ச் சுடர் தெறித்து மீளவரும் காலமெல்லாம் நிலைத்திருப்பான்’ என்று எழுதினார் கவிஞர் சிற்பி.

இன்னும் பல நூறு கவிஞர்களின் புகழ் மாலைக்குரிய தன்னேரிலாத் தமிழியப் புரட்சிக்கவிஞராய் கவிவானில் ஒளி வீசுகிறார் முடியரசன்.

மகுடங்கள் சில..

1950 இல் கோவையில் நடைபெற்ற முத்தமிழ் மாநாட்டில் ‘அழகின் சிரிப்பு’ என்ற கவிதைக்கு பாவேந்தரிடம் முதல்பரிசு, தமிழக அரசின் சிறந்த நூல்களுக்கான பரிசு இருமுறை (முடியரசன் கவிதைகள்-1966, வீரகாவியம் - 1973) பாவேந்தர் விருது (1987), கலைமாமணி விருது (1998) ஆகியனவும், இந்திராணி, இலக்கியப்பரிசு (1993), அரசர் முத்தையவேள் நினைவு பரிசில் (1993), ‘இரண்டாம் புரட்சிக் கவிஞர்’ மற்றும் ‘இராணா இலக்கிய விருது’ (1994), அழகப்பா பல்கலைக்கழக அகில இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் ‘கல்வி உலகக் கவியரசு’ விருது (1996) போன்ற பல்வேறு விருதுகளும் திராவிட நாட்டின் வானம்பாடி, சங்கப்புலவர், பாவரசர், கவிப்பேரரசர், தமிழ்ச் சான்றோர் போனற ஏராளமான பட்டங்களும் முடியரசனாரின் முடிசூடிப் பெருமை தேடிக் கொண்டன.

முடிவுரை:

தமிழராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் தமிழியப் புரட்சிக் கவிஞரின் படைப்புகள் அனைத்தையும் படித்து, மற்றோர்க்கும் பரவலாக்கிட வேண்டிய கடமையும், பொறுப்பும் உள்ளது. காலத்தை வென்ற தன்மானக் கவியரசராக, தமிழ் காத்த முடியரசராக வாழ்ந்துகாட்டி முடியரசனாரின் புகழ்பரப்பி முத்தமிழுக்கு முடிசூட்டுவோம்.

அறம் போற்றிய கவியரசர் முடியரசனார்

முனைவர் மா.சிதம்பரம் *
அ.பௌலியன்ஸ்*

முன்னுரை

“எளிய நடையில் தமிழ் நூல்கள் இயற்றிடல் வேண்டும்” என்றார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். இருபதாம் நூற்றாண்டின் தமிழ் கூறும் நல்லுலகில் பாட்டுப் பறவையாய் வலம் வந்து நலம் தந்த கவிஞர் பலர். அவருள் தன்னுயிர் உள்ளவரையில் தமிழுக்காக வாழ்ந்து பொற்றமிழ் பரப்பும் நற்பணியில் மறுமலர்ச்சியும் புதிய எழுச்சியும் கொண்டு வீறுகவியாய் உயர்ந்தவர் கவியரசர் முடியரசனார். இவர் நெறிபிறழா கொள்கை வேந்தன்; மரபுபிறழா மண்ணின் மைந்தன்.

வாழும் மாந்தர்க்கு அறம் இன்றியமையாமை என்பதை ‘பசுமரத்தாணிபோல’ பதியும் வகையில் பாடுவதில் ஈடு இணையற்றவர் என்றுரைத்தல் சாலப் பொருத்தமாகும். வீறுகவியின் கவிதைகளில் ‘அறம்’ எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் இலக்கு.

அறம் போற்றல்

‘அறம்’ என்ற சொல்லிற்கு செந்தமிழ் அகராதி ‘தரும், நீதி’ (ப.44) என்று பொருள் தருகிறது. ‘அறம்’ என்பது அறுத்தல் என்னும் சொல்லிருந்து உருவானது. அதாவது தீமைகளை அறுத்து நன்மைகள் வழி நடத்தலே ‘அறம்’ எனப் பெறும் நம் கவியரசரும்,

“புன்மை செயலொழிந்து நன்மை புகவிடுத்தால்
உண்மை புதுவுலகம் உண்டாகும் ஈதுண்மை

(கவிமுடி.கவிதைகள்.ப.77)

என்றுரைக்கிறார். மேலும்,

“அறநெறிச் செயல்கள் ஆற்றலே துணிவு
மறநெறிச் செயலின் மறுபெயர் கயமை”

(மனிதனைத் தேடுகிறேன்.ப.4)

* இணைப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், அழகப்பா அரசு கலைக்கல்லூரி, காரைக்குடி.

* முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம், அழகப்பா அரசு கலைக்கல்லூரி, காரைக்குடி.

என்று அறநெறிச் செயல் என்பது மனித இனத்திற்கு பேராற்றல் என்றும் பாவச் செயலின் மறுபெயரே கயமைத்தனம் என்னும் வெட்ட வெளிச்சமாகச் சாடுகிறார்.

நடுவுநிலைமை

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி" (திரு.118)

என்ற வள்ளுவப் பெருந்தகை கருத்திசைவுக்கு ஏற்ப மனிதன் தான் வாழும் குமுகாயத்தில் நடுவுநிலை தவறாமல் வாழ்வைச் செலுத்த வேண்டும் என்பதை,

"வாழ்வென்னும் வழியதனிற் செல்லும் போது
வழுவாமல் நடுவில் தான் நடத்தல் வேண்டும்
(மனி.தேடுகி.ப.20)

என்று செவ்வழியைக் காட்டுகிறவர். இன்னும்

"பாழ்மனிதன் அதைமறந்தான் ஓரஞ் சென்றே
பழகிவிட்டான் ....
சூழ்மதியன் எதுசெயினும் மாறு பட்டே
தொலைகின்றான் அறறிவிற் குறைந்தே போனான்"

என்று வேதனை பொங்க, நிலைமை தவறும் மனிதர்களின் இழிநிலையை சுட்டிக் காட்டித் திருத்த முனைகிறார்.

பண்பு வலியுறுத்தல்

"பன்னாளுஞ் சென்றக் கால் பண்பிலார் தம்முழை
என்னாளும் வேண்டுப என்றிகழ்ப - என்னானும்
வேண்டினும் நன்றுமற் றென்று விழுமியோர்
காண்டொறுஞ் செய்வர் சிறப்பு" (நாலடியார்.159)

என்ற நாலடியாரின் பாடலுக்கு ஒப்ப பண்புடையவர்களாக பிறர்க்கு என்றும் சிறப்பினையே செய்வர் என்று,

கெடுவினையை விட்டொழித்தால் அவருக்கும்

கீழ்மைதனைச் சுட்டெரித்தால் இருளில் வீழ்த்தும்
மடமையினைத் தகர்த் தெறிந்தால் மக்கட் பண்பை
மதித்திருந்தால் மானுடமே வெல்லும் வெல்லும்
(மனி.தேடுகிறேன்ப.22)

என்று இவ்வையகத்தில் மனித இனம் வாழ்வை வென்று காட்ட வேண்டுமெனில் தீயசெயல்களை விழித்தும், கீழ்மைக் குணங்களை சுட்டெரித்தும், அறியாமையினை தகர்த்தெறிந்தும், மானுடத்துக்குரிய பண்பினை மதித்துப் போற்றிட வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்.

மனிதநேயம்

"ஒத்த தறிவான் உயிர் வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்" (திரு.214)
"இல்லார்க்கொன் றீயும் உடைமையும்" (திரிடுக.68)

என்னும் திருக்குறள், திரிகடுகம் கூறும் மனிதநேயத்தினைப் போற்றும் வண்ணம்.

மற்றவர்தம் துன்பத்தைக் காணும் போது
மனமுருகி விரைந்தணுகி அதனை நீக்கக்
கற்றவனே கற்றவனாம் உதவும் பண்பைக்
கல்லாதான் கல்விபல கற்றா னேனும்
முற்றிநல் மரம்போல் வான் (மனி.தேடு.ப.22)

என்று பிறர் படும் துன்பத்தைக் கண்டு மனமுருகி, விரைந்து சென்று உதவுபனே கற்றவனின் அடையாளம் என்றும் பிறமனிதர் படும் பாட்டை கண்டு கொள்ளாதவன் மரத்திற்கு ஒப்பானவன் என்று இழந்த்துரைத்து மனிதநேயம் எது என்பதை நமக்கு உணர்த்தி அறம் செய்ய வலியுறுத்துகிறார்.

அன்பும், தூய்மையும்

கவியரசர் முடியரசனார் 'யாவருங் கேளிர்' எனும் கவிதையில்,

"இனம்பலவாய் வாழ்ந்தாலும் இருமாந்து பகைகொண்டு
விலங்கினத்தின் கீழினமாய் விளையாடித் திரியொமல்
குலங்கருதி மேலொன்றுங் கீழென்றுங் குறியாமல்
அவ்வவர்தம் நெறிபோற்றி அன்பொன்றே குறியென்று

செவ்விய நன் மனங்காத்துச் செயலறமும் மிகக்காத்து
தோழமையால் ஒன்றாகி தூய்மையொடு உறவாகி
வாழ விழைகஎன வகுத்ததுவே அதன் பொருளாம்"
(கவியரங்கில் முடியரசன், ப.55)

நாம் வாழும் பூமியில் இனம் பலவாய் இருந்தாலும் கொடும் பகைகொண்டு விலங்கினமாய்த் திரியொமல் கீழ்மேல் எனும் பேதம் பாராமல் தம்வழியில் "அன்பே உயர்வு" எனப் போற்றியும், பிறர்க்கு உதவும் சிறந்த மனத்தினையும், அறத்தினையும் காத்து நட்புணர்வால் தூய்மையான எண்ணத்தோடு உறவினர் என்று மாபெரும் நல்லறத்தினை பழந்தமிழ்ப் பாவலன் கணியன் பூங்குன்றனாரின் வழிநின்று நெஞ்சுயர்த்திப் பாடுகிறார்.

"ஒருகடவுள் ஒருசாதி என்ற பாங்கில்
ஓரினமாய் அயலவரும் உறவாய் நண்பாய்
பெருமையுடன் தாய்மொழியை நாட்டைப் பேணி
பீடுபெற வாழ்வதுமே தமிழர் வாழ்வு"
(கவியரங்கில் முடியரசன்.ப.83)

பாரதியின் "எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓர் இனம் எனும் பாடலுக்கு வலுச்சேர்த்து மாந்தர் அனைவரும் பகைமை, கொடுமை நீக்கி உறவினராய் நண்பர்களாய் கலந்து தாய்மொழியையும், தாய் நாட்டையும் வணங்கிப் போற்று பெருமையுற வாழ்வோம் என்கிறார்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" (திரு.972)

என்ற வள்ளுவனின் வழிநிற்கிறார். மானுடம் வாழ தூண்டுகோலாகிறார்.

இன்சொல் அறம்

"கடுமொழியாளர் தொடர்பின்னா (இன்னாநாற்பது.3)
"அறமனத்தார் கூறுங் கடுமொழியு மின்னா"
(இன்னாநாற்பது.5)

வீறுகவியோ

சபைவநடுவில் தனிமொழிகள் அருவருப்பைத்
தருமொழிகள் அவர் மனத்திற்
சுவையெனவே கொள்மொழிகள் சுடுமொழிகள்
இழிமொழிகள் தொகுத்தெ டுத்த
தலைமொழிகள் பயனில்லா நகை மொழிகள்
உதிர்பவரால் நன்மை உண்டோ?
(நெஞ்.பொறுக்குதில்லையே. ப.66)

என்று அருவருப்பைத்தரும் கடுமொழியாம் சுடுமொழிகள் பேசுபவரால் யாருக்கும் நன்மை இல்லை என்று பொங்குகிறார்.

பிற அறங்கள்

கடித இலக்கியத்தில் அன்புள்ள இளவரசனுக்கு, நூலில்,

"நீ ஒழுக்கமுடையவனாக இருந்தால்
உன்நாடும் நல்ல நாடாகும் என்று மாணவர்க்கு
உரைக்கிறார் தொடர்ந்து நீ நினைக்கலாம் நான் மட்டும்
நல்லவனானால் போதுமா? மாணவர் அனைவரும்
ஒழுக்க முடையவராதல் வேண்டும் என்று அனைவரும்
நல்லவராதல் வேண்டும் என்பதே என் அவா எனச் சுட்டுகிறார்.

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை (திரு.137)

அறம் ஒன்றுதான் மக்களுக்குப் புகழையும் கொடுக்க வல்லது. பொருளையும் கொடுக்க வல்லது. அவ்வறத்தைவிட உயர்ந்த ஆக்கம் உலகத்தில் ஒன்று உண்டென்று உரைக்க இயலாது என்ற ஷஅறம் செய விரும்பு' என்று கூறுகிறார். அன்புள்ள பாண்டியனுக்கு என்ற கடிதத்தில் எந்தச் சூழ்நிலையிலும் செய்ந்நன்றி மறந்து விடுதல் தகாத செயலாகும். என்று சாடுகிறார்.

மேலும் பூங்கொடி காப்பியத்தில் "விரும்பிலா மகளிரை விழைவது முறையோ? கருத்தொடு மித்தால் காதல் சிறக்கும்" (106-107) விரும்பாத பெண்ணை அடைய விரும்புவது தவறு என்றும் ஒருவருக்கு ஒருவர் உணர்ந்து புரிந்து விரும்பிய காதல் சிறக்கும் என்று கற்பின் அறம் பாடுகிறார்.

முடிவுரை

அறத்தின் கொள்கையில் ஆழமாய் வேழமாய் நின்றவர் வீறுகவியரசர் முடியரசனார். கலாச்சாரச் சீரழிவில் தள்ளாடிக் கொண்டிருக்கும் இன்றைய மானுடத்திற்கு, இவர் காட்டும் அறச்சிந்தனைகள், குமுகாயக் கூனல்களையும் கோணல்களையும் சீராக்கும் பண்பின் வழியில் அறிவைக் கூராக்கும். வளரும் இளைய தலைமுறைக்கு, வாழ்வியல் அறங்களைக் கற்றுக் கொடுத்து, ஒளியின் மக்களாய் வாழ வழிவகுக்கும் என்பது திண்ணம்.

பாட்டுப் பறவையின் பேரறம் போற்றிடின்
நாட்டினில் எய்துஞ் சிறப்பு (புதுக்குறள்)

வீறுகவியரசர் முடியரசனாரின் வீரகாவியம் - ஓர் ஆய்வுநோக்கு

முனைவர் கடவூர் மணிமாறன் *

திராவிட இயக்கப் பாவலர் வீறுகவியரசர் முடியரசனார் இருபதாம் நூற்றாண்டுப் பாட்டுக் கழனிக்குப் பயனும் பெருமையும் மறுமலர்ச்சியும் சேர்த்த பெரும்பாவலர். இனிய இயல்பும் குழந்தை மனமும் உயரிய கொள்கை உரமும் பெற்றவர். தமிழ் இலக்கிய, இலக்கணங்களை ஐயந்திரிபறக் கற்ற தமிழ்ப்பேராசான். பூங்கொடி, வீரகாவியம், ஊன்றுகோல், இளம்பெருவழுதி ஆகிய பாவியங்களைப் படைத்தவர். மேலும் பல நூல்களை யாத்துப் படைப்புலகத்துக்கு அணி சேர்த்தவர். இவரின் நூல்கள் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப் பெற்றுள்ளன. இவர்தம் வீரகாவியம் சொல்லழகும் நடையழகும் மிளிர்ந்து உவமைப்பொலிவும் உள்ளுறைச் செறிவும் பழந்தமிழ்ச் சொல்லாட்சியும் பாநயமும் மிடைந்து அழகோவியமாகத் திகழ்கிறது. இப்பாவியம் 118 இயல்களில் 476 எண்சீர் மண்டிலங்களில் அமைந்துள்ளது. இப்பாவியத்தின் பல்வேறு சிறப்புகளை ஆய்ந்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

காப்பியப் பகுப்பு

இப்பாவியத்தில் காட்சிப்படலம், திருமணப்படலம், மகப்பெறுபடலம், படையெழுச்சிப் படலம், போர்ப்படலம் ஆகிய ஐந்து படலங்கள் இடம் பெற்றுள்ளன. மதலைக்கோ, மாவேழன், வெண்கோடன், மானத்தி, கோவூரன், வெண்பூதன், நம்பியன், பெருங்கனகன், வயத்தரசன், வேல்விழி, முறுவலன், மாவலியன், தடவலியன், இளவேலன் ஆகியோர் இப்பாவிய மாந்தர்கள் ஆவர். பாவேந்தர் பாரதிதாசனின் பாண்டியன் பரிசு போல முழுமையும் எண்சீர் மண்டில யாப்பில் ஆற்றொழுக்காக, அருவிப் பொழிவாகப் பாடல்கள் மிளிர்ந்து படிப்பாரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றன.

காட்சிப் படலம்

முனைப்பாலும் நினைப்பாலும் பகைமை கொண்ட மூவகமும், நாவலமும் முரண்பட்டு நின்ற இருநாடுகள். மூவகத்தின் படைத்தலைவன் மாவேழன், நாவலநாட்டு வேந்தன் பெருங்கனகன். மாவேழன் ஏறிவந்த

* மேனாள் தமிழ்ப் பேராசிரியர், கற்பகம் பல்கலைக்கழகம், கோவை..

குதிரையை வயந்தநகர் வீரர்கள் கவர்ந்து சென்றனர். மனமுடைந்த மாவேழன் குதிரையின்றிப் பகைநாடாம் வயந்த நகருள் சென்றான். தனது குதிரையைத் தேடியே இங்கு வந்ததாகக் கூறினான். வயத்தரசன் வரவேற்றுத் தம் அரண்மனையில் தங்குமாறும் வீரர்களை அனுப்பிக் குதிரையைத் தேடிக் கண்டுபிடித்துத் தருவதாகவும் கூறினான். அரண்மனையில் தங்கியிருந்தபோது இரவில் அழகுப் பெண்ணொருத்தி அவனருகே வந்து சென்றதைப் பார்த்து அவளின் அழகில் மயங்கி மனத்தைப் பறி கொடுத்தான். அவளோ மன்னன் மகள் வேல்விழி. அவளைப் பார்த்த பிறகு காதல் நோயில் கலங்கித் தவித்தான் மாவேழன்.

திருமணப்படலம்

பூமருவு மணமாலை பூண்டு நெஞ்சுட்
புகுந்திருவர் ஒருவரென ஆகி நின்றார்
தாமரையும் மணமுமென இல்ல றத்தில்
தாமிணைந்தோர் அணிகலனாய் விளங்கி நின்றார்
(பாடல் - 163)

என்னும் பாடல் இருவரும் ஏற்ற இல்லற மாண்பை எடுத்துரைக்கிறது. இளவரசியின் தோழி மன்னனிடம் தூது சென்று வேல்விழிக்குத் திருமணம் முடிக்க வேண்டி நின்றாள். வேழனை அறிமுகப்படுத்தும் போது,

பாரதிரப் போரெதிர்ந்து வரினும் அஞ்சான்
பாய்ந்தவற்றைப் பாரபரவென் றிழுத்துச் சாய்த்துக்
காரதிரும் இடியேறென் றார்த்து நிற்பான்
கட்டழகும் கட்டுடலும் ஒருங்கே பெற்றான். (பாடல் -142)

என்று அவன் போர்த்திறத்தைப் புகழ்ந்து கூறினாள். இருவருக்கும் திருமணம் நடக்கிறது. அன்புக் கேண்மைக்கோர் இலக்கியமாய் இல்லறத்துக் கிழமைக்கோர் இலக்கணமாய் இருவரும் இனிதே வாழ்ந்து பெருமை சேர்த்தனர்.

மகப்பெறு படலம்

வேல்விழி கருவுற்றாள். வேழன் ஆண்மகவே பிறக்குமென்று எண்ணினான். மாங்காய் கடித்ததோடு மண்ணுடன் சாம்பலைத்தின்று வந்ததையெல்லாம் அறிந்து அவள் கருவுற்றதை உணர்ந்தனர். "களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" என்றாங்கு பிறக்கும் மகனை வீரனாக வளர்ப்பேன், களமாடச் செய்வேன் என உறுதி பூண்டான். இதற்கிடையே பெருங்கனகன் மூவகத்தை நோக்கிப்

படையெடுத்து வருவதை அறிந்து மாவேழன் கொதித்தெழுந்தான். போருக்குப் புறப்பட அணியமானான். இளம் மனைவி வேல்விழியோ,

களம்பலவும் சென்றுவந்தீர், வென்று வந்தீர்
காலமெலாம் போரென்றே குறியாக் கொண்டீர்
குளம்படிந்து நீந்துதல்போல் போரில் நீந்திக்
குளித்தாலும் ஆசையினும் அடங்க வில்லை?
உளம்பொருந்தும் காதலிக்குத் தனிமை தந்தே
ஓடுதல்தான் வீரர்தமக் கழகோ? (பாடல் - 202)

என்று பிரிவஞ்சித் துடித்தாள்; மனம் வெடித்தாள். பிரியாத் துணைவன் பிரிவால் வாடிப் புரியாத துயரொடு புலம்பினாள். மகனும் பிறந்து விட்டான். களம் சென்ற வேழனிடம், மகள் பிறந்ததாக மாற்றி உரைக்குமாறு ஏவலர்பால் கூறி அனுப்பினாள் வேல்விழி. வலிமையால், வடிவால், ஒளியால், நடையால் ஒப்பில்லா மாவேழனுக்கு இணையாகப் புலிபோலும் அவ்விளைஞன் வளர்பிறையாய் வளர்ந்து வந்தான். அவனே கோளரி. தந்தை யாரெனத் தாயிடம் வினவினான். தனிப்புரவியில் போர்க்களம் சென்று வென்று வருவேன் எனச் சூளுரைத்துச் செல்கிறான் இளைஞன் கோளரி.

படையெழுச்சிப் படலம்

மூவக நாட்டுக்கும், நாவலநாட்டுக்கும் கடும் போர் நடக்கிறது. மூவக நாட்டுப் படைக்கு வெண்கோடன் தலைமை ஏற்கிறான். நாவல நாட்டுவேந்தன் பெருங்கனகன் படைத்தலைவரான மாவலியன், கோளரிக்குத் துணையாக வந்த தடவலியன் போர்புரிகின்றனர். கோளரிக்கும் வெண்கோடனுக்கும் நடந்த போரில் வெண்கோடன் தோல்வியைத் தழுவினான். தன்னைக் ‘கொல்லற்க’ என இரக்க அவனைச் சிறையிலடைத்தான். முகத்திரை அணிந்து வந்த இன்னொருவரையும் போரில் வீழ்த்த, முகத்திரை நீங்கிப் பார்த்ததில் ஒரு பெண் என்று அறிந்து அவளையும் சிறைப்படுத்தினான்.

சிறைப்பட்ட மானத்தி வஞ்சனை உளத்தோடு அவ்வீரனிடம் கெஞ்சி வெண்ணகர் வந்தருள வேண்டினாள். இவனும் அதனை நம்பி உங்கள் கோட்டையை எங்களிடம் ஒப்படைத்து எங்கள் சொல்லைக் கேட்க வேண்டும். இதில் பிறழ்ந்தால் எங்கள் சீற்றம் பேரழிவைத் தரும் என எச்சரித்து எழுக என்றான். மானத்தியோடு அங்கு சென்றதும் அவள் கோட்டைக்குள் புகுந்து கதவைத் தாழிட தான் ஏமாற்றப்பட்டதை

அறிந்து, நாளை இங்கு வந்து கோட்டையைக் கைப்பற்றி உன்னையும் அழிப்பேன் எனக் கூறித் திரும்பினான் அவ்வீரன். மறுநாள் பகைவரிடம் சிக்காமல் இருக்க அனைவரும் சுருங்கை வழி தப்பிச் சென்றனர். மானத்தியின் பால் மையல் கொண்ட அவ்வீரன் மதி மயக்குற்று அவள் நினைவாகவே இருந்த அவனை மாவலியன் இடித்துரைத்து மறக்கச் சொன்னான். சேயிழையின் காதலே வேண்டுமெனில்,

பாரஞ்சும் கைவாளைத் தரையில் வீசு!
பணிந்துவிடு மாற்றலர்க்கு! வீர மென்றால்
போரஞ்சாத் திறல்காட்டு! வாளைத் தூக்கு!
புகல்மறவன் கோளரியின் பெயரை நாட்டு
(பாடல் - 325)

என்று மாவலியன் உறுதிப்பட உரைக்கிறான்.

மாவலியன் அறிவுரையால் மனம் மாறிய கோளரி, போருக்குப் புறப்பட்டான். சுருங்கை வழி தப்பிச் சென்றதை மானத்தியின் தந்தை ஓலையைப் படித்து அறிந்தான் கோளரி. அவ்வேளை தண்டலம் என்னும் ஊரில் இருந்த மாவேழனே, கோளரியை எதிர்த்துப் போரிடத்தக்கவன் என அவனைப் போர்க்குச் செல்லப் பணித்தான்.

“கோலமொடு வேலைஎடு! கூற்ற மென்னக்
கோலைஎடு! வாளைஎடு! கவசம் தாங்கு!
வாலமொடு வருவோனைத் தொலைக்க வா!வா!
வாளுக்கும் தோளுக்கும் விருந்து கிட்டும்”
(பாடல்-338)

எனக்கூறி வேழனைப் போருக்கு அணியம் செய்தான் அவ்வீரன்.

வேழன், கோளரி யாரென வினவி அறிய முற்படுகிறான். தனக்கு மகள் பிறந்ததாக அல்லவா வேல்விழி கூறி அனுப்பினாள். அப்படியிருக்க இவன் மகனென எப்படி நம்புவது? வியப்பாக உள்ளதாக எண்ணி மனம் நைந்தான் வேழன். இதற்கிடையே காலம் தாழ்த்தியமைக்காக வேழனைச் சிறையிடுமாறு அரசன் கூற, அதனைக் கேட்டு வெகுண்ட வேழன், “உன் நாட்டை நீயே காத்துக்கொள்” எனச்சினம் பொங்க வெளியேறுகிறான். வெருண்டு செல்லும் வேழனிடம் நம்பி என்பான் அணுகி அவனது சீற்றத்தைத் தணிவித்தான். மாவேழனும் மனம் மாறி களம்செல்லத் துணிந்தான்.

"விஞ்சிவிட்ட முதுமைஎன துடலுக் கன்றி
விளைந்துவரும் வீரத்துக் கில்லை" (பாடல் - 360)

என்று முழக்கம் செய்தான் வேழன்.

போர்ப்படலம்

மாற்று உருவத்தில் மாவேழன் பகைப்புலப் படையினுள் நுழைய மன்னனிடம் இசைவு கேட்டுப் பெற்றான். சிறு வீரன் பெருவீரம் காட்டிப் போர் புரிவதைக் கண்ணால் காண வேண்டும். கண்டு உள்ளம் மகிழ வேண்டும் என்பதை மதலைக்கோ ஏற்றான். தனயனும் தந்தையும் முதல் நாட்போரில் முனைந்து போரிட்டனர். தன் மகனென்பதை அறியாத அவனிடம்,

இளவலுக்கு வாய்த்தஒரு வீரப் பாங்கும்
எதிர்பொருவார் மனங்கவரும் எழில்வனப்பும்
பளபளக்கும் அவன்முகத்தில் தவழ்ந கைப்பும்
பாய்ந்துவரும் அரிபோலும் அஞ்சா நோக்கும்
(பாடல் 394)

கண்ட வேழன், "என் மகனென எண்ணிக் கூறுகிறேன். நீ பிழைத்துப்போ" என்றான். மாவேழன் யாவனென வினவி நின்ற மகனிடமே உண்மைநிலை மறைத்தான் வேழன்.

மறமடுத்துத் தினவெடுத்து வலிமை கொண்டு
மாமடங்கல் இரண்டுடன்று பொருவ தென்னக்
குரலெழுப்பித் திறலெழுப்பிப் பொருதார் ஆங்கே
குழுமிவரும் வீரரெலாம் வியர்த்து நின்றார்
(பாடல் 401)

தந்தையும் மகனும் களமாடுகின்றனர். வெற்றி தோல்வி யாருக்கு என்பது புரியாத புதிராக இருந்தது. கோளரியை மாவேழன் வியந்து நிற்கக் கொடுவிற்போர் புரிவதற்குக் கோளரி அழைத்தான். விற்போர் முடித்து இருவரும் மற்போர் செய்தனர். வேழன் நிலை தடுமாறியது கண்ட கோளரியோ "இன்று போய் நாளை வா" என்றான். மறுநாள் போரிலும் வேழன் கோளரியின் திறம் கண்டு வியந்தான். உரவோய்! நீ யாரெனக் கோளரி வேழனிடம் உசாவினான்.

தோல்வியால் மனமுடைந்த வேழன் மீண்டான். தோற்றவனின் நிலைக்கு இரங்கி வெய்யோனும் மறைந்தான். தந்தைபெயர் கேட்ட கோளரி மலைத்து நிற்க, மாவேழன் தாக்கிவிட்டான். எனைப்பெற்ற மாவேழன் அறிந்தால் நின்னை ஈர்ந்தரிவான். தப்பிச் சென்றுவிடுமாறு கூறினான் கோளரி. மாவேழன் உண்மையை உரைக்க உளம் கசிந்துருகினான் கோளரி, கண்ணெதிரில் மகன் இறக்கக் கண்ட வேழன் கதறினான். பதறினான். இதனையறிந்த வேல்விழியின் நிலையை,

கொழுநனுக்கே அழுவாளோ? சுமந்து பெற்ற
கொழுந்தினுக்கே அழுவாளோ? தனக்கு நேர்ந்த
பழுதினுக்கே அழுவாளோ? மகன்பாற் கொண்ட
பரிவினுக்கே அழுவாளோ? (பாடல் 476)

என்று கழிவிரக்கத்துடன் பாவியத்தைத் துன்பியல் பாவியமாக நிறைவு செய்கிறார்.

சொல்லாட்சி

சொல்லாட்சியும் உவமை நயங்களும் உணர்ச்சி நடையும் பாவியத்துக்குப் பெருமை சேர்க்கின்றன. பகைவர் என்பதற்குத் தரியலர், கருதலர், நண்ணார், மேவலர், வட்கார், ஒன்னலர், பற்றலர் என்பன போன்ற பல சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். எளிதில் பொருள் காண இயலாத வயவு, இறங்கு, அகலம், வாலுகம், அகலம், குசை, கட்கம், கொட்புற்று, வாலம், எண்மை, வல்லியம், இவுளி போன்ற சொற்களைப் பெய்து அடிக்குறிப்பில் பொருள் விளக்கத்தையும் தந்துள்ளார் நூலாசிரியர்.

முடிவுரை

பாரதிதாசன் பாட்டுப் பரம்பரையில் முதன்மையிடத்தைப் பெற்றுள்ளவர் முடியரசனார். பாவிய இலக்கணம் முழுமையும் பாங்குற அறிந்துணர்ந்து உணர்ச்சியும், எழுச்சியும், புரட்சியும் கிளர்ந்தெழச் செய்யும் கட்டுக் கோப்பான கதையமைப்பைக் கொண்டு ஒரு வெற்றிப் பாவியமாக இதனைப் படைத்துள்ளார். தான் பெற்றுள்ள சொற்களஞ்சியப் பெருக்கத்தைத் தமது படைப்பில் ஆங்காங்கே இடம்பெறச் செய்து தமிழின் வளமைக்கும், இளமைக்கும் பெருமை சேர்த்துள்ளார். ஈடு இணையற்ற படைப்பாளராக, பாவன்மை மிக்கவராக வீரகாவியத்தின் மூலம் தமிழ்கூறு நல்லுலகால் அடையாளம் காணப் பெற்ற அருந்திறலார் வீறுகவியரசர் முடியரசனார் என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை யன்றோ?

மீட்டுருவாக்க நோக்கில் முடியரசனின் சுதமதி

முனைவர் மு.மரகதவல்லி *

தமிழிலக்கியத்தில் பண்டைய இலக்கியங்களை மறுவாசிப்புக்கு உட்படுத்தி மீட்டுருவாக்கம் செய்கின்ற போக்கு அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வகையில் சீத்தலைச்சாத்தனாரின் மணிமேகலை காப்பியத்தில் இடம்பெற்ற காப்பியமாந்தரான சுதமதியை முடியரசன் மீட்டுருவாக்கம் செய்துள்ள தன்மையை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மொழியானது உயிருள்ள மட்டும் வளருகின்ற தன்மையுடையது. காலமாற்றத்தில் மொழி வளரும்போது அம்மொழியில் புதிய சிந்தனைகள் தோற்றம் பெறும். அச்சிந்தனைகள் சமுதாயத்தின் விளைபொருளாகத் திகழும் இலக்கியத்தில் பரிணமிக்கும். சமுதாயத்தின் பொருளாதாரத்தையும் அரசியலையும் அடிப்படையாகக் கொண்டே அச்சமுதாயத்தின் பண்பாடும் பண்பாட்டின் நீட்சியாகக்கருதப்பெறும் இலக்கியமும் கட்டமைக்கப்படுவதைக் காணமுடிகிறது. கைலாசபதியின்,

> "தூயசிந்தனை, சுத்த இலக்கியம் என்பன போன்ற
> குரல்கள் பழைய பொருளாதாரத்தையும், அரசியலையும்,
> பண்பாட்டையும் அடிக்கல்லாகக் கொண்டவை என்று
> கூறுகிற கைலாசபதி புதிய அமைப்பிலேயே புதிய
> பண்பாடும் இலக்கியமும் தோன்றமுடியும் என்றும்
> அதைத் தோற்றுவிப்பதற்கான பணிக்கு
> அறிவாராய்ச்சியும், அதற்கு இன்றியமையாததான
> 'அடிமுடி' தேடலும் ஊக்கத்துடன் பயன்பட வேண்டும்"
> (ந.தெய்வசுந்தரம், இன்றைய தமிழ், ப.3)

என்ற கூற்றிலிருந்து மீட்டுருவாக்கத்திற்கு அடிப்படை, தேடலும் ஆராய்ச்சியும் என்பதை அறியமுடிகிறது.

புதிய தேடலும் ஆராய்ச்சி மனப்பான்மையும் கொண்ட படைப்பாளர்கள் மரபார்ந்த படைப்புகளைப் புதிய கோணத்தில் அணுகி தாம் சார்ந்த இயக்கத்திற்கும் தன்னை நிலைநிறுத்திக் கொண்ட

* உதவிப்பேராசிரியர், அழகப்பா அரசு கலைக்கல்லூரி, காரைக்குடி.

கொள்கைக்கும் ஏற்ற வகையில் மீட்டுருவாக்கம் செய்து வருகின்றனர். இதன் அடிப்படையில் இதிகாசங்கள், புராணங்கள், மற்றும் காப்பியங்களில் இடம்பெற்ற தொன்மையான கதை மாந்தர்களைத் தற்கால படைப்பாளர்கள் மீட்டுருவாக்கம் செய்கின்றனர். ஔவை, வெள்ளிவீதி, பாரிமகளிர், கண்ணகி, மணிமேகலை, அகலிகை மற்றும் சீதை போன்ற மரபார்ந்த பாத்திரங்களை மீட்டுருவாக்கம் செய்து வெளியான படைப்புகள் தமிழிலக்கியத்தில் பரவலாகக் காணப்படுகின்றன. சீத்தலைச்சாத்தனாரின் மணிமேகலை காப்பியத்தில் இடம்பெற்ற சுதமதியை நிலைமண்டில ஆசிரியப்பாவில் 212 அடிகளில் கவியரசர் முடியரசனார் மீட்டுருவாக்கம் செய்துள்ளார்.

மணிமேகலை காப்பியமானது விழாவறை காதை தொடங்கி பவத்திறம் அறுகெனப்பாவை நோற்ற காதை வரை முப்பது காதைகளை உடையது. அவற்றுள் மலர்வனம் புக்ககாதை (3:29-41), பளிக்கறை புக்ககாதை (4:95-125) மற்றும் மணிமேகலா தெய்வம் வந்து தோன்றின காதை (5:23-27) என்ற காதைகளில் சுதமதி குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன.

சண்பை நகரில் கௌசிகன் என்ற பார்ப்பானின் மகளாகப் பிறந்தவள் சுதமதி. ஒருநாள் மலர்வனத்தில் தனியாளாகச் சென்று மலர் கொய்து கொண்டிருந்தாள். இந்திரவிழாவினைக் காணவந்த மாருதவேகன் என்னும் விஞ்சையன் சுதமதியை வானகத்தே எடுத்துச்சென்று தன்வயப்படுத்திக் கொண்ட பின்பு சமணப்பள்ளியிலே விட்டுவிட்டு நீங்கிவிட்டான் (5:23-25). குமரித்துறை சென்று நீராடுதலை மேற்கொண்ட கௌசிகன் ஊழ்வினைப்பயன் காரணமாக தன் மகள் சுதமதிக்கு நிகழ்ந்தப் பிழைக்காக மனமிரங்கி சுதமதியைத் தேடிப்புறப்பட்டான். காவிரி கடலோடு கலக்கும் இடத்தில் தன்மகளைக் கண்ட கௌசிகன் அங்கேயே தங்கி இரந்துண்டு வாழும் வாழ்வை மேற்கொண்டான்.

கௌசிகனை பசுமாடு குத்தியதால் வெளியே வந்த குடலினை எடுத்துக் கொண்டு சமணப்பள்ளியில் அடைக்கலம் தேடிச்சென்ற இருவரையும் சாரணர் துரத்திவிட்டனர். இறுதியில் சங்க தருமன் என்னும் புத்த துறவி இருவருக்கும் அடைக்கலம் கொடுத்தார். பௌத்தத்தின் யாக்கை நிலையாமையை உதயகுமரனுக்கு உணர்த்துவதற்காக சுதமதியைச் சாத்தனார் படைத்திருக்கலாம் (4:113-121).

கவியரசர் முடியரசனார் பகுத்தறிவு பார்வையில் திராவிட இயக்கக் கொள்கைகளின் அடிப்படையில் சுதமதியைப் படைத்துள்ளார்.

சுதமதி சோலையில் நிற்கும்போது கடவுள் கோலத்தில் காளை ஒருவன் புகுந்து சுதமதியிடம் உன் வரலாறு உரை என்றவுடன்,

"சண்பை நகரரெனச் சாற்றும் இவ்வூர்ப்
பண்பினன் வேதப் பார்ப்பன முதுமகன்
அழலோம் பாளன் அன்பினன் கோசிகன்
என்போன் மகள்யான் என்பெயர் சுதமதி" (அடி.41-44)

என்று சுதமதி பதிலுரைத்தாள். 'பூம்புகார்ப்பதியில் நிகழும் இந்திரவிழாவைக் காணவந்தேன். என் பெயர் மாருதவேகன் என்பர். அன்பின் கிழத்தி ஆகுதி!' என்றான். அதற்கு,

"இணர்மண மாலை ஏற்று மகிழும்
மணம்பெறா முன்னர் மலருடல் தீண்டுதல்
குணமிகு செயலெனக் கூறார்" (அடி.55-57)

என்ற முடியரசனின் சுதமதி சாத்தனாரின் சுதமதியினின்று மாறுபட்டு தமிழ்ப்பண்பாட்டைக் கடைப்பிடித்தொழுகும் பெண்ணாகக் காட்டப்பட்டுள்ளாள்.

"யாழோர் மணத்தால் யானுனைக் கூடுவேன்" (அடி.58)

என்று கூறிய மாருதவேகனின் எண்ணத்திற்கு உடன்படாதவளாக நின்ற சுதமதியை,

"தெய்வம் உண்டெனத் தெளிகுவை யாயின்
செய்நம் காதல் மெய்யெனத் தெளிகுவை" (அடி.132-133)

என்று பொய்மொழிகள் கூறி போகந்துய்த்து மாருத வேகன் சுதமதியைத் தனியே விட்டுவிட்டு இரவோடிரவாக ஓடினான். காதலன் பெயராலும் கடவுளின் பெயராலும் ஏமாற்றப்பட்ட சுதமதி,

"கடவுளைக் காட்டிக் கழறினன் நம்பினேன்,
கடவுள் போலவன் கட்படாஅ தொழிந்தனன்,
வடவன் கூற்றை வாய்மைஎன் றெண்ணி
இடங்கொடுத் ததனால் இந்நிலை உற்றேன்"
"நலமறி யாமகன் நயவஞ் சகனிவன்
குலமகன் அல்லன் கொடியன்"

என்று சுதமதி அரற்றியதிலிருந்து வடவனின் பொய்யுரைக்கும் போக்கு புலனாகிறது. மேலும் சாத்தனாரின் சுதமதி ஏமாந்ததை ஊழ்வினைப்

பயன் என ஏற்றுக்கொள்ள முடியரசனின் சுதமதி தனக்கு நிகழ்ந்த அநீதிக்காக எதிர்க்குரலைப் பதிவிடுகிறாள். மேலும்,

"பிழைநடை யுடைய பேதை நின்மகள்
உழைய ளாகலின் ஒதுங்கிடம் இலை, இது
வேதம் பயிலிடம் விரைந்தே அகலுதி" (அடி.179-181)

என்று பாதிப்பிற்குள்ளான தன் இனப்பெண்ணையே புனிதத்தின் பெயரைக்கூறி புறக்கணித்த பார்ப்பனரின் போலித்தனம் புலனாகிறது.

பசுவினால் காயம்பட்ட கோசிகனும் சுதமதியும் சமணப் பள்ளியில் அடைக்கலம் தேடியபோது,

"புரிநூன் மார்பிற் பொலிவீர்! நீவிர்
வேள்வி யியற்றி வேத நெறிப்படுஉம்
ஆள்வினை உடையீர் ஆதலின் ஈண்டுப்
புகுந்தக வில்லீர் முரணிய புன்மைகள்
நுழைந்திடின் எம்நெறி பிழையுறும்" (அடி.185-189)

என்று வேதநெறிக்கும் சமணநெறிக்கும் உள்ள முரண்பாட்டைக் கூறித் துயருற்றோரைக் கைவிடும் சாரணரின் தன்மையை அறியலாம். ஆதரவற்ற நிலையில் நின்ற இருவரும்,

"நின்துயர் துடைத்தோம், நீள்துய ருற்று
நின்ற மகளொடும் வைகுதி" என்றனர். (அடி.198-199)

என்று புத்தப்பள்ளியில் அடைக்கலமானதன் வாயிலாக மனிதநேயம் ஓம்பும் பௌத்தத்தின் மேன்மையை முடியரசன் படைத்துள்ளார்.

நிறைவாக மீட்டுருவாக்க நோக்கிலமைந்த முடியரசனின் சுதமதியில் மரபுமீறாமல் புதுமைகளைப் புகுத்தி படைத்துள்ளார். காதல் உணர்ச்சி, கடவுள் மறுப்புக்கொள்கை, ஆரிய வெறுப்பு, அநீதிக்கு எதிரான குரல், பௌத்தத்தின் மனிதநேயம் போன்ற முடியரசனின் சிந்தனைகள் சுதமதியில் விரவியிருப்பதை அறியமுடிகிறது. எனினும் வைதீக நெறியின் இறுக்கமான கட்டமைப்பும் சமணக் கொள்கையும் துயருற்றோருக்கு அடைக்கலம் தராத நிலையில் பௌத்தமானது முரண்பட்ட கொள்கை உடையோரிடத்திலும் கருணை காட்டுவதிலிருந்து பகுத்தறிவின் ஆணிவேராகத் திகழ்கிறது பௌத்தம் என்பதை உணர்த்தும் வகையில் முடியரசனின் மீட்டுருவாக்கப் படைப்பான சுதமதி திகழ்கிறது எனலாம்.

ஈரோட்டுப் பகலவனின் சிந்தனைகளை ஏற்றிப்போற்றிய வீறுகவிமுடியரசன்

ஈழம் மலர்மன்னன் *

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம்:

தமிழ்நாட்டில் மனிதச் சிந்தனைகள் மழுங்கடிக்கப்பட்டு, மதச்சிந்தனைகள் மலிவுற்றுக் கோலோச்சியிருந்த காலம்.

கலைவித்தகர்கள், கவிவாணர்கள், என்பவர்களெல்லாம் புராணங்கள், இதிகாசங்கள், கடவுளர்களின் மகிமைகள், என்று இட்டுக்கட்டிய கட்டுக்கதைகளை, மக்களிடையே பரப்பியும், இம்மியளவும் மனித குலம் மேம்பாடு கொள்ள மாற்றுச் சிந்தனைகளை முன் வைக்கவில்லை. 'எல்லாம் அவன் செயல்' என்றும், "எல்லாம் தலைவிதி" என்றும் பாமரர்களை, மடமை இருளில் ஆழ்த்திய நிலையில்,

கடைக்கோடியிலிருந்த பாமரர்களுக்காக, தனியொருவிதி செய்து தன் பாட்டுத்திறத்தால் இலக்கியத்தை இயங்கியலாய் மாற்றினான் ஒருமகாகவி.

அந்தப் பழைய சூரியனிலிருந்து 'பகுத்தறிவு' எனும் புதிய நெருப்பெடுத்து நேர்எதிர்த்திசை நின்று, பாவேந்தம் பகன்றான் புரட்சிக்கவி பாரதிதாசன். புரட்சிக்கவியின் பாத்திறத்தில் பட்டுத் தெறித்த, தன்மானம், இனமானம், பகுத்தறிவு, மொழியுணர்வுக் கொள்கைகளை, பொந்திடைவைத்த கவிதைகளாக்கி மாண்பமைச் சிந்தனைகளை மக்களிடையே கொண்டு சென்றவர் புரட்சிக்கவியின் வழித்தோன்றல், தமிழ்க்குடியரசின் பாட்டுமுடியரசன்.

மதவேறுபாடு, சாதியச்சழக்குகள், தாழ்வுமனப்பான்மை இவற்றை இற்றுப்போகச் செய்து, தன்மான உணர்வு, சுயமரியாதை, சுதந்திரச்சிந்தனை, பகுத்தறியும் ஆற்றல் - பாலியல் சமத்துவம், இவற்றின் மூலமாய் தமிழினம் பீடுநடை போட வேண்டுமென்பதே சுயமரியாதைக் கவிஞர் முடியரசன் வகுத்துக்கொண்ட சீரியபாதை.

இந்தச் சீரியபாதையில் மக்களை இட்டுச் செல்வதில் வாழ்நாளையே தியாகம் செய்த மாபெருந்தலைவர் பகுத்தறிவுப்

---

* செயலாளர், தமிழ் இலக்கியப் பேரவை, தேவகோட்டை.

பகலவன் தந்தைபெரியார். பெரியாரின் சிந்தனைகளை, ஏற்றிப்போற்றித் தங்களின் கவித்திறத்தால், கனிச்சாறாக்கித் தந்தவர்கள் புரட்சிக்கவி பாரதிதாசனும், அவரின் வழித்தோன்றல் கவியேறு முடியரசன் ஆகிய இருவருமேயாவார்கள்.

தமிழக வரலாற்றில் பல சாதனைகளைப் படைத்த தந்தை பெரியார் தமிழ் மண்ணில் வாழ்வாங்கு வாழ்ந்து வணங்காமுடியாய் திகழ்ந்தவர். அவர் கண்ட கனவுகள், அவர் செயல்படுத்தத் துடித்த கொள்கைகள், எண்ணங்கள் அனைத்துமே, அறவழிப்பட்டதும், உலகம் முழுமைக்கும், ஆக்கந்தரும் உயர்நெறிகளே!

மனிதகுலம் முழுமையிலும், அவர்போல் கொண்ட கொள்கையில் உறுதிப்பாடும், வாழ்த்துதலாகட்டும், வைதலாகட்டும், இவற்றிற்காக வழுக்கிவிழாத நேர்மையும், போர்க்குணச் செயற்பாடுங்கொண்ட தலைவரை இதுகாறும் இப்புவியின் வரலாறு கண்டதில்லை.

"மனிதப்பற்றே மற்றெல்லாப் பற்றிலும் உயர்ந்தது, மனிதருக்குள்ளே உயர்வு – தாழ்வு இருத்தல் கூடவே கூடாது. ஆண்-பெண் என்னும் இயற்கை பாகுபாடு, உடற்கூறுகளுக்குப் பொருந்துமேயன்றி உணர்வுக்கும் - கடமைக்கும், உரிமைக்கும், ஒருதுளியும் வேண்டற்பாலது அன்று" இவையே தந்தை பெரியார், மனிதகுலம் முழுமைக்கும், அறிவித்துள்ள செய்தியின் சுருக்கம் எனக்கூறலாம்.

தந்தை பெரியார், தன் சமூக சீர்திருத்தக் கொள்கையில் தடம் பதித்தவேளையில், தமிழ்நாட்டில் நிலவிய கட்டுப்பெட்டித் தனமான வர்ணாசிரம - சாதியச்சூழல் மக்களை ஒன்றுபடச் செய்யவில்லை. சாதிய ஆதிக்கமும், ஆணாதிக்கமும் சமுதாய விதிகளாக இருந்தன. வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் என்ற பொய்மைகளை, மக்களின் மூளைக்குள் ஏற்றி, அறிவும் தன்மானமும், மூடி வைக்கப்பட்டிருந்தன. கலைகளை, கல்வியைக் கற்க, ஒரு சாதிப் பிரிவென்றும், கைகட்டி பணிசெய்து, அண்டிப் பிழைத்து அடிவருடிகளாக இருக்க ஒருசாதிப் பிரிவென்றும், நிலவிய காலம். இப்படியாக, தமிழ்நாடு இருந்த அவலத்தை வீறுகவி முடியரசன் தனது "புத்துலகச்சிற்பி" எனுங்கவிதையில்,

புகைபடிந்தஓவியம்போல் சுவர்களெலாம்
புழுதியடைமாளிகைபோல் கருமைகொண்ட
முகில்படர்ந்தமுழுமதிபோல் அழுக்கடர்ந்து

மூடியஓர்பளிங்கினைப்போல் பனிபடிந்த
பொன்மலர்ப்பூஞ் சோலையைப்போல் தமிழர்நாடு
தகதகக்கும் ஒளியிழந்துநின்றதந்தோ.

என்று படம்பிடித்துக் காட்டுகிறார்.

பகுத்தறிவு, பகுத்தறிவு என்று தந்தை பெரியார் அடிக்கடி முழங்கினார். ஆறாவது அறிவான சிந்தித்துச் செயல்படும் தன்மையை சமூகமும் இழந்துவிட்ட காரணத்தால் பயனற்ற வழியில் தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே என உளம் நொந்தார். பெரியாரின் பகுத்தறிவுப் பயணத்தால் தமிழ்நாடு பெற்ற பயனை கவியரசன் முடியரசன்,

வேதங்கள் புராணங்கள் இதிகாசங்கள்
வேண்டாதசட்டங்கள் இவைகள் எல்லாம்
தீதுங்கள் வாழ்வுக்கென் றெடுத்துரைத்துத்
தெளிவித்தார் அவற்றையெல்லாம் தீயிலிட்டார்
வாதங்கள் பலபுரிந்தார் வெற்றிகண்டார்
வளரறிவுச் சுடரொளியைத் தூண்டிவிட்டார்.
பேதங்கள் பேதமைகள் தொலைப்பதற்குப்
பெரும்போர்கள் நடத்திநமைக் காத்தவீரர்.

என்றுதன் 'பா'த் திறத்தால் படம் பிடித்துக்காட்டுகிறார். தந்தை பெரியாரின் கொள்கைகள் மாறிவரும் உலகிற்கேற்ப அறிவியல் வழிப்பட்டதாகும். அவருடைய சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் குறிப்பாக மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. அவர் வாழ்ந்த காலத்தில் இழைக்கப்பட்டிருந்த மனிதக் கொடுமைகளுக்கு ஆதரவான, கருத்துக்களை, செயற்பாடுகளை வேகமாகவும் அறிவு வழியிலும், கடுமையாக எதிர்த்துப் போராடியது. இதைக் கவியேறு முடியரசன் தனது கவிதைவரியில்,

காரோட்டும் பெருவளிபோல் உலகைப் பற்றும்
காரிருளை ஓட்டுகிற பகலவன்போல்
ஈரோட்டில் வந்துதித்த பெரியார்தாமும்
இனஇழிவைத் தொலைப்பதற்கு நடத்திவந்த
போராட்டம் எத்தனையோஅதனால் அய்யா
புகுந்தசிறை எத்தனையோ, அறப்போர்,என்றே

பாராட்டும் படிசெய்தார் மனிதர்யாரும்
பழுதுறவோ, வன்முறையோ செய்தாரல்லர்
வேதங்கள் புராணங்கள் இதிகாசங்கள்
வேண்டாதசட்டங்கள் இவைகள் எல்லாம்
தீதுங்கள் வாழ்வுக்கென் றெடுத்துரைத்துத்
தெரிவித்தார் அவற்றைஎலாம் தீயிலிட்டார்
வாதங்கள் பலபுரிந்தார் வெற்றிகண்டார்
வளரறிவுச் சுடரொளியைத் தூண்டிவிட்டார்.
பேதங்கள் பேதமைகள் தொலைப்பதற்குப்
பெரும்போர்கள் நடத்திநமைக் காத்தவீரர்.

என்று இறும்பூது எய்துகிறார்.

2. அவர் காண விரும்பிய மாற்றங்கள் யாவும், உடனடியாக நிகழ்ந்துவிடக் கூடியதல்ல என்பதை உணர்ந்திருந்தார். சூழலுக்கு ஏற்பவும் உலகத்தோடு ஒட்டஒழுகியும், ஒடுக்கப்பட்டோருக்கும், பெண்ணினத்திற்கும் வெகுவாகப் போராடியதும், ஆதிக்கச் சக்திகளால் அரசின் துணையோடு அவ்வப்போது எழுப்பப்பட்ட திணிப்புகள், தீச்செயல்கள் முறியடிக்கக் கடுமையாகப் போராடிச் சிறைப்பறவையாய் வாழ்ந்து சமூகவிழிப்புணர்வை உருவாக்கியது.

இதனைக் கவிப்பெருங்கோ,முடியரசன்,

அஞ்சாத அரியேறு, கொடுஞ்சிறைக்கும்
அடங்காத புலிப்போத்து, வாழ்நாள் எல்லாம்
துஞ்சாத போர்க்களிறு கொண்ட கொள்கை
துவளாத பெருங்கரடி எவரையும்போய்க்
கெஞ்சாதகவரிமான் உழைப்பில் சோம்பிக்
கிடவாத அடலேறு முதுமையுற்றும்
எஞ்சாது பாடுபடும் பொழுதுதுள்ளி
எழிலாகப் பாய்கலைமான் எங்கள் தந்தை

என்றுஏற்றிப் போற்றுகிறார்.

3. உலக அளவில் தமிழன், தன்மானம் உள்ளவனாக, பகுத்தறிவின் ஒளிச்சுடராக உயர்ந்து உலகம் முழுமைக்கும் எடுத்துக்காட்டாக அமையக் கூடியவற்றை செய்துகாட்ட வேண்டும் என்பதாகும்.

இதனை,

மூவேந்தர் ஆட்சிசெயச் சங்கத் தோட்டம்
முத்தமிழாம் கனிவளர்க்கப் பெருமிதத்துப்
பாவேந்தர் அறமுரைக்க உலகமெல்லாம்
பணிந்தேத்தும் வள்ளுவனார் முப்பால் ஓத
மாவேந்தும் காட்டகத்து மற்றநாட்டார்
மாக்களென மதியின்றி வாழ்ந்தநாளில்
நாவேந்தும் புகழ்மிகுந்த தமிழர்நாடு
நாகரிகத் தொட்டிலெனவிளங்கக் கண்டோம்.

என்று பெருமிதம் கொள்கிறார் இமயக்கவிஞர் முடியரசன்.

"ஈ.வே.ரா" என்ற மூன்றெழுத்துக்குச் சொந்தக்காரரான, தந்தை பெரியாரின் சிந்தனைகள் செயல்பாடுகள், அவரது அரசியல், சமூகம் மற்றும் பொருளாதாரத் துறைகளின் மீதான, கருத்துக்கள் தென்னகத்தில் மட்டுமின்றி இந்தியக் கண்டம் முழுமைக்கும் புரட்சிக் கனலைப் போல் வீசத் தொடங்கி பரவிக் கொண்டிருக்கின்றன. தந்தை பெரியாரின் கனவுகள் நனவாகிக் கொண்டிருக்கின்றன. மனிதகுலத்தில், தந்தை பெரியாரின் கொள்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும்.

வாழ்க தந்தை பெரியார் புகழ்!
வாழ்க கவிப்பெருங்கோ முடியரசன் புகழ்!

முடியரசனின் தமிழ் இலக்கண அணுகுமுறைகள்

சு.மாதுகண்ணன் *

முன்னுரை

மொழியைப் பிழையில்லாமல் எழுத, பேச இலக்கணங்கள் பயன்படுகின்றன. இலக்கணத்திால் எவ்விதப் பிழையும் நிகழாமல் மொழியைக் கையாள முடியும். இவ்விலக்கணங்களை மற்றவர்களுக்குக் கற்பித்தல் அவசியமானதாகும். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்பார் வள்ளுவர். "கல்விக்கு அழகு கசடற மொழிதல்" என்கிறது வெற்றிவேற்கை. இதன் அடிப்படையில் மொழியை நன்கு பயன்படுத்துவதில் இலக்கணங்கள் முக்கியப் பங்கு வகுக்கின்றன. தமிழ்ப்பாட நூலில் இலக்கணங்கள் இடம்பெறுவது, மாணவர்கள் பிழையின்றி பேசவும் எழுதவும் வேண்டும் என்ற நோக்கில் ஆகும். மொழியினைக் கையாள்வதில் மாணவர்களுக்கு இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. இது அவர்களின் மொழி ஆளுமையில் சிக்கல்களைக் காட்டுகிறது. எளிய முறையில் இலக்கணங்களைக் கற்பிப்பதன் மூலமே இவற்றை நீக்க முடியும். எனவே இலக்கணங்களில் புதிய அணுகுமுறைகளைக் கொண்டு கற்பித்தல் வேண்டும். இதனை நன்கு உணர்ந்த முடியரசன் மாணவர்களுக்குத் தமிழ் இலக்கணத்தை எழுதியுள்ளார். நுண்மாண் நுழைபுலம் கொண்ட முடியரசனின் இலக்கண அணுகுமுறையை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் பொருண்மையாகும்.

முடியரசனின் ஆளுமை

1920 ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்தில் பிறந்தவர். இவருடைய இயற்பெயர் துரைராசு என்பதாகும். இவர் காரைக்குடியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். இவருடைய கவிதைகள் பள்ளி, கல்லூரிப் பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளது. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தமிழியல் துறையில் பணியாற்றியுள்ளார். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, கவிஞர் பாரதிதாசன் ஆகியோருடன் நட்புறவைக் கொண்டிருந்தவர். பகுத்தறிவுச் சிந்தனையைக் கொண்டவர். இதனால் சாதி மறுப்பு திருமணம் செய்ததுடன் சமயச் சடங்குகளை வெறுத்தவர். கவிதை, கட்டுரை, காப்பியம் என அனைத்திலும் புலமை

---

* முனைவர் பட்ட ஆய்வாளர், அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

பெற்றுத் திகழ்ந்தவர். 1966இல் தமிழக அரசின் பரிசைப் பெற்றது இவரது "பூங்கொடி" என்ற காவிய நூல். தமிழக அரசின் விருது, மாநில அரசின் விருது, கலைஞர் விருது, பாவேந்தர் விருது, கலைமாமணி விருது என்று மொழி ஆளுமையால் பல விருதுகள் இவருக்குக் கிடைத்தன. "கவியரசு" என்ற பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. துரைராசு என்ற தனது பெயரை பின்னாளில் "முடியரசன்" என மாற்றிக் கொண்டார். 1964 ஆம் ஆண்டில் தொடங்கி 2005 ஆம் ஆண்டு வரை பதினைந்திற்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார். நான்கு கவிதைத் தொகுப்புகள், நான்கு காவியங்கள் எழுதி தமிழ் மொழிக்குத் தனது பங்கினை மெய்ப்பித்தவர்.

முடியரசனின் தமிழ் இலக்கணம்

புத்துலகத் தேவைகட்கு ஏற்பத் தமிழ் மொழியைப் புதுமைப்படுத்திக் கொள்ளவும் சிறந்த முறையில் சமுதாய வளர்ச்சிக்கு அதனைப் பயன்படுத்தவும் அறிவியல் நோக்கில் அமைந்த மொழி ஆராய்ச்சி நூல்கள் நமக்கு மிகவும் தேவை என்கிறார் டாக்டர் பொற்கோ. இதன் அடிப்படையில் தமிழ் மொழிக்கான தமிழ் இலக்கணத்தைக் கட்டமைத்துள்ளார் முடியரசன். மாணவர்களுக்கு இலக்கணம் கற்பிக்கும் பாடத்திட்டத்தினைக் கட்டமைப்பதில் தனிக் கவனம் செலுத்தியுள்ளார். பாட நூல்கள் மாணவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கு வழிகாட்டுபவையாகும். பாடநூல்கள் தோற்றத்திலும் வடிவ அமைப்பிலும் உள்ளடக்கத்திலும் தனித்தன்மை உடையவை என்பார் பரசுராமன். எனவே இவற்றில் தன்னுடைய தனித்தன்மையைக் கொண்டு முடியரசனின் தமிழ் இலக்கணம் என்ற பாடநூலினை அமைத்துள்ளார். பதினோராம் வகுப்பு மாணவர்களுக்கென கட்டுரை – மொழிப்பயிற்சியுடன் வடிமைத்துள்ளார். இது தமிழக அரசின் புதிய பாடத்திட்டத்தின்படி 1967 ஆம் ஆண்டு முதல் பதிப்பாக வெளிவந்துள்ளது. இப்பாடநூல் முன்னுரையில்,

> மாணவர்களுக்கு ஏற்ற வகையில், எளிதில் புரிந்து கொள்ளுமாறு விளக்கி எழுதப்பட்டுள்ளது. கட்டுரையும், மொழிப்பயிற்சியும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன. பதினோராம் வகுப்பு மாணவர்களுக்கு இந்நூல், இலக்கணத் துணைவனாக மட்டுமின்றிக் கட்டுரை நண்பனாகவும், மொழிப்பயிற்சி ஆசானாகவும் நின்றுதவவல்லது.

என்று முடியரசன் குறிப்பிடுவதிலிருந்து தமிழ் இலக்கணத்தின் தேவையை உணரமுடிகிறது. இப்பாட நூலின் பயன்பாடும்

தெளிவாகிறது. பத்தாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வினை அடுத்து படிக்க வரும் மாணவர்கள் இலக்கணத்தில் தனிக்கவனம் செலுத்துதல் தேவையாகிறது. எனவே பதினோராம் வகுப்பு மாணவர்களுக்கு ஏற்ற வகையில் இப்பாடத்திட்டமானது அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

முடியரசனின் தமிழ் இலக்கணக் கட்டமைப்பு

இலக்கணங்களை எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் என்று வகைப்படுத்தியுள்ளனர். இதன் அடிப்படையில் மாணவர்களுக்கு கலைத் திட்டத்தினை உருவாக்கியுள்ளார். இப்பாடநூலில் பொருளடக்கமானது எழுத்து, சொல், பொது, புணர்ச்சி, பொருள், யாப்பு, அணி என அமைந்துள்ளன. மேலும் இவற்றை அடுத்து கட்டுரைகளும் மொழிப்பயிற்சியும் கொடுக்கப்பட்டுள்ளன. எழுத்து என்னும் தலைப்பில், எழுத்துக்களின் பிறப்பு, இடம், முயற்சி தரப்பட்டுள்ளன. சொல் என்ற தலைப்பின் கீழ் தனி, தொடர், பொதுமொழி, பொதுப்பெயர், ஆகுபெயர், பொதுவினைகள், உருபு மயக்கம், காலம் காட்டும் உறுப்புகள், சினைவினை – முதல்வினை, பொதுவினை என்றும் மேலும் பெயர், வினை, இடை, உரிச்சொற்கள் ஆகிய இலக்கணங்களும் இடம்பெற்றுள்ளன. பொது என்ற தலைப்பின் கீழ் வினாவகை, விடைவகை, அடைமொழி மற்றும் உவம உருபுகள் கொடுக்கப்பட்டுள்ளன. புணர்ச்சி என்பதில் பல, சில, பூ, தெங்கு, மரம், தேன், இவற்றின் புணர்ச்சி செய்யுள் விகாரம், ணகர, னகர, வீறு, யகர, ரகர, ழகர வீறு, லகர, ளகர வீறு என்று இடம்பெற்றுள்ளன. பொருள் என்பதில் அகத்திணை, புறத்திணை இலக்கணங்கள் உள்ளன. யாப்பு இலக்கணத்தில் வெண்பா, ஆசிரியப்பா, அலகிடுதல் ஆகியன கொடுக்கப்பட்டுள்ளன. அணியிலக்கணத்தில் வேற்றுப்பொருள்வைப்பணி, வேற்றுமையணி, இரட்டுறமொழிதலணி, மடக்கணி, வஞ்சப் புகழ்ச்சியணி, சொற்பொருள் பின்வருநிலையணி ஆகியன இடம்பெற்றுள்ளன. கட்டுரை என்பதில் கட்டுரையின் வகைகள், கட்டுரை எழுதும் முறையினைக் கூறல் என்ற அடிப்படையில் 24 கட்டுரைகள் தரப்பட்டுள்ளன. மொழிப்பயிற்சி என்பதில் வாக்கியத்தின் வகைகள், வாக்கிய அமைப்பு, பத்தியமைப்பு, நடை, நிறுத்தற்குறிப் பயிற்சிகள், வல்லெழுத்து மிகும் மிகா இடங்கள், மரபு, வழுச் சொற்கள் திருத்தம், உவமை, பழமொழி வைத்து எழுதுதல் என 14 பயிற்சிகள் விளக்கத்துடன் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ் இலக்கணம் கற்பித்தல் அணுகுமுறைகள்

மொழியாசிரியர்களின் நோக்கம் என்பது மொழியை நன்கு கற்பித்தல் ஆகும். மொழிக் கற்பித்தல் என்பது பேசுதல், கேட்டல், எழுதுதல், படித்தல் என்ற திறன்களின் அடிப்படையில் அமைய வேண்டும். இலக்கணம் கற்பித்தலில் புதிய அணுகுமுறையைப் பயன்படுத்துகிறார் முடியரசன். நடைமுறை எடுத்துக்காட்டுகளைக் கையாளுதல், மாணவர்களுக்கு எளிதில் புரியும் வண்ணம் எடுத்துக்காட்டுகளைத் தருதல், சமகாலத்தோடு இலக்கணங்களைப் பொருத்திக் கற்பித்தல், அனைவரும் அறிந்த திருக்குறள் போன்ற இலக்கியங்களைத் தருதல் என்ற அடிப்படையில் கற்பித்தல் முறையில் இலக்கணங்களைப் பின்பற்றியுள்ளார். 'விதிதருமுறை, விதிவருமுறை' ஆகிய இருவகை முறையில் இலக்கணம் கற்பிப்பதில் விதிவருமுறையே சிறப்பாக அமையப்பெறும், மாணவர்கள் பொதுவிதியைக் கண்டு கொள்ள இம்முறை சிறப்புறப் பயன்படுகிறது'' என்று ஏ.ஆதித்தன் குறிப்பிடுகின்றார். முடியரசனின் இலக்கண அணுகுமுறையும் இவ்வகையிலேயே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

எளிய எடுத்துக்காட்டுகள் தருதல்

எழுத்திலக்கணம் கற்பிக்கும் இடத்தில் எளிய எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்துகிறார். எழுத்திலக்கணமான எழுத்துக்களின் பொதுப்பிறப்பைக் கூறுமிடத்தில், "அகர முதல வெழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு'' என்ற குறட்பாவினைக் கொடுத்து அக்குறட்பாவிலுள்ள சொற்களைக் கொண்டு எழுத்துப் பிறக்கும் இடங்களை எடுத்து இயம்புகின்றார். "குறட்பாவில் உள்ள அ-த்-ன்-ல் என்ற எழுத்துக்களைத் தனியே ஒலித்துப் பாருங்கள்'' (முடியரசனின் தமிழ் இலக்கணம்,ப.2) என்று கூறுவது இங்கு நோக்கத்தக்கது. இவ்வெழுத்துக்களைக் கொண்டு உயிர், வல்லின மெய், மெல்லின மெய், இடையின மெய் என அவை பிறக்கும் இடங்களைக் கூறுகிறார். இம்முறை மாணவர்களுக்கு எளிதில் புரியும் வகையில் உள்ளது. எடுத்துக்காட்டுச் சொற்கள் தனியே தெரியும் வண்ணம் தடித்த எழுத்துகளில் பயன்படுத்துகிறார். மேலும் வேற்றுமை தொகையைக் கூறுகையில் "முருகன் வந்தான், முருகனைக் கண்டேன், முருகனால் கட்டப்பட்டது'' (முடியரசன் தமிழ் இலக்கணம்,ப.60) என்று ஒரே பெயரைக் கொண்டு அடுத்தடுத்த வாக்கியங்களில் எடுத்துரைப்பது வரவேற்கத்தக்கதாக அமைந்துள்ளன. சில இடங்களில் சமகாலத்து எடுத்துக்காட்டுகளைத் தருகிறார். படித்த பெண், மெல்ல சென்றான்,

ஊரை அடைந்தான், கண்ணகி வந்தாள், இராமன் விழுந்தான் என்பன இதற்குச் சான்றாக அமைகின்றன.

உரைநடையில் இலக்கணவிதி

“மனப்பாடம் செய்வதனால் மட்டும் இலக்கண அறிவு பதிந்து விடுவதில்லை நூற்பாக்களை மனப்பாடம் செய்யாமலே உரைநடை வாயிலாக எளிதில் இலக்கண அறிவு பெறுதல் இயலும்” என்று அ.கி.பரந்தாமன் கூறுகிறார். இவற்றைக் கருத்தில் கொண்டு முடியரசன் மாணவர்களுக்குப் புரியும் வகையில் உரைநடையைக் கொண்டு இலக்கணங்களுக்கு விதி தருகிறார். இலக்கணவிதி என்ற தலைப்பின் கீழ் இது அமைந்துள்ளது. பவணந்தி எழுதிய நன்னூலில் இடம் பெறும் நூற்பாவை இதில் பயன்படுத்துகிறார். தேவையான இடங்களில் விளக்கியும் இலக்கண விதியைக் கூறுகிறார். சில இடங்களில் சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல் என்ற முறையில் அமைத்துள்ளார். இதனை,

> பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற அறுவகைப் பெயர்களின் அடியாகத் தோன்றிச் செய்பவன் முதலாகிய ஆறனுள், செய்பவனாகிய கருத்தாவை மட்டும் வெளிப்படையாக விளக்குவது குறிப்பு வினையாகும்.
>
> (முடியரசன் தமிழ் இலக்கணம்,ப.76)

என்று கூறுவதிலிருந்து மொழிநடை வெளிப்படுகிறது. ஐந்து வரிகளுக்கு மிகாமல் இலக்கண விதிகள் அமைந்துள்ளன. “மரபிலக்கணச் சிந்தனைகளை அடியொற்றிய புத்திலக்கணச் சிந்தனைகள், பள்ளிப் பாடத்திட்டத்தில் இடம்பெற வேண்டும். பழைய இலக்கணக் குறிப்புகளும் எடுத்துகாட்டுகளும் தள்ளப்பட்டுப் புத்திலக்கணம் இடம்பெறுமானால் இலக்கணம் கடினமானது என்ற அச்சம் மறையும்” என்பார் இராசாராம். இதன் அடிப்படையிலேயே இவ்விலக்கணங்கள் அமைந்துள்ளது. இது முடியரசனின் இலக்கண அணுகுமுறையில் வரவேற்கத்தக்க வகையில் உள்ளது.

குறிப்புகள் தருதல்

இலக்கண விதிகளைக் கூறும் சில இடங்களில் கூடுதல் விளக்கத்திற்காகக் குறிப்புகளைத் தந்திருக்கிறார். இக்குறிப்புகளில் மாணவர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு இலக்கண விதிக்குக் கீழே தனியாகக் காட்டுகிறார். இக்குறிப்புகள் இடம் பெறுவது கருதத்தக்க ஒன்றாகும். ‘யார்’ என்னும்

வினைக்குறிப்பை எடுத்துக்கூறும் பொழுது இக்குறிப்பைப் பயன்படுத்துகிறார் முடியரசன். “யார் என்பது வினாப் பொருளைத் தரும் வினைமுற்றாகும். இது தொழிலையும், காலத்தையும் வெளிப்படையாக உணர்த்தாமையால், வினா வினைக்குறிப்பு முற்றாகும்”. (முடியரசனின் தமிழ் இலக்கணம்,ப.55) என்று பொருள் கூறிய பின்னர்,

> அ∴து யார்? அவை யார்? என அ∴றிணை இருபாலிலும் நான் யார்? நாம் யார்? எனத் தன்மை ஒருமை - பன்மையிலும் நீ யார் நீவிர் யார்? என முன்னிலை ஒருமை-பன்மையிலும் ‘யார்’ என்னும் வினாவினைக் குறிப்பு முற்று, புதிய வழக்காக வழங்கி வருதலும் உண்டு நானர் (நான்-ஆர்) என, யார்-ஆர் என, மருவி வருதலும் உண்டு.
>
> (முடியரசன் தமிழ் இலக்கணம்,ப.55)

என்ற குறிப்பைத் தருகிறார். ‘யார்’ என்ற வினாவினைக் குறிப்பு அ∴றிணை இருபாலில் வரும் இடத்தையும் தன்மை ஒருமை-பன்மையில் வருமிடத்தையும், முன்னிலை ஒருமை-பன்மையிலும் வரும் இடத்தையும் புதிய வழக்காக வழங்கி வருவதை எடுத்துக் கூறுகிறார். எனவே வழக்கில் வழங்கி வரும் உதாரணங்களையும் கூறுவது இலக்கணங்களுக்குக் கூடுதல் சிறப்பாக அமைந்துள்ளன.

முடிவுரை

இலக்கணங்கள் தமிழ் மொழியைப் பிழையற பயன்படுத்த முதன்மையாக இருக்கின்றன. எனவே தமிழ்ப் பாடநூலில் முக்கிய இடம் பெறுகின்றன. முடியரசனின் தமிழ் இலக்கணம் கற்பித்தல் புதிய அணுகுமுறையைக் கொண்டுள்ளது. விதிவருமுறையைக் கொண்டு பாடத்திட்டமானது கட்டமைக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டுகளை முதலில் கூறி பின்னர் இலக்கணவிதியை உரைநடையில் கொடுத்திருப்பது சிறப்பானதாகும். இலக்கண விதியை அடுத்து இறுதியாக நன்னூல் நூற்பாவை வழங்குகிறார். எடுத்துக்காட்டுகள் அனைத்தும் மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் கையாளப்பட்டுள்ளது. இது பிற இலக்கண நூல்களிலிருந்து வேறுபட்டதாக உள்ளது. எதிர்கால மாணவர்களுக்கு இத்தமிழ் இலக்கணப் பாடநூல் மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

முடியரசன் தமிழ்த்தொண்டு

முனைவர் ஹ.மீனாட்சி*

இலக்கிய வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டு மறுமலர்ச்சிக் காலம் ஆகும். அம்மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் பாரதியும், பாரதிதாசனும் ஆவர். 'என் மூத்தவழித் தோன்றல் முடியரசனே எனக்குப் பின் கவிஞர்' எனப் பாவேந்தரால் பாராட்டப் பெற்ற முடியரசனைப் பெற்றதால் காரைமாநகரே புகழ்பெற்றது எனில் அது மிகையன்று.

தமிழ்ப்பற்று ஏற்படக் காரணம்

தாய்மாமன் வீட்டில் வளர்ந்த காரணத்தால் தனக்குத் தமிழ்ப் பற்று ஏற்பட்டது என்பதை 'இச்சூழ்நிலை எப்படியோ என் உள்ளத்தில் கவிதை இன்பத்தை வளர்ந்து விட்டது. சுருங்கக்கூறின் கவிதை உணர்வு என்னும் வேல் எனக்கு என் பிள்ளைப் பருவத்திலேயே என் தாய் மாமனால் வழங்கப்பட்டது எனலாம்.' என்ற அவர் கூற்று விளக்குகிறது. ஒளி தரும் விளக்கிற்கு எவ்வாறு தூண்டுகோல் வேண்டுமோ அதுபோல முடியரசனாரின் கவிதைப் பசிக்கு மேலைச்சிவபுரி பிரவேச பண்டிதம் வகுப்பிற் பெற்ற பயிற்சி தான் என் கவிதை உணர்வாகிய வேலுக்குப் போர் பயிற்சியாக அமைந்தது" (பா.ப.வா.ப பக்.31) என்கிறார்.

தமிழ்மொழி

"மொழி மனித பிறப்பிற்கு உரிய தனியுடைமை. எண்ணம், மொழித்துணையின்றி வளராது. எண்ண விரிவாக்கம், மொழி விரிவு, மொழி விரிவிற்கு இலக்கியப் பயிற்சியும் வேண்டும்" என்பார். வ.சுப.மாணிக்கனார். முடியரசனாரின் படைப்புகளில் தமிழ் மொழி தனித்த இடம் பெறுகிறது. எழுச்சி மிக்க வீரத் தமிழ் கவிஞரான முடியரசனார் காட்சியளிக்கிறார்.

அறிஞர் அண்ணா மீதும் பாரதிதாசன் மீதும் கொண்ட பற்றினால் முடியரசனாரின் படைப்புகளில் தமிழ், நாடு, இனம், மொழி மீது கொண்ட பற்றாக பரிணமித்தது.

---

* உதவிப் பேராசிரியர், நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரி, கோவிலூர்.

தமிழ் மொழியின் தொன்மை

முடியரசனார் தமிழ் மொழியின் தொன்மையை தம் படைப்புகளில் பரவலாக சுட்டிக்காட்டியுள்ளார்.

"வையம் பெற்ற தமிழ் மொழியாம் - அதன்
வழிவழி பிறமொழியாம்
ஐயம் இல்லை உண்மையிதாம்" (கா.பா.ப-3)

என்ற இடத்து தமிழின் தலைமைத் தன்மையைக் கூறிச் செல்கிறார். மேலும் ஊன்று கோல் என்ற நூலில்,

"வையம் ஈன்ற மக்கள்
முதன்முதலில் வாய் திறந்து
பையவே நாவசைத்த பைந்தமிழ் மொழி"
(உ.கோ.ப-153)

என்கிறார்.

தமிழ்த்தூய்மை

ஒரு மொழி எக்காலத்திலும் பிறமொழி கலப்பில்லாமல் வழங்கும் மொழியாக விளங்க வேண்டும். அம்மொழி தூய்மை மொழியாக வேண்டும். நம் தாய் மொழியாம் தமிழ் மொழியில் கலந்து பிறமொழிச் சொற்களுக்கு ஏற்ற தூய தமிழ்ச் சொற்கள் பல உள்ளன என்பது கவிஞரின் கருத்தாகும். முடியரசனார் தமிழ்மொழியின் தனித்தன்மைச் சிறப்பை,

"முதலோடு முடிவிலாப் பெருமை நன்கு
மொழி பெற்றும் மூப்பில்லா இளமை தன்மை
அதனோடு மிகும் இளமையின் காலம்
அமையாத பழந்தொன்மை தனித்தியங்கி
உதவுநிலை பழந்தொன்மை தனித்தியங்கி
உயர்தனி செந்தமிழுக்கே உண்டோம்"

தமிழ் மொழி எதுவோ அந்த தூயமொழி என்று செம்மொழியாம் தூய மொழி என்று தமிழைப் பாடுகிறார் (ஊ.கோ.ப.132). முடியரசனார் கதைகளில் பல பழந்தமிழ்சொற்கள் பல இடம் பெற்று உள்ளன.

உவகை - மகிழ்ச்சி, நூறி - அரைத்து,

அயிர்ப்பு - ஐயம் போன்ற சொற்கள் சான்றாகும்.

தமிழ்ப்பற்று

முடியரசனார் தமிழ்மீது கொண்ட பற்றினை இத்தன்மைத்து என்று கூற இயலாது. தமிழ் மீது கொண்ட பற்றின் காரணமாக துரைராசு என்ற தமது பெயரை முடியரசன் என மாற்றிக் கொண்டார். தன்னை மணக்க இருக்கும் பெண்ணின் பெயர் சரஸ்வதி என்பதை கலைச்செல்வி என மாற்றிய பின் மணந்தார். தம் குழந்தைகளுக்கும் பெயரன் பேத்திகளுக்கும் தூயத்தமிழ் பெயரே சூட்டினார். வள்ளுவர் நெறிப்படி வாய்மை வாழ்வு வாழ்ந்தவர். உலகிற்கு மட்டும் உபதேசம் இல்லாமல் மனதிற்கு ஏற்ப மாசிலா நெறியில் வாழ்ந்தவர். இவரைப் போல் தமிழை இந்த அளவு நேசித்தவர் இல்லை.

"தீங்கு உன்னைச் சாருதென்றால் என்
சிந்தை கொதிக்குதம்மா!
பாங்குனை மேவுதென்றால் - உள்ளம்
பாய்ந்து மகிழுதம்மா"

என்று தமிழுக்கு ஊறுநேர்ந்தால் சிந்தை கொதிப்பதாகவும் நன்மை சேர்ந்தால் உள்ளம் பாய்ந்து மகிழ்வதாகவும் தம் தமிழ்ப்பற்றை வெளிப்படுத்தி உள்ளார்.

பாரதியார் கண்ணனை பல உறவுகளில் வைத்து பாடியதுபோல கவிஞர் தமிழைப் பல உறவுநிலைகளில் வைத்துப் பாடியுள்ளமை போற்றுதற்கு உரியதாகும். கடவுள் மறுப்பு கொள்கையுடையவர் என்றாலும் தமிழை தம் தெய்வமாகப் பாடியுள்ளார். பூங்கொடி காவியத்தில்,

"மூவா முதலே முழுமைபெறும் செம்பொருளே
சாவா வரம் எனக்குத் தா"

என்று வேண்டுவதுடன் தன்னை ஆண்டு அருளுமாறும் வேண்டுகிறார். தமிழ் மீது கொண்ட பற்றினால் இளவரசனுக்கென்னும் கடித இலக்கியத்தில் கோவிலில் தமிழில் அருச்சனை செய்ய வேண்டும் என்ற கருத்தை விளக்கும் போது சைவப் பெருமக்கள் உச்சி மேல் வைத்துப் போற்றுகின்ற பெரிய புராணத்தில்,

"அர்ச்சனைப் பாட்டே யாகும்
ஆதலால் மனமே நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார்
தூமறை பாடுவா யான்" (க.இ.ப.75)

என்ற பாடலை சான்றாகக் காட்டுகின்றார். மேலும் "மன்னவ தமிழைப் பிழைத்தநாடு, தமிழைப் புறக்கணித்த நாடு எவ்வளவு தொல்லைகளுக்கு ஆளாகிவிட்டது பார். இனியேனும் தமிழைப் பழிக்காதே. தமிழ்ப் புலவனை இகழாதே" என்று (கடித இலக்கியம் ப-92) கணிகண்ணன் என்ற புலவனை பழித்த மன்னனுக்கு கூறுவதாகக் கூறும் இடத்து அவரது தமிழ்ப்பற்றை தெளிவுறுத்துகிறார். மேலும்,

"என்னாட்டிற் கலைக் கூடமாக்கி மன்றம்
எடுத்துரையும் தமிழ்மொழியின் ஆட்சி வேண்டும்
இந்நாட்டம் நிறைவெய்தவில்லை என்றால்
இருந்தென்ன வாழ்ந்தென்ன சாவே மேலாம்"
(தா.கா.ப.4)

என்ற தாய்மொழி காப்போம் என்ற இடத்து தமிழை உயிர்க்கும் மேலாக கருதிப் பாடுகின்றார். மேலும் தமிழ் நாட்டிலே தமிழ்மொழிக்கு உரிமை இல்லை என்றால் தேமதுரத் தமிழோசை உலகம் எலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்று பாடிய பாரதியின் ஆணையை எவ்வாறு நிறைவேற்றுவது என்ற தன் மன ஏக்கத்தை தன் மகனுக்கு எழுதிய கடிதத்தின் வாயிலாகக் கூறுகிறார். (க.இ.ப.201) பிறமொழி பேசுவோரைப் பார்த்து தாய்மொழியை மறந்து அயல்மொழிக்கே அடிமையாகி அதற்காகப் பரிந்து பேசும் ஒருவன் தமிழனென்று தன்னைக் கூறிக்கொள்ள தகுதியற்றவன்" என்கிறார். (க.இ.ப.203) மேலும் தாய்மொழி ஆடை போன்றது; அயல் மொழி அணிகலன் போன்றது. அணிகலன் இன்றி வாழலாம். ஆடை இன்றி வாழ இயலாது என்ற கருத்து ஏற்பு உடையதாகும்.

தமிழ்நாட்டின் இசை அரங்குகளில் தமிழ் இசை பாடாது இருப்பதையுணர்ந்து உள்ளம், கொதித்துப் பாடிய பாடல்களில் தொகுதியே 'காவியப் பாவை' என்ற நூலாகும். இவர் தம் தமிழ்ப்பற்றை இவர் எழுதிய கடைசிப்பாடலான,

"பாடிக்கொண்டே இருப்பேன்
பைந்தமிழைச் செந்தமிழை நான்
ஓடிக்கொண்டே இருக்கும் - ஊறுஞ் செங்குருதி
ஓடாதுறைந்தே ஓய்ந்திடும் நாள் வரை" (கா.பா.ப-104)

என்ற பாடல் வெளிப்படுத்துகிறது.

தமிழ் வளர்ச்சி

"சேமமுற வேண்டும் எனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்"

என்ற பாரதியின் கூற்றையும், "எளிய நடையில் தமிழ் நூல்கள் எழுதிடவும் வேண்டும். இலக்கண நூல் புதிதாக இயற்றலும் வேண்டும் என்ற பாரதிதாசன் கூற்றையும் உட்கொண்டு தெருவெல்லாம் தமிழ் முழங்கப் போராட்டங்களை முன்னின்று நடத்தினார். பாரசீக கவிஞர் நிசாம் எழுதிய கோசரு சிரீன் என்னும் பெருங்காப்பியக் கதையைத் தழுவி எழுதியதே "காதற் சிலை" என்னும் பெரும் பாட்டாகும்.

ஆங்கில எழுத்தாளர் மாத்யூ அர்னால்டு எழுதிய பாரசீகக் கதையை "வீரகாவியம்" என்னும் காப்பியமாக எழுதி பிறநாட்டு நல்லறிஞர் நூல்களை தமிழில் ஆக்கியுள்ளமை போற்றுதற்கு உரியதாகும்.

மேலும், எளிய நடையில் தமிழ் இலக்கணம், பூங்கொடி என்னும் மொழிப்போர் காப்பியம் 'இளம்பெருவழுதி' என்ற நாடக நூல் 'காவியப் பாவை' என்ற இசைத் தமிழ் நூல் போன்ற இறவாத புகழுடைய நூல்களை இயற்றியுள்ளார்.

ரூதின் என்ற சோவியத்து நாட்டறிஞர் முடியரசனாரின் மொழிப்பற்றைப் போற்றியுள்ளார். பாரதிதாசன் வழித்தோன்றல் என முடியரசனாரை தமிழ் நேசன் என்ற இதழ் பாராட்டியுள்ளது.

ஊர்ப்பெயர்கள், தெருப்பெயர்கள், மக்கள் பெயர்கள் அனைத்தும் தமிழ்ப்பெயர்கள் ஆக வேண்டும் என்று வற்புறுத்தும் கவிஞர் இசை அரங்குகளில் தமிழிலே பாட வேண்டும் என்று கூறுவது இவரது மொழிப்பற்றைக் காட்டுகிறது.

- இருபதாம் நூற்றாண்டு எழுச்சிக் கவிஞராக விளங்கியவர் முடியரசன். பாரதி, பாரதிதாசனுக்கு அடுத்து முடிசூடா முடியரசனாக விளங்கிய இவர் இளமைப் பருவத்தில் வளர்ப்பின் காரணமாக தமிழ்ப்பற்று மிக்க தமிழ் ஆசிரியர் ஆனார்

- இவர்தம் நூல்கள் தமிழ் மொழியையம் அதன் தொன்மையையும் காட்டும் திறம் மிக்கது என்பதற்கு அவரது நூல்களே சான்று ஆகும்.

- இவரது பாடல்கள் மூலம், தமிழ்ப் பற்றினையும் இவர் தமிழ் மீது கொண்ட ஈடுபாட்டினையும் நாம் காணலாம்.
- இவரது நூல்களின் மூலம் தமிழ்மொழி வளர்ச்சியடைய இவர் ஆற்றிய தொண்டையும் செயல்களையும் நாம் அறியலாம்.
- ஊருக்கு உபதேசம் என்ற நிலையில் அல்லாமல் தமது பெயரையும் மனைவி பெயரையும் தமிழிலே மாற்றிக் கொண்டார். தமக்குப் பிறந்த குழந்தைகளுக்கும், பெயரன் பேத்திகளுக்கும் தூய தமிழ்ச் சொற்களையே சூட்டினார்.

  "தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை
  தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்தது உண்டோ"

என்ற கூற்றுக்கு ஏற்ப கவிஞர் முடியரசன் மறைந்து விட்டாலும் அவரது தமிழ் உணர்ச்சியும் அவ்வுணர்ச்சியோடு அவர் படைத்த படைப்புகளும் என்றும் தமிழர்கள் நினைவில் நின்று வாழும்.

முடியரசனாரின் சிறுகதைத் திறன்

ந.முத்துமணி*

முன்னுரை:

கவிதை உலகில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருந்த முடியரசனார், நண்பர் அறிவழகனின் வற்புறுத்தலால் சிறுகதை உலகிற்கு அடியெடுத்து வைத்தார். அதன் பயனாக சீர்திருத்தச் செம்மலின் சிறுகதைகள் இரண்டு ஆண்டுகளில்(1947 – 48) வெவ்வேறு இதழ்களில் வெளிவந்துள்ளன. பின்பு, அவை **'எக்கோவின் காதல்'** என்ற தொகுப்பாக வெளிவந்தது. அவர் எழுதிய பதினொறு சிறுகதைகளும் சமூகத்தில் உள்ள அவலங்களைப் பெரிதும் எடுத்துரைக்கின்றன. முடியரசனாரின் சிறுகதைப் படைப்பாற்றலை வெளிப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கதைக்கரு:

புரட்சிகரமான எழுத்தாளன் எக்கோ. அவன் அரசாங்கத்தை எதிர்த்து ஒரு கட்டுரை எழுதியதால் கைது செய்யப்பட்டு பின்பு கொல்லப்படுகிறான். இதனை எதிர்த்து மக்களைத் திரட்டி கூட்டம் போடுகிறாள் எக்கோவின் மனைவி மல்லிகா. அதனால் அவளும் கைது செய்யப்படுகிறாள். மக்கள் விடுதலைப் பறவையாக வேண்டும். அதற்கு ஒருவர் பலியாக வேண்டும் என்பதே 'எக்கோவின் காதலின்' கருவாக உள்ளது.

தமிழாசிரியர் ஏழ்மையாக இருப்பார் என்பதால் அவனுக்கு பெண் கொடுக்க மறுக்கிறார் அத்தையின் கணவர். அதனால் மனமுடைந்து தற்கொலை செய்து கொள்கிறாள் அத்தை மகள் ஊர்மிளா. என்னதான் சொந்தமாக இருந்தாலும் பணத்தாலான ஏற்றத்தாழ்வுகள் இருக்கிறது என்பதை படம் பிடிக்கிறது 'அத்தை வீட்டில் பேய்'.

தன்மகள் விதவையானாலும் அவளை மறுமணம் செய்து கொள்ள விரும்புவன் தாழ்ந்த சாதிக்காரன் என்பதால் திருமணம் முடிக்க மறுக்கும் பெற்றோரை எதிர்த்துத் திருமணம் முடித்து மகிழ்ச்சியாக வாழும் மணமக்களின் கதைதான் 'கண்மூடி வழக்கம்'

---

* முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்ப்பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

என்பதாகும். இதில் கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக வேண்டும் என்ற கருத்தை ஆழமாகப் பதிவு செய்துள்ளார் ஆசிரியர்.

ஐம்பத்து மூன்று வயது கிழவன் பதின்மூன்று வயதுப் பெண்ணை நான்காவதாக திருமணம் செய்து கொள்கிறான். இதற்கு ஒரே தகுதி அவன் பணக்காரன் என்பதாகும். திருமணம் முடிந்து தன் இயலாமையால் தன் மனைவியை சந்தேகப்படுகிறான் அவன். 'சந்தேக முடிவு' என்னும் இக்கதை சமூகத்தில் ஆணாதிக்கம் இருந்ததையும், ஒருவன் எத்தனை மனைவியர் வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ளலாம் என்பதையும், மேலும் வயது வேற்றுமையில் திருமணம் நிகழ்த்தப்படும் பொழுது ஏற்படும் சிக்கலையும் உணர்த்துகிறது.

சீர்திருத்தவாதிகள் எனத் தன்னைச் சொல்லிக் கொண்டு அதைச் செயலில் காட்டாதவரின் கதை 'கடைமுழுக்கு'. தன்னை விரும்பும் அத்தை மகளை திருமணம் செய்யாமல் பெற்றோர் பார்த்த பெண்ணை மணம் செய்து கொள்கிறான் மாறன். அத்தை மகள் வேறொருவனை மணந்து விதவையாகி விடுகிறாள். அவள் சமுதாயத்தால் தாசி ஆக்கப்படுகிறாள். மாறனின் நண்பனான சுந்தரம் அவள் தாசி என்பதை அறிந்தும் அவளை மறுமணம் செய்து கொள்கிறான். இதனை அறிந்து தன் நண்பன் முகத்தில் முழிக்க முடியாமல் வெட்கி சிங்கப்பூருக்குச் சென்று விடுகிறான் மாறன். இக்கதையிலும் மறுமணத்தைப் பற்றியே பேசுகிறார் ஆசிரியர்.

தமிழ் மீது பற்று கொண்டு தன் பெயரையும், தன் மனைவி பெயரையும் நக்கீரன், காக்கைபாடினியார் என்று மாற்றிக் கொள்ளும் தமிழாசிரியர் ஒருவர் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் தன் குடும்பத்துடன் சிறை சென்று பின்பு கொல்லப்படுகிறார். தமிழ் மீது பற்றுக் கொள்ளும் ஒருவரின் நிலையை கடிதங்கள் வாயிலாக வெளிப்படுத்துகிறது 'காக்கையின் கடிதங்கள்' என்ற கதை. காக்கை தன்நிலையைத் தன் அம்மாவிற்கு எழுதுவதாக இக்கதை அமைந்துள்ளது. கடித முறை என்பது சிறுகதையில் ஒரு புதிய போக்கைக் காட்டுகிறது.

ஒரே கொள்கையுடைவர்கள், நண்பர்கள், சந்தர்ப்ப சூழ்நிலையால் தொழில் சங்கத் தேர்தலில் போட்டியிட நேர்ந்த பொழுது அவர்களுக்குள்ளும் போட்டி, பொறாமை, ஒருவரை மற்றொருவர் கொலை செய்யத் துணியும் செயலை வெளிப்படுத்துவது 'கிரு'ணார்ச்சுன யுத்தம்' எனும் கதை.

விதவைப்பெண் ஒருத்தியை மணம் முடிக்க எண்ணும் ஒருவன், அவள் தன் நண்பனின் மனைவி என்பதை அறிந்து அணைந்த விளக்கை, அணையா விளக்காக மாற்ற நினைத்த தான் நண்பனின் மனைவியை எப்படித் திருமணம் முடிப்பது? என்று கலங்கும் கதைதான் ‘அணைந்த விளக்கு’. நட்பிற்கு மரியாதை தரும் கதை இது. இக்கதை முடியரசனாரின் முதல் கதை ஆகும். இது ‘அழகு’ என்ற மாத இதழில் வெளிவந்தது.

கலப்புத் திருமணத்தை, மையமாகக் கொண்டு ‘அவமானச் சின்னம்’ படைக்கப் பட்டிருக்கிறது. அய்யங்காரரான அம்மாவுக்கும், ஆசாரியான அப்பாவுக்கும் பிறந்த மகன் கண்ணப்பன். அவன் சட்டக்கல்லூரியில் மாணவர்களால் ஒன்று கூடி ஏற்படுத்திய அறிவு வளர்ச்சிக் கழகத்தில் சேர்ந்த பின்பும் மதச் சின்னங்களை அணிந்திருப்பது அவமானச் சின்னமாக மாணவர்களிடையே விமர்ச்சிக்கப்பட்டு கடைசியாகத் திருந்துகிறான். அய்யங்கார் பெண் தன் கணவனை இழந்த பின்பு தான் ஆசாரியனைத் திருமணம் செய்கிறாள். இக்கதையும் மறுமணத்தைப் பற்றி பேசுகிறது.

கவிஞர் கண்ணன் விடுதலை உணர்ச்சியைத் தூண்டும் வகையில் கவிதைகளை எழுதியவர். சாதி சமயங்களை மோதித் தகர்த்தெறிய வேண்டும் என்பது அவர் எண்ணம். ஆனால் அவர் திரைப்படத்துறையில் சென்றால் காசுக்கு ஆசைப்பட்டு எங்கே தடம் மாறி விடுவாரோ? என்ற அச்சம் கவிஞர் கண்ணனின் நண்பனுக்குக் கனவாக வெளிப்படுகிறது. இதையே ‘அழிந்து விடுமோ?’ கதை எடுத்துக் காட்டுகிறது.

அரங்கசாமி என்பவனால் காதலித்து ஏமாற்றப்பட்ட பெண் பொன்னம்மாள். கர்ப்பமுற்றதால் வீட்டை விட்டு வெளியேறி கையில் குழந்தையுடன் இரயில் நிலையத்தில் பிச்சை எடுக்கிறாள் பொன்னம்மாள். தன் பெற்றோர் பார்த்த பெண்ணைத் திருமணம் முடித்த அரங்கசாமி தன் மனைவியின் பிரசவ நேரத்தில் அவளைப் பார்க்கச் செல்ல இரயில் நிலையம் வருகிறான். பிச்சை எடுக்கும் வேளையில் ஒரு கார் மோதி அரங்கசாமி கண் முன் இறந்து விடுகிறாள் பொன்னம்மாள். அங்கு வந்த அலுவலக உதவியாளர் அரங்கசாமியிடம் ஒரு தந்தியைத் தருகிறான். அதில் பிரசவ நேரத்தில் அவன் மனைவி இறந்து விடுவதாக இருக்கிறது. ஒரே நேரத்தில் தன் காதலியும், தன் மனைவியும் இறந்ததை எண்ணி கலங்கும் அரங்கசாமியின் கதை தான் ‘இரண்டு தந்தி’.

முடிவுரை:

முடியரசனார் பெரும்பாலும் அவருடைய கதைகளில் மறுமணத்தை முன் வைத்தே படைத்திருக்கிறார். தேசப்பற்று, சமுதாயச் சீர்திருத்தம், தமிழ்ப்பற்று போன்ற சிந்தனைகளும் இழையோடியிருக்கின்றன. 'எக்கோவின் காதல்' என்ற கதைத் தொகுப்பில் உள்ள பதினொரு கதைகளுக்குப் பிறகு அவர் சிறுகதைப் புனைவதை தவிர்த்து அவர்மனம் விரும்பிய கவிதையுலகிற்கே திரும்பி விட்டார்.

கவியரசர் முடியரசனாரின் தமிழ் வழிபாடு

முனைவர் மு.சுதா*
இரா.முருகேஸ்வரி*

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிப்பேரரசர் முடியரசனார். 'எனது மூத்த வழித்தோன்றல் முடியரசனே' என்று பாவேந்தரால் பாராட்டப் பெற்ற பெருமையுடையவர். "மொழியென்றாலே முத்தமிழ் ஒன்றேமொழி என்பார் / வழியென்றாலே பெரியார் வழியே வழியென்பார் / அழியென்றாலோ தமிழ்ப்பகை அழிக்க அணிவகுப்பார் / பழி என்றாலோ கோடி கொடுப்பினும் பண்ணாதார் / கொடியரசும் தென்றலைப் போல் குளிர்ந்தமணக் கவிகொடுக்கும் / கொடையுள்ளத்தார் முடியரசர் எனும் பெயரார் / முடிசாயார் தமிழ்ப் பகையை முடிக்கும் சான்றோர்" என்னும் சிறப்புக்குரியவர் வீறுகவி முடியரசனார்.

"முடியரசர் இவரென்றால் மக்களெங்கே? / முன்னோடும் பரிஎங்கே? படைகளெங்கே? / முடி எங்கே? அரசெங்கே? / முத்தமிழில் ஒருதமிழ் தான் முடியோ! மற்ற / இடைத் தமிழ்தான் அரசோ! மூன்றாவதான / எழிற்றமிழ் தான் முரசோ! ஓ! சரிதான் இந்த / முடியரசர் பாவரசர் பாடுகின்றார் நாம் / முழங்காலை நிலந்தாழ்த்தி வணங்கிக்கேட்போம்!

மும்முடியை ஓர் தலையில் முடித்த முடியரசர்! / எம்முடியும் தலைவணங்கும் இயற்கையிலே கவிஞர் / தம்மரிய கவிதையினால் கவியரசர் ஆனார் / தாய்த்தமிழே! அவர் முடியை உனக்குத்தான் சாய்ப்பார்"

எனக் கவிஞர் கண்ணதாசன் முடியரசனாருக்கு புகழ்மாலை சூட்டினார். இவ்வாறு வீறுகவி முடியரசனாருக்கு எண்ணற்ற சான்றோர்கள் சூட்டிய புகழாரங்கள் கணக்கிலடங்கா. பெருமைமிகு கவியரசர். தமிழ்த்தாய் பெற்ற தங்கமகன். அவரதுபாடல்கள் தமிழ் தேசியப் படைக்கலன்கள். எதைப் பாடினாலும் அவரது எண்ணமெல்லாம் தமிழ்த்தாயை வணங்கிக் கொண்டே இருக்கும் தமிழ் அரிமா. அவர்தம்

* உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.
* முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

தமிழன்னையைப் போற்றும் புகழ்மாலைகளை மட்டும் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகிறது.

முடியரசனாரின் தமிழ் வணக்கப்பாடல்கள் நெஞ்சுருக்கும் தெய்வத்தமிழ் பாசுரங்களாகும். தமிழ்த்தாய் வாழ்த்தில் தலைவாழ்த்தாக,

"தாயே உயிரே தமிழே நினைவணங்கும்
சேயேன் பெறற்கரிய செல்வமே – நீயே
தலைநின்றாய் இவ்வுலகில் தாள்பணிந்தேன் நீயிங்
கிலையென்றால் இன்பமெனக்கேது"..................

எனத் தெய்வத்தமிழை வணங்கி, உன் புகழைப் பாட சாவாவரம் எனக்குத்தா என வேண்டுகிறார். மேலும் எனை ஈன்று, காத்து, முப்பால் தந்து வளர்த்த தாயே, முத்தமிழ் தந்த பித்தால் செல்வத்தைத் தேடுகிலேன். கொல்லும் வறுமையிலும் செம்மை குன்றாது வெல்லும் மனநிலையை வேண்டுகிறார். எனது உயிர் உணர்வு அனைத்தும் நீயே என்கிறார்.

"இயலிசை கூத்தென இலங்கிடுவாயே
எமதுயிர் உணர்வுகள் யாவையும் நீயே
மயலெமை நீங்கிட மதியருள் வாயே
மைந்தரைக் காத்தருள் செந்தமிழ்த்தாயே"
(காவியப்பாவை. ப : 105)

"முன்னைப் பழம் பொருளே.........."
"என்னைப் பழிப்பவனைநான்
ஏதும் நினைப்பதில்லை
உன்னைப் பழிப்பவனைப் - பகையா
உள்ளம் நினைக்குதம்மா.........."
(காவியப்பாவை. ப : 106)

மொழி இன பகைவருக்கு இடிமுழக்கமென முழங்கினார். எத்துணையோ இடர்பாடுகள், இன்னல்கள், வறுமை நிலை அவரைத் தாக்கிய பொழுதும் எக்கடவுளையும் அவர் வேண்டி யாசிக்கவில்லை.

"இடர் பலசூழ்ந்தபோதும் / என்னுடல் தளர்ந்தபோதும் / மிடியெனைத் தின்றபோதும் / விழியொளி குறைந்த போதும் / கடமையில் தவறேன் அம்மா / கனிந்துனைப் பாடிப்பாடி

இடுபணிபுரிதலின்றி / இனியெனக்கென்னவேலை?'' என்று தமிழ்த்தாயைப் பாடிக் கசிந்துருகினார் முடியரசனார். (நெஞ்சிற்பூத்தவை.ப:269)

மேலும் தமிழைத் தாயாக மட்டுமல்லாமல் தந்தையாக, காதலி, மனைவி, மகன், நண்பனாக உருவகப்படுத்திப் பாடியுள்ளார் கவியரசர் முடியரசனார். இவர்தம் கவிதைகளில் தாய்மொழியுணர்ச்சி, தமிழினஎழுச்சி, தமிழகத்துவளர்ச்சி, சாதிஒழிப்பு, சமூகப்புரட்சி, பகுத்தறிவு, பொதுவுடைமை, சமவுரிமை, மனிதநேயம், மக்கள் நலம் ஆகியவையே பிரதிபலிக்கும். ஆனால் அனைத்திலும் தமிழுணர்வே தலைதூக்கியிருக்கும்.

ஐந்திலக்கணத்தை அழகுற பாமாலையாக தமிழ்முழக்கத்தில் போற்றித் துதிப்பார். நந்தா விளக்காக அலங்கரிப்பார்.

"செந்தமிழே என்னுயிரே புலவர் நெஞ்சில்
சேர்ந்தாடும் எழில் மயிலேஎன்னுட் பொங்கி
உந்திவரும் உணர்வதனால் கூவிக்கூவி
உவகைதரும் பூங்குயிலே மொழிக்குலத்தில்....
தந்துவரும் ஆரணங்கே அன்பே நின்றன்
தாள்வணங்கி நிற்கின்றேன் அருள்வாய் அம்மா''
(பாடுங்குயில்.ப:168)

என வணங்குகிறார். தாயே உனது படைப்பில் அனைத்துயிர்களும் பயனடைந்தன.

"காவுக்குள் மலரை வைத்தாய்
கண்டுக்குள் சுவையை வைத்தாய்
பூவுக்குள் தேனை வைத்தாய்
பூமிக்குள் பொன்னை வைத்தாய்
ஆவுக்குள் பாலை வைத்தாய்
ஆர்வத்தில் ஊறும் என்றன்
பாவுக்குள் அனைத்தும் வைப்பாய்
பாருக்குள் முதன்மைத் தாயே.....
சிந்தைக்குள் பொங்கும் பாடற்
சொல்லுக்குள் அனைத்தும் வைப்பாய்
தொன்மைக்குள் தொன்மைத் தாயே''
(நெஞ்சுபொறுக்கவில்லையே– ப.196)

என தனக்கும் வேண்டுகிறார். இளமைக் குன்றா பைந்தமிழ் அன்னை என்று சொல்வதைத் தவிர வேறு எந்தப் பற்றும் இல்லை என்கிறார் கவியரசர்.

"ஆழமாப் பயின்றே னல்லேன்
அகலமும் அற்றேயாகும்
யாழநின் னருளாலம்மே
யாப்பென ஒன்றுகட்டிச்
சூழும்நின் னடிக்கே சூட்டிச்
சொக்கிநான் வணங்குகின்றேன்
ஏழையென் இளகும் நெஞ்சில்
என்றும்நீ இருத்தல் வேண்டும்"

(ஊன்றுகோல் – ப.541)

உனை பிரியாதிருக்கும் நிலை வேண்டுமென்கிறார். மேலும் தன்னை வளர்த்த தமிழ்த்தாயைக் காப்பது தன் கடமை என்பதை,

"முத்தமிழே உனை எப்பகையாகினும்
முற்றிடமுன் வருமேல்
எத்தடை மோதினும் அப்படை யாவையும்
எற்றி முருக்கிடுவேன்
எத்துயர் நேரினும் அத்தொழில் ஆற்றிட
எப்பொழுதும் தவறேன்
மத்தக யானையைச் செற்றிடும் ஏற்றரி
வல்லமை தந்தருள்வாய்........"

(தாய்மொழிகாப்போம் – ப.365)

என்று வீறுகொண்டெழுகிறார்.

"மலரனைய திருவடியில் சிலம்பணிந்து
மணியொளிரும் மேகலையை இடைக் கணிந்து
பலர்புகழ்சிந் தாமணியைமார்பிற் பூண்டு
பார்புரக்கும் திருக்குறளே செங்கோலாகக்
குலவுபுகழ்த் தூதுமுதல் தொண்ணூற் றாறு
குறுநூல்கள் பணிந்து நினதேவல் செய்ய
நலமுயர்நற் றொகைநூல்கள் ஆயம் ஆக

நன்கமைதோல் காட்டியமாம் கட்டில் ஏறி
பாவலர்தம் நெஞ்சமெலாம் ஆட்சிசெய்யும்
பைந்தமிழே நின்வாயிற் புறத்தேநிற்கும்
காவலன்யான் ஆண்டறியேன் எனினும் நின்றன்
காவலன்யான் எனையாளும் அம்மேஉன்றன்
கோவிலுறும் வாயிலன்யான் பெருமைமுற்றும்
குறித்துரைக்கும் வாயிலன்யான் அதனால் என்றன்
பாவிலுறும் சொல்லிலெல்லாம் எழுத்திலெல்லாம்
பாட்டுவெறியூட்டியருள் அன்னாய் நன்றே"

(வீரகாவியம் – ப.486)

என அரியாசனத்தில் அமர்ந்து செங்கோல் ஏந்தி ஆட்சி செய்யும் தமிழன்னைக்கு வாயிற் காவலனாக இருப்பேன் என்கிறார். எந்நாளும் தமிழ்த்தாயே மனத்தின்மையும், அஞ்சாமனநிலையும், தோளும், வலிவும் துணையென என்முன்தோன்றிக் கூறுகையில் என்னை எதுவும் நெருங்கவியலாது என்கிறார் வீறுகவியரசர்.

மூவாப்புகழ் கொண்ட தமிழ்த்தாயின் சிறப்பை நாவால் தொகுத்துரைக்க நாம் முனைவது வானை முழம் போட்டுக் காட்ட நினைப்பது என்று பெருமிதத்துடன் கூறுகிறார்.

முடிவுரை

தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவைகலந்து ஊன்கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கின்ற மான் துள்ளும் வேகத்தை கவிதையினால் வான்பெய்யும் கோடை மழை போலப் பொழிகின்ற முடியரசரின் கவிபாடி முத்தமிழுக்கு முடிசூட்டுவோம்! முன்னாள் தொட்டு எந்நாளும் இருக்கின்றநம் கவியரசர் வணங்கா முடியரசரின் புகழ் பாடுவோம்! அவரின் கவிதைகளைப்பரப்பி தலைமுறையைக் காப்போம்! வாழ்க கவியரசர் முடியரசனார்! வளர்க நின்புகழ்!

கவியரசர் முடியரசனாரின் இளையோர் உலகம்

முனைவர் மு.சுதா *
இரா.முருகேஸ்வரி *

"மொழிபலகற்கச் செல்லுங்கள் - ஆனால்
முத்தமிழ் உயிராச் சொல்லுங்கள்."

என்றவர். 'என் மூத்த வழித்தோன்றல் முடியரசனே' எனப் புரட்சிக் கவிஞரால் பாராட்டப் பெற்றவர். தன்மானக் கவிஞர், தமிழியப் புரட்சிக் கவிஞர், பெருமிதக் கவிஞர், திராவிட நாட்டின் வானம்பாடி என அன்போடு அழைக்கப்பட்டவர் வீறுகவியரசர் முடியரசனார். அவர் வாழ்ந்த வாழ்வும், பாடிய கவிதைகளும் தமிழனத்தின் மாண்புக்கு ஒருமணி மகுடமாகும் 'புண்படாத நேரம் இருந்ததில்லை, புழுக்கம் படாதநொடி இருந்ததில்லை ஆனால் கொள்கைக்கு விடுமுறை கொடுத்துவிட்டுக் குனிந்து எவர் முன்னும் நின்றதில்லை.' 'முடியரசன் பெருமித உயரம் எந்த இமயத்திற்கும் இல்லை முடியரசனின் வெப்பம் எந்த சூரியனுக்கும் இருப்பதில்லை' என்ற கவிஞர் ஈரோடு தமிழன்பனின் வரிகள் கவியரசர் முடியரசனுக்கு மட்டும் பெருமையில்லை திராவிட நாட்டிற்கே பெரும்புகழ் சேர்ப்பதான பெருமையாகும். இத்தகு பெருமைமிகு சிறப்புக்குரிய கவியரசர் முடியரசனார் காண விரும்பிய இளையோர் உலகத்தைப் பற்றிக் கூறுவதே கட்டுரையின் நோக்கமாகிறது.

கவியரசர் முடியரசன் மனிதநேயத்துக்கும், சமத்துவத்துக்கும் மதிப்பளித்து கவிதைகள் மூலம் ஓயாத அறிவுப்போர் நடத்தியவர். ஒப்புரவும், மனிதநேயமுமே தமிழரின் பண்பாடு என்பதை உலகுக்குப் பறைசாற்றியவர்.

"இளையவரே ஒன்றுகேளுங்கள் சொல்லும்
என்மொழி கேட்டே வாழுங்கள்
பழகிடஎன்முன் வாருங்கள் - நல்ல
பண்புடன் நீர் முன்னேறுங்கள்"

---

*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

என்று இளைஞர்களை எல்லாம் நல்ல பண்புடன் முன்னேறுவதற்கு வழி கூறிட அழைக்கின்றார். கவியரசன் முடியரசன் விடுதலைப் பாட்டுக் கவிஞனே அன்றி விலைப்பாட்டுக் கவிஞன் அல்லன். அதனால் தான் "காசுக்குப் பாடுபவன் கவிஞன் அல்லன்" என்று சொன்னதோடு வாழ்ந்தும் காட்டியவர். திரைத்துறைப் பிடிக்காமல் தமிழ்த்திரை விளக்கி கவிதை மகளை கைப்பிடித்துத் தெருவிற்கு அழைத்து வந்தவர். சுயமரியாதைத் திருமணம் கண்டவர். அதனால் தான் சொல்கின்றார்.

"சாதியின் வேரைவெட்டுங்கள் - நெஞ்சில்
சமநிலைப் பண்பை ஒட்டுங்கள்
மேதினிஎல்லாம் சுற்றுங்கள் - அங்கே
மேன்மைகண்டே பற்றுங்கள்"

இளைஞர்களே! நாம் மேன்மை அடைய வேண்டுமானால் சாதியின் வேர்களை வெட்ட வேண்டும். மேன்மை கண்ட மேலைநாட்டோர் எல்லாம் சாதியின் வேர்களை அறுத்தெரிந்த மேன்மையாளர்களே என்பதை நினைவில் கொள்ளுங்கள் என்கின்றார்.

"வாழ்க்கையில் மேடுபள்ளங்கள்–போக்க
வழிவகைகண்டே கொள்ளுங்கள்
தாழ்ச்சிகள் எல்லாம் தள்ளுங்கள் - சோம்பித்
தளர்வதை நீங்கள் எள்ளுங்கள்"

இளவயதில் முடியரசனாருக்கு கடவுள்பற்று இருந்த போதிலும் வயது ஆக ஆக அவருக்கு பகுத்தறிவின் மீது நாட்டம் வந்தது. மற்ற கடவுள்களைவிட முருகன் மீது அவருக்குத் தனிப்பற்று உண்டு. காரணம் முருகனின் வீரமும் வள்ளியை கலப்புமணம் செய்து கொண்டமையும் தனக்கு ஈடுபாட்டை ஏற்படுத்திவிட்டன என்று பாட்டுப் பறவையின் வாழ்க்கைப் பயணம் என்ற நூலில் குறிப்பிடுகின்றார். மேடுபள்ளங்கள் வரலாம். ஆனால் மனிதர்களிடம் மேடுபள்ளங்கள் உயர்வுதாழ்வு கூடாது என்கின்றார்.

தமிழ்க்கடவுள் முருகன் போலவீரம் காட்டுங்கள், தமிழ்க்கடவுள் முருகன் போல கலப்புத் திருமணம் செய்யுங்கள், சுயமரியாதைத் திருமணம் செய்யுங்கள். அதே வேளையில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாட்டையும் மறவாதீர்கள் என்றவர்.

"கலைகளைக் கற்றே தேருங்கள் - அங்கே
கற்பதை வாழ்வில் சேருங்கள்
நிலைகளை இங்கே பாருங்கள் - கையை
நெஞ்சினில் வைத்தே கூறுங்கள்
அரசியற் பாடம் போற்றுங்கள் - போற்றி
அறிவினை நெஞ்சில் ஏற்றுங்கள்
அரசியல் போரில் நாட்டங்கள் - சொல்லின்
அய்யோ சூழும் வாட்டங்கள்."

சமுதாயத்தில் நிலவும் சீர்கேடுகளைக் கண்ட கவிஞரின் நெஞ்சக் குமுறலிலிருந்து வெடித்துச் சிதறிய நெருப்புப் பிழம்பே இக்கவிதை. எங்கெங்குகாணும் தீமைகளையும் தீயோர் போக்கையும் கண்டு கோபங்கொண்டு அத்தீமைகளை எதிர்த்துக் கவிதைவாள் கொண்டு கருத்துப்போர் புரிகின்றார். சாதிகள் பொய்மைகள், தன்னலம், கையூட்டுவளரும் நாட்டில் விடுதலைபெற்றுஎன்ன பயன்? தேர்தலினால் ஏது பயன்? என்று கேட்கின்றார். சாதிக்கொரு அமைச்சராவதற்கு சட்டமன்றம் எனில் சாதிகளைச் சாராத மீதி மக்கள் என்ன செய்வார்கள் என்றெல்லாம் கேட்டு சமூகப் போராளியாகின்றார். இளைஞர்களை சமுதாயப் போராளியாகவும் மாற்ற விரும்புகின்றார்.

"எங்கெங்கு காணினும் தீமையடா – உலகு
எங்கனும் வாய்மைகள் ஊமையடா
அங்கங்குவாழ்பவர் எள்ளினரே–குணம்
அத்தனையுங் கொண்டு தள்ளினரே
தங்கடன் செய்வதில் தூங்குகிறார் - மனச்
சான்றுகள் கொய்யவே ஓங்குகிறார்.
ஜனநாயகத்தில் ஊமைவாய்கள் பேச முடியாத நிலைதான்.
எங்கெங்கு காணினும் வஞ்சமடா–அதை
எப்படித் தாக்கிடும் நெஞ்சமடா
இங்கெவர் போக்கிலும் குற்றமடா - இதை
எண்ணிடும் போதெல்லாம் செற்றமடா"

எங்கும் வஞ்சம்! மனிதம் மறக்கப்பட்ட வஞ்சம்! இந்தநிலை மாறவேண்டும் இளைஞர்களே! மாற்றவேண்டும் இளைஞர்களே! எனக் கூறுகிறார்.

மாற்ற முடியாத சமூக நியதியான பொதுவுடைமை என்கின்ற இலட்சியத்திற்காக இளைஞர்கள் போராட வேண்டும். எழுத்தும், சொல்லும், பொருளும், சமத்துவம் நோக்கி உச்சரிக்கட்டும். அநீதிக்கு எதிராக உங்கள் கைகள் போராடட்டும். அழிவெலாம் தொலைக! அமைதி நிலவுக! போர் ஒழிக! என்ற சிந்தனையோடு அறைகூவல் விடுக்கின்றார்.

"பிறமொழி வெறுத்தல் பேதைமையாகும்
அறமனம் உடையோர் அவ்வண்ணம் செய்யார்
குறுமனம் இஃதாம் விரிமனம் வேண்டும்
யாதும் ஊரென ஓதிய நாமோ
தீதெனப் பிறமொழிசெப்பித் திரிவது
மோதும் பகைமை முகிழ்ப்பது நன்றோ!"

உணருங்கள் இளைஞர்களே! 'எல்லா மொழியையும் படியுங்கள். தமிழை மட்டும் உயிராய்க் கொள்ளுங்கள் மொழி பலகற்கச் செல்லுங்கள். ஆனால் முத்தமிழ் உயிராய்ச் சொல்லுங்கள் இழிசெயல் சாய்த்தே வெல்லுங்கள். - நாட்டில் எழில் வளங்காண நில்லுங்கள்' என இளைஞர்களை எழுச்சியுறச் செய்கிறார்.

முடிவுரை:

முடியரசனாரின் அறஞ்சார் வாழ்வில் ஒளிபெற்ற விளக்குகளாய் பல மாணவர்களிடமும் இளைஞர்களிடமும் தமிழ்ப் பற்றையும், இனப்பற்றையும், பகுத்தறிவையும் வளர்த்தார். இதனால் ஏராளமான இளைஞர்கள் தமிழ் வீறுகொண்டெழுந்தனர். கவியரசர் முடியரசர் வழியில் மண்ணில் மனிதம் மலரட்டும்! பொதுவுடைமை பூக்கட்டும்! வாழ்க முடியரசர்! வளர்க நின்புகழ்!

வீறுகவியரசு முடியரசன் தமிழ் வழிபாடு தோற்றுவாய்

புலவர் ஆறு.மெய்யாண்டவர் *

20ஆம் நூற்றாண்டுக் கவிஞர்களில் தன் மதிப்புக் கொள்கையிலும், தலைவணங்காத் தகைமையிலும் முதலிடத்தில் நிற்பவர் வீறுகவி கவியரசர் முடியரசனார் வணங்காமுடிக் கவிஞர் என்றே அவரை அழைப்பது மிகப் பொருத்தமானதாக இருக்கும். செந்தமிழை உயிராய் நேசித்த பாவேந்தர் பாரதிதாசன் வழித் தோன்றல் என்றே இவரை அழைக்கலாம்.

மானமிகு கவிஞர் எனும் சொல்லுக்கு இலக்கணமாய் தன் நிலையில் தாழாமல் வாழ்நாள் முழுதும் வாழ்ந்தவர். அவர் எழுதிய கவிதை நூல்களில் என்னை ஈர்த்த பாடல் முடியரசன் தமிழ்வழிபாடு தொகுப்பு நூல். அவர் தமிழ்மீது கொண்ட பற்று அளவிடற்கரியது. அவர் எழுதிய முடியரசன் தமிழ் வழிபாட்டு நூலில் உள்ள நுண்மைகளையும் உண்மைகளையும் பற்றி விளக்க விழைகிறேன். தம் பிள்ளைகளுக்குப் பாரி குமுதம், பாரி, அன்னம், குமணன், செல்வம், அல்லி எனவும் பெயரப்பிள்ளைகளுக்கு திருப்பாவை, ஓவியம், செழியன், இனியன், அமுதன், யாழிசை, கலைக்கோ, வெண்ணிலா, முகிலன் எனத் தமிழ்ப்பெயர்களை தம் குடும்ப உறுப்பினர்களுக்கு வைத்து அழகு பார்த்த தமிழ்க்கவியரசர் தமிழைத் தாயாக, தந்தையாக, காதலியாக, மனைவியாக, மகனாக மட்டுமின்றித் தமிழைத் தெய்வமாகவும் உருவகப்படுத்தி கசிந்துருகிப் பாடியுள்ளார்.

இடர்பல சூழ்ந்த போதும்
என்னுடல் தளர்ந்த போதும்
மிடியெனத் தின்ற போதும்
விழியொளி குறைந்த போதும்
கடமையில் தவறேன் அம்மா
கனிந்துனைப் பாடிப் பாடி
இடுபணி புரித லன்றி
இனியெனக் கென்ன வேலை?

என முதுமை வந்துற்ற போதும் உடல் நலிவுற்ற போதும் விழி ஒளி குறைந்த போதும் தமிழினை மறந்தாரில்லை. அவர்தான் கவியரசர்

---

* மாவட்டத் தலைவர், உலகத் திருக்குறள் கூட்டமைப்பு, சிவகங்கை (மா).

முடியரசர். 'என் மூத்த வழித் தோன்றல் முடியரசனே' எனப் பாவேந்தர் பாரதிதாசன் குறிப்பிடுகிறார். பாரதி பற்றிப் பாடிய 'நீடுதுயில் நீக்கப்பாடிவந்த நிலா, காடுகமழும் கற்பூரச் சொற்கோ, கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு' எனும் கவிதை வரிகள் கவியரசர் முடியரசனார்க்கும் பொருந்தும்.

இவர் பற்றித் தமிழண்ணல் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "தமிழ் அவரது உயிர். எமக்குத் தெரிந்தவரைத் தமிழை இத்துணை நேசித்த ஒருவரை யாம் இது வரை கண்டதில்லை அதனால் தமிழ் உள்ள அளவும் வாழ்வு பெறும் கவிதைகளை அவர் தந்து சென்றுள்ளார்." எத்துணை பொருத்தமான மதிப்பீடு தாய்மொழி காப்போம் எனும் தலைப்பில் அமைந்துள்ள தமிழன்னை பிள்ளைத் தமிழ்ப்பாடலில் காப்புப் பருவம் பகுதியில் அமைந்துள்ள பாடல் அற்புதமான செய்திகளை நமக்குத் தருகிறது

தமிழன்னை உலகில் முதன்முதலில் தோன்றி நிலை பெறும் மொழி எனும் புகழைப் பெற்றுள்ளாள். உயர்தனிச் செம்மொழி என அயல் நாட்டவர் அயல் மொழி பேசுவோர் போற்றக்கூடிய உலகத்திற்கு ஒளித்தரும் செம்மையான தமிழ் மகள் இவள் அலை கடல் சூழ்ந்து மூழ்கிய போதும் மீண்டும் நிலை பெற்ற தமிழ்த்தாய் எனும் கலைமகள் இவளே. அழகிய மூன்று கழகம் (சங்கம்) கண்டு பாண்டியமன்னர்களால் வளர்க்கப்பெற்ற அழகுதரும் அணிகள் புனைந்த தமிழ் மகள் இவள்.

தமிழைக் கற்பவர் மனத்துணர்வைத் தூண்டி நற்பா புனைய வைக்கும் ஆற்றல் படைத்தது - தமிழ். நெருப்பில் இட்ட போதும் எரியாத தமிழ், நாவுக்கரசரை சிறை இட்ட போதும் சிதையாத் தமிழ் எனத் தமிழை வளர்த்தோர் பெருமையையும் இப்பாடல் கூறுகிறது. விற்போர் புரிந்து வெல்லும் வீரர் போல் சொற்போர் (பட்டிமன்றம்) போன்றவையும் தற்போது சுழலும் சொல்லரங்கம் நடப்பது போல நடத்தித் தமிழ் காக்க உழைத்தோரையும் வாழ்த்தி அஞ்சா மனத்தோடு என்றும் புதிதாய் இருக்கும் தமிழைத் தொழுது போற்றுவோம். அப்பாடல் இதோ...

உலகினில் முதன்முதல் நிலவிய மொழியெனும்
உரையெனும் திருமகளாம்
உயர்தனி மொழியென அயலவர் புகன்றிட
உயர்தருசெம்மகளாம்
அலைபல எதிரினும் நிலைபெறும்
அமுதெனும் மொழியினெலாம்

அழகிய கழகமொ டுலவிய தமிழ்
அணிநலம் பரந்திடவே
கற்போர் மனத் துணர்வை நற்பா படைத்திவள்
கவிவாகை அடிப் பூவையும்
கனலால் எரிந்து சிறை புகலால் மடிந்து
கருகாது வளர்த்தோரையும்
விற்போர் தொடுத்தெனச் சொற்போர் நடத்தி வரம்
விளைவாக உழைப்போரையும்
விதிராமனத்துணர்வில் புதிதாய்த் தழைத்துவரும்
விழைவோடு தொழுது தேத்துவோம்

இப்பாடல் கவிவாணர் திருவடிமலர்களையும் தமிழுக்காகச் சிறைசென்று தீக்குளித்து உயிர் நீத்து தமிழ் காத்த சான்றோரையும் இங்கே கவியரசர் குறிப்பிடுகிறார். தமிழை வாழ வைக்க வேண்டும் மொழி அழிந்தால் இனம் அழியும் என்பதை இங்கே நினைவூட்டுகிறார் முடியரசனார்

தமிழ் முழக்கம் எனும் தலைப்பில் உள்ள பாடலில்
காலத்தை வென்றவனே கற்பனைக்கும் எட்டாமல்
ஞாலத்தில் நின்றொளிரும் நந்தா மணிவிளக்கே
நெஞ்சத்திருக்கோவில் நின்றிருந்தெந்நாளும்
அஞ்சலெனச் சொல்லி அரவணைக்கும் தெய்வதமே
நெஞ்சை அகலாக்கி நீங்காத அன்பென்னும்
பஞ்சைத் திரியாக்கிப் பற்றும் உணர்வை
எரியாக்கி ஏற்றும் எழில் விளக்கே முன்னைப்
பெரியார்க்கும் தோன்றாப் பெருமை படைத்தவளே
சங்கத்தார் நெஞ்சமெனும் தண் பொழிலிற்கூடி மனம்
பொங்கத்தான் ஆடிவரும் புள்ளி எழில் மயிலே
பாவாணர் நாவிற் பழகிப்பழகி நின்று
கூவாமற் கூவிக் குளிர்விக்கும் பூங்குயிலே

எனத் தமிழ்ப் தெய்வத்தைப் பாராட்டி விட்டுப் பின் தப்பேதும் செய்யாமல் அங்கும் இங்கும் ஆடித்திரியாமல் நல்ல நெறியில் செல்லத் தமிழ்த்தாய் தெய்வமாய் நின்று உதவுகிறாள் என்கிறார் கவியரசர். அப்பாடல் வரிகள் இதோ,

அப்பாலும் இப்பாலும் ஆடித்திரியாமல்
தப்பேதும் செய்யாமல் தக்க நெறிகடக்க
எப்போதும் நன்றுரைத்து எம்மைப் புரப்பதற்கு
முப்பாலைத்தந்து முறைப்படுத்தும் நற்றாயே

எனத் திருக்குறளாகிய முப்பாடல் தமிழர்க்கு நன்னெறிகாட்டும் எனச் சுட்டுகிறார். இதே பாடலில் ஓரிடத்தில்,

எல்லா மதங்களும் உண்டென்றாலும் ஓர்பகையும்
அல்லா மதம் ஒன்றே ஆக்கிடுக
கூறாய்ப்பிரியல் எனக் கூறி இங்கு யாவரையும்
சீறா நலங்கொண்டு சேர்த்தனைக்கும் செந்தமிழே
சாதி சமயமென்று சண்டையிட்டு
சோதி வடிவொன் மாயாதீர்தூய இறைஎன்று
வள்ளலருட்பாவில் வடித்தெடுத்த தேன்சுவையே
உள்ளம் உருக்கி உணர்விக்கும் தெள்ளமுதே

என்னும் இப்பாடலில் எல்லா மதங்களும் அல்லா ஒரு மதம் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் என்ற வள்ளலார் காட்டிய அருட்பெருஞ்சோதி எனும் பேரொளியே எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான ஒளிவிளக்கு என்பதை முடியரசனார் உணர்த்தி அதற்கும் தமிழ்த்தாய் அருளவேண்டும் என நிறைவு செய்கிறார்.

நிறைவுரை

தமிழே தெய்வம். தமிழாம் தாய்மொழியைப் போற்றவேண்டும். என்றும் நன்னெறி நல்கும் திருக்குறளைப் பெற்ற மொழி தமிழ். என்றும் வள்ளலார் காட்டிய ஒளி வழிபாட்டையும் தமிழ் வழியாய் சுட்டிக்காட்டியத் தமிழை உயிராய்க் கருதுவோம். தமிழை எல்லாவற்றுக்கும் முதன்மை மொழி என்னும் கவியரசர் முடியரசனார் நமக்குத் தமிழின் செழுமையையும் சீர்மையையும் தெளிவுற எடுத்துக் காட்டுகிறார். ‘செந்தமிழே உயிரே நறுந்தேனே செயலினை மூச்சினை உனக்களித்தேனே’ என்ற முடியரசனார் முன்னோடி பாவேந்தர் பாரதிதாசன் வரியைச் சுட்டிக்காட்டி நிறைவு செய்வோம்.

முடியரசன் சிறுகதைத் தொகுப்பில் பெண்ணியச் சிந்தனைகள்

ப.மெர்சி கீர்த்தனா*

முன்னுரை

சமூகத்தில் புரையோடிக் கிடக்கின்ற தீமைகளையும் பழக்கவழக்கங்களையும் படைப்பாளர்கள் தங்கள் படைப்பின் வழியே எடுத்தியம்பியுள்ளனர். அவ்வழியே முடியரசன் தன் படைப்புகளில் திராவிடக் கொள்கை, தாய்மொழிப்பற்று, பெண்கள் விடுதலை, நாட்டுப் பற்று, சமூகப்புரட்சி என்பன. குடும்பம் சமூகம் போன்றவற்றில் பெண்கள் சமத்துவம், விடுதலை பெற்றுத் தங்கள் வாழ்வை சுயமாக நிர்ணயித்துக் கொள்ளும் ஆற்றலை வளர்த்து பெண்கள் மேம்பாடு அடைய வேண்டும் என்பதை தம் படைப்பின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். முடியரசன் அவருடைய சிறுகதைத் தொகுப்பில் பெண்ணியச் சிந்தனை பற்றிய கருத்துக்களை காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.

பெண்ணியச் சிந்தனை

பெண்ணுரிமை குறித்த பெண்ணியச் சிந்தனைகள் உலகமெங்கும் பரவிக் கிடக்கின்றது. பெண்ணியச் சிந்தனை என்பது பெண்கள் பற்றிய கருத்துகளையும் உணர்வுகளையும் இயல்புகளையும் கதைகளின் வாயிலாக வெளிப்படுத்தி அவர்களையுடைய கதாபாத்திரம் வாயிலாக கருத்துகளை வெளிப்படுத்துதல் ஆகும். அக்காலத்தில் பெண்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட முடியாதவாறு சமூகக்கட்டுப்பாடுகளால் ஒடுக்கப்பட்டுள்ளனர். ஆனால் தற்காலத்தில் அச்சூழல் சற்று மாறுபட்டு மரபுகளை உடைத்துப் புதுமைப்பெண்களாகவும் புரட்சிப்பெண்களாகவும் மாற்றம் கொண்டு பெண்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றனர்.

அடக்கப்படுதல்

சங்க காலத்தில் இருந்து சமகாலம் வரை பெண் வளர்க்கப்படவில்லை; வார்க்கப்பட்டு இருக்கிறாள். அடக்குமுறையை எதிர்த்து அத்து மீறும் பெண் பல மாற்றங்களைச் செய்து அடிமைத்தனங்களில் இருந்து விடுதலை பெறுகின்றாள். இன்றும்

* முனைவர் பட்ட ஆய்வாளர், மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி, சிவகங்கை..

பெண்கள் குடும்பம், சமுதாயம் என பல்வேறு சூழலுக்கு ஆட்பட்டு தன் மகிழ்ச்சியை பெரிதாகக் கருதாமல் பிறர் நலன் கருதிச் செயல்படுவதை அறியலாம். அடிமைத்தனத்திற்கு ஆட்பட்டு சுதந்திரத்தோடு செயல்படாமல் மற்றவர்களுடைய வற்புறுத்தலால் அடக்கப்படுதலை கதைகள் வெளிப்படுத்துகிறன. இதனை

அவலங்களைக் கண்டு வெகுண்டெழுந்து

"காத்திருக்கிறேன்
என்முறை வருமென்று"

என்ற கனிமொழியின் கவிதை சான்றாக அமைகின்றது. தனக்காக வாழாமல் ஆணுக்காக வாழ்கின்ற பெண்ணின் மனக்குமுறலை இக்கவிதை காட்டுகின்றது.

'சந்தேக முடிவு' கதையில் பண வசதி கொண்ட முதியவர்க்கு நான்காவது மனைவியாக பதின்மூன்று வயது பெண்ணைத் திருமணம் செய்து வைக்கின்றனர்.

"இனிமேல் என்ன செய்வது என்ற எண்ணத்தாலும் அப்படி நடந்து வந்தாள் .இடையில் மனம் பருவத்தின் இயற்கையால் மாறுபட்டு வருந்தினால் சமாதானத்திற்குத்தான் விதிஎன்ற மந்திரம் இருக்கிறதே அதை உச்சரித்துக் கொள்வாள்" "அந்தப் பெண்ணும் அன்பாக ஒழுங்காக நடந்து வந்தாள். அவள் வீட்டார் செய்த உபதேசத்தாலும் நடந்தது நடந்துவிட்டது இனிஎன்ன செய்வது" (எக்கோவின் காதல்,ப-151) என்ற கருத்து அவளின் பேச இயலா சூழலைக் காட்டுகின்றது.

'காக்கையின் கடிதங்கள்' என்ற கதையில் பெற்றோரின் ஆசை திணிக்கப்பட்டு விருப்பில்லாமல் கமலத்திற்கு நடந்த திருமணம் அவளுக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. இதனைத் தன் அம்மாவிற்கு எழுதும் கடிதத்தில்

"என் வாழ்வெல்லாம் பாழாகத்தானே இப்படிச்செய்தீர்கள்! என்ன சுகத்தைக் கண்டேன் இவரைக் கட்டி கலியாணமாவதற்கு முன் என்னவெல்லாம் நினைத்தேன். அந்த ஆசையெல்லாம் மண்ணாயிற்று. 'வருத்தப்பட வேண்டாம்' என்று எழுதியிருக்கிறீர்கள் அதன்படியே நடந்து கொள்ளுகிறேன்" (எக்கோவின் காதல்,ப-169) என்ற கருத்தும் குடும்பத்திற்காக தங்களை மாற்றிக்கொள்ளும் மனநிலையில் பெண்கள் இருப்பதையும் அடிமைப்பட்ட நிலையில் இருந்து மீள முடியாத சூழலைக் காணமுடிகிறது.

சுதந்திரமின்மை

கொடுப்பதில்லை சுதந்திரம். எடுத்துக் கொள்வதுதான் சுதந்திரம் என்ற கருத்தை மனதில் கொண்டு போராடினால் எளிமையாகக் கிடைத்துவிடும் சுதந்திரம். ஆனால் இக்கதைகளில் பெண்கள் தங்கள் குடும்பங்களிலே போராடிப் பெற இயலாத சூழல் காணப்படுகிறது.

> "பெண்ணடிமை தீரும் மட்டும்
> பேசுந்திருநாட்டில்
> மண்ணடிமை தீர்தல்
> முயற்கொம்பே"

என்ற பாவேந்தர் கூற்று கொண்டு பெண்ணடிமையை நீக்கிப் பெண்களைக் காப்போம் என்ற சிந்தனையோடு செயல்படவேண்டும் .

'அத்தை வீட்டில் பேய்' கதையில் ஊர்மிளா தன் தந்தையின் விருப்பத்தை மறுக்க இயலா சூழல் ஏற்படுகிறது. காரணம் ஊர்மிளாவின் தந்தை பணத்தாசை பிடித்தவன்.

"முடியவே முடியாது. நீ எவ்வளவு சொன்னாலும் நான் சம்மதிக்க மாட்டேன். என் சொத்தென்ன? கௌரவமென்ன? என் பெண்ணைப் போயும் போயும் ஒரு தமிழ் வாத்தியாருக்கா கொடுப்பது... ஒருக்காலும் முடியாது... இன்னொரு முறை இந்தப்பேச்சை என்னிடம் பேசாதே!" (எக்கோவின் காதல், ப-137) என்று ஊர்மிளாவின் தாயிடம் தந்தை கூறுகிறார்.

ஊர்மிளாவின் அத்தான் அவளின் திருமணம் அறிந்து வருந்தி பணத்தாசை கொண்ட தன் மாமாவை மனதிற்குள் நினைத்து வருத்தப்படுகிறான்

"பணப்பேய் இல்லை பணப்பெருச்சாளி அவள் தகப்பன். பண ஆசைபிடித்தவன் அதனால் அப்படிச் செய்து விட்டான் .அதற்கு அவள் என்ன செய்வாள். பணந்தானே உயர்வு தாழ்வை படைக்கிறது. அஃது எந்த வழியில் வந்தாலென்ன" (எக்கோவின் காதல், ப-139)

என்ற இக்கருத்தும் அதேபோல் சந்தேக முடிவு கதையில் மரகதம் பெற்றோர் பணம்படைத்த வயதானவர்க்கு திருமணம் செய்து வைக்கின்றனர்.

"பெண்ணின் அப்பனது பணஆசை தான் அப்படிச் செய்யச்சொல்லிற்று. இன்னும் பார்க்கப்போனால் சமுதாயத்தில் நிறைந்துள்ள முட்டாள்தனந்தான் அடிப்படைக்காரணம். மூன்றாம் மனைவியாக பெற்றோர்கள் கட்டாயப்படுத்தியதால் அவரை மணந்து கொண்டாள். (எக்கோவின் காதல், ப-150)

கடைமுழுக்கு கதையில் தான் விரும்பியவரை திருமணம் செய்யமுடியாமல் தவிக்கும் பெண்ணின் நிலையை, "அவளும் தன் தாயிடம் கூறினாள்... அத்தானைத் தான் மணப்பேன் என்று .அவள் உடன்பட்டாலும் 'மாப்பிள்ளை வீட்டார் ஒத்துக்கொள்ளாததால் நாமே வலியப்போவது அழகில்லை' என்று சொல்லிவிட்டாள். (எக்கோவின் காதல், ப-163) என்ற தாயின் பேச்சால் கிழவனை மணந்து கொள்கிறாள்.

"வேறு வழியின்றிக் கிழவன் ஒருவனுக்கு வாழ்க்கைப் பட்டாள் .ஏழ்மையில் பிறந்த இளம் பெண்கள் இப்படிப் பலியாவதைத்தானே இந்தப் புண்ணிய பூமியில் காண்கிறோம். அவள் மட்டும் விதிவிலக்கா? (எக்கோவின் காதல், ப-164)

என்ற மற்றவர்களின் கருத்து .பல பெண்களுடைய வாழ்க்கை பணத்திற்காகவும் சமுதாயத்திற்காகவும் சீரழிக்கப்படுகின்றது வயது வேறுபாடின்றி பெண்களின் திருமணம் நிச்சியிக்கப்பட்டு பாழ்படுத்தப்படுகின்றது. அவர்களுடைய சுதந்திரம் பணம் என்ற போர்வைக்குள் மூடப்பட்டு பறிக்கப்படுகிறது என்பதைச் சுட்டுகின்றது.

புதுயுகப் பெண்கள்

பெண்கள் காற்றாக புயலாக சூறாவளியாக சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றம் கொள்வது குறிப்பிட்ட இடங்களில் தங்கள் உறுதியான பேச்சால் பல புரட்சிக்கு தலைமை ஏற்று புரட்சிப்பெண்களாக புதுயுகப் பெண்களாக உருமாறுதலை கதைகள் காட்டுகின்றன.

"புதுயுகப்பெண்கள் நாங்கள்
கேள்விகள் கேட்போம்
கொடி பிடிப்போம்
கோஷம் போடுவோம்
வலித்துக் கதறுவோம்
புன்னகையோடு
கீழ்ப்படிவோம்"

பெண்கள் தன் உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்துதல் இக்கவிதையின் கருத்தோடு ஒத்துள்ளதைக் காண முடிகிறது. **'எக்கோவின் காதல் கதையில்'** காதல் கணவன் எக்கோ மக்கள் நீதிக்காக சிறை செல்ல நேரிட புதுயுகப் பெண்ணாகவும் புரட்சிப்பெண்ணாகவும் மாறுகிறாள். தன் கணவனை கைது செய்தவர்களிடம், **"மக்கள் நிலை உயர வேண்டும் என்று கூறியது ஒரு குற்றமா?அதைப்பற்றி தன் கருத்தை எழுதியது குற்றமா?உங்கள் பணியை நான் மேற்கொள்கிறேன். விரைவில் நானும் உங்களை சந்திப்பேன். மக்கள் மன்றம் இருக்கிறது. நீதிதேவன் தீர்ப்பளிக்கட்டும்"** (எக்கோவின் காதல், ப-126) என்று கூறிவிடுகிறாள்.

காக்கையின் கடிதங்கள் கதையில் வள்ளி தன் கணவன் சிறை சென்றதையும் அவருடன் தானும் போராட்டம் செய்து புரட்சி மேற்கொண்டு இருப்பதையும்

"குடும்பத்துடன் சிறைப்பட என்ன குற்றம் செய்திருப்பார்கள் என்று எண்ணலாம். பெருங்குற்றந்தான் செய்தோம். இன்றுள்ள சட்டப்படி அரசாங்கத்தை எதிர்த்தோம் என்று குற்றம் சாட்டப்பட்டோம்" (எக்கோவின் காதல்,ப-172) என்று தன் அம்மாவிடம் கடிதம் வழியாக கூறுகின்ற போது அவளின் புரட்சி வெளிப்படுகின்றுது.

'கிருஷ்ணார்ச்சுன யுத்தம்' கதையில் மதுரம், கிருஷ்ணன் மேல் கொண்ட அன்பால் அநீதிக்கு எதிராக நீதியை நிலைநாட்ட புரட்சிப் பெண்ணாக மாறி பல வீரச் சொல்லம்புகளை வெளிப்படுத்துகிறாள். இதனை,

"பல வீரர்கள் சிந்திய இரத்தத்தால் ஏற்பட்ட சிவப்பு அது .இது மட்டும் போதாது நமது இழிவு நிலை நீங்க இன்னும் சிந்த வேண்டும். இரத்தம் மட்டுமன்று உயிரையுங் கூடத்தான்" (எக்கோவின் காதல், ப-184) என்று மக்களிடம் பேசிய வீரவசனங்கள் உணர்த்துகின்றன.

மகளிர் பண்புகள்

பெண் பலவாறு மாற்றத்திற்கு ஆட்பட்டாலும் தங்களுக்கு உரிய சில இயல்புகள், இயல்பான குணங்கள், உணர்வுகள் என்றும் மாறாமல் இருத்தலையும் அவை மாற்ற இயலாத ஒன்று என்பதையும் அறியும் வகையில் கதைகள் அமைந்துள்ளன.

'எக்கோவின் காதல்' கதையில் எக்கோவை கைது செய்யும் போது மல்லிகா,

"அவன் மார்பிற் சாய்ந்து அலறினாள். அவள் அன்போடு அவளை அணைத்துக் கொண்டான். அவன் தலைமயிர் நெற்றியில் விழுந்து கிடந்தது.கண்கள் ஒளி மங்கியிருந்தன" (எக்கோவின் காதல், ப-125) என்ற கருத்து பெண் வீரமிக்க மனநிலையுடன் இருந்தாலும் சில உணர்வுகளுக்கு அடிமையாதலைக் காட்டுகின்றது. .

'அத்தை வீட்டில் பேய்' என்ற கதையில் மனதில் பல்வேறுப்பட்ட ஆசைகள் எதிர்காலக்கனவுகள் கொண்டு இருக்கும் ஊர்மிளா தன் அத்தான் முருகன் மேல் கொண்ட அன்பால் முருகனை திருமணம் செய்ய எண்ணுகிறாள் ஆனால் பெண்ணுக்கே உரிய நாணத்தால் அவனுடைய அன்பை விருப்பத்தை ஏற்க மறுப்பதுபோல் நடிக்கிறாள் .

'அம்மா வந்து விடுவார்கள் போங்கள்' என்று அவள் கூறும்போது அந்தக் குரலில் கோபம் நாணம் அச்சம் அன்பு எல்லாம் குழைந்திருந்தன (எக்கோவின் காதல், ப-134) என்ற ஊர்மிளாவின் பதில் அவளுடைய ஆசையை காட்டுகின்றது. வெளிப்படையாக கூறாமல் திருமணத்திற்கு சம்மதம் சொல்லாமல் மறைமுகமாகக் கூறுகிறாள்.

"என்னை மணப்பதில் தடையில்லையே? விருப்பந்தானே என்றேன்?" "இல்லை என்று ஒருவரிடமும் சொல்லவில்லையே..." 'தடைஇல்லை என்றா?' 'இல்லை... இல்லை... விருப்பம் இல்லை என்று சொல்லவில்லையே' என்றேன். (எக்கோவின் காதல், ப-135) என்ற ஊர்மிளாவின் பதில் முருகனுடைய கேள்விக்கு மறைமுகமான பதிலாக உள்ளது

கண் மூடிவழக்கம் கதையில் இரண்டாம் மணம் செய்ய எண்ணும் வேலன் அப்பெண்ணிடம் தன் எண்ணத்தை வெளியிடுகிறான். அவளுக்கும் அவன் மீது அன்பு ஏற்படுகின்றது. அதை அவள் வெளிப்படுத்தும் விதம் பெண்ணுக்குரிய மொழி இங்கு காட்டப்பட்டுள்ளது.

உறுதியான மனநிலை

பெண்கள் தான் எடுக்கும் முடிவில் தளர்ந்து போகாமல் தன்னம்பிக்கையோடு போராடி வெற்றி பெற வேண்டும் என்று எண்ணுவதில் மனவலிமை உடையவர்கள் பெண்கள். ஆணுக்குச்

சமமாக எல்லாவற்றிலும் போட்டி போட்டுச் செயல்படும் சூழலில் பெண்கள் இருக்கின்றனர்

எக்கோவின் காதல் கதையில் எக்கோவின் மீது காதல் கொண்ட மல்லிகா தன்னுடைய இலட்சியத்தை முடிவை அடைய போராடி பின் குறிக்கோளை அடைந்துவிடுகிறாள். இதனை

“என்னைப் புறக்கணிக்கீறிர்களா? புறக்கணித்தாலும் நான் பொருட்படுத்தப்போவதில்லை. என்னுடைய குறிக்கோளில் இலட்சியத்தில் நீங்கள் முக்கிய இடம் பெற்று வீட்டீர்கள்” (எக்கோவின் காதல்(ப-17) என்று எக்கோவின் மனதை மாற்றித் திருமணம் செய்து கொள்கிறாள்.

முடிவுரை

முடியரசனுடைய சிறுகதைகளில் மறுமணம், விதவைமணம், பெண்களின் சிக்கல், காதல் பெற்றோரின் ஆசைகள் திணிப்பு, தமிழ்ப்பற்று, பெண்களுக்குரிய பண்புகள் தமிழ்ச்சொற்கள் பயன்பாடு போன்ற பல கருத்துக்களை பெண் பாத்திரங்களின் வழியாக வெளிப்படுத்தியுள்ளார் .பெண்களுடைய சிந்தனைகள் வெளிப்படுத்தும் விதங்களின் வழியாக பெண்களின் தற்கால சூழல் தெரிந்துகொள்ளமுடிகின்றது .பெண்மொழி எவ்வாறு இயங்கியுள்ளது என்பதனை அறிந்து கொள்ள முடியரசனார் பண்புகள் பெரிதும் உதவுகின்றன.

முடியரசனார் பார்வையில் பெரியாரும் அண்ணாவும்

அ.மைக்கேல் குருஸ் *

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களுள் மூத்த தலைமுறைக் கவிஞர் வீறுகவியரசர் முடியரசன் ஆவார். பாரதிதாசன் பரம்பரையில் வாழ்ந்த பொதுவுடைமைக் கவிஞர் அவர். பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனையையும், அறிஞர் அண்ணாவின் அறிவாற்றலையும் அகத்தில் பதியம் செய்தவர்; சாதி, சமயம் எதிர்த்தவர்; சடங்கு சம்பிரதாயங்களை மறுத்தவர்; தமது கவித்துவத்தால் தமிழினம் தழைக்க கவியரங்குகளில் அரங்கேற்றியவர். இவரின் கவிதை நூல்கள் பலவற்றை கவிஞரின் தனயன் பாரிமுடியரசன் வெளியிட்டுள்ளார். இவற்றில் 'ஞாயிறும் திங்களும்' என்ற நூலின் ஆய்வே கட்டுரையின் கருவாக அமைகிறது.

ஈரோடும்.. காஞ்சியும்..

வீறுகவியரசர் முடியரசனார் தந்தை பெரியாரையும், அறிஞர் அண்ணாவையும் வழிகாட்டியாகக் கொண்டவர். இருவரைப் பற்றியும் கவியரங்கில் முழங்கியவர்.

"இருளகற்றத் தோன்றும் சுடரிரண்டு
ஒற்றைச் சுடர்தோன்று ஊரதுதான் ஈரோடு
மற்றைச்சுடர் தோன்றி வாழிடமோ காஞ்சிநகர்"

என்று பாடி தொண்ணூறும், அறுபதும் எந்நாளும் ஓய்வின்றிப் போராடும் நெருப்பு என்று இருவரின் போராட்ட உணர்வுகளை உரைக்கின்றார்.

"வாஞ்சையினால் நம்பெரியார் செப்பனிட்டு
வழியமைக்கப் பாடுபடுந் திறத்தைக் கண்டு
காஞ்சிக்கும் ஈரோட்டுப் பாசறைக்கும்
கற்றறிந்த அண்ணா வழியமைத்தார்"

என்று பெரியார் வழியில் அண்ணா கழகத்தையும், தமிழகத்தையும் காக்கும் வழி சொன்ன விதம் கவிஞருக்குக் கைவந்த கலை சூரியன் மறைந்தாலும் நிலவாய் ஒளிவீசி உலகில் உலாவந்த உத்தமர்கள்

* முனைவர் பட்ட ஆய்வாளர், பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

என்று கவிஞரின் நெஞ்சம் பறைசாற்றுகிறது கவிஞரின் பார்வையில் இருவரையும் தனித்தனியாக ஆய்வோம்.

ஈரோட்டுப் பாசறை

'தொண்டு செய்து பழுத்த பழம்' என்று புரட்சிக் கவிஞரால் புகழப்பெற்ற தந்தை பெரியார் பகுத்தறிவுச் சிந்தனையால் தமிழகத்தை நெறிப்படுத்தியவர்.

"கண்மூடிக் கிடந்தாலும் எங்கட்காகக்
காலமெலாம் உழைத்துழைத்துப் பழுத்தமெய்"

என்றும், ஈரோட்டுப் பாசறையில் பயிற்சி பெற்று எதற்கும் அஞ்சாமல் போர்வீரராய் 'போராட்டம், போராட்டம்' என காலமெல்லாம் வாழ்ந்தவர் என்றும் பெரியாரின் போராட்ட உணர்வைக் கவிஞர் வெளிப்படுத்துகிறார். பெரியாரை நினையாத தமிழன் எவனும் இல்லை. சுயமரியாதை தமிழனுக்கு உரியதென்றால் மாமேதை பெரியாரின் தொண்டு மட்டும் தான் உண்டு என்று கவிஞர் ஆணித்தரமாகக் கூறுகிறார்.

நாதியற்றுக்கிடந்த தமிழினத்தைத் தலைநிமிரச் செய்தவன் பகுத்தறிவுப்பகலவன். பாலை, நெய்தல், முல்லை, குறிஞ்சி நிலங்களில் வாழும் தலைவர்கள் போல் இல்லாமல் பயன் தரும் மருதநிலம் போல் உணர்வு தந்து காக்கும் தலைவன் என்றும், அஞ்சாத சிங்கம், அடங்காத புலி, தூங்காத போர் யானை, கொள்கையுள்ள கரடி, கெஞ்சாத கவரிமான், சோம்பலில்லாக்காளை, முதுமையிலும் துள்ளும் கலைமான் போன்றவர் எம் தந்தை பெரியார் என்று உவமைகள் மூலம் பெரியாரின் தீரத்தைக் கவிஞர் வருணிக்கின்றார்.

சமுதாய மருத்துவன்

'நோயுற்றோனைச் சாகாமல் காப்பதுதான் எனது கொள்கை, அறுவை சிகிச்சை செய்யும் சமுதாய மருத்துவன்' என்று பெரியார் கூறியதை எடுத்துக்காட்டி சமுதாயக் கொடுமைகளை எதிர்த்து நின்ற திறம் பாடுகின்றார் கவிஞர்,

"சாத்திரக் கோத்திரச் சண்டைகள் நாளும்
சாதிகள் மோதிட மண்டைகள் வீழும்
ஆர்த்தெழும் அய்யாவின் போர்க்குரல்...
சாதியும் மதமும் சரிப்படவில்லை
சமுதாயந்தான் உருப்பட வில்லை"

என்று தீண்டாமை, சாதி, மத, பேதமற்ற வாழ்வு வாழ வழிவகுக்கும் வைக்கம் வீரரின் சிந்தனையைக் கவினுற கவிஞர் எடுத்தாளுகின்றார்.

'வேண்டாத குப்பைகளை அழிப்பதற்குத் தேவை நெருப்பு; இருட்டைப் போக்கத் தூண்டுவதும் நெருப்பு; இதுபோல தீண்டாமை, சாதிமதக் குப்பைகளைப் பகுத்தறிவுச் சுடரைப்பாய்ச்சி தொழும்பர்களை ஆக்குகிற நெருப்பாக விளங்குகிற அஞ்சா நெருப்பு' என்று பகலவனின் பகிர்வை கவிஞர் பறைசாற்றுகிறார்.

"வேத புராணங்கள் கோடி- மக்கள்
வீரத்தை மானத்தை மூடினர் பாடி"

என்று மூடப்பழக்க வழக்கங்களைச் சாடும் வெண்தாடி வேந்தரின் கனலுக்குக் கவிஞர் மேலும் தீமூட்டுகிறார்.

அறிஞர் அண்ணாவின் அறிவாற்றல்

தமிழக வரலாற்றில் அறிஞர் அண்ணாவிற்குத் தனிஇடம் உண்டு. தமிழ்ப்பேச்சும், எழுத்தும் இவர் மூச்சாய் இருந்தன. 'கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு என்பது இவர் வாக்கு. தமிழ் நாட்டுக்குப் பேரரணாக நின்றவர் அறிஞர் அண்ணா' என்று கவியரசர் முடியரசனார் வரையறுக்கிறார். மேலும்,

"அறிஞரெனும் சொல்லுக்கே உரியரானார்
அண்ணாஎன் றழைப்பதற்கும் உரியரானார்
பாவேந்தன் பாட்டுக்கோர் அரணாய் நின்றார்
பைந்தமிழ்ப்பண் பாட்டுக்கு அரணாய் நின்றார்"

என்று கவிஞர் அறிஞரின் சிறப்பைக்கண்டுப் பெருமிதம் கொள்கிறார்.

"குற்றால மலைமுகடும் நாணும் வண்ணம்
கொட்டுகிற சொல்லருவி, எங்கள் அண்ணா"

மேடைப்பேச்சில் தனக்கெனத் தனியிடத்தைப் பிடித்த அறிஞர் அண்ணா நகைச்சுவை மற்றும் எதுகை, மோனைப் பேச்சால் அனைவரையும் கவரும் ஆற்றல் மிக்கவர். நாடகம், திரைப்படம், புதினம், சிறுகதை, கட்டுரை எனப் பரிணாமங்களில் படைப்புகளைப் படைத்தவர். தமிழ்ப்பற்றால் மொழிகாத்தவர். இந்தி எதிர்ப்புக்குக் குரல் கொடுத்துப்

போராடியவர் என்று அண்ணாவின் ஆற்றலைக் கவியரங்கப் பாடல்கள் மூலம் கவிஞர் பாராட்டியுள்ளார்.

அண்ணாவின் பண்புகள்

சிறையிலிருந்து அண்ணா வெளிவரும் போது அவரை வரவேற்கும் விதமாய் முடியரசனார் அவரின் பண்புகளைப் பாடுகிறார்.

அகிலம் போற்றும் அறிஞன், அண்ணன், பகைவர்க்கு இரங்கும் பண்பினன், சிங்கம், வீரன், தீரன், படைஞன், கலைஞன், அருள்பொழியும் விழியினன், அறமுரைக்கும் மொழியினன், மதியினன், கருணை நெஞ்சினன், அஞ்சாதவன், எதையும் தாங்கும் இதயமுடையவ்வன் என்று உள்ளத்தில் எழுந்த சொல்மலர்களால் அறிஞருக்குக் கவிஞர் பாமாலை சூட்டுகிறார்.

தாய்மொழிக்காவலர் அண்ணா

"தமிழ்மொழியின் தவமகனை நாடு காக்கும்
தலைமகனைத் தனிமகனைக் காஞ்சி தந்த
அமிழ்தனைய பெருமகனைப் புகழ்ந்து பாட
அறியாத நாவென்ன நாவே"

என்று கவிஞர் அறிஞரின் தமிழ்ச் சிந்தனையைப் பாராட்டி மகிழ்கிறார். 'தமிழுக்குத் தீங்கு என்று ஒன்று வந்துவிட்டால் அரச பதவியை விட்டு விட்டு தமிழுக்குப் போர் செய்வோம்' என்று அண்ணா கூறியதைக் கவியாக்கித் தந்தவர் கவிஞர். இந்தியைத் திணித்தால் மக்கள் போர் முரசு கொட்டுவர் குருதி சிந்திப்போர் புரிவர் என்றும் எடுத்தியம்புகிறார். அண்ணாவின் தமிழ்ப்பற்றும், தமிழ்ப்பேச்சும் தன்னைக் கவர்ந்ததாகவும், எழில் மொழிக்காவலர் என்றும் கவிஞர் வியப்படைகிறார்.

திருத்தலங்கள் மூன்று

தந்தை பெரியார், 'திருத்தலங்கள் திருக்கோயில் வேண்டாம்' என்று முழங்கியவர். இதை ஏற்றுக் கொண்ட கவிஞர் முடியரசனார் தன்மான இயக்கத்தார்க்குத் திருத்தலங்கள் மூன்று என இயம்புகிறார்.

"பேரோடு பெற்றிலங்கும் தமிழ்மொழிக்குப்
பேரிடர்கள் வராமல் தடுத்துக் காக்க
ஈரோடு காஞ்சிபுரம் ஆரூர் என்னும்
இம்மூன்றும் நம்மவர்க்குத் தலங்கள் அன்றோ?"

என்று தந்தைப் பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகியோர் பிறந்த ஊர்களைத் தமிழர்களின் மூன்று திருத்தலங்களாக உவமிக்கின்றார்.

"ஈரோட்டுப் பள்ளியிலே ஏடெடுத்துக் கற்றுணர்ந்து
பாராட்டுங் காஞ்சிபுரப் பல்கலைசேர் மன்றத்தில்
கற்றுத் தெளிந்து கலைஞர் எனும் பட்டம்
பெற்றுத் திகழும் பெருமை மிகவுடையார்"

என்று கலைஞர் கருணாநிதிக்கு கவித்துவம் சூட்டுகிறார் கவிஞர். கழகத்தை கட்டிக்காத்து தன்மானக் கொள்கைகளை கடைபிடித்து வந்தவர் என்று தெளிவுபடுத்துகிறார்.

இறுதியாக, வீறுகவியரசர் முடியரசனார் தமது புலமைத் திறத்தால் தமிழ்மொழிக்குப் பெரும் மகுடம் சூட்டியுள்ளார். பெரியாரின் பகுத்தறிவையும் அறிஞர் அண்ணாவின் மொழியாற்றலையும் தமது வாழ்வியலில் கடைப்பிடித்தவர் வீறுகவியரசர். சாதி மறுப்புத் திருமணம் செய்து சமுதாய மறுமலர்ச்சி கண்டவர். முற்போக்குச் சிந்தனைகளால் கவிகள் படைத்து நானிலம் வாழ புதுயுகம் படைத்தவர். தாய்மொழி காத்த தனிப்பெரும் புலவர்களில் நம் கவிஞரின் பங்கு மேலானதாகும். வாழ்த்தரங்கம், கவியரங்கம், கவிமடல்கள் மூலம் ஈரோட்டுப் பெரியார், காஞ்சிக்கதிரவன், ஆரூர் கலைஞர் ஆகியோரின் புகழுடம்பு அவனியில் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பது வீறுகவியரசர் முடியரசனாரின் கவிதைகள் மூலம் அறியமுடிகின்றது. வீறுகவியரசரின் கவிதைகளை படிக்கப் படிக்க நறுந்தேன் கலந்த அமிழ்தமாய் விளங்குகிறது என்பதே உண்மை.

சங்க இலக்கியங்களும் முடியரசனாரும்

முனைவர் ரெத்தினம் சந்திரமோகன் *

முன்னுரை

கவியரசர் முடியரசனார் தமிழ்மொழியை மூச்சாகவும் பேச்சாகவும் எழுத்தாகவும் கொண்டவர். அற்றைத் தமிழரின் நயத்தக்க நாகரீகம், சங்க இலக்கியங்களில் மிளிர்கின்ற வாழ்வியல் கூறுகளின் சிறப்புகள் போன்றவை அவரது வாழ்வியலில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்தாக்கம் அவரது படைப்புகள் எங்கும் தென்படுகின்றது. 2000 ஆண்டுகளாக உயிர்ப்புடன் இருக்கும் சங்க இலக்கியத் தனிக் கவிதைகள் போல் அவரது "ஆறு" என்னும் படைப்புத் திகழ்கின்றது என்பார் தமிழண்ணல். ஆறு ஓடுகிறது. காவிரியின் சிலம்பொலியைப் பாடும் இளங்கோ போல் அழகான இளம் பெண்ணை ஆறாய் உருவகித்து முடியரசனார் இயற்றிய பாடல் படித்து இன்புறத்தக்கது.

ஓடும் நீரில் தாமரை பூக்காது என்ற உண்மையை சேர்த்து "..........தன்பால் செந்தாமரை இன்றி முகம் காட்ட முடியா ஆறு மாள்வதற்கு கடல் நோக்கி ஓடுதல் பார்...." என்ற வரிகள் சங்க இலக்கியத்திற்கு ஒப்பானவை. முடியரசன் சங்க இலக்கிய காலத்திலே வாழ்வதாக கற்பனைகொண்டு இன்ப கவிதைகள் பல யாத்தார். கோழிக்குஞ்சுகள் கவிஞருக்குத் தாமரையாய் காட்சி தருகின்றன.

"கால்முளைத்த தாமரையின் மொக்குள்போலக்
காட்சிதரும் குஞ்சுகள்"

என்று உவமிப்பார். நாட்டின் வளத்தைப் பாடுவது சங்க இலக்கிய மரபு. அது தொற்றிய அருமையான தமிழ்நாட்டின் இயற்கை வளங்களைப் பாடிய கவிதைகள் ஏராளம். சங்க இலக்கியம் ஒரு வாழைத்தோட்டம் என்பார் மு.வ. அதில் தோய்ந்து மதுரகனிகளை உண்டு ருசித்தவர்களில் பாரதி, பாரதிதாசன், வ.சு.ப, முடியரசனார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். எனவே அவர்கள் தங்கள் படைப்புகளில் தாங்கள் சுவைத்த தருணங்களை நினைக்கும் வகையில் பரிதி, நிலா,

* ஆலோசகர், அகரம் பன்னாட்டு மழலையர் பள்ளி, காரைக்குடி.

இயற்கை மற்றும் வளங்களை பாடியுள்ளனர். அவற்றில் சிலவற்றை இங்கு காண்போம்.

ஒன்றே குலம்

கவியரசர் முடியரசர் தமிழனின் பண்டைய பெருமையை சங்க காலம் தொட்டு பாடினாலும், சாதி சுமக்கும் இன்றைய தமிழனின் அவலம் செயற்கையாய் வேதங்களில் இருந்து, பிற்பட்ட காலத்தில் பெறப்பட்டது என்று திடமாக நம்பினார். அதை தன் கவிதைகளில் உணர்ச்சி பொங்கக் கலந்தார். அவரது வீரகவிதைகளில் காதல். வீரம், சாதியொழிப்பு, இயற்கை அனைத்தும் கைகோர்த்தன. அத்தகைய கவிதைகள் அவரை வீறு கவியாகவும், தமிழன் நிலை கண்டு கொதிக்கும் வேங்கையாகவும், தமிழை நேசிக்கும் நல்அன்னையாகவும் அடையாளம் காட்டின.

"ஒன்றே குலமென்றும் ஒருவனே கடவுளென்றும்
நன்றே புரிந்து நலம் பெற்றோம் முன்னாளில்"
என்று சங்க காலத்தை புகழ்ந்து "முன்னாளில்"

என்று குறிப்பிடுவார். குாவியப்பாவை காப்பியத்தில் சங்க இலக்கியம் என்றே தலைப்பிட்டு ஒரு கவிதையுண்டு.

**"சாற்றி வளர்த்திடுவாய் நம் சங்க இலக்கிய பெருமையெல்லாம்
அகம் புறம் கலியுடன் நற்றிணை சேரர்
அடல்பகர் பத்தொடு ஐங்குறுநூறு
தரும் பரிபாடல் குறுந்தொகை எட்டு
தண்தமிழ் காப்பியம் இவையெல்லாம் தொட்டு"**

என்று வரும். சங்க இலக்கிய காலங்களில் சாதியில்லை. "தமிழனின் இழிகண்டுபிடிப்பு அல்ல சாதி", என்ற செய்தி அவர் இல்லத் திருமணங்களின் செய்தியாகவும் மாறிப் போயிற்று. அவரது உயிர் நண்பர்களான ஞானசேகரன், வ.சுப, முத்துகணேசனார், மீனவன், தமிழண்ணல் அனைவரும் கவிஞரின் சாதி மறுப்பு கவிதைகளை நேரடியாய் கவியரங்கில் ருசித்தவர்கள். சாதியின் கொடுமைகள் கோலோச்ச துவங்கிய சுதந்திர இந்தியாவில் மனிதர்கள் குறிப்பாக சாதி சுமக்கும் தமிழர்களின் மடமையை எண்ணி பாரதியின் "நெஞ்சு பொறுக்குதில்லையே...." என்ற கவிதையை போன்றே, "நெஞ்சு பொறுக்கவில்லை" என்ற கவிதைத் தொகுப்பை யாத்தார்.

"சாதி சமயச் சழக்குகள் இல்லை
சகலரும் உறவினர் பெறுமதி சேரும்
தீதெனும் அடிமைச் சிறுமைகள் மாறும்
தெளிவுடன் அறிவும் சிந்தனை கூறும் "

தற்கால இழிமை

இக்கவிதைகளில் தற்கால இழிமைகளான கையூட்டு பெறல், வேலை நேரத்தில் வீண் பொழுது போக்கல், கட்சிகள் செய்யும் அரசியலில் முதிர்ச்சியின்மை, ஆள்பவர் தன் நிலை பிறழ்தல் என்று பட்டியலிட்டுச் சாடினார். காவியப்பாவை 27 ஓதிக்கெட்டவன் என்று ஒரு பாடல். அதில் பாடுகின்றார்,

"யாதும் ஊரே யாவரும் கேளிரென்று
ஓதிய மணிமொழிக்கு உரியவன் தமிழன்
என்னும் இவனை கேளிரென்று எண்ணும்
மனிதனை மாநிலத்தில் யாண்டும் காண்கிலேன்.
இவன் வாழ் வூரை எனதூர் என்று
தவறியும் கை தருவாரில்லை ....
தீதும் நன்றும் பிறர் தர வாரா என்று
ஓதும் இவனே யாவும் பிறரால்
வருவன என்றே வாழ்நாள் எல்லாம்
தெருவெல்லாம் சுற்றித் திரிதல் கண்டேன்...

என்று கணியன் பூங்குன்றனார் வரி ஒவ்வொன்றுக்கும் விளக்கம் கொடுத்து இன்றைய இழிநிலை எடுத்து உரைப்பார். "மனிதனைத் தேடுகின்றேன்" என்ற கவிதை தொகுப்பில் பல அறக்கருத்துக்களை எடுத்துரைப்பார். அப்போது "குறைவறியா அறநூல்கள்" என்று சங்க நூல்களைப் பற்றிக் குறிப்பிடுவார்.

"மற்றவற்கே உரியதனைக் கவர்வதற்கு
மனத்தாலே நினைத்தாலே கவர்வதைப்போல்
குற்றமெனக் கருதுகின்ற உணர்வு வேண்டும்
குறைவறியா அறநூல்கள் உரைத்தவற்றைக்
கற்றபடி கடைப்பிடித்து நடத்தல் வேண்டும்".

(அந்தோ அரசியலே, முடியரசன் கவிதைகள், பக்கம் 220)

"அறமுரைக்கும் பெருநூல்கள் நமது நாட்டில்
ஆயிரங்கள் உண்டென்பர் ஆனால் அந்த

அறமனைத்தும் நூல்களுக்குள் அடக்கமன்றி
ஆறறிவு படைத்தவர்பால் அரும்பவில்லை"

என்று அவர் பாடியது தமிழனின் வாழ்வியல் அறங்களைப் பாடிய நூல்களில் உள்ள சிந்தனைகள் ஏட்டுச் சுரைக்காயாய்ப் போனதே என்ற வலியில்தானே?. (நல்ல உலகமடா, முடியரசன் கவிதைகள், ப.226) என்ற கவிதையில் சங்க கால நினைவலைகளுடன் பாடுகின்றார், திரிகூடராசப்பக் கவிராயரையும், பாரதியையும், பாரதிதாசனையும் களித்துப்பாடும் அழகின் சிரிப்பையும் நம் மனக்கண்முன் இணைப்பார் முடியரசனார்.

"விண்ணைத் தொட நிமிர்ந்த விந்தைப் பெருமலை என்
கண்ணிற் புகுந்து கருத்தில் இடம் பெறவே
வண்ண எழிலெல்லாம் வாரிப்பருக மனம்
எண்ணியதால் ஆங்கோர் எழில் முகிலா மாறி மிக
ஓங்கும் மலைமுகட்டில் உசிப்பெ று வெளியில்
தேங்கித் தவழ்ந்து திரிந்து விளையாடி வந்தேன்"
"பூத்துக் குலுங்கும் பொலிவுடைய மாஞ்சோலை
பார்த்துக் களித்து அங்குப் பாடும் குயிலானேன்
கேளென்று வந்த கிளைக்குயிலைக் கூடி நின்று
நாளெல்லாம் நல்ல தமிழ் பாடிக்கொண்டிருந்தேன்
முற்றி முதிர் கனிகள் மொய்த்திருக்கக் கண்டதனால்
பற்றி அவையுண்ண பாய்ந்துவரும் சிற்றணிலாய்
மாறிக்கிளை தொறும் மாங்கனிகள் துய்ப்பதற்கு
ஏறிக்குதித்து அங்கே எக்களித்து நான் திரிந்தேன்"

"முன்னறிவிப்பு" (முடியரசன் கவிதைகள் பக்கம்.227) என்ற கவிதை குடும்பக்கட்டுப்பாடு பற்றியது. அதில் திருக்குறளை இணைக்கும் முடியரசர்,

"மக்கள் மெய் தீண்டல் உடலுக்கின்பம்
மற்றவர் தம் மொழி கேட்டல் காதுக்கின்பம்
இக்குறளின் பொருள் இனிக்கும் செய்தி சொன்னாய்
ஏந்திழையே வாழிய நீ: எனினும் ஒன்றை
அக்கறையோடு உனக்குரைத்தல் கடமையாகும்
அங்கே சுவரெல்லாம் முக்கோணங்கள்
அக்குறிதான் நம் குடும்பநலத்தைக் காக்கும்
அறிவிப்பாம் அளவறிந்து பெறுதல் வேண்டும்"

அது போல் "சமுதாய வீதியில்" என்ற கவிதை (முடியரசன் கவிதைகள், ப.231) காலத்தால் பிற்பட்ட திருவாசகத்தையும் சங்க காலத்தையும் வெண்தாடி வேந்தரவர் பெரியார் மேடைக்கு வந்ததையும் ஒருசேர நினைவூட்டும்.

"மண் சுமந்த தோள்களிலே வீரம்கொண்ட
மாமன்னர் வழிவந்தோர் சங்கம் ஏறிப்
பண்சுமந்த பாடலினால் உலகை ஆண்ட
பாமன்னர் வழிவந்தோர் தமிழ் மாந்தர்
கண் சுமந்து வந்தாலும் பார்வைகெட்டுக்
கால் இடறி வீழ்ந்தனரே என்று நெஞ்சில்
புண் சுமந்து நொந்து எழுந்து புரட்சிசெய்யப்
பொங்கி எழுந்து அறியேற்றைப் போல வந்தார்
வெண்தாடி வேந்தரவர்"......

தமிழ் முழக்கம் என்ற கவிதைத் தொகுதியில்

"சங்கத்தார் நெஞ்சமெனும் தண் பொழிலிற் கூடிமனம்
பொங்கத் தான் ஆடிவரும் புள்ளி எழில் மயிலே
பாவாணர் நாவில் பழகிப்பழகி நின்று
கூவாமல் கூவிக் குளிர்விக்கும் பூங்குயிலே...
எப்போதும் நன்றுரைத்து எம்மைப் புரப்பதற்கு
முப்பாலைத்தந்து முறைப்படுத்தும் நற்றாயே..."

இப்பாடலில் ஒவ்வொரு நூலின் பெயரையும் பாடுவார். சங்கப் புலவர் பெருமக்களையும் நினைவூட்டுவார். சிலம்பு மேகலை என்று ஒவ்வொன்றாய் விளித்து... புகழேந்தி ஒட்டக்கூத்தன் கலிங்கத்துப் பரணி, குறவஞ்சி அனைத்தையும் வரிசைப்படுத்தி புகழாரம் சூட்டுவார். இது போன்றே பூங்கொடி காப்பியத்திலும் குறிப்பிடுவார். தென்னாட்டுக்கலைகள் பற்றிய பாடலிலும் இலக்கியக்கலையில் "அகம் புறம்" கண்ட சங்க இலக்கியம் நினைவில் கொள்வார். நெஞ்சிற் பூத்தவையில், (ப.274)

"சாதல் தரும் வீரத்தை ஆதல் வரும் காதலினை
ஓதும் புறமென்னும் உள்ளும் அகம் என்றும்
கண்டான் கனி தமிழில் விண்டான் உலகதனில்
கொண்டான் பிறர் பெருமை எல்லாம்"

என்று பாடிடுவார்.

முடிவுரை

முடியரசனார் கவிதைகளில் சங்க கால இலக்கியங்களின் சாயல்கள் இருப்பதை இதுகாறும் கண்டோம். அவரது கவிதைகளில், காப்பியங்களில் சங்க இலக்கியங்களைப் போற்றும், சுட்டும் இடங்கள் ஏராளம். அவற்றில் ஒரு சிலவற்றை மட்டுமே இங்கு கண்டோம். இது போன்ற தாக்கங்கள் பாரதி, பாரதிதாசன் ஆகியோர் படைப்புகளிலும் காணலாம். குறிப்பாக உயர்ந்த கருத்துக்களை, சாதி பேத மறுப்புகளை கொண்ட சங்க இலக்கியம் இயற்கைக் கவிஞரான முடியரசனாரிடம் கவி ஆற்றலை வெளிக்கொணரவும் அவரது படைப்புகளில் உயர் சிந்தனைகள் அமைவதற்கும், வாழ்வில் சாதி மறுப்பினை சத்தியமாகக் கொண்டமைக்கும் காரணமாக அமைந்தது என்றால் மிகையாகாது.

முடியரசனாரின் கடித இலக்கியம்

ஜ.ரெஜினா பேகம் *

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் 'பா' உலகில் புதுமை பூத்த மரபுக் கவிஞர் முடியரசனார். தன்னலம் கருதாது தமிழ் நலம் கருதியவர். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, போன்ற பெருமக்களின் கொள்கையைப் பின்பற்றியவராக கவிதை, காப்பியம், சிறுகதை, கட்டுரை, கடிதஇலக்கியம் என இருபத்தைந்து நூல்களை அளித்துள்ளார். இவர் இயற்றிய நூல்களுள் ஒன்றான 'அன்புள்ள பாண்டியனுக்கு' என்னும் கடித இலக்கிய நூலில் உரைக்கும் பதினைந்து கட்டுரைகளில் உள்ள செய்திகளை விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிறுவர்கள்

சிறுவயது முதலே ஒழுக்கத்துடன் குழந்தைகளை வளர்த்தல் பெற்றோரின் கடமையாகும். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்ற வரிகளுக்கிணங்க சிறுவயது முதல் ஒழுக்கத்துடன் வளர்க்கப்படும் பிள்ளைகள் தம் வாழ்வில் சிறந்தவர்களாக உயர்வர் என்பதை மூன்று கட்டுரைகளில் கூறியுள்ளார்.

உலகில் உள்ள உயிர்கள் அனைத்தையும் சிறந்து வாழ வழி வகுக்கும் ஒரே திறவுகோல் ஒழுக்கமாகும். ஒருவனுக்கு உயிரைவிடச் சிறந்ததாகக் கருதப்படுவதும், அறிவின் பயனாகத் திகழ்வதும், அனைத்துச் சிறப்புகளையும் தரவல்லதும் ஒழுக்கமாகும்.

பிறருக்குத் தீமை செய்தல், பொய், திருட்டு, பொறாமை, புறங்கூறுதல் ஆகியன தீயொழுக்கம் என்றும், உண்மை பேசுதல், பெற்றோரைப் பேணுதல். வைகறை துயிலெழல், எழுந்தவுடன் தம் கடமைகளைச் செய்தல் ஆகியன நல்லொழுக்கம் எனவும் பாகுபடுத்தப்பட்டுள்ளன. ஒருவனுக்கு நன்மையைத் தரக்கூடியது நல்லொழுக்கமாகும். ஆதலால் வாழ்வில் உயர்ந்து , சிறந்து வாழ துன்பத்தைத் தரும் தீயொழுக்கத்தை விட்டொழித்து

---

* முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்ப் பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி..

நல்லொழுக்கத்தைக் கடைபிடிக்குமாறு 'ஒழுக்கம் கைக்கொள்' என்ற கட்டுரையில் சிறியவர்களை வலியுறுத்துகின்றார்.

மாணவர்கள்

கல்வி கற்கும் ஒவ்வொருவரும் சிறியவர், பெரியவர் என்ற பாகுபாடின்றி மாணவர்கள் என்றே அழைக்கப்படுவர். ஒவ்வொரு மாணவரும் வாழ்வில் சிறந்து விளங்க உறுதுணையாக இருக்க வேண்டியது ஆசிரியர்கள் மட்டுமின்றி பெற்றோரின் கடமையாகும். என்பதை ஏழு கட்டுரையின் வழி கூறியுள்ளார்.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே"

ஈன்றெடுத்த தாய்க்கு ஈடாகப் பிறந்த நாடு போற்றப்படுவதால் தாயகம் என அழைக்கப்படுகிறது. அக்காலத்தில் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகள் நாட்டைக் காக்கும் போரில் 'விழுப்புண்' பட்டு இறப்பதையே பெரிதும் விரும்புவர். அதைப் போன்று தம் பிள்ளையை சான்றோனாக்குதல், அனைவரின் முன் உயர்ந்த நிலையில் இருக்க வழி நடத்தல் பெற்றோருடைய கடமையாகும். அதைப் போலவே இவனை மகனாகப் பெற இவன் பெற்றோர் என்ன தவம் செய்தனரோ? என உலகோர் போற்ற வியந்துரைக்கும் வண்ணம் நடந்து கொள்வது பிள்ளைகளின் கடமையாகும் என்ற கருத்தை 'நா நலம் நாடு' எனும் கட்டுரையில் மாணாக்கருக்குக் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலில் இருப்பவர் மட்டுமே நாட்டின் மேல் அக்கறை காட்ட வேண்டுமென்பதில்லை. பள்ளியிற் பயிலும் மாணவர்களும் கவனம் செலுத்த வேண்டும் என்கின்றார். பள்ளிக்கூடங்களில் பொருட்களை, கரும்பலகையை உடைப்பது, சுவரைச் சேதம் செய்வது, பொதுச் சொத்துக்களை, நாட்டுடைமைகளைப் பாழ்படுத்தும் செயல்களைச் செய்தல் கூடாது என்பதைத்'தாயகம் காத்து நில்' கட்டுரையின் வழி மாணவர்களுக்கான நாட்டுப்பற்றாகக் கூறுகின்றார்.

வாழ்வு, செல்வம், இன்பம் முதலிய நலங்களைத் தன்னைப் போல் பிறரும் பெற வேண்டும் என்ற எண்ணமே ஒப்புரவாகக் கருதப்படுகிறது. உலகுக்கு உதவியாக விளங்குந் தொழில் வேளாண்மை என்பதால் ஒப்புரவை வேளாண்மை எனவும்

குறிப்பிடுகின்றார். மழை கைம்மாறு கருதாமல் உலகுக்கு உதவுவதைப் போல நாமும் கைம்மாறு கருதாமல் பிறருக்கு உதவி செய்தல் வேண்டும் என்ற கருத்தை 'ஒப்புரவொழுகு' என்ற கட்டுரையில் கூறியுள்ளார்.

உலகில் உள்ள உயிர்கள் அனைத்தையும் மகிழ்ச்சியுடன் வாழ வழிவகுக்கும் கருவி அன்பாகும். அந்த அன்பின் மொத்த வடிவம் தாயாகும். அம்மா என்ற வார்த்தை அனைத்து உயிர்க்கும் பொதுவானதைப் போல, அன்பு என்பதும் அனைத்து உயிர்க்கும் பொதுவானதாகக் கருதப்படுகிறது. பெற்றோர், உற்றார், உடன்பிறந்தவர்களிடம் தோன்றுவதை அன்பு என்றும், தொடர்பில்லாதவர் மற்றும் அஃறிணையான பிற உயிர்களிடத்தில் தோன்றுவதை அருள் எனவும் பாகுபடுத்தியுள்ளார். இதனையே,

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை"

என்பார் வள்ளுவர். உலகில் தன்னலம் கருதாது பொதுநலம் பேணவேண்டும் என்றால், அனைத்து உயிர்களிடத்திலும் அன்புடன் பழகும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என 'அன்பாய்இரு' என்ற கட்டுரையின் மூலம் மாணாக்கருக்கு அறிவுரை கூறுகின்றார்.

ஒருவன் கற்கும் நூல் நல்ல பண்பையும் அறிவையும் தரவல்லவனாக இருக்க வேண்டும். நூலைக் கற்கும்போது கருத்தை ஆழமாக உணர்ந்து படித்தல் வேண்டும் எனவும், ஒருவன் தம் வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டுமெனில், கல்விக் கூடத்தைவிட்டு வெளியேறிய பிறகும், நூலைப் படிக்கும் பழக்கத்தை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும் என்றும் 'ஓதுவதொழியேல்' என்னும் கட்டுரையின் வழி மாணாக்கர்களுக்கு வலியுறுத்துகின்றார்.

மலர்கள் பல வண்ணமாக இருந்தாலும் நறுமணம் இல்லையென்றால் மக்கள் விரும்பிச் சூடாததைப் போல, பட்டங்களும், கல்வியும் அதிக அளவு பெற்றிருந்தாலும் சொல்வன்மை இல்லாரை உலகம் மதிக்காது என்று உரைக்கின்றார். சொல்வன்மை என்பது அவையோர் இளைஞரா?, முதியவரா? கற்றவரா?,கல்லாதவரா? என்பதையறிந்து அவரவர்க்கு ஏற்றாற்போல தன் கருத்துக்களைக் கூற வேண்டும் என்பதையே அவையறிந்து பேசுதல் என்று

நாநலம்நாடு' என்ற கட்டுரையில் மாணாக்கருக்கு விளக்கம் தருகின்றார்.

"அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்து தூய்மை யவர்"

என்று வள்ளுவம் கூறுவது இவ்விடத்து ஒப்புநோக்கத்தக்கது. ஒருவனுக்கு கல்வியும், புகழும் வளர வளர தம்மையறியாமலேயே செருக்குணர்வு வளரத் தொடங்கும். 'கள்ளிச்செடியை வளரும்போதே பிடுங்கி எறிதல் வேண்டும்' என்பதற்கேற்ப செருக்குணர்வை வளரவிடாமல் தடுத்தல் வேண்டும் என்ற கருத்தை 'பணிவுடன் பழகு' என்னும் கட்டுரையில் வலியுறுத்துகின்றார்.

இளைஞர்கள்

இளைஞர்கள் தம் வாழ்வில் நடந்துகொள்ளும் முறையை இரண்டு கட்டுரைகளில் டுத்துரைத்துள்ளார். ஒருவனது வாழ்க்கையில் ஒழுக்கம் இல்லையெனில் அவன் குலமே சீர்குலைந்து விடும். கல்வி, செல்வம், குடிப்பிறப்பு முதலியவற்றால் மலையைப் போன்ற உயர்ச்சியைப் பெற்றிருந்தாலும் அவனைத் தீயவழியில் கொண்டு செல்வதும், தீய குணத்தை தர வல்லதும் சோம்பேறித்தனத்தின் பண்பாகக் கூறப்படுகின்றன. ஒருவன் வாழ்வில் அடையும் துன்பங்களுக்கு 'விதி' எனப் பெயரிடக் கூடாது என்று கூறுகின்றார்.

"முயற்சி திருவினையாக்கும் முயற்சியின்மை
இன்மை புகுத்தி விடும்"

ஒருவன் முயற்சியால் மட்டுமே அருஞ்செயலையும் செய்து முடிக்க இயலும். முயற்சியின்றி இருத்தல் தோல்விகளைச் கொடுப்பது மட்டுமின்றி எதிர்காலத்தை காரிருள் சூழப்பட்ட இருட்டாக்கிவிடும். ஆகவே ஐந்தறிவு கொண்ட விலங்கான யானை தன் பாகனையே கொன்று விடுவது போன்று, சோம்பேறித்தனம் தன் வாழ்க்கையை அழித்துவிடும் என்பதால், மாணாக்கர் மற்றும் இளைஞர்கள் சோம்பலை வாழ்வில் நீக்கி, முயன்று எதிலும் வெற்றி பெற எண்ணம் கொள்ள வேண்டும் என்றும், இளமைப் பருவம் என்பது அருமையான பருவம். அப்பருவத்தைப் பயன்படுத்தும் முறையில் பயன்படுத்தினால் மேன்மை எய்துவது

உறுதி என்றும் இளைஞர்களுக்கு 'சோம்பித் திரியேல்' என்னும் கட்டுரையில் எடுத்தியம்புகின்றார்.

நல்ல பண்புடையவருடன் பழகும் நட்பு என்பது நல்ல நூலைக் கற்கும் பொழுது கிடைக்கும் இன்பத்திற்குச் சமமாகக் கருதப்படுகிறது. பயன் கருதி வருவது நட்பன்று. பயன் கருதாது தமக்கு துன்ப காலத்திலும் துணை நிற்கும் நட்பே உண்மையானது என்று கூறுகின்றார். எவரிடமும் சொல்ல இயலாத மன உணர்வுகளை வெளிப்படையாகக் கலந்துறவாட உதவுவதும், நாம் அறிந்தும் அறியாமலும் செய்யும் தவறுகளைத் திருத்தி நல்வழிப்படுத்துவதும் நட்பு என்பதால், ஒருவரிடம் நட்பு கொள்ளுமுன் அவருடைய இயல்புகளை ஆராய்ந்தறிதல் வேண்டும். இல்லையென்றால் கேடு பயப்பது மட்டுமின்றி வாழ்வில் செத்துமடியும் நிலைக்குக் கொண்டு சென்று விடும் என்று நட்பைத் தேர்ந்தெடுக்கும் முறையை விளக்குகின்றார்.

"ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாய்ந் துயரம் தரும்"

என்ற குறள் நட்பாராய்தல் முறையை விளக்குவதாக அமைந்துள்ளன. ஆகவே வாழ்வில் முக்கியப் பங்கு வகிக்கும் நட்பை கவனத்துடன் ஆராய்ந்து பெறுதல் வேண்டும் என்ற கருத்தை 'இணக்கம் அறிந்து இணங்கு' என்ற கட்டுரையின் மூலம் இளைஞர்களுக்கு வலியுறுத்துகின்றார்.

பெண்கள்

பெண்கள் தங்கள் வாழ்க்கையில் பின்பற்றத்தக்கனவற்றுள் முக்கியமானவையாகக் கருதப்படுவது அடக்கமாகும். பணிவு என்பதற்கு அடக்கம் என்று பொருள்படும். அவ்வடக்கம் மெய்யடக்கம், நாவடக்கம், மனவடக்கம் எனப் பாகுபடும். மனிதன் தம் வாழ்வில் தீங்கின்றி வாழ ஐம்புலன்களையும் அடக்கி நல்வழிப்படுத்தல் வேண்டும் என்பதை மெய்யடக்கமாகக் கூறுகின்றார்.

"அகத்தின் அழகு முகத்தில் தெரிவது போன்று
அகத்தின்அசிங்கம் மானிடனின் நாவில் தெரிகிறது"

என்று ரா.ப.அரூஸ் என்பவர் குறிப்பிட்டுள்ளார். ஆகவே தீமை செய்யும் பொய், கடுஞ்சொல் கூறாது, நாவைக் காத்துக் கொள்வதில் கவனம்

செலுத்த வேண்டுமென்று 'பணிவுடன் பழகு' என்னும் கட்டுரையில் பெண்களுக்கு அறிவுரை கூறுகின்றார்.

பெரியவர்கள்

வீட்டில் பெரியவர்களின் வழியையே சிறுவர்கள் பின்பற்றுவர் என்பதால், பெரியவர்கள் நல்லொழுக்கத்துடன் வாழ்தல் வேண்டும் என்றும், பெற்றோர், சிறுவயது முதலே நற்கருத்துக்களை சொல்லி நல்வழிப்பட வளர்த்தல் வேண்டும் என்றும் கூறுகின்றார். தமிழ் மாந்தரின் தலையாய கடமைகளுள் ஒன்றாகக் கருதப்படுவது மானமாகும். மானம் என்பதற்கு கற்பு, கௌரவம் எனப் பல பொருள்படும். ஒருவனுக்கு வாழ்வில் ஒழுக்கம் போன்றே உயிரைவிடச் சிறந்ததாகக் கருதப்படுவது மானமாகும். இதனையே,

"பழியெனில் உலகுடன் பெறினுங் கொள்ளலர்"

எனப் புறநானூறு சுட்டும். எந்தச் சூழலிலும் தந்நிலை தாழாமையும், தாழ்வுரின் உயிர் வாழாமையும், தங்குடிப் பிறப்புக்குத் தாழ்வு வருஞ்செயலைச் செய்யாமல் இருத்தலும் மானம் காக்கும் வழிமுறைகளாக 'மானம் போற்று' என்ற கட்டுரையில் பெண்கள் மற்றும் பெரியவர்களுக்கு அறிவுறுத்துகின்றார்.

மக்கள்

சமூகத்தினரே மக்கள் என அழைக்கப்படுவர். மக்கள் என்றால் உலகில் வாழும் சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரையும் சாரும். மக்களுக்கென்று சில கடமைகள் உண்டு எனவும், அவற்றைப் பின்பற்றும் வழிமுறைகளைப் பற்றியும் ஐந்து கட்டுரைகளின் மூலம் கூறியுள்ளார். தாய்க்குப் பெருமை சேர்க்கும் வகையில் பிள்ளைகள் நன்னடத்தையை மேற்கொள்வதைப் போல், தாயகத்தைக் காக்கவும், நாட்டில் கல்லாமை, இல்லாமை, பசிப்பிணி தீர்க்க முயல வேண்டும். தொழில் வளர்ச்சியைப் பெருககத் திட்டம் தீட்ட வேண்டும் என்பதை மக்களுக்கான நாட்டுப்பற்றாகக் குறிப்பிடுகின்றார். இக்கருத்தை,

"உறுபசியும் ஓவாப் பணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு"

என்னும் குறட்பாவும் உணர்த்துகின்றன. சமுதாயத்தை பாழ்படுத்தும் நயவஞ்சகப் போக்கையும், சுயநலப் பாங்கினையும், காட்டிக்

கொடுக்கும் கெட்ட குணத்தையும் ஒழித்துக்கட்டப் போராடுவதே தாயகத்தைக் காக்கும் பண்பாக "தாயகம் காத்து நில்" என்ற கட்டுரையின் மூலம் மக்கள் அனைவருக்கும் உரைக்கின்றார்.

மொழிப்பற்று முன்னேற்றத்தின் முதற்படியாதலால் தாய்மொழியை இகழ்வது தன் தாயையே இகழ்வதற்குச் சமமாகும். தமிழ் இலக்கியவளஞ்செறிந்த மொழியாகும். ஆங்கிலம் போன்று அறிவியல் கலைகளைப் பெறவில்லையென்றாலும், சப்பான், பிரெஞ்சு, செருமன் போன்ற அயல் நாடுகளில் தம்முடைய தாய்மொழியினையே உயிராகப் பேணுகின்றனர். ஆகவே தமிழ் வழிக் கற்றலையே தம் பிள்ளைகளும் மேற்கொள்ளுதல் வேண்டும் என்றும், அதற்காக அயல் மொழியை வெறுத்தல் கூடாது என்றும் மக்களுக்கு உரைக்கின்றார். இக்கருத்தை,

> **"தாய்மொழியைப் பேணித் தாழ்ந்த நாடும் இல்லை**
> **தாய்மொழியைப் புறக்கணித்து வாழ்ந்த நாடும் இல்லை"**

என்ற பாடல் வரியறியலாம். தாய்மொழி என்பது ஆடை போன்றது. அயல்மொழி என்பது அணிகலன் போன்றது. ஒருவன் அணிகலனின்றி வெளியில் செல்ல இயலும். ஆனால் ஆடையின்றி வெளிச்செல்ல இயலாது என்பதால், அயல் மொழியை அளவறிந்து பயன்படுததி, தாய்மொழியைப் பேணவேண்டுமென்று மக்கள் அனைவரையும் 'தாய்மொழிப் பேண்' என்னும் கட்டுரையின் மூலம் வலியுறுத்துகின்றார்.

அறம் என்பது சமூகத்தினை உள்ளடக்கிய பொதுச்சொல்லாகும். பல்வேறு அர்த்தப் புலப்பாடுகளைக் கொண்டதாகும். 'அறு' என்ற வினைச்சொல்லைக் கொண்டும். அறம், பொருள். இன்பம் என்பதன் அடிப்படையில் பிறந்ததே அறமாகும்.இவை ஒழுக்க நெறிகளின் தொகுதியாகும். வயது வரம்பின்றி அனைவராலும் பின்பற்றத்தக்கவனவற்றுள் ஒன்றாகக் கருதப்படுவதாகும். மனம், சொல், செயல் என மூன்றையும் தூய்மையாக வைத்துக் கொள்ள உதவுவதாகும்.

> **"மனதுக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்**
> **ஆகுல நீர பிற"**

என்ற குறள் அறம் பற்றி உணர்த்துகின்றன. ஒருவன் வாழ்வில் நிலைத்தப் புகழைப்பெற அறம் செய்தல் வேண்டும் என்ற

கருத்தை 'அறம் செய விரும்பு' என்னும் கட்டுரையின் மூலம் எடுத்துரைக்கின்றார்.

ஒருவனுக்கு அறிவைத் தரக்கூடியதும், அவன் பெற்ற செல்வங்களிலெல்லாம் சிறந்த செல்வமாகத் திகழ்வதும், பிறரால் அபகரிக்க இயலாத செல்வமாக விளங்குவதும் கல்விச்செல்வமாகும்.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்ற வரிகள் கல்விச் சிறப்பைப் பற்றிக் கூறுவனவாக உள்ளன. சிறியவர் முதல் பெரியவர்கள் உலகில் வாழும் மக்கள் அனைவரும் கல்வி கற்க முற்பட வேண்டும் என்பதை 'ஓதுவதொழியேல்' என்ற கட்டுரையில் வலியுறுத்துகின்றார்.

கேட்டல் என்பது கற்றவர்க்கு உரமாகவும், கல்லாதவர்க்கு அறிவாகவும் விளங்குவனவாகும். உணவில் அறுசுவை உள்ளதைப் போல்,கற்றலில் கேள்வி, செவிச்சுவை என இரு சுவைகள் உண்டு என்கின்றார். செவிச்சுவையறிந்தவர்களே உலகில் மேலானவர்களாக மதிக்கப்படுவர்.ஆயினும் நல்லோர் சொல்லை மட்டுமே செவியறிய வேண்டும். ஒருவனுக்கு கடுந்துன்பத்திலும் காக்க வல்லதும், வழுக்கு நிலத்தில் நடப்பவர்க்கு ஊன்றுகோல் போன்றதும் கேள்வியறிவு என்பதால், கற்றவர் மட்டுமல்லாது கல்லாதவர் அனைவரும் தங்கள் வாழ்வில் சிறக்க இக்கருத்துக்களைப் பின்பற்றுமாறு 'கேள்வி முயல்' என்ற கட்டுரையின் மூலம் மக்களுக்கு அறிவுரை கூறுகின்றார்.

முடிவுரை:

கவிஞர் முடியரசனார் கடித இலக்கியம் என்ற நூலில் பதினைந்து கடிதங்களின் மூலம் அறிவுரை கூறும் முகமாக, சிறியவர் முதல் பெரியவர் வரை அனைத்து மக்களுக்கும் அவரவர் வாழ்வில் சிறந்து விளங்கும் வகையில் சிறப்பான நற்கருத்துக்களை அறிவுரையாகத் தந்துள்ளார் என்பதை இக்கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

கவியரசர் முடியரசனாரின் ஊன்றுகோல் - ஓர் ஆய்வு

சு. ரேவதி சுபாஷிணி *

முகவுரை :

"மும்முடியை ஒருதலையில் முடித்த முடியரசர்
எம்முடியும் தலைவணங்கும் இயற்கையிலே - கவிஞர்
தம்மரிய கவிதையினால் கவிய ரசரானார்
தாய்த்தமிழே அவர்முடியை உனக்குத்தான் சாய்ப்பார்"

-கவிஞர் கண்ணதாசன்

07-10-1920 இல் சுப்பராயலு — சீதாலெட்சுமி என்னும் இணையர்க்கு பெரியகுளத்தில் முடியரசன் பிறந்தார். இவரின் இயற்பெயர் துரைராசு ஆகும். இவரின் தாய்மாமனாகிய சி.துரைசாமி என்பார் இவருக்கு இளமையிலேயே இலக்கிய, இலக்கணங்களைக் கற்றுக்கொடுத்து கவி புனையும் ஆற்றலை வளர்த்தார். கவியரசர் முடியரசனாரின் ஊன்றுகோல் காப்பியத்தை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் கருதுகோளாகும்.

ஊன்றுகோல் காப்பியம் - அறிமுகம்.

புலவனைப் பொருளாகக்கொண்ட தமிழ்க்காப்பியம் இதுவரை தோன்றியதில்லை. பண்டிதமணி வரலாறு காப்பியமாகுமேல் பல தமிழுணர்ச்சிக்கும், புதிய தமிழ் வளர்ச்சிக்கும் உரங்கிடைக்கும் என்று எண்ணினேன் என்று முனைவர் வ.சுப.மாணிக்கனார் கூறுகின்றார். மேலும், ஊன்றுகோல் காப்பியத்தைக் கவியரசர் முடியரசனார் பாடியவிதம் குறித்து சிறப்புப்பாயிரத்தில் பின்வருமாறு பகர்கின்றார்.

"ஊன்றுகோல் என்னும் ஒண்கதிர்க் காப்பியம்
சான்றுநூ லாகச் சடுதியிற் பாடினன்
பாடப் பிறந்த பழஞ்சபை மாணவன்
மூடப் பழக்கஞ் சாடிய பாவலன்
தூண்டுகை போலும் தொடர்பின் எனது
வேண்டுகை ஏற்று விருந்து படைத்தனன்"

என்கிறார்.

---

* உதவிப்பேராசிரியர், ப்ரைம் கல்வியியல் கல்லூரி, கீழ்வேளூர்.

காப்பியத் தொடக்கம்

தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலும் உலகம் என்னும் மங்கலச்சொல் நூலின் முகப்பில் கையாப்பட்டு இருக்கிறது. கவியரசர் அவர்களும் உலகெலாம் என்னும் சொல்லை முதன்மையாகக் கொண்டே தன் காப்பியத்தை ஆரம்பிக்கிறார்.

"உலகெலாம் உய்ய வைக்கும்
உயரிய கொள்கை யாவும்
நிலவிய தொகையும் பாட்டும்
நிகழ்த்திய சங்கம் ஏறி
அலகிலாப் பெருமை பூண்டாள்
அன்னையாம் தமிழ ணங்கின்
மலருலாம் அடிகள் வாழ்த்தி
மகிழ்வுற மனத்துள் வைப்பாம்"

காப்பியத்தின் கரு

முடியரசனார் இக்காப்பியத்தில் பண்டிதமணியாரின் வாழ்வியல் நிகழ்ச்சிகளையே கருவாக எடுத்துக்கொண்டு எவ்விதப் புனைவுமின்றிக் கூறிச் செல்லுவதால் அதனையே காப்பியத்தின் கருவாக எடுத்துக்கொள்ளலாம்.

காப்பியத் தலைவனை அறிமுகப்படுத்துதல் :

முடியரசனார் தம் காப்பியத் தலைவனை வருணனையின் வாயிலாக அறிமுகப்படுத்துகிறார்.

"பெருமைசேர் பூங்குன் றத்துப்
பீடுயர் வணிகர் தம்முள்
கருணைவாழ் மனத்தர் முத்துக்
கருப்பனென் றொருபேர் தாங்கும்
திருவினார் துணைவி யான
சிவப்பியார் மணிவ யிற்றுள்
கருவிலே உருவ மான
கதிரவன் எழுந்தான் அம்மா"!

இங்கே கதிரவன் தோற்றத்தைக் காப்பிய வழியிலும், காப்பியத் தலைவனைச் சுட்டிக்காட்டும் உத்தியாலும், காப்பியத்தை நடத்திச் செல்லுகிறார் கவிஞர்.

சன்மார்க்க சபை

"பண்டிதமணியின் பெரும் புலமையைக் குன்றின் மீதிட்ட விளக்கென ஒளிரச் செய்தது மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையே" என்பர் சோமலெ. இதன் நன்றிக் கடனாகப் பண்டிதமணி சன்மார்க்க சபையின் முதல் மாணாக்கன் யானெனப் பெருமையுடன் கூறிக்கொள்வதுண்டு. முடியரசனார் இதனை உள்நிறுத்திச் சபை இவருக்கோர் ஊன்றுகோலாய் அமைந்திருக்கத் தமிழ் பரவிச் செழிக்கக் கண்டோம் என்பர்.

பண்டிதமணியாரின் பேச்சாற்றல்

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் திறன் இளமை முதற்கொண்டே பண்டிதமணியார்க்கு இருந்தது. இதனை,

"நூலுக்குள் அவர்நுழைந்து திளைத்து வந்து
நுவலுங்காற் சொல்லுக்குச் சொல்லி னிக்கும்
பாலுக்குள் மறைந்திருக்கும் நெய்யைப் போலப்
பாட்டுக்குட் புதைந்திருக்கும் நயங்க ளெல்லாம்
மேலுக்கு வந்தின்பம் நல்கும் வண்ணம்
மேடையிலே சொன்மழையைப் பொழிந்திருப்பார்
தாலுக்குள் தமிழ்எழிலின் நடனங் கண்டு
தமைமறந்து செவிமடுப்பர் அவையோர் நன்றே"

என்று விளக்கிக் கூறும்.

பணி

மீனாட்சி கல்லூரியாய் முதலில் தோன்றிப் பின்னர் பல்கலைக்கழகமாக விளங்கிய அண்ணாமலையில் பேராசிரியராகப் பணியேற்றார். இதனைத்

"தானாட்சி செய்துவரும் நிறுவ னத்தில்
தமிழாட்சி செய்வதற்கு மனமி சைந்தார்
மீனாட்சி பங்காளர் ஏற்ற பின்னர்
மேலாட்சி ஒன்றில்லை என்று போற்றத்
தேனாட்சி செய்கின்ற தமிழ்வ ளர்த்தார்"

என்று காப்பியம் கூறுகின்றது. கவிமணி அவர்கள் மாணாக்கர்களுக்குப் பாடம் சொல்லும் திறனை மகாவித்துவான் திரு.இரா.இராகவையங்கார் பாராட்டுகிறார்.

"பண்டிதமணி பேராசிரியராக இருந்து செய்த காரியங்களை என்னால் என்றுமே மறக்கமுடியாது. அவர்கள் பொருளுணர்ந்து சொல்லுதற்குரிய சேனாவரையம் என்னும் தொல்காப்பிச் சொல்லதிகார உரையை மிக எளிதாகப் போதித்ததை அடுத்த அறையிலிருந்து கேட்கும் பாக்கியத்தை பெற்றவன் நான். ஆங்கிலம் படித்தவர்கள்தாம் அந்தப் பேராசிரியர் பதவியை வகிக்க வேண்டும் என்ற நியதியைப் பண்டிதமணி மாற்றிவிட்டார் என்றே கூறவேண்டும்".

விழாக்கள்

இக்காப்பியத்தில் இரு விழாக்கள் காட்டப்பட்டுள்ளன.

1. சன்மார்க்க சபையின் ஆண்டு விழா
2. பண்டிதமணியாரின் மணி விழா

பண்டிதமணியாரின் மணிவிழாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை மிக அழகாக வருணனை செய்கிறார்.

"முற்பகல் நிகழ்ச்சி யெல்லாம்
முழுமையுஞ் சமயச் சார்பே
பிற்பகல் நடந்த வெல்லாம்
பீடுயர் தமிழின் சார்பாம்
முற்பகல் கண்ட தெல்லாம்
மூசுபூ மாலை யாகும்
பிற்பகல் கண்ட தெல்லாம்
பேசுபா மாலை யாகும்"

யாப்பமைதி

ஊன்றுகோல் காப்பியம் கதிரெழு காதை முதலாகச் சிலைகாண் காதை ஈறாகப் பதினேழு காதைகளையும் நாற்சீர், அறுசீர், எழுசீர், எண்சீர் விருத்தப்பாக்களையும், கட்டளைக் கலித்துறை, கலிவெண்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, நேரிசையாசிரியப்பா முதலிய பாவினங்களைக்கொண்டு விளங்குகிறது. கவிஞர் இக்காப்பியத்தில் விருத்தத்திற்கே முதன்மை கொடுத்துள்ளார்.

உவமைகள்

இக்காப்பியத்தில் ஏறக்குறைய முப்பத்தேழு உவமைத் தொடர்களை காட்டியிருக்கிறார்.

1) உளக் குறிப்புணர்த்தல் போல ப.21
2) பாலுக்குள் நெய்யைப் போல ப.67
3) பருவத்தே பயிர் போல ப.135

நிறைவுரை

காப்பியம் படிப்போர்க்கு அறம் கூறி வாழ்த்தி அமைதல் ஓர் அமைப்பு முறை உத்தியாகக் காணப்படுகிறது. இதனை ஊன்றுகோல் காப்பியமும் பின்பற்றி

"பண்படும் ஒழுக்கம் மிக்கோர்
பகர்தரும் வாய்ச்சொல் யாவும்
ஒண்டமிழ் மாந்தர்க் கென்றும்
ஊன்றுகோ லாகுங் கண்டீர்.!"

தேன் கலந்து, பால் கலந்து, செழுங்கனித் தீஞ்சுவை கலந்து, ஊன் கலந்து, உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கின்ற உயர் காப்பியமாம் ஊன்றுகோலின் வாயிலாக உயர் சிமயமென உயர்ந்து நிற்கும் கவியரசனார் முடியரசனாரின் புகழ் பரப்பி முத்தமிழை வளர்ப்பது நம் கடனாகும்.

வீரக்கவியரசர் முடியரசனின் 'எக்கோவின் காதல்'' நூலில் பெண்ணியப் புரட்சி

கி.லதா *

முன்னுரை

"புறந்தூய்மை நீரால் அமையும் அகந்தூய்மை வாய்மையாற் காணப் படும்" என்பது வள்ளுவன் வாக்கு. இங்கு அகந்தூய்மை என்று குறிப்பிடுவது மனதிலிருந்து எழும் கருத்துகளின் வழி பிறக்கும் சொற்களைச் சுட்டுகிறது. எனவே ஒருவர் கூறும் கருத்தில் இருந்து அவரது மனநிலையை உணர்ந்து கொள்ளலாம். விடுதலைக்குப் பின்னர் பல படைப்பாளர்கள் தோன்றலாயினர். சமூகக் கருத்துகளை நிலைநிறுத்துவதில் சமநீதிவாதிகளும் பொதுவுடைமைவாதிகளுமான தந்தை பெரியார், அறிஞர் அண்ணா போன்றோர் இருந்தனர். இவர்கள் மக்களின் நலன்கருதிச் சமூகச் சிந்தனையுடன் எழுதத் தொடங்கினர். "அறிவை விரிவு செய் அகண்டமாக்கு விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை" என்ற பாரதிதாசனின் சிந்தனை இவர்களுக்குப் பொருந்துவதாகவே உள்ளது. இதன் அடிப்படையில் பொதுவுடைமைச் சிந்தனை, மார்க்சியச் சிந்தனை, கம்யூனிசச் சிந்தனை, சமதர்மக் கொள்கை, நிகர்மைக் கொள்கை என அனைத்துக் கொள்கையினையும் பறைசாற்றும் விதமாகப் பலரது படைப்புகள் அன்றைய காலக்கட்டத்தில் வெளிவரத்தொடங்கின. சமூக உணர்வுடன் எழுதும் படைப்பாளன் மக்கள் மனதில் நீங்கா இடம் பெறுகின்றான். அவ்வரிசையில் முடியரசன் குறிப்பிடத்தக்கவராக இருந்து வருகின்றார். கவிதைப் படைப்பில் தன்னை நிலைநிறுத்தி கட்டுரை, கதை, கடித இலக்கியம், இலக்கணம் என்ற பல்வேறு இலக்கியத் தளங்களில் தனது அழுத்தமான தடங்களைப் பதித்துச் சென்றுள்ளார். இவரது படைப்புகளில் சமூகச் சிந்தனையை வெளிப்படுத்தும் சமதர்மக் கொள்கை, முற்போக்குச் சிந்தனை, புரட்சி ஆகியவை இடம்பெறுகின்றன. இவரது படைப்புகள் அன்றைய காலக்கட்டத்தில் நிலவிய பெண்ணியக் கருத்தாக்கங்களையும் பெண்ணியம் குறித்த விடயங்களையும் சமூகச் சிக்கல்களையும் அச்சிக்கல்களுக்கான தீர்வுகளையும் எடுத்து இயம்புவதாக அமைந்துள்ளன. முடியரசனின் 'எக்கோவின் காதல்' என்ற

---

* ஆய்வியல் நிறைஞர், அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சிறுகதை வெளிப்படுத்தும் சமூகச் சிந்தனையை வெளிக்கொணர்வது இக்கட்டுரையின் பொருண்மையாகும்.

வீரக்கவியரசர் முடியரசனின் ‘எக்கோ’

கவிதையில் தடம் பதித்த முடியரசன் சிறுகதை உலகில் 1947 ஆம் ஆண்டில் தனது பங்களிப்பைச் செலுத்தியுள்ளார். இவரது சிறுகதைகள் அனைத்தும் அக்கால இதழ்கள் பலவற்றில் வெளிவந்துள்ளன. முடியரசனார் மறைவிற்குப் பிறகு 1999 ஆம் ஆண்டு ‘எக்கோவின் காதல்’ என்ற தலைப்பில் அக்கதைகளை நூலாகத் தொகுத்து கவிஞரின் மகன் பாரிமுடியரசன் வெளிக்கொணர்ந்தார். இச்சிறுகதைத் தொகுப்பில் மொத்தம் பதினொரு கதைகள் இடம்பெற்றுள்ளன. அந்நூலில் பாரிமுடியரசன் முன்னுரையில்,

> எக்கோவின் காதல் என்ற இந்நூல், என் தந்தையார் அவர்களால், 1947-1948 ஆம் ஆண்டுகளில் எழுதப்பட்ட சிறுகதைகளின் தொகுப்பு ஆகும். வெறுங்கதைகளாக இல்லாமல் சமுதாயச் சீர்திருத்த நோக்கில் புனையப்பட்டவை இவை.... இந்நூல் பரவினால், சிறுகதையுலகம் மீண்டும் சமுதாயச் சீர்திருத்தத்தை உள்ளடக்கிய கதைகளை அதிகம் தரும் என்று எண்ணுகிறேன்.

என்று குறிப்பிடுகின்றார். சிறுகதை எழுதியதற்கான காரணத்தையும் அதன் பின்புலத்தையும் முடியரசன் குறிப்பிட்டுள்ளதை, அவரது மகன் பாரிமுடியரசன் எடுத்துக்காட்டுவது இங்கு நோக்கத்தக்கது,

> என்னைக் கதை எழுதுமாறு நண்பர் அறிவழகன் திசை திருப்பி விட்டார். இது 1947 ஆம் ஆண்டு நடந்தது. இரண்டாண்டுகள் எழுதினேன். அப்போது பல்வேறு இதழ்களில் இக்கதைகள் வெளிவந்தன. சீர்திருத்தக் கருத்துகளுக்கு வலுவூட்ட வேண்டுமென்று கருதிக் கண்ணெதிரில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையே அடிப்படையாகக் கொண்டு இக்கதைகளைப் புனைந்தேன்.

என்று குறிப்பிடுவதிலிருந்து அவர் சமூகமாற்றத்தின் மீது கொண்டிருந்த பார்வையினை அவரது கதைகள் பிரதிபலிக்கின்றன என்பதை உணரமுடிகின்றது.

‘எக்கோவின் காதல்’ என்ற சிறுகதை எழிற்கோ என்ற எழுத்தாளன் சமூகத்தின் மீது கொண்டிருந்த அக்கறையினால் சீர்திருத்தக் கருத்துக்களை இதழ்களில் எழுதிவருவதாகக்

கட்டமைக்கப்பட்டுள்ளது. 'எழிற்கோ' என்ற தனது பெயரினை 'எக்கோ' என்று மாற்றிய பிறகு தான் மக்கள் தன்னை ஒரு படைப்பாளனாக ஏற்றுகொண்டனர் என்பதாக இக்கதையில் அமைந்திருப்பது மக்கள் கொண்டுள்ள ஆங்கில மோகத்தினையும், அடிமைத்தனத்தையும் வெளிக்கொணர்வதாக உள்ளது. அவன் எழுதிய கட்டுரைகள் தடை செய்யப்படுகின்றன. சமூகத்தில் நிலவும் அவலங்களையும் சமூகச் சிக்கல்களையும் சுட்டிக் காட்டுவதால் இவரது எழுத்துகளை மக்கள் மிகவும் வரவேற்கின்றனர். இத்தகைய மக்கள் ஆதரவு பெற்ற எழுத்தாளன் நிலையை எடுத்து இயம்புவதாக முடியரசனின் 'எக்கோவின் காதல்' சிறுகதை அமைந்துள்ளது.

எழுத்துரிமை கோடல்

மனித உரிமை என்பது மனிதனுக்குக் கிடைக்க வேண்டிய அடிப்படை உரிமைகளை வழங்குவது ஆகும். மனித உரிமைகள் யாராலும் உருவாக்கப்பட்டதல்ல. அதுபோல சமுதாயத்தினாலோ அரசினாலோ அல்லது அரசியல் அதிகார அமைப்பினாலோ உருவாக்கப்பட்டதல்ல அதனால்தான் எந்த ஒரு அரசிற்கும் அதிகார அமைப்பிற்கும் மனித உரிமைகளை மீறுவதற்கான அதிகாரம் அளிக்கப்படவில்லை. நாட்டில் அனைவருக்கும் பேச்சுரிமை, கருத்துரிமை, எழுத்துரிமை என்பது பொதுவானது என்று மனித உரிமை கூறுகிறது. ஒரு படைப்பாளன் தனது கருத்தை வெளியிடுவதற்கு எழுத்துரிமை இன்றியமையாததாகும். இன்றைய காலக்கட்டத்தில் அவ்வுரிமைகள் பறிக்கப்பட்டுவருகின்றது. விடுதலை பெற்ற சமயத்திலும் எழுத்துரிமை இல்லை என்பதை முடியரசனின் எக்கோவின் காதல் சிறுகதை பதிவு செய்கிறது. பொதுவுடைமைச் சிந்தனையாளராகவும் புரட்சிகர எழுத்தாளராகவும் இக்கதையில் எக்கோவின் பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. அவரது பாத்திரப் பண்பினை,

> எக்கோ 'புரட்சி' என்ற இதழில் எழுதிவரும் ஓர் எழுத்தாளன். அவனுடைய கட்டுரைகளும், கதைகளும் உயிரோட்டமுள்ளவை அரசியல் பொருளியல் முதலிய துறைகளில் மனிதன் அடிமைப்படுத்தப்பட்டுக் கிடப்பதை எடுத்துக் காட்டி, எதிர்காலத்தில் நாட்டின் நிலை எவ்வாறு இருக்க வேண்டும் அரசியல் எவ்வாறு வகுக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றிக் காரசாரமாக எழுதப்படும் கட்டுரைகளை, அரசியலில் மாறுபட்ட கருத்தினரும் பாராட்டுவர். (எக்கோவின் காதல்.ப.16)

என்று முடியரசன் புனைந்திருப்பதிலிருந்து இதனை அறியமுடிகின்றது. இக்கதையில் 'புரட்சி' என்ற இதழில் 'சுடுகாட்டிலே' (எக்கோவின் காதல்.ப.32) என்ற கட்டுரை எழுதியதிற்காக எக்கோ கைது செய்யப்படுகிறார். இது சமுதாயத்தில் இன்றளவிலும் ஆங்காங்கே நடந்து வருகின்றது. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று வள்ளுவன் கூறுவது பொதுவுடைமைச் சிந்தனையாகும். அதன் அடிப்படையில் படைப்பாளர்களுக்கு எழுத்துரிமையும் பொதுவானதாகும். இக்கருத்தினை முடியரசன் ஆழமாக வலியுறுத்தியுள்ளது சிறப்பிற்குரியதாகும்.

எக்கோவின் காதல் புரட்சி

எக்கோவின் எழுத்தினாலும் பேச்சினாலும் ஈர்க்கப்பட்டு மல்லிகா என்ற வாசகி எக்கோவின் மீது காதல் கொள்கிறாள். இக்காதலை எக்கோ ஏற்க மறுக்கின்றான். அப்போது மல்லிகா, 'உங்கள் கருத்தில் கொள்கையில் எந்த விதத்திலும் சளைத்தவள் அல்லள் நானும்' (எக்கோவின் காதல்.ப.21) என்று கூறிய பின்னர் எக்கோ அக்காதலை ஏற்று பதிவுத் திருமணம் செய்து கொள்கிறார். இது 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப் பண்பும் பயனும் அது' என்று வள்ளுவர் கூறும் இல்லற மாண்பை வெளிக்கொணர்கிறது. பாவேந்தர் பாரதிதாசனின் 'அணைந்துகொள் உன்னைச் சங்கமமாக்கு மானிட சமுத்திரம் நானென்று கூவு' என்ற சமதர்மக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு எக்கோவின் காதலும் அமைந்துள்ளது. தனக்கு ஏற்பட்ட காதலை எக்கோ,

> இதோ என் காதல் பலித்துவிட்டது என் காதல் எல்லாம் நாட்டின் விடுதலை மீது தான். நாட்டுக்காக உழைக்க வேண்டும் - உழைத்து உழைத்து உருமாற வேண்டும். அதற்காக நான் இரத்தம் சிந்தவேண்டும் - நான் எதிரியால் தாக்கப்பட்டோ, அரசாங்கத்தின் தண்டனை பெற்றோ சாக வேண்டும். அந்தச் சாதல் தான் என் காதல். (எக்கோவின் காதல்,ப.35)

என்று கூறுவதிலிருந்து எக்கோவின் காதலை உணரமுடிகின்றது. இது சமூகப் பொறுப்பையும் நாட்டின் மீது கொண்டுள்ள அக்கறையினையும் காட்டுகிறது. காதல் என்பது சுயநலத்தின் வெளிப்பாடு என்றில்லாமல் பொதுநலமாக அமைய வேண்டுமென்பதை இச்சிறுகதையின் மூலம் உணர்த்திச் செல்கிறார். எதிர்காலச் சமூகநலனைக் கருத்தில் கொண்டு உயர்ந்த சமூகச் சிந்தனையை வெளிப்படுத்தியுள்ளார்.

மார்க்சியப் பெண்ணியம்

மார்க்சியப் பெண்ணியத்தைப் பற்றி ஏங்கல்சு வரையறை செய்துள்ளார். முதலாளிகளுக்கு எதிராக தொழிலாளர்கள் மேற்கொள்ளும் வர்க்கப்போராட்டத்தில் பெண்களும் இணைய வேண்டும். தத்துவம், அரசியல், பொருளியல், மதம், அறிவியல், சமூகம், கலை, இலக்கியம் ஆகிய அனைத்தையும் விளக்குவதாக மட்டுமின்றி அத்துறைகளில் மாற்றம் ஏற்படுத்துவதான தத்துவம் தான் மார்க்சியம். இங்கு ஏங்கல்சு கூறும் கருத்து நோக்கத்தக்கதாகும். 'பெண்கள் தொழிலாளர்களாக மாற்றம் பெறுவது அவர்களது விடுதலைக்குத் திறவுகோலாகும்'. இதன் அடிப்படையில் இக்கதையில் எக்கோ கைது செய்யப்படும் போது மல்லிகா அரசாங்கத்திடம் மன்னிப்புக் கோருமாறு வினவுகிறாள். இதனைக் கேட்ட எக்கோ, எதேச்சதிகாரத்தின் பிடியில் ஓர் எழுத்தாளன் சிக்கிக்கொள்ள கூடாதென்றும் எழுத்துரிமை என்பது ஒவ்வொரு எழுத்தாளனுக்கும் உரிய ஆயுதமென்றும் மேலும் 'நான் மன்னிப்புக் கேட்டால், எழுத்தில் வீரத்தைக் காட்டிச் செயலில் பின்வாங்கும் துரோகியாகிவிடுவேன்' என்று கூறுகின்றான். இதை கேட்ட மல்லிகா, மக்கள் நலன் கருதி எழுதும் படைப்பாளனைக் கைது செய்வதா? மக்கள் நிலை உயர வேண்டும் என்று ஒவ்வொரு படைப்பாளனும் எழுதி வருகின்றான். அவர்களின் கருத்தினைப் பதிவு செய்வது எவ்வகையில் குற்றமாகும் என்று அரசாங்கத்திடம் தன் கேள்வியை முன்வைக்கிறாள். மேலும்,

> **'அரசாங்கத்தை நாம் ஏன் குறைகூற வேண்டும்? மக்கள் உணர்ந்தால் - அறிவுபெற்றால் தானாகவே எல்லாம் மாறுகிறது.... தன் கணவன் குற்றமற்றவன் என்று, முடியுடை வேந்தன் எனவும் பாராது வீரத்தோடு வாதாடிய கண்ணகி என் குலத்தில் பிறந்தவள் தான். மக்கள் மன்றம் இருக்கவே இருக்கிறது. அரசாங்கத்தை அந்த மன்றத்தின் கூண்டிலே நிறுத்துகிறேன். நீதிதேவன் தீர்ப்பளிக்கட்டும்'.**
>
> (எக்கோவின் காதல்,ப.35)

என்று குறிப்பிடுவதிலிருந்து எதேச்சதிகாரத்திற்கு எதிராகப் பெண்கள் போராட வேண்டும் என்ற மார்க்சியப் பெண்ணியச் சிந்தனை வெளிப்படுகிறது. மேலும் 'பெண்களுக்கும் பொது தன்மைக்கு உழைக்க வேண்டும் என்கிற ஆசையும் சௌகரியமும் இருக்க வேண்டும்' என்ற பெரியாரியப் பெண்ணியச் சிந்தனையை இங்கு ஒப்பு நோக்குவது சாலச் சிறந்ததாகும். இன்றைய காலக்கட்டத்தில் பல்வேறு இடங்களில்

இவ்வகையான அதிகாரத்திற்கு எதிராகப் பெண்கள் போராடி வருகின்றனர். முடியரசனின் 'எக்கோவின் காதல்' சிறுகதையில் இக்கருத்துப் புலப்பாடு வெளிப்படுவது இன்றைய காலத்திற்கேற்ற சமூகச் சிந்தனையாகப் பொருந்தி நிற்கின்றது.

பெண்ணியப் புரட்சி

அதிகமான ஒடுக்குமுறை எங்கு கையாளப்படுகின்றதோ அங்கு புரட்சி தோன்றும். எக்கோவின் காதல் கதையில் புரட்சியச் சிந்தனை வெளிப்படுகிறது. எழுத்துரிமை பறிக்கப்பட்டு எக்கோ கைது செய்யப்படும் போது அவரைத் திருமணம் செய்து கொண்ட மல்லிகாவிற்குப் போராட்டக்குணம் வலுப்பெறுகிறது. ஆண்களுக்கு நிகராக பெண்களும் போராட்டக்குணம் உடையவர்கள் என்பதை முடியரசன் வலியுறுத்துகிறார். 'ஆண்களைப் போலவே பெண்களும் முதலாளித்துவத்திற்கு எதிரான புரட்சிகர போராட்டதில் ஆண்களோடு பெண்களும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்' என்பது மார்க்சியம். இக்கருத்தினை வலியுறுத்தும் விதமாக 'எக்கோவின் காதல்' சிறுகதையில் மல்லிகா,

> "புரட்சியில் ஆடவர்தாம் மிஞ்சுவர், பெண்கள் அஞ்சுவர் என்பது உங்கள் முடிவா? நாடு பிறனுக்கு அடிமையாகக் கூடாது என்ற எண்ணத்தால் தன் கணவன்மாரைப் போர்க்களம் அனுப்பிய பெண்கள் பிறந்த நாட்டிலே தான் நானும் பிறந்திருக்கிறேன். அந்தப் பண்பு என்னிடமும் இருக்கத்தான் செய்கிறது புரட்சி இயக்கத்தில் நானும் உங்களோடு பணியாற்றுவேன். உங்களுக்குக் கொலை தண்டனை என்று கேள்விப்பட்டால் நாட்டிற்காக உயிர்கொடுத்த உத்தமன் மனைவி நான் என்று பெருமிதம் அடைவேன். ஆதலால் என்னை ஏற்றுக் கொள்ளுங்கள். (எக்கோவின் காதல்,பக்.21-22)

என்று பேசுகிறாள். இது பெண்களின் புரட்சி குணத்தைச் சுட்டுவதாக உள்ளது. இன்றைய காலக்கட்டத்தில் இதுபோன்ற பெண் புரட்சியாளர்கள் அதிகளவில் காணப்படுகின்றனர். முடியரசனின் இக்கதை படிப்பில் பெண்களுக்கு முக்கியத்துவம் அளித்து ஆண்களுக்குச் சரிசமமான பண்பினையும், மனப்பக்குவத்தையும் வலியுறுத்துவது போற்றுதலுக்குரியது.

முடிவுரை

பெரியாரியப் பார்வையில் சிறுகதைகள் தோற்றம் பெறுவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். விடுதலைக்குப் பின்னர் சிறுகதைகள் மக்களின் நேரடி கவனத்திற்குச் சென்றது. சிறுகதைகளின் வாயிலாகத் தொலைநோக்குச் சிந்தனை மற்றும் பொதுவுடைமை சித்தாந்தத்தை வலியுறுத்துவதில் முடியரசனின் சிறுகதைகளும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. சிறுகதை என்பது குதிரை வேகத்தில் சென்று விரைவாக முடியக்கூடியது. இதில் எக்கோவின் காதல் என்னும் சிறுகதையில் எழுத்தாளனின் எழுத்துரிமை பறிக்கப்படுவதைச் சுட்டிகாட்டப்படுகிறது. இக்கதையில் எழிற்கோ என்ற பாத்திரப்படைப்பு பொதுவுடைமைச் சிந்தனையாளராகவும், மார்க்சிய, பெரியாரியக் கொள்கைகளை வலியுறுத்தும் வகையிலும் கட்டமைக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இதே போன்று மல்லிகா என்ற பாத்திரப்படைப்பைப் பெண் போராளியாகவும் புரட்சிக்குத் தயாராகும் பெண்ணாகவும் சித்தரிக்கப்பட்டுள்ள விதம் சமூகத்தில் பெண்ணியப் புரட்சி சிந்தனையைக் காட்டுவதாக அமைந்துள்ளது. முடியரசனின் இச்சிறுகதை படைப்பானது எதிர்வரும் காலச் சூழலுக்கு ஏற்ப பொருந்துவதாக உள்ளது. எக்கோவின் காதல் சிறுகதையில் படைக்கப்பட்டப் பாத்திரங்களும், கதையின் போக்கும் முற்போக்குச் சிந்தனையுடையதாகவே காணப்படுகின்றது.

வீறுகவியரசர் முடியரசனார் பார்வையில் - பாடுங்குயில்

முனைவர் ச.முருகேசன் *
இரா.வனிதா*

சங்கைப்போல் தூய்மனத்தைக் கொண்டார்
சாதிசமய மற்றமுடி யரசர்
கொள்கையிலே குன்றாத குன்றாய்
கோலோச்சி வந்தமுடி யரசர்
அள்ள அள்ளக் குறையாத கருத்தை
அருங்கவியில் தூயமுடி யரசர்
துள்ளாத துடுக்கற்ற அடக்கம்
துளக்கமுறும் தூயமுடி யரசர்
பள்ளத்தை மேடாக்கிக் களித்த
பைந்தமிழ் முடியரசர் வாழ்க

என்று போற்றிய கவிஞர் வே.இரா.சிவஞான வள்ளலின் கூற்றுக்குப் பொருத்தமான கவிஞர் வீறுகவியரசர் முடியரசனார். கவிக்கு மயங்காத செவிகளே இல்லை. அதுவும் ஓசைநயம் வாய்ந்த கவிதையைக் கேட்கும் போது 'இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்ற பாரதியின் வரிக்கு ஒப்பப் பாடக் கூடியவர்.

எதுகை, மோனை, முரண், இயைபு முதலான தொடை வகைகள் உற்றுழியாக புதுமுறையில் அமைந்த பல மெல்லிசைப் பாடல்களைப் பாடியுள்ளார். தமிழில் பாடல்கள் இசையோடு இல்லை என்பதை உணர்ந்து பாடுங்குயில் என்னும் நூலில் இடம் பெறச் செய்துள்ளார். தாளம் தப்பாமல் ஒரு கட்டுக்கோப்புக்குள் அடங்கி நிற்கும் பாடல்களில் சிலவற்றைப் பார்ப்போம். இத்தொகுப்பில் 79 அப்பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

சமூகத்தைச் சாடுதல்

சுரண்டலும் பதுக்கலும் இல்லா நிலையை ஒழிப்போம். அதற்குத் துணைவரும் பகையை அழிப்போம் இரண்டிலும் பிழைப்பவரை பழிப்போம். அவர்க்கே இனியொரு விதிமுறை விதிப்போம் என்று பாடியதில் இருந்து திருட்டு, பதுக்கலை வெறுத்த நிலையைக் காட்டுகிறது பொதுநலமாய் வாழ வழிசெய்யும் பாடலாக,

* அழகப்பா அரசு கலைக் கல்லூரி, காரைக்குடி.
* முனைவர் பட்ட ஆய்வாளர், அழகப்பா அரசு கலைக் கல்லூரி, காரைக்குடி.

சுரண்டலும் பதுக்கலும் ஒழிப்போம் - அதற்குத்
துணைவரும் பகைதனை அழிப்போம்
இரண்டிலும் பிழைப்பவர்ப் பழிப்போம் - அவர்க்கே
இனியொரு விதிமுறை விதிப்போம் (பாடல். 3)

'புதுமுறை உலகினைப் படைப்போம்' என்ற வரியில் பயில்வோரையும் உளப்படுத்தி தன்மை, பன்மை நடையில் பெருமிதம் பொங்க பாடியுள்ளதைக் காணலாம்.

உடைகளைச் சற்றே மாற்றுங்கள் - நாட்டின்
உடைமைகள் எல்லாம் போற்றுங்கள்
கடமையைச் செய்தே காட்டுங்கள் - கெட்ட
கயமையைத் தூவென் றோட்டுங்கள் (பாடல் :27)

என்று ஆணித்தரமாய் தன் கருத்தைப் பதிவு செய்துள்ளார். அடுத்து 'சாதியின் வேரை வெட்டுங்கள்' 'நெஞ்சில் சமநலைப் பண்பை ஒட்டுங்கள்' என்பதில் இருந்து சாதிவேறுபாட்டை அறுத்தெறிய வேண்டும் என்று பாடுவதைக் காண முடிகிறது.

'கலையும் தொழிலும்' என்ற தலைப்பில்,

திரைப்படம் என்றொரு தொழிலாம் - மாதர்
மறைப்பிடம் என்பதங் கிலையாம்
உருப்படுமா எனிற் கலையாம் - ஐயோ
உரைத்திடின் மானமும் விலையாம்

திரை உலகில் நாகரீகம் பயன்படுத்தாத நிலையை கடுமையாகச் சாடி 'உலகம் எங்கள் கையிலே' பாடலில்,

குலுக்கிக் குலுக்கி ஆட்டுவோம் - உடலைக்
குனிந்து நிமிர்ந்து காட்டுவோம்
துலக்கி ஆசை ஊட்டுவோம் - என்பதை
தொடருங் காசைக் கூட்டுவோம்
(பாடல்.36)

காசிற்காக மானத்தைப் பெரிதுபடுத்தாத நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறார். படியாத பிள்ளையை நாட்டுக்கும் வீட்டுக்கும் கேடு என்றும் கல்வி கற்கா நிலையில் இருப்பவரையும் கண்டு பொங்குகிறார்.

ஐந்திலே படியாத பிள்ளை - கூட்டில்
அடைத்துக் கிடக்கின்ற பேசாத கிள்ளை

என கிளியை விட தாழ்ந்து நிற்கும நிலையைப் பாடலில் பதிவு செய்கிறார்.

எழுதுங்கள் புதுக்கவிதை

மரபு பூத்த கவிஞர் என தினமணி இதழ் அவருடைய மறைவிற்கு புகழாரம் சூட்டி எழுதியது. அப்படிப்பட்ட மரபு கவிஞர் புதுக்கவிதை எழுத தூண்டும் வகையில்,

அழகான கவியாக உருவாக்குவோம்
அதனாலே தமிழ்மாதை உயர்வாக்குவோம்
உரையான வரியெல்லாம் கவியாகுமோ?
உருவில்லா தமிழ்மாதை உயர்வாக்குவோம்
உணர்வோடு கனவாகும் கருயாவுமே
உருவாகி வடிவாகிற் கவியாகுமோ?
வண்ணங்கள் எண்ணங்கள் புதிதாகவே
வடிவங்கள் அமையுங்கள் மரபாகவே
தனியான மரபுள்ள தமிழாகுமே
தரமான நெறிகொண்ட மொழியாகுமே
(பாடல்.77)

முடியரசனின் கருத்தில் மரபான வடிவம், புதிதான கருத்து, தரமான நெறி இவை மூன்றும் பொருந்தியதே அழகான கவிதை ஆகும்.

கவிஞர் பிறிதோர் இடத்தில் ‘குழம்பிய உலகம்’ தலைப்பில்,

உரைநடை எல்லாம் பாடல்க ளென்றால்
உயரிய கவிதை நிலைஎன் னாகும்?

என்னும் கேள்விக்கணையினையும் தொடுக்கின்றார். எது உயரிய கவிதை என்பதற்கு இலக்கணம் கூறும் முகமாக

படித்திட படித்திட புதியன கிடைக்கும்
பலமுறை முடிப்பினும் விழைவினைக் கொடுக்கும்
படித்தபின் நினைப்பினில் இனிமையைப் படைக்கும்
(பாடுங்குயில்)

இலக்கணத்தில் சொல்லாட்சி

'என் காதலி' என்னும் தலைப்பில் கவிஞர் ஒரு பாடல் இயற்றியுள்ளார். இதில் பிரிவுக்கு உரிய எழுத்து, அசை, சீர், தளை, தொடை முதலான உறுப்புகளை நயமாகச் சூட்டிக் காதலன் தன் ஆருயிர்க் காதலியிடம் உணர்வை உள்ளத்தை வெளிப்படுத்துகிறான்.

உள்ளத்து உள்ளது கவிதை -இன்ப
உருவெடுப்பது கவிதை
தெள்ளந் தெளிந்த தமிழில்
தெரிந்து ரைப்பது கவிதை

என்ற கவிமணி வரிக்கு ஒப்ப உணர்வை வடித்து,

எடுத்து என்னும் மலர் எடுப்பாள்
எழிலாகத் தொடை முடிப்பாள்
கழுத்தில் அசை பட நடப்பாள்
காலடியில் சீர் படைப்பாள் (பாடல்.48)

கற்பசைன் சிறகை இலக்கணத்தில் சுவைபடக் கொடுத்து கவிதையை சுவைக்கச் செய்துள்ளார். இதைப் போன்று அவனொரு காவியம் (49) என்னும் தலைப்பில் பாடிய மெல்லிசைப் பாடலில் நகை, அவலம், வெகுளி, மருட்கை, அச்சம் முதலிய காப்பியச் சுவைகளைச் சுவைபடச் சுட்டியுள்ளார். கவிஞர் 'பால்மொழி ஊடலில் வெகுளியைக் கண்டேன் / பணிந்தபின் கூடலில் மருட்கையைக் கண்டேன் / நால்வகைக் குணங்களுள் அச்சமுங்கண்டேன் நாளும் பொழுதொரு நாடகம் கண்டேன்' என்ற வரியில் ஊடல், கூடல், நாணல் என்ற முறையில் அடுக்கி இலக்கணச் சுவையால் இன்பம் ஊட்டி உள்ளார். காதலனின் அக மற்றும் புற அழகை 'அழகிய மணவாளன்' என்னும் பாடலில் அற்புதமாக தீட்டியுள்ளார் கவிஞர் அவர் போல் மணவாளன் யாரடி? எனத் தோழியிடம் கேட்டு தன் உள்ளங்கவர் கள்வனைக் குறித்துத் தலைவி வெளியிடும் அழகு பாட்டில்,

கவர்கின்ற மொழி பேசும் சொல்லழகன் - என்பால்
காலமெ லாம் மொழியும் அன்பழகன் - ஆணழகன்
உறவாடி மகிழ்வூட்டும் குணத்தழகன் - கொள்கை
உரமேறி நிற்கின்ற மனத்தழகன்
நிறமான உடலாலே வனப்பழகன் - என்றன்
நிழலான அவர்தானே எனக்கழகன் - அழகன்

'சொல்லழகன்', 'அன்பழகன்', குணத்தழகன்', 'மனத்தழகன்', 'வனப்பழகன்', 'நடையழகன்', 'உடையழகன்' என்பது அழகன் என்ற சொல்லுக்கே அழகு சேர்ப்பது போல் அமைந்துள்ளது கவிஞரின் அடுக்குமொழியை வெளிப்படுத்துகிறது. சமூகத்தின் அநீதியை சாடும் கவிஞரின் உள்ளத்திலும் குளிர் நிலவாய் காதல் கொட்டுகிறது என்பதற்கு இதுவே சான்று.

மனக்கதவு திறந்தது

பணியிலிருந்து விடுபட்ட பொழுது கவிவானில் சிறகடிக்க 'திறந்தன கதவுகள்' என்ற தலைப்பில்,

கூண்டின் கதவுகள் திறந்தன என்
கோலச் சிறகுகள் விரிந்தன
யாண்டும் நினைவுகள் பரந்தன - என்
ஆசைக் கனவுகள் உயர்ந்தன

என்று தமிழ்ப்பணிக்கு ஆசிரியப் பணி தடையாக இருப்பதாக எண்ணிய கவிஞர் 'கூண்டின் கதவுகள் திறந்தன' எனத் துள்ளித் திரிந்த மானைப் போல் மகிழ்வோடு பாடியதை உணர முடிகிறது.

நானொரு பாடும் பறவை - பொழிவேன்
நாடொறும் பாடல் நறவை (பாடல்.6)

என்று பாடியதில் இருந்து தமிழ்ப் பற்றை உணரமுடிகிறது

முடியரசனின் கவிதைகளில் அழகியல் உணர்வும், எண்சீர் விருத்தப் பாடல் அதிகம் பயின்று வருவதையும், வளமான கற்பனையும், விழுமியங்கள் நிறைந்த சொல்லாட்சியையும் பார்க்கமுடிகிறது.

மொழிக் குலத்தில் முந்தி வரும் தெய்வமே
என்னைச் சூழ்ந்து மொய்த்து வரும்
துன்பமெல்லாம் நீக்கிஅருள் புரிவாய் அம்மா
என்று தமிழ் வாழ்த்தாக முரசறைந்து

பாடியுள்ளதைக் காண முடிகிறது. "பாடுவது என் தொழில் அன்பும் பண்பும் எனதிரு விழி; பாடிடுவேன் புது உலகை அங்கே படைத்திடுவேன் பொதுவுடைமை" என்ற வைரவரிக்குப் பொருத்தமானவர் முடியரசர். அவர் கவிகள் வீறுகொண்டு எழட்டும்.. விண்ணதிர முழங்கட்டும்.. பாடுங்குயில் பாடல்கள் பாரெங்கும் பரவட்டும்.

பாடிப்பறந்த குயிலின் வரலாற்றுச் சிறகசைப்புகள்

பேரா.தெ.வெற்றிச்செல்வன் *

வரலாற்றாசிரியர்கள் தம் ஆய்வுக்குறிப்புகள் வழியாக முன்வைக்கும் சித்திரத்தை விட, சுயசரிதைகள் மூலம் பார்க்கக் கிடைக்கிற வரலாற்றுச் சித்திரம் நெருக்கமாக உணரவைக்கிறது என்கிறார், பாவண்ணன். ஒரு தனிமனிதனின் வரலாறு, அவனால் எழுதப்படும் அளவு, முழுமையோடும் உண்மையோடும், வேறு எவராலும் எழுதமுடியாது என்றுரைக்கும் ஆங்கில அறிஞர் டாக்டர் ஜான்சனின் கருத்து இங்கு எண்ணத்தக்கது.

“பொய்மைவழி உலகம் இயங்கும் இந்நாளில், வாழ்க்கை வரலாறுகள் வெளிவராது இருத்தல் நல்லது. அவை வெளிவருமாயின் அவரவர் வரலாற்றை எழுதுவது அறம். அப்பொழுதுதான் நண்பரின் உயர்வு நவிற்சியும், பகைவரின் காழ்ப்புணர்ச்சியும் இடம்பெறாது ஒழியும் என்று” தெரிவிக்கும் திரு.வி.க.வின் கருத்து, இதனோடு ஒப்புநோக்கத் தக்கது. இன்னொருபுறம் இதற்கு நேர்எதிராக திருமதி அம்புஜத்தம்மாள், சொல்வதையும், இங்கு மனங்கொள்ளலாம். ‘என் தந்தையார்’ (சீனிவாசய்யங்கார்) என்னும் வாழ்க்கை வரலாற்று நூலில், தன் வரலாறு எழுதுவது பற்றிப் பேசுகையில், “என் தகப்பனாருக்கு சுயசரித்திரம் என்றாலே பிடிக்காது. சுயசரித்திரம் எழுதுவோரை அவர் கேலி செய்வதும் உண்டு. பட்சபாதமில்லாமல், தன்னைப்பற்றி தானே எழுதிக்கொள்வது மகாத்மாக்களாக இருப்பவர்கள் தவிர, வேறு எவருக்கும் சாத்தியமில்லை என்பது, அவர் கொள்கை. அதுவே என் அபிப்பிராயம் கூட” என்கிறார்.

அவரது கூற்றில் நியாயம் இருக்கவே செய்கிறது. மார்க்சியம் சொல்லும் விமர்சனம், சுயவிமர்சனம் மீது தீராப்பற்றும், இதயசுத்தியும் இருக்கும்போது மட்டுமே, அது சாத்தியம். சுய தம்பட்டம், மிகை உணர்ச்சி, அகவயமான பார்வை, இவற்றைக் களைந்து, ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காணல் என்னும், காய்தல், உவத்தல், அற்ற பரிபக்குவ நிலையும் இருப்பின் நம்பகத்தன்மையோடு தன்வரலாறு அமையும் . இப்படியான, பல கருத்தியல் நிலைகள் இருந்தாலும், வடிகட்டி வாசிக்கையில் மட்டுமே, வாசிப்புச் செயல்பாட்டின்

---

* அயலகத் தமிழியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

பொறுப்புணர்ச்சி சார்ந்து மட்டுமே, பல நுணுக்கமான கூர்மையான தரவுகள் கருவூலமாகக் கிடைக்க வாய்ப்புண்டு. அப்படி வாசிக்கக் கிடைத்த ஒரு தன்வரலாறுதான் பாட்டுப்பறவையின் வாழ்க்கைப்பயணம் என்கிற தலைப்பிலான கவியரசு முடியரசன் அவர்களின் தன்வரலாற்று நூல்.

தம் சமகாலத்தில் தாம் கண்ட, கேட்ட, வாழ்ந்த, அனுபவங்களின் செழுமையான சித்திரத்தை இத் தன்வரலாறு நமக்கு அறியத்தருகிறது. இந்தி எதிர்ப்புப் போராட்டம், தமிழ் உணர்வுக் கொள்கைகள் வளர்ந்த காலகட்டம், திராவிட இயக்கத்தை மக்கள் எதிர்கொண்டவிதம், தமிழ் மண்ணில் விளைந்த போராட்டங்கள்..... இரத்தமும் கண்ணீரும் சிந்தப்பட்ட அந்தக் காலகட்டங்கள்..... நேர்ந்த மாற்றங்கள்.... இவையாவும் ஒரு கோலமென நம் கண்முன்னே (முடியரசனின் தன் வரலாற்று நூலில்) விரிகிறது.

“மனிதர் ஒருவர் எழுதும் தன்வரலாறு, அவரின் எழுத்தாற்றலை மட்டும் வெளிப்படுத்துவது இல்லை. சமூகத்தில் அவரது பங்களிப்பு குறித்தும், அறிந்துகொள்ள துணைபுரிகிறது என்று ஆ. சிவசுப்பிர மணியம் சொல்வது, மிகப்பொருத்தமானது என்று தோன்றுகிறது. சுவாரஸ்யம் ததும்பும், தனிமனித அனுபவங்கள் மட்டுமல்லாமல், சமூக அனுபவமாக பார்க்கத்தக்க பல விடயங்களை, வரலாற்றில் பதியத்தக்க தனித்த சுவடுகளை அடையாளம் காட்டுகிறது, இந்தத் தன்வரலாறு. இது, தமிழ்ச்சூழலில் எவ்விதம் வாசிக்கப்பட்டிருக்கிறது? எந்த அளவுக்குப் பரவியிருக்கிறது? என்பது தெரியவில்லை எனினும், இந்தத் தன்வரலாறு மூலம் பலருக்கும் முடியரசனாரின் வாழ்வுதந்த பாடங்களும்.. போராட்டங்களும்.. சிந்தனைகளும் என வரலாற்றின் புதிய வாயில்களைத் திறந்துகாட்ட ஒரு பெரும் வாய்ப்பு உருவாகியுள்ளது எனத்தோன்றுகிறது.

“முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளியிருந்த தம்புசெட்டித் தெருவில் ‘ஆர்.எஸ்.எஸ்.’ சங்கமும் கூடுவதுண்டு. என் மாணவர் சிலர் அங்கே செல்வதுண்டு. என்னைப் பற்றிய பேச்சு அங்கு எழுந்திருக்கிறது. அம்மாணவர் என்னிடம் வந்து, ‘ஐயா, உங்கள் தலையை எடுத்து விடுவதாக ‘ஆர்.எஸ்.எஸ்.’காரர்கள் கூறுகிறார்கள்’ என்று முறையிடுவர். ‘காந்தியைக் கொன்றவர்களுக்கு என் தலையை எடுப்பது எளிதுதானப்பா.. அதனால் எனக்குப் பெருமைதான்; நீங்கள் கவலைப்பட வேண்டாம்’ என்று ஆறுதல் கூறுவேன். ‘நாங்களும் உறுப்பினர்கள்தான்

ஒரு நாளும் அப்படி நடக்க விடமாட்டோம்' என்று உணர்ச்சிவயப்பட்டுக் கூறினர். கூறியோர் பார்ப்பன மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது'' என நூலில் குறிப்பிடப்படும் இடம் ஒரு அரசியல் சகிப்பற்ற தன்மையை அல்ல... நகைமுரணை அல்ல... விறுவிறுப்பை அல்ல... அந்தக்காலத்திலிருந்து கருத்தைக்கருத்தால் ஏந்திக்கொள்ளவோ, ஆக்ககரமான விமர்சனத்தையோ ஏற்றுக்கொள்ளாத பாசிசக்கும்பலின் போக்கைப் பறைசாற்றுகிறது. எல்லோருக்கும் போலவே இளம்பருவமும் பள்ளிப்பருவமும் வாய்த்த சூழலில் குறிப்பிடத்தக்க செய்திகள் துரைராசு என்கிற இயற்பெயர் கொண்ட முடியரசன் பணிக்குவந்த காலத்திலிருந்து அரசியல் புகுந்து கலந்து தர்க்க நியாயங்களை எழுப்பி, தமிழ்ச்சூழலின் கதையாடல்களின் மீது இடையீட்டைச் செய்கிறது. கண்காணிப்பின் அரசியலை.... மாற்றுக்கருத்துகளை அன்று சமூகமும் அதிகார வர்க்கமும் எதிர்கொண்ட லட்சணங்களை தன்வரலாற்றின் பக்கங்களில் காணமுடிகிறது.

பாடம் நடத்துவது குறித்த ஒரு விசாரணை பற்றிய விவரணம் முடியரசனாரின் கொள்கைப்பிடிப்பைப் பறைசாற்றுகிறது. ''புத்தகத்தில் ஒரு பாடத்தைச் சுட்டிக்காட்டி, ஏனைய பாடங்களை நடத்துவது போலவே இதையும் மாணவர் உள்ளத்திற் பதியுமாறு நடத்துகிறேன் என்று கூறினேன். அப்பாடம் இந்தி கூடாது என அ.கி. பரந்தாமனார் எழுதிய பாடம். தலைமையாசிரியர் அதைப் படித்துவிட்டு, 'சாதிமறுப்புப் பாடலைக் கரும்பலகையில் எழுதுகிறீர்களாமே?' என்று மீண்டும் வினா எழுப்பினார். அதே பாடப் புத்தகத்திலிருந்த வள்ளலார் பாடலைக் காட்டி, இதைத்தான் எழுதுகிறேன் என்று' விடைகூறினேன்.

'சரி, சரி நான் பார்த்துக்கொள்ளுகிறேன். 'சுயமரியாதைக் காரர்களை உன் பள்ளியில்வைத்து வளர்க்கிறாயாமே?' என்று கல்வியமைச்சர் என்னைக்கேட்டார் இக்குற்றச்சாற்று, நான் கல்வியதிகாரியாகப் பதவியுயர்வு பெறுவதற்குத் தடையாக அமைந்து விட்டது' என்று கூறினார். உங்கள் உயர்வுக்குக் குந்தகம் ஏற்படுகிறதென்றால் நானும் விழிப்பாக நடந்து கொள்கிறேன் என்று கூறி விடை பெற்றேன்'' என எழுதுகிறார்.

எதையும் வீண்விரயம் செய்யாத பெரியாரின் பொறுப்புணர்வைப் பற்றியும் இத்தன்வரலாறு அறியத்தருகிறது. ''மாலையில் வழக்கம் போல விடுதலை அலுவலகம் சென்றோம். அரங்கண்ணல், தவமணி ராசன் இருவரும் அப்பொழுது அங்கு பணியில் இருந்தனர். ஐயா வரப்

போவதாக யாரோ வந்துசொன்னதும், விரைந்தெழுந்து அங்கங்கே கிடந்த வெட்டுத்துண்டுக் காகிதங்களைப் பொறுக்கியெடுத்து வைத்தார்கள். பயன்படாத இவற்றை ஏன் ஒவ்வொன்றாக எடுத்து அடுக்கி வைக்கிறீர்கள்? என்றோம். 'ஐயாவந்தால் இப்படி வீணடிக்கிறீர்களே யென்று திட்டுவார்' என்று கூறினர். வெட்டுத்துண்டு தானே எதற்குப் பயன்படப்போகிறது? என்றேன். 'மாநாட்டு நுழைவுச்சீட்டு அச்சடிக்க ஐயா பயன்படுத்துவார்' என்றவுடன், ஐயாவின் சிக்கனத்தை எண்ணி யெண்ணி நகைத்தோம்.'' என முடிகிறது, அந்தப்பதிவு.

முடியரசனாரின் தர்க்கப்பேச்சுக்கு சிறந்த உதாரணமாக அவர் எழுத்தாளர் பகீரதனுக்கு விடைபகர்ந்த நிகழ்வு, குறிப்பிடத்தக்கது. “பிறிதொருகால், அ.இளங்கோவனும் நானும் 'பகீரதன்' என்ற எழுத்தாளரைச் சந்திக்க நேர்ந்தது, இளங்கோவன், 'இவர் முடியரசன்' என என்னை அறிமுகஞ் செய்துவைத்தார். உடனே அவர், 'முடியரசனா?' இந்தப் பெயர் 'அக்ளி'யாக இருக்கிறதே, என்று முகஞ்சுளித்தார். முடி என்றவுடன் தலையில் முளைக்கும் முடிதான் அவருக்குத் தெரிந்திருக்கிறது. அதனால் 'அக்ளி' என்று கூறி விட்டார்.

என்ன ஐயா! இப் பெயரை 'அக்ளி' என்கிறீர்களே! பூவராகன் (நிலப்பன்றி) வராகமூர்த்தி (பன்றிவடிவன்) என்றெல்லாம் பெயர்கள் இருக்கின்றனவே.. அவை உங்களுக்கு 'அக்ளி'யாகத் தோன்ற வில்லையா? அது கிடக்கட்டும். உங்கள் இயற்பெயர் 'மகாலிங்கம்' அல்லவா? 'லிங்கம்' என்றால் குறி என்று பொருள், 'மகாலிங்கம்' என்றால் பெரியகுறி என்றல்லவா பொருள். இது உங்களுக்கு 'அக்ளி'யாகத் தோன்றவில்லையா? என்று நான் விளக்கினேன்.அவருக்கு முகம் சுருங்கி விட்டது. 'என்ன இருந்தாலும் இந்தக் காலத்துக்கு ஏற்றபெயரில்லை' என்று மழுப்பினார்''. பகீரதனிடம் இப்படிக் கடும் வாக்குவாதம் செய்ததை பகீரதப் பிரயத்தனம் என சுட்டலாமோ எனத்தோன்றுகிறது.

முடியரசனாரின் நாட்குறிப்பிலிருந்து எடுத்துக் கையாளும் பத்தி ஒரு வரலாற்றைப் பேசுகிறது. “மயிலை சீனிவேங்கடசாமி பேசும்பொழுது, நூல் நிலையத்துக்காக 1500.00 உருவா விபுலாநந்தர் வேண்டியபொழுது, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த பார்ப்பனர் ஒருவர் தடுத்துவிட்டார் என்றும், தமிழர் எழுதிய நூலைப் பாடத்திட்டத்தில் அமைக்க மறுத்துப் பார்ப்பனர் எழுதியதையே

பாடமாக வைத்தனர்'' என்றும் குறிப்பிட்டார். ஒரு காலத்தில் அறிவாண்மைக்குப் பேரும் புகழும் பெற்ற, இடைக்காலத்தில் கல்வி நீர்த்தலுக்கும் ஊழலுக்கும் அறிவு நாணயமற்ற செயல்பாடுகளுக்கும் பெயர்போன அண்ணாமலைப் பல்கலைக்கழக அரசியல் அநீதிப்போக்குகளை தனியே ஆய்வு செய்யுமளவுக்கு விரிந்து பரந்திருக்கிறது. இதற்கான சில புள்ளிகளை இந்நூலில் காணமுடிகிறது.

நான் கலப்பு மணம் செய்து கொண்டது போலவே, என் மக்களுக்கும் கலப்பு மணம் செய்து வைக்க வேண்டும் என்ற கொள்கையில் உறுதியாக இருந்தேன். சாதியை ஒழித்து விடலாம் என்ற நம்பிக்கையில்தான் அப்படி உறுதிபூண்டேன்.என் மூத்தமகள் புலவர் குமுதத்துக்கு மணமகன் தேடும் பொருட்டுப் பலரிடமும் சொல்லிவைத்தேன். வை.சு.மஞ்சுளாபாய் அம்மையாரிடமும் சொல்லியிருந்தேன். சாதி ஒழியவேண்டும் என்று மேடைதோறும் பாடிவந்த ஒருவரின் மகள் வீட்டில் மணமுடிக்கக் கருதி, அம்மையார் தொடர்பு கொண்டார். 'நம்ம சாதியிலேயே பாருங்கள்' என்று அவர்கள் சொல்லிவிட்டனர். இதையறிந்து ஏமாற்றத்துக்கு ஆளானேன். இருப்பினும் தளரவில்லை.

புதுக்கோட்டையைச் சார்ந்த கொப்பனாபட்டி என்ற ஊரில் என் தலைமையில் ஒரு சீர்திருத்தத்திருமணம் நடைபெற்றது. அப்பொழுது சாதிப்பிளவுகளைக் கண்டித்துப் பேசிவிட்டு, என் மகள் கதையையும் கூறி, என்மகளுக்குக் கலப்புமணந்தான் செய்வேன். மணமகன் கிடைக்கவில்லையென்றால் என்மகளைக் கிணற்றில் எறிந்து கொல்வேனே தவிர, ஒரு சாதிக்குள் செய்துகொடுக்கமாட்டேன் என்று உணர்ச்சி வயப்பட்டுப்பேசிவிட்டேன். என்று அறைகூவல்விட்ட கவிஞர் எப்படியோ என் மக்கள் மூவருக்கு என் கொள்கைப்படி கலப்புமணம் செய்து வைத்துவிட்டேன். எஞ்சிய மூவருக்கும் (குமணன், செல்வம், அல்லி) அவ்வாறே செய்துவிடின், என் இல்லத்தில் ஆறு சாதிகளைச் சார்ந்தோர் இருப்பர், அவர் யாவருங் கேளிர் ஆகிவிடுவர், சாதியை நாட்டில் ஒழிக்கமுடியவில்லையே என்ற ஏக்கம் இருப்பினும், என் வீட்டிலாவது சாதிஒழிந்ததே என்ற பொந்திகை (திருப்தி)யுடன் இருப்பேன் என சாதித்துக்காட்டி, நிறைவடைகிறார். இப்படி வார்த்தைக்கும் வாழ்க்கைக்கும் இடைவெளியில்லாத நேர்மையும் நாணயமும் உடையவராக விளங்குவதொன்றே அவரின் வெற்றிப்பெருமிதத்துக்கான எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

'வலைப்படா மயில்' என அழகான கவித்துவத் தலைப்பிட்டு, அவர் மீது புல்லுருவிகள் சுமத்திய வீண் பழிகள்..அவற்றிலிருந்து மீண்ட

நிகழ்வுகள் குறித்துப்பேசும் இடங்கள் குறிப்பிடத்தக்கவை. "என்பாற் பயின்ற திராவிடர் கழகத்தைச் சேர்ந்த மாணவரும், பேராயக் கட்சியைச் சேர்ந்த பெற்றோர் சிலரும் கூடி, என் மேற் சில குற்றங்களைப் புனைந்து, அப்பொழுதிருந்த முதலமைச்சர் பக்தவத்சலனாருக்கு எழுதிவிடுக்க, அதனை அவர், மண்டலக் கல்வி அலுவலருக்குத் திருப்பிவிடுக்க, அவர், எங்கள் மாவட்டக் கல்வி அலுவலருக்குத் திருப்பி விட்டார். அவர், 31.3.67 நாளிட்ட கமுக்க அறிக்கை (இரகசிய அறிக்கை) யொன்றை, எங்கள் பள்ளித் தாளாளருக்கு உய்த்தார். அவ்வறிக்கையில் என்மேற் சுமத்தப்பட்ட குற்றங்கள் வருமாறு :

1. தமிழாசிரியர் திரு. முடியரசன் 26, 27.11.66 தேதிகளில் காரைக்குடியில் நடைபெற்ற இந்தி யெதிர்ப்பு மாநாட்டை நடத்துவதற்கு உதவி செய்தமை, அம்மாநாட்டில் கலந்து கொண்டமை.

2. வகுப்புகளில் இவ்வாசிரியர் வகுப்பு நேரங்களில் அரசியலைப் பற்றி மாணவர்களுக்குக் கூறுதல்.

3. வகுப்பு நேரத்தில் மாணவர்களைக் கொண்டே தான் எழுதும் கவிதைகளையும் கட்டுரைகளையும் எழுதச் சொல்லி அவற்றை அஞ்சலில் அனுப்ப ஏற்பாடு செய்தல்.

4. பாடங்களைச் சரிவரக் கற்பிக்காமல் பிறகாரியங்களில் முழுக்கவனத்தையும் முயற்சியையும் செலுத்துதல்

5. சில அரசியல் கட்சிகளைப் பற்றி இழிவாக வகுப்பறையில் பேசுவது.

ஆனால் நான், உண்மையிலேயே இந்தியெதிர்ப்புக் கொள்கை யுடையவன்தான்.அதற்குச் சான்று என் நூல்கள். அவ்வகையில் என் மேல் வழக்குத் தொடர்ந்தால் பெருமைப்படுவேன். எவ்வகைத் தண்டனையும் ஏற்றுக்கொள்வேன். ஆனால் என் தூய ஆசிரியத் தொழிலை மாசுபடச் செய்தால் நான் பொறுக்கமாட்டேன்" என்று பேசுகிறார்.

மறுநாள் என் நூல்களைக் கொணரச்சொல்லிப் படித்தார். அதன் பிறகு, குற்றம் மெய்ப்பிக்கப் பெறாமையால் கோப்புகள் மூடப்பட்டன. 1965-இல் நாடு தழுவிய இந்தியெதிர்ப்புப் போராட்டம் நடைபெற்ற பொழுது, கல்லூரி மாணவர்கள், 'இந்தி ஒழிக' 'பூங்கொடி தந்த முடியரசன் வாழ்க' என்றெல்லாம் வழியெங்கும் எழுதிவைத்தனர். அது கண்ட பேராயக்கட்சியினருள் சிறுமையாளர்தாம், இவ்வாறு

பழிசுமத்தினர் என்பதைத் தெரிந்துகொண்டேன். நான் அடிக்கடி, புதுக்கோட்டைக்குச் செல்வதுண்டு. செல்லும் பொழுதெல்லாம் உளவறிவோர் என்னைப் பின் தொடர்ந்துள்ளனர். பல முறை தொடர்ந்தும் பயனில்லாமல், அலுத்துப் போய் அவர், தம் நண்பரிடம் 'என்னய்யா! முடியரசன் என்று ஒரு வாத்தியாரை ஃபாலோ பண்ணச் சொன்னாங்க. நானும் பலதடவை புதுக்கோட்டைக்குப் போனேன். அந்தஆளு ஆஸ்பத்திரிக்கும் ஸ்டுடியோவுக்கும் போயிட்டு வர்ராறே தவிர, வேற ஒரு எழவையுங் காணோம்' என்று சலிப்புடன் சொல்லியிருக்கிறார். அவர் நண்பர் ஓர் ஆசிரியர், பால்ராசு என்பது அவர் பெயர். அவர் எனக்கும் வேண்டியவர். அனைத்தையும் என்னிடம் கூறிவிட்டார்.சிறை செய்வார்களென்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். சிறையிலிருந்து கொண்டே 'வீரகாவியம்' என்ற நூலை எழுதி முடித்துவிடலாம் என்றும் கோட்டை கட்டியிருந்தேன். ஆனால் கோட்டை தகர்க்கப்பட்டது. பேராயக் கட்சியைச்சார்ந்த - செல்வாக்கு மிக்க - என்னை நன்கு அறிந்த ஒருவர் முயற்சியால் பட்டியலிற் சேர்க்கப்பட்ட என் பெயர் நீக்கப்பட்டது. என்று எழுதும்பொழுது, சிறையேகுவதைக்கூட விரும்பி ஏற்கக் காத்திருந்த, அப்படி வாய்த்தாலும் அங்கு போய் நூலெழுதும் திட்டத்துடன் இருந்த போராளியான கவிஞர், இவ்வாறு வலியறியாது, கற்பனை வானிற் பறந்து கொண்டிருந்த காரணத்தினாற்றான், பேரறிஞர்அண்ணா அவர்கள் 'முடியரசன் திராவிட நாட்டின் வானம் பாடி' எனக் குறிப்பிட்டனர் போலும் என்று சுயமதிப்பிட்டுரைக்கிறார்.

சீரங்க நாதனையும் தில்லைநட ராசனையும்
பீரங்கி வைத்துப் பிளக்கும்நாள் எந்நாளோ?'

என்ற பாடற்பகுதி, அக்காலத்தே எங்கும் பேசப்பட்டது. இது பாவேந்தர் பாட்டென்பது பலர் எண்ணம். பேராசிரியர் ஆ.முத்து சிவன் என்பார் தமது நூலொன்றில், இப்பாடல் பாவேந்தர் பாடலென்று கூறித் தாக்கியெழுதியிருக்கிறார். பாரதிதாசன் நூல்களில் இப்பாடல் யாண்டும் இடம்பெறவில்லையென்பதை நான் அறிவேன். எனினும் பாவேந்தரிடம் கேட்டுப் பார்ப்போம் எனக்கருதி, ஐயா, 'சீரங்கநாதன்' எனத் தொடங்கும் பாடல் உங்களுடையதா? என்று வினவினேன். 'அது என் பாட்டில்லப்பா, எவனோ நல்லாப் பாடியிருக்கிறான்' என்று சிரித்துக்கொண்டார். இது 1956-ஆம் ஆண்டு நிகழ்ந்ததென்று கருதுகின்றேன். ஆண்டு பல ஆகி விட்டமையால்,மீண்டும் ஒரு திங்களுக்கு முன் கவிஞர் மன்னர் மன்னனுக்கு எழுதிக்கேட்டேன்.'சீரங்கநாதனையும்.... என்று தொடங்கும்

பாடல்வரி, பாவேந்தருடையதன்று. நாகை அம்மையப்பன் பாடலில் வருகிறது. இது குறித்தும் நான் ஆதாரம் தேடிஇருக்கிறேன்,' என்று 26-7-1987-ல் மன்னர் மன்னன் மறுமொழி எழுதியிருந்தார். பாவேந்தர் பாடல்களிற் காணப்பெறும் வேகத்தையறிந்த பலரும், கடவுளர், பீரங்கியால் பிளக்கப்படும் பாடலும் அவருடையதாகத்தானே இருக்கும் என்று மயங்கிவிட்டனர். சிலருக்கு இன்னும் அம் மயக்கந் தீரவில்லை. என்று எழுதிச்செல்கிறார். இது ஒரு முக்கியமான பதிவு.சொல்லப்படும் செய்திகளை வடிகட்டிப்பார்க்கவும் மெய்ப்பொருள் காண்பதுவும் அவசியம் எனப் புரியவைக்கிறார். இந்த இடத்தில் இதே போன்றதொரு பிறழ உணர்தல் சார்ந்த செய்தி,

சாகையிலும் தமிழ் படித்துச் சாக வேண்டும்- என்
சாம்பலிலும் தமிழ் மணந்து வேகவேண்டும்

என, பாரதிதாசன் என்னமாய்ப் பாடியுள்ளார் எனச் சிலாகித்துப் பேசும் பட்டிமன்றத் தண்டமிழாசான்கள் மாற்றம் விரும்பா மனநிலையோடு இப்பாடல், பாரதிதாசனால் எழுதப்பட்டதன்று. ஈழத்துக் கவி சச்சிதானந்தம் எழுதியது எனக் காலம்காலமாகச் சொல்லப்பட்டு வந்த போதும் மாற்றிக்கொள்ளாமலேயே கொட்டிமுழக்குகின்றனர். ஜி.யூ. போப் தனது கல்லறையில், தமிழ் மாணவன் உறங்குகிறான் என எழுதிவைத்துள்ளதாகவும் இவர்களே அப்படிச் செப்பிவருகிறார்கள். ஆனால் நேரடியாகச்சென்று போப்பின் கல்லறையைப் பார்த்துவந்த ஆய்வறிஞர் ஆ.சிவசுப்பிரமணியம் அப்படியொரு பதிவை மறுக்கிறார். (பார்க்க: நான் இயக்கிய மறைத்தமிழ் ஆவணப்படம்)

பாரதிதாசனோடு நேரடித்தொடர்பிலிருந்த அவர் பரம்பரைக் கவிஞரான முடியரசன் அவரோடு உரையாடியதைப் பகிர்கிறார், இப்படி. “இடையில் கவிஞரிடம் ஒரு வினாஎழுப்பினேன். ‘ஐயா, பார்ப்பனிய எதிர்ப்பில் மேலோங்கி நிற்கும் நீங்கள் பாரதிதாசன் என்று பெயர் வைத்துக்கொண்டது ஏன்?’ என்றேன். சிரித்துக்கொண்டே, ‘நல்லாக் கேட்டே! அந்தக்காலத்திலே அதேசாதியில் பிறந்த ஒருவன் ‘பார்ப்பானை ஐயர் என்ற காலமும் போச்சே’ என்று துணிந்து பாடினானே! அவனுக்கு எத்தனை தடவை வேண்டுமானாலும் தாசனாயிருக்கலாமே! இது ஒண்ணு போதாதா அவன் சாதிக்கு அப்பாற்பட்டவன் என்றுசொல்ல? அதனாலே தான் துணிச்சலா, பாரதிதாசன் என்று பேர் வைத்துக்கொண்டேன், என்று விடைதந்தார்.

அப்பொழுது அவர் முகத்தில் உணர்ச்சி பளிச்சிட்டுப் படர்ந்தது'' எனப் பதிகிறார்.

மேடைகளில் கொள்கைக்குன்றென நிமிர்ந்த அனுபவங்களைப் பகிர்கையில் "அண்ணா, கலைஞர் இருவருடன் இந்தியையும் மையமாகக் கொண்டு பாடல் புனைந்தேன். நேரடியாகக் குறிப்பிடவில்லை. என் வழக்கப்படி குறிப்பால் உணர்த்தினேன். இராமகாதையில் வரும் இராமன், இலக்குவன், சூர்ப்பனகை இம்மூவரையும் அண்ணா, தம்பி, அரக்கி எனக்கொண்டு என் உணர்ச்சிகளையெல்லாம் கொட்டிவிட்டேன்.

கூட்டத்திலிருந்த பேராயக்கட்சியினர் சிலர் குழப்பம் விளைவித்தனர். அருகிருந்த மற்றையோர் அடக்கினர். என்று நீளும் பதிவில், தலைமையேற்ற தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கனார், "முடியரசன் நன்றாக மாட்டிக்கொண்டார்" என்று கூறினார். "நானா மாட்டிக் கொண்டேன்? இராமன், இலக்குவன், சூர்ப்பனகை தாம் மாட்டிக் கொண்டனர்'' என்றேன். என்று பதிலடி கொடுத்ததையும் படிக்கையில் எங்கும் சமரசமற்ற கவியின் ஆளுமைத்திறம் வியக்கச்செய்யும்.

அத்துடன் அவர் வேடிக்கைப் பேச்சையும் கூட, பதிவிடாமல் விட்டுவைக்கவில்லை. "ஈண்டு மற்றொரு செய்தியையும் குறிப்பிடுதல் வேண்டும். நிகழ்ச்சி முடிந்து இறங்கியவுடன் அப்பொழுது கல்லூரி முதல் வராக இருந்த அலக்சாந்தர் ஞானமுத்து அவர்கள், என் பாடலைப் பாராட்டிவிட்டுக் கையிலிருந்த வெண்சுருட்டை (சிகரெட்டு) நீட்டினார். உடனே, ஒன்றையெடுத்துக் கொண்டேன். தொடர்ந்து தீக்குச்சியைப் பற்றவைத்து அதையும் நீட்டினார். பற்றவைத்துக் கொண்டேன். அருகிலிருந்த பேராசிரியர் முனைவர் வ.சுப.மாணிக்கனார். 'தீ நட்போ?' என மொழிந்தார். முதல்வர் சிரித்துவிட்டார். என, இப்படியெல்லாம் வெளிப்படையாகவும் ஒளிவுமறைவின்றியும் பேசும் கவிஞரது மன ஓட்டத்தையும் ஆற்றொழுக்கான எழுத்தோட்டத்தையும் இளந்தலைமுறைக்கு எடுத்துச்செல்வது மிகவும் இன்றியமையாதது. அருமைப்பாட்டிற்குரியது.

வெல்லும் வீறுகவியரசர் முடியரசன் கவிதைகள்

வெண்பா வேந்தர் புலவர் இராம.வேதநாயகம் *

முகவுரை

திராவிட நாட்டின் வானம்பாடியாகவும், தமிழ்நாட்டுப் பாடுங்குயிலாகவும் பாடிப்பறந்த வீறுகவியரசர் முடியரசனாரின் தமிழ்ப்பற்றை அளவிடஇயலாது. தமிழைத் தம் உயிரினும் மேலாக நேசித்த, சுவாசித்த, வாசித்த, யாசித்த, யோசித்த கவிஞர் அவர்.

தமிழ்ப்பற்று:- தமிழ்மொழியின் சிறப்பைப் பாடும்போது,

"தாயே உயிரே தமிழே நினைவணங்கும்
சேயேன் பெறற்கரிய செல்வமே - நீயே
தலைநின்றாய் இவ்வுலகில் தாள்பணிந்தேன்- நீயிங்
கிலையென்றால் இன்பமெனக்கேது" (நூல்: பூங்கொடி)

உலகின் ஆதிமொழி தமிழே என்பதை உட்பொருளாக்கி "தலைநின்றாய்" என்கிறார். உலகின் முதன் மொழி - மூத்த மொழி தமிழே என்ற கொள்கையில் ஆணித்தரமாய் இருந்தார் முடியரசனார். ஒவ்வொரு மனிதனும் தாயை நேசிப்பது போல் தாய்மொழியாம் தமிழை நேசிக்கவேண்டும். தமிழ்மொழிமேல் பற்றுக்கொள்ள வேண்டும் என்ற கொள்கையில் உறுதியோடு இருந்தவர்.

தமிழ்மொழியைத் தவிர்த்துப் பிறமொழி மோகங்கொள்வதனால் பேசுகின்ற தமிழ்மொழிக்கே அவமானம், தமிழருக்கே அவமானம் என்று கருதினார். தமிழ்மொழிமேல் தீராக்காதல் கொண்ட கரணியத்தால்,

"ஆங்கிலமோ பிறமொழியோ பயின்றுவிட்டால்
அன்னைமொழி பேசுதற்கு நாணுகின்ற
தீங்குடைய மனபோக்கர்வாழும் நாட்டில்
தென்படுமோ மொழியுணர்ச்சி? ஆட்சி மன்றில்
பாங்குடன்வீற் றிருக்கும்மொழி தமிழே என்று
பகர்நாளில் மொழியுணர்ச்சி தானே தோன்றும்"

(நூல்:முடியரசன் கவிதைகள்)

* வடமாதிமங்கலம், திருவண்ணாமலை (மா).

என்று தற்கால பிறமொழி மோகத்தைச் சாடுவதோடன்றி, ஆட்சிக்கட்டிலில் தமிழன்னை அமர்ந்தால் அரியணையில் தமிழ் ஆட்சி செய்தால் பிறமொழி மோகம் விலகும், தமிழ்மொழியின மேல் பற்று வளரும் என்று பாடுகிறார்.

பெயர்தான் தமிழ்நாடே தவிர, ஆட்சிக்கட்டிலில் எவர் அமர்ந்தாலும் தமிழை வளர்ப்பதாக – தமிழை ஆதரிப்பதாக – தமிழ் மேல் பற்றுள்ளவராகச் சொல்வரேயன்றி தமிழை வளர்க்கச் செயல்பூர்வ ஆக்கப்பாடுகள் கிஞ்சிற்றுமில்லை. நாளொருபொழுதும் பொழுதொரு வண்ணமும் மழலையர் பள்ளிகளில் ஆங்கிலம், இந்தி மற்றும் வடமொழி ஆக்கங்கள் – தாக்கங்கள் – ஆதிக்கங்கள் வளர்ந்த வண்ணமே தான் உள்ளன. "எல்லா மொழிகளையும் கற்றுவை / ஆனால் தாய்மொழி மேல் பற்றுவை" என்ற தத்துவத்தையும் ஏற்காமல் முழுமையாகத் தமிழ்மொழியையே தவிர்த்தல் எவ்விதத்தில் நியாயம்? இதுபற்றி முடியரசனார் தம் கவிதையில்,

> "மொழி பலகற்கச் செல்லுங்கள் – ஆனால்
> முத்தமிழ் உயிராச் சொல்லுங்கள்" (நூல்: பாடுங்குயில்)

உலகமொழிகள் பலவற்றைக் கற்றுக்கொள்ளுங்கள் ஆனால், உலகின் முதல் மொழியும், நம் அன்னை மொழியும், அழகு மொழியுமான தமிழை உயிராய்ப் பேணி தாய்மொழி வழி கல்வி பயிலுங்கள். தாய்மொழியே தலையாய மொழிவேற்று மொழிகள் இங்கு இடம்பெறவேண்டாம் என்று பல படிவங்களில் – இசை வடிவத்தில் கூடப் பொங்கி எழுகிறார் முடியரசனார்.

மேலும் முடியரசனாரின் தமிழ்ப்பற்றைக் கூறவேண்டுமெனில், தமிழாசிரியராகப் பணியாற்றும் காலகட்டத்தில் பள்ளி வகுப்பறையில் அவர் உள்ளே நுழைந்ததும் "வெல்க தமிழ்" என்பார் - உடனே மாணவர்களும் ஒரு சேர "வெல்க தமிழ்" என்பர் என்ற நிகழ்வை எடுத்துக்காட்டலாம்.

இவ்வாறு தமிழ்நெஞ்சராகவும், கொள்கை மறவராகவும், தமிழ் அரிமாவாகவும், தந்தை பெரியார் பாராட்டிய பகுத்தறிவுக் கவிஞராகவும் வாழ்ந்து வழிகாட்டிய முடியரசனார் அனல் கக்கும் கவிதைகளை, இளைஞருக்கான எழுச்சிப் பாடல்களை, புத்துணர்வூட்டும் இசைப்பாடல்களை யாத்துப் பெருமை சேர்த்தவர்.

திண்ணைப் பள்ளிக்கூடத்தில் தொடங்கி, தீந்தமிழ்க் கல்லூரியில் பயின்று, திராவிட இயக்கத் தளகர்த்தராகி தமிழியக்கமானவர். இதனை, "திராவிட இயக்கத்தின் முன்னோடிக்கவிஞர் - திராவிட இயக்கத்தின் ஈடு இணையற்ற தளகர்த்தர்களில் ஒருவர். இன்று திராவிட இயக்கம் நிமிர்ந்து நின்று செங்கோலோச்சுகிறதென்றால்.. அன்று முடியரசனார் ஆற்றிய இலக்கியப் பணியும் காரணம்" என்ற கலைஞர் கருணாநிதியின் கூற்றும்,

"மறைமலையடிகள், பாவணர் வழியில் முடியரசனாரும் தமிழியக்கத்திற்குத்தாம் இயற்றிய கவிதைகள் மூலம் பெருந்தொண்டு புரிந்துள்ளார். தமிழ் உயர்வு பெற தமிழ்த்தவம் செய்யும் கவிஞர். இவர்காலத்தில் வாழ்வது நாம் பெற்ற பெரும்பேறு. இவர் பாடல்கள் தமிழ்த்தாய்க்கு அணிகலன்கள் மட்டுமல்ல படைக்கலன்கள். முடியரசன் ஓர் தமிழியக்கம்" என்ற மணிவாசகர் பதிப்பக நிறுவனர் பதிப்புச்செம்மல் மெய்யப்பனாரின் கூற்றும் மெய்ப்பிக்கின்றன.

சாதிக்க வேண்டும் என்ற துடிப்பில் – செயல்பாட்டில் சாதிமறுப்புத் திருமணம் செய்து சமூகத்துக்கு வழிகாட்டியாக விளங்கியவர். தான் மட்டுமின்றித் தம்மக்களுக்கும் சாதிமறுப்புத் திருமணங்களையே செய்துவைத்து ஒளிகாட்டியாகத் திகழ்ந்தவர். சாதியின் பேரால் ஏற்படும் பூசல்களை, உயர்வு தாழ்வுகளை எதிர்த்து கவிவாளால் போராடியவர். சமூக நலத்திற்கான முற்போக்கு எண்ணங்களைச் செயல்படுத்தியவர்.

கற்பனைநயம்

ஆற்றுநீரில் தாமரைமலர் முளைப்பதில்லை – மலர்வதில்ல என்பதைத் தம் கற்பனையில்,

"தன்பால் செந்தாமரையின்றி
முகங்காட்ட முடியாஆறு
மாள்வதற்குக் கடல் நோக்கி
ஓடுதல்பார் ...."

(நூல்:முடியரசன் கவிதைகள்)

என்று பாடி ஆறாகிய நம்மிடம் தாமரை மலரவில்லையே என்று கருதி அவ்வாறு (ஆறு) தம்மை மாய்த்துக் கொள்ளக்கடலை நோக்கி ஓடுகிறது என்கிறார். எவருக்கும் எட்டாக்கற்பனை! எவரும் இதுவரை எழுதாக் கற்பனை!

கவிஞன்

உழைப்பின் உயர்வு, காதல், அன்பு, வீரம், பெரியோரைப் போற்றல் போன்ற இன்னும் பலபொருண்மைகளை உள்ளடக்கித் தம்கவிதைகளைப் பல்வகையாகப் பாடியுள்ளார். கற்பனை, உவமை, உருவகம், மொழியுணர்ச்சி, சொல்லாட்சி, இனஉணர்வு, இயற்கை ஈடுபாடு, சமூகச்சீர்திருத்தம், பகுத்தறிவுக்கொள்கை ஆகியவற்றைப் பாடுபொருள்களாகக் கொண்டு பலநூறு பாடல்கள் படைத்துள்ளார் வீறுகவியரசர் முடியரசனார்.

"காசுக்குப் பாடுபவன் கவிஞன்அல்லன்
கைம்மாறு விழைந்துபுகழ் பெறுதல்வேண்டி
மாசற்ற கொள்கைக்கு மாறாய் நெஞ்சை
மறைத்து விட்டுப்பாடுபவன் கவிஞன் அல்லன்:
தேசத்தைத் தன்னினத்தைத் தாழ்த்திவிட்டுத்
தேட்டையிடப் பாடுபவன் கவிஞன் அல்லன்
மீசைக்கும் கூழுக்கும் ஆசைப்பட்டு
மேல்விழுந்து பாடுபவன் கவிஞன் அல்லன்"

(நூல்:கவியரங்கில் முடியரசன்)

பணம் - பதவிக்கும், தான் மட்டும் வாழவும், தன்நாட்டையும், இனத்தையும் தாழ்த்திவிட்டு, மக்களை ஏமாற்றி, நிலையான கொள்கையற்றுப் பாடுபவர்கள் கவிஞர்கள் அல்ல எனத் தோலுரித்துக் காட்டிக் கவிஞர் பாடியமை பாடிப்பாடிப் போற்றத்தக்கது.

பிறர்

மகாகவி பாரதியார், வீறுகவி முடியரசனாருக்குத் தாத்தா (பாட்டன்) போன்றும், புரட்சிக்கவி பாரதிதாசன் தந்தை போன்றும் காணப்பட்டவைகள் எனலாம்.

"பாரதியார் இக்கவிஞருக்குப் பாட்டனார் பாரதிதாசனார் இக்கவிஞருக்குத் தந்தை போன்றவர். அப்பெருங்கவிஞர்களுடைய வழியிற் சென்று ஒவ்வொரு விதத்தில் அவர்களையெல்லாம் வென்றுவிட்டார் இவர் (முடியரசனார்)" என்று முடியரசனார் பற்றி டாக்டர் அ.சிதம்பரநாதனார் 14.04.1960 இல் வழங்கிய பொன்னுரை ஈண்டுக் குறிக்கத்தக்கது (நூல்: கவியரங்கில் முடியரசன், பக். 9).

பாவேந்தர் பாரதிதாசன் முடியரசனார் பற்றிப் பேசும்போது, "என் மூத்த வழித்தோன்றல் முடியரசனே" என்றார். அறிஞர் அண்ணா முடியரசனாரைக் குறிப்பிடும்போது, "திராவிட நாட்டின் வானம்பாடி" என்று புகழ்ந்தார். கலைஞர் மு.கருணாநிதி எடுத்துரைக்கும் போது, "கவிப்பெருங்கோ" (கவிப்பேரரசர்) என்றார். தவத்திரு குன்றக்குடி அடிகளார், முடியரசனாருக்குக் "கவியரசு" என்று பட்டம் வழங்கிப் பாராட்டினார். கணேசர் செந்தமிழ்க்கல்லூரியில் முடியரசனார் மாணவராகப் பயின்ற காலத்திலேயே "வீரப்புலவர் முடியரசன்" என்று முதல்வர் பட்டம் சூட்டினார். கவிஞர் ஈரோடு தமிழன்பன் குறிப்பிடும்போது,

"புண்படாத நேரம் இருந்ததில்லை
புழுக்கம் படாதநொடி இருந்ததில்லை—ஆனால்
கொள்கைக்கு விடுமுறை கொடுத்து விட்டுக்
குனிந்துஎவர் முன்னும்நின்ற தில்லை முடியரசன்
முடியரசன் பெருமித உயரம்எந்த இமயத்துக்கும் இல்லை
முடியரச வெப்பம் எந்த சூரியனுக்கும் இருப்பதில்லை"

என்று முடியரசனாருக்குப் புகழாரம் சூட்டினார்.

விருதுகள்

தமிழாசிரியராகவும், பல்கக்கழகத்தின் பேராசிரியராகவும், திரைப்படத்துறையில் பாடலாசிரியராகவும் திகழ்ந்த வீறுகவியரசர் முடியரசனார் பல்வேறு விருதுகளுக்குச் சொந்தக்காரர் ஆவார். தமிழ்நாட்டு அரசின் சிறந்த நூல்களுக்கான பரிசு, பாவேந்தர் விருது, தமிழறிஞர்கள் புடை சூழ குன்றக்குடி அடிகளார் வழங்கிய கவியரசர் விருது, சங்கப் புலவர் விருது, கல்வி உலகக் கவியரசு விருது, இரண்டாம் புரட்சிகவிஞர் விருது, தமிழ்ச்சான்றோர் விருது, அரசர் முத்தையவேள் நினைவுப்பரிசு, கலைஞர் விருது, கலைமாமணி விருது, நல்லாசிரியர் விருது . . . .போன்ற பல்வேறு விருதுகளையும், பரிசுகளையும் தன்னகத்தே கொண்ட புகழுக்குரிய தங்கத் தமிழ்க்கவிஞர் வீறுகவியரசர் முடியரசனார்.

இயக்கம்

முடியரசனார் மாந்தநேயத்துக்காகவும், மனிதகுல ஒற்றுமைக்காகவும், முன்னேற்றத்துக்காகவும், ஒப்புரவு வேண்டி 'உலகியம்' பாடினார். தந்தை பெரியார், பாவேந்தர் பாரதிதாசன்,

அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் போன்ற பல தலைவர்களின் தோழமையாலும், கொள்கை ஈர்ப்பாலும் 'திராவிடம்' பாடினார். தமிழ்மொழிகாக்க, தமிழினம் உயர்த்த, தமிழ்நாடு மீட்க, தமிழுணர்ச்சியூட்ட, இளைஞர்கட்குத் தமிழில் புத்தெழுச்சியை – புத்துணர்வை ஊட்ட "தமிழியம்" பாடினார். மேற்கண்ட மூன்று இயங்களையும் தன் உயிர் மூச்சாய்க் கொண்டவர் வீறுகவியரசர் எனில் மிகையில்லாத முற்றான உண்மை.

நிறைவுரை

வீறுகவிஞர் முடியரசன் ஓர் அற்புதக்கவிஞர். அவர் யாரிடத்தும், எப்போதும், எதற்கும் கையேந்தியதில்லை - எதிபார்த்ததுமில்லை. ஓர் பகுத்தறிவுக் கவிஞருக்குரிய இலக்கணமாகவே –இலக்காகவே தம்வாழ்க்கையைத் தமிழ்மொழிக்கும், தமிழினத்திற்கும் விடுதலைக்குமான அர்ப்பணித்த பெருங்கவிஞர்.

இத்தகு சிறப்புகளைப் பெற்ற வீறுகவிக்கு அவர் வாழ்ந்த காரைக்குடியில் அரசுசார்பில் மணிமண்டபம் உருவாக்கவேண்டும். தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் ஏதேனும் ஒன்றிற்கு அன்னாரின் பெயரைச் சூட்டவேண்டும். முடியரசனார் பெயரில் தமிழாய்வு இருக்கைகள் அமைக்கப்படவேண்டும். நடுவணரசு முடியரசனாருக்கு அஞ்சல்தலை வெளியிடவேண்டும். "இரண்டாம் புரட்சிக்கவிஞர்" என்றுபோற்றப்படும் வீறுகவிஞர் முடியரசனாருக்கு உரியமரியாதையும் கௌரவத்தையும் கொடுத்தல் சாலச்சிறந்ததாகும்.

"கவியரசு முடியரசனாரின் கவிதைகளில் மொழிப்பற்று, தமிழ் மக்களின் முன்னேற்றம் மையக் கருத்துக்களாக அமைந்திருக்கும். தன் புகழைப் பரப்பிட, அதற்கான செயற்கையான முயற்சிகளை மேற்கொள்ளாதவர். அவரது கவிதைகளில் கனல் தெறிக்கும். சமூக சமதர்மத்துக்கு எதிரான கருத்துக்களைச் சாடுவார். பழமையை, மடமையை அவர் ஏற்க மறுத்தவர். புதுமையைத் தேடியவர். புதுமை படைத்தவர். முடியரசனாரின் கவிதைகள் காலத்தை வென்று நிற்கும். கவிஞர் பெருமகனார் முடியரசனார்க்கு தக்க நினைவுச் சின்னமாக அவரது தகுதிக்கு மரியாதை தரும் வகையில் உரிய செயல் ஒன்று செய்யப்பட வேண்டும். தமிழ்நாடு அரசும், தமிழார்வலர்களும் அத்தகு கடமையினைச் செய்து முடிக்க வேண்டும்." -தா.பாண்டியன், பொதுவுடைமைக் கட்சித் தலைவர்

“தமிழுக்காக வாழ்ந்தோர் சிலரே. அந்தச்சிலரில் முதல் விரல் - முடியரசனாரைத்தான் சுட்டும். பிறவிக்கவிஞரான அவர்புலமைப் பெருமிதத்தால் முடிசூடா அரசனாகவே அவர் வாழ்ந்தார். யாரிடமும் “ஈ” என்று சென்று நின்று கேளாத தன்மானக் கவிஞரவர். விருதுகள் அவரைத் தேடிவந்தனவே தவிரயாரிடமும் விண்ணப்பம் போட்டு வாங்கவில்லை. தன்மானக்கவியரசர் முடியரசனார்க்கு தமிழ் மணிமண்டபமும், சென்னையில் சிலையும்வைக்கும் அரசே உண்மையில் தமிழ்நாடு அரசு.” - முனைவர் சரசவதி இராமனாதன், சென்னை

“மரபுக் கவிதையில் மாமன்னர்! / அதனால் அவர் அசல் முடியரசன்! / புதுமைக்கவி! புரட்சிக்கவி! / காலத்தால் அழியாத கவிதகளைக் / காலமறிந்து கொடுத்தவர்! / தேர்ந்த்தெடுத்த பாதையில் திசைமாறாத் தேர்ப்பாகன்! / அவர் சம்பாதித்தது பணத்தியல்ல... இனமானத்தை! / இறுதி மூச்சுவரை / தன்மானம் காத்த தன்மானக்கவிஞர்! / அவருக்கல்லவா கட்டவேண்டும் மணிமண்டபம்! / இடிமுழக்கப்பாட்டெழுதி என்றும் - / விடுதலைக்கேப்பாட்டெழுதும் கொள்கைப் பகுத்தறிவுப் பாட்டரசர் பாட்டெல்லாம் பட்டாளப்பாட்டு” - கவிஞர் பொன் செல்வகணபதி, சென்னை.

மேற்குறிப்பிட்ட தமிழ்ச் சான்றோரின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட நாமும் இணைந்து குரல் கொடுப்போம். செயல் தொடுப்போம்.

வீறுகவியரசர் முடியரசை வீரமாய்க் கூறுவோம்!

தமிழரே கூறுவோம்!

முடியரசனின் தமிழுணர்வுகள்

முனைவர் பழ.ஜானகி*

முன்னுரை

முடியரசன் பன்முகப் படைப்பாளர்; மரபுக் கவிஞர்; தன்னலமற்ற கவிஞர். இவர் படைத்த படைப்புகளுள் "எப்படி வளரும் தமிழ்?" என்னும் நூலில் இடம்பெறும் தமிழுணர்வுச் சிந்தனைகளை ஆய்வது அவசியமாகிறது.

பிறப்பும் படைப்புகளும்

கவிஞர் முடியரசன் 1920 ஆம் ஆண்டு பிறந்தவர். இவரது இயற்பெயர் துரைராசு. சுப்புராயலு சீதாலெட்சுமி தம்பதியின் புதல்வர் ஆவார். இவர் பெரியகுளம் என்ற ஊரில் பிறந்து காரைக்குடியில் வாழ்ந்தவர்; மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பிரவேசப் பண்டிதர் படிப்பையும் மேலைச்சிவபுரியில் உள்ள செந்தமிழ்க் கல்லூரியில் வித்துவான் படிப்பையும் படித்தவர்; முத்திராயலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளியிலும் மீ.சு.வி. உயர்நிலைப் பள்ளியிலும் தமிழாசிரியராகப் பணியாற்றியவர்; எழுபத்தெட்டு வயது வரை தமிழ் நூல்கள் இயற்றி மறைந்தவர். இவர் தமிழ்ச் சமுதாயத்திற்காக முடியரசன் கவிதைகள், காவியப்பாவை போன்ற கவிதை நூல்களையும் பூங்கொடி, வீரகாவியம் போன்ற காப்பியங்களையும் 'எக்கோவின் காதல்' என்னும் சிறுகதைத் தொகுப்பு நூலையும் "அன்புள்ள பாண்டியனுக்கு", "அன்புள்ள இளவரசனுக்கு" போன்ற கடித நூல்களையும் தமிழ் இலக்கணம், பாடுங்குயில்கள் போன்ற கட்டுரைத் தொகுப்பு நூல்களையும் படைத்து கவிஞர் முடியரசன் தமிழுக்குத் தொண்டாற்றியுள்ளார்.

"எப்படி வளரும் தமிழ்?" - நூலின் தமிழுணர்வுகள்

"எப்படி வளரும் தமிழ்?", "மகார் நோன்பு", "ஒருமையில் ஒற்றுமை", "கவிதை பிறந்த கதை", "இருபதாம் நூற்றாண்டில் கவிதை", "கூட்டுக் களியினிலே கவிதை", "மறுமலர்ச்சிக் கவிஞர் பாரதிதாசன்", "கவிதை இன்பம் - சொல்லழகு", "பாவேந்தர் வாழ்வும் இலக்கியப்பணியும்", "வேர்ப்பலா", "தமிழின்பம் தனி இன்பம்", "பார் போற்றும் தமிழர் நாகரிகம்", "புலவர் உள்ளம்", "மங்கல வாழ்த்து" என

---

* உதவிப்பேராசிரியர், சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி, பள்ளத்தூர்.

பதினான்கு கட்டுரைகளில் கவிஞர் முடியரசனின் தமிழுணர்வுகள் உள்ளன.

இவர் அயல்நாட்டில் இருப்பது போல், தமிழ் நாட்டில் அடிப்படையான மொழியுணர்வு இல்லாத நிலையைக் கூறியுள்ளார். தமிழ் கவிதைகளால், காப்பியங்களால், சிறுகதைகளால், கட்டுரைகளால் வளர்ந்தாலும் அறிவியல், மருத்துவம் சட்டம் போன்ற பாடங்களைப் பயிலும்போது தமிழுக்கு முக்கியத்துவம் தராத நிலையை உணாத்தியுள்ளார். இதனை, "விடுதலை பெற்ற பின்னரும் தமிழ்நாடு தன் இயல்புக்கு மாறாகச் சென்று, அறிவுத் துறையில் முழுமை பெற்று திண்டாடிக் கொண்டிருக்கிறது. பாலகர் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை பயிற்றுமொழி வேறாக இருக்கிறது" (முடியரசன், எப்படி வளரும் தமிழ்? எக்கோவின் காதல்? ப.6) சப்பானியரைவிட செருமானியரைவிட தமிழர்கள் தமிழ்மொழிக்காக மன்றங்கள் அமைத்துச் செயல்படுகின்றனர். இவ்வாறு தமிழ் மன்றங்கள் மூலம் வளர்க்கப்பட்டாலும், அறியாமை, தன்னலம், நயவஞ்சகம் போன்ற குறுகிய பண்புகளால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கவிஞர் முடியரசன் கூறியுள்ளார்.

"தமிழர்கள் தாய்மொழியை மதிப்பதில்லை. தாய்மொழியில் அமைந்த இலக்கியங்களை மதிக்கவில்லை என்று கூறிய தாகூரை கவிஞர் முடியரசன் நினைவுபடுத்தியுள்ளார்" (முடியரசன், எப்படி வளரும் தமிழ்? எக்கோவின் காதல்? ப.5). இவர் இளைஞர்கள் மட்டும் தமிழ்ப் பெயர்களைத் தங்களுக்கு வைத்துக்கொண்டு தமிழை மதிப்பதாகக் கூறியுள்ளார்; இசைத்தமிழுக்குக் குறைவான நேரமே ஒதுக்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்; நாளிதழ், கிழமையிதழ், மாதஇதழ் போன்ற இதழ்களில் நிகழும் தமிழ்க் கொலைகளைச் சாடியுள்ளார். கவிஞர் முடியரசன் இத்தகைய இழிநிலைகளைப் பொறுக்காமல், "தமிழ் காவிச்சட்டைக்கு மட்டும் சொந்தமன்று; கறுப்புச் சட்டைக்கு மட்டும் சொந்தமன்று; தமிழ்நாட்டில் உடற்சட்டையெடுத்த ஒவ்வொருவருக்கும் தமிழ் சொந்தம்" (முடியரசன், எப்படி வளரும் தமிழ்? எக்கோவின் காதல்? ப.10) என்ற தன் உணர்வால் தமிழ்மொழியை வளர்ப்பதில் ஒவ்வொரு மனிதனும் ஒற்றுமை உணர்வுடன் திகழ வேண்டும் என்பதைக் கவிஞர் முடியரசன் உணர்த்தியுள்ளார். மேலும் இவரது தமிழுணர்வுகள் விழா உணர்வுகளாலும், பாரதி, பாரதிதாசன் போன்ற வீறுகொண்ட கவிஞர்களின் கவிதைகளாலும் வளர்ந்துள்ளன.

முடியரசன் பார்வையில் விழாவுணர்வு

விழாக்கள் கொண்டாடுவது தமிழரின் தலைசிறந்த பண்பாடாகும். மலர்விழா, தேர்விழா போன்ற விழாக்களைக் கொண்டாடினாலும் சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் கூறிய இந்திரவிழாவைக் கொண்டாடாத நிலை வருந்தத்தக்கதாகும் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் "நம் மொழியில் வேற்றுமொழிச் சொற்கள் கலந்திருப்பது போல நம் விழாக்களிலும் வேற்றுநாட்டினரின் நாகரிகங்கள் தெரிந்தோ தெரியாமலோ கலந்துள்ளது" என்று கவிஞர் முடியரசன் கூறியுள்ளார். (முடியரசன், எப்படி வளரும் தமிழ்? எக்கோவின் காதல்? ப.13) மகார் என்ற சொல்லுக்கு சிறுவர் என்று பொருள் உண்டு. மகார்நோன்பு என்றால் சிறுவர் விழாவைக் குறிக்கும் என்ற கருத்தினையும் பதிவு செய்துள்ளார். "குழந்தைகள் பெற்றோர்களுக்கு மகிழ்வினைத் தருபவர்கள்" என்பதைப் பாண்டியன் அறிவுடை நம்பியின் பாடலால் கவிஞர் முடியரசன் விளக்கியுள்ளார். (முடியரசன், எப்படி வளரும் தமிழ்? எக்கோவின் காதல்? ப.46).

தமிழ் வளர்ச்சியில் முடியரசன்

கவிஞர் முடியரசன் சூழ்நிலைகளே கவிதை பிறப்பதற்குக் காரணமாகும் என்பதை,

"அடஞ்செய்தாய் நீ என்றடித்தேன் - பின்னர்
அழுகின்ற கண்கண்டு நெஞ்சந் துடித்தேன்
குடங்கையில் கன்னத்தைச் சேர்த்துத் துயில்வாய்
குறுநெற்றி எழில்காட்டும் மேலாக வேர்த்து"

(முடியரசன், எப்படி வளரும் தமிழ்? எக்கோவின் காதல்? ப.28)

என்று தன் மகனின் குறும்புத்தனத்தைப் பாடலாக்கி உள்ளார் என்பதை கவிஞர் முடியரசனின் பாடல் வரிகள் மூலம் அறியலாம். தனிநிலைச் செய்யுள், தொடர்நிலைச் செய்யுள், நாடகக் காப்பியம் படைத்த கவிஞர்களாலும் தமிழ் வளர்ந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஆங்காங்கு கவிதைக்குரிய இலக்கணங்களையும், தமிழை இலக்கியங்களால் வளர்த்த பாரதி, பாரதிதாசன், கம்பன், இளங்கோ போன்ற கவிஞர்களைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

முடியரசன் பார்வையில் பாரதிதாசன்

பாரதிதாசன் எழுதிய சமுதாய இன்னல்களைத் துணிவுடன் அஞ்சாமை உணர்வோடு எழுதுவதில் வல்லவர்; உண்மையைச்

சொல்வதில் உயர்ந்தவர். இவர் "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே" என்ற பாரதியாரின் துணிவைத் தன் துணிவாகப் பாரதிதாசன் கொண்டுள்ளார் என்று கவிஞர் முடியரசன் கூறியுள்ளார். (முடியரசன், எப்படி வளரும் தமிழ்? எக்கோவின் காதல்? ப.51) பாரதிதாசன் மூடப்பழக்கங்களை நீக்கப் போராடியவர்; கைம்மைக் கொடுமை நீக்கப் பாடுபட்ட கவிஞர்; கட்டாயத் திருமணமுறையை முறியடித்தவர், சொற்சிக்கனமும் பா நடையும் சிறந்த கவிதைகளை அஞ்சாமை உணர்வுடன் எழுதிய கவிஞர்களாக பாரதி, பாரதிதாசன் போன்றோர் திகழ்ந்துள்ளனர் எனக் கவிஞர் முடியரசன் கூறியுள்ளார்.

முடியரசன் பார்வையில் கம்பன்

கம்பன் உணர்வால் இராமகாதைப் பாத்திரங்களாகி பெண்ணாசையை ஒழிக்கப் பாடுபட்டுள்ளார். உதாரணத்திற்கு குகன் என்னும் பாத்திரமாய் மாறிய கம்பரின் ஒரு பாடல்,

"ஆழ நெடுந்திரை ஆறு கடந்திவர் போவாரோ?
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ?"

(முடியரசன், எப்படி வளரும் தமிழ், எக்கோவின் காதல், ப.49)

போன்ற பாடல் வரிகளைக் கம்பன் படைத்தாலும் குகனே படிப்பவர் மனதில் நிற்கும் விதத்தில் கம்பராமாயணத்தைப் படைத்துள்ளதாகக் கவிஞர் முடியரசன் கூறியுள்ளார்.

முடியரசன் பார்வையில் இளங்கோ

இளங்கோ சிலப்பதிகாரக் காப்பியம் படைத்தவர். இவர் உணர்வால் கண்ணகியாகி விளங்கியதை,

"வாயிலோயே வாயிலோயே
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே"

(முடியரசன், எப்படி வளரும் தமிழ்? எக்கோவின் காதல்? ப.47)

என்று இளங்கோ இப்பாடலை இயற்றியிருந்தாலும் கண்ணகியின் உணர்வை இளங்கோ உணர்ந்து எழுதியதாகக் கவிஞர் முடியரசன் குறிப்பிட்டுள்ளார்.

தொகுப்புரையும் நிறைவுரையும்

அயல்நாடுகளில் சட்டத்துறை, பொருளாதாரத்துறை போன்ற துறைகளைத் தாய்மொழியிலேயே பின்பற்றி வருகின்றனர். தமிழ்நாட்டில் தமிழ் இலக்கியங்கள் பெருகினாலும் தமிழ் இன்னும் வளராத நிலையில் உள. தமிழர்கள் தாய்மொழியை மதிப்பதில்லை என்று கூறிய தாகூரை நினைவுபடுத்தியுள்ளார். தமிழ் மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது என்பது உணர்த்தப்பட்டுள. மனிதனின் வாழ்வில் குழந்தைகள் இன்றியமையாதவர்கள் என்பதும், பண்பாடு வளர்க்கும் சிறுவர் நோன்பு விழாவும் கூறப்பட்டுள. தமிழ்மொழி வளரத் தமிழ் கற்பதுடன் சூழ்நிலையும் அவசியமானது என்பது விளக்கப்பட்டுள. பாரதி, பாரதிதாசன் போன்றோர் அஞ்சாமையுடன் கவிதை எழுதியுள்ளனர் என்பது விளக்கப்பட்டுள. கம்பர், இளங்கோ போன்றோர் உணர்வால் இராமர், வாலி, கண்ணகியாகிப் படைத்த காப்பியங்களும் உள.

இவ்வாறு தமிழறிஞர்களும் தமிழ்ப் புலவர்களும் தமிழை வளர்த்தாலும் தமிழ்மொழியில் அனைத்துத் துறைகளும் இயங்கவில்லை. இந்நிலையை மாற்ற ஒவ்வொரு தமிழர்களும் முனைப்புடன் திகழவேண்டும் என முடியரசன் “எப்படி வளரும் தமிழ்” என்னும் நூலின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார்.

பண்பாட்டுக் காவலர் - பாவரசர் முடியரசன்

முனைவர் ம.ஸ்டீபன் மிக்கேல் ராஜ்*

முகவுரை

தமிழ், தமிழர், தமிழ்நாடு, மறுமலர்ச்சி, பகுத்தறிவு, பொதுவுடைமை, சமூக, பொருளாதார, நாட்டு விடுதலை, சாதியொழிப்பு ஆகியவற்றை ஒரே மரபுத் தளத்தில் நின்று புதுமைக் கவிதைகள் படைத்த புரட்சிக் கவிஞர்கள் வரிசையில் நம் முன் பெருவுருவெடுப்போர் பாரதி-பாரதிதாசன்-முடியரசன் என்னும் முப்பெருங்கவிஞர்களே யாவர். அவர்களுள் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழியப் புரட்சிக் கவிஞராக விளங்கிய கவியரசர் முடியரசனார், பாவேந்தர் பாரதிதாசனாரால் 'என் மூத்த வழித் தோன்றல், எனக்குப் பிறகு கவிஞன்' என்று பாராட்டப்பெற்ற பெருமைக்குரியவர் ஆவார். காரைக்குடி அங்கயற்கண்ணி அழகர் கலைக்கூடத்தில் (மீனாட்சி சுந்தரேஸ்வரர் வித்யாசாலா பள்ளி) இருபத்தெட்டு ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். ஏறத்தாழ அரைநூற்றாண்டு காலம் செட்டிநாட்டுப் பகுதியில் வாழ்ந்து செந்தமிழ் காக்க தம் சீர்சால் எண்ணம், சொல், செயல் அனைத்தையும் ஈந்தவர். தம் இனத்தின் பெருமையை மறந்துபோய் தரம் தாழ்ந்துகிடக்கும் தமிழர்களை தட்டியெழுப்பும் நற்றமிழ்ப் பாடல்களை, இனமீட்சிக் கவிதைகளைப் படைத்த பாவரசர் முடியரசனார் - தமிழ்ப்பண்பாட்டின் காவலர் என்பதை நிலைநிறுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ் வாழ்வு

'தமிழ் வாழ்வு' என்னும் கவிதை 'கவியரங்கில் முடியரசன்' என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது. அக்கவிதையில் பண்டைத் தமிழரின் வாழ்வியலை, தற்காலத் தமிழரின் வாழ்வியலோடு ஒப்பிட்டுப் பார்க்கும் முடியரசனார்.

'உயிர்பெரிதா? உன்மானம் பெரிதா? என்றால்
உயிர்சிறிது மானந்தான் பெரிதே என்பான்;
உயிர்கொடுத்தும் தன்மானம் ஒன்றே காப்பான்

* செயலாளர், வள்ளுவர் பேரவை, காரைக்குடி.

ஒருவாழ்வே தமிழ்வாழ்வு; குறளின் வாழ்வு;
துயர்வருமேல் மானத்தை விலையாக் கூறித்
துணிமணிகள் உணவுவகை நிறையப் பெற்று
வயிறு வளர்க் குந்தொழிலால் உயிரைப் பேணி
வாழ்வதுவா தமிழ்வாழ்வு? மனுவின் வாழ்வு'

என்று பண்டைத்தமிழர் வாழ்விற்கும், இன்றைய தமிழரின் மனு வாழ்விற்குமுள்ள வேற்றுமையை எடுத்துரைக்கிறார்.

'தன்னினத்தவன் ஒருவனை தருக்குடைய பிற நாட்டான் இழித்துரைத்தால் 'என்னினத்தை இகழ்ந்தவனை விட்டு வையேன்' என்று கொதித்தெழுந்த மற வாழ்வே தமிழவாழ்வு, மாறாக, தன்னலத்தை, தனிப்புகழை, பணத்தைக் காசை தக்கபடி காப்பதற்கு சூழ்ச்சி செய்து தன்னினத்தை மாற்றார்க்குக் காட்டிக் கொடுத்து தாங்குவதா தமிழ் வாழ்வு? அ.்.து ஈன வாழ்வு' என்று பழித்துரைக்கிறார்.

இன்றைய தமிழர் பூனைக் குட்டிகளாய் மாறிப் போன புலிக்குட்டிகளென்பதை உணர்த்த,

'வேலெடுத்துப் போர் தொடுத்த வீரம் எங்கே?
வெங்குருதி வாளெங்கே? தோள்கள் எங்கே?
கோலெடுத்த பேரெல்லாம் ஆள வந்தார்
கொட்டாவி விட்டபடி தூங்கு கின்றாய்!
மாலுடுத்த தமிழ் மகனே! மானம் எங்கே?
மயங்காதே விழி! எழு! பார்! உலகை நோக்கு!
கால்பிடித்து வாழ்வதுவோ தமிழ வாழ்வு?
கானத்துப் புலிப்போத்தே வீரங் காட்டு!'

என்று பழந்தமிழரின் வீரத்தை, உயர் மானத்தை மீட்டெடுக்க விழைகின்றார்.

நமது வீரம்

'நமது வீரம்' என்னும் இக்கவிதை 'தமிழ் முழக்கம்' என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.

வீரமும், காதலும் இருவிழிகளாய்க் கருதி வாழ்ந்த குலத்திற் பிறந்த நம் தமிழினத்தின் வீரம் பற்றிப் பாடும் கவிஞர்

'நாடும் மொழியும் நலமிக்க இல்லாளும்
வீடும் முதலா விளம்பும் உரிமைகளில்
ஊறு விளைவிக்க உள்ளும் பகைகாணின்
வீரம் முளைக்கும் விளைநிலங்கள் ஆகுமவை'

என்று வீரம் முளைக்கும் விளைநிலங்களைச் சுட்டுகின்றார்.

'ஈயென்று இரந்து நின்றால் ஆட்சியை மட்டுமல்ல, உயிரையும் ஈந்திடுவேன், ஆனால் தமிழரின் மானத்தை, ஏற்றமிகு வீரத்தை இங்கவர் தாம் போற்றாராய் எள்ளி மோத வந்தால் போர்க் களிற்றின் காலடியின் கீழ் பட்டழியும் வேய்முளை போல் சேர்த்தழியச் செய்திடுவேன். செங்கண்ணுடைய புலி துயிலும் பொழுதில், அதன் மேல் காலிடறிவிழுந்த குருடன் தப்புவானோ? அந்நிலைதான் என்னினத்தைப் பழிந்தவனுக்கும்' என்று வெஞ்சினமுரைத்த தமிழ் மன்னனின் வீரத்தையும், போர்க்களத்தில் தன்மகன் புறமுதுகிட்டோடி தோற்று மடிந்தானென்று கேள்வியுற்ற வீரத்தாய் சினமுற்று அப்பாலகனுக்கு பாலூட்டிய தம் மார்பை அறுத்தெரிய முனைந்து செருமுகம் சென்று பார்க்க, அங்கே நெஞ்சில் வேல் தாங்கி கை விரல்கள் வேல் பிடிக்க, கண்ணிமைகள் மலர இறந்துகிடக்கும் தம் மகனை விழிநீர் மல்க பலமுறை பார்த்து ஈன்றெடுத்த பொழுதினும், எல்லையிலாப் பேருவகையால் பூரித்தாள்' என்று மறக்குடியின் பெருமையைப் பாடுகிறார்.

'வெங்கொடுமைச் சாக்காட்டை வீர விளையாட்டென்
றெங்கள் குலம் எண்ணும் இயல்பினது; போர்ப்பரணி
பாழமகிழும் பரம்பரையேம்; வாகை மலர்
சூடி வருகின்ற தொல்குடியேம்; ஏந்திய நற்
கைவேல் களிற்றொடு போக்கி வரும்போதும்
மெய்வேல் பறித்தெடுத்து மேலேறிப் பாய்ந்திடுவோம்;
போரில் விழுப்புண் படாஅத நாளெல்லாம்
சீரில்லா நாளென்று செப்புந் திறலுடையேம்'

என்று பழந்தமிழரின் வீர வாழ்வை பெருமிதத்துடன் பாடுகிறார்.

திரும்பிப் பார்

'திரும்பிப் பார்' என்னும் கவிதை 'புதியதொரு விதி செய்வோம்' நூலில் இடம் பெற்றுள்ளது. அக்கவிதையில் 'சீறிவரும் அரியேற்றின் குலத்தில் வந்த சிறப்பினை மறந்து, தன்னலத்தால், மீறிவரும் ஆசையினால், கவர்ச்சிக்கு ஆளாகி மீளாத பழி சுமந்து தம் இனப் பெருமையை தமிழன் மறந்து விட்டான்' என்று உள்ளம் வெதும்புகிற கவிஞர்,

'திரும்பிப்பார் உன்னினத்தைப் புகழ்க் குன்றின் மேல்

தெரிவதைப்பார் அதன்பெருமை; பின்னர் இன்று
விரும்பிப்பார் அவ்வினத்தை; வீழ்ந்து விட்ட
விளைவைப் பார் தாழ்ந்துகெட்ட நிலைமை யைப்பார்
துரும்பைப் பார்; அதைப் போலத் தேய்ந்த தைப்பார்;
தோன்றும்பார் உன்னுளத்தில் ஒரு ணர்ச்சி
இரும்பைப் பார் அதன் பின்னர்த் தோள்க ளைப்பார்;
எழுச்சியினால் மலரும்பார் இந்தப் பாரே'

என்று நம் பழந்தமிழரின் வாழ்வையும், வரலாறையும் திரும்பிப் பார்க்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றார். திரும்பிப் போக முடியாவிட்டாலும், திரும்பிப் பார்த்தாவது தம் வாழ்வைத் திருத்திக் கொள்ளட்டும் என்று வழியுரைக்கின்றார்.

தமிழின வரலாறு

'தமிழின வரலாறு' என்னும் இக்கவிதையும் 'புதியதொரு விதி செய்வோம்' என்னும் நூலில் இடம்பெற்றதாகும். அக்கவிதையில் 'கல்லும், முள்ளுமாய்க்கிடந்த காட்டுப் பெருவெளியை தோள்பலத்ததால் வளப்படுத்தி ஊராக்கி, ஓங்கும் நகராக்கி, நாடென்ற பேராக்கி வாழ்ந்த பெருமையை தமிழன் பெற்றான்; அகன்ற பேருலகில் முல்லை, மருதல், குறிஞ்சி, நெய்தல் என்னும் நானிலம் கண்ட பெரும் நாகரிக மாந்தன் பின்பு, கோட்டைச் சுவரெடுத்துக் கூடும் படையமைத்து, நாட்டைப்புரந்து நலம்தந்தான். குடிபழிதூற்றாது கோலோச்சி நல்லாட்சி புரிந்து மாந்தரும், வேந்தரும், உயிரும் உடலுமாய்த் திகழ்வதான வாழ்வமைத்தான்' என்று தமிழினம் செழித்தோங்கிய வரலாற்றையுரைக்கும் கவிஞர்,

'சாவா மருந்தெனினும் தன்பால் இயைந்துவிடின்
ஆஆ இனிதென் றவனே தனித்துண்ணான்
மற்றோர் வெறுத்தாலும் மாறி அவரிடத்துச்
சற்றும் முனிவு கொளான் தாவி அணைத்திருப்பான்
நெஞ்சில் உரமும் நெடுந்தோளில் வல்லமையும்
விஞ்சும் இயல்புடையான் துஞ்சுதலைத் தான்விழையான்
அஞ்சாமை மிக்கவன்தான் ஆனாலும் சான்றோர்கள்
அஞ்சுவதை அஞ்சி அகற்றி விலக்கிடுவான்'

என்றும் கணியன்பூங்குன்றனாரின் 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்னும் பாடலை எடுத்துக்காட்டியும் பாடுகிற கவிஞர் மேலும்,

வாழ்ந்த தமிழினத்தின் வாய்த்த வரலாறு
சூழ்ந்து சொலக்கருதின் சொல்லில் அடங்காது
நாகரிகத் தொட்டில் நமது திருநாடு
வாகுடனே வாழ்ந்த வரலா றிதுவாகும்

என்று தமிழின வரலாற்றை தமிழர்க்கு எடுத்துரைக்கின்றார்.

மூன்று தமிழ் தோன்றியது

'மூன்று தமிழ் தோன்றியது' என்னும் இக்கவிதை 'தாய்மொழி காப்போம்'என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.இதில்

'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே
வாளோடு முன் தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி'

என்ற புறப்பொருள் வெண்பாமாலை பாடலுக்கு புவியியல் அறிவோடு இயைத்துப் பாடியுள்ளார்.

'நீர்நிறைந்து யாண்டும் நிலமொன்றுங் காணாமல்
பார்மறைந்து வெள்ளம் பரவிநின்ற தோர்காலம்
அந்தப் புனல்குறைய ஆங்கிருந்து ஓங்குமலை
வந்து தலைகாட்டி வானோக்கி நின்றதைத்தான்
கற்றோன்றி மண்தோன்றாக் காலமெனப் பூவியலைக்
கற்றோர்தம் நூலிற் கணித்தார்கள்'

என்று விளக்கம் தருகிறார்.

நிறைவுரை

இன்றைய நிலையில் நம் தமிழினத்தின் வாழ்வியலை, வரலாறை நாம் அறிந்திருக்க வேண்டியது மிக மிக இன்றியமையாதது. திசை மாறிச் செல்லும் தமிழர்களின் பண்பாட்டை, சீரழித்துக் கொண்டிருக்கும் தமிழ்க் கலாச்சாரத்தை மீட்டெடுக்க மொழி-இனம்-நாடு ஆகியனவற்றின் மீதான பற்றுறுதி மிக்க பாவரசர் முடியரசனாரின் படைப்புகள் கலங்கரை விளக்கமாய்த் திகழ்கின்றன. அவர்விட்டுச் சென்ற தமிழ்ப்பணியை கவியரசர் முடியரசன் அவைக்களம் இன்று தொடர்ந்தாற்றுகின்றது.

வீறுகவியரசர் முடியரசனார் காப்பியங்களில் மொழித்தூய்மை

முனைவர் ம.ஸ்டீபன் மிக்கேல் ராஜ் *

முகவுரை

இருபதாம் நூற்றாண்டு இலக்கியக் களத்தில் மொழித்தூய்மையியம், இன மீட்சி, குமுகாய மறுமலர்ச்சி, பகுத்தறிவுச் சிந்தனை ஆகிய தளங்களில் தன்னிகரில்லாத் தகைசால் கவிஞராகத் திகழ்ந்தவர் கவியரசர் முடியரசனார் ஆவார். மரபு மீறாமல் கவிதைகளை இயற்றி, தம் வாழ்நாள் முழுவதும் வேற்றுமொழித் திணிப்பை எதிர்த்து, குமுகாய அவலங்களைச் சாடி தம் படைப்புகளை படைக்கலன்களாய் தமிழுலகிற்கு ஈந்த தன்மானக் கவிஞர் முடியரசனார் பூங்கொடி, ஊன்றுகோல், வீரகாவியம், இளம்பெருவழுதி ஆகிய காப்பியங்களை இயற்றியுள்ளார். அவருடைய கவிதை, கடிதம், சிறுகதை, கட்டுரை முதலிய அனைத்துப் படைப்புகளும் பிறமொழிக் கலப்பின்றி மொழித் தூய்மையை நிலைநாட்டுவனவாய் அமைந்துள்ளன. இருப்பினும் வீறுகவியரசர் முடியரசனார் காப்பியங்களில் மொழித்தூய்மையியம் குறித்து மட்டும் இக்கட்டுரையில் காணலாம்.

முடியரசனாரின் காப்பியங்கள்

'பூங்கொடி' காப்பியம் தமிழகத்தில் நடைபெற்ற ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகால மொழி, இன, நாட்டு மீட்புப் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அயல்மொழித் திணிப்பிற்கு எதிராகவும், தமிழ்த்தொண்டு, தமிழின் பெருமை, தமிழர் வீரம் ஆகியனவற்றை உள்ளடக்கங்களாகவும் கொண்டு இயற்றப்பட்டுள்ளது.

"முடியரசின் பூங்கொடி என்னும் காவியம் மொழிப் போராட்டத்தைப் பின்னணியாகக் கொண்டது. இந்நூற்றாண்டில் எழுந்த தமிழ்த் தேசியக் காப்பியம் இதுவே" என்று மா.இராமலிங்கம் அவர்களும், 'உலக மொழிகளுள் தேசியக் காப்பியம் என்று சொல்லத்

---

* செயலாளர், வீரமாமுனிவர் கலை இலக்கிய மன்றம், தே பிரித்தோ மேனிலைப்பள்ளி, தேவகோட்டை.
பட்டதாரி தமிழாசிரியர், தே பிரித்தோ மேனிலைப்பள்ளி, தேவகோட்டை.

தக்க நூல்கள் மூன்று. அம்மூன்றனுள் ஒன்று பூங்கொடி' என்று பன்மொழிப்புலவர் கா.அப்பாத்துரை அவர்களும் பாராட்டியுள்ளனர்.

'ஊன்றுகோல்' என்னும் பிறிதொரு காப்பியம் பண்டிதமணி கதிரேசனாரின் வாழ்வியலைக் குறிப்பிடுகின்றது. அத்துடன் நகரத்தார் மக்களின் பண்பாடு, தமிழக மக்களின் இறையுணர்வு, தமிழிசை இயக்கம் முதலியவற்றை உள்ளடக்கங்களாகக் கொண்டது. 'புலவனைப் பொருளாகக் கொண்ட தமிழ்க் காப்பியம் இதுவரை தோன்றியதில்லை. பண்டிதமணி வரலாறு காப்பியமாகுமேல் பல தமிழுணர்ச்சிக்கும், புதிய தமிழ் வளர்ச்சிக்கும் உரங்கிடைக்கும் என்று எண்ணிய வ.சுப.மாணிக்கனாரின் தூண்டுதலால் இக்காப்பியம் வெளிவந்தது.

'வீரகாவியம்' என்னும் மற்றொரு காப்பியம் தாய்நாட்டுப் பற்றையும், தமிழ்ப் பண்பாட்டையும் வலியுறுத்துவதாய் அமைந்த நூலாகும். மாத்யூ அர்னால்டு என்பார் 'பா' வடிவில் ஆங்கிலத்தில் எழுதிய பாரசீக மொழிப் பாவினை மா.இராசமாணிக்கனார் கவியரசரிடம் கொடுத்து காப்பியமாக இயற்ற வேண்டியதால் எழுந்த நூல் இது. முடியரசனாரை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தார் கேட்டுக் கொண்டதிற்கிணங்க எழுந்த நாடகக்காப்பிய நூலே 'இளம்பெருவழுதி' என்பதாகும். 'உண்டாலம்ம இவ்வுலகம்' என்ற புகழ்மிக்க பாடலைப் பாடிய கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியைப் பற்றி 1948-இல் 'போர்வாள்' என்னும் தாளிகையில் எழுதிய சிறுகதையை அடித்தளமாகக் கொண்டு தான் எழுதியதாக கவிஞர் அந்நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இவை தவிர கவிஞர் 'நிகாமி' என்பவரின் காப்பிய நூலான 'கோசுரு சிரீன்' என்ற நூலைத் தழுவி 'காதற்சிலை' என்னும் குறுங்காப்பியமாகவும், 'மணிமேகலை' காப்பியத்தில் இடம்பெற்றுள்ள சுதமதியின் வரலாற்றை 'சுதமதி' என்னும் தலைப்பில் குறுங்காப்பியமாகவும் கவியரசர் படைத்துள்ளார்.

பூங்கொடியில் மொழித்தூய்மையியம்

நிலைமண்டில ஆசிரியப் பா வடிவில் விழாவயர் காதை முதல் விடுதலைக்காதை வரை முப்பத்தொரு காதைகளாக அமைந்த பூங்கொடி

காப்பியத்தில் மொழித்தூய்மை, மொழிப்பற்று குறித்து பல்வேறு இடங்களில் வலியுறுத்துகிறார்.

'செம்பொன்னோடு, செம்பு கலந்தால்தான் அணிகலன்கள் செய்திட இயலும், அதுபோல் தமிழ்மொழியோடு பிறமொழி கலப்பதைத் தடுப்பதால் தமிழ் வளராது' என்று தமிழர் சிலர் மொழிக் கலப்பினை ஆதரிப்பதனைக் கண்டுபொறாது மலையுறையடிகளின் மறுப்புரை வாயிலாக,

> 'அமிர்தம் இனிக்க அச்சு வெல்லம்
> கலப்போர் உலகிற் கண்டோ மில்லை;
> உலப்பிலாத் தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழி
> கலப்பிலா தியங்கும், கற்றவர் அறிவர்;
> செம்பு கலந்தணி செய்வதும் இயற்கை,
> செம்பும் மிகவே சேர்த்திடப் பெறுமேல்
> கலன்செய அப்பொன் பலன்படா தொழியும்'

(மலையுறை அடிகள் வாழ்த்திய காரை, 52-58)

என்று மொழிக்கலப்பிற்கு எதிராய்க் கண்டனக்குரல் எழுப்புகின்றார்.

தாய்மடிப் பற்றினை விட்ட தன் குட்டியை தாய்க்குரங்கு சேர்த்துக் கொள்வதில்லை. அப்படியிருக்க தாய்மொழிப் பற்றினை விட்ட தமிழர்களை தமிழினம் என்றுரைப்பது எவ்வகையில் நியாயம்? மரக்கிளை வாழும் மந்தியின் மானம் மாந்தர் நமக்கில்லையே.. என்று உளம் வருந்துகிறார் (மேலது, 72-79)

தாய்மொழி காத்திட முனைந்திடாது, வேற்றுமொழிக்கு வாயில் திறக்கும் ஆட்சி 'உயிர்வரின் உக்குறள் ஓடுதல் போல' கதிர் வரவறிந்து காரிருள் ஓடிப் பதுங்கி மறையும் என்று புணர்ச்சிவிதியை உவமையாக்கி எச்சரிக்கை விடுக்கின்றார் (சிறைவிடுகதை, 80-84)

மொழிகாக்கும் போராட்டத்தில் தன் கற்பனை மகள் பூங்கொடியை மணம் செய்து வைக்காமல் மொழிநலங் கருதிப் போராட வைத்து, கல்லடிகளையும் சொல்லடிகளையும் தாங்கி சிறைபுகச் செய்து, இறுதியில் மொழி காக்கும் பொது நலப்போராட்டத்தில் உயிர்த்தியாகம் செய்விக்கிறார் கவிஞர்.

ஊன்றுகோலில் மொழித்தூய்மை

அறுசீர், எழுசீர், எண்சீர் விருத்தங்களையும், கட்டளைக் கலித்துறை, கொச்சகக்கலியினையும் கொண்டு இடையிடைமிடைந்த நிலைமண்டிலயாசிரியங்களுடன் கதிரெழுகாதை முதலாகச் சிலைகாண்காதை ஈறாக பதினேழு காதைகளுடைய 'ஊன்றுகோல்' காப்பியத்தில்,

'வாய்மொழி கல்லா ராகி
வருமொழி மட்டுங் கற்றுத்
தாய்மொழி பழித்து வாழ்ந்து
தமிழரென் றிருப்பா ருள்ளார்;
ஆய்மொழி பயின்றும் மற்றை
அயன்மொழிக் கடிமை யாகும்
நாய்மனங் கொள்வார் தாமும்
நந்தமிழ் நாட்டில் உள்ளார்'

(கலைபயில் காதை, பா.35)

என்று தாய்மொழிப் பற்றின்றி, அயல்மொழிக்கு அடிமையாகும் தமிழரைக் கடிந்துரைக்கின்றார். அயன்மொழிப் பயிற்சி தாய்மொழி அன்பைக் கூட்டப் பயன்படுமென்றாலும், பிறமொழியைப் பயின்றிட வற்புறுத்தினால் தமிழ்வளர்ச்சி தடைப்படும், தீமையே விளையுமென்று உறுதிபட நம்பும் முடியரசனார், பண்டிதமணி அவர்கள் வடமொழி, தென்மொழிகளில் புலமையுடையராயிருப்பினும்

'வருவன எவையும் சொல்லும்
வல்லமை வாய்ந்த வேர்ச்சொல்
பெருகிய தமிழ்மொ ழிக்கண்
பிறமொழிச் சொற்க லந்து
சிறுமைகள் செய்து வாழ்தல்
செந்தமிழ்த் தாய்க்குச் செய்யும்
ஒருபெருந் தீங்கே யாகும்
ஒதுக்குக எனப்ப ணித்தார்' (சிலைகாண்காதை, பா.13)

மொழிக் கலப்பினை எதிர்த்த விதம் பற்றிப் புகழ்ந்து பாராட்டுகிறார்.

வீரகாவியத்தில் மொழித்தூய்மை

476 எண்சீர் விருத்தப் பாவால் அமைந்த வீரகாவியம் தழுவல் இலக்கியமாயினும் காப்பித்தின் கதாபாத்திரங்களுக்கு மதலைக்கோ, மாவேழன், வெண்கோடன், மானத்தி, கோவூரன், வெண்பூதன், நம்பியன், பெருங்கனகன், வயத்தரசன், வேல்விழி, முறுவலன், மாவலியன், தடவலியன், இளவேலன் ஆகிய தூயதமிழ்ப் பெயர்களைச் சூட்டி மகிழ்ந்தார் முடியரசனார். காப்பியம் முழுவதும் நற்றமிழ்ச் சொற்கள் பலவற்றை நயம்படத் தொடுத்துள்ளார்.

சன்னல் என்று வேற்று மொழிச் சொல்லால் குறிக்கும் காலதரைக் கூறுமிடத்து

'மென்மை மிகு துகிலசைத்துச் சாள ரத்துள்
மெல்லெனவந் துடல்வருட, வானத் திங்கள்
புன்மையிருள் பலகணியுட் புகுதா வண்ணம்' (பா.38)

என்று சாளரம், பலகணி என்ற தூய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். வேற்றுமொழி இலக்கியத்தைப் தழுவி எழுதிடினும், முதல்நூல் என்று கூறத்தகும் வகையில் தமிழ்ப் பண்பாடு, காதல், வீரம், கையாற்றவலம் ஆகியவற்றை அடித்தளமாக்கி வீரகாவியத்தை பைந்தமிழில் வடித்துள்ளார்.

இளம்பெருவழுதியில் மொழித்தூய்மை

'இளம்பெருவழுதி' என்னும் நாடகக் காப்பிய நூலில் தண்டமிழாசான் வெண்டலைநாகனிடம் இளம்பெருவழுதி தாய்மொழி காக்கத் தக்க நெறியுரைத்திடுமாறு கூற,

'புகுவ தடுத்தல் புதுவ படைத்தல்
தகுமிரு வகைத்தே தாய்மொழி காத்தல் ;
அயன்மொழிக் காட்பட் டம்மொழிச் சொற்கள்
நயந்து கலந்து நடையிற் புகவிடல்,
பிறமொழி விழைந்து பெறுமொழி மறந்து
வருமொழிக் காளுமை தருதல் எனுமிவை
புகாஅது காத்தல் புகுவ தடுத்தலாம்'

என்று பதிலுரைக்கின்றார். புதியன படைத்தல் மட்டுமல்ல; வேற்றுமொழிச் சொற்கள் தமிழ்மொழியில் கலந்து தாய்மொழி இடத்தைப் பறித்துக்

கொள்ளும் நிலை புகாமல் காத்தலான புகுவ தடுத்தலும் தாய்மொழி காப்பதற்கான வழிமுறைகளாகும் என்று நாகனார் வாயிலாக தெளிவுபடுத்துகிறார் கவிஞர்.

குறுங்காப்பியங்களில் மொழித்தூய்மை

நிலைமண்டில ஆசிரியப்பாக்களால் அமைந்துள்ள காதற்சிலை, சுதமதி ஆகிய குறுங்காப்பியங்களில் தூய தமிழ்ச் சொற்களைக் கொண்டு உளி செதுக்கும் சிற்பங்களாக வடித்துள்ளார்.

'சென்ற குறிஞ்சியான் செய்தி எழுதி
வடிவேல் மன்னனின் மகட்கொடை வேண்டிக்
கடிதிற் செல்லும் காவலற் போக்கினன்;
முடங்கல் கண்ட முழுமதி முகத்தாள்'

என்று பாரசீகக் கவிதையை தழுவி எழுதப்பட்டதென்று கூறவியலாதவாறு தமிழ்க்காப்பியமாகவே செதுக்கியுள்ளார்.

'மேற்றிசை வானை மெருகிடல் போல்நிறம்
தீற்றிய கதிரோன் மறையும் செக்கர்
வானெழில் காணுதி ! வாட்டந் தவிர்தி !'

என்று செஞ்சொற் கவியின்பத்தை 'சுதமதி' குறுங்காப்பியத்தில் படைத்துள்ளார்.

நிறைவுரை

கவியரசர் முடியரசனார் பிறமொழிக் கலப்பை, வேற்று மொழித் திணிப்பை எதிர்த்து தம் கவிதை வாளைச் சுழற்றிய தாய்மொழிப் பற்றாளராய் அவர் தம் காப்பியங்கள் அவரை நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. தம் வாழ்நாள் முழுவதும் மொழித்தூய்மையைக் கட்டிக்காத்து, தாய்மொழிக்கு ஏதேனும் ஒரு இழிநிலை வருமென்றால் அந்நிலையை நீக்கி, தமிழுக்கு வந்த இன்னிலையைப் போக்கும் காலத்தால் இறவா காவியங்களைப் படைத்தளித்துள்ள கவியரசர் முடியரசனாரின் மொழித்தூய்மை காலமெல்லாம் போற்றுதற்குரியதாகும்.

வீறுகவியரசர் முடியரசன் கவிதைகளில் - சான்றோர் உலகம்

சா.தே.ஸ்டெல்லா இராணி*

வளையாத முடியரசன் வைரத் தூண்தான்
வளமார்ந்த பெரியாரின் கொள்கை வாள்தான்
தளையறுத்து தமிழ்ப்பகையின் தலை யறுக்கும்
தளைதட்டா வெண்பாக்கள் இவரின் தோட்டா
குலைஇளநீர் கொட்டியதாய் இனிமைப் பேச்சு!
'குடி' யறியாச் சிந்தனைகள்! தமிழே மூச்சு!

என்று உவமைக் கவிஞர் சுரதா வீறுகவியரசர் முடியரசனாரைப் பாடியுள்ளார். 'முடியரசன் கவிதைகள்' என்னும் கவிஞரின் தொகுப்பு நூல் செயல்புரிந்து நாடோறும் செந்தமிழுக்குத் தொண்டு செய்யும் 'தமிழ்த் தாத்தா மயிலை சிவமுத்து' அவர்களுக்குக் காணிக்கையாக்கப் பெற்றுள்ளது.

"வேத்தவைப் பாவலரும் வேற்றுமொழி கலக்குந்
தீத்திறக் காலை தெளிமருந்தே - மூத்த
முடியரச ரின்றி மொழிவனப்புச் செய்யும்
முடியரசன் செய்யுள் முறை"

என மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் முடியரசன் கவிதைகளுக்கு வாழ்த்துப்பா வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காவிய உலகம், இயற்கை உலகம், காதல் உலகம், தமிழ் உலகம், தொழில் உலகம், சான்றோர் உலகம், பல்வகை உலகம் என்னும் ஏழு தலைப்புகளில் 78 கவிதைகளைக் கொண்டுள்ளது. இதில் அமைந்துள்ள பத்துக் கவிதைகள் சாகித்திய அகாதெமியால் இந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. என்பது சிறப்பாகச் சுட்டத்தக்கது அவற்றுள் 'சான்றோர் உலகம் பகுதியில்' சில பாடல்களை ஆய்ந்தறிவோம்.

மனத் தூய்மை

அறம் எது என்பதை வீறுகவியரசர் அழகாகப் பதிவு செய்துள்ளார். சொல்லும் செயலும் ஒன்றாக அமைவதே அறம்.

---

* முதுகலைத் தமிழாசிரியை, ஸ்ரீமீனாட்சி பெண்கள் மேனிலைப்பள்ளி, காரைக்குடி.

நினைக்கின்ற உளத்தாலும் அவ்வெண் ணத்தால்
நிகழ்கின்ற சொல்லாலும் செயலி னாலும்
அனைத்தாலும் மாசின்றி இருத்தல் ஒன்றே
அறமாகும் அழகு தரும் தூய்மை யாகும்
....
மனத்துக்கண் மாசின்மை அறமென் றோதும் (முடிகவி)

அறன் வலியுறுத்தலின் மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் (34) என்ற வள்ளுவரின் வரியையும் பயன்படுத்தியுள்ளது ஒப்புநோக்கத்தக்கது.

அடுத்த பாடலில் தீயகருத்தை அழித்து அன்போடு வாழ்கிற நாடே இழுக்கு இல்லா நாடாக வரையறுக்கிறார்,

அழுக்காறு வெகுளியா தீய சொற்கள்
அழித்தொழித்துக் கனிவுடைய அன்பி னின்றும்
வழுக்காது செல்கினற் நெஞ்சம் கொண்டோர்
வாழ்கின்ற நாட்டினையே அறிவு மிக்கோர்
இழுக்கில்லா நாகரிக நாடாம் என்பர் (முடியரசன் கவி பா.1)

அழுக்காறு அவாவெகுளி (கு.35) என்ற குறளோடு ஒப்பு நோக்கத்தக்கது. இப்பாடலில் மனத் தூய்மை உடையோர் என்றென்றும் கெடுவதில்லை என்று கூறியதை அறிய முடிகிறது.

கவிமணி

நட்புக்கு இலக்கணமாக விளங்கியவர் முடியரசர் செந்தமிழுக்கு எப்பா வாழ்வு அளித்தாரோ அது போன்று நண்பருக்கும் வாழ்வளித்தார். கவிமணியே வள்ளல் என பதிவு செய்துள்ளார்.

செந்தமிழுக்கு வாழ்வளித்தோன் சேர்ந்தோர்க்கு நண்பளித்தோன்
சிந்தையினைச் செம்மைக்கே தந்துவந்தோன் - உந்திஎழும்
செய்யுளுக்கு வாயளித்தோன் தேசிகவி நாயகனை
உய்யவடு வள்ளலென ஓது (முடியரசன் கவி. பா.2:1)

நேரிசை வெண்பாவில் எளிமையாகப் பாடி சிறப்பு செய்தமையை அறியமுடிகிறது. 'நுண்மாண் நுழைபுலம் கொண்டவர்; பணிவு உடையவர் தமிழ்த் தொண்டாற்றும் கவிமணி என்னுள் நிறைந்து காணப்படுகிறார்'

எனப் புகழாரம் சூட்டுகிறார் கவிமணியின் தமிழ்ப்பணியும் இலக்கியப் பணியும் போற்றுதலுக்கு உரியது.

திரு.வி.க

தமிழர்கள் நன்றியுணர்வு மிக்கவர்கள் சிறு உதவி செயினும் அதனை 'ஞாலத்தின் மாணப் பெரிதாக' நினைக்கும் இயல்பினர். தமிழ் மொழிக்குத் தொண்டு செய்த, தமிழில் பல இலக்கியங்கள் படைத்த அறிஞர்களை வீறுகவியரசர் முடியரசன் நினைக்கும் இயல்பினர். தமிழ் மொழிக்குத் தொண்டு செய்த, தமிழில் பல இலக்கியங்கள் படைத்த அறிஞர்களைக் கவிஞர் நினைவுகூர்ந்து அவர்களைப் பாராட்டுவது அவருடைய உயரிய பண்பைக் காட்டுகிறது. அவர்களுள் திரு.வி.க.வின் தொழிலாளர் நலன், தமிழ்ப்பற்று ஆகியவற்றை நினைவு கூர்வதையும் இப்பாடலில் காண முடிகிறது.

சமயங்கள் எத்துணையோ அனைத்துகற்றுச்
சமத்துவமே கண்டுணர்ந்தார்; சைவர் புத்தர்
சமணமென்றும் கிறித்துமுக மதிய ரென்றும்
சச்சரவேன்? இறை ஒன்றை உணர்க என்றார்

(முடியரசன் கவிதை பா.3:1)

பலப்பல சமயங்கள் இருப்பினும் சொல்லும் கருத்து கடவுள் ஒன்றே; ஆகவே மதச் சண்டை வேண்டாம் என்பதில் இருந்து ஒற்றுமை உணர்வை காட்டுகிறது. பெண்மையைப் போற்றும் பண்பைத் தம் பாடலில்

பெண்ணினமும் ஆணினமும் சமுதா யத்தின்
பெருமைமிகும் இருகண்கள்; பெண்மை என்னும்
கண்ணொளியைக் கெடுத்தனரே உலகோர் அந்தோ!
கருணைஒளிர் தாயினத்தைத் தாழ்த்தல் நன்றோ?

(முடி.கவி.பா.3:3)

ஒரு சமுதாயம் தழைக்க வேண்டின் பெண் இனத்தைப் போற்ற வேண்டும் என்றும், ஆண், பெண் இரண்டு கண்கள் என்றே கூறி அவற்றுள் ஒன்றைக் குத்தலாமா? தாயினத்தைக் காத்தல் வேண்டும் என்பதில் இருந்து கவிஞர் முடியரசனார் பெண்ணைப் போற்றிய விதத்தை அறிய முடிகிறது. சான்றோர் குணங்களாக கவிஞர், வரையறுப்பது தொண்டு உள்ளம், புதுமை, உண்மை, தூய்மை, அன்பு,

பொதுமை, பெண்மை, போற்றும் பாங்கி, எளிமை, நண்பு, பழமை ஒளிர், சொல்வன்மை, அறிவு, கல்வி, இன்னா செய்யாமை, அமைதி, வீரம் இவை அனைத்தும் வேண்டும் என்று தொண்டுள்ளம் ஒளிரப் (பா.3:7) பதிவு செய்துள்ளார்.

பாரதிதாசன்

'என் மூத்த வழிதோன்றல் முடியரசன் என பாரதிதாசனே பாராட்டுகிறார். பாரதிதாசன் பாடல்களில் தாக்கம் முடியரசன் பாடல்களில் கோலோச்சும். கவிஞர் பாரதிதாசனை பாண்டியனை நினைவூட்டும் பார்வை உடையவன் பழமை வேண்டான், தமிழ் மொழிமேல் அதிக காதல் உடையவன், புதுக்கருத்தை புகட்டுவான், வீரம் ஊட்டுவான் என்ற கருத்தை,

பாண்டியனை நினைப்பூட்டும் பார்வையினன்
பாழான பழமை வேண்டான்
மாண்டநல்ல சங்கத்தார் தமைப்போல்வான்
மனத்தில்எழும் புதுக் கருத்தை
வேண்டிமட் டுங்கொடுப்பான் வீரத்தை
ஊட்டிடுவான் ஊழிக் காலம்
தாண்டிய தமிழ்மொழிமேல் மீசையின்மேல்
தணியாத காதல் கொண்டான் (முடி.கவி.பா.5:1)

என்ற பாடல் வரியில் அறிந்து உணரால். தீந்தமிழுக்காக உடல்கொடுப்பேன் என்கின்றான் அவனளிக்கும் ஓவியங்கள் வாழ்க நன்றே (முடி.கவி.5:3) என்று பாடுவதில் இருந்து பாரதிதாசனும் முடியரசனும் தமிழுக்காக தன் உயிரையும் கொடுப்பர் என்று அறியமுடிகிறது.

கா.அப்பா

பன்மொழிப் புலவர் திருகா.அப்பாதுரையார் எழுத்தாளர் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றமைக்காக பாடிய பாடல். தமிழைக் காக்க எந்த நிலை நிகழ்ந்தாலும் தயங்காமல், அஞ்சாமல் துணிந்து நின்றவர். பன்மொழி பயின்றவர் பலர் இருப்பினும் தமிழ் காக்க நன்முயற்சி செய்ததுண்டா? என்று கவிஞர் முடியரசன் கேட்கிறார்.

முத்தமிழை, செந்தமிழை பழித்துக் கூறும் புலவரை தான் நாம் கண்டுள்ளோம்.

அப்பாதுரையார் போல் கண்ணியத்தால் காப்பாற்றும் புலவர் கண்டதுண்டா? என்று கேட்டு அதையே பாடலில்,

"அண்ணலுன்போல் பன்மொழியிற் புலவர் என்போர்
ஆருள்ளார் தமிழ்காக்க? அதனா லன்றோ
கண்ணியத்தால் உயர்தமிழ்த்தாய் தீங்கு வந்தால்
காஅப்பா துரைமகனே என்று சொன்னாள்"

இப்பாடல் கா அப்பா துரையை காப்பாத்து என்று சிலேடையாகப் பதிவு செய்துள்ளார். கொள்கை பிறழாமலும் இடுக்கண் வரினும் கலங்காது நின்றும், பொது வாழ்வில் பற்றும் இருப்பதை என் மனமும் நின்மனமும் ஒன்றாக இருக்கக் கண்டோம் என்று ஒப்பிட்டு கூறுவதைக் காண முடிகிறது.

முடிவுரை

சான்றோர் உலகத்தில் அரிய புலவர்களின் தமிழ்ப் பற்றுதலும், மனத்தூய்மையில் குறளை ஒட்டி எழுதிய பாங்கும், நண்பர்க்கு மதிப்பு அளிக்கும பாங்கும், சாதி சமயத்தை சாடும் சான்றோர் வரிசையில் தானும் இணைந்து நிற்றலும் பாரதிதாசன் மீது கொண்ட காதலும், பெண் இனத்தைப் போற்றலும் சான்றோர் பண்பும் நிறைந்துள்ளமையை இக்கட்டுரையின் மூலம் அறிய முடிகிறது.

புகழ் மகுடம்

(தேடிவந்த விருதுகள், பட்டங்கள், பரிசுகள் - வழங்கியோர், இடம் – ஆண்டு)

1. 'அழகின் சிரிப்பு' கவிதைக்கு முதல் பரிசு-பாவேந்தர் பாரதிதாசன், முத்தமிழ் மாநாடு, கோவை - 1950.
2. 'திராவிட நாட்டின் வானம்பாடி' பட்டம் - பேரறிஞர் அண்ணா - 1957.
3. 'கவியரசு' பட்டம், 'பொற்பதக்கம்' - குன்றக்குடி அடிகளார், பாரி விழா, பறம்புமலை - 1966.
4. 'முடியரசன் கவிதைகள்' நூலுக்குப் பரிசு - தமிழ்நாடு அரசு - 1966.
5. 'வீரகாவியம்' காவிய நூலுக்குப் பரிசு - தமிழ்நாடு அரசு - 1973.
6. 'நல்லாசிரியர் விருது'பதக்கம் - மாண்பமை ஆளுநர்,தமிழ்நாடு அரசு - 1974.
7. 'சங்கப் புலவர்' பட்டம் - குன்றக்குடி அடிகளார் - 1974.
8. 'பாவரசர்' பட்டம், 'பொற்பேழை' - மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர், உலகத் தமிழ்க் கழகம், பெங்களூர் - 1979.
9. 'பொற்கிழி' - பாவாணர் தமிழ்க் குடும்பம், நெய்வேலி - 1979.
10. 'பொற்குவை'ரூ10,000, மணிவிழா எடுப்பு - கவிஞரின் மாணவர்கள், காரைக்குடி - 1979.
11. 'பொற்கிழி' - பாரதியார் நூற்றாண்டு விழாக் குழு, சிவகங்கை.
12. 'கவிப்பேரரசர்' பட்டம், 'பொற்கிழி' ரூ.10000- மணிவிழா எடுப்பு-கலைஞர் மு.கருணாநிதி, தி.மு.க மாநில இலக்கிய அணி,சென்னை - 1980
13. 'தமிழ்ச் சான்றோர்'விருது, பதக்கம் -தமிழகப் புலவர் குழு,சேலம் - 1983.

14. 'கலைஞர் விருது' - என்.டி.இராமாராவ் (ஆந்திர முன்னாள் முதல்வர்), கலைஞர் மு.கருணாநிதி, தி.மு.க முப்பெரும் விழா, தேசிய முன்னணித் தொடக்கவிழா, சென்னை -1988.
15. 'பாவேந்தர் விருது' (1987க்குரியது) பொற்பதக்கம் - கலைஞர் மு.கருணாநிதி, முதல்வர், தமிழ்நாடு அரசு, சென்னை -1989.
16. 'பொற்கிழி'- விக்கிரமன் ('அமுதசுரபி' ஆசிரியர்), அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர், காரைக்குடி கவிஞர் இல்லம் -1993.
17. 'பூங்கொடி' நூலுக்கு 'இந்திராணி இலக்கியப் பரிசு' ரூ.5,000 – இந்திராணி அறக்கட்டளை, கரூர் -1993.
18. 'அரசர் முத்தையவேள் நினைவுப்பரிசில்' , வெள்ளிப் பேழை, பொற்குவை ரூ.50000 அண்ணாமலை அரசர் நினைவு அறக்கட்டளை,சென்னை-1993.
19. 'இரண்டாம் புரட்சிக் கவிஞர்'பட்டம் மற்றும் 'இராணா இலக்கிய விருது', பொற்குவை ரூ.10000- தமிழ் இலக்கியப் பேரவை, ஈரோடு - 1994.
20. 'கல்வி உலகக் கவியரசு' விருது - அகில இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி - 1996.
21. 'பொற்கிழி' - பழைய மாணவர் பாராட்டு விழா, கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, சன்மார்க்க சபை, மேலைச்சிவபுரி-1997.
22. 'கலைமாமணி விருது' பொற்பதக்கம் - செல்வி பாத்திமா பீவி, ஆளுநர், கலைஞர் மு.கருணாநிதி, முதல்வர், தமிழ்நாடு அரசு, சென்னை -1998 (கவிஞர் இவ்விருதை ஏற்க மறுத்தார்)
23. 'பொற்கிழி'- முதல்வர் கலைஞர்-கவிஞர் அப்துல் ரகுமான் மணிவிழா,சென்னை.

❖ கவிஞரின் நூல்கள் பல்கலைக்கழகங்கள் மற்றும் பள்ளிகளில் பாட நூல்களாக வைக்கப்பட்டுள்ளன

- கவிஞரின் நூல்கள் குறித்துப் பலர் பல்வேறு பல்கலைக் கழகங்களில் ஆய்வேடுகள் அளித்து, முனைவர்(பிஎச்.டி) மற்றும் இளமுனைவர்(எம்.பிஃல்) பட்டங்கள் பெற்றுள்ளனர்
- கவிஞர் பற்றியும் கவிஞரின் படைப்புகள் பற்றியும் ஆய்வு நூல்களும், கட்டுரைகளும் வெளிவந்துள்ளன
- கவிஞர் பற்றி பல்வேறு இதழ்கள் சிறப்பிதழ்கள் வெளியிட்டுள்ளன.
- 'வீறுகவியரசர்முடியரசன்அவைக்களம்' அமைப்பு காரைக்குடியில் தமிழ்த்தொண்டு ஆற்றி வருகிறது.
- காரைக்குடியில் ஒரு பெரிய நெடுஞ்சாலைக்கு 'கவியரசர் முடியரசன் சாலை' எனக் காரைக்குடி நகராட்சி மன்றம் பெயர் சூட்டிச் சிறப்பித்துள்ளது(1999)
- கவிஞரின் படைப்புகள் தமிழ்நாட்டரசால் அரசுடைமை ஆக்கப்பட்டன(2000).
- கவிஞரின் பல கவிதைகள் 'சாகித்திய அகாதெமி'யால் இந்திய மொழிகளிலும், ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. உருசிய, செக் மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன
- 'இந்திய இலக்கியச் சிற்பிகள்' எனும் வரிசையில் 'முடியரசன்' பற்றிய நூலை சாகித்திய அகாதெமி வெளியிட்டுள்ளது(2005).
- கவிஞரின் மைந்தர் பாரிமுடியரசனைத் தொகுப்பாசிரியராகக் கொண்டு, 'முடியரசன் கவிதை முத்துக்கள்' எனும் கவிதைத்தொகுப்பு நூலினை சாகித்திய அகாதெமி வெளியிட்டுள்ளது(2015).
- பாரி முடியரசன் எழுதிய 'கவிதைக்குப் பிறந்த மகன் கவியரசர் முடியரசன்' என்னும் நூலினை அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் மலாய்ப் பல்கலைக்கழகமும் இணைந்து வெளியிட்டுள்ளன(2016).
- பாரி முடியரசன் எழுதிய 'என் தந்தை முடியரசன்' என்னும் நூலினை மணிவாசகர் பதிப்பகம் வெளியிட்டுள்ளது(2016).
- பாரி முடியரசனைப் பதிப்பாசிரியராகக் கொண்டு கவிஞரின் கவிதை,காப்பிய நூல்கள் அனைத்தையும் ஒரே முழுப்பெருந்

தொகுப்பாக ‘கவியரசர் முடியரசன் கவிதைகள் ’ எனும் தலைப்பில் மணிவாசகர் பதிப்பகம் வெளியிட்டுள்ளது(2016)

- ❖ பாரி முடியரசன் தொகுத்த தமிழகத்தின் தலைசிறந்த தமிழறிஞர்கள், தலைவர்கள், கவிஞர்கள், பல்துறை அறிஞர்கள் முடியரசனார் பற்றி எழுதிய கட்டுரைகள், கவிதைகள் கொண்ட ‘இவர்தாம் முடியரசர்! வீறுகவியரசர்’ எனும் நூலினை மணிவாசகர் பதிப்பகம் வெளியிட்டுள்ளது(2018)
- ❖ காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகதின் ஒரு கட்டட அரங்கிற்கு ‘வீறுகவியரசர் முடியரசனார் அரங்கம்’ எனப் பெயர் சூட்டப் பட்டுள்ளது(2018)

புதுமை பூத்த மரபுக் கவிஞர் [வீறுகவியரசர் முடியரசனார் மறைவிற்காக, 'தினமணி' நாளிதழ் எழுதிய அஞ்சலித் தலையங்கம்- 05.12.1998]

இறைவனின் படைப்புகளில் சிகரம் போன்றவன் மனிதன், மனிதனின் படைப்புகளில் சிகரம் மொழி; மொழியின் சிகரம் கவிதை. அது மொழியின் பூரணப் பொலிவும் கூட. தமிழ் இலக்கியம் நீண்ட மரபுடையது. மரபு வழுவாமல், புதுமைகளைப் புகுத்தி, தற்காலத் தமிழ் இலக்கியத்தை வளப்படுத்திய பெருமை மகாகவி பாரதியார் - பாவேந்தர் பாரதிதாசன் கவிதா மண்டலத்துக்கே உண்டு. இக்கவிதா மண்டலத்தைச் சேர்ந்த புதிய தலைமுறைக் கவிஞர்களில் முதலாவது இடத்தைப் பெற்றவர் கவிஞர் முடியரசன். "எனது மூத்த வழித்தோன்றல் முடியரசன்" என்று பாவேந்தராலேயே பாராட்டப் பெற்ற பெருமையுடையவர். ஆழ்ந்த புலமைமிக்க இக் கவிஞர் அழுகும் இனிமையும் புதுமையும் கொஞ்சிக் குலவும் ஏராளமான கவிதைகளை எளிய நடையில் இயற்றித் தமிழுக்குப் புதிய அணிகலன்களைச் சூட்டியவர். பொதுவாக கவிஞர்களின் உள்ளம் தனித்தன்மை வாய்ந்தது. பார்வையும் தனி - கோணமும் தனி - உணர்வும் தனி - எல்லாமே தனி. அதனாலேயே, தனித்து நின்று இலக்கிய உலகுக்கு தனி முத்திரை பதிந்த கவிதைகளைக் கவிஞனால் வழங்க முடிகிறது. இலக்கியவாதிகளில் பத்தோடு பதினொன்றாகக் கவிஞனைக் கருதமுடியாது. இலக்கிய உலகில் சிங்கம் போல உலவக் கூடியவர்கள் உண்மையான கவிஞர்கள். அந்த அபூர்வ இனத்தைச் சேர்ந்த கவிஞர் முடியரசன் எந்தச் சபலத்துக்கும் முடிசாய்க்காத ஆண்மையாளர். தமது கவிதைகள் மூலம் சமூக அநீதிகளை மனிதரிடையே பேதாபேதங்களைக் கற்பிக்கும் ஏற்பாடுகளை - குருட்டுப் பழக்கவழக்கங்களைச் சாடியவர். மனிதநேயத்துக்கும் சமத்துவத்துக்கும் எதிரான கருத்துகளை எதிர்த்து கவிதைகள் மூலம் ஓயாத அறிவுப்போர் நடத்தியவர். ஒப்புரவும் மனிதநேயமுமே தமிழரின் பண்பாடு என்பதைக் கவிதைகளால்

முரசறைந்தவர். 'அரசவைக் கவிஞர்' என்ற பதவி மட்டும் இருந்திருக்குமானால் அதில் அமர்ந்து தமிழ் மொழிக்குப் பெருமை சேர்ப்பதற்கான தகுதிகள் அனைத்தும் உடையவர். அவருடைய மறைவின் மூலம் தமிழ் உலகம் ஓர் அபூர்வப் படைப்பாளியை இழந்து விட்டது. மரபு வழுவாமல், அதே சமயத்தில் புதுமை பூத்த இனிய கவிதைகளைச் சொரிந்து வந்த தமிழ்ப் பொழில் மறைந்துவிட்டது. அதிலும் உரைநடைக்கே கவிதைபோல வேடமிட்டுக் காட்டும் 'நவீன கவிஞர்கள்' மலிந்துவரும் இக்காலத்தில் தரம்மிக்க மரபுக்கவிதைகளைக் காலத்தின் தேவைகளுக்கு ஈடுசெய்யக்கூடிய வகையில் சுரந்து அளித்துவந்த செந்தமிழ் ஊற்று முடியரசன். தமிழுக்கு வளம் சேர்த்த அறிஞர்களின் படைப்புகளை அரசுடைமை ஆக்கும் சீரிய திட்டம் ஒன்றைத் தமிழக அரசு செயற்படுத்தி வருகிறது. அந்த வரிசையில் கவிஞர் முடியரசனின் படைப்புகளையும் *அரசுடைமையாக்கிச் சிறப்பிப்பதன் மூலம் இந்த அற்புதக் கவிஞனுக்குத் தமிழ் மக்களின் உணர்வுப்பூர்வமான அஞ்சலியைப் பிரதிபலிக்க முடியும்.

*குறிப்பு:- கவிஞரின் படைப்புகள் 2000ஆம் ஆண்டில் அரசுடைமை ஆக்கப்பட்டன.

கவிஞன்னா யார் என்பதற்கு எடுத்துக்காட்டுத்தானய்யா திராவிட இயக்கப் பகுத்தறிவுக் கவிஞர் முடியரசன்.

– தந்தை பெரியார்

என் மூத்த வழித்தோன்றல் முடியரசனே... எனக்குப்பிறகு முடியரசந்தாய்யா உண்மைக் கவிஞ... புரட்சிக் கவிஞ... என் பேரைக் காப்பாத்துறவ... கவிஞன்னா... இப்படித்தான் கவி பாடனும். இலக்கணத்தோட ஒழுங்கா எழுதனும்; அதைச் செய்றது நம்ப முடியரசந்தாம்பா...

-பாவேந்தர் பாரதிதாசன்

திராவிட நட்டின் வானம்பாடி கவிஞர் முடியரசன் ஆவார். புரட்சிக் கவிஞர் அடிச்சுவட்டில் இன்று எத்தனையோ கவிஞர்கள் மக்களிடையே எழுச்சி முரசு கொட்டி வருகிறார்கள் இலட்சிய கீதம் இசைத்து வருகிறார்கள். அந்த வரிசையில் முதன்மையானவர் முடியரசன்.

-அறிஞர் அண்ணா

'கவிப்பேரரசர்' என என்னால் அன்புடன் அழைக்கப்பட்டவர் முடியரசனார். தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிக்கின்ற மான் துள்ளும் வேகத்தைக் கவிதையினால் வான்பெய்யும் கோடைமழைபோலப் பொழிகின்ற முடியரசர்; முன்னாள் தொட்டு இந்நாள்வரை இருக்கின்ற நம் கவியரசர். தன்மானக்குன்றம் - தலைதாழாச் சிங்கம் - கொள்கை மாறாத்தங்கம் – திராவிட இயக்கத்தின் முன்னோடிக் கவிஞர் - திராவிட இயக்கத்தின் ஈடுஇணையற்ற தளகர்த்தர்களில் ஒருவர் – 1940க்குப் பின்னால் திராவிட இயக்கத்தின் சார்பில் நாற்பதுக்கும் மேற்பட்ட இதழ்களில் கொள்கை முழக்கம் செய்தவர் அவர். அதிலும் குறிப்பாக முரசொலியிலும் முத்தாரதிலும் அவர் கவிதை இடம் பெறாத நாளே இருக்க முடியாது. இன்று திராவிட இயக்கம் நிமிர்ந்து நின்று கோலோச்சுகிறதென்றால் அன்று முடியரசனார் ஆற்றிய இலக்கியப் பணியும் காரணம்.

-கலைஞர் மு.கருணாநிதி

கவிஞர் என்றால் இப்படித்தான் வாழவேண்டும் என்று முடியரசனார் அவர்களின் வாழ்க்கையைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். தலை தாழா வாழ்வுக்குச் சொந்தக்காரர் அவர். யாருக்காகவும் எதற்காகவும் தன் கொள்கையையும் நிலையையும் மாற்றிக் கொள்ளாத பெருமிதத்திற்குரியவர். ஒரே கொள்கை; ஒரே இயக்கம் அவருக்கு. அவை தன்மானக் கொள்கை; தமிழியக்கம் ஆகும். நான் பாட்டெழுத அழைத்தேன் ..... தமிழை விற்கமாட்டேன் என்றுகூறிய உண்மையான வணங்கா முடியரசர்.

-மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.

முடியரசர் இவரென்றால் மக்க ளெங்க? / முன்னோடும் பரிஎங்கே? படைக ளெங்கே? / முடிஎங்கே? அரசெங்கே? முரச மெங்கே? / முத்தமிழில் ஒருதமிழ்தான் முடியோ! மற்ற / இடைத்தமிழ்தான் அரசோ! மூன்றாவதான / எழிற்றமிழ்தான் முரசோ! ஓ! சரிதான் இந்த / முடியரசர் பாவரசர் பாடுகின்றார் நாம் / முழங்காலை நிலந்தாழ்த்தி வணங்கிக் கேட்போம்! - மும்முடியை ஓர்தலையில் முடித்த முடியரசர்! / எம்முடியும் தலைவணங்கும் இயற்கையிலே கவிஞர் / தம்மரிய கவிதையினால் கவியரசர் ஆனார்! /தாய்த்தமிழே! அவர்முடியை உனக்குத்தான் சாய்ப்பார்!

- கவிஞர் கண்ணதாசன்

எனக்குக் கவிதை எழுத வேண்டுமென்ற ஆசையால் அப்பாவிடம் (கவிஞர் கண்ணதாசன்) சென்று, கவிதை எழுவது எப்படி என்று எனக்குச் சொல்லிக் கொடுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர், "கவிதை எழுதுவதற்குச் சொல்லிக் கொடுத்தெல்லாம் புரிய வைக்க முடியாது; இந்தா.. இந்தக் கவிதைப் புத்தகத்தைப் படி" என்று கூறி, 'முடியரசன் கவிதைகள்' என்ற நூலை என் கையில் தந்து, "முடியரசன் கவிதைகளைப் படித்து மனப்பாடம் செய், யாப்பும் கவிதையும் தன்னாலே உனக்கு வந்துவிடும்" என்று அப்பா கூறினார். அவர் சொன்னபடியே முடியரசன் கவிதைகளைப் படித்து மனப்பாடம் செய்தேன். அறுசீர்,எண்சீர் விருத்தமெல்லாம் எனக்குத் தாமாகவே வந்தன. கவிதை எழுதக் கற்றுக் கொண்டேன். முடியரசனார் கவிதைகளைப் படித்தால் கவிதை எழுத முடியும் என்று அப்பாவுக்குத் தெரியும். அப்பா எனக்குத் தந்த 'முடியரசன் கவிதைகள்' நூல் இன்றளவும் என்னிடம் இருக்கிறது.

-கண்மணி சுப்பு (கவிஞர் கண்ணதாசனின் மூத்த மைந்தர்)

கவியரசர் முடியரசனார் என் மனதை ஆட்கொண்ட இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர். கனல் தெறிக்கும் கவிதைகளால் தமிழுணர்ச்சியை நம் உதிரத்தில் ஏற்றியவர். சமூக அநீதிகளைச் சாடிப்

பாடிய குயில். முன்னோடிக் கவிஞராகத் திகழ்ந்து எழுச்சியூட்டியவர். யாருக்கும் தலை தாழாதவர். கொள்கைக் குன்று. அவருடைய கவிதை வரிகள் தமிழுக்குக் கல்வெட்டு வரிகள். தமிழ்நாட்டு மேடைகளில் அவரது கவிதைகளை இசையோடு பாடிப் பரப்பும் மரபை இலக்கிய மன்றங்கள் ஏற்படுத்த வேண்டும். -கவிஞர் வைரமுத்து

முத்தமிழ்க் கவிஞர் முடியரசன் பற்றி / எத்துணை சொன்னாலும் ஈடாகாது! / அத்துணைக்கும் அவர் பொருத்த மானவர்தான்! / சத்தான கவிதைகளைத் தந்து மகிழ்ந்தவர்தான்! / தமிழுக்கு மகுடஞ்சூட்டி முடியர சரானார்! / அமிழ்துக்கும் உயிர் கொடுத்து அருந்தேவர் ஆனார்! / இமிழ்திரைக்கும் ஒலிகொடுத்து இசை வேந்தர் ஆனார்! / தமிழ்த் திரைக்கும் முன்னொரு நாள் தனி விருந்து வைத்தார்! / மலரும் நினைவுகளில் மறதிக்கு இடமில்லை! / புலரும் பொழுதினிலே புத்தொளிக்குப் பஞ்சமில்லை! / பலரும் போற்றுவதால் புகழுக்குப் பஞ்சமில்லை! / மலரும் கவி சொரிந்து முடியரசரை வணங்குகிறேன்!

- கவிஞர் வாலி

காரைக்குடியில் முதுபெரும் கவிஞர் முடியரசனார் வாழ்ந்த இல்லம் அரசு சார்பில் நினைவிடமாக மாற்றி, நினைவு மண்டபமாகக் கட்டப்படவேண்டிய முயற்சிகளை மேற்கொள்வேன்

-கா.காளிமுத்து, தமிழகச் சட்டமன்றச் சபாநாயகர் (10.02.2002)

கவிஞர்களிடையே ஓர் முடிசூடா மன்னராகத் திகழ்ந்தவர் கவியரசர் முடியரசனார். அவர் இயற்றிய கவிதை நூல்கள் ஒவ்வொன்றும் தமிழுக்கு ஆக்கம் செய்யும் செம்மொழிச் செல்வமாகும். இளைய தலைமுறையை எழுச்சி பெறச் செய்ய நமக்குக் கிடைத்த இணையற்ற உறுதி வாய்ந்த தன்மானக் கவிஞர்தான் முடியரசன். தமிழ் மகுடம் சூடிய தனி அரசர் அவர். தம் கொள்கையே எழுத்து; எழுத்தெல்லாம் கொள்கை. தம் வாழ்க்கையே கொள்கை; கொள்கையே வாழ்க்கை என வாழ்ந்து,

தமிழுக்கன்றி வேறெதற்கும் தலை தாழாக் கவிஞராக, தம்முடி முத்தமிழ்முடி அதன் உயர்வு பகுத்தறிவுச் சுடராக ஒளிர்ந்து, தம்முடி தாழும் நிலைக்கு இடம் தராது, எந்நாளும் நிமிர்ந்த தலையுடன் உயர்ந்து விளங்கும் முடி கொண்டு வாழ்ந்தவர் முடியரசனார். அவரால் தமிழும் தமிழரும் ஏற்றம் பெற்றனர். -பேராசிரியர் க.அன்பழகன்

புதுமைக் கவிஞர், பாவரசர், கவிப்பேரரசர், கவியரசு, சங்கப் புலவர் எனும் பட்டங்களையும் பெற்ற பெருமைக்குரியவர் முடியரசனார். கவிதையே உயிர் மூச்சாகக் கொண்டு தமிழாக வாழ்ந்தவரவர். இலக்கியத்தில் முதல் இடம் கவிதை; கவிதையில் முதல் இடம் முடியரசனார். ஓங்கு புகழ் பெற்று முத்திரை பதித்தவை அவரது கவிதைகள் -வைகோ

கவியரசு முடியரசனாரின் கவிதைகளில் மொழிப்பற்று, தமிழ் மக்களின் முன்னேற்றம் மையக் கருத்துக்களாக அமைந்திருக்கும். அவரது கவிதைகளில் கனல் தெறிக்கும். சமூக சமதர்மத்துக்கு எதிரான கருத்துக்களைச் சாடுவார். பழமையை, மடமையை அவர் ஏற்க மறுத்தவர். புதுமை படைத்தவர். அவர் கவிதைகள் காலத்தை வென்று நிற்கும். அக்காலத்தில் மாணவர்கள் புடைசூழ அவர் நடந்து வரும்போது, சோழன் ராஜசபையில் கம்பன் ராஜநடை நடந்து வருவது போல் இருக்கும். கவிஞர் பெருமகனார் முடியரசனார்க்கு தக்க நினைவுச் சின்னமாக உரிய செயல் செய்யப்பட வேண்டும். தமிழ்நாடு அரசும், தமிழார்வலர்களும் அத்தகு கடமையினைச் செய்து முடிக்க வேண்டும்.

- தா. பாண்டியன், பொதுவுடைமைக் கட்சித் தலைவர்

இயல்பிலேயே தமிழன்பனான நான் கல்லூரியில் பயிலும் காலத்தில், கவியரசர் முடியரசனார் கவிதைகளைப் படித்ததன் விளைவாகத் தீவிரத் தமிழுணர்ச்சியாளனாக ஆனேன். அவரால் ஊட்டப்பட்ட தமிழ்ப் பற்று

என்னை விட்டு எந்நாளும் அகலாது. 'எக்கட்சியிலிருந்தாலும் தமிழனாக-தாய்மொழிப் பற்றுள்ளவனாக இரு' என்பதே அவரது கவிமொழி

-ஏ.மா.சுதர்சன நாச்சியப்பன், முன்னாள் நடுவண் அமைச்சர்

தமிழை உயிர் மூச்சாகவும், வாழ்வாகவும் கொண்டு மரபுக் கவிதை உலகில் மணிமுடி சூடிய மாமன்னராய் விளங்கியவர் கவியரசர் முடியரசர். பாட்டரசர் எங்கள் அய்யா! வீழ்ந்து விடாத வீரத்தோடும், மண்டியிடாத மானத்தோடும் நிற்கும் அவர் கவிதைகள்.

-சீமான், தலைவர், நாம் தமிழர் கட்சி

பாவரசர் முடியரசனார் தமிழை நேசித்தார்; தமிழின் பாதுகாப்புக்காக உழைத்தார்; அவர் தன்னை ஒரு கவிஞராக மட்டும் அடையாளப் படுத்திக் கொண்டு பேரும் புகழும் பெற்று வாழ்ந்திருக்க முடியும். ஆனால் கொள்கை வழியில் தன் இல்லற வாழ்வையும், தன் குடும்பத்தின் அடுத்த தலைமுறையினரையும் அத்தகைய புரட்சிப் பாதையில் வழி நடத்தியிருக்கிறார். முடியரசனாரின் கொள்கை வழியை யாவரும் பின்பற்ற வேண்டியது வரலாற்றுத் தேவை. அதுவே அவருக்கு நாம் செலுத்தும் வீரவணக்கம்.

-தொல். திருமாவளவன், தலைவர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி

திராவிட இயக்க முத்துக்களில் முடியரசனார் முக்கியமானவர்

–கி.வீரமணி, திரவிடர் கழகத் தலைவர்

"கவிஞர் கண்ணதாசன் தன்னை விட, கவியரசர் முடியரசனாரை அதிகம் மதித்தவர் என்பது நானறிந்த உண்மை.

- கவிஞர் ஆடற்கோ,

ஆசிரியர், 'தேனாறு' கவிதை இதழ், சென்னை (கண்ணதாசனின் நண்பர்)

இருபதாம் நூற்றாண்டின் இலக்கியவாதிகளுள் இணையற்றவர் கவியரசர் முடியரசனார்

-முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்

கவிஞர் முடியரசனார் தமிழ்வாழ்வே தம் வாழ்வாகக் கொண்டவர். தம்கவிதைகள் மூலம் சாதி, சமயம், கடந்த சமுதாயம் அமைய தம் கவிதைகள் மூலம் போராடியவர். பகுத்தறிவுக்கு எதிரான கருத்துகளை எதிர்த்து தம் கவிவாள் கொண்டு அறிவுப்போர் அயராது நடத்தியவர். கவிஞர் என்பதற்கு அவர் ஓர் இலக்கணம். அவர் எழுத்தோவியம் காலமெல்லாம் நிறைந்து நிற்கும். தமிழர் பண்பாடு உயர அறிவுப்போர் நடத்தியவர். என்றும் பெருங்கவிஞர் பெயர் நிலைத்து நிற்கும். தமிழ்ச் சமுதாயம் அவரை என்றும் மறக்க இயலாது, மறக்கவும் முடியாது.

-அரு. இலக்குமணன், உச்ச நீதி மன்ற முன்னாள் நீதியரசர்

முடியரசனார் என்னுடைய ஆசிரியர். வள்ளுவனை, அவ்வையை, கம்பனை, இளங்கோவை, பாரதியை, பாரதிதாசனை ஆகிய நல்ல பிள்ளைகளைப் பெற்ற தமிழ்த்தாய், கவியரசு முடியரசனாரையும் ஈன்றாள். கவிஞர் முடியரசனாரின் கவிதைகளை எத்தனை முறை படித்தாலும் திகட்டாத் தன்மையன. தன்மானத்தோடு தமிழன் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்பதை இடைவிடாது சொல்லித் தமிழ்த்தாய்க்கு மகுடம் சூட்டியவர். கவிஞர் வாழுங்காலத்தில் செல்வம் அவருக்குக் கிட்டிவரவில்லை. ஆனால் அவர் கவலை கொள்ளவில்லை. வாழ்க்கையில் செம்மையிலிருந்து ஒரு போதும் மாறியதில்லை. ஆயிரமாயிரம் கவிதைகளைக் கட்டி, அவற்றைத் தன் தாய் செம்மொழி தமிழுக்குச் செல்வமாக்கினார்

-மெ.சொக்கலிங்கம், முன்னாள் நீதியரசர்,உயர்நீதி மன்றம்,
நீதியரசர், தேசியப் பசுமைத் தீர்ப்பாயம்

ஆற்றொழுக்கனைய கவிதையோட்டமும், ஆழ்ந்த கருத்துச் செறிவும், இலக்கணவளமும், இலக்கியச் செழுமையும், உவமை நயமும் நிறைந்த கவிதைகளைப் படைத்தவர் கவியரசர் முடியரசன். தமிழிலக்கிய வரலாற்றில் அவருக்கென்று சிறப்பான இடமுண்டு

-டாக்டர் மு.வரதராசனார்,

முன்னாள் துணைவேந்தர், மதுரை பல்கலைக் கழகம்

பாடப் பிறந்த பழஞ்சபை மாணவன் / மூடப் பழக்கஞ் சாடியபாவலன் / இலக்கியம் நிலமா இலக்கணம் அரணாக் / கவிதை கோலாக் கற்பனை கொடியா / வெல்க தமிழெனும் விறற்கொடி பொறியா / யாப்புப் படையா நல்லணி துணையாப் / புரட்சி முரசாப் புதுமை துடியாத் / தமிழை இகழ்வார் தன்னுயிர்ப் பகையா / அல்மொழி திணிப்பார் வல்வர வெதிர்த்துத் / தொடுமொழிப் போரில் தும்பை சூடியோன் / மொழியர சோச்சும் முதல்முடி யரசன் / குடியரசு போற்றுங் கொள்கை யோனே."

-முனைவர் வ.சுப.மாணிக்கனார்,

முன்னாள் துணைவேந்தர், மதுரை பல்கலைக் கழகம்

உலக மொழிகளில் தேசியக் காப்பியம் என்று சொல்லத்தக்க நூல்கள் மூன்று. அம்மூன்றனுள் ஒன்றான 'பூங்கொடி' எனும் பைந்தமிழ்க் காப்பியம் படைத்தவர் கவிஞர் முடியரசன்

-பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையார்

வளையாத முடியரசன் வைரத் தூண்தான்! / குலைஇளநீர் கொட்டியதாய் இனிமைப் பேச்சு / 'குடி'யறியாச் சிந்தனைகள் தமிழே மூச்சு / அலைகடலாய் கருத்துமனம் / எவரெவரோ எழுதுகின்றார்! இவரைப் போன்றே / எழுந்தவர்யார் எழுத்தாலே? / யுகப்புரட்சி எழுத்தாளா! தமிழர் கைக்கு / உயிர்நூற்கள் படைப்பாளா! உன்றன் தொண்டை / அகங்குளிர நினைக்கின்றேன்! உருவம் கூட / அகலவில்லை! அடடாநீ! எங்கே போனாய்?"

-கவிஞர் சுரதா

தமிழின் வேங்கை../ முடியரசன் எனும் புலவன் வான் வெளியில் முகில் மோதி மின்கிழித்த இடிமுரசாய் இலக்கியங்கள் படைத்தளித்தான் இனமும் மண்ணும் / குடியிருந்த தமிழ்நெஞ்சன் முடியரசன் தமிழ்குளித்து நிமிர்வு கொள்வோம்! / வெறிகொண்ட தமிழ்மண்ணின் புலவர் கண்டீர்..! / மற்றவர்க்கு வழிகாட்டி என வாழ்ந்தான்..! அவன்மரபு வழியே நிற்போம்! / வண்டமிழைக் காத்தற்கே முடியரசன் வண்டமிழை வாளாய்க் கொண்டான் /உரிமைப் போரில் எண்டிசையும் முரசார்த்தான்! புலிஆனான்! எமைஎதிர்த்த கொடும் பகைவர் மண்டை அதிர்வுற மொழிப்போர் புரிந்தவனைத் / தமிழரினம் மறப்பதுண்டோ? கண்ணிமைபோல் தமிழ் காத்தான்.. முடியரசன் / களப்புலவன் ஆனான் கண்டீர்! நிலைகுலைந்த தமிழ்மண்ணில் முடியரசன் / நிமிர்வெழுந்த காலம் செய்தான்.. தலைநிமிர்ந்த இலக்கியனாய் தமிழ்மண்ணின் / வரலாற்றில் தடம் பதித்தான்! மலைபிளந்து வெடித்தமிழ் நெருப்பானான்../ மறுமலர்ச்சி படைத்தான் அம்மா!

–கவிஞர் காசி ஆனந்தன்

முடியரசனார் தமிழ்த் தேசியத் தமிழின மாபெரும் எழுச்சிப் பாவலர். தமிழ்வீறு மிக்க அவரது பாடல்கள் தமிழ்த்தேசியப் படைக்கலன்களன்களாகும். எதைப்பற்றிப் பாடினாலும் அதில் தமிழ்மொழி,இனம்,நாடு இவைகளே ஊடாடும்.அவரது எண்ணம் எப்பொழுதும் தமிழாகவே இருந்தது. தமிழும் தமிழரும் நாடாள வேண்டுமென்பதே அவர் இலக்கு. அவ்விலக்கை நாம் அடைவதே அவருக்கு நாம் காட்டும் நன்றி.

-பாவலர் பெருஞ்சித்திரனார்

முடியர சர்பலர் ஆண்டனர் முன்னாள் பாரிடை இன்று யார்முடி யரசர்? /......./ குடியர சோங்கிடும்யுகத்தினில் இங்கே முடியர சென்றே மூதறி வாளர் / போற்றிட இங்கே போந்தனர் ஒருவர் என்ன புதுமை! என்ன வியப்பு! / முடியர சாள்வது புவியுல கந்த முடியர சன்றிவர்! கவியுல காளும் / முடியர சாம்இவர்;மூத்த தமிழ்க்கவி முடியர சாம்!இவர்

இயல்பினுக் கேற்ப / ‘அஞ்சா நெஞ்’சினை அணிபெறப் பாடும் பொருளெனக் கொண்டதில் புதுமைஒன் றில்லை!

-தவத்திரு குன்றக்குடி அடிகளார்

முடியரசனார் நாடறிந்த பாவலர். பழைய நாள்களில் எங்கே பாட்டரங்கம் நடைபெற்றாலும், அங்கே இந்தக் குயில் கூவாமல் இருந்ததில்லை. அவர் அறியாத தலைவர்களும், அவரை அறியாத தலைவர்களும் அற்றை நாளில் இல்லை. அவர் பரவலாகக் காணப்படும் ஆசிரியர்களிலும் கூடுதலானவர். எனவே அவருக்கு மதிப்பளித்து நடந்து கொள்ள வேண்டும் என்ற உணர்வு, அன்றைய என் தலைமுறை மாணவர்களிடையே மிக்கிருந்தது. இது அன்றைய காலகட்டத்தில் தமிழுக்கு இருந்த அளப்பறிய மதிப்பின் வெளிப்பாடு! தமிழ் என்று வந்து விட்டால், அதற்கு எதிரான எதனோடும் இணக்கப் படுத்திக் கொள்வது அவரது இயல்பில்லை. முடியரசன் என்னுடைய ஆசிரியர்.

- பழ.கருப்பையா,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், (அ.தி.மு.க.)

காரைக்குடி தந்த பாட்டரசன்! புலமைப் பேரரசன்! ஈட்டிமுனை எழுத்தால், தனியரசன்! எங்களை எல்லாம் எழுத்தால், எண்ணத்தால், வழி நடத்திய எங்கள் ஆசான் முடியரசன்! அய்யா அவர்களிடம் கல்வி பெற்றது நான் பெற்ற பெரும் பேறு! அவரிடமிருந்து தமிழை நான் தலையில் ஏற்றிக் கொண்டேன்! எனக்கு தமிழ் உலகிற்கு அவர்தான் நேரடி ஆசான்! தமிழ்த்திரையுலகிற்கு அவர் மறைமுக ஆசான்! 1960 வாக்கில், எம்.ஆர்.ராதா, அசோகன் நடித்த ‘கண்ணாடி மாளிகை’ என்ற திரைப்படத்திற்கு முடியரசனார் கதை, வசனம், பாடல்கள் எழுதினார். அப்படம் வெளிவந்த நாளை நாங்கள் திருவிழா போல் கொண்டாடினோம். நானும் திரையுலகில் எதிர்காலத்தில் நுழைய வேண்டும் என்று முடிவெடுத்தேன். நான் திரையுலகில் 126 படங்களை இயக்கி இருந்தாலும் இது போன்ற ஏதேனும் சிறப்புகள்

சேர்ந்திருந்தாலும், இதற்கெல்லாம் முழு முதல் காரணம் என் ஆசான் முடியரசன் அவர்கள்தான்! அவரின் புகழை என்றென்றும் பாடுவதே நம்மைப் போன்ற தமிழர்களுக்கு பெருமை!"

-இராம.நாராயணன், திரைப்பட இயக்குநர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

நான் காரைக்குடி மீ.சு.உயர் பள்ளியில் படித்த பொழுது, என் தமிழாசான் கவியரசர் முடியரசனார். அவர் கற்பகத் தருவாக இருந்தார். எண்ணற்ற மாணவர்களைக் கவிஞர்களாக, தமிழுணர்வாளர்களாக அவர் உருவாக்கினார்; உயர்த்தினார். அவர் உண்டாக்கிய கற்பனைச் செல்வத்தோடு தான் திரை உலகில், 'காரைக்குடி நாராயணன்' என்ற பெயர் எழுத்தாளனாய், இயக்குநராய், தயாரிப்பாளனாய் ஓர் இடத்தைத் தக்க வைத்துக் கொள்ள முகவரியானது. நான் ஒரு கவிதை நூலை எழுதி, "பாக்குவித்த முடியரசன், ஊக்குவித்த காரணத்தால், ஆக்குவித்த கவிதைகளை, அவர்க்கென்று படைக்கின்றேன்" என எழுதி, அந்நூலை முடியரசனார்க்குப் படைத்து, கவிஞர் கண்ணதாசனிடம் பாராட்டைப் பெற்றேன். காரைக்குடியில் கவிஞர் முடியரசனார் சாலையில் கவிஞர் கண்ணதாசன் மண்டபம் இருப்பதை நான் பலரிடம் கூறிப் பெருமைப்படுவதுண்டு

-காரைக்குடி நாராயணன், திரைப்படஇயக்குநர்

கவியரசர் முடியரசனார், கவிதைத்தமிழ் கனியாக இருக்கும். அவரிடம் படித்த மாணவர்கள் பலர் கொள்கைப் பிடிப்புள்ள தமிழ்க்குடி மக்களாக உருவானார்கள். அன்று முடியரசர்களால் நாட்டிலே வளர்ந்தது; இன்று முடியரசன் நாவிலே தமிழ் வளர்கிறது. முடியரசனார் கவிதைகள் உலகெங்கும் வாழும், என்றும் சங்க இலக்கியமாய்த் திகழும்.

-எஸ்பி.முத்துராமன், திரைப்பட இயக்குநர்

அன்றும் இன்றும் என்றும் தமிழ்த்தாயின் மணிமுடியில் ஒரு மாணிக்கம் கவியரசர் முடியரசனார். பிழைக்கப் பாடியவர் அல்லர் அவர்; தமிழ்மொழி

தழைக்கப் பாடியவர். எத்தனையோ இடர்ப்பாடுகள், இன்னல்கள், வறுமை நிலை தாக்கிய போதும் அவர் யாரையும் எதற்காகவும் வேண்டிப் பாட வில்லை. ஆயிரம் துயரங்கள் தொடர்ந்த பொழுதும் தமிழ்மொழியைப் பாடுவதையே குறிக்கோளாக வாழ்ந்தவர். தன்மானம் காத்த கவியாய் வாழ்ந்தவர். பட்டுக்கோட்டை கலியாணசுந்தரத்தின் முன்னோடி முடியரசனார்.

-திண்டுக்கல் ஐ.லியோனி, பட்டிமன்றச் சொற்பொழிவாளர்

மொழியென் றாலே முத்தமிழ் ஒன்றே மொழியென்பார் / பழியென் றாலோ கோடி கொடுப்பினும் பண்ணாதார் / கொடியுரசும் தென்றலைப்போல் குளிர்ந்தமணக் / கவிகொடுக்கும் கொடையுள்ளத்தர் முடியரசர் எனும் பெயரார். **-கவிஞர் அப்துல் ரகுமான்**

கவிவேந்தர் முடியரசர் கனல்கக்கும் கவிவாணர் / புவிவாழ தமிழ்வாழ புரட்சிப்பா நெய்தவீரர்! / புதுமைக்கவிஞர்; புரட்சிக்கவிஞர், பேரால் முடியரசர் / குடியரசுக் கொள்கை பேரா முடியரசர்!

-கவிஞர் நா. காமராசன், திரைப்படப் பாடலாசிரியர்

முடிசூடா அரசர்எங்கள் முடியரசர் / முகம்மலரும் அகம்மலரும் கவியரசர்! / கொள்கையிலே சமரசங்கள் செய்ததில்லை / குப்பைக்கும் பொன்னாடை நெய்ததில்லை! / சொல்வேறு செயல்வேறாய் வாழ்ந்ததில்லை / சுயமரியா தைஎன்றும் வீழ்ந்ததில்லை! / மூவேந்தர் வீரமுண்டு; ஈரமுண்டு; / மொய்த்திருக்கும் ரசிகமணிக் கூட்டமுண்டு! / தமிழ்த்தாயின் இதயத்தில் வாழுகின்றார் / தமிழாலே இன்றும்நமை ஆளுகின்றார்! **-கவிஞர் மு.மேத்தா, திரைப்படப் பாடலாசிரியர்**

கவியரசர் முடியரசன் கவிதைகளைப் படித்துவிட்டுக் / கவிஞர்களாய் ஆனவரில் காசினியில் நான்ஒருவன்! / செவியரங்கம்தனில் நுழைந்து சிந்தையெலாம் சிலிர்க்கவைக்கும் / கவியரங்கக் கவிதைகளில் காளமேகம் முடியரசன்! / வேரூன்றி நிற்கின்ற வீழாத தமிழ்ப்பொழிலில் /

சீருன்றிப் பூத்திருக்கும் திருவிருத்தப் பூமரம்தான் / ஊருன்றிப் பாராட்டும் உயர்கவிஞர் முடியரசர்! / ஆர்தோன்றி மறைத்தாலும் அணையாத தமிழரசர்!

-கவிஞர் முத்துலிங்கம், திரைப்படப் பாடலாசிரியர், முன்னாள் அரசவைக் கவிஞர்

தாசன் என்று பெயர் சூட்டிக் கொண்ட அந்தக்காலத்தில், 'அடிமை இல்லை அரசன் நான்' என்பதுபோல தனக்கு முடியரசன் என்று பெயர் சூட்டிக் கொண்டு கவிப் பேரரசராக வாழ்ந்தவர் முடியரசனார். எழுத்தை அவர் விற்க வில்லை. எழுத்து வியாபாரியாக இருந்திருந்தால் உயர்வு பதவி, நிறைய பணம் சேர்ந்திருக்கும். காசுக்குப்பாடாமல் காசினிக்குப் பாடிய முடியரசனார், அஞ்சியோ கெஞ்சியோ வாழ்ந்ததில்லை. மிஞ்சும் புகழுடைய அவரை நான் எழுதுவது இமயத்தைப் பற்றி மணற்குன்று எழுதுவது போன்றது. குருவருளால் நான் அவரின் பல கவிதைகளைப் படித்து என் மானசீகக் குருவாக அவரை வரித்தவன் நான்.

-கவிஞர் பிறைசூடன், திரைப்படப் பாடலாசிரியர்

உயிரெழுத்துத் தமிழுக்குத் தன்னைத் தானே / உயிலெழுதி வைத்தவர் யார்? உலக மெங்கும் / குயிலெழுத்துத் தமிழாலே கூவிக் கூவி / கொள்கைகளை விதைத்தவர்யார்? தமிழின் பகையை / புயலெழுத்துப் பாடலாலே புலைய றுத்து / புலித்தடத்தைக் கவிதைகளில் பதித்த வர்யார்? / கூரெழுத்து! யாருக்கும் தலையைத் தாழா / கோலெழுத்து! முடியரசர் என்னும் பேரே

– கவிஞர் பழநி பாரதி, திரைப்படப் பாடலாசிரியர்

தன்மானக் கவியரசர் தலைவணங்கா முடியரசர் / முற்போக்கு முடியரசர் வழிநடப்போம்

-கவிஞர் நா.முத்துக்குமார், திரைப்படப் பாடலாசிரியர்

தமிழள்ளி அனல் கொதிக்கும் தமிழ் உணர்வில் / முற்றிய நல் கவிதைகளை முழுதாகத் தந்தவரில் / முதன்மையர் எம் முடியரசர்! /

நெருப்பள்ளித் தமிழ் செய்து நெடுநாள் இருட் / சருகை எரித்துச் சிரித்தவர் எங்கள் முடியரசர்! / மூச்சாகத் தமிழ் குடித்து முனைப்போடு கவி செய்து / எங்கள் தமிழுக்கே என்றும் வாழ்ந்திருந்த முடியரசர்!

-கவிஞர் அறிவுமதி, திரைப்படப் பாடலாசிரியர்

முடிஅணிந்த மன்னர்பலர் இருந்தார்; போனார்! / முனைந்தெழுந்த 'குட்டுவ'னே மானங் காத்தான்! / அடிஎழுதும் கவிஞர்பலர் இருந்தார்; ஆனால் / அறிவியக்கக் கோட்பாட்டைத் திட்பத் தோடு / முடியரசர் போலிங்கே தீட்டி வைத்தோர் / மொழிவதற்கே ஒருவருண்டா? / ..... உண்மை, இந்தப் / பாட்டரசர் பாட்டையில்தான் கவிஞர் கூட்டம் / பாடல்களைப் படைக்கின்றார்; மறுப்பார் உண்டா?

- கவிஞர் வேழவேந்தன், முன்னாள் அமைச்சர்

கண்ணகி விட்டுச் சென்ற தீப்பொறிகள் / எழுத்திலும் சொல்லிலும் கனன்றதொரு காலம் அது / சொல்லின் கனலை மேடைதோறும் / எங்கள் செவிகளில் எழுதினீர்கள்! நாங்கள் / நெருப்பைக் கற்றோம் நெருப்பை வாசித்தோம் நெருப்பை எழுதினோம் / பாரதிதாசன் முடியரசன்... / எழுகதிர்கள் எம்மை வழிநடத்தன.

-கவிஞர் இன்குலாப்

எவரும் அடிமைப்படுத்த முடியாத முடியரசன் மூச்சுகளை / வாழ்வு முடித்தது உண்மையாகலாம் / அவர் கவிதைகளே அவருடைய மூச்சுகளாக / அவர் வாழ்கிறார் இன்னும் என்பது எப்படிப் பொய்யாகலாம்? / கொள்கைக்கு விடுமுறை கொடுத்துவிட்டுக் / குனிந்து எவர்முன்னும் நின்றதில்லை முடியரசன் / முடியரசன் பெருமித உயரம் எந்த இமயத்திற்கும் இல்லை, / முடியரச வெப்பம் எந்தச் சூரியனுக்கும் இருப்பதில்லை.

-கவிஞர் ஈரோடு தமிழன்பன்

வெள்ளம்தான் முடியரசர் உதிர்த்த பாக்கள் / வீரம்தான் மனவயலில் விளைந்த சம்பா / உள்ளம்தான் அவராண்ட உயர்ந்த கோட்டை / ஊக்கம்தான் அவர்நடந்த அரச பாட்டை / இல்லம்தான் புறாக்கூடாய் அமைந்த போதும் / இமயம்தான் அவர்வாழ்ந்த கவிதை வாழ்க்கை / உமிழுவதும் பாட்டாக உருவம் கொள்ளும் / ஊதுவதும் வெண்பாவாய் உடனேமாறும் / இமிழுவதும் விருத்தவகை அறுசீர் எண்சீர் / இலக்கணமும் இலக்கியமும் தலைகீழ்ப்பாடம் / அமிழுவதும் மிதப்பதுவும் எளிய கூடம் / அண்டுவதும் கெஞ்சுவதும் அறியாப் பாடம் / தமிழுலகும் தமிழரசும் இனிமே லேனும் / தலைமுறையை உயர்த்திடுமா? உயர்த்தும் நன்றி

-கவிஞர் அரசி

தெரிந்தெடுத்த தமிழ்வரிசைப் பாவாணர்க்குள் / தீப்பந்தம் முடியரசன்; கவித்து வத்தில் / ஒருவனிவன்; எதிரில்லாக் களப்போர் வீரன் / ஓங்குதமிழ்ப் பெருங்கடலில் மூழ்கி முத்துச் / சரமெடுத்து வலம்புரியின் சங்கெ டுத்துத் / தமிழ்மொழிக்குச் சீர்வைத்த தகைமை யாளன் / பட்டதுயர் பலவுண்டு, எனினும் என்ன? / பாதையினை மாற்றாத தூய்மை யாளன்! / தன்னுழைப்பை விருதுகட்கு விற்றி டாத / தறுகண்மை முடியரசன்; கவிதைவானில் / மின்னுகின்ற விண்மீனாய்ச் சுடர் தெறித்து / மீளவரும் காலமெல்லாம் நிலைத்தி ருப்பான்!

-கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம்

நெருப்பிலே தமிழைச் செய்யும் நெடுமுடி யரசன் சாவின் / தெருவிலே தேராய் நின்றார் செந்தமிழ் கலங்கிச் சோர்ந்தாள் / முடியர சென்போன் வாழ்வை முடித்தனன்! தன்மா னப்போர் / இடிமழை மின்னல் கீற்று இறுதியாய் முறிந்த தின்று / விடியலை எழுப்பும் வெள்ளி வீழ்ந்தது - புரட்சிப் பாட்டுக் / கொடியது இறங்கி மண்ணில் குவித்தது துயரச் செய்தி / பாட்டையே ஈட்டி யாக்கி- வேய்பவர் களத்தில் இல்லை- / வேதமே

வெலவெ லத்துத் தேய்ந்தது - அவரால் என்றால் / திரும்புமா வீரம் முன்போல்?

-கவிஞர் குடியரசு, ம.தி.மு.க., துணைப் பொதுச் செயலாளர்

மேடையில் ஒன்று; சொந்த / வாழ்க்கையில் மற்றொன்(று) என்ற / வாடகைக் கொள்கை மாந்தர் / வாழ்கின்ற இந்த நாட்டில் / ஆடகப் பொன்னே போன்ற / அத்துணை தூய வாழ்க்கை / கோடிகள் கொட்டித் தந்தும் / கொஞ்சமும் விடார்தம் போக்கை / நம்மொழி நம்மண் என்ற / நாட்டமே இன்றி எல்லாம் / எம்மக்கள் எம்வீ டென்றே / இயங்கிடும் உலகம் தன்னில் / செம்மையாய்ப் பன்னூல் தந்த / முடியரசர் படைப்பை எல்லாம் / தம்செல்வம் என்றே போற்றும் / தமிழ்நாட்டை என்று காண்போம்?

-கவிஞர் தமிழேந்தி,அரக்கோணம்

முடியரசன் ஓர் தமிழியக்கம். தமிழ் வீறுமிக்க கவிதைகளைப் படைத்தவர். அவரின் கவிதைகள் தமிழ்ப் போரின் ஆவணங்கள். “காணாது ஈத்த இப்பரிசிலுக்கு யான் ஓர்/ வாணிகப் பரிசிலன் அல்லேன்..../.... முற்றிய திருவின் மூவரே ஆயினும் / பெட்பின்றி ஈதல் யாம் வேண்டலமே” என்னும் சங்கப் புலவர்களின் வைர வரிகளுக்குச் சான்றாக வாழ்ந்து காட்டிய பெருமித வாழ்வு முடியரசன் வாழ்வு. திராவிட இயக்க எழுச்சிக் காலத்தில் இவர் பாடல்கள் மாற்றுக் கட்சியினர்க்கு இடி முழக்கமாய் அமைந்தன. கவியரசு முடியரசனார் வாழ்கிற காலத்தில் வாழ்வது நாம் பெற்ற பேறு.

-பதிப்புச் செம்மல் ச.மெய்யப்பன்

தமிழ் மானம், தமிழ் உணர்வு பற்றி எழுச்சிப் பாடல்களை எழுத வந்த இன்னுமொரு புரட்சிக்கவிஞர்தான் கவியரசர் முடியரசர். விருத்த வரிகளால் இளைஞர்கள் பலரை எழுத வைத்தவர் முடியரசர். அந்நாளில் கல்லூரிகளிலும், கூட்டங்களிலும் கவியரங்கம் நடந்தால் கவியரசர் முடியரசர்தான் தலைமை தாங்குவார். தமிழின் சுவை, தமிழின் அழகு

முடியரசன் பாடல்களில் வழிந்தன. தனக்கொரு தமிழ் மாட்சியை கவிதைகளில் பொன்னொளியாக மின்னிடப் பாடல் புனைந்ததை நாடு மறப்பதற்கில்லை.

-அறிஞர் ஔவை நடராசன், முன்னாள் துணைவேந்தர்,
தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்

கவியரசர் முடியரசனார் தமிழுணர்ச்சிப் பிழம்பாக வாழ்ந்தவர். அவருடைய எழுத்துகள் யாவும் தமிழுணர்ச்சியையும் தமிழ்ப் பண்பாட்டையும் சுயமரியாதை உணர்ச்சியையும் மையப்படுத்தியவை. அவர் சமுதாய மேம்பாட்டுச் சிந்தனையாளர். விளம்பரம் வேண்டாத சீர்திருத்தவாதி. சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளி இல்லாமல் வாழ்ந்த செயல் வீரர். தமிழிலக்கிய வரலாற்றில் ஒரு ஒளிவிளக்கு.

-முனைவர் பொற்கோ, முன்னைத் துணைவேந்தர்,
சென்னை பல்கலைக் கழகம்

தன்மானக் கவியரசாய், தமிழிசைப் பாவலராய், மரபின் மைந்தராய், தமிழ் மரபுக் காவலராய், வள்ளுவர் நெறியில் வாழ்க்கையை நடாத்தி, வாய்மைச் சொல் போற்றி, சொல்லும் செயலும் சேர்ந்தோங்க செயல்பட்டு, வறுமையிலும் செம்மை போற்றி, வாழ்வாங்கு வாழ்ந்தவர். தன்னிகரில்லா தனிப்பெரும் கவிஞர்.

-முனைவர் மு.பொன்னவைக்கோ, முன்னைத் துணைவேந்தர்,
பாரதிதாசன் பல்கலைக் கழகம்

Unfortunately many of the poets preferred to repeat rather than move forward giving wings to their own individuality. Of the few who did manage to make a mark on their own..... Mention may be made of poets like Mudiyarasan..... A high seriousness and world-play mark his traditional style.... As with the others..... of poets, Mudiyarasan has written plentiful lyrics also extolling the Tamizh language in a variety of ways. There is almost a religious frenzy about this love of Mudiyarasan

for the language, which is set up as an icon. -Dr.Prema Nandha Kumar, Book:–The Poet as witness: Tamil poetry through seven hundred years, The life-World of the Tamils: Past and Present-Volume II

தன்னுடைய நெஞ்சில் ஊறிய கருத்தைத் துணிந்து முன் வைத்துப் பாடுவதிலும், ... தன்னிகரற்ற முடி சூடாக் கவி மன்னர் முடியரசர். செம்மாந்த கவிஞன் ஆவர். பொன்னுக்கும் பொருளுக்கும் வளைந்து கொடுக்காத நெஞ்சுரம் படைத்த புரட்சிக் கவிஞன். சீர்திருத்தச் செம்மல். தேசிய பாரதிக்கு ஒப்பானவர். முடியரசன் கவிதைகள் காலத்தால் அழிக்க முடியாத சிறந்த இலக்கியப் பேழை; செம்மொழிச் செல்வம். அவரது கவிதைகளும் காப்பியங்களும் சங்க காலத்தை நினைவூட்டும்.

- செல்வி சிவராமன் (கவிஞர் கண்ணதாசனின் பள்ளித்தோழர்)

கவியரசர் முடியரசன் எழுத்துக்கும் வாழ்வுக்கும் இடைவெளியின்றி வாழ்ந்த எழுச்சிக்காரர். காட்சிக்கு புலியாக மட்டுமல்ல.. அசலான வாழ்விலும் புலியாக வாழ்ந்த தமிழின் உறுமலாய் உலா வந்தவர். முடியரசனாரின் தடத்தைப் பின் தொடர்ந்து தமிழால் தரணி ஆள்வோம்..என உறுதி ஏற்போம்

-கவிஞர் தமிழச்சி தங்கப்பாண்டியன்

போர்முரசப் பேரொளிப்பு! புலிநகத்து வரியோட்டம்! / கூர்வாளின் சுழல்வீச்சு! கொள்கைத்தேர் புயற்பயணம்! / நீர்குதிக்கும் மலையருவி நேர்நிறுத்தும் தமிழ்க்கவிதை! / தார்வேந்தர் முடியரசன் தமிழுக்கு வணங்குவரே! / தோள்தாங்கும் கறுஞ்சால்வை! தோற்றமதோ கறுஞ்சிறுத்தை! / வாள்வடிவ அடர்மீசை! வான்கதிர்கள் சுடர்விழிகள்! / தாள்தேய நடந்ததெலாம் தமிழ்வளர்க்கும் திசைநோக்கி! / கேள்வர்க்குத் துணைநின்ற கோளரிமா முடியரசே! / அறச்சீற்றம் அடையாளம்! அடிபணிந்து குறுகாத / மறப்போக்கு மனப்போக்கு! மானமதைப்

பேணுங்கோ! / விறல்மிக்கு விற்கணையாய் விருத்தங்கள் எய்திருந்தோன்! / திறலோங்கு முடியரசன் தேரோட்டி செந்தமிழ்க்கே!/ முடியரசன் கவிதைக்கு மொய்த்திருக்கும் ஒருகூட்டம்! / முடியரசன் போல்கவிதை முயன்றிருக்கும் சிறுகூட்டம்! / முடியரசன் புகழ்செதுக்க முனைந்திருக்கும் திருக்கூட்டம்! / முடியரசன் திருநாமம் முழங்கியேநீ மகிழ்நெஞ்சே!

-கவிஞர் வெற்றிப்பேரொளி, துணைப்பொதுச் செயலாளர்,
உலகத்தமிழ்க் கவிஞர் பேரவை

மரபுக் கவிதையில் மாமன்னர்! / அதனால் அவர் அசல் முடியரசன்! / புதுமைக் கவி! புரட்சிக் கவி! / காலத்தால் அழியாத கவிதைகளைக் / காலமறிந்து கொடுத்தவர்! / தேர்ந்தெடுத்த பாதையில் திசை மாறாத் தேர்ப்பாகன்! / அவர் சம்பாதித்தது பணத்தையல்ல.. இனமானத்தை! / இறுதி மூச்சு வரை / தன்மானம் காத்த தன்மானக் கவிஞர்! / அவருக்கல்லவா கட்டவேண்டும் மணிமண்டபம்! / இடிமுழக்கப் பாட்டெழுதி என்றும்-/ விடுதலைக்கேப் பாட்டெழுதும் / கொள்கைப் பகுத்தறிவுப் பாட்டரசர், பாட்டெல்லாம் முத்து

-கவிஞர் பொன்.செல்வகணபதி,
சென்னை

"....தமிழின் வேங்கை முடியரசன் எனும்புலவன்
வான்வெளியில் முகில்மோதி மின் கிழித்த இடிமுரசாய்த்
தமிழ்ப்பாவின் இலக்கியங்கள் படைத்தளித்தான்!
இனமும் மண்ணும் குடியிருந்த தமிழ்நெஞ்சன் முடியரசன்
தமிழ்குளித்து நிமிர்வு கொள்வோம்!...
வெறிகொண்ட தமிழ்மண்ணின் புலவன் கண்டீர்...!
மற்றவர்க்கு வழிகாட்டி எனவாழ்ந்தான்...!
அவன்மரபு வழியே நிற்போம்!
வண்டமிழைக் காத்தற்கே முடியரசன்
வண்டமிழை வாளாய்க் கொண்டான்!...
உரிமைப்போரில் எண்டிசையும் முரசார்த்தான்!
புலிஆனான்! எமைஎதிர்த்த கொடும் பகைவர்
மண்டைஅதிர்வுற மொழிப்போர் புரிந்தவனைத்
தமிழரினம் மறப்ப துண்டோ?... கண்ணிமைபோல்
தமிழ்காத்தான்... முடியரசன் களப்புலவன்
ஆனான் கண்டீர்! நிலைகுலைந்த தமிழ்மண்ணில்
முடியரசன் நிமிர்ந்தெழுந்த காலம் செய்தான்...
தலைநிமிர்ந்த இலக்கியனாய் தமிழ்மண்ணின்
வரலாற்றில் தடம் பதித்தான்! மலைபிளந்து
வெடித்த தமிழ்நெருப்பானான்... மறுமலர்ச்சி
படைத்தான் அம்மா!"

– தமிழீழக்கவிஞர் காசி ஆனந்தன்

9 788193 750742 19